[1994 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயக்கோட்டை வருவாய் பிர்க்கா என்பது கிருஷ்ணகிரியிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கிறது. ஆனால், அவர்கள் தேன்கனிக்கோட்டை செல்ல வேண்டுமென்றால் அங்கிருந்து 50 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அதற்கு மேலாக, அந்தப் பக்கத்தில் தேன்கனிக்கோட்டை வரைக்கும் அங்கே இருப்பவர்கள் அனைவரும் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் பழக்கப்பட்டவர்கள். இங்கே இருப்பவர்கள் அனைவரும் தமிழ் மொழியில் பழக்கப்பட்டவர்கள். ஆகவே, இவர்கள் அங்கே போய் காரியங்களைச் செய்வதற்கு சிரமமாக இருப்பது மட்டுமல்லாமல், மிகவும் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இவர்கள் சிறந்த முறையிலே இங்கே வந்து காரியங்களைச் செய்வதற்கு கிருஷ்ணகிரிக்கு மாற்றுவதற்கு மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டம் இப்பொழுதே பெரிய வட்டமாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் கிருஷ்ணகிரி வட்டத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலானவர்கள் தமிழ் பேசுகிறவர்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற இடத்திலுள்ள பெரும்பாலானவர்கள் தெலுங்கு பேசுகிறவர்கள். அந்த ஒன்றியத்திலே அது இருப்பதுதான் இன்றைக்கு நலமாக இருக்கும். அவர்களுடைய எல்லாவிதமான நலன் கருதி இப்பொழுது இருப்பதில் எந்தவித மாற்றமும் செய்ய இயலாது. தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள 88 வருவாய் கிராமங்களில் ஏற்கெனவே 4 வருவாய் கிராமங்கள் இராயக்கோட்டை உள்வட்டத்திலிருந்து பாலக்கோடு வட்டத்திற்கு நிர்வாகம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மாற்றப்பட்டுவிட்டது. இதனால் இராயக்கோட்டை உள்வட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம் மற்றும் குளமங்களம் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றின் ஆட்சி எல்லைகளில் மாற்றம் ஏற்பட்டவுடன் இராயக்கோட்டை உள்வட்டம் சிறிதாகிவிட்டது. தற்போது, இராயக்கோட்டை உள்வட்டத்தில், இராயக்கோட்டை மற்றும் சுருள்கோட்டை கிராமங்கள் மட்டுமே கிருஷ்ணகிரியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. இக்கிராமப் பொது மக்கள், அரசுப் பணி நிமித்தமாக கிருஷ்ணகிரி வட்டாட்சியர்

அலுவலகத்திற்கோ அல்லது கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்கோ செல்ல வேண்டுமானால் 35 முதல் 50 கிலோ மீட்டர் வரை பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. குளமங்களம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் செல்ல வேண்டுமானால் 5 முதல் 20 கிலோ மீட்டர் தூரம்தான் பயணம் செய்ய வேண்டும். இதனால் பொது மக்களுக்கு எவ்விதக் கஷ்டமும் இல்லாததுடன், வசதியாகவுமுள்ளது. இராயக்கோட்டையிலுள்ள வட்டத்தை கிருஷ்ணகிரி வட்டத்துடன் இணைத்தால், பொது மக்களுக்கோ அல்லது நிர்வாகத்திற்கோ எவ்வித வசதியும் நேரிடாது. மேலும், இராயக்கோட்டை வட்டத்தில் 3 கிராமங்களைத் தவிர மீதமுள்ள கிராமங்களில் தெலுங்கு மொழி பேசும் மக்களே அதிகமாக உள்ளனர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டம் இப்பொழுது பெரியதாக இருப்பது உண்மைதான். ஆனால், கிருஷ்ணகிரி வட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள் இந்த பட்ஜெட் கூட்டத்திலே. ஆகவே, இப்பொழுது கிருஷ்ணகிரி வட்டமானது சிறிய வட்டமாக மாறிவிட்டது. மேலும் அந்த இராயக்கோட்டை ரெவின்யூ முழுவதையும் மாற்ற முடியாவிட்டாலும் தொட்டசிம்மரனி பஞ்சாயத்து, கொப்பகரை பஞ்சாயத்து, மேடகிராமம் பஞ்சாயத்துக்களையாவது கிருஷ்ணகிரி வட்டத்தில் இணைப்பதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது இராயக்கோட்டை வட்டத்திலுள்ள கிராமங்களில், எந்தெந்தக் கிராமங்கள் கிருஷ்ணகிரி வட்டத்தில் சேர்ந்தால் அங்குள்ள மக்களுக்குப் பயனளிக்கும் என்று நிர்வாகம் கருதினாலும், நிர்வாகம் கருதாவிட்டாலும், அங்குள்ள பொது மக்கள் அதைக் கருதினால், பொது மக்கள் வேண்டுகோள் கொடுத்தால், அவர்களுடைய வேண்டுகோளை நடுநிலையாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 362, திரு. எம். ஆண்டிஅம்பலம் இருக்கையில் இல்லை.

வினா எண் 363, திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், இருக்கையில் இல்லை.

வினா எண் 364. திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

364-

நாகப்பட்டினம்— —சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

***20013**-திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்திலிருந்து வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கச்சனம், திருவாரூர் வழியாக சென்னைக்கு இயக்கப்பட்டு வந்த திருவள்ளுவர் பேருந்து நிறுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்து எப்போது மீண்டும் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்கு வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கச்சனம், திருவாரூர் வழியாக மீண்டும் பேருந்து இயக்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நாகையிலிருந்து வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கச்சனம் வழியாக திருவாரூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கப்பட்டது. அந்தப் பகுதி அதிகமான மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். குறிப்பாக திருப்பூண்டி முஸ்லீம் மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். ஆகவே அதை எல்லாம் கணக்கில் எடுத்துத்தான் அந்தப் பேருந்து இயக்கப்பட்டது. அந்தப் பேருந்தில் நல்ல கூட்டம் இருந்தது. நட்டம் இல்லாமல் இயங்கியது. அது இப்போது ஒரு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதாக அந்தப் பக்கத்தில் பேசிக்கொள்வதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் ரீதியாக பேருந்தை நிறுத்துவது என்றால் பல பகுதிகளில் பேருந்தே ஓடாது. எனவே அந்த நோக்கம் அரசுக்கு இல்லை. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மக்களும் வாக்களித்தவர்கள். இந்த 20 ஆம் நூற்றாண்டில் மட்டுமல்ல ; வருகிற 21 ஆம் நூற்றாண்டிலும் அவரே தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சராக இருக்கவேண்டும் என்று மக்கள்

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிடம் கட்டப்படும்?

விடை–

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) விரைவில் கட்டப்படும்.

363–

கிண்டி அருகில் மருத்துவமனை, சுகாதார நிலையம் ஏற்படுத்துதல்

***21305–** திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

சென்னை, கிண்டிக்கு அருகிலுள்ள உள்ளகரம், புழுதிவாக்கம் ஆகிய இடங்களில் அரசு மருத்துவமனையோ, சுகாதார நிலையமோ ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை–

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: தற்சமயம் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(ஒன்பதாம் பட்டியல்)

1–

கோயம்புத்தூர் கெம்பட்டி காலனியில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் **5018–**திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கோயம்புத்தூர் மேற்குப்பகுதி கெம்பட்டி காலனியிலுள்ள வீடுகளுக்கு, குடிசைகளுக்கு பட்டா கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை–

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கோவை தெற்கு வட்டம், கெம்பட்டி காலனியில் ட.ச.760/7.18 மற்றும் 764/1—35 ஆகிய சாலைகளில் சுமார் 12 வீடுகளுக்கு மேலாக மேற்கண்ட பூமிக்கு பாத்தியம் இல்லாத வேறு நபர்கள் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலம் கிராமக் கணக்குகளில் பட்டா நிலமாக உள்ளது. ஆனால் நிலம் நீண்ட காலமாக உரிமை கோரப்படாமல் இருந்து வருகிறது. எனவே, இந்நிலத்தை உரிமைக் கோரப்படாத ஒன்றாக கருதி, நிலத்தை அரசு ஏற்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு ஏற்ற பின்னர்தான் பட்டா வழங்க இயலும்.

2–

மன்னம்பந்தல் பஞ்சாயத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

*வினா எண் **5734** –*திரு. *எம். எம். எஸ்.* **அபுல்ஹசன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை ஒன்றியம், மன்னம்பந்தல் பஞ்சாயத்தில் குடியிருப்போர் வீடுகளுக்கு இலவச மனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை–

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) நாகை-காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம் மன்னம்பந்தல் கிராம பஞ்சாயத்தில் 285 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இனி குடியிருப்பு பட்டா வழங்கவேண்டிய இனம் ஏதுமில்லை என்பதால் மேற்கொண்டு பட்டா வழங்கும் உத்தேசமில்லை.

3–

அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நிலங்களின் விவரம்

*வினா எண்: **8100–***திரு. *ஆர். முருகையா பாண்டியன்:* *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–*

(அ) மற்றும் *(ஆ):* கோவை தெற்கு வட்டம், கெம்பட்டி காலனியில் *ட.ச.760/7.18* மற்றும் *764/1—35* ஆகிய சாலைகளில் சுமார் *12* வீடுகளுக்கு மேலாக மேற்கண்ட பூமிக்கு பாத்தியம் இல்லாத வேறு நபர்கள் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலம் கிராமக் கணக்குகளில் பட்டா நிலமாக உள்ளது. ஆனால் நிலம் நீண்ட காலமாக உரிமை கோரப்படாமல் இருந்து வருகிறது. எனவே, இந்நிலத்தை உரிமைக் கோரப்படாத ஒன்றாக கருதி, நிலத்தை அரசு ஏற்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு ஏற்ற பின்னர்தான் பட்டா வழங்க இயலும்.

2–

மன்னம்பந்தல் பஞ்சாயத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் ***5734*** **–**திரு. *எம். எம். எஸ்.* ***அபுல்ஹசன்:*** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை ஒன்றியம், மன்னம்பந்தல் பஞ்சாயத்தில் குடியிருப்போர் வீடுகளுக்கு இலவச மனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை–

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) நாகை-காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம் மன்னம்பந்தல் கிராம பஞ்சாயத்தில் *285* நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இனி குடியிருப்பு பட்டா வழங்கவேண்டிய இனம் ஏதுமில்லை என்பதால் மேற்கொண்டு பட்டா வழங்கும் உத்தேசமில்லை.

3–

அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நிலங்களின் விவரம்

வினா எண்: ***8100–***திரு. *ஆர். முருகையா பாண்டியன்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

364-

நாகப்பட்டினம்— —சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

*20013-திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்திலிருந்து வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கச்சனம், திருவாரூர் வழியாக சென்னைக்கு இயக்கப்பட்டு வந்த திருவள்ளுவர் பேருந்து நிறுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்து எப்போது மீண்டும் இயக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்கு வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கச்சனம், திருவாரூர் வழியாக மீண்டும் பேருந்து இயக்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நாகையிலிருந்து வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கச்சனம் வழியாக திருவாரூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கப்பட்டது. அந்தப் பகுதி அதிகமான மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். குறிப்பாக திருப்பூண்டி முஸ்லீம் மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். ஆகவே அதை எல்லாம் கணக்கில் எடுத்துத்தான் அந்தப் பேருந்து இயக்கப்பட்டது. அந்தப் பேருந்தில் நல்ல கூட்டம் இருந்தது. நட்டம் இல்லாமல் இயங்கியது. அது இப்போது ஒரு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதாக அந்தப் பக்கத்தில் பேசிக்கொள்வதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் ரீதியாக பேருந்தை நிறுத்துவது என்றால் பல பகுதிகளில் பேருந்தே ஓடாது. எனவே அந்த நோக்கம் அரசுக்கு இல்லை. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மக்களும் வாக்களித்தவர்கள். இந்த 20 ஆம் நூற்றாண்டில் மட்டுமல்ல ; வருகிற 21 ஆம் நூற்றாண்டிலும் அவரே தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சராக இருக்கவேண்டும் என்று மக்கள்

கருதிக்கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்ற நோக்கம் இல்லை. குறைவாக வருவாய் வருகின்ற காரணத்தால்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மீண்டும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மக்களின் சௌகரியம் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று சொல்வதற்குப் பதிலாக, அந்தப் பேருந்தை விரைவாக இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிப்பது என்று சொல்வது, பேருந்துகளை மீண்டும் இயக்கி இலாபம் இருக்கிறதா என்று பார்த்ததற்குப் பிறகு பெரும் நட்டம் இல்லாமல் இருந்தால் அந்தப் பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை பல தலங்களைக் கொண்ட ஊராகும். வேளாங்கண்ணியிலிருந்து சென்னைக்கு இதற்கு முன்பாக சொகுசு வண்டி ஓடிக்கொண்டிருந்தது. இப்போது அந்த வண்டி இயங்கவில்லை. இப்போது அந்த சொகுசு வண்டி விடப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொகுசுப் பேருந்துகளை இயக்குவது என்பது வருவாய் ஓரளவுக்குக் கூடுதலாக இருக்குமேயானால்தான். அப்போதுதான் அங்கே சொகுசுப் பேருந்துகளை இயக்குகிறோம். வருவாய் குறைவாக இருக்கிறபோது ஆர்டினரி பேருந்துதான் இயக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து, சொகுசுப் பேருந்தை அங்கே இயக்கினால் அது என்ன வருவாயை ஈட்டும் என்பதை அறிந்ததற்குப் பிறகு அந்தப் பேருந்துகள் அங்கே இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 365, திரு. இராம. இராமநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. இராமசுவாமி கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

365-

கும்பகோணத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஏற்படுத்துதல்

***22415**-திரு. இராம. இராமநாதன்:*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் பணிமனை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கும்பகோணத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்று தனியாருக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. இந்நிலத்தினைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து தஞ்சாவூருக்குச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் அதாவது பெரும்பாலான பேருந்துகள் சேத்தியாதோப்பு, கும்பகோணம் வழியாகச் செல்கின்றன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அங்கே பொதுவாக இருக்கின்ற பொது பஸ் ஸ்டாண்டில் சென்று தங்குகின்றன. எனவே அங்கே அந்தக் கழகத்திற்குச் சொந்தமான இடம் இருப்பதால் இந்த ஆண்டே அதைக் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தினுடைய மதிப்பு 20,50,000 ரூபாய். அதற்கு மேலே கட்டிடம் கட்டவேண்டி இருக்கிறது. இப்போது அங்கே தனியாரிடத்திலே கட்டிடங்களோடு இருக்கின்ற அந்த நிலத்தின் மொத்தப் பரப்பளவு 35 ஆயிரம் சதுர அடி. ஆகவே

அந்த நிலமே, அந்தக் கட்டிடமே போதும் என்கிற காரணத்தால்தான் இப்போது அதிலே பேருந்துகளை நிறுத்திக்கொண்டிருக்கிறோம். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்ததைப் பொறுத்தவரையிலே கூடுதலாக சில பணிமனைகளை அமைப்பதற்கு முன்னால் அதிலே வருவாய் கூடுதலாக வருவதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு அந்தப் போக்குவரத்துக் கழகம் மேலும் லாபமீட்டுகிறபோதுதான் புதிய பணிமனைகளை நாங்கள் துவக்குவதற்கு உத்தேசித்திருக்கிறோம். ஆகவே இப்போது வாடகைக் கட்டிடத்தில் இயக்குவது சாத்தியக்கூறாக இருக்கின்ற காரணத்தினாலே தொடர்ந்து இயக்கப்படும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *வினா எண் 366, டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.*

366–

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிபவர்களை நிரந்தரம் செய்தல்.

****23868-டாக்டர் எஸ். சுந்தரராஜ்:***

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலையில் பணி நிரந்தரம் இல்லாமல் பல வருடங்களாக வேலை செய்பவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டத்தில் அச்சங்குளத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்படாமல் நியமிக்கப்பட்ட 67 நபர்களை பணி நிரந்தரம் செய்யும் பிரேரணை தற்போது கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெம்பரரியாக அந்தக் கூட்டுறவு நூற்பாலையிலே போட்டவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு பரிசீலித்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இங்கே கூறியுள்ளார்கள்.

அந்த நிலமே, அந்தக் கட்டிடமே போதும் என்கிற காரணத்தால்தான் இப்போது அதிலே பேருந்துகளை நிறுத்திக்கொண்டிருக்கிறோம். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்ததைப் பொறுத்தவரையிலே கூடுதலாக சில பணிமனைகளை அமைப்பதற்கு முன்னால் அதிலே வருவாய் கூடுதலாக வருவதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு அந்தப் போக்குவரத்துக் கழகம் மேலும் லாபமீட்டுகிறபோதுதான் புதிய பணிமனைகளை நாங்கள் துவக்குவதற்கு உத்தேசித்திருக்கிறோம். ஆகவே இப்போது வாடகைக் கட்டிடத்தில் இயக்குவது சாத்தியக்கூறாக இருக்கின்ற காரணத்தினாலே தொடர்ந்து இயக்கப்படும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 366, டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

366–

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிபவர்களை நிரந்தரம் செய்தல்.

****23868-டாக்டர் எஸ். சுந்தரராஜ்:***

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலையில் பணி நிரந்தரம் இல்லாமல் பல வருடங்களாக வேலை செய்பவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டத்தில் அச்சங்குளத்தில் இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்படாமல் நியமிக்கப்பட்ட 67 நபர்களை பணி நிரந்தரம் செய்யும் பிரேரணை தற்போது கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெம்பரரியாக அந்தக் கூட்டுறவு நூற்பாலையிலே போட்டவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு பரிசீலித்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இங்கே கூறியுள்ளார்கள்.

அந்தப் பணியாளர்களை இப்போது நிரந்தரம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் அதற்கான பரிசீலனை அனைத்தும் முடிந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கு *25* ஏக்கருக்கும் அதிகமான இடம் இருக்கிறது. இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் முகமாக அங்கே இருக்கிற இந்த நூற்பாலையிலே *12,500* ஸ்பின்டில் நூற்பாலையை *25,000* ஸ்பின்டில் நூற்பாலையாக உயர்த்திடவும், நூற்பாலையில் பணியாளர்களை பங்குதாரர்களாக ஆக்கும் திட்டத்தில் இந்தக் கூட்டுறவு நூற்பாலையிலும் பங்குதாரர்களாக நியமிக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற நூற்பாலைகளைப்போல், இது தாட்கோ உதவியுடன் செயல்படக்கூடிய நூற்பாலையாகும். மாண்புமிகு உறுப்பினர் முயற்சித்து அங்கே இருக்கிற தொழிலாளர்கள் அனைவரும் அதன் பங்குதாரர்களாக இந்த நூற்பாலையிலே வர விரும்புவார்களானால் அதற்கான பிரேரணை தருவார்களானால் அதற்குப் பின்னர் தக்க நடவடிக்கை எடுக்க, அந்தத் தொழிலாளர்களைப் பங்குதாரர்களாக்க அவர்களிடத்தில் 'ஷேர்'களை வாங்கி அவர்களைப் பங்குதாரர்களாகப் போட்டுக் கொள்வதில் துறைக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அடுத்து *12,500* கதிர்களுடன் செயல்படும் அந்த நூற்பாலையை *25,000* கதிர்களைக் கொண்டதாக செயல்படுத்தும் விரிவாக்கத் திட்டத்தை அமலாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேள்விகளை எழுப்பியுள்ளார்கள், இந்த அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலை நல்ல முறையில் செயல் படுவதற்கு காட்டன் ரிவால்விங் பண்டு என்று வைப்பதற்கு ஒரு கோடி அளிக்க வேண்டுமென்று தாட்கோ அலுவலகத்திற்கு அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதைப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாட்கோ அலுவலகத்தைக் கட்டாயப்படுத்தி பெற்றுத்தர முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

அந்தப் பணியாளர்களை இப்போது நிரந்தரம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் அதற்கான பரிசீலனை அனைத்தும் முடிந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கு 25 ஏக்கருக்கும் அதிகமான இடம் இருக்கிறது. இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் முகமாக அங்கே இருக்கிற இந்த நூற்பாலையிலே 12,500 ஸ்பின்டில் நூற்பாலையை 25,000 ஸ்பின்டில் நூற்பாலையாக உயர்த்திடவும், நூற்பாலையில் பணியாளர்களை பங்குதாரர்களாக ஆக்கும் திட்டத்தில் இந்தக் கூட்டுறவு நூற்பாலையிலும் பங்குதாரர்களாக நியமிக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற நூற்பாலைகளைப்போல், இது தாட்கோ உதவியுடன் செயல்படக்கூடிய நூற்பாலையாகும். மாண்புமிகு உறுப்பினர் முயற்சித்து அங்கே இருக்கிற தொழிலாளர்கள் அனைவரும் அதன் பங்குதாரர்களாக இந்த நூற்பாலையிலே வர விரும்புவார்களானால் அதற்கான பிரேரணை தருவார்களானால் அதற்குப் பின்னர் தக்க நடவடிக்கை எடுக்க, அந்தத் தொழிலாளர்களைப் பங்குதாரர்களாக்க அவர்களிடத்தில் 'ஷேர்'களை வாங்கி அவர்களைப் பங்குதாரர்களாகப் போட்டுக் கொள்வதில் துறைக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அடுத்து 12,500 கதிர்களுடன் செயல்படும் அந்த நூற்பாலையை 25,000 கதிர்களைக் கொண்டதாக செயல்படுத்தும் விரிவாக்கத் திட்டத்தை அமலாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேள்விகளை எழுப்பியுள்ளார்கள், இந்த அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலை நல்ல முறையில் செயல் படுவதற்கு க்காட்டன் ரிவால்விங் பண்டு என்று வைப்பதற்கு ஒரு கோடி அளிக்க வேண்டுமென்று தாட்கோ அலுவலகத்திற்கு அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதைப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாட்கோ அலுவலகத்தைக் கட்டாயப்படுத்தி பெற்றுத்தர முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 367, திரு. வெ. தமிழரசு; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

367-

நாமக்கல் வட்டம், செல்லம்பட்டி பகுதியில் சீரான மின்சாரம் வழங்குதல்

***17496-**திரு. வெ. தமிழரசு :*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் வட்டம், செல்லம்பட்டி பகுதியில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். நாமக்கல் வட்டம், செல்லம்பட்டி உட்பட்ட பகுதிகளில் மின்சாரம் சீராக வழங்கும் பொருட்டு திருச்செங்கோடு உஞ்சணையில் ஒரு புதிய 230/110 கே.வி. துணை மின் நிலையம் 11-3-94 அன்று அமைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் 110 கே.வி. துணை மின் நிலையம் உஞ்சணையில் 230/110 கே.வி. மின் நிலையத்தோடு 12-3-94 அன்று இணைக்கப்பட்டது. அதன் பின்பு நாமக்கல் மற்றும் செல்லம்பட்டி பகுதிகளில் மின் வினியோகம் கணிசமாக சீர்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே 7 கோடியே 31 லட்ச ரூபாய் செலவில் இந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டதற்குப் பின்னால் இப்போது இந்தப் பகுதிகளில் மின் வினியோகம் சீரடைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கொடுக்கப்படும்போதுதான் இந்தத் தடை இருந்தது. நம்முடைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களுடைய சிறந்த நிர்வாகத் திறமையின் காரணத்தாலும், அவருடைய அறிவாற்றல்

காரணத்தாலும் கடந்த மாதம் இந்த உஞ்சணையில் துவக்கப்பட்ட பிறகு இந்தத் தடை நீக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *368*, திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

368-

திருவட்டார் பாலத்தில் கைப்பிடிச்சுவர் கட்டுதல்

***19307*-** திரு. இரா. அப்பு நடேசன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே திருவட்டாரில் கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு இரு ஓரங்களிலும் கைப்பிடிச்சுவர் கட்டாமல் இருப்பதால் பல வாகன விபத்துக்கள் நடந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கைப்பிடிச்சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்படி இடத்தில் கைப்பிடிச்சுவருக்குப் பதிலாக ஒரு "போக்குவரத்துத் திட்டு" அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதில் கைப்பிடிச்சுவர் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள், நன்றி. ஆனால் அந்தப் பாலம் கட்டி 4 வருடங்கள் ஆகின்றன. வருடந்தோறும் 4,5 ஆக்சிடென்ட்டுகள் அங்கே நடந்து எத்தனையோ பேர்கள் அங்கே இறந்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் இந்த வருடமே அதைக் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

காரணத்தாலும் கடந்த மாதம் இந்த உஞ்சணையில் துவக்கப்பட்ட பிறகு இந்தத் தடை நீக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 368, திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

368-

திருவட்டார் பாலத்தில் கைப்பிடிச்சுவர் கட்டுதல்

***19307- திரு. இரா. அப்பு நடேசன் :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே திருவட்டாரில் கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு இரு ஓரங்களிலும் கைப்பிடிச்சுவர் கட்டாமல் இருப்பதால் பல வாகன விபத்துக்கள் நடந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கைப்பிடிச்சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்படி இடத்தில் கைப்பிடிச்சுவருக்குப் பதிலாக ஒரு "போக்குவரத்துத் திட்டு" அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதில் கைப்பிடிச்சுவர் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள், நன்றி. ஆனால் அந்தப் பாலம் கட்டி 4 வருடங்கள் ஆகின்றன. வருடந்தோறும் 4,5 ஆக்சிடென்ட்டுகள் அங்கே நடந்து எத்தனையோ பேர்கள் அங்கே இறந்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் இந்த வருடமே அதைக் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கைப்பிடிச் சுவர் கட்டவேண்டும் என்று கேட்டார்கள். இப்படி வளைவாக இருக்கின்ற பகுதிகளிலே கைப்பிடிச்சுவர்களைக் கட்டுவதாலேயே விபத்துக்களைத் தவிர்க்கமுடியாது என்பதை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே தான் கைப்பிடிச் சுவருக்குப் பதிலாக 'டிராபிக் மீடியன்' என்ற 'போக்குவரத்துத் திட்டு' என்ற ஒரு அமைப்பினை உருவாக்கவேண்டுமென்று அந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பல இடங்களில் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்களுடைய பகுதியிலே உள்ள அந்தப் பாலத்திற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நம்முடைய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டே அந்தப் பணி எடுத்துச் செய்யப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு வளைவாக இருக்கின்றது என்று அந்த அதிகாரிகள் கூறியிருப்பது சரியாக இல்லை. உண்மையிலேயே அது வளைவு இல்லை. நீளமாக, நேராகத்தான் இருக்கிறது. அதோடு சேர்ந்து ஒரு பாலம் ஐந்தாண்டுகளாக உபயோகச் சூன்யமாக இருக்கிறது. அதை ஏலம் போட்டுத் தருவதாகவும் அதிகாரிகள் போன வருடம் வாக்குறுதி கொடுத்தார்கள். இதுவரையில் அந்தப் பாலம் ஏலம் போடப்பட்டு அரசுக்குப் பணமும் வரவில்லை. அரசுக்கும் லாபம் இல்லை. அதை திருடர்கள்தான் திருடிக் கொண்டிருக்கிறார்கள். அது இரும்புப் பாலம். அதையெல்லாம் உடனடியாக ஏலம் போட்டு கைப்பிடிச்சுவர் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழைய இரும்புக் கதவுகளைப் பொறுத்தமட்டிலும், பாலங்களைப் பொறுத்த மட்டிலும், ஏலம் விடுகின்றபோது நம்முடைய தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு நாம் கொடுக்கிறோம். நம்முடைய அரசு நிறுவனம் என்ற காரணத்தினாலே. பொதுப்பணித் துறையைப் பொறுத்தமட்டிலும் தமிழ்நாடு ஸ்டீல்ஸிற்குத் தான் கொடுக்கிறோம். தனியார்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ

1994 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கைப்பிடிச் சுவர் கட்டவேண்டும் என்று கேட்டார்கள். இப்படி வளைவாக இருக்கின்ற பகுதிகளிலே கைப்பிடிச்சுவர்களைக் கட்டுவதாலேயே விபத்துக்களைத் தவிர்க்கமுடியாது என்பதை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே தான் கைப்பிடிச் சுவருக்குப் பதிலாக 'டிராபிக் மீடியன்' என்ற 'போக்குவரத்துத் திட்டு' என்ற ஒரு அமைப்பினை உருவாக்கவேண்டுமென்று அந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பல இடங்களில் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்களுடைய பகுதியிலே உள்ள அந்தப் பாலத்திற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நம்முடைய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டே அந்தப் பணி எடுத்துச் செய்யப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு வளைவாக இருக்கின்றது என்று அந்த அதிகாரிகள் கூறியிருப்பது சரியாக இல்லை. உண்மையிலேயே அது வளைவு இல்லை. நீளமாக, நேராகத்தான் இருக்கிறது. அதோடு சேர்ந்து ஒரு பாலம் ஐந்தாண்டுகளாக உபயோகச் சூன்யமாக இருக்கிறது. அதை ஏலம் போட்டுத் தருவதாகவும் அதிகாரிகள் போன வருடம் வாக்குறுதி கொடுத்தார்கள். இதுவரையில் அந்தப் பாலம் ஏலம் போடப்பட்டு அரசுக்குப் பணமும் வரவில்லை. அரசுக்கும் லாபம் இல்லை. அதை திருடர்கள்தான் திருடிக் கொண்டிருக்கிறார்கள். அது இரும்புப் பாலம். அதையெல்லாம் உடனடியாக ஏலம் போட்டு கைப்பிடிச்சுவர் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழைய இரும்புக் கதவுகளைப் பொறுத்தமட்டிலும், பாலங்களைப் பொறுத்த மட்டிலும், ஏலம் விடுகின்றபோது நம்முடைய தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு நாம் கொடுக்கிறோம், நம்முடைய அரசு நிறுவனம் என்ற காரணத்தினாலே. பொதுப்பணித் துறையைப் பொறுத்தமட்டிலும் தமிழ்நாடு ஸ்டீல்ஸிற்குத் தான் கொடுக்கிறோம். தனியார்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ

ஏலம் விடுவதில்லை. ஆகவேதான் இதையெல்லாம் ஒன்றாகச் சேமித்து மொத்தமாக ஏலம் விடுகிறபோது, தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனுக்கு அல்லது தமிழ்நாடு ஸ்டீல்ஸ்க்கு கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேயே அவற்றையெல்லாம் ஒன்றாக ——தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற இரும்புக் கதவுகளை ஒன்றாக ஏலம் விடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்தத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சாலையினுடைய வளைவைப் பற்றிச் சொல்கிறபோது, அந்த வலது பக்கத்திலே வாகனங்கள் நுழைந்து செல்வதால் வலது பக்கத்திலே இந்த விபத்து ஏற்படுகிறது என்பதை அதிகாரிகள் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். அதற்காகத்தான் டிராபிக் மீடியன் என்ற போக்குவரத்துத் திட்டு அமைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எது எப்படியிருந்தாலும் இந்த ஆண்டே செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறேன். உடனடியாக இந்த ஆண்டே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 369, டாக்டர் எம். கருப்புசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 370, திருமதி கே. மரியம் உல் ஆசியா; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

370-

அரவக்குறிச்சியில் முருங்கைக்காய்களை ஏற்றுமதி செய்யும் தொழிற்கூடம் அமைத்தல்

***24055-*திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியில் முருங்கைக்காய்களை அடிப்படையாகக் கொண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

1994 ஏப்ரல் 25]

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். முருங்கைக்காய் போடப்பட்ட சாம்பார் சுவையானதாகவும், வாசமுள்ளதாகவும் இருக்கும். அப்படிப்பட்ட சுவையான, மணமான முருங்கைக்காய்கள் தென் இந்தியாவிலே அரவக்குறிச்சியில், அந்தப் பகுதியில்தான் அதிகமாக உற்பத்தியாகின்றது. அதற்கு அடுத்தபடியாக எனது பக்கத்து தொகுதியான மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட மூலனூர் பகுதியிலும் அதிகமாக முருங்கைக்காய் உற்பத்தியாகின்றது. அரவக்குறிச்சியில் உற்பத்தியாகும் முருங்கைக்காய் பிரசித்தி பெற்றவை. நூற்றுக்கணக்கான லாரிகளில்—சென்னை உட்பட விசாகப்பட்டணம், பெங்களூர், குண்டூர், கேரளா, பம்பாய் போன்ற இடங்களுக்கு லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சவுதி அரேபியா, மலேசியா போன்ற வெளிநாடுகளிலே எல்லாம், இந்த முருங்கைக்காய் விலை, ஒரு முருங்கைக்காய் 3 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. மேலும், முருங்கைக் காய்களைப் பவுடர் செய்து தனியார் நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. வெளிநாடுகளில் முருங்கைக்காய்ப் பவுடரை குழம்புக்குப் பயன்படுத்துகின்றார்கள். சைனீஸ், மலாய்க்காரர்கள், அரபிகள் போன்றவர்கள் எல்லாம் இந்த முருங்கைக் காய் சாம்பாரை மிகவும் விரும்பிச் சாப்பிடுகின்றார்கள். இதை நான் வெளிநாடு சென்றிருந்தபோது நேரிலேயே பார்த்திருக்கிறேன். முருங்கைக் காய்களைப் பவுடர் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் லாபகரமாக இருக்கும் என்பதால் அப்படிப்பட்ட தொழில் கூடம் அரவக்குறிச்சியில் தொடங்குவதற்கும், மேலும், விதை முருங்கை, கொடி முருங்கை இப்படியாக ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்யப்படுகின்ற அரவக்குறிச்சி பகுதியில் "முருங்கைச் சாகுபடி திட்டம்" ஏற்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10 -20

மாண்புமிகு திரு. கு .ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முருங்கைக்காயில் சாம்பார் தயாரிக்க முடியாது என்று சொல்லவில்லை. அது சுவையாக இருக்காது என்று சொல்லவில்லை. ஆனால் நான் சொன்ன பதில், அரசே ஒரு தொழிற்சாலை நிறுவி அதிலே இருக்கக்கூடிய புரதச் சத்துக்களை எடுத்து, அதைப் பவுடராக்கி வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியாது என்று தான்

1994 ஏப்ரல் 25]

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். முருங்கைக்காய் போடப்பட்ட சாம்பார் சுவையானதாகவும், வாசமுள்ளதாகவும் இருக்கும். அப்படிப்பட்ட சுவையான, மணமான முருங்கைக்காய்கள் தென் இந்தியாவிலே அரவக்குறிச்சியில், அந்தப் பகுதியில்தான் அதிகமாக உற்பத்தியாகின்றது. அதற்கு அடுத்தபடியாக எனது பக்கத்து தொகுதியான மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட மூலனூர் பகுதியிலும் அதிகமாக முருங்கைக்காய் உற்பத்தியாகின்றது. அரவக்குறிச்சியில் உற்பத்தியாகும் முருங்கைக்காய் பிரசித்தி பெற்றவை. நூற்றுக்கணக்கான லாரிகளில்—சென்னை உட்பட விசாகப்பட்டணம், பெங்களூர், குண்டூர், கேரளா, பம்பாய் போன்ற இடங்களுக்கு லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சவுதி அரேபியா, மலேசியா போன்ற வெளிநாடுகளிலே எல்லாம், இந்த முருங்கைக்காய் விலை, ஒரு முருங்கைக்காய் 3 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. மேலும், முருங்கைக் காய்களைப் பவுடர் செய்து தனியார் நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. வெளிநாடுகளில் முருங்கைக்காய்ப் பவுடரை குழம்புக்குப் பயன்படுத்துகின்றார்கள். சைனீஸ், மலாய்க்காரர்கள், அரபிகள் போன்றவர்கள் எல்லாம் இந்த முருங்கைக் காய் சாம்பாரை மிகவும் விரும்பிச் சாப்பிடுகின்றார்கள். இதை நான் வெளிநாடு சென்றிருந்தபோது நேரிலேயே பார்த்திருக்கிறேன். முருங்கைக் காய்களைப் பவுடர் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் லாபகரமாக இருக்கும் என்பதால் அப்படிப்பட்ட தொழில் கூடம் அரவக்குறிச்சியில் தொடங்குவதற்கும், மேலும், விதை முருங்கை, கொடி முருங்கை இப்படியாக ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்யப்படுகின்ற அரவக்குறிச்சி பகுதியில் "முருங்கைச் சாகுபடி திட்டம்" ஏற்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10 -20

மாண்புமிகு திரு. கு .ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முருங்கைக்காயில் சாம்பார் தயாரிக்க முடியாது என்று சொல்லவில்லை. அது சுவையாக இருக்காது என்று சொல்லவில்லை. ஆனால் நான் சொன்ன பதில், அரசே ஒரு தொழிற்சாலை நிறுவி அதிலே இருக்கக்கூடிய புரதச் சத்துக்களை எடுத்து, அதைப் பவுடராக்கி வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியாது என்று தான்

சொன்னேன். ஆனால் தனியார் ஒருவர் இந்தத் தொழிலைத் துவங்குவதற்கு முன்வருவார் என்று சொன்னால், அவருக்கு வேண்டிய அனைத்து ஆலோசனைகளையும், அதைப் பதப்படுத்துகின்ற முறையில், மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வழிவகைகளையும், உரிய அனைத்து ஆலோசனைகளையும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் மூலமாக வழங்கப்படும். அதே நேரத்திலே, நிதி பெற வேண்டுமென்று சொன்னால்கூட, தேசிய தோட்டக் கலை வாரியத்திடம் இருந்து அதற்குரிய நிதியையும் கடனாகப் பெற்றுத்தர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் முன்வருவார்களானால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று, அரவக்குறிச்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இல்லாததால் முருங்கைக்காய்கள் கமிஷன் ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. வியாபாரம் நடந்து வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு சரியான விலை கிடைப்பதில்லை. இதனால் இடைத்தரகர்கள் தான் கொள்ளை லாபம் அடைந்து வருகிறார்கள். எனவே, விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அரவக்குறிச்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலே 3 இடங்களிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி நடுவிலே இருக்கிறது. அதிலே பயிர் செய்யக்கூடிய விவசாயிகள் இரண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் செல்லலாம். இன்னும், அவர்களுடைய கோரிக்கையை பரிசீலித்துத்தான் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலே ஒரு கோடி ரூபாய்க்கு காய்கறிகளை மட்டுமே குளிர்பதன வசதி செய்யப்பட்ட கிட்டங்கியில் வைப்பதற்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு இன்றைக்கு அனுமதி வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *371*, திரு. கா.பூ. முனுசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. முனிவெங்கடப்பன் கேட்கிறார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

371-

கோவை வேளாண்மைக் கல்லூரியில் கரும்பு ரகங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

***24674*-திரு. கா. பூ. முனுசாமி :**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பையூரிலுள்ள கோவை வேளாண்மைக் கல்லூரியின் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ப அதிக மகசூல் தரும் கரும்பு ரங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே, கேள்வி எழவில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பையூர் விவசாய ஆராய்ச்சி மையமானது மிகவும் பழமைவாய்ந்த ஒன்று ஆகும். அங்கே நெல்லில், பல புதிய ரகங்களைக் கண்டுபிடித்து, இன்றைக்கு அது நல்ல பயனுள்ள வகையிலே விவசாயிகளுக்குத் தரப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள். அதைப்போன்று, கம்பு, ராகி போன்றவற்றில் பல புதிய ரகங்களைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகவே, இதைப் போன்ற கரும்பை அங்கே கண்டுபிடித்தால் இன்றைக்கு வளர்ந்து வருகின்ற தொழில் அது, தொழிற்சாலைக்கு ஏற்ப கரும்பு உற்பத்தியை நல்லமுறையிலே செய்து கொடுக்க முடியும். ஆகவே, கரும்பு ஆராய்ச்சியை மறுபடியும் துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பையூரில் அமைந்துள்ள மண்டல ஆராய்ச்சி

நிலையத்தில் தர்மபுரி மாவட்டம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் பயிரிடக் கூடிய நெல், தானியங்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. கரும்புக்கு என்று கடலூரில் ஒரு ஆராய்ச்சி மையமும், சிறுகமணியில் ஒரு ஆராய்ச்சி மையமும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மேலாலத்தூர் ஆகிய 3 ஆராய்ச்சி மையங்களிலே கரும்பு பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இந்த 3 நிலையங்களில் கரும்புப் பயிர் ஆராய்ச்சி செய்து, அந்தப் பயிர்களை தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட்டு, பயிரிடப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் அதனுடைய மகசூல் அதிகமாக இருக்கிறதென்று உண்மையை அறிந்த பிறகுதான் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதை வெளியிடுகிறது. எனவே தர்மபுரி மாவட்டத்திற்கு வேண்டிய கரும்பு ரகங்களை மேலாலத்தூர் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை ஆராய்ச்சி நடைபெற்று, பக்கத்தில் உள்ள தர்மபுரி மாவட்டத்தில் வெளியிடப்பட்டு, அங்கே பயிரிடப்பட்டு, அதிக வருவாயை உழவர் பெருமக்கள் பெற்று வருகிறார்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 372, திரு. கே.ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. காஞ்சி பன்னீர்செல்வம் கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

372 -

தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகநலச் சேவகர்களை இயக்குநர்களாக நியமித்தல்

***16389*-திரு. கே.ஏ. மனோகரன் :**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிப்காட் மற்றும் டி.ஐ.ஐ.சி. போன்ற நிதி நிறுவனங்களில் தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூக நல்ச் சேவகர்களை அவ்வாரியங்களின் இயக்குநர்களாக நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் உடனே பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தைப் (சிப்காட்) பொறுத்தவரை, வர்த்தகம் மற்றும் தொழில் துறைகளின் சார்பாக, தலைவர், தென்னிந்திய வர்த்தக சங்க சபை மற்றும் தலைவர், சென்னை தொழில் வர்த்தக சபை ஆகியோர் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் (டிக்) பொறுத்தவரை சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத்தின் தலைவரும், முன்னாள் தலைவரும் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்குழுவிலே பல வல்லுநர்கள் இடம் பெறக் கூடுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினாலும், அந்தக் குழுவிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட், டிக் எல்லாம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக இருக்கிற அமைப்புகள். இந்த அமைப்புகளிலே தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனை வழங்குபவர்களை அங்கே இயக்குநர்களாகப் போட்டிருக்கிறோம். அதிகாரப் பற்றற்றவர்களையும் போட்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குகின்ற வாய்ப்பு அவர்களுக்கு சட்டமன்ற அவைக் களத்தில் இருப்பதால், இதுபோன்ற குழுக்களிலே அவர்களை இயக்குநர்களாக நியமித்து, அந்தக் குறுகிய வட்டத்தில் அவர்களை அடைக்க இந்த அரசு விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள். நல்ல பதில்தான். இருந்தபோதிலும் ஒரு சின்ன சஜஷன் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். சிப்காட் மற்றும் டிக் நிறுவனங்களில் தொழில் வல்லுனர்கள் என்று கருதப்படுகிற எக்ஸ்பர்ட் இன்ஜினியர்ஸ் மற்றும் வர்த்தக ரீதியில் எம்.பி.ஏ. படித்தவர்களை, அனுபவ ரீதியாக அவர்களைச் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று நான் சிப்காட், டிக் நிறுவனங்களுக்குச் செல்லும்போதெல்லாம்

கூட்டங்களில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி இருந்தால் நல்ல அறிவுரை பெறலாமென்ற காரணத்தால்தான் இந்த எண்ணத்தை நான் தெரிவிக்கிறேன். இந்த யோசனையை ஏற்று அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள்—அதிகாரிகள் தவிர மற்றவர்கள், தென் இந்திய தொழில் வர்த்தக சபை மற்றும் சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத் தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் சிறந்த ஆலோசனைகளை இந்த அரசுக்குச் சொல்லுகிறார்கள். இந்தக் குழுவில் இருந்துதான் ஆலோசனை சொல்ல வேண்டுமென்று இல்லை. வெளியிலே இருந்துகூட ஆலோசனைகளை எழுத்து மூலமாகச் சொன்னாலும் அல்லது அமைச்சரிடத்தில் சொன்னாலும், அல்லது தொழிற்துறைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் சொன்னாலும், எப்படிப்பட்ட இடத்திலிருந்து ஆலோசனைகளைத் தந்தாலும் இந்த அரசு நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 373, டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. து. மூர்த்தி கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

373-

நன்னிலம் பனங்குடியில் சுத்திகரிப்பு ஆலையில் உபதொழில்கள் தொடங்குதல்.

24166-டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நன்னிலம், பனங்குடியில் இயங்கவுள்ள சென்னை சுத்திகரிப்பு ஆலையின் மூலம் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு உப தொழில்கள் தொடங்க அரசிடம் ஏதும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) பனங்குடியில், எம்.ஆர்.எல். நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வரும் கச்சா பெட்ரோலியம் வடிப்பாலையில் கிடைக்க உள்ள நாஃப்தாவைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 1500 டன்கள் மொத்த உற்பத்தித் திறனுடன் நைட்ரோ பாஸ்பேட் மற்றும் கால்ஷியம் அம்மோனியம் நைட்ரேட் (உரங்கள்) உற்பத்தி செய்யும் வளாகம் ஒன்றினை கடலூருக்கு அருகில் அமைத்திடவும் இத்திட்டத்தை இணைத் துறையில் (Associate Sector) செயல்படுத்தவும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தீர்மானித்துள்ளது. பனங்குடி எம்.ஆர்.எல். ஆலையில் கிடைக்கவுள்ள எரி எண்ணெய்யையும் மேற்கண்ட உர உற்பத்தித் திட்டம் பயன்படுத்திக் கொள்ளும்.

முற்பகல் 10-30

திரு. நு. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே கிடைக்கின்ற கச்சாப் பொருட்களை வைத்து, 20 உப தொழில்கள் கடலூரில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். எங்கள் நாகை மாவட்டத்தில் இருக்கிற அத்தனை தொகுதிகளும் மிகவும் பின்தங்கிய தொகுதிகள். அப்படி, அந்தக் கச்சாப்பொருட்களைக் கொண்டு 20 உபதொழில்களை, நன்னிலம் பகுதியில் தொடங்கினால் அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்கள் பயன்பெறுகிற நிலை ஏற்படும். மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் அந்தப் பகுதியில் கொஞ்சம் குறைவதற்கு வசதியாகவும் இருக்கும். அதனால் படித்த இளைஞர்கள் பயன்பெறுகிற நிலையும் ஏற்படும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலூரில் அப்படி ஆரம்பிக்க இருக்கிற அந்த நிறுவனங்கள் குறித்துப் பரிசீலனை செய்து எங்கள் பகுதியான நன்னிலம் அல்லது நாகை பகுதியில் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 உரத் தொழிற்சாலைகள் அமைக்கவேண்டும் என்று சொன்னால் அதற்குப் பக்கத்தில் துறைமுக வசதி இருக்கவேண்டும். அதற்கு கடலூர்தான் சிறந்த இடம் என்று ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு, அந்த வேலைகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுவிட்ட காரணத்தால், உறுப்பினர் சொல்கிற அந்த இடத்தில் துவங்க பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் முட்டத்தில் உள்ள எம்.ஆர்.எல். மற்றும் சில பெரிய தொழில்கள் நடக்கின்ற அந்த இடத்தில் கிடைக்கின்ற மூலப்பொருளான கச்சாப் பொருளை எடுத்துக்கொண்டு, கடலூருக்குச் சென்று அங்கே அதை செயல்படுத்தலாம் என்று சொன்னார்கள். நாகை மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கு, கோத்தாரி, எம்.ஆர்.எல். போன்ற பேக்டரிகள் இயங்கும்போது நாகை நகரம் அழகாகத் திகழும். அப்படிப்பட்ட அழகு பொருந்திய நாகப்பட்டிணத்தில் கிடைக்கின்ற கச்சாப் பொருள்களைக் கொண்ட உப தொழில்களுக்குத் தேவையான துறைமுகம் அங்கேயே இருக்கிறது. ஆகவே, கடலூர் திட்டத்தை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் மாற்றி, நாகைக்கே அதைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தத் தொழிற்சாலைகள் கடலூரில் தொடங்கப்படும் என்று அரசு அனுமதி அளித்து அதற்கு உண்டான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அதை மீண்டும் நாகைக்கு மாற்றினால் கடலூர்க்காரர்கள் கலவரத்திற்கு வந்துவிடுவார்கள். ஆகவே, அந்த யோசனை இப்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 374, திரு. செ.து. வரதராஜன்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

374–

நோயுற்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்குப் பண உதவி வழங்குதல்.

**15244*-திரு. செ. து. வரதராஜன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நோயுற்ற ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்காக பண உதவி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பு இல்லை.

திரு. செ.து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு மாதம் 15 ரூபாய் மெடிக்கல் அலவன்ஸ் தரப்படுகிறது. இந்தத் தொகை மிகவும் குறைவானது, மருந்து வாங்குவதற்குக் கூட இப்போதைக்கு இருக்கிற விலைவாசியில் முடியாத நிலையில் இருக்கிறது. இந்தத் தொகை போதாத நிலையில் இருக்கிறது. பெரிய, கொடிய, நோய் உள்ளவர்களுக்கும், அறுவை சிகிச்சை செய்யவேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கும், அதற்காக பணம் அதிகம் தேவைப்படுகிறது. பண வசதியில்லாத காரணத்தால் உயிர் இழக்கின்ற அவல நிலை கூட ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு சேம நல நிதியிலிருந்து பெருந்தொகையை ஒதுக்கித்தர அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் அப்படிப்பட்ட திட்டம் ஏதும் இல்லை. எனினும், ஆசிரியர்களுக்கு அவர்களுடைய வருங்கால வைப்பு நிதியிலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக 75% முன் பணம் பெற அனுமதி இருக்கிறது. ஆசிரியர் நல தேசிய நிதியில் (National Foundation for Teachers Welfare) சில குறிப்பிட்ட வியாதியால் பீடிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கென நிதி உதவி ரூ. 750 முதல் ரூ. 25,000 வரை அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடிய நோய்களாலும், தீராத நோய்களாலும், பெரிய அறுவை சிகிச்சைகளினாலும் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஆசிரியர்களுக்கு சம்பளத்தோடு லீவு தந்து, அந்த நோய் குணம் ஆகின்றவரை அவர்களுக்கு உதவி செய்ய அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நோயால் பீடிக்கப்பட்டு இருப்பவர்கள் ஊதியத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் ஆசிரியர்களுக்கு மகப்பேறு காலத்தில் குழந்தை பெறுவதற்காக அட்வான்ஸ் தொகை வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு விடுமுறை அளிக்கிற திட்டம் அரசிடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 375, திரு. ஜெ. பாலகங்காதரன்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

375-

திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்

***21745-** திரு. ஜெ. பாலகங்காதரன் :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக வகுப்பறைகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இருந்தபோதிலும், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான்-இன்றையதினம் வரலாற்றிலே கல்விக்கு என்று ஒரு தனி இடத்தைப் பெற்று இருக்கின்ற இந்த நல்லாட்சியிலே, காமராசர் மாவட்டத்திலேயே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி, தனியார் மேல்நிலைப் பள்ளி அனைத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்கிக்கொண்டு சவால் விடுகின்ற அளவுக்கு அங்கே திறமையாகச் செயல்பட்டு வருகின்ற அந்த மேல்நிலைப் பள்ளி கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முந்தைய கட்டிடங்களை வைத்துக்கொண்டு சமாளித்து வருகின்றது. அந்தக் கட்டிடங்கள் போதாத ஒரு நிலையில்தான் இன்றையதினம் இந்தக்

கேள்வியைக் கேட்கின்றேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஒரு பள்ளிக்காவது, தயவுசெய்து, ஏதாவது ஒரு திட்டத்தில், பழைய டெக்ஸ்ட் புக் சொசைட்டி மூலமாவது அல்லது ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் அங்கே 5 வகுப்புறைகள் கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசு 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி இருக்கிறது. அந்தத் திட்டத்தில் பொதுவாக ஒரு பாதித் தொகையை பொதுமக்கள் பங்காகச் செலுத்தினால், மீதியை அரசு தரும் என்ற நிபந்தனை விதித்து இருக்கிறது. இந்த ஆண்டு விருதுநகர் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களில் திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளி, அந்தப் பட்டியலிலே இடம் பெறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அக்கறையோடு முன்மொழிவை உடனடியாக அனுப்பி வைத்தால் அரசு பரிசீலிக்கும் என்பதையும், தமிழ்நாடு பாட நூல் கழகத்தின் வாயிலாக கட்டிடம் தேவை என்றால் அதற்காகத் தனியாக ஒரு விண்ணப்பத்தை உரிய வழியில் உறுப்பினர் அவர்கள் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் கேட்ட கேள்வியையே ஒரு விண்ணப்பமாக வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யலாம். இருந்தபோதிலும், அமைச்சர் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். அதாவது, ஒரு லட்சம் ரூபாய் நிதியாக நாங்கள் தனியாகத் திரட்டித் தந்தால், அவர்கள், அரசாங்கத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் தனியாகத் தரும் திட்டம் இருக்கின்றது. அப்படிப்பட்ட திட்டத்தைப் பார்க்கும்போது அந்த திருத்தங்கல் நகரமானது ஒரு சிறிய நகரம்; அங்கே ஒரு லட்சம் ரூபாய் நிதியைத் திரட்டுவது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கின்ற காரணத்தினால், அமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு வகையிலே பரிந்துரை செய்து, எங்களுக்கு அந்தப் பள்ளிக்கு 5 வகுப்பறைக் கட்டிடங்களைக் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் அந்தக்

கட்டிடம் கட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியும். ஏதாவது ஒரு வகையிலே செய்ய முடியாது. ஆகவே, அவர் உரிய வழியில் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 376, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

376-

பீடித் தொழிலாளர்களுக்கு எலும்புருக்கி நோய் ஏற்படுவதைத் தடுத்தல்

***23168-**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளருக்கு எலும்புருக்கி நோய் (T.B.) ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பொதுவாக பீடித் தொழிலாளர்களில் பலர் நாளடைவில் எலும்புருக்கி நோயின் (T.B.) பாதிப்பிற்கு ஆளாவது உண்மைதான்.

(ஆ) பீடித் தொழிலாளர்கள் நலனுக்கென பீடித் தொழிலாளர் நல நிதிச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிகள் உருவாக்கப்பட்டு அது மத்திய அரசால் அமல்படுத்தப்படுகிறது. எலும்புருக்கி நோயினால் பாதிக்கப்படும் பீடித் தொழிலாளர்களுக்கு Domicillary Treatment என்ற திட்டத்தின் கீழ் மத்திய அரசு மருத்துவ வசதி அளித்து வருகிறது.

முற்பகல் 10-40

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. விவசாயத்திற்கு அடுத்தபடியாக ஒவ்வொரு கிராமத்திலும் வீடுகளில் பீடித்தொழிலில் ஆண்களும் பெண்களும் அதிக அளவில் ஈடுபட்டு வருகிறார்கள். காலையிலும் மாலையிலும் பல ஆண்டுகளாக தொடர்ந்து செய்து வருவதால் பீடித் தொழிலாளர்கள் காச நோயினால்

பாதிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. காச நோயினால் பாதிக்கப்பட்ட அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரவேல், சிகிச்சை எவ்வாறு அளிக்கப்படுகிறது என்பதையெல்லாம் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சொல்ல முடியாது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம்தான் கேட்கவேண்டும். இது தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிபார்ட்மென்ட் தான்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காச நோயால் பாதிக்கப்பட்ட பீடித் தொழிலாளர்களுக்கு என்று ஒரு தனியான திட்டத்தின்கீழ் மத்திய அரசு மருத்துவ வசதி அளித்து வருகிறது. பெருந்துறை டி.பி.சானடோரியத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று தனியாக படுக்கைகள் ஒதுக்கப்பட்டு 1992-93 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 6 பீடித் தொழிலாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். அதைப்போல மேலும் 8 இடங்களில் காச நோயினால் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 67 பீடித் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காச நோய் தொடர்ந்து பீடி சுற்றுவதால் 25, 30 வயதுள்ள இளம் வாலிபர்களுக்கும் வந்து விடுகிறது. இதனால் அவர்களுடைய வாழ்க்கை நிலை பாதிக்கப்படுகிறது. ஏழையெளிய மக்கள் மீது அன்பும் பாசமும் வைத்துள்ள நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் பீடித் தொழிலாளர்களுக்கு காச நோய் தவிர மற்ற நோய் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் அதிகமுள்ள இடங்களில் புறநோயாளிகள் பிரிவு மருந்தகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பத்து இடங்களில் இந்த மருந்தகங்கள் நடத்தப்படுகின்றன. இது தவிர மேலும் 13 இடங்களில் மருந்தகம் அமைப்பதற்காக மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டு, இது ஹைதராபாத் நல ஆணையருடைய பரிசீலனையில் உள்ளது. முக்கூடலில் 50 படுக்கைகள்

கொண்ட மருத்துவமனை கட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நில ஆர்ஜிதம் செய்து தந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் காச நோயால் பாதிக்கப்படும்போது எந்தக் கம்பெனியிலிருந்து அவர்கள் பீடி இலை வாங்கிச் சுற்றுகிறார்களோ, அந்த கம்பெனி நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று ஏதாவது விதிமுறை அரசில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் மிகவும் சிறிய குறுகிய இடத்தில் கிட்டத்தட்ட பத்து அடிக்குப் பத்து அடி இடத்தில் 20, 30 பேர் வேலை செய்கிற காரணத்தால், காச நோய் ஒருவருக்கு இருந்தாலும் கூட, கொஞ்சம் கொஞ்சமாக நிறையப் பேர்களுக்குப் பரவ வாய்ப்பு இருக்கிறது. மேலும் காச நோய் என்பது வறுமை நோய். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தப்பட்டதைப் போல, மிகச் சிறப்பாக வெற்றி கண்ட அந்த முகாமைப் போல, தொழிலாளர் நலத்துறை மூலமாக வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் இருக்கிற அனைத்து பீடித் தொழிலாளர்களுக்கும், தமிழகத்தில் இருக்கிற அனைத்து பீடித் தொழிலாளர்களுக்கும், ஒரு சிறப்பு மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தி, அனைவருக்கும் சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, அதற்கான முகாம் ஏற்படுத்த தீவிரமாக ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பத்து இடங்களில்தான் மத்திய அரசு நடத்துகிற பீடித் தொழிலாளர்களுக்கான ஆஸ்பத்திரி இருக்கிறது.

தயவுசெய்து நான் கேட்பதெல்லாம், ஒரு தாலுகாவுக்கு ஒரு மருத்துவமனை என்று ஏற்படுத்தினால் நல்லது. மத்திய அரசு ஓரளவுக்குத்தான் வைத்திருக்கிறது. ஸ்டேட் கவர்ன்மென்ட் ஏதாவது பைனான்ஸ் இதற்காக உருவாக்கி இன்னும் பல மருத்துவமனைகளை ஏற்படுத்துமா ? அப்படி இல்லையென்றால் தொழிலாளர்களுக்கு இதுபோன்ற டி.பி.நோய் யார் யாருக்கு வந்திருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் அந்த நேரத்தில், ஒரு ஆயிரம் ரூபாய் என்ற அளவில் நிதியுதவி அளிப்பதற்கு அரசு ஏதாவது திட்டத்தை வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து இடங்களில் புற நோயாளிகள் மருந்தகம் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் 13 இடங்களில் அமைப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டு, மத்திய அரசுக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அனுப்பி இருக்கிறது. மேலும் புறநோயாளிகள் டி.பி. யால் பாதிக்கப்பட்டிருந்தால் ஆங்காங்கே இருக்கிற அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

முற்பகல் 10-45

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் காச நோய் போன்ற கொடிய நோயால் பாதிக்கப்பட்டு, சொல்லொணாக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப் படுகிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், அவருடைய குடும்பங்கள் எல்லாம் அதிகமான கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகின்ற நிலையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலவர் பழிவாங்காப் பகை, கெடுதல் நினைக்காத கோபம், மதியாரை மதிக்கும் மனம், ஏசியவர்களையும் ஏற்கும் குணம், பொங்கி எழுந்தாலும் பொறுமையாக சிந்திக்கும் ஆற்றல், சிந்தித்து முடிவு எடுத்து செம்மையாக நிறைவேற்றும் திறன் கொண்ட, எங்களது அன்னையினுடைய ஆட்சியில் அப்படிப்பட்ட ஏழைத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு என்று தனியாக சேமநல நிதி ஒன்றை ஏற்படுத்தி, அந்த நிதியின் மூலமாக, கஷ்டப்படுகின்ற தொழிலாளர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 377, திரு. கே. செல்வராஜ்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

377–

கோயம்புத்தூர் மாநகராட்சியின் முக்கிய சாலைகளில் பாதாள மின் கம்பி பதித்தல்

***15216**-திரு. கே. செல்வராஜ்:*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் முக்கிய சாலைப் பகுதியில் உள்ள மின்சாரக் கம்பிகளை மாற்றி, பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில்; எப்போது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி முக்கிய சாலைப் பகுதிகளில் உள்ள மின்சாரக் கம்பிகளை மாற்றி பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, கோவை மாநகராட்சியில் உள்ள முக்கிய சாலைப் பகுதிகளில், மின்சாரக் கம்பிகளை மாற்றி பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று கூறினார்கள். கடந்த ஆண்டு மாநகராட்சியில் 3 மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு மாறாக கோவை ஆர்.எஸ். புரம், திவான்பகதூர் ரோடு பகுதிகளில் 1 கோடி ரூபாய் செலவில், பாதாளக் கம்பிகளைப் பதித்து, அந்தப் பணியைச் செயல்படுத்த-முதல்கட்டமாக பணிகளைச் செய்தும்—தொடர்ந்து மாநகராட்சி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மூலமாக செய்வதாகக் கூறியிருந்தார்கள். அந்தத் திட்டக் குறிப்பு என்ன ஆனது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கின்ற கேள்விக்கு என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில், நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தாலே, கோவையிலே சில முக்கியமான சாலைகளிலே பாதாளக் கம்பிகளைப் பதிக்கவேண்டிய அவசியம் இருப்பினும் கூட, தற்போதைக்குச் செய்ய இயலவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கோவையின் முக்கிய சாலைகள் என்று கருதப்படும் ஒப்பனக்கார வீதி, பெரிய கடை வீதி, திருச்சி ரோடு, அவினாசி ரோடு, டாக்டர் நஞ்சப்பா ரோடு, ஆர்.எஸ். புரம், திவான்பகதூர் ரோடு ஆகிய பகுதிகளில் பாதாள புதைகம்பி பதிக்கவேண்டியது அவசியம் என்று கருதினாலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் பாதாளக் கம்பிகளைப் பதிப்பதற்கு 6 கோடியே 27 லட்சம் மொத்த மதிப்பீடு தேவைப்படுகிறது என்ற காரணத்தால் நிதி வசதி மேம்படுத்தப்பட்டவுடன், கோயம்புத்தூர் மாநகராட்சி இதுகுறித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்றும், செய்வதற்கான நிதி வசதிகள் இருக்கின்றபோது செய்வதாகக் கூறினார்கள். எங்களது கோவை மாநகராட்சிக்கும், சென்னை மாநகராட்சிக்கு எழில்மிகு சென்னை என்ற திட்டத்திற்கு நிதி ஒதுக்குவது போல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசினுடைய நிதியை ஒதுக்கி, வருகின்ற நிதி ஆண்டிலாவது, அந்தப் பணிகளைச் செய்து, கோவை நகரில் எங்கு பார்த்தாலும், ஒயர்கள் குறுக்கும் நெடுக்குமாக ரோடுகளில் செல்லுகிற காரணத்தால், பஸ்களில் செல்லுகிறபோதுகூட பஸ்களில் முட்டுகின்ற அளவிற்கு ஒரு சில இடங்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ஒயர்களை மாற்றி, பாதாளக் கம்பிகளைப் பதிக்கும் பணியை அடுத்த நிதி ஆண்டில் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழில்மிகு சென்னை 2000-ஐப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியிலே பெறப்படுகின்ற நிதி ஆதாரத்தை

வைத்து முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு என்று பிரத்யேகமாக அரசு எந்த நிதியும் ஒதுக்கவில்லை. அந்த அடிப்படையில் கோவை மாநகராட்சிக்கு என்று அரசு மூலமாக நிதி ஒதுக்கீடு என்ற பேச்சுக்கு இடமில்லை. எந்த ஒரு உள்ளாட்சியும் தன்னுடைய உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்துத்தான் அங்கே இருக்கின்ற மக்களுக்கு பல்வேறு தேவைகளையும் திட்டங்களையும் வழங்கவேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. அந்த அடிப்படையிலே கோவை மாநகராட்சியிலே பல்வேறு பணிகள் வரலாற்றிலே எந்தக் காலகட்டத்திலும் இல்லாத அளவிற்கு நிதி ஆதாரம் பெருக்கப்பட்டு, பல அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பாதாளக் கம்பியைப் பற்றி மீண்டும் கேட்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரை, மாநகராட்சியினுடைய நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டவுடன், நிச்சயமாக இந்தக் கருத்துரு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிக அளவு வருமானத்தை ஈட்டித் தருகின்ற ஒரு மாவட்டம் கோவை மாவட்டம். அந்த மாவட்டத்திலே மிக அதிகமான தொழிற்சாலைகளும், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலே பஞ்சாலைகளும் இருக்கின்றன. அதிக வருமானத்தை இந்த மாநகராட்சிக்கு ஈட்டித் தருவதே கோவை மாநகர தொழிற்சாலைகளும் தொழிலதிபர்களும்தான். அப்படி இருக்கின்றபொழுது கோவை மாநகராட்சியை எழில்மிகு கோவை மாநகரம் 2000 என்ற பெயரில் அங்கேயிருக்கின்ற நிதியைப் பொறுத்து எதிர்காலத்திலே ஒரு திட்டம் வகுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கின்ற பொழுது தமிழகத்திலேயே பல வசதிமிக்க மாவட்டம் கோவை மாவட்டம். அந்த அடிப்படையிலே நிதியாதாரத்தைப் பெருக்குவதற்கு மாநகராட்சி அத்துணை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழகத்திலே இருக்கின்ற மூன்று மாநகராட்சிகளிலே சமீபத்திலே உயர்த்தப்பட்ட

சொத்து வரியின் காரணமாக வழக்காடு மன்றங்களுக்குச் சென்றவர்கள் கோவை மாநகரத்திலேதான் அதிகமாக இருக்கிறார்கள். பண வசதி இருந்தாலும் மனதிலே இடமில்லாத காரணத்தால் இப்படிப்பட்ட நிகழ்வுகள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. இருந்தாலும்கூட, கன்சிலியேஷன் என்ற அடிப்படையிலே அங்கேயிருக்கின்ற வியாபாரிகளையும், தொழிலதிபர்களையும் தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற மாநகராட்சியினுடைய ஆணையாளரவர்கள் அழைத்துப் பேசி நிதி வசூல் செய்வதிலே, மாநகராட்சியினுடைய நிதியாதாரத்தைப் பெருக்குவதிலே முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாளை வர இருக்கின்ற மானியக் கோரிக்கையிலே எழில்மிகு கோவை 2000 என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய நல்லாசியோடும், ஆணையோடும் அறிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 378, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

378–

அம்பாசமுத்திரத்தில் குடிநீர்த் திட்டத்திற்கு நிலங்கள் கையகப்படுத்தல்

**21259*-திரு. *ஆர். முருகையா பாண்டியன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பா சமுத்திரம் பேரூராட்சி மன்றத்தின் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அம்பாசமுத்திரம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்கள் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது தேவையான இடங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இனாமாகக் கொடுக்க அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றம் சம்மதித்துள்ளதால் அவ்விடங்களை மட்டும் கையகப்படுத்த குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ளது.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் நடைபெற்றிருக்கிற குடிநீர்த் திட்டம் கிட்டதட்ட 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டது. அப்போதிருந்த ஜனத்தொகைக்கு அது போதுமானதாக இருந்தது. ஆனால் இப்போது நான்கு மடங்காக அதுபோன்ற ஜனத்தொகை கூடிவிட்ட காரணத்தால் அங்கே குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் அதிகமாக இருக்கிறது. இந்தக் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்பதற்காக, கிட்டத்தட்ட ரூ. 60 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எங்களுடைய குடிநீர்த் திட்டத்தை விரைவிலே இந்த ஆண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன அம்பாசமுத்திரம் பேரூராட்சிக்கு தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ. 57.92 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசினுடைய நிர்வாக ஒப்புதலுக்காக அந்தத் திட்ட மதிப்பீடும், அந்தத் திட்டத்தினுடைய வடிவமைப்பும் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு கூடிய விரைவிலே அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி இந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 379, டாக்டர் ஜெ. பரந்தாமன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

379–

வாணியம்பாடி வட்டத்தில் பிந்து மாதவர் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்தல்.

***24515**—டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 25]

(அ) வாணியம்பாடி வட்டம், துத்திப்பட்டு பிந்து மாதவர் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த ஆலையத்தில் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்பெற்றுள்ளன.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடிக் கிடந்த கோயில்களைத் திறந்து ஒருகால பூஜைக்கு ஏற்பாடு செய்து, வாடிக் கிடந்த பக்தர்கள் மனதில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வைத்து, சிலைத் திருட்டை அடியோடு தடுத்து நிறுத்தி, மக்களுக்கு வாழ்வளித்து, மக்களைக் காக்கின்ற கடவுளையும் காக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மிகப் பழமையான கோயிலான துத்திப்பட்டு, பிந்து மாதவர் திருக்கோயிலுக்கு, மாண்புமிகு பொற்கால முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பிறந்தநாளை முன்னிட்டு, 46 நபர்களுக்கு ரத்தப் பிரிவு சோதனை முகாம் துவக்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரணாம்பட்டிற்கு வருகை தந்தபோது,-அந்தத் திருக்கோயிலுக்கு வருகை தந்தார். அப்போது அம்மாவின் பார்வைக்குக் கொண்டுசெல்ல மனு தரப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட இந்தத் திருக்கோயிலினுடைய கும்பாபிஷேகத்திற்காக பக்தர்களே அவர்களுடைய சொந்த செலவிலே செய்திருக்கிறார்கள். சிலர் எல்லா சொத்தையும் வைத்து வீடு கட்டிவிட்டு சோற்றிற்குத் திண்டாடுவதைப் போல அவர்கள் செய்துவிட்டார்கள். இப்போது அந்தக் கோயிலுக்கு அரசின் சார்பிலே எந்தவிதமான உதவியும் இல்லை. அம்மா அவர்கள் 234 தொகுதிகளுக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல பேரணாம்பட்டுத் தொகுதியையும் கருணையோடு காத்து உதவி செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனுடைய மற்ற பணிகளை அரசு செய்யுமா என்று கேட்டார்கள். அது நம்முடைய அறநிலையத்துறையைச் சேராத கோயில். பழம்பெரும் கோயில். ஆகவே மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் மிக அக்கறையோடு, 5 லட்சம் ரூபாய் செலவிலே குட முழுக்கு

செய்வதற்கு நல்ல முறையிலே நடவடிக்கை எடுத்து அது நடைபெற்றிருக்கிறது. மற்ற வேலைகளையும் இது போலச் செய்ய, மக்களிடத்திலே எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதைத் தெரிந்துக்கொண்டு,- ஏற்கெனவே அதனுடைய மதிப்பீட்டினைப் பெறக் கேட்டிருக்கிறோம்- அது வந்ததும், மாண்புமிகு உறுப்பினர் எவ்வளவு கொடுக்க முடியம், மக்கள் எவ்வளவு கொடுக்க முடியும் என்பதைத் தெரிந்து கொண்டு, மீதித் தொகையை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய கோயில் பாரமரிப்பு நிதியிலிருந்து கொடுக்க நிச்சயமாக அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய கனிவான கருணைக்கு நன்றி. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய, ஒரு கால பூஜைக்காக 2500 ரூபாய் தருகின்ற அந்த திட்டத்திலே பேரணாம்பட்டு தொகுதி மக்கள் கிட்டத்தட்ட 25 கோயில்களுக்கு அந்த ஒரு கால பூஜைக்கு வழி செய்திருக்கிறார்கள். எல்லா கோவில்களுக்கும் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். அரசும் உதவ வேண்டும் என்று கேட்டு, வாணியம்பாடி வட்டத்திலுள்ள இந்தக் கோயில் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதால், அறநிலையத் துறையை அணுக நீண்ட தூரம் திருவண்ணாமலை போய் மனு கொடுக்க வேண்டி உள்ளது. எனவே வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்ட நிர்வாகத்தோடு இணைய ஆணையிட்டு, மக்களைக் காத்து நல்லாட்சி செய்து வரும் காவல் தெய்வமாக விளங்கி வரும் நம் முதல்வர், கோவிலில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு அவர்கள் வாழ்வில் ஒளி ஊட்ட குறைந்தபட்ச ஊதியமாக ரூ. 1,500 என்று நிர்ணயித்து அர்ச்சகர்களைக் காக்க முன் வருவார்களா? ஏனெனில் வருவாய் இல்லாத அந்தக் கோயிலில் மாதம் ரூபாய் 400க்கு அர்ச்சகர்கள் பணிபுரிகிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரந்தாமன் நீங்கள் மூலக்கேள்வியாக கேட்டிருப்பது ஒரு குறிப்பிட்ட கோவில் புனர் அமைப்பு செய்வது பற்றியது. இதிலே ஒட்டு மொத்தமாக அர்ச்சகர்களுக்கு ரூபாய் 1,500 கொடுப்பீர்களா என்றால் அது கொள்கை முடிவு. இதுபற்றி திடீரென்று அமைச்சர் சொல்ல முடியாது. அந்தக் கோவிலைப் பற்றிக் கேளுங்கள்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: இந்தக் கோவிலிலேயே அர்ச்சகர்கள் ரூபாய் 400 பெற்றுக் கொண்டுதான் பணியாற்றுகிறார்கள். எல்லோரையுமே காக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் அந்தக் கோவிலிலே

பணி புரிகின்ற அர்ச்சகர்களுக்கு கூடுதலாக ஊதியம் தர முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொள்கை முடிவு. ஆகவே இதை பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும் என்பதை கனிவோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 380, டாக்டர் பெ. வீரபாண்டியன். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

380–

செங்கத்தில் மூங்கிலை மூலதனமாகக் கொண்டு சிறுதொழில் துவங்குதல்.

**22605-டாக்டர் பெ. வீரபாண்டியன்:*

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கத்தில் மூங்கிலை மூலதனமாகக் கொண்டு சிறுதொழில் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் குப்பநத்தம் கிராமத்தில் ''மூங்கில் பொருட்களை உற்பத்தி செய்யும் கூட்டுறவு சங்கம்'' கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்டது. அதில் அப்போது 200 உறுப்பினர்கள் கைவினைஞர்களாக இருந்தனர். அவர்கள் மூங்கிலை மூலப் பொருளாகக் கொண்டு, பட்டுப்புழு வளர்க்கும் சந்திரிகா தட்டு, எறுகூடை, முறம் மற்றும் சில பொருட்களை கிராமத்துக்கு தேவையான பொருட்களைத் தயாரித்து விற்றுக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்தச் சங்கம் மூடிய நிலையில் இருக்கிறது. மேலும் அதற்கு மூங்கில் வாங்க வேண்டுமென்றால், ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்குச் சென்றுதான் வாங்கி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வந்து, அந்தத் தொழிலைச் செய்துக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக அந்தச் சங்கத்தில் உள்ள 200 பேர்களில் 135 பேர்கள் ஆதித்திராவிட மக்கள் அதிகமாக இருக்கும் சங்கம். இப்போது அது மூடிய நிலையில் இருப்பதால், அத்தனை குடும்பங்களிலும் வேலை இல்லாமல் சிரமப்படுகிறார்கள். டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில், அமைச்சர் அவர்கள் இதற்கு புத்துயிர் அளித்து வாழ்வு தர முன் வருவார்களா என கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் மைக்கிலையே பேசலாம். உங்கள் மைக்கிற்கு கனெக்ஷன் கொடுக்கும்போது இந்த மைக்கிற்கு வந்துவிடுகிறீர்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள இந்த மூங்கில் தொழில் கூட்டுறவுச் சங்கமானது அந்தப் பகுதியிலே மூங்கில் சரிவர கிடைக்காத காரணத்தினால் முழு அளவிலே செயலாற்ற இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் செங்கம் பகுதியிலே மூங்கில் தொழில் செய்துவரும் கைவினைஞர்களுக்கு நிதியுதவி கொடுத்தாவது, இந்தப் பகுதியிலே இந்த மூங்கில் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் ஏழை எளிய மக்களை வாழ்விக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தோடு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் தனி நபர் கடனாக அதிக நபர்களுக்கு ஒதுக்கீடு செய்து இந்தப் பகுதியிலே மூங்கில் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் அந்த கைவினைஞர்களுக்கு நாங்கள் வாரியத்தின் மூலமாக நிதியுதவி செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குப்பநத்தம் கிராமம் ஜவ்வாது மலையினுடைய அடிவாரத்தில் அமைந்துள்ளது. அமைச்சர் பெருமகனாருக்குத் தெரியும். ஜவ்வாது மலையில் அதிக அளவில் மூங்கில் உற்பத்தி இருக்கிறது. எனவே, அந்த மூங்கிலை மூலப்பொருளாகக் கொண்டு அங்கே வாழும் மக்களுக்கு, கைவினைஞர்களுக்கு அங்கேயே பெர்மிட்

வழங்கி இந்தத் தொழிலை ஊக்குவிக்க வனத்துறையுடன் கலந்தாலோசித்து ஒரு நல்ல முடிவு எடுப்பாரா என கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு.பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2,3 ஆண்டுகாலமாக வனத்துறையிலிருந்து மூங்கில் கூப்பை பெற்று அதை வெட்டி இந்தத் தொழிலுக்கு பயன்படுத்துவது கடினமாக இருந்து வருகிறது. இருந்தாலும்கூட வாரியத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வனத்துறையின் மூலம் கலந்தாலோசித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க வினா எண் 369 திரும்ப எடுக்கப்படுகிறது. டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

369–

குன்னூர் தொகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டுதல்

** 20526—டாக்டர் எம். கருப்புசாமி:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் குன்னூர் தொகுதியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் ஆற்றோரங்களிலும், மலைச் சரிவுகளிலும் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். புயலாலும், மழையாலும், சரிந்து விழுகின்ற மண்ணாலும் அவர்கள்

பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுடைய வாழ்வை மேம்படுத்தும் வகையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர மறுபரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் நகரிலே குடிசைப் பகுதிகளுக்கு மேம்பாட்டு பணிகள் 1993-94 ஆம் ஆண்டிலே 2.1 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே 1987 முதல் 1993 வரை குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் அமைக்க குன்னூர் நகரில் 500 குடும்பங்கள் பயனடையும் வகையிலும் 6.56 இலட்சங்கள் செலவிடப்பட்டு உள்ளது. எனவே இதைத் தவிர அங்கே நிலங்கள் எடுத்து அதன் மூலமாக குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டம் எதுவும் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான எம்.ஜி.ஆர். நகர், கன்னிமாரியம்மன் கோயில் தெரு, சித்திவிநாயகர் காலனி ஆகிய பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக நடைபாதைகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நடைபாதைக்கு அருகில் உள்ள குடிசைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அந்த குடிசைவாழ் மக்களுக்கு அந்த இடத்திலேயே அரசு சார்பாக வீடுகள் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா? எதிர்காலத்திலாவது இதனை மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தினுடைய நிதிநிலைமையை அனுசரித்து எதிர்காலத்தில் இது குறித்து பரிசீலிக்கப்படும்.

362–

நத்தம் தாலுகா மருத்துவமனையை விரிவாக்கம் செய்தல்

***10514** திரு. எம். ஆண்டி அம்பலம்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் நகரில் இயங்கிவந்த ஆரம்ப சுகாதார நிலையம் இப்போது தாலுகா மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ள தால், கட்டிட விரிவாக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிடம் கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) விரைவில் கட்டப்படும்.

363–

கிண்டி அருகில் மருத்துவமனை, சுகாதார நிலையம் ஏற்படுத்துதல்

**21305– திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கிண்டிக்கு அருகிலுள்ள உள்ளகரம், புழுதிவாக்கம் ஆகிய இடங்களில் அரசு மருத்துவமனையோ, சுகாதார நிலையமோ ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: தற்சமயம் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(ஒன்பதாம் பட்டியல்)

1–

கோயம்புத்தூர் கெம்பட்டி காலனியில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 5018–திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மேற்குப்பகுதி கெம்பட்டி காலனியிலுள்ள வீடுகளுக்கு, குடிசைகளுக்கு பட்டா கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

1994 ஏப்ரல் 25]

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். முருங்கைக்காய் போடப்பட்ட சாம்பார் சுவையானதாகவும், வாசமுள்ளதாகவும் இருக்கும். அப்படிப்பட்ட சுவையான, மணமான முருங்கைக்காய்கள் தென் இந்தியாவிலே அரவக்குறிச்சியில், அந்தப் பகுதியில்தான் அதிகமாக உற்பத்தியாகின்றது. அதற்கு அடுத்தபடியாக எனது பக்கத்து தொகுதியான மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட மூலனூர் பகுதியிலும் அதிகமாக முருங்கைக்காய் உற்பத்தியாகின்றது. அரவக்குறிச்சியில் உற்பத்தியாகும் முருங்கைக்காய் பிரசித்தி பெற்றவை. நூற்றுக்கணக்கான லாரிகளில்—சென்னை உட்பட விசாகப்பட்டணம், பெங்களூர், குண்டூர், கேரளா, பம்பாய் போன்ற இடங்களுக்கு லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சவுதி அரேபியா, மலேசியா போன்ற வெளிநாடுகளிலே எல்லாம், இந்த முருங்கைக்காய் விலை, ஒரு முருங்கைக்காய் 3 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. மேலும், முருங்கைக் காய்களைப் பவுடர் செய்து தனியார் நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. வெளிநாடுகளில் முருங்கைக்காய்ப் பவுடரை குழம்புக்குப் பயன்படுத்துகின்றார்கள். சைனீஸ், மலாய்க்காரர்கள், அரபிகள் போன்றவர்கள் எல்லாம் இந்த முருங்கைக் காய் சாம்பாரை மிகவும் விரும்பிச் சாப்பிடுகின்றார்கள். இதை நான் வெளிநாடு சென்றிருந்தபோது நேரிலேயே பார்த்திருக்கிறேன். முருங்கைக் காய்களைப் பவுடர் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் லாபகரமாக இருக்கும் என்பதால் அப்படிப்பட்ட தொழில் கூடம் அரவக்குறிச்சியில் தொடங்குவதற்கும், மேலும், விதை முருங்கை, கொடி முருங்கை இப்படியாக ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்யப்படுகின்ற அரவக்குறிச்சி பகுதியில் "முருங்கைச் சாகுபடி திட்டம்" ஏற்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10 -20

மாண்புமிகு திரு. கு .ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முருங்கைக்காயில் சாம்பார் தயாரிக்க முடியாது என்று சொல்லவில்லை. அது சுவையாக இருக்காது என்று சொல்லவில்லை. ஆனால் நான் சொன்ன பதில், அரசே ஒரு தொழிற்சாலை நிறுவி அதிலே இருக்கக்கூடிய புரதச் சத்துக்களை எடுத்து, அதைப் பவுடராக்கி வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியாது என்று தான்

சொன்னேன். ஆனால் தனியார் ஒருவர் இந்தத் தொழிலைத் துவங்குவதற்கு முன்வருவார் என்று சொன்னால், அவருக்கு வேண்டிய அனைத்து ஆலோசனைகளையும், அதைப் பதப்படுத்துகின்ற முறையில், மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வழிவகைகளையும், உரிய அனைத்து ஆலோசனைகளையும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் மூலமாக வழங்கப்படும். அதே நேரத்திலே, நிதி பெற வேண்டுமென்று சொன்னால்கூட, தேசிய தோட்டக் கலை வாரியத்திடம் இருந்து அதற்குரிய நிதியையும் கடனாகப் பெற்றுத்தர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் முன்வருவார்களானால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று, அரவக்குறிச்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இல்லாததால் முருங்கைக்காய்கள் கமிஷன் ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. வியாபாரம் நடந்து வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு சரியான விலை கிடைப்பதில்லை. இதனால் இடைத்தரகர்கள் தான் கொள்ளை லாபம் அடைந்து வருகிறார்கள். எனவே, விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அரவக்குறிச்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலே 3 இடங்களிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி நடுவிலே இருக்கிறது. அதிலே பயிர் செய்யக்கூடிய விவசாயிகள் இரண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் செல்லலாம். இன்னும், அவர்களுடைய கோரிக்கையை பரிசீலித்துத்தான் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலே ஒரு கோடி ரூபாய்க்கு காய்கறிகளை மட்டுமே குளிர்பதன வசதி செய்யப்பட்ட கிட்டங்கியில் வைப்பதற்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு இன்றைக்கு அனுமதி வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 371, திரு. கா.பூ. முனுசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. முனிவெங்கடப்பன் கேட்கிறார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

371-

கோவை வேளாண்மைக் கல்லூரியில் கரும்பு ரகங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

***24674-**திரு. கா. பூ. முனுசாமி :*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பையூரிலுள்ள கோவை வேளாண்மைக் கல்லூரியின் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ப அதிக மகசூல் தரும் கரும்பு ரங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே, கேள்வி எழவில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பையூர் விவசாய ஆராய்ச்சி மையமானது மிகவும் பழமைவாய்ந்த ஒன்று ஆகும். அங்கே நெல்லில், பல புதிய ரகங்களைக் கண்டுபிடித்து, இன்றைக்கு அது நல்ல பயனுள்ள வகையிலே விவசாயிகளுக்குத் தரப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள். அதைப்போன்று, கம்பு, ராகி போன்றவற்றில் பல புதிய ரகங்களைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகவே, இதைப் போன்ற கரும்பை அங்கே கண்டுபிடித்தால் இன்றைக்கு வளர்ந்து வருகின்ற தொழில் அது, தொழிற்சாலைக்கு ஏற்ப கரும்பு உற்பத்தியை நல்லமுறையிலே செய்து கொடுக்க முடியும். ஆகவே, கரும்பு ஆராய்ச்சியை மறுபடியும் துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பையூரில் அமைந்துள்ள மண்டல ஆராய்ச்சி

நிலையத்தில் தர்மபுரி மாவட்டம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் பயிரிடக் கூடிய நெல், தானியங்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. கரும்புக்கு என்று கடலூரில் ஒரு ஆராய்ச்சி மையமும், சிறுகமணியில் ஒரு ஆராய்ச்சி மையமும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மேலாலத்தூர் ஆகிய 3 ஆராய்ச்சி மையங்களிலே கரும்பு பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இந்த 3 நிலையங்களில் கரும்புப் பயிர் ஆராய்ச்சி செய்து, அந்தப் பயிர்களை தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட்டு, பயிரிடப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் அதனுடைய மகசூல் அதிகமாக இருக்கிறதென்று உண்மையை அறிந்த பிறகுதான் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதை வெளியிடுகிறது. எனவே தர்மபுரி மாவட்டத்திற்கு வேண்டிய கரும்பு ரகங்களை மேலாலத்தூர் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை ஆராய்ச்சி நடைபெற்று, பக்கத்தில் உள்ள தர்மபுரி மாவட்டத்தில் வெளியிடப்பட்டு, அங்கே பயிரிடப்பட்டு, அதிக வருவாயை உழவர் பெருமக்கள் பெற்று வருகிறார்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 372, திரு. கே.ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. காஞ்சி பன்னீர்செல்வம் கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

372 -

தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகநலச் சேவகர்களை இயக்குநர்களாக நியமித்தல்

***16389*-திரு. கே.ஏ. மனோகரன் :**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிப்காட் மற்றும் டி.ஐ.ஐ.சி. போன்ற நிதி நிறுவனங்களில் தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூக நல்ச் சேவகர்களை அவ்வாரியங்களின் இயக்குநர்களாக நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் உடனே பரிசீலிக்கப்படுமா?

நிலையத்தில் தர்மபுரி மாவட்டம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் பயிரிடக் கூடிய நெல், தானியங்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. கரும்புக்கு என்று கடலூரில் ஒரு ஆராய்ச்சி மையமும், சிறுகமணியில் ஒரு ஆராய்ச்சி மையமும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மேலாலத்தூர் ஆகிய 3 ஆராய்ச்சி மையங்களிலே கரும்பு பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இந்த 3 நிலையங்களில் கரும்புப் பயிர் ஆராய்ச்சி செய்து, அந்தப் பயிர்களை தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட்டு, பயிரிடப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் அதனுடைய மகசூல் அதிகமாக இருக்கிறதென்று உண்மையை அறிந்த பிறகுதான் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதை வெளியிடுகிறது. எனவே தர்மபுரி மாவட்டத்திற்கு வேண்டிய கரும்பு ரகங்களை மேலாலத்தூர் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை ஆராய்ச்சி நடைபெற்று, பக்கத்தில் உள்ள தர்மபுரி மாவட்டத்தில் வெளியிடப்பட்டு, அங்கே பயிரிடப்பட்டு, அதிக வருவாயை உழவர் பெருமக்கள் பெற்று வருகிறார்கள்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 372, திரு. கே.ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. காஞ்சி பன்னீர்செல்வம் கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

372 -

தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகநலச் சேவகர்களை இயக்குநர்களாக நியமித்தல்

***16389*-திரு. கே.ஏ. மனோகரன் :**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிப்காட் மற்றும் டி.ஐ.ஐ.சி. போன்ற நிதி நிறுவனங்களில் தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூக நல்ச் சேவகர்களை அவ்வாரியங்களின் இயக்குநர்களாக நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் உடனே பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தைப் (சிப்காட்) பொறுத்தவரை, வர்த்தகம் மற்றும் தொழில் துறைகளின் சார்பாக, தலைவர், தென்னிந்திய வர்த்தக சங்க சபை மற்றும் தலைவர், சென்னை தொழில் வர்த்தக சபை ஆகியோர் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் (டிக்) பொறுத்தவரை சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத்தின் தலைவரும், முன்னாள் தலைவரும் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்குழுவிலே பல வல்லுநர்கள் இடம் பெறக் கூடுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினாலும், அந்தக் குழுவிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட், டிக் எல்லாம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக இருக்கிற அமைப்புகள். இந்த அமைப்புகளிலே தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனை வழங்குபவர்களை அங்கே இயக்குநர்களாகப் போட்டிருக்கிறோம். அதிகாரப் பற்றற்றவர்களையும் போட்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குகின்ற வாய்ப்பு அவர்களுக்கு சட்டமன்ற அவைக் களத்தில் இருப்பதால், இதுபோன்ற குழுக்களிலே அவர்களை இயக்குநர்களாக நியமித்து, அந்தக் குறுகிய வட்டத்தில் அவர்களை அடைக்க இந்த அரசு விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள், நல்ல பதில்தான். இருந்தபோதிலும் ஒரு சின்ன சஜஷன் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். சிப்காட் மற்றும் டிக் நிறுவனங்களில் தொழில் வல்லுனர்கள் என்று கருதப்படுகிற எக்ஸ்பர்ட் இன்ஜினியர்ஸ் மற்றும் வர்த்தக ரீதியில் எம்.பி.ஏ. படித்தவர்களை, அனுபவ ரீதியாக அவர்களைச் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று நான் சிப்காட், டிக் நிறுவனங்களுக்குச் செல்லும்போதெல்லாம்

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தைப் (சிப்காட்) பொறுத்தவரை, வர்த்தகம் மற்றும் தொழில் துறைகளின் சார்பாக, தலைவர், தென்னிந்திய வர்த்தக சங்க சபை மற்றும் தலைவர், சென்னை தொழில் வர்த்தக சபை ஆகியோர் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் (டிக்) பொறுத்தவரை சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத்தின் தலைவரும், முன்னாள் தலைவரும் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்குழுவிலே பல வல்லுநர்கள் இடம் பெறக் கூடுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினாலும், அந்தக் குழுவிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட், டிக் எல்லாம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக இருக்கிற அமைப்புகள். இந்த அமைப்புகளிலே தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனை வழங்குபவர்களை அங்கே இயக்குநர்களாகப் போட்டிருக்கிறோம். அதிகாரப் பற்றற்றவர்களையும் போட்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குகின்ற வாய்ப்பு அவர்களுக்கு சட்டமன்ற அவைக் களத்தில் இருப்பதால், இதுபோன்ற குழுக்களிலே அவர்களை இயக்குநர்களாக நியமித்து, அந்தக் குறுகிய வட்டத்தில் அவர்களை அடைக்க இந்த அரசு விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள். நல்ல பதில்தான். இருந்தபோதிலும் ஒரு சின்ன சஜஷன் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். சிப்காட் மற்றும் டிக் நிறுவனங்களில் தொழில் வல்லுனர்கள் என்று கருதப்படுகிற எக்ஸ்பர்ட் இன்ஜினியர்ஸ் மற்றும் வர்த்தக ரீதியில் எம்.பி.ஏ. படித்தவர்களை, அனுபவ ரீதியாக அவர்களைச் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று நான் சிப்காட், டிக் நிறுவனங்களுக்குச் செல்லும்போதெல்லாம்

கூட்டங்களில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி இருந்தால் நல்ல அறிவுரை பெறலாமென்ற காரணத்தால்தான் இந்த எண்ணத்தை நான் தெரிவிக்கிறேன். இந்த யோசனையை ஏற்று அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள்—அதிகாரிகள் தவிர மற்றவர்கள், தென் இந்திய தொழில் வர்த்தக சபை மற்றும் சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத் தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் சிறந்த ஆலோசனைகளை இந்த அரசுக்குச் சொல்லுகிறார்கள். இந்தக் குழுவில் இருந்துதான் ஆலோசனை சொல்ல வேண்டுமென்று இல்லை. வெளியிலே இருந்துகூட ஆலோசனைகளை எழுத்து மூலமாகச் சொன்னாலும் அல்லது அமைச்சரிடத்தில் சொன்னாலும், அல்லது தொழிற்துறைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் சொன்னாலும், எப்படிப்பட்ட இடத்திலிருந்து ஆலோசனைகளைத் தந்தாலும் இந்த அரசு நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 373, டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. து. மூர்த்தி கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

373-

நன்னிலம் பனங்குடியில் சுத்திகரிப்பு ஆலையில் உபதொழில்கள் தொடங்குதல்.

24166-டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நன்னிலம், பனங்குடியில் இயங்கவுள்ள சென்னை சுத்திகரிப்பு ஆலையின் மூலம் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு உப தொழில்கள் தொடங்க அரசிடம் ஏதும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) பனங்குடியில், எம்.ஆர்.எல். நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வரும் கச்சா பெட்ரோலியம் வடிப்பாலையில் கிடைக்க உள்ள நாஃப்தாவைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 1500 டன்கள் மொத்த உற்பத்தித் திறனுடன் நைட்ரோ பாஸ்பேட் மற்றும் கால்ஷியம் அம்மோனியம் நைட்ரேட் (உரங்கள்) உற்பத்தி செய்யும் வளாகம் ஒன்றினை கடலூருக்கு அருகில் அமைத்திடவும் இத்திட்டத்தை இணைத் துறையில் (Associate Sector) செயல்படுத்தவும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தீர்மானித்துள்ளது. பனங்குடி எம்.ஆர்.எல். ஆலையில் கிடைக்கவுள்ள எரி எண்ணெய்யையும் மேற்கண்ட உர உற்பத்தித் திட்டம் பயன்படுத்திக் கொள்ளும்.

முற்பகல் 10-30

திரு. நு. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே கிடைக்கின்ற கச்சாப் பொருட்களை வைத்து, 20 உப தொழில்கள் கடலூரில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். எங்கள் நாகை மாவட்டத்தில் இருக்கிற அத்தனை தொகுதிகளும் மிகவும் பின்தங்கிய தொகுதிகள். அப்படி, அந்தக் கச்சாப்பொருட்களைக் கொண்டு 20 உபதொழில்களை, நன்னிலம் பகுதியில் தொடங்கினால் அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்கள் பயன்பெறுகிற நிலை ஏற்படும். மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் அந்தப் பகுதியில் கொஞ்சம் குறைவதற்கு வசதியாகவும் இருக்கும். அதனால் படித்த இளைஞர்கள் பயன்பெறுகிற நிலையும் ஏற்படும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலூரில் அப்படி ஆரம்பிக்க இருக்கிற அந்த நிறுவனங்கள் குறித்துப் பரிசீலனை செய்து எங்கள் பகுதியான நன்னிலம் அல்லது நாகை பகுதியில் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 உரத் தொழிற்சாலைகள் அமைக்கவேண்டும் என்று சொன்னால் அதற்குப் பக்கத்தில் துறைமுக வசதி இருக்கவேண்டும். அதற்கு கடலூர்தான் சிறந்த இடம் என்று ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு, அந்த வேலைகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுவிட்ட காரணத்தால், உறுப்பினர் சொல்கிற அந்த இடத்தில் துவங்க பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.

(ஆ) பனங்குடியில், எம்.ஆர்.எல். நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வரும் கச்சா பெட்ரோலியம் வடிப்பாலையில் கிடைக்க உள்ள நாஃப்தாவைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 1500 டன்கள் மொத்த உற்பத்தித் திறனுடன் நைட்ரோ பாஸ்பேட் மற்றும் கால்ஷியம் அம்மோனியம் நைட்ரேட் (உரங்கள்) உற்பத்தி செய்யும் வளாகம் ஒன்றினை கடலூருக்கு அருகில் அமைத்திடவும் இத்திட்டத்தை இணைத் துறையில் (Associate Sector) செயல்படுத்தவும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தீர்மானித்துள்ளது. பனங்குடி எம்.ஆர்.எல். ஆலையில் கிடைக்கவுள்ள எரி எண்ணெய்யையும் மேற்கண்ட உர உற்பத்தித் திட்டம் பயன்படுத்திக் கொள்ளும்.

முற்பகல் 10-30

திரு. நு. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே கிடைக்கின்ற கச்சாப் பொருட்களை வைத்து, 20 உப தொழில்கள் கடலூரில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். எங்கள் நாகை மாவட்டத்தில் இருக்கிற அத்தனை தொகுதிகளும் மிகவும் பின்தங்கிய தொகுதிகள். அப்படி, அந்தக் கச்சாப்பொருட்களைக் கொண்டு 20 உபதொழில்களை, நன்னிலம் பகுதியில் தொடங்கினால் அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்கள் பயன்பெறுகிற நிலை ஏற்படும். மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் அந்தப் பகுதியில் கொஞ்சம் குறைவதற்கு வசதியாகவும் இருக்கும். அதனால் படித்த இளைஞர்கள் பயன்பெறுகிற நிலையும் ஏற்படும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலூரில் அப்படி ஆரம்பிக்க இருக்கிற அந்த நிறுவனங்கள் குறித்துப் பரிசீலனை செய்து எங்கள் பகுதியான நன்னிலம் அல்லது நாகை பகுதியில் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 உரத் தொழிற்சாலைகள் அமைக்கவேண்டும் என்று சொன்னால் அதற்குப் பக்கத்தில் துறைமுக வசதி இருக்கவேண்டும். அதற்கு கடலூர்தான் சிறந்த இடம் என்று ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு, அந்த வேலைகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுவிட்ட காரணத்தால், உறுப்பினர் சொல்கிற அந்த இடத்தில் துவங்க பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் முட்டத்தில் உள்ள எம்.ஆர்.எல். மற்றும் சில பெரிய தொழில்கள் நடக்கின்ற அந்த இடத்தில் கிடைக்கின்ற மூலப்பொருளான கச்சாப் பொருளை எடுத்துக்கொண்டு, கடலூருக்குச் சென்று அங்கே அதை செயல்படுத்தலாம் என்று சொன்னார்கள். நாகை மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கு, கோத்தாரி, எம்.ஆர்.எல். போன்ற பேக்டரிகள் இயங்கும்போது நாகை நகரம் அழகாகத் திகழும். அப்படிப்பட்ட அழகு பொருந்திய நாகப்பட்டிணத்தில் கிடைக்கின்ற கச்சாப் பொருள்களைக் கொண்ட உப தொழில்களுக்குத் தேவையான துறைமுகம் அங்கேயே இருக்கிறது. ஆகவே, கடலூர் திட்டத்தை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் மாற்றி, நாகைக்கே அதைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தத் தொழிற்சாலைகள் கடலூரில் தொடங்கப்படும் என்று அரசு அனுமதி அளித்து அதற்கு உண்டான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அதை மீண்டும் நாகைக்கு மாற்றினால் கடலூர்க்காரர்கள் கலவரத்திற்கு வந்துவிடுவார்கள். ஆகவே, அந்த யோசனை இப்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 374, திரு. செ.து. வரதராஜன்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

374–

நோயுற்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்குப் பண உதவி வழங்குதல்.

****15244*-திரு. செ. து. வரதராஜன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நோயுற்ற ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்காக பண உதவி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பு இல்லை.

திரு. செ.து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு மாதம் 15 ரூபாய் மெடிக்கல் அலவன்ஸ் தரப்படுகிறது. இந்தத் தொகை மிகவும் குறைவானது, மருந்து வாங்குவதற்குக் கூட இப்போதைக்கு இருக்கிற விலைவாசியில் முடியாத நிலையில் இருக்கிறது. இந்தத் தொகை போதாத நிலையில் இருக்கிறது. பெரிய, கொடிய, நோய் உள்ளவர்களுக்கும், அறுவை சிகிச்சை செய்யவேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கும், அதற்காக பணம் அதிகம் தேவைப்படுகிறது. பண வசதியில்லாத காரணத்தால் உயிர் இழக்கின்ற அவல நிலை கூட ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு சேம நல நிதியிலிருந்து பெருந்தொகையை ஒதுக்கித்தர அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் அப்படிப்பட்ட திட்டம் ஏதும் இல்லை. எனினும், ஆசிரியர்களுக்கு அவர்களுடைய வருங்கால வைப்பு நிதியிலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக 75% முன் பணம் பெற அனுமதி இருக்கிறது. ஆசிரியர் நல தேசிய நிதியில் (National Foundation for Teachers Welfare) சில குறிப்பிட்ட வியாதியால் பீடிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கென நிதி உதவி ரூ. 750 முதல் ரூ. 25,000 வரை அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடிய நோய்களாலும், தீராத நோய்களாலும், பெரிய அறுவை சிகிச்சைகளினாலும் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஆசிரியர்களுக்கு சம்பளத்தோடு லீவு தந்து, அந்த நோய் குணம் ஆகின்றவரை அவர்களுக்கு உதவி செய்ய அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நோயால் பீடிக்கப்பட்டு இருப்பவர்கள் ஊதியத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

(அ) அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பு இல்லை.

திரு. செ.து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு மாதம் 15 ரூபாய் மெடிக்கல் அலவன்ஸ் தரப்படுகிறது. இந்தத் தொகை மிகவும் குறைவானது, மருந்து வாங்குவதற்குக் கூட இப்போதைக்கு இருக்கிற விலைவாசியில் முடியாத நிலையில் இருக்கிறது. இந்தத் தொகை போதாத நிலையில் இருக்கிறது. பெரிய, கொடிய, நோய் உள்ளவர்களுக்கும், அறுவை சிகிச்சை செய்யவேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கும், அதற்காக பணம் அதிகம் தேவைப்படுகிறது. பண வசதியில்லாத காரணத்தால் உயிர் இழக்கின்ற அவல நிலை கூட ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு சேம நல நிதியிலிருந்து பெருந்தொகையை ஒதுக்கித்தர அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் அப்படிப்பட்ட திட்டம் ஏதும் இல்லை. எனினும், ஆசிரியர்களுக்கு அவர்களுடைய வருங்கால வைப்பு நிதியிலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக 75% முன் பணம் பெற அனுமதி இருக்கிறது. ஆசிரியர் நல தேசிய நிதியில் (National Foundation for Teachers Welfare) சில குறிப்பிட்ட வியாதியால் பீடிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கென நிதி உதவி ரூ. 750 முதல் ரூ. 25,000 வரை அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடிய நோய்களாலும், தீராத நோய்களாலும், பெரிய அறுவை சிகிச்சைகளினாலும் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஆசிரியர்களுக்கு சம்பளத்தோடு லீவு தந்து, அந்த நோய் குணம் ஆகின்றவரை அவர்களுக்கு உதவி செய்ய அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நோயால் பீடிக்கப்பட்டு இருப்பவர்கள் ஊதியத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் ஆசிரியர்களுக்கு மகப்பேறு காலத்தில் குழந்தை பெறுவதற்காக அட்வான்ஸ் தொகை வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு விடுமுறை அளிக்கிற திட்டம் அரசிடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 375, திரு. ஜெ. பாலகங்காதரன்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

375-

திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்

**21745- திரு. ஜெ. பாலகங்காதரன் :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக வகுப்பறைகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இருந்தபோதிலும், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான்-இன்றையதினம் வரலாற்றிலே கல்விக்கு என்று ஒரு தனி இடத்தைப் பெற்று இருக்கின்ற இந்த நல்லாட்சியிலே, காமராசர் மாவட்டத்திலேயே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி, தனியார் மேல்நிலைப் பள்ளி அனைத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்கிக்கொண்டு சவால் விடுகின்ற அளவுக்கு அங்கே திறமையாகச் செயல்பட்டு வருகின்ற அந்த மேல்நிலைப் பள்ளி கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முந்தைய கட்டிடங்களை வைத்துக்கொண்டு சமாளித்து வருகின்றது. அந்தக் கட்டிடங்கள் போதாத ஒரு நிலையில்தான் இன்றையதினம் இந்தக்

கேள்வியைக் கேட்கின்றேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஒரு பள்ளிக்காவது, தயவுசெய்து, ஏதாவது ஒரு திட்டத்தில், பழைய டெக்ஸ்ட் புக் சொசைட்டி மூலமாவது அல்லது ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் அங்கே 5 வகுப்புறைகள் கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசு 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி இருக்கிறது. அந்தத் திட்டத்தில் பொதுவாக ஒரு பாதித் தொகையை பொதுமக்கள் பங்காகச் செலுத்தினால், மீதியை அரசு தரும் என்ற நிபந்தனை விதித்து இருக்கிறது. இந்த ஆண்டு விருதுநகர் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களில் திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளி, அந்தப் பட்டியலிலே இடம் பெறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அக்கறையோடு முன்மொழிவை உடனடியாக அனுப்பி வைத்தால் அரசு பரிசீலிக்கும் என்பதையும், தமிழ்நாடு பாட நூல் கழகத்தின் வாயிலாக கட்டிடம் தேவை என்றால் அதற்காகத் தனியாக ஒரு விண்ணப்பத்தை உரிய வழியில் உறுப்பினர் அவர்கள் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் கேட்ட கேள்வியையே ஒரு விண்ணப்பமாக வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யலாம். இருந்தபோதிலும், அமைச்சர் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். அதாவது, ஒரு லட்சம் ரூபாய் நிதியாக நாங்கள் தனியாகத் திரட்டித் தந்தால், அவர்கள், அரசாங்கத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் தனியாகத் தரும் திட்டம் இருக்கின்றது. அப்படிப்பட்ட திட்டத்தைப் பார்க்கும்போது அந்த திருத்தங்கல் நகரமானது ஒரு சிறிய நகரம்; அங்கே ஒரு லட்சம் ரூபாய் நிதியைத் திரட்டுவது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கின்ற காரணத்தினால், அமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு வகையிலே பரிந்துரை செய்து, எங்களுக்கு அந்தப் பள்ளிக்கு 5 வகுப்பறைக் கட்டிடங்களைக் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் அந்தக்

கேள்வியைக் கேட்கின்றேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஒரு பள்ளிக்காவது, தயவுசெய்து, ஏதாவது ஒரு திட்டத்தில், பழைய டெக்ஸ்ட் புக் சொசைட்டி மூலமாவது அல்லது ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் அங்கே 5 வகுப்புறைகள் கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசு 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி இருக்கிறது. அந்தத் திட்டத்தில் பொதுவாக ஒரு பாதித் தொகையை பொதுமக்கள் பங்காகச் செலுத்தினால், மீதியை அரசு தரும் என்ற நிபந்தனை விதித்து இருக்கிறது. இந்த ஆண்டு விருதுநகர் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களில் திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளி, அந்தப் பட்டியலிலே இடம் பெறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அக்கறையோடு முன்மொழிவை உடனடியாக அனுப்பி வைத்தால் அரசு பரிசீலிக்கும் என்பதையும், தமிழ்நாடு பாட நூல் கழகத்தின் வாயிலாக கட்டிடம் தேவை என்றால் அதற்காகத் தனியாக ஒரு விண்ணப்பத்தை உரிய வழியில் உறுப்பினர் அவர்கள் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் கேட்ட கேள்வியையே ஒரு விண்ணப்பமாக வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யலாம். இருந்தபோதிலும், அமைச்சர் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். அதாவது, ஒரு லட்சம் ரூபாய் நிதியாக நாங்கள் தனியாகத் திரட்டித் தந்தால், அவர்கள், அரசாங்கத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் தனியாகத் தரும் திட்டம் இருக்கின்றது. அப்படிப்பட்ட திட்டத்தைப் பார்க்கும்போது அந்த திருத்தங்கல் நகரமானது ஒரு சிறிய நகரம்; அங்கே ஒரு லட்சம் ரூபாய் நிதியைத் திரட்டுவது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கின்ற காரணத்தினால், அமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு வகையிலே பரிந்துரை செய்து, எங்களுக்கு அந்தப் பள்ளிக்கு 5 வகுப்பறைக் கட்டிடங்களைக் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் அந்தக்

கட்டிடம் கட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியும். ஏதாவது ஒரு வகையிலே செய்ய முடியாது. ஆகவே, அவர் உரிய வழியில் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *376*, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

376-

பீடித் தொழிலாளர்களுக்கு எலும்புருக்கி நோய் ஏற்படுவதைத் தடுத்தல்

****23168-**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளருக்கு எலும்புருக்கி நோய் (T.B.) ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பொதுவாக பீடித் தொழிலாளர்களில் பலர் நாளடைவில் எலும்புருக்கி நோயின் (T.B.) பாதிப்பிற்கு ஆளாவது உண்மைதான்.

(ஆ) பீடித் தொழிலாளர்கள் நலனுக்கென பீடித் தொழிலாளர் நல நிதிச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிகள் உருவாக்கப்பட்டு அது மத்திய அரசால் அமல்படுத்தப்படுகிறது. எலும்புருக்கி நோயினால் பாதிக்கப்படும் பீடித் தொழிலாளர்களுக்கு Domicillary Treatment என்ற திட்டத்தின் கீழ் மத்திய அரசு மருத்துவ வசதி அளித்து வருகிறது.

முற்பகல் 10-40

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. விவசாயத்திற்கு அடுத்தபடியாக ஒவ்வொரு கிராமத்திலும் வீடுகளில் பீடித்தொழிலில் ஆண்களும் பெண்களும் அதிக அளவில் ஈடுபட்டு வருகிறார்கள். காலையிலும் மாலையிலும் பல ஆண்டுகளாக தொடர்ந்து செய்து வருவதால் பீடித் தொழிலாளர்கள் காச நோயினால்

1994 ஏப்ரல் 25]

பாதிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. காச நோயினால் பாதிக்கப்பட்ட அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரவேல், சிகிச்சை எவ்வாறு அளிக்கப்படுகிறது என்பதையெல்லாம் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சொல்ல முடியாது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம்தான் கேட்கவேண்டும். இது தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிபார்ட்மென்ட் தான்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காச நோயால் பாதிக்கப்பட்ட பீடித் தொழிலாளர்களுக்கு என்று ஒரு தனியான திட்டத்தின்கீழ் மத்திய அரசு மருத்துவ வசதி அளித்து வருகிறது. பெருந்துறை டி.பி.சானடோரியத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று தனியாக படுக்கைகள் ஒதுக்கப்பட்டு 1992-93 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 6 பீடித் தொழிலாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். அதைப்போல மேலும் 8 இடங்களில் காச நோயினால் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 67 பீடித் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காச நோய் தொடர்ந்து பீடி சுற்றுவதால் 25, 30 வயதுள்ள இளம் வாலிபர்களுக்கும் வந்து விடுகிறது. இதனால் அவர்களுடைய வாழ்க்கை நிலை பாதிக்கப்படுகிறது. ஏழையெளிய மக்கள் மீது அன்பும் பாசமும் வைத்துள்ள நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் பீடித் தொழிலாளர்களுக்கு காச நோய் தவிர மற்ற நோய் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் அதிகமுள்ள இடங்களில் புறநோயாளிகள் பிரிவு மருந்தகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பத்து இடங்களில் இந்த மருந்தகங்கள் நடத்தப்படுகின்றன. இது தவிர மேலும் 13 இடங்களில் மருந்தகம் அமைப்பதற்காக மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டு, இது ஹைதராபாத் நல ஆணையருடைய பரிசீலனையில் உள்ளது. முக்கூடலில் 50 படுக்கைகள்

1994 ஏப்ரல் 25]

பாதிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. காச நோயினால் பாதிக்கப்பட்ட அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரவேல், சிகிச்சை எவ்வாறு அளிக்கப்படுகிறது என்பதையெல்லாம் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சொல்ல முடியாது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம்தான் கேட்கவேண்டும். இது தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிபார்ட்மென்ட் தான்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காச நோயால் பாதிக்கப்பட்ட பீடித் தொழிலாளர்களுக்கு என்று ஒரு தனியான திட்டத்தின்கீழ் மத்திய அரசு மருத்துவ வசதி அளித்து வருகிறது. பெருந்துறை டி.பி.சானடோரியத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று தனியாக படுக்கைகள் ஒதுக்கப்பட்டு 1992-93 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 6 பீடித் தொழிலாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். அதைப்போல மேலும் 8 இடங்களில் காச நோயினால் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 67 பீடித் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காச நோய் தொடர்ந்து பீடி சுற்றுவதால் 25, 30 வயதுள்ள இளம் வாலிபர்களுக்கும் வந்து விடுகிறது. இதனால் அவர்களுடைய வாழ்க்கை நிலை பாதிக்கப்படுகிறது. ஏழையெளிய மக்கள் மீது அன்பும் பாசமும் வைத்துள்ள நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் பீடித் தொழிலாளர்களுக்கு காச நோய் தவிர மற்ற நோய் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் அதிகமுள்ள இடங்களில் புறநோயாளிகள் பிரிவு மருந்தகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பத்து இடங்களில் இந்த மருந்தகங்கள் நடத்தப்படுகின்றன. இது தவிர மேலும் 13 இடங்களில் மருந்தகம் அமைப்பதற்காக மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டு, இது ஹைதராபாத் நல ஆணையருடைய பரிசீலனையில் உள்ளது. முக்கூடலில் 50 படுக்கைகள்

கொண்ட மருத்துவமனை கட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நில ஆர்ஜிதம் செய்து தந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் காச நோயால் பாதிக்கப்படும்போது எந்தக் கம்பெனியிலிருந்து அவர்கள் பீடி இலை வாங்கிச் சுற்றுகிறார்களோ, அந்த கம்பெனி நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று ஏதாவது விதிமுறை அரசில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் மிகவும் சிறிய குறுகிய இடத்தில் கிட்டத்தட்ட பத்து அடிக்குப் பத்து அடி இடத்தில் 20, 30 பேர் வேலை செய்கிற காரணத்தால், காச நோய் ஒருவருக்கு இருந்தாலும் கூட, கொஞ்சம் கொஞ்சமாக நிறையப் பேர்களுக்குப் பரவ வாய்ப்பு இருக்கிறது. மேலும் காச நோய் என்பது வறுமை நோய். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தப்பட்டதைப் போல, மிகச் சிறப்பாக வெற்றி கண்ட அந்த முகாமைப் போல, தொழிலாளர் நலத்துறை மூலமாக வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் இருக்கிற அனைத்து பீடித் தொழிலாளர்களுக்கும், தமிழகத்தில் இருக்கிற அனைத்து பீடித் தொழிலாளர்களுக்கும், ஒரு சிறப்பு மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தி, அனைவருக்கும் சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, அதற்கான முகாம் ஏற்படுத்த தீவிரமாக ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பத்து இடங்களில்தான் மத்திய அரசு நடத்துகிற பீடித் தொழிலாளர்களுக்கான ஆஸ்பத்திரி இருக்கிறது.

தயவுசெய்து நான் கேட்பதெல்லாம், ஒரு தாலுகாவுக்கு ஒரு மருத்துவமனை என்று ஏற்படுத்தினால் நல்லது. மத்திய அரசு ஓரளவுக்குத்தான் வைத்திருக்கிறது. ஸ்டேட் கவர்ன்மென்ட் ஏதாவது பைனான்ஸ் இதற்காக உருவாக்கி இன்னும் பல மருத்துவமனைகளை ஏற்படுத்துமா ? அப்படி இல்லையென்றால் தொழிலாளர்களுக்கு இதுபோன்ற டி.பி.நோய் யார் யாருக்கு வந்திருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் அந்த நேரத்தில், ஒரு ஆயிரம் ரூபாய் என்ற அளவில் நிதியுதவி அளிப்பதற்கு அரசு ஏதாவது திட்டத்தை வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து இடங்களில் புற நோயாளிகள் மருந்தகம் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் 13 இடங்களில் அமைப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டு, மத்திய அரசுக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அனுப்பி இருக்கிறது. மேலும் புறநோயாளிகள் டி.பி. யால் பாதிக்கப்பட்டிருந்தால் ஆங்காங்கே இருக்கிற அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

முற்பகல் 10-45

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் காச நோய் போன்ற கொடிய நோயால் பாதிக்கப்பட்டு, சொல்லொணாக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப் படுகிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், அவருடைய குடும்பங்கள் எல்லாம் அதிகமான கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகின்ற நிலையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலவர் பழிவாங்காப் பகை, கெடுதல் நினைக்காத கோபம், மதியாரை மதிக்கும் மனம், ஏசியவர்களையும் ஏற்கும் குணம், பொங்கி எழுந்தாலும் பொறுமையாக சிந்திக்கும் ஆற்றல், சிந்தித்து முடிவு எடுத்து செம்மையாக நிறைவேற்றும் திறன் கொண்ட, எங்களது அன்னையினுடைய ஆட்சியில் அப்படிப்பட்ட ஏழைத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு என்று தனியாக சேமநல நிதி ஒன்றை ஏற்படுத்தி, அந்த நிதியின் மூலமாக, கஷ்டப்படுகின்ற தொழிலாளர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 377, திரு. கே. செல்வராஜ்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

377–

கோயம்புத்தூர் மாநகராட்சியின் முக்கிய சாலைகளில் பாதாள மின் கம்பி பதித்தல்

***15216-**திரு. கே. செல்வராஜ்:*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் முக்கிய சாலைப் பகுதியில் உள்ள மின்சாரக் கம்பிகளை மாற்றி, பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில்; எப்போது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி முக்கிய சாலைப் பகுதிகளில் உள்ள மின்சாரக் கம்பிகளை மாற்றி பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, கோவை மாநகராட்சியில் உள்ள முக்கிய சாலைப் பகுதிகளில், மின்சாரக் கம்பிகளை மாற்றி பாதாளக் கம்பி பதிப்பு செய்து மின்சாரப் பிரிவை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று கூறினார்கள். கடந்த ஆண்டு மாநகராட்சியில் 3 மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு மாறாக கோவை ஆர்.எஸ். புரம், திவான்பகதூர் ரோடு பகுதிகளில் 1 கோடி ரூபாய் செலவில், பாதாளக் கம்பிகளைப் பதித்து, அந்தப் பணியைச் செயல்படுத்த-முதல்கட்டமாக பணிகளைச் செய்தும்—தொடர்ந்து மாநகராட்சி

மூலமாக செய்வதாகக் கூறியிருந்தார்கள். அந்தத் திட்டக் குறிப்பு என்ன ஆனது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கின்ற கேள்விக்கு என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில், நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தாலே, கோவையிலே சில முக்கியமான சாலைகளிலே பாதாளக் கம்பிகளைப் பதிக்கவேண்டிய அவசியம் இருப்பினும் கூட, தற்போதைக்குச் செய்ய இயலவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கோவையின் முக்கிய சாலைகள் என்று கருதப்படும் ஒப்பனக்கார வீதி, பெரிய கடை வீதி, திருச்சி ரோடு, அவினாசி ரோடு, டாக்டர் நஞ்சப்பா ரோடு, ஆர்.எஸ். புரம், திவான்பகதூர் ரோடு ஆகிய பகுதிகளில் பாதாள புதைகம்பி பதிக்கவேண்டியது அவசியம் என்று கருதினாலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் பாதாளக் கம்பிகளைப் பதிப்பதற்கு 6 கோடியே 27 லட்சம் மொத்த மதிப்பீடு தேவைப்படுகிறது என்ற காரணத்தால் நிதி வசதி மேம்படுத்தப்பட்டவுடன், கோயம்புத்தூர் மாநகராட்சி இதுகுறித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்றும், செய்வதற்கான நிதி வசதிகள் இருக்கின்றபோது செய்வதாகக் கூறினார்கள். எங்களது கோவை மாநகராட்சிக்கும், சென்னை மாநகராட்சிக்கு எழில்மிகு சென்னை என்ற திட்டத்திற்கு நிதி ஒதுக்குவது போல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசினுடைய நிதியை ஒதுக்கி, வருகின்ற நிதி ஆண்டிலாவது, அந்தப் பணிகளைச் செய்து, கோவை நகரில் எங்கு பார்த்தாலும், ஒயர்கள் குறுக்கும் நெடுக்குமாக ரோடுகளில் செல்லுகிற காரணத்தால், பஸ்களில் செல்லுகிறபோதுகூட பஸ்களில் முட்டுகின்ற அளவிற்கு ஒரு சில இடங்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ஒயர்களை மாற்றி, பாதாளக் கம்பிகளைப் பதிக்கும் பணியை அடுத்த நிதி ஆண்டில் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழில்மிகு சென்னை 2000-ஐப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியிலே பெறப்படுகின்ற நிதி ஆதாரத்தை

மூலமாக செய்வதாகக் கூறியிருந்தார்கள். அந்தத் திட்டக் குறிப்பு என்ன ஆனது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கின்ற கேள்விக்கு என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில், நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தாலே, கோவையிலே சில முக்கியமான சாலைகளிலே பாதாளக் கம்பிகளைப் பதிக்கவேண்டிய அவசியம் இருப்பினும் கூட, தற்போதைக்குச் செய்ய இயலவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கோவையின் முக்கிய சாலைகள் என்று கருதப்படும் ஒப்பனக்கார வீதி, பெரிய கடை வீதி, திருச்சி ரோடு, அவினாசி ரோடு, டாக்டர் நஞ்சப்பா ரோடு, ஆர்.எஸ். புரம், திவான்பகதூர் ரோடு ஆகிய பகுதிகளில் பாதாள புதைகம்பி பதிக்கவேண்டியது அவசியம் என்று கருதினாலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் பாதாளக் கம்பிகளைப் பதிப்பதற்கு 6 கோடியே 27 லட்சம் மொத்த மதிப்பீடு தேவைப்படுகிறது என்ற காரணத்தால் நிதி வசதி மேம்படுத்தப்பட்டவுடன், கோயம்புத்தூர் மாநகராட்சி இதுகுறித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்றும், செய்வதற்கான நிதி வசதிகள் இருக்கின்றபோது செய்வதாகக் கூறினார்கள். எங்களது கோவை மாநகராட்சிக்கும், சென்னை மாநகராட்சிக்கு எழில்மிகு சென்னை என்ற திட்டத்திற்கு நிதி ஒதுக்குவது போல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசினுடைய நிதியை ஒதுக்கி, வருகின்ற நிதி ஆண்டிலாவது, அந்தப் பணிகளைச் செய்து, கோவை நகரில் எங்கு பார்த்தாலும், ஒயர்கள் குறுக்கும் நெடுக்குமாக ரோடுகளில் செல்லுகிற காரணத்தால், பஸ்களில் செல்லுகிறபோதுகூட பஸ்களில் முட்டுகின்ற அளவிற்கு ஒரு சில இடங்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ஒயர்களை மாற்றி, பாதாளக் கம்பிகளைப் பதிக்கும் பணியை அடுத்த நிதி ஆண்டில் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழில்மிகு சென்னை 2000-ஐப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியிலே பெறப்படுகின்ற நிதி ஆதாரத்தை

வைத்து முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு என்று பிரத்யேகமாக அரசு எந்த நிதியும் ஒதுக்கவில்லை. அந்த அடிப்படையில் கோவை மாநகராட்சிக்கு என்று அரசு மூலமாக நிதி ஒதுக்கீடு என்ற பேச்சுக்கு இடமில்லை. எந்த ஒரு உள்ளாட்சியும் தன்னுடைய உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்துத்தான் அங்கே இருக்கின்ற மக்களுக்கு பல்வேறு தேவைகளையும் திட்டங்களையும் வழங்கவேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. அந்த அடிப்படையிலே கோவை மாநகராட்சியிலே பல்வேறு பணிகள் வரலாற்றிலே எந்தக் காலகட்டத்திலும் இல்லாத அளவிற்கு நிதி ஆதாரம் பெருக்கப்பட்டு, பல அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பாதாளக் கம்பியைப் பற்றி மீண்டும் கேட்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரை, மாநகராட்சியினுடைய நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டவுடன், நிச்சயமாக இந்தக் கருத்துரு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிக அளவு வருமானத்தை ஈட்டித் தருகின்ற ஒரு மாவட்டம் கோவை மாவட்டம். அந்த மாவட்டத்திலே மிக அதிகமான தொழிற்சாலைகளும், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலே பஞ்சாலைகளும் இருக்கின்றன. அதிக வருமானத்தை இந்த மாநகராட்சிக்கு ஈட்டித் தருவதே கோவை மாநகர தொழிற்சாலைகளும் தொழிலதிபர்களும்தான். அப்படி இருக்கின்றபொழுது கோவை மாநகராட்சியை எழில்மிகு கோவை மாநகரம் 2000 என்ற பெயரில் அங்கேயிருக்கின்ற நிதியைப் பொறுத்து எதிர்காலத்திலே ஒரு திட்டம் வகுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கின்ற பொழுது தமிழகத்திலேயே பல வசதிமிக்க மாவட்டம் கோவை மாவட்டம். அந்த அடிப்படையிலே நிதியாதாரத்தைப் பெருக்குவதற்கு மாநகராட்சி அத்துணை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழகத்திலே இருக்கின்ற மூன்று மாநகராட்சிகளிலே சமீபத்திலே உயர்த்தப்பட்ட

சொத்து வரியின் காரணமாக வழக்காடு மன்றங்களுக்குச் சென்றவர்கள் கோவை மாநகரத்திலேதான் அதிகமாக இருக்கிறார்கள். பண வசதி இருந்தாலும் மனதிலே இடமில்லாத காரணத்தால் இப்படிப்பட்ட நிகழ்வுகள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. இருந்தாலும்கூட, கன்சிலியேஷன் என்ற அடிப்படையிலே அங்கேயிருக்கின்ற வியாபாரிகளையும், தொழிலதிபர்களையும் தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற மாநகராட்சியினுடைய ஆணையாளரவர்கள் அழைத்துப் பேசி நிதி வசூல் செய்வதிலே, மாநகராட்சியினுடைய நிதியாதாரத்தைப் பெருக்குவதிலே முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாளை வர இருக்கின்ற மானியக் கோரிக்கையிலே எழில்மிகு கோவை 2000 என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய நல்லாசியோடும், ஆணையோடும் அறிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 378, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

378–

அம்பாசமுத்திரத்தில் குடிநீர்த் திட்டத்திற்கு நிலங்கள் கையகப்படுத்தல்

***21259*-திரு. ஆர். முருகையா பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றத்தின் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அம்பாசமுத்திரம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்கள் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது தேவையான இடங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இனாமாகக் கொடுக்க அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றம் சம்மதித்துள்ளதால் அவ்விடங்களை மட்டும் கையகப்படுத்த குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ளது.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் நடைபெற்றிருக்கிற குடிநீர்த் திட்டம் கிட்டதட்ட 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டது. அப்போதிருந்த ஜனத்தொகைக்கு அது போதுமானதாக இருந்தது. ஆனால் இப்போது நான்கு மடங்காக அதுபோன்ற ஜனத்தொகை கூடிவிட்ட காரணத்தால் அங்கே குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் அதிகமாக இருக்கிறது. இந்தக் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்பதற்காக, கிட்டத்தட்ட ரூ. 60 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எங்களுடைய குடிநீர்த் திட்டத்தை விரைவிலே இந்த ஆண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன அம்பாசமுத்திரம் பேரூராட்சிக்கு தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ. 57.92 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசினுடைய நிர்வாக ஒப்புதலுக்காக அந்தத் திட்ட மதிப்பீடும், அந்தத் திட்டத்தினுடைய வடிவமைப்பும் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு கூடிய விரைவிலே அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி இந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 379, டாக்டர் ஜெ. பரந்தாமன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

379–

வாணியம்பாடி வட்டத்தில் பிந்து மாதவர் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்தல்.

***24515**—டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) இக்குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது தேவையான இடங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இனாமாகக் கொடுக்க அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றம் சம்மதித்துள்ளதால் அவ்விடங்களை மட்டும் கையகப்படுத்த குடிநீர் வடிகால் வாரியம் உத்தேசித்துள்ளது.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் நடைபெற்றிருக்கிற குடிநீர்த் திட்டம் கிட்டதட்ட 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டது. அப்போதிருந்த ஜனத்தொகைக்கு அது போதுமானதாக இருந்தது. ஆனால் இப்போது நான்கு மடங்காக அதுபோன்ற ஜனத்தொகை கூடிவிட்ட காரணத்தால் அங்கே குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் அதிகமாக இருக்கிறது. இந்தக் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்பதற்காக, கிட்டத்தட்ட ரூ. 60 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எங்களுடைய குடிநீர்த் திட்டத்தை விரைவிலே இந்த ஆண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன அம்பாசமுத்திரம் பேரூராட்சிக்கு தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ. 57.92 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசினுடைய நிர்வாக ஒப்புதலுக்காக அந்தத் திட்ட மதிப்பீடும், அந்தத் திட்டத்தினுடைய வடிவமைப்பும் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு கூடிய விரைவிலே அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி இந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 379, டாக்டர் ஜெ. பரந்தாமன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

379–

வாணியம்பாடி வட்டத்தில் பிந்து மாதவர் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்தல்.

***24515**—டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 25]

(அ) வாணியம்பாடி வட்டம், துத்திப்பட்டு பிந்து மாதவர் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த ஆலையத்தில் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்பெற்றுள்ளன.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடிக் கிடந்த கோயில்களைத் திறந்து ஒருகால பூஜைக்கு ஏற்பாடு செய்து, வாடிக் கிடந்த பக்தர்கள் மனதில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வைத்து, சிலைத் திருட்டை அடியோடு தடுத்து நிறுத்தி, மக்களுக்கு வாழ்வளித்து, மக்களைக் காக்கின்ற கடவுளையும் காக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மிகப் பழமையான கோயிலான துத்திப்பட்டு, பிந்து மாதவர் திருக்கோயிலுக்கு, மாண்புமிகு பொற்கால முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பிறந்தநாளை முன்னிட்டு, 46 நபர்களுக்கு ரத்தப் பிரிவு சோதனை முகாம் துவக்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரணாம்பட்டிற்கு வருகை தந்தபோது,-அந்தத் திருக்கோயிலுக்கு வருகை தந்தார். அப்போது அம்மாவின் பார்வைக்குக் கொண்டுசெல்ல மனு தரப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட இந்தத் திருக்கோயிலினுடைய கும்பாபிஷேகத்திற்காக பக்தர்களே அவர்களுடைய சொந்த செலவிலே செய்திருக்கிறார்கள். சிலர் எல்லா சொத்தையும் வைத்து வீடு கட்டிவிட்டு சோற்றிற்குத் திண்டாடுவதைப் போல அவர்கள் செய்துவிட்டார்கள். இப்போது அந்தக் கோயிலுக்கு அரசின் சார்பிலே எந்தவிதமான உதவியும் இல்லை. அம்மா அவர்கள் 234 தொகுதிகளுக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல பேரணாம்பட்டுத் தொகுதியையும் கருணையோடு காத்து உதவி செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனுடைய மற்ற பணிகளை அரசு செய்யுமா என்று கேட்டார்கள். அது நம்முடைய அறநிலையத்துறையைச் சேராத கோயில். பழம்பெரும் கோயில். ஆகவே மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் மிக அக்கறையோடு, 5 லட்சம் ரூபாய் செலவிலே குட முழுக்கு

(அ) வாணியம்பாடி வட்டம், துத்திப்பட்டு பிந்து மாதவர் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த ஆலையத்தில் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்பெற்றுள்ளன.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடிக் கிடந்த கோயில்களைத் திறந்து ஒருகால பூஜைக்கு ஏற்பாடு செய்து, வாடிக் கிடந்த பக்தர்கள் மனதில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வைத்து, சிலைத் திருட்டை அடியோடு தடுத்து நிறுத்தி, மக்களுக்கு வாழ்வளித்து, மக்களைக் காக்கின்ற கடவுளையும் காக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மிகப் பழமையான கோயிலான துத்திப்பட்டு, பிந்து மாதவர் திருக்கோயிலுக்கு, மாண்புமிகு பொற்கால முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பிறந்தநாளை முன்னிட்டு, 46 நபர்களுக்கு ரத்தப் பிரிவு சோதனை முகாம் துவக்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரணாம்பட்டிற்கு வருகை தந்தபோது,-அந்தத் திருக்கோயிலுக்கு வருகை தந்தார். அப்போது அம்மாவின் பார்வைக்குக் கொண்டுசெல்ல மனு தரப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட இந்தத் திருக்கோயிலினுடைய கும்பாபிஷேகத்திற்காக பக்தர்களே அவர்களுடைய சொந்த செலவிலே செய்திருக்கிறார்கள். சிலர் எல்லா சொத்தையும் வைத்து வீடு கட்டிவிட்டு சோற்றிற்குத் திண்டாடுவதைப் போல அவர்கள் செய்துவிட்டார்கள். இப்போது அந்தக் கோயிலுக்கு அரசின் சார்பிலே எந்தவிதமான உதவியும் இல்லை. அம்மா அவர்கள் 234 தொகுதிகளுக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல பேரணாம்பட்டுத் தொகுதியையும் கருணையோடு காத்து உதவி செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனுடைய மற்ற பணிகளை அரசு செய்யுமா என்று கேட்டார்கள். அது நம்முடைய அறநிலையத்துறையைச் சேராத கோயில். பழம்பெரும் கோயில். ஆகவே மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் மிக அக்கறையோடு, 5 லட்சம் ரூபாய் செலவிலே குட முழுக்கு

செய்வதற்கு நல்ல முறையிலே நடவடிக்கை எடுத்து அது நடைபெற்றிருக்கிறது. மற்ற வேலைகளையும் இது போலச் செய்ய, மக்களிடத்திலே எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதைத் தெரிந்துக்கொண்டு,- ஏற்கெனவே அதனுடைய மதிப்பீட்டினைப் பெறக் கேட்டிருக்கிறோம்- அது வந்ததும், மாண்புமிகு உறுப்பினர் எவ்வளவு கொடுக்க முடியம், மக்கள் எவ்வளவு கொடுக்க முடியும் என்பதைத் தெரிந்து கொண்டு, மீதித் தொகையை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய கோயில் பாரமரிப்பு நிதியிலிருந்து கொடுக்க நிச்சயமாக அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய கனிவான கருணைக்கு நன்றி. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய, ஒரு கால பூஜைக்காக 2500 ரூபாய் தருகின்ற அந்த திட்டத்திலே பேரணாம்பட்டு தொகுதி மக்கள் கிட்டத்தட்ட 25 கோயில்களுக்கு அந்த ஒரு கால பூஜைக்கு வழி செய்திருக்கிறார்கள். எல்லா கோவில்களுக்கும் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். அரசும் உதவ வேண்டும் என்று கேட்டு, வாணியம்பாடி வட்டத்திலுள்ள இந்தக் கோயில் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதால், அறநிலையத் துறையை அணுக நீண்ட தூரம் திருவண்ணாமலை போய் மனு கொடுக்க வேண்டி உள்ளது. எனவே வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்ட நிர்வாகத்தோடு இணைய ஆணையிட்டு, மக்களைக் காத்து நல்லாட்சி செய்து வரும் காவல் தெய்வமாக விளங்கி வரும் நம் முதல்வர், கோவிலில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு அவர்கள் வாழ்வில் ஒளி ஊட்ட குறைந்தபட்ச ஊதியமாக ரூ. 1,500 என்று நிர்ணயித்து அர்ச்சகர்களைக் காக்க முன் வருவார்களா? ஏனெனில் வருவாய் இல்லாத அந்தக் கோயிலில் மாதம் ரூபாய் 400க்கு அர்ச்சகர்கள் பணிபுரிகிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரந்தாமன் நீங்கள் மூலக்கேள்வியாக கேட்டிருப்பது ஒரு குறிப்பிட்ட கோவில் புனர் அமைப்பு செய்வது பற்றியது. இதிலே ஒட்டு மொத்தமாக அர்ச்சகர்களுக்கு ரூபாய் 1,500 கொடுப்பீர்களா என்றால் அது கொள்கை முடிவு. இதுபற்றி திடீரென்று அமைச்சர் சொல்ல முடியாது. அந்தக் கோவிலைப் பற்றிக் கேளுங்கள்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: இந்தக் கோவிலிலேயே அர்ச்சகர்கள் ரூபாய் 400 பெற்றுக் கொண்டுதான் பணியாற்றுகிறார்கள். எல்லோரையுமே காக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் அந்தக் கோவிலிலே

பணி புரிகின்ற அர்ச்சகர்களுக்கு கூடுதலாக ஊதியம் தர முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொள்கை முடிவு. ஆகவே இதை பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும் என்பதை கனிவோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 380, டாக்டர் பெ. வீரபாண்டியன். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

380–

செங்கத்தில் மூங்கிலை மூலதனமாகக் கொண்டு சிறுதொழில் துவங்குதல்.

**22605-டாக்டர் பெ. வீரபாண்டியன்:*

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கத்தில் மூங்கிலை மூலதனமாகக் கொண்டு சிறுதொழில் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் குப்பநத்தம் கிராமத்தில் ''மூங்கில் பொருட்களை உற்பத்தி செய்யும் கூட்டுறவு சங்கம்'' கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்டது. அதில் அப்போது 200 உறுப்பினர்கள் கைவினைஞர்களாக இருந்தனர். அவர்கள் மூங்கிலை மூலப் பொருளாகக் கொண்டு, பட்டுப்புழு வளர்க்கும் சந்திரிகா தட்டு, எறுகூடை, முறம் மற்றும் சில பொருட்களை கிராமத்துக்கு தேவையான பொருட்களைத் தயாரித்து விற்றுக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்தச் சங்கம் மூடிய நிலையில் இருக்கிறது. மேலும் அதற்கு மூங்கில் வாங்க வேண்டுமென்றால், ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்குச் சென்றுதான் வாங்கி

வந்து, அந்தத் தொழிலைச் செய்துக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக அந்தச் சங்கத்தில் உள்ள 200 பேர்களில் 135 பேர்கள் ஆதித்திராவிட மக்கள் அதிகமாக இருக்கும் சங்கம். இப்போது அது மூடிய நிலையில் இருப்பதால், அத்தனை குடும்பங்களிலும் வேலை இல்லாமல் சிரமப்படுகிறார்கள். டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில், அமைச்சர் அவர்கள் இதற்கு புத்துயிர் அளித்து வாழ்வு தர முன் வருவார்களா என கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் மைக்கிலையே பேசலாம். உங்கள் மைக்கிற்கு கனெக்ஷன் கொடுக்கும்போது இந்த மைக்கிற்கு வந்துவிடுகிறீர்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள இந்த மூங்கில் தொழில் கூட்டுறவுச் சங்கமானது அந்தப் பகுதியிலே மூங்கில் சரிவர கிடைக்காத காரணத்தினால் முழு அளவிலே செயலாற்ற இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் செங்கம் பகுதியிலே மூங்கில் தொழில் செய்துவரும் கைவினைஞர்களுக்கு நிதியுதவி கொடுத்தாவது, இந்தப் பகுதியிலே இந்த மூங்கில் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் ஏழை எளிய மக்களை வாழ்விக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தோடு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் தனி நபர் கடனாக அதிக நபர்களுக்கு ஒதுக்கீடு செய்து இந்தப் பகுதியிலே மூங்கில் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் அந்த கைவினைஞர்களுக்கு நாங்கள் வாரியத்தின் மூலமாக நிதியுதவி செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குப்பநத்தம் கிராமம் ஜவ்வாது மலையினுடைய அடிவாரத்தில் அமைந்துள்ளது. அமைச்சர் பெருமகனாருக்குத் தெரியும், ஜவ்வாது மலையில் அதிக அளவில் மூங்கில் உற்பத்தி இருக்கிறது. எனவே, அந்த மூங்கிலை மூலப்பொருளாகக் கொண்டு அங்கே வாழும் மக்களுக்கு, கைவினைஞர்களுக்கு அங்கேயே பெர்மிட்

வந்து, அந்தத் தொழிலைச் செய்துக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக அந்தச் சங்கத்தில் உள்ள 200 பேர்களில் 135 பேர்கள் ஆதித்திராவிட மக்கள் அதிகமாக இருக்கும் சங்கம். இப்போது அது மூடிய நிலையில் இருப்பதால், அத்தனை குடும்பங்களிலும் வேலை இல்லாமல் சிரமப்படுகிறார்கள். டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில், அமைச்சர் அவர்கள் இதற்கு புத்துயிர் அளித்து வாழ்வு தர முன் வருவார்களா என கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் மைக்கிலையே பேசலாம். உங்கள் மைக்கிற்கு கனெக்ஷன் கொடுக்கும்போது இந்த மைக்கிற்கு வந்துவிடுகிறீர்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள இந்த மூங்கில் தொழில் கூட்டுறவுச் சங்கமானது அந்தப் பகுதியிலே மூங்கில் சரிவர கிடைக்காத காரணத்தினால் முழு அளவிலே செயலாற்ற இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் செங்கம் பகுதியிலே மூங்கில் தொழில் செய்துவரும் கைவினைஞர்களுக்கு நிதியுதவி கொடுத்தாவது, இந்தப் பகுதியிலே இந்த மூங்கில் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் ஏழை எளிய மக்களை வாழ்விக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தோடு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் தனி நபர் கடனாக அதிக நபர்களுக்கு ஒதுக்கீடு செய்து இந்தப் பகுதியிலே மூங்கில் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் அந்த கைவினைஞர்களுக்கு நாங்கள் வாரியத்தின் மூலமாக நிதியுதவி செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குப்பநத்தம் கிராமம் ஜவ்வாது மலையினுடைய அடிவாரத்தில் அமைந்துள்ளது. அமைச்சர் பெருமகனாருக்குத் தெரியும். ஜவ்வாது மலையில் அதிக அளவில் மூங்கில் உற்பத்தி இருக்கிறது. எனவே, அந்த மூங்கிலை மூலப்பொருளாகக் கொண்டு அங்கே வாழும் மக்களுக்கு, கைவினைஞர்களுக்கு அங்கேயே பெர்மிட்

வழங்கி இந்தத் தொழிலை ஊக்குவிக்க வனத்துறையுடன் கலந்தாலோசித்து ஒரு நல்ல முடிவு எடுப்பாரா என கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு.பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2,3 ஆண்டுகாலமாக வனத்துறையிலிருந்து மூங்கில் கூப்பை பெற்று அதை வெட்டி இந்தத் தொழிலுக்கு பயன்படுத்துவது கடினமாக இருந்து வருகிறது. இருந்தாலும்கூட வாரியத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வனத்துறையின் மூலம் கலந்தாலோசித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க வினா எண் 369 திரும்ப எடுக்கப்படுகிறது. டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

369–

குன்னூர் தொகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டுதல்

* ***20526***—*டாக்டர் எம். கருப்புசாமி:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் குன்னூர் தொகுதியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் ஆற்றோரங்களிலும், மலைச் சரிவுகளிலும் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். புயலாலும், மழையாலும், சரிந்து விழுகின்ற மண்ணாலும் அவர்கள்

பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுடைய வாழ்வை மேம்படுத்தும் வகையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர மறுபரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் நகரிலே குடிசைப் பகுதிகளுக்கு மேம்பாட்டு பணிகள் 1993-94 ஆம் ஆண்டிலே 2.1 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே 1987 முதல் 1993 வரை குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் அமைக்க குன்னூர் நகரில் 500 குடும்பங்கள் பயனடையும் வகையிலும் 6.56 இலட்சங்கள் செலவிடப்பட்டு உள்ளது. எனவே இதைத் தவிர அங்கே நிலங்கள் எடுத்து அதன் மூலமாக குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டம் எதுவும் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான எம்.ஜி.ஆர். நகர், கன்னிமாரியம்மன் கோயில் தெரு, சித்திவிநாயகர் காலனி ஆகிய பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக நடைபாதைகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நடைபாதைக்கு அருகில் உள்ள குடிசைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அந்த குடிசைவாழ் மக்களுக்கு அந்த இடத்திலேயே அரசு சார்பாக வீடுகள் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா? எதிர்காலத்திலாவது இதனை மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தினுடைய நிதிநிலைமையை அனுசரித்து எதிர்காலத்தில் இது குறித்து பரிசீலிக்கப்படும்.

362–

நத்தம் தாலுகா மருத்துவமனையை விரிவாக்கம் செய்தல்

***10514** திரு. எம். ஆண்டி அம்பலம்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் நகரில் இயங்கிவந்த ஆரம்ப சுகாதார நிலையம் இப்போது தாலுகா மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ள தால், கட்டிட விரிவாக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(அ) மற்றும் (ஆ): கோவை தெற்கு வட்டம், கெம்பட்டி காலனியில் ட.ச.760/7.18 மற்றும் 764/1—35 ஆகிய சாலைகளில் சுமார் 12 வீடுகளுக்கு மேலாக மேற்கண்ட பூமிக்கு பாத்தியம் இல்லாத வேறு நபர்கள் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலம் கிராமக் கணக்குகளில் பட்டா நிலமாக உள்ளது. ஆனால் நிலம் நீண்ட காலமாக உரிமை கோரப்படாமல் இருந்து வருகிறது. எனவே, இந்நிலத்தை உரிமைக் கோரப்படாத ஒன்றாக கருதி, நிலத்தை அரசு ஏற்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு ஏற்ற பின்னர்தான் பட்டா வழங்க இயலும்.

2–

மன்னம்பந்தல் பஞ்சாயத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் ***5734*** **–திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை ஒன்றியம், மன்னம்பந்தல் பஞ்சாயத்தில் குடியிருப்போர் வீடுகளுக்கு இலவச மனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை–

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) நாகை-காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம் மன்னம்பந்தல் கிராம பஞ்சாயத்தில் 285 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இனி குடியிருப்பு பட்டா வழங்கவேண்டிய இனம் ஏதுமில்லை என்பதால் மேற்கொண்டு பட்டா வழங்கும் உத்தேசமில்லை.

3–

அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நிலங்களின் விவரம்

வினா எண்: ***8100*****–திரு. ஆர். முருகையா பாண்டியன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–*

அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப்பகுதி சிவந்திபுரம், ஊராட்சியின் இருபோக நஞ்சை, ஒருபோக நஞ்சை வாட்டரேட் நஞ்சை, புஞ்சை, புறம்போக்கு, நத்தம் ஆகிய நிலங்களின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப்பகுதி சிவந்திபுரம், ஊராட்சியில் உள்ள சிவந்திபுரம், ஈசானமடம் ஆகிய இரண்டு கிராமங்களில் கீழ்க்கண்டவாறு நஞ்சை, புஞ்சை, புறம்போக்கு, நத்த நிலங்கள் உள்ளன.

வரிசை எண்.	விவரம்	சிவந்திபுரம் பரப்பு (ஹெக்டேர்)	ஈசானமடம் பரப்பு (ஹெக்டேர்)
(1)	*(2)*	*(3)*	*(4)*
1.	இருபோக நஞ்சை	85.47.5	36.19.5
2.	ஒருபோக நஞ்சை	இல்லை	இல்லை
3.	வாட்டரேட் நஞ்சை	இல்லை	இல்லை
4.	வாட்டரேட் புஞ்சை	4.39.0	2.47.5
5.	புறம்போக்கு	120.73.0	9.59.6
6.	நத்தம்	63.75.0	இல்லை
7.	மொத்த நஞ்சை	120.87.0	14.49.5

4—

சங்கலூர் மக்களுக்கு பட்டா வழங்குதல்

வினா எண் **14116** — திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சி எல்லைக்குள் சங்கலூர் பள்ளத்தின் கரையோரம் வசித்து வரும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

சங்கலூர் பள்ளம் அடிக்கடி நீர்வரத்து உள்ள பகுதியாகும். மேற்படி பள்ளத் தண்ணீர் நகராட்சி பகுதியில் ஓடும்போது பல்வேறு இயற்கை சீற்றங்களை உருவாக்கி உயிர் சேதங்களை உண்டாக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நீர்நிலைப் புறம்போக்குகளை ஒப்படை செய்ய தடை உள்ளது. தவிர கோவை நகராட்சிப் பகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்கத் தடையுள்ளது. எனவே மேற்கூறிய காரணங்களினால் சங்கலூர் பள்ளப் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

5–

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் பட்டா மனைக்கட்டு வழங்குதல்

*வினா எண் **14604** – திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–*

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் மனைக்கட்டு பட்டா இல்லாமல் இருக்கும் 19 குடும்பங்களுக்கு பட்டா மனைக்கட்டு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை–

*மாண்புமிகு திரு. **எஸ். டி.** சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:*

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை உளூர் கிராமத்தில் வீடுகள் மனைக்கட்டுகள் இல்லாத 35 ஆதிதிராவிடர் குடும்பத்தினருக்கு வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு ஆதிதிராவிடர் நல வட்டாட்சியரின் பரிசீலனையில் உள்ளது. இதன்பொருட்டு மேற்படி கிராமபுல.எண். 233/1ஏ, 1சி, 232 மற்றும் 233/3ஏ1-ல் மொத்தம் 82.5 ஹெக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை அவரால் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

6–

பரமக்குடி தாலுகாவிலுள்ள புறம்போக்கு நிலங்கள் விவரம்

*வினா எண் **14741**–டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–*

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகாவில் ஓடைபுறம்போக்கு, கால்வாய் புறம்போக்கு, பாதை புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, ஊரணி புறம்போக்கு நிலங்கள் எத்தனை ஏக்கர் உள்ளன.

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம் பரமகுடி தாலுகாவில் கீழ்க்கண்ட அளவு புறம்போக்கு நிலம் உள்ளது:-

வரிசை எண்.	இனம்.	பரப்பு. ஹெக்டேரில்.	ஏக்கரில்.
(1)	(2)	(3)	(4)
1.	ஓடைப்புறம்போக்கு	295.43.0	730.00
2.	கால்வாய் புறம்போக்கு	2622.19.5	6479.36
3.	பாதை புறம்போக்கு	666.11.0	1645.94
4.	நத்தம் புறம்போக்கு	813.75.5	2010.76
5.	ஊரணி புறம்போக்கு	666.95.5	1648.02

7—

பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பெண் மருத்துவர் நியமனம்

*வினா எண் **24168**—டாக்டர் கோபால் :* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னிலம் தொகுதி, பூந்தோட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவர் பணியமர்த்தப்படுவாரா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

பட்டமேற்படிப்பு முடித்த பெண் உதவி மருத்துவரை பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

8—

திருப்பத்தூரில் தொழுநோய் கட்டுப்பாடு பிரிவு அமைத்தல்

வினா எண் ***24581*** **–** திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

திருப்பத்தூர் நகரில் தொழுநோய் கட்டுப்பாடு பிரிவு அமைக்க அரசு செயற்குறிப்பு உள்ளதா?

விடை–

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

ஏற்கனவே தொழுநோய் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் திருப்பத்தூரில் ஒரு தொழுநோய் கட்டுப்பாடு நிலையம் 1970 ஆம் வருடத்திலிருந்து செயல்பட்டு வருகின்றதால் இக்கேள்விக்கு இடமில்லை.

9—

பல்லவன் போருந்துகளில் பயணிகள் நின்றுகொண்டு பயணம் செய்வதைத் தடுக்க நடவடிக்கை

வினா எண் ***2815*** **—** திருமதி வி.ஜி. மணிமேகலை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) சென்னை நகரில் ஓடும் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிகள் நின்று கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்களா?

(ஆ இதனைத் தடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) உச்சகட்ட நேரங்களில் பயணிகளின் நெரிசல்கள் அதிக அளவில் இருப்பதால் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நின்று கொண்டு செல்லும் பயணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மிகப் பெரிய அளவில் பேருந்துகள் விடப்பட்டாலன்றி, நின்று

கொண்டு பயணம் செய்வதை முழு அளவில் தவிர்க்க இயலாது. ஆயினும், பள்ளிக்கூட நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதால் உச்சகட்ட நேரத்தில் ஏற்படும் நெரிசல் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது. இது தவிர சென்னை கடற்கரை செங்கற்பட்டு ரயில் பாதையை அகலப்படுத்துவது, மற்றும் ஒட்டுமொத்த விரைவுப் போக்குவரத்து ஆகியவைகள் ரயில்வேயினால் நிறைவேற்றப்பட்டால் பேருந்துகளில் நின்று கொண்டு பயணம் செய்வது பெருமளவில் குறைக்கப்பட ஏதுவாகும்.

10—

திருச்சி-நிலக்கோட்டை (வழி) திண்டுக்கல் தடத்தில் கூடுதல் பேருந்து விடுதல்

*வினா எண் **20358** —திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி-நிலக்கோட்டை (வழி) திண்டுக்கல், காந்திகிராமம், ஐம்பதுறைக்கோட்டை, அழகன்பட்டி, ஜங்கால்பட்டி, மைக்கேல் பாளையம் வழியாக பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து துறை அமைச்சர்:

திருச்சி - நிலக்கோட்டை (வழி) திண்டுக்கல் தடத்தில் தற்போது போதுமான பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

11—

சென்னை—பெங்களூர், திருப்பத்தூர் வழியாக விடும் திட்டம்

*வினா எண் **22276** — திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி, ஓசூர், பெங்களூர் செல்கிற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை திருப்பத்தூர் வழியாக விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னையிலிருந்து பெங்களூருக்கு திருப்பத்தூர் வழியாக இரண்டு பேருந்துகளை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக்கழகம் தற்போது இயக்குகிறது.

12—

ஆலங்காயம் வழியாக பெங்களூருக்கு பேருந்து வசதி

வினா எண் ***22974*** திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து ஆலங்காயம் வழியாக பெங்களூருக்கு பேருந்து விடப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இது ஒரு அண்டை மாநிலத் தடமாகும். அதற்குரிய உரிமம் இப்பொழுது இல்லை. இரு மாநில ஒப்பந்தத்தின்கீழ் இத்தடம் இடம்பெறவில்லை. அதனால் திருப்பத்தூரிலிருந்து ஆலங்காயம் வழியாக பெங்களூருக்கு பேருந்து இயக்க இயலாது.

13—

சங்கராபுரம் தொகுதியில் பெரியார் போக்குவரத்துக்கழக கிளைப் பணிமனை அமைத்தல்

வினா எண் ***23893*** – திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

சங்கராபுரம் தொகுதியில், பெரியார் போக்குவரத்துக் கழகக் கிளைப் பணிமனை ஒன்றை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சங்கராபுரத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

14—

பூம்புகார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் புதிய பயணிகள் படகுகள் வாங்கும் திட்டம்

வினா எண் ***24034*** *– திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

பூம்புகார் போக்குவரத்துக் கழகம் சார்பில் புதிதாக பயணிகள் படகுகள் வாங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

15—

ஆண்டிமடத்திலிருந்து பெரியகிருஷ்ணாபுரத்திற்கு பேருந்து வசதி

வினா எண் ***25074*** *– திரு. ஆர். தங்கராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி ஆண்டிமடத்திலிருந்து பெரிய கிருஷ்ணாபுரத்திற்கு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போழுது முதல் இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் - காடுவெட்டி தடத்தில் இயங்கும் நகரப் பேருந்தின் 14 நடைகளும், பெரிய கிருஷ்ணாபுரம் வழியாகத்தான் இயங்குகின்றன. எனவே புதிதாக ஆண்டிமடத்திலிருந்து பெரிய கிருஷ்ணாபுரத்திற்கு பேருந்து இயக்க தேவையில்லை.

16—

ஆண்டிமடம் வரதராஜன்பேட்டை கோயில்வரை பேருந்து நீட்டித்து இயக்குதல்

வினா எண் ***25080*** *– திரு.ஆர். தங்கராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆண்டிமடம் தொகுதி வரதராஜன்பேட்டைக்கு இயக்கப்படும் நகரப் பேருந்தை கோயில் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஜெயங்கொண்டம்-சோழதரம், ஜெயங்கொண்டம் - ராமபுரம், ஜெயங்கொண்டம் - தென்னூர், திருச்சி-தென்னூர் தடங்களில் இயக்கப்படும் பேருந்துகள் வரதராஜன்பேட்டை வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. வரதராஜன்பேட்டையிலிருந்து கோயில் 0.2. கி.மீ. தூரத்தில்தான் உள்ளது. வரதராஜன்பேட்டை கோயில்வரை செல்லும் பயணிகள் வரதராஜன்பேட்டை பேருந்து நிறுத்தத்தில் இறங்கிச் செல்லலாம். எனவே வரதராஜன்பேட்டையிலிருந்து கோயில் வரை நீட்டித்து இயக்கத் தேவையில்லை.

17—

ராதாபுரம் கும்பிக்குளம் சாலையை விரிவுப் படுத்துதல்

வினா எண் ***3624*** *– திருமதி ரமணி நல்லதம்பி:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, திருச்செந்தூர் சாலையிலிருந்து கும்பிகுளம் சாலையை விரிவுப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள திருச்செந்தூர் சாலையிலிருந்து கும்பிகுளம் செல்லும் சாலையின் சரியான பெயர் சீலாத்திக்குளம் கும்பிகுளம் சாலையாகும். இதன் மொத்த நீளம் 3.00 கி.மீ. ஆகும். இச்சாலை ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய பராமரிப்பின் கீழ் உள்ள ஒரு வரண்முறைப்படுத்தப்படாத சாலையாகும். 1991-92ம் ஆண்டு திருநெல்வேலி (நெடுஞ்சாலை) கிராம சாலைகள் கோட்டப் பொறியாளர் மூலம் சிறப்பு தன்னிறைவு திட்டத்தில் இச்சாலையை சிறப்பு உறுப்பினர் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய அங்கீகாரம் பெறப்பட்டு போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் இச்சாலையின் அவசரத் தேவை குறித்த பகுதியாகிய கி.மீ.2/0-3/6 வரை மேம்பாடு செய்ய முதல் கட்டப் பணியாக

TRUTH ALONE TRIUMPHS

எடுத்துக் கொள்ளப்பட்டு ரூ .6.80 லட்சம் மதிப்பீட்டில் வேலை செயலாக்கம் நடைபெற்று வருகிறது.

மீதம் உள்ள சாலைப்பகுதி கி.மீ. 0/0-2/0 வரை உள்ள பகுதியினை இனி வரும் நிதியாண்டில் எடுத்துச் செய்ய முன்னுரிமை அளிக்கப்படும்.

18—

ஆலங்குளம் அலவந்தான்குளம் சாலையை சீர் செய்யும் திட்டம்.

வினா எண் ***13669*—***திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியத்திலுள்ள அலவன்தான்குளம் ஊருக்குச் செல்லும் சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை தென்கலம் தெற்கு செழிய நல்லூர் சாலை (அரசு, இதர மாவட்ட சாலை) எனும் 8.4 கி.மீ. (கி.மீ 0/0-8/4) நீளமுடைய தார் சாலையாகும். இச்சாலை கி.மீ.7/46-ல் அலவன்தான்குளம் எனும் ஊர் உள்ளது.

இச்சாலை கி.மீ.2/0-3/0, கி.மீ.4/0-6/0 மற்றும் கி.மீ.7/0-8/0 ஆகிய பகுதிகள் கடந்த ஆண்டு ரூ. 3.06 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப் பட்டது. மற்ற பகுதிகளில் ஏற்படும் நொடிகள் உடனுக்குடன் சீர் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு இடையூறின்றி பராமரிக்கப்படுகிறது. இப்பகுதிகளை வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப மேம்பாடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

19–

ராதாபுரம் தொகுதி நத்தன்குழி அழகர் கூத்தன்குழி இடையில் பாலம் கட்டுதல்.

வினா எண் ***14132–*** *திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ராதாபுரம் தொகுதி, நத்தன்குழி அழகர் கூத்தன்குழி இடையே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு.எஸ்.கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

20—

ராஜபாண்டி ஆதிதிராவிட மக்கள் சுடுகாட்டிற்கு செல்ல பாலம் கட்டுதல்

வினா எண் ***10172***—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் ராஜபாண்டி கிராமத்தில் ஊருக்கு கீழ்புறம் ஆதிதிராவிடர் மக்கள் சுடுகாடு செல்வதற்கு வசதியாக பாலம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் ராஜபாண்டி கிராமம் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள வெள்ளக்கால் கழுநீர்குளம் என்கின்ற அரசு இதர மாவட்டச் சலையில் (கி.மீ.0/0-6/0) கி.மீ. 2/2ல் உள்ளது. இச்சாலைக்கு இணையாக தென் பகுதியில் மாறாந்தை கால்வாய் செல்கிறது. ஆதிதிராவிடர் மக்கள் தாங்கள் வாழும் பகுதியிலிருந்து சுடுகாடு செல்ல மாறாந்தை கால்வாயை தாண்டிச் செல்ல வேண்டும். இந்தக் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டும் பணி ரூ. 50,000 உத்தேச மதிப்பீட்டில் கட்டவிழ் நிதி மூலம் எடுத்துச் செய்ய திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ஆட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

21—

மானூர் ஒன்றியம் பல்லிக்கோட்டான் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல்

*வினா எண் **14845**–திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

மானூர் ஒன்றியம், சீதைக்குறிச்சி கிராமத்தின் அருகில் உள்ள பல்லிக்கோட்டான் கால்வாயின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கட்டக் கோரும் இடமானது மானூர் ஒன்றியத்தைச் சார்ந்த சீதைக்குறிச்சி - சுப்பையாபுரம் சாலையில் கி.மீ.1/0ல் பல்லிக்கோட்டான் கால்வாய் குறுக்கே கட்டப்பட்ட வேண்டிய பாலமாகும். மேற்படி சீதைக்குறிச்சி கிராமத்திலிருந்து தெற்கில் பிரிந்து செல்லும் சீதைக்குறிச்சி சுப்பையாபுரம் என்கின்ற மானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சாலையில் 1/0-ல் பல்லிக்கோட்டான் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டவும், இச்சாலையை (1.20 கி.மீ. நீளம்) மேம்பாடு செய்யவும் ரூ.3.00 லட்சம் தேவைப்படுகிறது. இப்பணி அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை.

நடப்பு எட்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஊராட்சி/ ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலுள்ள சாலை மற்றும் பால கட்டுமான பணிகளே நெடுஞ்சாலை துறையின் பகுதி. 2 திட்டத்தில் எடுத்துச் செய்ய வழிவகை செய்யப்படவில்லை. எனவே இந்தப் பால கட்டுமான பணியினை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி.2. திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது.

22—

திருச்சி கருப்பர் கோவில் வளைவில் வேகத் தடை அமைத்தல்

*வினா எண் **15300**–திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டையிலிருந்து திருச்சி செல்லும் வழியில் (திருக்கோகர்ணம்) கருப்பர் கோவில் வளைவில் ஒரு வேகத்தடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வேகத்தடுப்பு அமைக்கக் கோரும் இடமானது புதுக்கோட்டை - திருச்சி சாலை (Major District Road) கி.மீ.3/8-ல் கருப்பர் கோவில் அமைந்துள்ள பகுதியில் உள்ள சாலையின் வளைவில் அமைக்கப்பட வேண்டும். இவ்விடத்தில் தற்போது இருபுறத்திலும் எச்சரிக்கை பலகை நடப்பட்டுள்ளது. இச்சாலை திருச்சி, காரைக்குடி, இராமேஸ்வரம் போன்ற முக்கிய நகரங்களை இணைக்கும் சாலையாக உள்ளதால் இச்சாலை வழியாக முக்கியப் பிரமுகர்களும் செல்கின்றனர். மேலும் இச்சாலையில் உள்ள வளைவு பகுதியில் சுமார் கடந்த 10 வருடங்களாக எந்தவிதமான விபத்தும் ஏற்படவில்லை. இவ்விடம் வளைவுப் பகுதியாக இருப்பதால் வேகத்தடை அமைத்தால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆகவே, இவ்விடத்தில் தற்போதுள்ள எச்சரிக்கை பலகையே போதுமானதாகும்.

23—

சட்டமன்ற விடுதி மற்றும் அரசினர் தோட்டத்தில் உள்ள சாலைகளை பழுதுப் பார்த்தல்.

வினா எண் **15626** - திரு கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற விடுதி வளாகத்திற்குச் செல்லும் சாலையையும் அரசினர் தோட்டத்திலுள்ள சாலைகளையும் பழுதுப் பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற விடுதி வளாகத்திற்குச் செல்லும் சாலையையும் அரசினர் தோட்டத்திலுள்ள சாலைகளும் பழுதுப் பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன.

TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 25]

24—

பரமக்குடியில் பொதுப்பணித்துறை சிறப்புக் கட்டிடப் பிரிவு மூலம் புதிய கட்டிடங்கள்.

*வினா எண் **15742** – டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலுள்ள பொதுப்பணித்துறை சிறப்புக் கட்டிடப் பிரிவு மூலம் 1992-93ல் கட்டப்படும் கட்டிடங்கள் யாவை?

(ஆ) அவற்றின் மதிப்பு எவ்வளவு?

(இ) இனி கட்டப்பட இருக்கும் கட்டிடங்கள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ), (ஆ) மற்றும் (இ) பரமக்குடியில் உள்ள பொதுப்பணித்துறை சிறப்புக் கட்டிடப் பிரிவு மூலம் 1992-93ல் கட்டப்படும் கட்டிடங்களின் விவரமும் மதிப்பும்.

எண்	வேலை விவரம்	மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)
1	தாலுகா அலுவலகம், இராமேஸ்வரம்	38.19
2	இராமேஸ்வரத்தில் துணை கண்காணிப்பு குடியிருப்பு கட்டுதல்	5.86
3	தங்கச்சிமடம் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் 2 வகுப்பறை கட்டுதல்	2.50
4	சிவகங்கையில் மாவட்ட மருத்துவர் குடியிருப்பு கட்டுதல்	3.45
5	இராமேஸ்வரத்தில் களப்பணி நிலையக் கட்டிடம் கட்டுதல்	5.50
6	மருத்துவர், செவிலியர் மற்றும் கடைநிலை ஊழியர் குடியிருப்புகள் கட்டும் பணி - சிறுவாயல்	6.58

எண்	வேலை விவரம்	மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)
7	மருத்துவர், செவிலியர் மற்றும் கடைநிலை ஊழியர் குடியிருப்புகள் கட்டும் பணி - மரவமங்கலம்	6.58
8	சிவகங்கை மாவட்ட தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பகுதி கட்டுதல்	9.00
9	திருப்பத்தூரில் 6 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்	4.40
10	கமுதி பொது மருத்துவமனையில் 6 படுக்கைகள் கொண்ட குடும்ப நல அறுவை வார்டு கட்டுதல்	6.58
11	பரமகுடியில் 6 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதலும், அறுவை சிகிச்சை பிரிவும் கட்டுதல்	7.98
12	இராமநாதபுரம், மேலக்கிடாரம் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டுதல்	6.24
13	நாயினார் கோவிலில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டுதல்	8.76
14	குன்றக்குடியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டுதல்	8.75
15	மண்டபம், உயர்மட்ட கான்கீரீட் நீர் தொட்டி கட்டுதல்	7.00
16	காரைக்குடியில் அரசு நல விடுதி கட்டுதல்	17.54
17	இராமேஸ்வரத்தில் சுற்றுலா வரவேற்பு நிலையம் கட்டுதல்	18.54
18	கமுதியில் விதைக்கிடங்கு கட்டுதல்	1.85
19	பரமக்குடியில் விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்காக அலுவலகம் மற்றும் பரிசோதனை கூடம் கட்டுதல்	6.40

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

எண்	வேலை விவரம்	மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)
20	பரமகுடியில் விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்காக அலுவலகம் மற்றும் பரிசோதனை குடியிருப்பு கட்டுதல்	3.90
21	கமுதியில் பஸ் நிலையம் கட்டுதல்	12.00
22	இராமேஸ்வரம் பஸ் நிலையத்தில் டார்மிடரி பகுதி கட்டுதல்	30.00
23	காரைக்குடியில் பகுதி-2 பஸ் நிலையம் கட்டுதல்	22.50
24	திருப்பத்தூரில் கடைகள் தினசரி அங்காடிகள் மற்றும் வங்கி கட்டிடம் கட்டுதல்	22.50
25	தேவக்கோட்டையில் தினசரி அங்காடி கட்டுதல்	20.00
26	தேவக்கோட்டையில் தினசரி அங்காடியில் கட்டணம் கொடுத்து உபயோகிக்கும் கூடுதல் கழிப்பிட வசதிகள் கட்டுதல்	2.87
27	முதுகுளத்தூரில் பஸ் நிலையம் கடைகள் கட்டுதல்	20.00
28	இராமநாதபுரம் பட்டினம்காத்தான் கிராமத்தில் ஜவான் பவன் கட்டுதல்	31.60

பரமக்குடியில் உள்ள பொதுப்பணித்துறை சிறப்புக் கட்டிட பிரிவு மூலம் இனி கட்டப்படவிருக்கும் கட்டிடங்களும் விவர மதிப்பும்.

எண்	வேலை விவரம்	மதிப்பீடு (ரூ.லட்சத்தில்)
1	கோட்ட வளர்ச்சி அலுவலகம், பரமக்குடி	4.00
2	கோட்ட ஆட்சியாளர் அலுவலகம், பரமக்குடி	38.50
3	தாலுக்கா அலுவலகக் கட்டிட மேம்பாட்டு பணிகள்	2.00
4	இளையாங்குடியில் குடியிருப்புடன் கூடிய அலுவலகம் பிர்கா வருவாய் இன்ஸ்பெக்டருக்காக கட்டுதல்	1.96
5	இளையாங்குடியில் துணை தாசில்தார் குடியிருப்பு கட்டுதல்	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எண்	வேலை விவரம்	மதிப்பீடு (ரூ.லட்சத்தில்)
6	புதூரில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் கட்டுதல்	10.00
7	தேவகோட்டையில் கோட்ட வளர்ச்சி அலுவலகம்	7.50
8	சாக்கோட்டை காவல் நிலைய குடியிருப்பு பகுதியில் கழிப்பிடம் கட்டுதல்	0.70
9	பள்ளத்தூர் காவல்நிலைய குடியிருப்பு கழிப்பிடம் கட்டுதல்	1.22
10	மானாமதுரையில் அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டுதல்	5.00
11	திருவாடனை அரசு மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டுதல்	5.00
12	இளையாங்குடி அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டுதல்	5.00
13	பரமக்குடியில் எக்ஸ்ரே பகுதி கட்டுதல்	4.00
14	சிவகங்கை 48 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்	20.00
15	ராமநாதபுரம் மாவட்டத்தில் 10 படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சை வார்டு கட்டுதல்	10.00
16	20 படுக்கைகள் கொண்ட வார்டு கமுதியில் கட்டுதல்	6.00
17	தான்வர் திட்டத்தின் கீழ் பரமக்குடி விவசாயப் பயிற்சி நிலைய அலுவலகம் கட்டும் பணி	16.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

25—

தர்மபுரி மாவட்டத்தில் சாண எரிவாயு கலம் அமைத்தல்

வினா எண்:16111– திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாண எரிவாயு கலம் ஒன்று அமைக்க ஆகும் செலவு எவ்வளவு?

(ஆ) அரசு அளிக்கும் மானியம் எவ்வளவு?

(இ) தருமபுரி மாவட்டத்தில் எத்தனை அமைக்கப்பட்டன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 15 கனமீட்டர் திறனும் அதற்கு மேலும் உள்ள சாண எரிவாயு கலன்களை மட்டுமே அமைத்து வருகிறது. எனவே 15 கனமீட்டர் அதற்கு மேலும் உள்ள சாண எரிவாயு கலன்களுக்கு உரிய செலவின மதிப்பீடு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கலனின் திறன்	செலவின மதிப்பீடு	
	சமுதாயக்கலன்	நிறுவனக்கலன்
15 க.மீ.	ரூ.76,500/-	ரூ.66,300/-
25 க.மீ.	ரூ.1,23,000/-	ரூ.1,06,600/-
35 க.மீ.	ரூ.1,66,000/-	ரூ.1,44,300/-
45 க.மீ.	ரூ.2,04,000/-	ரூ.1,76,800/-
60 க.மீ.	ரூ.2,37,800/-	ரூ.2,09,900/-
85 க.மீ.	ரூ.2,94,000/-	ரூ.2,62,500/-

(ஆ) மத்திய அரசினர் சமுதாயக்கலன், மாடுகள் பராமரிப்பு நிலையத்தின் கலன் மற்றும் மத்திய, மாநில அரசு, தனியார் நிறுவனங்களுக்கு உள்ள கலன் என்று தனித்தனியாக மானியங்களை நிர்ணயம் செய்துள்ளனர். மத்திய மாநில அரசு நிறுவனங்களுக்கான மொத்த செலவினத்தில், மத்திய அரசின் மானியம் போக மீதமுள்ள செலவுகளை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. தனியார் நிறுவனங்கள் தங்களது மொத்த செலவினத்தில் மத்திய மானியம் போக மீதமுள்ள தொகையினை அவர்களே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மத்திய அரசினர் சமுதாயக்கலன், மாடுகள் பராமரிப்பு நிலையக்கலன் மற்றும் மத்திய மாநில அரசு, தனியார் நிறுவனங்களுக்கான கலன் என்று பிரித்து அளிக்கக்கூடிய மானிய விவரங்கள் பின்வருமாறு:-

கல்னின் திறன்	சமுதாயக்கலன்	மாடுகள் பராமரிப்பு நிலையம்	மத்திய மாநில அரசு, தனியார் நிறுவனங்கள்.
15.க.மீ.	ரூ.43,500/-	ரூ.59,700/-	ரூ.22,100/-
25.க.மீ.	ரூ.68,800/-	ரூ.95,900/-	ரூ.35,500/-
35.க.மீ.	ரூ.99,800/-	ரூ.1,43,400/-	ரூ.53,100/-
45.க.மீ.	ரூ.1,50,900/-	ரூ.1,72,600/-	ரூ.63,900/-
60.க.மீ.	ரூ.1,69,400/-	ரூ.2,06,900/-	ரூ.76,600/-
85.க.மீ.	ரூ.1,99,800/-	ரூ.2,54,300/-	ரூ.94,200/-

(இ) தர்மபுரி மாவட்டத்தில் ஓசூரில் உள்ள அரசு கால்நடைப் பண்ணையில் ஆறு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

26—

வெட்டன் விடுதி – வாணக்கன்காடு சாலை சீரமைப்பை துரிதப்படுத்துதல்

வினா எண் **16122**—திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில் வெட்டன் விடுதியில் இருந்து வாணக்கன்காடு வரை செல்லும் சாலையை சீரமைக்கும் பணியைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதியில் வெட்டன்விடுதி கோட்டைக்காடு (வழி) கடுக்காக்காடு சாலை கி.மீ.0/0-4/0 வரை பேருந்து தடச்சாலைகள் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டு மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றது. தற்சமயம் இச்சாலையில் இரண்டு அடுக்கு நீர்க்கட்டு கடின தளம் அமைக்கப்பட்டுள்ளது. தார்ச்சாலை அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்பட்டு பணிகள் முடிக்கப்படும்.

27—

புதுக்கோட்டை, புதுவயல் அருகே காட்டாற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண் ***16277***—*திரு.சி.சுவாமிநாதன்:* *மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை தொகுதி, புதுவயல் கிராமத்திற்கு அருகே காட்டாற்றில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பாலம் கட்ட கோரப்பட்டுள்ள இடம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி சாலையில் உள்ளது. இச்சாலையில் நீளம் 0.4 கி.மீ. ஆகும். (கி.மீ.0/0-0/4). இச்சாலையில் கி.மீ.0/2ல் "வாரி" ஒன்று குறுக்கிடுகிறது. வினாவில் குறிப்பிட்டுள்ளபடி காட்டாறு ஏதும் குறுக்கிடவில்லை. இவ்விடத்தில் தற்போது 600 எம்.எம். விட்டமுள்ள ஆர்.சி.சி. குழாய் பதிக்கப்பட்டுள்ளது. (DRY FIXING) இந்த வாரியின் அகலம் 0.90 மீ. தற்போதுள்ள குழாய் மழைக்காலங்களில் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. எனவே, இவ்விடத்தில் 900 எம்.எம். விட்டமுள்ள ஒரு வரிசை குழாய் பாலம் புதிதாக அமைக்கப்பட வேண்டும்.

2. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் பகுதி-2 திட்டம் மூலம் பணிகளை எடுத்துச் செய்ய வழி வகை செய்யப்படாததால் இப்பணியினை நெடுஞ்சாலைத்துறை மூலம் செயல்படுத்த இயலாது.

28—

புதுக்கோட்டை - பட்டுக்கோட்டை தார்ச் சாலையை அகலப்படுத்துதல்.

வினா எண் ***16286***—*திரு. எஸ். சண்முகநாதன்:* *மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டையிலிருந்து பட்டுக்கோட்டை வரை செல்லும் தார்ச் சாலையை அகலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் அகலப்படுத்துமாறு குறிப்பிட்டுள்ள புதுக்கோட்டை பட்டுக்கோட்டை சாலை நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள முக்கிய மாவட்டச் சாலையாகும். இதன் மொத்த நீளம் 40.40 கி.மீ. (கி.மீ4/4-44/8) ஆகும்.

இச்சாலை கி.மீ.4/4-20/0 வரையிலான பகுதியினை தோராயமாக ரூ.60.00 லட்சம் மதிப்பீட்டில் புதிய பணிகள் திட்டத்தில் அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டது. தற்போதுள்ள நிதிநிலையில் இடைக்கால திட்டங்கள் எதனையும் ஏற்க அரசால் இயலவில்லை. அதன்பேரில் இப்பணியினை பகுதி-2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம் என கருதப்பட்டது. ஆனால் தற்போது இச்சாலை முழுவதையும் (கி.மீ.4/4-44/8) அகலப்படுத்துவது அவசியம் என்பதாலும், இதற்கு தோராயமாக ரூ.100 லட்சங்கள் தேவைப்படுவதாலும், அதிகமான தொகை தேவைப்படும். இப்பணியினை அண்மைக் காலங்களில் திட்டப் பணிகளின் கீழ் மேற்கொள்ள இயலாது.

29—

புதுக்கோட்டை சொக்கநாதப்பட்டியிலிருந்து - பெரம்பலூர் மானாமதுரை வரை சாலையை மேம்படுத்தல்.

வினா எண் ***16736***—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம் சோத்துப்பாளை ஊராட்சி சொக்கநாதப்பட்டியிலிருந்து பெரம்பூர் மானாமதுரை வரை சாலை மேம்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் "சொக்கநாதப்பட்டி சாலை (கி.மீ. 0/0-2/6) என்பதாகும்.

இச்சாலை புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் பராமரிப்பில் உள்ள செம்மண் தள மேற்பரப்பும் 5 மீ. அகலமும் கொண்ட ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.10. லட்சம் தேவைப்படும்.

எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்பாட்டுப் பணிகளை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ள வகை செய்யப்படாததால் சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ள இயலாது.

30—

ஆலங்குடி தொகுதி மழையூர் - அதிரான் விடுதிக்கு இடையில் பாலம் கட்டுதல்

*வினா எண் **17140** — திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி மழையூர்-அதிரான் விடுதிக்கு இடையில் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

*மாண்புமிகு திரு. **எஸ். கண்ணப்பன்,** பொதுப்பணித் துறை அமைச்சர்:*

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலமானது வெள்ளாவிடுதி-மழையூர் சாலை கி.மீ.0/0-5/0 என்ற ஊராட்சி ஒன்றிய சாலையில் கி.மீ.2/4-ல் 100 மீ. நீர்வழிப்பாதையுடன் குறுக்கிடும் வாரியில் அமைக்கப்பட வேண்டியதாகும். கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பிலுள்ள இச்சாலையில் மேற்படி வாரி குறுக்கிடும் இடத்தில் உயர் மட்டப்பாலம் ஒன்று அமைக்கத் தோராயமாக ரூ.100 லட்சம் தேவைப்படும்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளை நெடுஞ்சாலைத்துறையின் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ள வகை செய்யப்படாததால் சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலத்தை நெடுஞ்சாலைத்துறையின் பகுதி-2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இயலாது.

31—

கபிலர்மலை பாமாகவுண்டன்பாளையத்தில் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் **3371**—*திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கபிலர்மலைத் தொகுதியில் பரமத்தி ஒன்றியத்தில் பாமாகவுண்டன்பாளையம் எனும் இடத்திலுள்ள 1000 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தில் ஏதேனும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்:

(அ) கபிலர்மலை தொகுதியில் பரமத்தி ஒன்றியத்தில் பாமாகவுண்டம்பாளையம் எனும் இடத்தில் தொழிற்சாலைகள் துவங்க திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

32—

அரசு நிதி நிறுவனம் மூலம் தொழில் முனைவோருக்குக் கடன் உதவி

வினா எண் **7748**—*திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

அரசு நிதி நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளில் எவ்வளவு தொழில் முனைவோருக்குப் புதிதாக தொழில்கள் தொடங்க கடன் உதவி அளித்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

1989-90 ஆம் ஆண்டில் 7360 புதிய தொழில் முனைவோருக்கு ரூ.10383 லட்சமும், 1990-91-ல் 7235 பேருக்கு ரூ. 17133 லட்சமும், 1991-92-ல் 3577 பேருக்கு ரூ.19516 லட்சமும், 1992-93—ல் 2439

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பேருக்கு ரூ.17141 லட்சமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடனுதவி அளித்துள்ளது.

33—

குளித்தலை தொகுதி அய்யர்மலை கல் உடைக்கும் குவாரி ஏலம் விடுதல்

வினா எண் ***16284 – திரு.அ.பாப்பா சுந்தரம்:*** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

குளித்தலை தொகுதி, அய்யர்மலை கல் உடைக்கும் குவாரி எப்போது ஏலம் விடப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

குளித்தலைத் தொகுதி அய்யர்மலைப் பகுதிகளில் சரளை ஜல்லி மற்றும் சோளிங்க கற்கள் உடைத்துக் கொள்ளும் வகையில் ஏலம் விடத்தக்க அரசு புறம்போக்கு குவாரிகள் ஏதும் இல்லை.

34—

பஞ்சப்பள்ளி சீர்த்திருத்தப் பள்ளியில் உள்ள திருந்திய மாணவர்களுக்கு அரசுப் பணியில் விசேட சலுகை

வினா எண் ***25055 – திரு. கா.பூ. முனுசாமி:*** *மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

(அ) தர்மபுரி வட்டம் பஞ்சப்பள்ளியிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலுள்ள மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) திருந்திய மாணவர்களுக்கு அரசுத்துறையில் பணி கிடைத்திட விசேட சலுகைகள் வழங்க அரசு முன்வருமா?

விடை :-

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

(அ) 308 சிறார்கள்.

(ஆ) இவ்வகை மாணவர்களுக்கு அரசுத்துறையில் பணி கிடைத்திட விசேட சலுகைகள் வழங்குவதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் முன்னுரிமை அடிப்படையில் முன்னாள் இல்லவாசிகளை சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழுள்ள நிறுவனங்களில் பணியமர்த்த ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

35—

பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்

வினா எண் 23857 – திரு.ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

ஆம். பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் அதிகமுள்ள முக்கூடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய இடங்களில் பீடித் தொழிலாளர்களுக்கு 1000 வீடுகள் கூட்டுறவு பதிவாளர் (வீட்டு வசதி) மூலம் கட்ட அரசு உத்திரவிட்டுள்ளது.

36—

பவளூர் ஆதிதிராவிடர்களுக்கு புதிய கட்டிட வசதி

வினா எண் 2295 – திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பவளூரைச் சேர்ந்த ஆதிதிராவிடர் காலனிகள் இடிந்துவிட்டதால் பழுது பார்த்துக் கொடுக்கவோ அல்லது புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கவோ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ்

கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

37—

புலிக்காடு ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடு மற்றும் தொகுப்பு வீடுகளை பழுது பார்த்தல்

வினா எண் ***6430*** *– திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புலிக்காடு ஊராட்சி ஆதிதிராவிடர் தெருவில் பழுதுபட்ட தொகுப்பு வீடுகளை பழுது பார்க்கவும் மேலும் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறையில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத் தர வழிவகை இல்லை. மேலும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

38—

பள்ளத்தூர் ஆதிதிராவிடர் வீடுகளை பழுதுப் பார்த்தல்

வினா எண் ***6478*** *– திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பள்ளத்தூர் ஆதிதிராவிடர் தெருவில் உள்ள தொகுப்பு வீடுகள் இடிந்தும் பழுதடைந்தும் உள்ளதை பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

39—

பெருமகளூர், இந்திரா நகர் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு காலனி வீடு கட்டுதல்

*வினா எண் **6920** – திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகர் இந்திராநகர் மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு காலனி வீடு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்;

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

40—

சின்னமனை ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டுதல்

*வினா எண் **6969** – திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னமனை ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டித் தருவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

41—

நாடியம் ஊராட்சி பிள்ளையார் திடலில் உள்ள காலனி வீடுகளைப் பழுதுப் பார்த்தல்

*வினா எண் **14044** – திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளையார் திடலில் உள்ள பழுதடைந்த காலனி வீடுகளைப் பழுது பார்த்துத் தர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத் தர வழிவகை இல்லை.

கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்துத் தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

42—

நடுமனைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடு கட்டுதல்

*வினா எண் **14310**– திரு.ஆர்.சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு நடுமனைக்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992-93ல் புதிய வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

43—

வீட்டுமனைப்பட்டா உள்ள நரிக்குறவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்

*வினா எண் **15346**– திரு. எம். பூராசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நரிக்குறவர்களில் வீட்டுமனைப்பட்டா உள்ளவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித்தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, ஊள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

44—

முடிகொண்டா ஆதிதிராவிடர் வீடுகளைப் பழுதுபார்த்தல்

*வினா எண் **15667** – டாக்டர் க.கோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி- முடிகொண்டான் (ஆதிதிராவிடர்) காலனியாக கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளது பற்றி அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த வீடுகளையும் புதுப்பித்துத்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

45—

பள்ளத்தூர் ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளைப் பழுது பார்த்தல்

*வினா எண் **16199**–திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஆதிதிராவிடர் தெருவில் உள்ள தொகுப்பு வீடுகள் இடிந்தும் பழுதடைந்தும் உள்ளதை *1992-93*-ல் பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடைமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே, இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

46—

புதுப்பாளையம் மக்களுக்கு வீட்டுவசதி

*வினா எண் **19234** – திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமத்தில் புதுப்பாளையம் மக்களுக்கு அவ்வூரில் தென்புறமுள்ள மானுவபூமியில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ):* மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமத்தில் புதுப்பாளையம் என்ற ஊர் இல்லை. கிளாம்பாடி பேரூராட்சி பகுதியில்தான் புதுப்பாளையம் என்ற ஆதிதிராவிடர் காலனி உள்ளது. இந்த காலனியில் *28* குடும்பங்கள் மனைப் பட்டாக்களுடன் வசித்து வருகின்றனர். அடுத்து வரும் நிதியாண்டுகளில் இவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

47—

சோளக்காளிப்பாளையம் ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடு கட்டுதல்

வினா எண் ***19490*** *– திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–*

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சென்னசமுத்திரம் கிராமம் சோளக்காளிப்பாளையம் ஆதிதிராவிட காலனி ஏற்கனவே தீயினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக மக்களுக்குப் புதிய வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுதுபார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே, இப்பொருள் குறித்து தனியாகத் திட்டம் எதுவுமில்லை.

48—

சீர்காழி, கொண்டலில் ஆதிதிராவிடர் நல விடுதி

வினா எண் ***15472*** *– திரு. து. மூர்த்தி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதியில் கொண்டலில் ஆதிதிராவிடர் நல விடுதி கொண்டுவர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொண்டலில் ஆதிதிராவிடர் நல விடுதி துவங்குவது பற்றிய செயற்குறிப்பு 1994-95-ம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

49—

ஆலய காவல் பணியிலுள்ளோரின் எண்ணிக்கை

*வினா எண் **20964** – திரு. இரா.அப்பு நடேசன்:* மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எத்தனை பேர் ஆலய காவல்பணிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்:

ஆலய காவல் படைக்கு 1,000 காவலர்களும், 2,648 முன்னாள் இராணுவப் படைவீரர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

50—

ஈசநத்தம் அருள்மிகு இளம்பிள்ளை அம்மன் கோயில் திருமணமண்டப வசதி

*வினா எண் **23747**–திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், ஈசநத்தம் கிராமத்தில் அருள்மிகு இளம்பிள்ளை அம்மன் கோவிலில் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், ஈசநத்தம் கிராமத்தில் அருள்மிகு இளம்பிள்ளையம்மன் கோயிலுக்கு போதிய வருமானம் இல்லாத காரணத்தால், பொது மக்கள் நன்கொடை மூலம் ரூ.5 லட்சமும், பிற திருக்கோயில்களிலிருந்து கடன் பெறுதல் மூலம் ரூ.5 லட்சமும் ஆக ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் ஒப்புதல் பெற்று திருமண மண்டபம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பத்தாவது பட்டியல்

1—

சிறுசேமிப்பு உயரளவு இலக்கு நிர்ணயம்

*வினா எண் **20861**–திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 1989-90 மற்றும் 1990-91 ஆகிய ஆண்டுகளில் இம்மாநிலத்தில் சிறுசேமிப்பு மூலம் வசூலிக்கப்பட வேண்டுமென உயரளவு தொகை ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டதா?

(ஆ) சிறு சேமிப்பு வசூல் இலக்குகள் எய்தப் பெற்றுள்ளனவா?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) 1989-90 மற்றும் 1990-91 ஆகிய ஆண்டுகளில் இம்மாநிலத்தில் சிறுசேமிப்பு மூலம் வசூலிக்கப்பட வேண்டுமென நிகர இலக்குத் தொகை முறையே ரூ.400.00 கோடி, ரூ.450.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டது.

(ஆ) சிறு சேமிப்பு வசூல் மூலம் 1989-90 மற்றும் 1990-91 ஆண்டுகளில் முறையே ரூ.345.32 கோடி, ரூ.408.86 கோடி நிகர வசூல் செய்யப்பட்டது.

2—

காட்டுமன்னார்கோயில் துணைக்கருவூலம் இயங்க கட்டிடம் கட்டுதல்

*வினா எண் **23882**–திரு. என். ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார் கோயிலில் துணைக்கருவூலம் இயங்க அரசு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிடத் துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): காட்டுமன்னார்கோயில் துணைக்கருவூலம் இயங்க அரசு கட்டிடம் கட்ட தேவையான காலி நிலத்தை ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து பெறுவதற்கான முயற்சிகள்

மேற்கொள்ளப்பட்டு கருவூல கணக்குத் துறையின் நடவடிக்கையில் உள்ளது. ஊராட்சி ஒன்றிய காலி நிலம் ஒப்படைப்பு செய்தவுடன் அரசு அனுமதி பெற்று கட்டிடம் கட்டும் பணி துவக்கப்படும்.

3—

மதுரை நீதிமன்றங்களுக்கு புதிய அலுவலக பொருட்கள் வழங்கல்

*வினா எண் **9312**–திரு. ஓ. எஸ். அமர்நாத்:* மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகர் மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில், மேசை நாற்காலி போன்ற அலுவலகப் பொருட்கள் மிகவும் பழுதடைந்தும் குறைந்த எண்ணிக்கையிலும் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை புதிதாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு நீதிமன்றங்களுக்குத் தேவையான மேசை நாற்காலி போன்ற அலுவலக பொருட்கள் வழங்கப்படுவதற்காக 10-வது நிதிக்குழுமத்திற்கு ரூ.475 லட்சங்கள் மதிப்பீட்டில் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 10-வது நிதிக்குழுமத்தின் நிதி ஒதுக்கீடு பற்றிய முடிவு அறிவிக்கப்பட்டவுடன் மதுரை மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு மேசை நாற்காலி போன்ற அலுவலகப் பொருட்கள் வழங்கப்படுவது குறித்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

4—

புவனகிரி நத்தம் பகுதியில் மனைப்பட்டா வழங்குதல்

*வினா எண் **7658**–செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியம், காந்தி நகரில் நத்தம் பகுதியில் மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) மற்றும் (ஆ) புவகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், காந்தி நகரில், நில அளவை மற்றும் உட்பிரிவுகள் செய்யப்பட்டு, 1.9.1992-இல் மனைவரிப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

5—

வாசுதேவ நல்லூர் புளியங்குடி மருந்தகத்தை அனைத்து வசதி கொண்ட மருத்துவமனையாக உயர்த்துதல்

*வினா எண் **1021**—திரு.ஆர்.ஈஸ்வரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி நகராட்சியில் சாதாரண மருந்தகமாக இயங்கும் மருத்துவமனையை அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

6—

மருத்துவமனை கடைநிலை தற்காலிக பெண் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்தல்

*வினா எண் **5054**—திரு.ப. ரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்வேறு அரசு மருத்துவமனைகளில் நிரந்தரம் செய்யப்படாமல் பல ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் தற்காலிக பெண் கடைநிலை ஊழியர்களை நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம். எனில், எப்போதிலிருந்து அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) அரசு மருத்துவமனைகளில் அடித்தளப்பணியில் பணியாற்றி வரும் அடிப்படைப் பணியாளர்களின் வயது/கல்வித்தகுதி இல்லாது இருப்பின் அவற்றிற்கான விதிகளை தளர்த்தி அரசு ஆணை பெற்றபின்பு அவர்களை ஆண்/பெண் என்று வேறுபாடு பாராது பணியில் நிரந்தரம் செய்யப்படுகிறார்கள்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

7—

தலைமை மருத்துவர் உடனடி நியமனம் செய்தல்

*வினா எண் **5279**–டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தலைமை மருத்துவர்கள் (UNIT CHIEF) போன்ற பதவியிடங்கள் உடனடியாக நிரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை:

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தலைமை மருத்துவர்கள் (UNIT CHIEF) பதவிகளில் காலியிடங்கள் ஏற்படும் போது, அந்த இடங்களில் தக்க மருத்துவ அலுவலர்கள் விரைவாக நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

8—

ஆலங்குளம் வடக்கு தாழையூத்தில் சுகாதார நிலையம் அமைத்தல்

*வினா எண் **15277**–திரு. எஸ். எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், வடக்குத் தாழையூத்தில் சுகாதார நிலையம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை —

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியம், வடக்குத் தாழையூத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியம் தற்போது இல்லை.

9—

குலசேகரம் அரசு மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வீட்டு வசதி

*வினா எண் **20949**–திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குலசேகரம் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் ஊழியர்கள் தங்க வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயலாக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

10—

சிவகாசி மருத்துவமனை பராமரிப்புக்கு கூடுதல் நிதி

*வினா எண் **22302**- திரு. ஜெ. பாலகங்காதரன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி மருத்துவமனை பராமரிப்புக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்படுமா?

(ஆ) மருத்துவ மனையில் மின் விசிறிகள் மீண்டும் பொருத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 1993-94 நிதியாண்டில் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு ரூ. 1,63,500 ஒதுக்கப்பட்டு பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) 1992-93ல் நிதியாண்டில் 15 (48'') கூறை மின்விசிறிகள் பழுது நீக்கி புதுப்பிக்கப்படு இருக்கின்றன. மேலும் அம்மருத்துவமனையில் 30 மின் விசிறிகள் நல்ல நிலையில் உள்ளன.

11—

குளத்தூர் தொகுதி இலுப்பூர் அரசு மருத்துவ மனைக்கு காம்பவுண்ட் சுவர் கட்டுதல்

*வினா எண் **25342**-திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளத்தூர் தொகுதி இலுப்பூர் அரசு மருத்துவ மனைக்கு காம்பவுண்ட் சுவர் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

12–

போக்குவரத்துக் கழகத்தில் ஆதிதிராவிடர் ஓட்டுநர், நடத்துனர் இட ஒதுக்கீட்டு நிலவரம்

*வினா எண் **9393**—திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டில் உள்ள போக்குவரத்துக் கழகங்களில் ஆதி திராவிட மக்களுக்கு ஓட்டுநர், நடத்துனர் போன்ற பதவிகளில் 18 சதவீதம் பூர்த்தியாகி விட்டதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களில் நடத்துனர் பணியைப் பொருத்தமட்டில் 18 சதவீதத்திற்கும் அதிகமாக ஆதிதிராவிட இனத்தவர் பணிபுரிகின்றனர். ஆனால் ஓட்டுநர்களாகப் பணிபுரிய ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் போதுமானவர்கள் கிடைக்காததால் கொஞ்சம் குறைவு உள்ளது. இதைச் சரி செய்வதில் கவனம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

13–

இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழக நட்டத்திற்கான ஆய்வு

வினா எண் ***22579*–**திரு. *ஆ.* சுப்புரத்தினம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் தற்போது நட்டத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில் அதற்குரிய காரணங்கள் ஆய்வு செய்யப்பட்டனவா?

(இ) 1991-92, 1992-93-ம் ஆண்டுகளில் நட்டம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. கே .ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் தற்போது நட்டத்தில் இயங்கி வருகின்றது.

(ஆ) ஆம். இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் நட்டத்திற்கான காரணங்களை ஆய்வு செய்தது.

(இ) இராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் 1991-92 ஆம் ஆண்டில் ரூ.9.27 லட்சமும், 1992-93 ஆம் ஆண்டில் ரூ.169.34 லட்சமும் நட்டம் எய்தியுள்ளது.

14—

சேதுபாவாசத்திரம் காரங்குடாவில் மின்மாற்றியை மாற்றி அமைத்தல்

வினா எண் ***13264*–**திரு. *ஆர்.* சிங்காரம்: *மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் காரங்குடாவில் உள்ள தெருவிளக்குகள் எரிய போதிய மின் அழுத்தம் இல்லாத காரணத்தால் சேதுபாவாசத்திரத்திலுள்ள மின்மாற்றியை 1992-93 ஆம் ஆண்டில் மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை:-

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் காரங்குடாவில் மின் அழுத்தம் சீராக அமையும் பொருட்டு ஒரு புதிய மின் மாற்றி வைக்க மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு மின்வாரியத்தில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

15—

சாண எரிவாயு மூலம் கிணற்று நீர் இறைக்கும் திட்டம்

*வினா எண் **16110**—திரு. கா.பூ. முனுசாமி:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாண எரிவாயுவை என்னென்ன நோக்கங்களுக்கு பயன்படுத்த இயலும்?

(ஆ) சாண எரிவாயுவைப் பயன்படுத்தி கிணற்றிலிருந்து நீர் இறைக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதா?

(இ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை:

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) சாண எரிவாயு மூலம் வீடுகள் மற்றும் பெரிய நிறுவனங்களில் சமையல் செய்வதற்கும், விளக்குகள் எரியவைப்பதற்கும், குறைந்த அளவு டீசலோடு சேர்த்து என்ஜினை இயக்கி பம்பை இணைத்து நீர் இறைக்கும் மின் ஆக்கியினை இணைத்து மின்சாரம் தயாரிக்கும் நோக்கங்களுக்கும் பயன்படுத்த இயலும்.

(ஆ) மற்றும் (இ): இல்லை.

16—

பரங்கிப்பேட்டையில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டத்தின் பயன்கள்

*வினா எண் **16450**—திரு. சி. இராமசுவாமி:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம் பரங்கிப்பேட்டையில் செயல்படுத்தப்பட்டதானால், அப்பகுதி மக்கள் அடைந்த பயன்களின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ் . கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டத்தினால் அப்பகுதி மக்களுக்கு கீழ்கண்ட வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன :—

1.	மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள்	1400
2.	மேம்படுத்தப்பட்ட உலோக அடுப்புகள்	1000
3.	உராய்வு குறைந்த புட்வால்வுகள்	200
4.	உழவு வண்டிகள்	10
5.	சூரிய ஒளி அடுப்பு (வீட்டு உபயோகம்)	200
6.	சூரிய ஒளி அடுப்பு (சமுதாய உபயோகம்)	10
7.	காற்றாலைகள் (நீர் இறைப்பதற்காக)	10

17—

தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட காற்றாடிகளின் விவரம்

வினா எண் ***16466***—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991-ஆம் ஆண்டு அக்டோபர் வரை தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட காற்றாடிகளின் விவரம் என்ன?

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் செயல்வளியாக்கி காற்றாடிகள் தொகுப்பு 1992-1993 ஆம் ஆண்டில் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) 1991 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 1992 வரை தமிழ்நாடு முழுவதும் நீர் இறைக்கும் காற்றாலைகள் 98-ம் மின்சாரம் தயாரிப்பதற்காக 17 காற்றாடிகளும் (காற்று மின்னாக்கிகள்) நிறுவப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

18—

தருமபுரி மாவட்டத்தில் வளியாக்கி மற்றும் ஸ்டெர்லிங் இயந்திரங்கள் அமைத்தல்

வினா எண் ***16467*** *– திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டத்தில் வளியாக்கி (காற்று) இயந்திரங்கள் மற்றும் ஸ்டெர்லிங் இயந்திரங்கள் 92-93 ஆம் ஆண்டில் அமைக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

19—

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுதல்

வினா எண் ***22434****—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வீடுகள் கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): போளூரில் வீட்டு வசதிக்கான தேவை நிர்ணயம் ஏற்கனவே கணிக்கப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப, தற்போது போளூரில் குறைந்த வருவாய் பிரிவினருக்காக 26 வீடுகளும், நடுத்தர வருவாய் பிரிவினருக்காக 58 வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன.

20—

தமிழகத்தில் தென்னை மரங்கள் அதிகம் பயிரிடும் மாவட்டங்கள்

*வினா எண் **21713**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் தென்னை அதிகமாக பயிரிடப்படுகிறது?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் மகசூல் அதிகரித்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் முறையே கோயம்புத்தூர், தஞ்சாவூர், கன்னியாகுமரி, வட ஆற்காடு—அம்பேத்கார், மதுரை ஆகிய மாவட்டங்களில் தென்னை மிக அதிக அளவில் பயிரிடப்பட்டு, உற்பத்தி பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

21—

கிருஷ்ணகிரி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திலுள்ள தினக்கூலி பெறும் பணியாளர்களை நிரந்தரம் செய்தல்

*வினா எண் **14501**—திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திலுள்ள தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களை நிரந்தரப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் வேலை வாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டு பணிபுரிந்து வரும் 301 தினக்கூலி

பணியாளர்களில் 50 தினக்கூலி பணியாளர்கள் 1-5-93 முதல் இளநிலை மஸ்தூர்களாக பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

22—

வேதாரண்யம் பகுதியில் கூட்டுறவு பால் உற்பத்தி விற்பனை சங்கம் அமைத்தல்

*வினா எண் **22757**—திரு. பி. வி. இராஜேந்திரன் :* மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

'வேதாரண்யம் பகுதியில் கூட்டுறவு பால் உற்பத்தி விற்பனை சங்கம் அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

தற்போது வேதாரண்யத்திலும், அதற்கு 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அகஸ்தியம்பள்ளி கிராமத்திலும், இரண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருவதாலும், வேதாரண்யமும், அதனைச் சுற்றிய பகுதிகளிலும், கல் சார்ந்த பகுதியாக இருப்பதால், பால் அதிக அளவில் உற்பத்திச் செய்ய வாய்ப்பில்லாததாலும் வேதாரண்யம் பகுதியில் புதியதாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

23—

திருப்பத்தூர் தொகுதியில் கோழி வளர்க்க கடன் வழங்கல்

*வினா எண் **23011**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :* மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி செலந்தம்பள்ளி, குருகிலாம்பட்டு, பெருமாம்பட்டு, மிட்டூர், ஓமகுப்பம், பூங்குளம் முதலிய கிராமங்களில் கோழி வளர்க்க அரசு கடன் வழங்குமா?

விடை—

மாண்புமிகு திரு தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

திட்டமேதும் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 25]

24—

கோழி நோய் தடுப்பூசி அட்டவணையை பரிசீலித்து பண்ணையாளர்களுக்கு தெரிவிக்க நிபுணர் குழு அமைத்தல்

*வினா எண் **24714**—திருமதி கே. மரியம் உல் ஆசியா :* மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்ககு விடையளிப்பாரா—

கோழி நோய் தடுப்பூசி அட்டவணையை பரிசீலித்து பண்ணையாளர்களுக்கு தெரிவிப்பதற்காக நிபுணர்குழு அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத்துறை அமைச்சர் : நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

25—

போராவூரணி தொகுதியில் குழந்தைகள் காப்பகங்கள் அமைத்தல்

*வினா எண் **21029**—திரு ஆர். சிங்காரம் :* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகள் காப்பகங்கள் குழந்தைகள் எண்ணிக்கை அடிப்படையில் துவக்கப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், போராவூரணி தொகுதியில் குழந்தைகள் காப்பகங்கள் மேலும் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) மாவட்டத்திற்கு ஒரு குழந்தைகள் காப்பகம் அடிப்படையில் அந்தந்த மாவட்டத்தில் தேவையைக் கருத்தில் கொண்டு துவங்கப்படுகின்றன.

(ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

26—

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு உடல் பயிற்சி அளித்தல்

*வினா எண்—**23170**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :* மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு உடல் பயிற்சி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : புரட்சித் தலைவர் எம்.ஜி.,ஆர். சத்துணவுத் திட்ட குழந்தைகள் நல மையங்களில் பயனடையும் குழந்தைகளுக்கு முன் பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. கல்வியின் ஓர் அங்கமாக காலை 10.00 மணி முதல் 10.45 மணி வரை விளையாட்டும், உடற் பயிற்சியும் கற்றுத் தரப்படுகின்றது.

27—

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டதில் சமூகக்காடுகளின் மொத்த நிலப்பரப்பு

வினா எண் 22978—திரு.ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமூகக் காடுகளின் மொத்த நிலப்பரப்பு எத்தனை ஏக்கர்?

விடை—

மாண்புமிகு திரு. கு.லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள தோட்டங்களின் நிலப்பரப்பு பின்வருமாறு:—

தொகுப்புத் தோட்டங்கள்	...	41596.8 ஏக்கர்
இடைபடுகாடுகள் திட்டத்தோட்டங்கள்	...	941.4 ஏக்கர்
தொடர் தோட்டங்கள்	...	586 கி.மீ.

28—

சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு தங்கும் விடுதி அமைத்தல்

வினா எண் 5561—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 25]

சென்னைகுு தம் பணி காரணமாக வந்து செல்லும் பத்திரிகை நிருபர்கள் குறைந்த வாடகையில் தங்க பத்திரிகையாளருக்கென தங்கும் விடுதி அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

தற்போது இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கு உதவித்தொகை உயர்த்தல்

*வினா எண் **1470**—திரு. வி . என். சுப்பிரமணியன் :* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்கலைக் கழகங்களில் ஆய்வாளர்களுக்கு பல்கலைக் கழக மானியகுழு மாதத்திற்கு ரூ.1,800/- உதவிப்பணம் வழங்குவதைப்போல் ரூ. 800 மட்டும் வழங்கப்படும் பல்கலைக் கழக ஆய்வாளர்களுக்கும் அதே அளவு உதவித்தொகை வழங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு பேராசியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அத்தகைய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

திருவையாறு, தியாகராசர் ஆராதனை விழாவினை அரசு ஏற்று நடத்தல்

*வினா எண் **4968**—திரு. ப. கலியபெருமாள் :* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாற்றில் ஆண்டுதோறும் நடைபெறும் தியாகராசர் ஆராதனை விழாவினை அரசு ஏற்று நடத்தமுன்வருமா?

விடை —

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

திருவையாற்றில் பொதுமக்களும், இசைவாணர்களும் ஒன்று சேர்ந்து, ஒரு பொறுப்புக் குழுவினை அமைத்து ஆண்டுதோறும்

தியாகராசர் ஆராதனை விழாவினை எவ்வித குறைபாடுமின்றி சீரும், சிறப்புமாக நடத்தி வருகிறார்கள். எனவே, அவ்விழாவினை அரசு ஏற்று நடத்த வேண்டிய அவசியம் எதுவும் இப்போது எழவில்லை.”

31—

ஆண்டிமடம் தொகுதி புக்குழியில் ஆரம்பப்பள்ளி தொடங்குதல்

வினா எண் ***12865****— திரு. ஆர். தங்கராஜ்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, புக்குழியில் ஒரு ஆரம்பப்பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

32—

பேராவூரணி தொகுதி குப்பத்தேவன் வலசைத் தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் ***13187****—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியில், குப்பத்தேவன் வலசைத் தொடக்கப் பள்ளிக்குப் போதிய ஆசிரியர்கள் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: ஏதும் இல்லை.

33—

மேல்குடிக்காடுத் தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண் ***13202****—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போராவூரணி தொகுதி மேல்குடிக்காடு தொடக்கப்பள்ளிக்குப் போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: ஏதும் இல்லை.

34—

திருப்பத்தூர் தொகுதியில் அரசு அங்கீகாரம் பெற்றுள்ள உயர்நிலைப் பள்ளிகள் விவரம்

*வினா எண் **21280**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் அரசு அங்கீகாரம் அளித்துள்ள உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

திருப்பத்தூர் (வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டம்) அரசு அங்கீகாரம் அளித்துள்ள நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு:

நடுநிலைப் பள்ளிகள்	
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்	18
நிதி உதவி பெறும் பள்ளிகள்	3
மொத்தம்	21
உயர்நிலைப் பள்ளிகள்	
அரசுப் பள்ளிகள்	8
நிதி உதவிபெறும் பள்ளிகள்	2
நிதி உதவிபெறாதவை (மெட்ரிக்)	2
மொத்தம்	12

35—

விவசாயக் கடன்களை முறையாகச் செலுத்தியவர்களுக்கு அரசு அளித்துள்ள சலுகைகள்

*வினா எண் **23285**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிலவள வங்கி விவசாயக் கடன்களை முறையாக கட்டியவர்களுக்கு அரசு அளித்துள்ள சலுகை என்ன?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சலுகை ஏதும் அளிக்கப்படவில்லை.

36—

பரமக்குடி தொகுதியில் 1991-92-ல் கட்டிய சிறுபாலங்கள் விவரம்.

வினா எண் 14868—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் 1991-92ல் கட்டிய சிறுபாலங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மதிப்பீடு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1991-92 ஆண்டில் பரமக்குடி தொகுதியில் சிறுபாலங்கள் ஏதும் கட்டப்படவில்லை.

37—

மானூர் ஒன்றியத்திலுள்ள மதவக்குறிச்சி ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 14989—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியத்திலுள்ள மதவக்குறிச்சி கிராமத்திலுள்ள ஆதிதிராவிட பொது மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேலும் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

38—

பரமக்குடி தொகுதியில் கிராமச் சாலைகளை மேம்படுத்தத் திட்டம்

*வினா எண் **16551**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் என்.எச்.49 - கலையூர் - பாண்டிர் கண்மாய்—முதுகுளத்தூர் கீரந்தைரோடு சாலைகளை ஆர்.ஆர் திட்டத்தில் எடுக்க அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம், எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கலையூர் கிராமம் ஏற்கனவே தார்ச்சாலையால் இணைக்கப்பட்டுள்ளது. மீதி கிராமங்களில் மக்கள்தொகை 1000 க்கும் குறைவாக உள்ளதால் கிராமச் சாலைகள் திட்டத்தில் சேர்க்கவில்லை. ஆதிதிராவிடர் மக்கள் தொகை 50க்கும் குறைவாக இருப்பதாலும் பேருந்து செல்லாததாலும் சிறப்பு உறுதித் திட்டத்திலும் சேர்க்க இயலாது.

39—

கொடுமுடி ஒன்றியம் ஆவுடையார் பாறையில் மயானப்பாதையில் சிறுபாலம் அமைத்தல்

*வினா எண் **19492**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் ஆவுடையார் பாறையில் மயானப்பாதையில் ஒரு சிறுபாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்ட மயானப்பாதையில் சிறுபாலம் அமைக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 1993-94-ம் ஆண்டிற்கு 80% பங்கு தொகையில் பணி எடுத்து செய்ய கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

40—

பட்டுக்கோட்டை ஒன்றியம் பழஞ்சூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 14778—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், பழஞ்சூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பழஞ்சூர் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் தெருவிற்கு எற்கனவே மேல்நிலைதொட்டியிலிருந்து மூன்று குடிநீர் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், 1993-94-ம் ஆண்டு திட்டத்தில் இவ்வூர் ஆதிதிராவிடர் குடியிருப்பில் இந்தியா மார்க்-2 கைப்பம்பு போடப்பட்டு நல்ல முறையில் செயல்படுகின்றமையால் அப்பகுதி மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்கப்பெறுகிறது.

41—

மருதமலை அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயிலைப் புதுப்பித்தல்

வினா எண் 6051—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மருதமலை அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயில் புதுப்பிக்கும் பணியை மீண்டும் தொடக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மருதமலை அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயில் புதுப்பிக்கும் திருப்பணி சம்பந்தப்பட்ட பெரும்பான்மையான வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

42—

ஏ. சி. அலுவலகத்தை மதுரையிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்றுதல்.

வினா எண்—15430—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத் திருக்கோயில்களை கவனிக்கும் ஏ.சி. அலுவலகம் மதுரையில் இயங்கி வருவதை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

43—

காரமடை அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் சார்பில் கல்யாண மண்டபம் கட்டுதல்.

வினா எண் 20543—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருள்மிகு காரமடை அரங்கநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக எவ்வளவு நிலம் உள்ளது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) அந்த நிலத்தில் திருக்கோயில் சார்பில் கல்யாணமண்டபம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காரமடை அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்திற்குச் சொந்தமாக 16.75 ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி நஞ்சை மற்றும் புஞ்சை நிலத்தில் குத்தகைதாரர்கள் சாகுபடி செய்து வருவதால் தற்சமயம் அவ்விடத்தில் திருமண மண்டபம் கட்டுவது இயலாது.

44—

காட்டுமன்னார் கோயில் தொகுதி நாஞ்சலூர் கோலழகியம்மன் கோயிலைப் புதிப்பிக்கத் திட்டம்.

வினா எண் **20577**—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் தொகுதி நாஞ்சலூர் கிராமத்திலுள்ள கோலழகியம்மன் கோயிலை புதுப்பிக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) ஏழவில்லை

45—

இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் **20878**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலங்கை அகதிகளுக்கு எந்த எந்த இடங்களில் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டு உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

இலங்கையிலிருந்து இந்தியா வந்தடைந்த அகதிகளுக்கு நிரந்தரமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதில்லை. இலங்கையில் அனுமதி ஏற்பட்டு அவர்கள் திரும்பிச் செல்லும் வரை இங்கு தங்குவதற்கு தற்காலிகக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

46—

திருவாரூர் நகரத்தைச் சுற்றுலா மையமாக்குதல்.

வினா எண் ***1513*—**திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் நகரத்தைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இப்பொருள் குறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

47—

உடுமலை வட்டத்தில் சுற்றுலா மையம் ஏற்படுத்துதல்.

வினா எண் ***4652*—**திரு. கே. பி. மணிவாசகம்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், உடுமலை வட்டம் திருமூர்த்தி நகர், கோடந்தூர் அமராவதி நகர் ஆகிய இடங்களை சுற்றுலா மையங்களாக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

48—

ஜமுனா மருதூரை சுற்றுலா மையமாக்குதல்.

வினா எண் 6163—திரு. தா வேடியப்பன் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் வாழும், இயற்கை எழில் சூழ்ந்த ஜமுனா மருதூரை சுற்றுலா மையமாக ஆக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் :

(அ) மலைவாழ் மக்கள் வாழும் ஜமுனா மருதூரை சுற்றுலா மையமாக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

49–

கல்லார் பகுதியைச் சுற்றுலா மையமாக்குதல்.

வினா எண் 8565—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டி செல்லும் வழியாக கல்லூரில் அமைந்துள்ள அரசுப் பழப்பண்ணைக்கு அதிக உல்லாசப் பயனிகள் வருகை தருவதால் அப்பகுதியை சுற்றுலா மையமாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

50–

தமிழகத்தில் கிராமச் சுற்றுலா குடில்கள் அமைத்தல்.

*வினா எண் **23902**—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் "கிராமச் சுற்றுலா குடில்கள்" அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் " கிராமச் சுற்றுலா குடில்கள்" (Village Tourist Huts) *அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

பதினொன்றாம் பட்டியல்.

1–

சென்னையில் காலரா நோயைத் தடுக்க நடவடிக்கை.

*வினா எண் **21653**—திரு. உ. பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

சென்னையில் காலரா நோயைத் தடுப்பதற்கு இதுவரை (1993) அரசு எடுத்துள்ள தீவிர நடவடிக்கையின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை தண்டையார்பேட்டையில் அமைந்துள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் இதற்கென மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு உடனுக்குடன் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் குடிநீரில் போதுமான அளவு பாசிகையூட்டப்பட்டுள்ளதா என பரிசோதனை செய்து குடிநீர் வழங்குவதாலும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் நீர் பகுப்பாய்வுக் கூடத்தைச் சார்ந்த நீர் பகுப்பாய்வு குழுவினரை அனுப்பி நீர் தூய்மைக்கேடு

அடைய வாய்ப்புள்ள இடங்களில் நீரை ஆய்வுசெய்து தூய்மைக்கேட்டைக் களைவதன் மூலமும் காலரா நோய் சென்னையில் பெருமளவு பரவாமல் தடுக்கப்பட்டுள்ளது.

2–

கதிரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***24596***—*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் ஒன்றியம், கதிரம்பட்டி கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இச்சுகாதார நிலையத்திற்கான நிலம் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் பெறப்பட்ட பின்னர் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

3–

சேதுசமுத்திர திட்டம்.

வினா எண் ***8110***—*திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேது சமுத்திர திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) சேது சமுத்திர திட்ட மதிப்பீட்டு அறிக்கையை தற்போதுள்ள விகிதப்படி தயாரிக்க பல்லவன் போக்குவரக்கு பரிந்துரைக் குழுவிடம் கேட்டுக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பல்லவன் போக்குவரத்துக் கழக பரிந்துரைக் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் சேது சமுத்திர திட்டத்தை செயல்படுத்துவதற்கு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும்.

4—

பேராவூரணி ஒன்றியம், பெரியநாயகிபுரம் சிவன்கோவில் அருகில் உள்ள மின்மாற்றியை மாற்றுதல்.

*வினா எண் **12224**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரியநாயகிபுரம் சிவன்கோவில் அருகில் உள்ள மின்மாற்றியை 1992-93ல் புதிதாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பெரியநாயகிபுரம், சிவன் கோவில் அருகில் உள்ள மின் மாற்றி போதுமான திறன் கொண்டுள்ளது. அந்த மின்மாற்றி நல்ல முறையில இயங்கி வருகிறது. எனவே, தற்போழுது அதற்குப் பதிலாக வேறொரு மின்மாற்றியை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

5—

அதிராம்பட்டினம் கல்லூரிக்கு தனி டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.

*வினா எண் **13663**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் அதிராம்பட்டினம் கல்லூரிக்கென தனி டிரான்ஸ்பார்மர் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஒன்றியம் அதிராம்பட்டினம் கல்லூரிக்கு அருகிலேயே ஒரு டிரான்ஸ்பார்மர் இருப்பதாலும், அங்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மின்னழுத்தம் சீராகவும் தடையின்றியும் உள்ளதாலும் கல்லூரிக்கென தனி டிரான்ஸ்பார்மர் அமைக்க அவசியம் எழவில்லை.

6–

நிலக்கோட்டைத் தொகுதி, சித்தர்கள் நத்தம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*வினா எண் **17437**—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நிலக்கோட்டை தொகுதி, சித்தர்கள் நத்தம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

நிலக்கோட்டை தொகுதியில் துணை மின்நிலையம் நிறுவுவதற்கு 2.96 ஹெக்டேர் நிலம் பிள்ளையார்நத்தம் என்ற கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்நிலத்தை கையகப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். தாமதத்தைத் தவிர்க்க, தனியார் நிலத்தைக் கையகப்படுத்தும் முறையில் நிலத்தை கையகப்படுத்தலாமா என்றும், தமிழ்நாடு மின்வாரியம் ஆய்ந்து வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், துணை மின்நிலையம் அமைக்கும் பணி தொடங்கும்.

7—

INSURANCE OF MULTISTOREYED FLATS.

Question No.8281 – Tmt. V.G. Manimegalai : Will the Honourable Minister for Housing and Urban Development be pleased to state—

(a) Whether the Government has made insurance of multistoreyed flats compulsory for both purchasers and sellers in this State?

(b) If so, the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

8–

நாட்ராம்பள்ளி ஊராட்சி, அம்பலூரில் தீப்பெட்டி தொழிற்சாலை.

வினா எண் 21913—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் அம்பலூரில் கூட்டுறவுத்துறை மூலம் ஆரம்பிக்கப்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலை தற்போது இயங்குகிறதா?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் அம்பலூரில் கூட்டுறவு துறை மூலம் ஆரம்பிக்கப்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலை தற்போது இயங்கவில்லை.

9–

கடலூரில் நுண்ணுயிர் வளர்ப்பு உற்பத்தி மையத்திற்கு ஆய்வு கட்டிடம்

வினா எண் 23708—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூரில் நுண்ணுயிர் வளர்ப்பு உற்பத்தி மையத்திற்கு ஆய்வுக்கூடம் கட்டும் பணியை 1993-94 ஆம் ஆண்டிலேயே முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கடலூரில் நுண்ணுயிர் வளர்ப்பு உற்பத்தி மையத்திற்கு ரூ.27.50 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்காக அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நுண்ணுயிர் வளர்ப்பு உற்பத்தி மைய கட்டிடம் கட்டுவதற்காக பொதுப்பணித் துறையினரால் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு, ஒப்பந்தக்காரர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிறகு கட்டுமான பணி ஆரம்பிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

10—

பரங்கிப்பேட்டை ஒன்றியம், வடக்குச்சாவடியில் பால் உற்பத்தியாளர் சங்கம் நடத்தல்.

வினா எண் ***22560***—*செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள வடக்குச்சாவடி கிராமத்தில் ஏற்கனவே நடந்து வந்த பால் உற்பத்தியாளர் சங்கம், மீண்டும் நடத்த 50 மகளிருக்கு மான்யம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில ஏற்கனவே நடந்து வந்த வடக்குச்சாவடி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் தற்போது செயல்படாமல் உள்ளதாலும், அதனை மீண்டும் செயல்படும் நிலைக்கு கொண்டு வர இதுவரையில் அக் கிராமத்திலுள்ள எவரும் முன்வரவில்லை என்பதாலும் வடக்குச்சாவடி கிராமத்தில் முன்பு இருந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் 50 மகளிர்களுக்கு மான்யம் வழங்க இயலாத நிலை உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

11–

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அரசுத் தொட்டில் அமைத்தல்.

வினா எண் ***23369***—*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அரசுத் தொட்டிலில் குழந்தைகளைப் போடுவதற்கு அரசுத் தொட்டில் அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்:

மதுரை, சேலம் போன்ற மாவட்டங்களில் பெண் சிசு வதை அதிகமாக உள்ளதென தெரிய வந்ததால் அக்கொடிய பழக்கத்தில் இருந்து பெண் சிசுக்களைக் காப்பாற்ற அதிரடி நடவடிக்கைக்காக அங்குள்ள அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார மையம் மற்றும் அனாதை குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டுள்ளது. திருப்பத்தூரில் இதுவரை இவ்வித அவசியம் உள்ளதாக மாவட்ட ஆட்சியரோ, சமூக நல அலுவலரோ தெரிவிக்கவில்லை. தேவைப்படும் பட்சத்தில் திருப்பத்தூரிலும் தொட்டில்கள் அமைக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

பயன்படாத தரிசு நிலங்களை சமூகக் காடுகள் ஆக்குதல்.

*வினா எண் **17324**—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாநிலத்திலுள்ள பயன்படாத தரிசு நிலங்களை சமூகக் காடுகளாக மாற்றியமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மாநிலத்தில் உள்ள பயன்படாத தரிசு நிலங்களை சமூக காடுகளாக மாற்றியமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும் சிடா உதவியுடன் செயல்படுத்தப்படும் சமூகக்காடுகள் திட்டத்தின் கீழும் ஊரக வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழும் சமுதாயப் புறம்போக்கு நிலங்கள், (விளை நிலமில்லாதவை) ஏரிப்படுகைகளில் மட்டும் மரம் நடும்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தனியாரிடம் உள்ள வறண்ட விவசாய நிலங்களில் மரம் நட வேளாண்காடுகள் திட்டம் வேளாண்மைத் துறையின் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

13–

பல்கலைக் கழகங்களில் அஞ்சல் கல்வியின் விவரம்.

*வினா எண் **1411**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழங்களில் அஞ்சல் வழியில் கல்வி கற்பவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அஞ்சல் வழிக் கல்வி நகர்ப்புறங்களில்தான் அதிகம் பயன்படுத்தப்படுகிறது உண்மையா?

(இ) கிராமப்புறங்களிலும் அக்கல்வி பரவ அரசு எடுத்துள்ள முயற்சிகள் யாவை?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) 1991-92 ஆம் ஆண்டில், 2,89,082 நபர்கள் அஞ்சல் வழிக்கல்வி பெற்றனர்.

(ஆ) ஆம்.

(இ) அஞ்சல் வழிக்கல்வி பயிற்சி அளிக்கும் சில பல்கலைக் கழகங்கள் கிராமப்புற மக்களின் கவனத்தை ஈர்க்க பல மையங்களை தொடங்கி கல்வி பரப்ப முயற்சி எடுத்துள்ளது.

14–

தமிழகத்தில் ஆதிதிராவிடர் காலனி வீடுகளை பழுதுபார்த்தல்.

வினா எண் 654—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஆதிதிராவிடர் காலனி வீடுகளில் இடிந்து போனவைகளை மாற்றி புதிய வீடுகள் கட்டவோ அல்லது பழுதுபார்த்து தரவோ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக்கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்து தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

15–

பேராவூரணி ஒன்றியம், ஆதிதிராவிடர் காலனியை புதுப்பித்தல்.

வினா எண் 907—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், செறுவாவிடுதி (மேற்கு) ஆதிதிராவிடர் காலனியை புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்து தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிப்பாகும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

16–

பேராவூரணி ஒன்றியம், ஆதிதிராவிடர் காலனியை பழுதுபார்த்தல்.

வினா எண் 2353—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி கிழக்கு ஆதிதிராவிடர் பழுதுபட்ட காலனி வீடுகளை பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ்

கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடைமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்து தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

17–

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஆதிதிராவிடர் காலனி வீடுகளை பழுதுபார்த்தல்.

*வினா எண் **2881**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பன்னவயல் தெற்கு ஆதிதிராவிடர்களுக்கு இடிந்துபோன காலனி வீடுகளை பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடைமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்துத்தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

18–

புதுக்கோட்டை தொகுதி, பெருங்களூர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆழ்துளை கிணறு அமைத்தல்.

*வினா எண் **6312**—திரு. சி. சுவாமிநாதன் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 25]

புதுக்கோட்டை தொகுதியில், பெருங்களூர் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு பயன்படும் வகையில் ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்து அதில் கைப்பம்பு புதியதாய் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதியிலுள்ள பெருங்களூர் உயர்நிலைப் பள்ளியில் *1991-92* ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுடன் கூடிய கைப்பம்பு தற்போது நல்லமுறையில் இயங்கி வருகிறது.

19–

சேதுபாவாசத்திரம்-ஒன்றியம், கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தாட்கோ மூலம் காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் ***6608***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு மேலும் தாட்கோ மூலம் காலனி வீடுகள் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தற்போது தாட்கோ மூலம் காலனி வீடுகள் கட்டித் தரப் படுவதில்லை. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை

20–

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் சில சாலைகளைப் பராமரித்தல்

*வினா எண் **6633**—திரு. ஆர். சிங்காரம்*: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூரிலிருந்து கொடிவயல் வரை செல்லும் சாலையை பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூரிலிருந்து கொடிவயல் வரை செல்லும் சாலையைப் பராமரிக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு எதுவுமில்லை.

21–

புவனகிரி ஒன்றியம், காமராஜ் நகருக்கு சாலை வசதி.

*வினா எண் **6825**—செல்வி கோ. மல்லிகா*: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள காமராஜ் நகருக்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புவனகிரி பேரூராட்சியில் உள்ள காமராஜ் நகரில் சாலை வசதி 92-93ஆம் ஆண்டில் புவனகிரி பேரூராட்சி நிதியிலிருந்து சீர் செய்யப்பட்டுள்ளது. மேலும் 92-93 ஆம் ஆண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்படி சாலையினை சரளைக்கல் பரத்தி மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 25]

22—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மேட்டுக்கொல்லை ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்

*வினா. எண் **6874**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி மேட்டுக்கொல்லை ஆதிதிராவிடர்களுக்கு காலனி கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல் படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து அரசிடம் தனியாக திட்டம் எதுவுமில்லை.

23–

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒளிராமன்காட்டிலிருந்து ஒட்டங்காடு செல்லும் சாலையை தார்ச் சாலையாக்குதல்

வினா எண் 7136—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒளிராமன் காட்டிலிருந்து ஒட்டங்காடு செல்லும் சாலையை தார்சாலையாக மாற்றிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் பேருந்துப் போக்குவரத்து இல்லை. மேலும் இச்சாலையை தார்ச்சாலையாக மாற்ற எந்த சிறப்புத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தினால் அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

24–

பேராவூரணி ஒன்றியம், கல்லூரணிக்காட்டிலிருந்து நாடங்காடு செல்லும் சாலையை தார்ச்சாலையாக்குதல்

*வினா எண் **7291**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கல்லூரணிக் காட்டிலிருந்து நாடங்காடு வரை செல்லும் சாலையயை மராமத்து செய்து தார்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் கல்லூரணிக்காடு நாடங்காடு வரை செல்லும் சாலையை 1991-92 ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் தார்ச் சாலையா அமைத்து வேலை முடிந்துள்ளது .

25–

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சி. எம். பி. கால்வாய் குறுக்கே பாலம் கட்டுதல்.

*வினா எண் **7323**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-—*

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒளிராமன் காட்டில் நடுவிக்குறிச்சி சாலை சேருமிடத்தில் சி.எம.பி. வாய்கக்கால் குறுக்கே ஒரு பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சி. எம். பி. வாய்க்காலின் குறுக்கே தற்காலிக போக்குவரத்து வசதிக்காக பாலம் கட்டுவதற்கு செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

26–

ஆத்தூர் தொகுதியில் கிராமங்களுக்கு தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் ***9467*** *ஏ—திரு. வெ. தமிழரசு:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில், அக்சிசெட்டி பாளையத்திலிருந்து சொக்கநாதபுரம் வரையிலும் தாண்டவராய புரத்திலிருந்து சொக்கநாதபுரம் வரையிலும் தார்ச்சாலை அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள தார்ச்சாலை அமைக்க நிதி வசதி இல்லாத காரணத்தினால் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

27–

புவனகிரி ஒன்றியத்தில் வத்தராயன் தெத்து காலனி தொகுப்பு வீடுகளைச் சீர்செய்தல்

வினா எண் ***10772*** *—செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள வத்தராயன் தெத்து காலனி மக்களின் தொகுப்பு வீடுகளைச் சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது சீர் செய்துதரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப்

பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

28–

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் சாலையைப் பராமரித்தல்

*வினா எண் **11988**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் த. மேலக்காடு ஊராட்சி நாகை-சேது ரோட்டையும் முத்துப்பேட்டை-பட்டுக்கோட்டை ரோட்டையும் இணைக்கும் புது ரோடு சாலையை 1992-93ல் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள நாகை-சேது ரோட்டையும் முத்துப்பேட்டை-பட்டுக்கோட்டை ரோட்டையும் இணைக்கும் புது ரோடு சாலையை 92-93ல் பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பராமரிக்க செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

29–

கீழக்குறிச்சியில் ஆதிதிராவிடர் காலனி வீடுகளைப் பழுதுபார்த்தல்

*வினா எண் **12585**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் மதுக்கூர் ஒன்றியம் கீழக்குறிச்சியில் ஆதிதிராவிடர்களின் பழுதுபட்ட காலனி வீடுகள் பழுது பார்த்துக் கொடுக்கப்பட 1992-93ம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுதுபார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

30–

உடையநாடு ஆதிதிராவிடர் காலனி வீடுகளைப் பழுதுபார்த்தல்.

*வினா எண் **12953**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு ஆதிதிராவிடர் காலனி-இடிந்துபோன பழுதுபட்ட காலனி வீடுகளை *1992-93ல் பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுதுபார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

31–

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர் காலனி வீடுகளைப் பழுதுபார்த்தல்

*வினா எண்—**14040**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-*

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு ஆதிதிராவிடர் காலனி-இடிந்துபோன பழுதுபட்ட காலனி வீடுகளைப் பழுதுபார்க்க *1992-93* ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட வேண்டிய தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுதுபார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

32—

பூம்புகார் தொகுதியில் தொகுப்பு வீடுகளைப் பராமரித்தல்

*வினா எண் **14702**—திரு.எம். பூராசாமி:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் கடந்த ஆண்டுகளில் கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகளில் பழுதடைந்துள்ளதைப் பராமரித்து சீர்படுத்திக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால்ப் அதை பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்துத் பழுதுபார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

1994 ஏப்ரல் 25]

33–

அதிராம்பட்டினத்திற்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம்.

வினா எண் **14803**—திரு.ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டினத்திற்கு 1992-93ல் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இல்லை.

34–

மானூர் ஒன்றியத்தில் தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் **14042**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியத்திலுள்ள கானூர்பட்டி ஊருக்கு, ஊர் வரை தார்ச்சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள கானூர்பட்டி சாலையானது திருநெல்வேலி—ராஜபாளையம் சாலை. இதன் நீளம் 0.8. கி.மீ ஆகும். இதில் 0/0 முதல் 0/6 வரை ஆகஸ்ட் 92ல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மீதி உள்ள சாலையைப் புதுப்பிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

35–

ஆலங்குளம் ஒன்றயத்தில் சாலையைப் பழுதுபார்தல்

வினா எண் **14846**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 ஏப்ரல் 25

(அ) ஆலங்குளம் ஒன்றியம், வடக்கு காவலர்குறிச்சி கிராமத்திலிருந்து ருக்மணியம்மாள்புரம் வரையான சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் சாலையைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் இரு மருங்கிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிய பின்னர் பராமரிப்பு வேலையினை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

36–

கலிங்கப்பட்டி ராமனூர் சாலையைத் தார்ச்சாலையாக்குதல்

*வினா எண் **14849**—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழப்பாவூர் ஒன்றியம், வி.கே. புதூர் சுரண்ட ரோட்டிலிருந்து கலிங்கப்பட்டி, ராமனூர் கிராமத்திற்கு பிரிந்து செல்லும் சாலையை தார்ச்சாலையாக அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

கீழப்பாவூர் ஒன்றியம், வி.கே. புதூர் சுரண்டை ரோட்டிலிருந்து கலிங்கப்பட்டி, ராமனூர் கிராமத்திற்கு பிரிந்து செல்லும் சாலையை தார்ச்சாலையாக அமைத்துக் கொடுக்க நிதி வசதி இல்லாததால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

37—

மானூர் ஒன்றியம் தெற்குவாகைக்குளம் காலனி வீடுகளைப் பழுதுபார்த்தல்.

*வினா எண் **15052**—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

1994 ஏப்ரல் 25]

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியம், தெற்குவாகைக்குளம் காலனி வீடுகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக்கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடைமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுதுபார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

38--

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் பழுதடைந்த காலனியைப் புதுப்பித்தல்

வினா எண் *15813*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பழைய முதல்சேரியில் உள்ள ஆதிதிராவிடர்களின் பழுதடைந்த காலனியை *1992-93*-ல் புதுப்பித்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடைமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத்தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து

பழுதுபார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

39–

பனஞ்சேரியில் மிகவும் பின்தங்கியோர் காலனி வீடுகளை பழுதுபார்த்தல்

*வினா எண் **16198**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் வலப்பிரமன்காடு ஊராட்சி பனஞ்சேரியிலுள்ள மிகவும் பின்தங்கியோர் காலனி வீடுகளை 1992-93ல் பழுதுபார்த்து புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத்தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுதுபார்த்துத் தருவது என்றால் புதிதாக தொகுப்புவீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

40–

சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் மூர்த்திநாயக்கன்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு மயானப்பாதையும், தகரக்கொட்டகையும் அமைத்தல்.

*வினா எண் **16813**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 25]

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், மூர்த்திநாயக்கன்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு மயானப்பாதையும், தகரக்கொட்டகையும் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மூர்த்திநாயக்கன்பட்டி கிராம ஆதிதிராவிடர் காலனிக்கு மயானச் சாலை ரூ.40,000/- மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. போதிய நிதி வசதி இல்லாமையால் மயான ஷெட் அமைக்கும் வேலையை மேற்கொள்ள இயலவில்லை.

41–

நன்னிலம் தொகுதியில் காலனி வீடுகள் அமைத்தல்

*வினா எண் **17067**—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குவளைகால் பஞ்சாயத்து கன்சன் காலனிக்காக ஒதுக்கப்பட்ட வயலைத் தூர்த்து காலனி வீடுகள் கட்டுவதற்கு ஏதுவாக அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

42—

திருப்பனந்தாள் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் **2286**—திரு. எஸ். ஆசைமணி:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருப்பனந்தாள் ஒன்றியம், பரவனூர் ஆதிதிராவிடர் தெரு மக்களுக்கு இலவட கான்கிரீட் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

43—

குத்தாலம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் அமைத்தல்

*வினா எண் **22864**—திரு. எஸ். ஆசைமணி:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கோமல் ஊராட்சி மேலத்தெரு அம்பேத்கார் நகரில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு "இலவச கான்கிரீட் தொகுப்பு வீடுகள்" கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 25]

எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

44—

க. பரமத்தி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 23839—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஒன்றியம் காட்டுமுன்னூரில் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

45—

காட்டுமன்னார்கோயில் தொகுதியில் புதிய வீடுகள் கட்டுதல்

வினா எண் 22895—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம் வேளக்குடி கிராம காலனிக்கு புதிதாக இலவட வீடுகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத்

தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

46—

புவனகிரி தொகுதியில் சிவன் கோயிலைப் புதுப்பித்தல்

*வினா எண் **4134** மற்றும் **7859**—செல்வி கோ.மல்லிகா : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தச்சக்காடு கிராமத்தில் சிவன் கோயிலைப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) தச்சக்காடு கிராமத்திலுள்ள அருள்மிகு விஸ்வநாதர் திருக்கோயில் இந்த சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாகத்தில் இல்லை. எனவே, இத்திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வந்த பின்புதான், இந்தத் திருக்கோயிலுக்கு திருப்பணிக்குழு அமைத்து திருப்பணி செய்ய இயலும்.

(ஆ) வினா எழவில்லை.

47–

கோயில் பாதுகாப்புப் படை

*வினா எண் **5588**–திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் உள்ள சிலைகளைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?

(ஆ) அந்த சிலைகளைப் பாதுகாப்பதற்காக தனி பாதுகாப்பு வீரர்களை கொண்ட சிறப்புப் படை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): திருக்கோயில்களில் உள்ள சிலைகளைப் பாதுகாக்க திருவாரூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய

இடங்களில் சிலைகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இது மட்டுமின்றி களவு முயற்சி நடந்தால் தெரிவிக்கும் வகையில் ஒலி எழுப்பும் எச்சரிக்கை மணியும், இரவுக் காவலர்கள் முறையாகக் காவல் புரிவதைக் கண்காணிக்க 'டெல்டேல்' கடிகாரங்களும் பொருத்தப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 1000 இரண்டாம் நிலைக் காவலர்களும் மற்றும் 2534 முன்னாள் படை வீரர்களைக் கொண்ட தனி 'கோவில் பாதுகாப்புப் படை'யுடன் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

48–

பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக்குதல்

*வினா எண் **347**—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பிச்சாவரத்தை சுற்றுலா மையம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சீரமைப்பு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு.எஸ்.நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) பிச்சாவரம் சுற்றுலா மையத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சீரமைப்பு பணிகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.

(ஆ) கேள்வி எழவில்லை.

49–

பாலமதி மலைகிராமத்தை சுற்றுலா மையமாக்குதல்

*வினா எண் **494**–திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-*

(அ) வேலூர் அருகில் பாலமதி என்ற மலைக் கிராமத்தை சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு.எஸ்.நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் அருகில் உள்ள பாலமதி என்ற மலைக் கிராமத்தை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

50–

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை பராமரிக்கும் இடங்கள்

வினா எண் 1669–*டாக்டர் எஸ். சுந்தரராஜ்*: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர சுற்றுலாத் துறையினரால் பராமரிக்கப்படும் இடங்களின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் ஆகிய இரண்டு இடங்களும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் சுற்றுலாத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தொண்டி, ஆற்றாங்கரை ஆகிய இடங்கள் மாவட்ட உலாத்தலங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலய மாக வனத் துறையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம், முடிவுற்றது.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி ஒரு பிரச்சினையை எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.டேனியல்ராஜ், நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடம் எதுவும் கொடுக்காமல் நீங்கள் எழுந்து நிற்கக்கூடாது. என்னிடம் எதுவும் கொடுக்காமல் நான் அனுமதிப்பதில்லை. வேண்டாம், உட்காருங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு.

ஈரோட்டில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சிலையைக் காவல் துறையினர் கைப்பற்றியுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு, ஈரோடு நகரில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர்

எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை ஒன்றினைக் காவல் துறையினர் கைப்பற்றியுள்ளது பற்றிய ஒரு பிரச்சினை பற்றி எழுப்பப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று பேரவை விதி 56-ன்கீழ் ஒரு பிரச்சினையை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். அதை பேரவை விதி 56-ன்கீழ் எடுத்துக்கொள்ள இயலாது. (குறுக்கீடு) எனவே ஜீரோ அவரில் நீங்கள் 'ஸ்பெஷல் மென்ஷனாக' அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமானால் அனுமதிக்கிறேன். அந்த வகையில் நீங்கள் அரசின் கவனத்திற்கு அந்தப் பிரச்சினையை மட்டும் கொண்டு வந்து பதில் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபற்றி ஜீரோ அவரில் எழுப்ப வேண்டுமென்று திரு.ஞானசேகரன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-05

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத ரத்னா, முன்னாள் முதலமைச்சர், கோடானுகோடி தமிழ் மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கிற தமிழ் மக்களின் காவல் தெய்வம் அமரர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின். . . (குறுக்கீடு) என்னமோ சொல்கிறார், ஏதாவது இருந்தால் எழுந்து சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எவ்வளவு சொல்கிறீர்கள், நான் சொல்லிக்கொண்டிருக்கும் போது நீங்கள் எவ்வளவு சொல்கிறீர்கள். அந்தமாதிரி மற்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு இருந்திருக்கும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: முழு உருவ வெண்கல திருவுருவச் சிலையினை பெரியார் மாவட்டம், ஈரோடு நகரத்திலே நிறுவுவதற்கு 1993 ஜூலை மாதத்திலிருந்து சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் மனு செய்து அனுமதி கேட்டிருந்தோம். பல்வேறு சாக்கு போக்கு காரணம் சொல்லி அவை மறுக்கப்பட்டன, அனுமதி மறுக்கப்பட்டது. அதற்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஒரு மனு செய்து குறிப்பிட்ட இந்த இடங்களிலே ஏதாவது ஒன்று அல்லது உங்களுக்கு எந்த இடம் வசதிப்படுகிறதோ அதிலே ஏதாவது ஒன்று, இப்படி இந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய முழு உருவச் சிலையை ஈரோடு நகரத்தில் நிறுவுவதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டு இருந்தோம். அதற்கு நாங்கள் 23 ஆம் தேதி சிலையைத் திறக்க சென்ற அந்த நாள் வரை பதில் இல்லை. ஏறக்குறைய ஒரு மாத காலமாக அங்கே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய முழு உருவச் சிலை திறக்கப்படும் என்று போஸ்டர்கள், தட்டிகள், விளம்பரங்கள் மூலமாக பரவலாக

எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை ஒன்றினைக் காவல் துறையினர் கைப்பற்றியுள்ளது பற்றிய ஒரு பிரச்சினை பற்றி எழுப்பப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று பேரவை விதி *56*-ன்கீழ் ஒரு பிரச்சினையை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். அதை பேரவை விதி *56*-ன்கீழ் எடுத்துக்கொள்ள இயலாது. *(குறுக்கீடு)* எனவே ஜீரோ அவரில் நீங்கள் 'ஸ்பெஷல் மென்ஷனாக' அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமானால் அனுமதிக்கிறேன். அந்த வகையில் நீங்கள் அரசின் கவனத்திற்கு அந்தப் பிரச்சினையை மட்டும் கொண்டு வந்து பதில் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபற்றி ஜீரோ அவரில் எழுப்ப வேண்டுமென்று திரு.ஞானசேகரன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-05

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத ரத்னா, முன்னாள் முதலமைச்சர், கோடானுகோடி தமிழ் மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கிற தமிழ் மக்களின் காவல் தெய்வம் அமரர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின். . . *(குறுக்கீடு)* என்னமோ சொல்கிறார், ஏதாவது இருந்தால் எழுந்து சொல்லச் சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எவ்வளவு சொல்கிறீர்கள், நான் சொல்லிக்கொண்டிருக்கும் போது நீங்கள் எவ்வளவு சொல்கிறீர்கள். அந்தமாதிரி மற்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு இருந்திருக்கும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: முழு உருவ வெண்கல திருவுருவச் சிலையினை பெரியார் மாவட்டம், ஈரோடு நகரத்திலே நிறுவுவதற்கு *1993* ஜூலை மாதத்திலிருந்து சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் மனு செய்து அனுமதி கேட்டிருந்தோம். பல்வேறு சாக்கு போக்கு காரணம் சொல்லி அவை மறுக்கப்பட்டன, அனுமதி மறுக்கப்பட்டது. அதற்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஒரு மனு செய்து குறிப்பிட்ட இந்த இடங்களிலே ஏதாவது ஒன்று அல்லது உங்களுக்கு எந்த இடம் வசதிப்படுகிறதோ அதிலே ஏதாவது ஒன்று, இப்படி இந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய முழு உருவச் சிலையை ஈரோடு நகரத்தில் நிறுவுவதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டு இருந்தோம். அதற்கு நாங்கள் *23* ஆம் தேதி சிலையைத் திறக்க சென்ற அந்த நாள் வரை பதில் இல்லை. ஏறக்குறைய ஒரு மாத காலமாக அங்கே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய முழு உருவச் சிலை திறக்கப்படும் என்று போஸ்டர்கள், தட்டிகள், விளம்பரங்கள் மூலமாக பரவலாக

எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை ஒன்றினைக் காவல் துறையினர் கைப்பற்றியுள்ளது பற்றிய ஒரு பிரச்சினை பற்றி எழுப்பப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று பேரவை விதி *56*-ன்கீழ் ஒரு பிரச்சினையை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். அதை பேரவை விதி *56*-ன்கீழ் எடுத்துக்கொள்ள இயலாது. *(குறுக்கீடு)* எனவே ஜீரோ அவரில் நீங்கள் 'ஸ்பெஷல் மென்ஷனாக' அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமானால் அனுமதிக்கிறேன். அந்த வகையில் நீங்கள் அரசின் கவனத்திற்கு அந்தப் பிரச்சினையை மட்டும் கொண்டு வந்து பதில் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபற்றி ஜீரோ அவரில் எழுப்ப வேண்டுமென்று திரு.ஞானசேகரன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-05

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத ரத்னா, முன்னாள் முதலமைச்சர், கோடானுகோடி தமிழ் மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கிற தமிழ் மக்களின் காவல் தெய்வம் அமரர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின். . . . *(குறுக்கீடு)* என்னமோ சொல்கிறார், ஏதாவது இருந்தால் எழுந்து சொல்லச் சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எவ்வளவு சொல்கிறீர்கள், நான் சொல்லிக்கொண்டிருக்கும் போது நீங்கள் எவ்வளவு சொல்கிறீர்கள். அந்தமாதிரி மற்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு இருந்திருக்கும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: முழு உருவ வெண்கல திருவுருவச் சிலையினை பெரியார் மாவட்டம், ஈரோடு நகரத்திலே நிறுவுவதற்கு *1993* ஜூலை மாதத்திலிருந்து சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் மனு செய்து அனுமதி கேட்டிருந்தோம். பல்வேறு சாக்கு போக்கு காரணம் சொல்லி அவை மறுக்கப்பட்டன, அனுமதி மறுக்கப்பட்டது. அதற்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஒரு மனு செய்து குறிப்பிட்ட இந்த இடங்களிலே ஏதாவது ஒன்று அல்லது உங்களுக்கு எந்த இடம் வசதிப்படுகிறதோ அதிலே ஏதாவது ஒன்று, இப்படி இந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய முழு உருவச் சிலையை ஈரோடு நகரத்தில் நிறுவுவதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டு இருந்தோம். அதற்கு நாங்கள் *23* ஆம் தேதி சிலையைத் திறக்க சென்ற அந்த நாள் வரை பதில் இல்லை. ஏறக்குறைய ஒரு மாத காலமாக அங்கே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய முழு உருவச் சிலை திறக்கப்படும் என்று போஸ்டர்கள், தட்டிகள், விளம்பரங்கள் மூலமாக பரவலாக

அந்த மாவட்டம் முழுவதும், அந்த நகரத்திலேயும் விளம்பரம் செய்யப்பட்டு சுவற்றிலே எழுதப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தோம். காலையில் பொதுக் குழு, மாலையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை திறப்பு விழா. ஆனால் மதியம் சுமார் 1-30 மணி அளவிலே காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அந்த சிலை வைத்திருந்த எம்.ஜி.ஆர்.அண்ணா தி.மு.கழக மாவட்ட செயலாளர் வேங்கை ராஜேந்திரன் என்பவருடைய வீட்டுக்குச் சென்று சிலையை எடுத்து சென்று உள்ளனர். நாங்கள் செல்கிறபோது காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் வந்து என்னைச் சந்தித்து அவர்கள் சொன்னது ஈரோடு நகரத்திலே ஆர்.டி.ஓ. புரகிபிட்டரி ஆர்டர் போட்டிருக்கிறார் என்றும், நகரத்திலே 144 போட்டிருக்கிறார்கள் என்றும் என்னிடத்திலே சொன்னார்கள். ஆனால் சிலையை நாங்கள் திறக்கப் போவதா; எடுத்து செல்வதா; என்பது குறித்து நாங்கள் எதுவும் சொல்லவில்லை. அவர்களும் என்னிடத்திலே எதுவும் சொல்லவில்லை.

இதற்கிடையில் அந்த சிலை இருக்கிற இடம் அந்த நகர எல்லைக்கு அப்பாற்பட்டது. நகரத்திற்குள்ளே மட்டும்தான் 144 இருக்கிறது; புரகிபிட்டரி ஆர்டர் இருக்கிறது. வேங்கை ராஜேந்திரன் வீடு இந்த நகர எல்லையை தாண்டியிருக்கிறது. அவருடைய சொந்த வீட்டில், பட்டா நிலத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் காவல் துறை கோர்ட்டில் எந்த முன் அனுமதியும் பெறவில்லை. நியாயமாக ஒரு வீட்டிலே போய் சீஸ் செய்ய வேண்டுமென்று சொன்னால் முன்கூட்டியே கோர்ட்டினுடைய அனுமதி பெற்று இருக்க வேண்டும். அப்படி எந்தவிதமான கோர்ட் அனுமதியும் இல்லாமல், முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் திடீரென்று புகுந்து, நூற்றுக்கணக்கானோர் புகுந்து, ஏற்கனவே அந்த சிலை நகர எல்லைக்கு வெளியே இருந்தாலும்கூட அந்த சிலையை வேறு எங்கும் எடுத்துச் செல்லாத விதத்திலே நூற்றுக்கணக்கான போலீசார் ஏறக்குறைய ஒரு மாத காலமாக சிலையைப் பார்க்க உள்ளே அனுமதிக்காமலும், உள்ளே இருந்து வெளியே யாரையும் விடாமலும் அந்த சிலைக்கு 'அன் அபிஷியலாக' பந்தோபஸ்து போட்டு வந்திருக்கிறார்கள். எனவே, அன்றைக்கும் அவர்களையும் சேர்த்துக்கொண்டு வெளியே இருந்து போன காவலர்களும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையை போலீஸ் வேனிலோ, லாரியிலோ ஏற்றி 1-30 மணி அளவிலே சட்டத்திற்குப் புறம்பாக, வீட்டிலே, பட்டா நிலத்திலே சொந்த நிலத்திலே இருக்கிற, புரகிபிட்டரி ஆர்டர் இல்லாத இடத்திலே, 144 இல்லாத இடத்திலே இருக்கிற சிலையை-- காவல் துறை எடுத்துச் செல்வதற்கு எந்தவிதமான அதிகாரமும் நிச்சயமாக காவல் துறைக்கு கிடையாது. கோர்ட்டிலிருந்து

எந்தவிதமான முன் அனுமதியும் இதற்குப் பெறவும் இல்லை. ஏதோ சட்டத்திற்குப் புறம்பாக நாங்கள் அந்தச் சிலையை எடுத்துக் கொண்டு போகிறபோது, அந்த முயற்சியில் ஈடுபடுகிறபோது—சிலையை எடுத்துச் செல்லவில்லை. எனவே, முன்கூட்டியே, மாலையிலேதான் 6 மணிக்கு சிலை திறப்பு விழா; எனவே, மதியம் 1-30 மணிக்கே சென்று அந்தச் சிலையை கடத்திச் சென்று விட்டனர் காவல் துறையைச் சேர்ந்தவர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்நாளிலே ஜெயிலுக்குப் போய் இருக்க மாட்டார். அவருடைய முழு உருவச் சிலை இன்றைக்கு ஜெயிலிலே இருக்கிற, சிறையிலே இருக்கிற சூழ்நிலை.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ.ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் நீங்கள் கொடுத்த வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்தி, உண்மைக்குப் புறம்பான பல செய்திகளை இங்கே தெரிவித்துக் கொண்டு இருக்கிறார். அவர், சொல்வதையெல்லாம் சொல்லி முடித்த பின்னர், நான் என்னுடைய பதிலை அளிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 56-இல் எழுப்ப நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். விதி 56-லே அனுமதித்து இருந்தால்தான். எந்த வகையிலே அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் உள்ளது என்று சொல்லலாம். (குறுக்கீடு) காவல் துறையினர் எடுத்துச் சென்று இருக்கிறார்கள்; எனவே அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்பதுதான முறை. ஆனால் நீங்கள் வேறு எதையோ சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இருக்கட்டும் கடைசியிலே சொல்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: கடைசியிலே, அப்புறம் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டார்கள். எனவே, அனுமதி இல்லாமல் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான கட்-அவுட்டுகள், அங்கங்கே நூற்றுக்கணக்கிலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநாவுக்கரசு, நான் கொடுத்த அனுமதியை நீங்கள் தவறாகப் பயன்படுத்துகிறீர்கள் என்பதற்கு இதெல்லாம் எடுத்துக்காட்டு. நீங்கள் கொடுத்து இருப்பதிலே, எங்கே கட்-அவுட் வருகிறது? (குறுக்கீடு) ஜீரோ அவர்-ல் 'மென்ஷன்-க்கு அனுமதித்தால் அதிலே இருக்கிறதைத்தான் மென்ஷன் பண்ணலாம். ஆனால் நீங்கள் பேசும்பொழுது சொல்கிறீர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்நாளில் ஜெயிலுக்குப் போய்

இருக்க மாட்டார்கள் என்று. விவரம் தெரியாமல் நீங்கள் எம்.ஜி.ஆர். பெயரிலே ஒரு கட்சியை வைத்திருக்கிறீர்கள் என்பதற்கு இதைவிட என்ன எடுத்துக்காட்டு வேண்டும்? நான் இங்கே எல்லாவற்றையும் அனுமதித்தேன். (குறுக்கீடு) நான் அப்போதே பார்த்தேன்; எம்.ஜி.ஆர். சிறைக்கே போகவில்லை என்பதுபற்றி உங்களுக்கு என்ன தெரியும்? (குறுக்கீடு) அதுபற்றி உங்களுக்குத் தெரியுமா? (குறுக்கீடு) அதுபற்றி உங்களுக்குத் தெரியுமா? ஆகவே, உங்களுக்குத் தெரியாத விஷயத்தை, எம்.ஜி.ஆர்-ஐப் பற்றி முழுமையாகத் தெரியாமல் நீங்கள் எதையாவது அவையிலே பேசிக்கொண்டே இருப்பீர்கள்; உறுப்பினர்கள் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டுமென்று சொல்கிற மாதிரிப் பேசுகிறீர்கள். சம்பந்தா சம்பந்தமில்லாமல், உறுப்பினர்களுடைய உணர்ச்சியைத் தூண்டுகிற வகையில் ஏதாவது பேசுகிறீர்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடு) திருநாவுக்கரசு, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பேச அனுமதித்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திருநாவுக்கரசு நீங்கள் எம்.ஜி.ஆர்.-ஐப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசினால், உறுப்பினர்கள் அதையெல்லாம் கேட்டுக்கொண்டு இருக்க மாட்டார்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு.எஸ்.டி.சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அழகிரி இதில் உங்களுக்கு சம்பந்தம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அழகிரி உட்கார வேண்டும். அழகிரி, உங்களுக்கு சம்பந்தமில்லாமல் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) இது, அந்த உறுப்பினர் சம்பந்தப்பட்டது நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) அழகிரி, உட்காரலாம். (குறுக்கீடுகள்) அழகிரி, உட்காரலாம். (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்கவா? (குறுக்கீடுகள்) அழகிரி, உட்கார வேண்டும்; இல்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) அழகிரி உட்காரவில்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். அழகிரிக்கு இதிலே என்ன சம்பந்தம் இருக்கிறது? (குறுக்கீடுகள்)

அழகிரி, சம்பந்தா சம்பந்தமில்லாமல் எழுந்து நிற்கக் கூடாது. நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பேச அனுமதித்து இருக்கிறேன். அழகிரி உட்காரவும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை நீங்கள் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். ஒருவர் பேசுகிறபோது, மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டுமென்று விதி இருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அனுமதித்து இருக்கிறீர்கள்.

திரு.எஸ்.டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டேனியல்ராஜ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டேனியல்ராஜ் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) அமைச்சர்களும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) டேனியல்ராஜ், நீங்கள் அந்தப் பக்கம் திரும்பிப் பேசினால் என்ன நடக்கும்? அதேமாதிரி அவர்கள் (குறுக்கீடுகள்) நான் உட்காரச் சொல்லி நீங்கள் முறையில்லாமல் நின்று கொண்டு இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலிலேயே எழுந்திருந்தால் நான் அமைச்சர்களை உட்காரச் சொல்லலாம். ஆனால் நீங்கள் எழுந்து நின்று அந்தப் பக்கமாகத் திரும்பிப் பேசினால், எப்படி நன்றாக இருக்கும்?

திரு.எஸ்.டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் மிரட்டுகிறார்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் ஒன்றும் மிரட்டவில்லை. அப்போதிருந்து நீங்கள்தான் மிரட்டிக் கொண்டு இருக்கிறீர்கள். டேனியல்ராஜ், உட்காருங்கள். வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) வருவாய்த் துறை அமைச்சர் பேசட்டும். டேனியல்ராஜ் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். நான் பேசுகிறபோது, இங்கே உள்ள எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் உங்களுடைய அனுமதி இல்லாமலேயே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை அழைத்த பிறகு நீங்கள் நின்று பேசிக்கொண்டு இருந்தால் நன்றாக இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பேச அனுமதித்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பேச அனுமதித்த பிறகு நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் நன்றாக இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். நீங்கள் என்னைப் பேச அனுமதித்தபோதே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், என்னைப் பேச அனுமதிக்காமல், அவரே பேசிக்கொண்டு இருக்கிறார். யாரைப் பேச அனுமதிப்பது என்பது மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அதிகாரம். அதை மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அறியாமல் . . . (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநாவுக்கரசு, நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) திருநாவுக்கரசு நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) உட்காரவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) உட்காரவேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) திருநாவுக்கரசு நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். நான் வருவாய்த் துறை அமைச்சரைப் பேச அழைத்து அவர் பேசும்போது (குறுக்கீடு) திருநாவுக்கரசு உட்கார வேண்டும்; திருநாவுக்கரசு உட்கார வேண்டும்; திருநாவுக்கரசு உட்கார வேண்டும். (குறுக்கீடு) திருநாவுக்கரசு அவையை விட்டு வெளியேற வேண்டும்; திருநாவுக்கரசு அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) திருநாவுக்கரசை அவையை விட்டு வெளியேற்றுகிறேன். மார்ஷல், திருநாவுக்கரசை அவையை விட்டு அப்புறப்படுத்தவும், (குறுக்கீடு) மற்ற உறுப்பினர்களெல்லாம் உட்காருங்கள். திருநாவுக்கரசை அவையை விட்டு காவலர்கள் அப்புறப்படுத்தவும்.

4. விதி 120-ன் கீழ் உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப்பெறுதல்

(அ) உறுப்பினரர் திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப்பெறுதல்

முற்பகல் *11.15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநாவுக்கரசு இந்தப் பேரவையின் கூட்டத் தொடரிலேயே ஒன்றுக்கு இரண்டு முறை

வெளியேற்றப்பட்டிருக்கிறார். இரண்டாவது முறை வெளியேற்றப் பட்டபோது கூட நான் பெருந்தன்மையோடு விட்டு விட்டேன்.

இது மூன்றாவது முறையும் அவர் செய்கிற வரம்பு மீறிய செயல். எனவே, அவரை இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் பேரவையை விட்டு வெளியேற்ற உத்தரவிடுகிறேன்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்).

3. சிறப்புக் கவனஈர்ப்பு— தொடர்ச்சி

ஈரோட்டில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சிலையைக் காவல்துறையினர் கைப்பற்றியுள்ளது குறித்து- -தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எஸ்.டி.சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே பேசுகிறபொழுது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் களங்கம் விளைவிக்கின்ற வகையில் அவர் சிறைச்சாலைக்கே செல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்.

அரசியல் தலைவராக இருக்கிறவர்கள், சிறைச்சாலைக்கே செல்லவில்லை என்று சொல்வது, அவர் எத்தனை முறை எத்தனையோ போராட்டங்களில் கலந்து கொண்டு இன்று அல்ல, நீண்ட பல காலமாக அரசியலிலிருந்து, அவர் போராட்டங்களில் கலந்து சிறை சென்றிருக்கிறார் என்பதை விட்டுவிட்டு, அவர் இந்த அவைக்குத் தவறான கருத்து ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்.

மற்றொன்றைச் சொல்கிறபொழுது, கட் -அவுட் என்று சொல்கிறார். கட்-அவுட்டுக்கெல்லாம் அனுமதி வாங்கவில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கட்-அவுட்டுக்கெல்லாம் அனுமதி வாங்கினார்களா, வாங்கவில்லையா என்பதைப்பற்றிக் காவல் துறையினர் அவர்களுக்கு அந்தப் பர்மிஷனைத் தருகிறார்களா, தரவில்லையா, எந்தக் காரணத்தைக் கொண்டு வாங்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னொன்றை நான் செய்தித் தாளில் இன்றைக்குப் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், புரட்சித் தலைவர் ஜெயிலுக்குப் போகவில்லை என்று சொல்வதில் நீங்கள் குறுக்கிட்டது சரி. மற்றதற்கெல்லாம் முதலமைச்சரவர்கள் பதில் சொல்லுவார்கள். (குறுக்கீடு) அதற்கு முதலமைச்சரவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று, நேற்றையதினம் பத்திரிகையில் பார்த்த செய்தியை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக உங்களிடத்திலே நான் தந்திருக்கிறேன். அதை நான் இங்கே தெரிவிப்பது-அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தமிழகத்தில் வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புரட்சித் தலைவருக்காக என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நூற்றுக்கணக்கான சிலைகளை எங்களுடைய தங்கத் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்களே தங்களுடைய திருக்கரங்களால் திறந்து வைத்திருக்கிறார்கள் என்பது நாட்டுக்குத் தெரியும்.

இன்று எப்படி இந்தச் சிலையின் அமைப்பு இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொண்டாக வேண்டும். ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும், ஒவ்வொரு தலைவருக்கும் ஒவ்வொரு கொள்கை இருக்கிறது. புரட்சித் தலைவருடைய திருவுருவச் சிலை, என்றைக்குமே நாம் வைக்கிறபொழுது இரண்டு விரலைக் காட்டுகிற சிலைதான் அமைப்போம்.

ஆனால் இந்தச் சிலையைப் பாருங்கள். கைச்சின்னத்திற்கு ஓட்டுக் கேட்பதைப்போல, அதுவும் மூப்பனார் அவர்களை வைத்துக்கொண்டு சிலையைத் திறக்கிறேன் என்று சொல்லுவது அவருடைய கொள்கைக்கும், இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும்தான் இருப்பதாகச் சொல்கிற எட்டப்பராக இருக்கிற, இங்கே இருக்கிற திருநாவுக்கரசு போன்றவர்களுடைய - எப்படித் துரோகம் செய்கிறார் நாட்டுக்கு என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொண்டாக வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே, அவர் கைச்சின்னம்-(கூச்சல்-குழப்பம்) கைச்சின்னம் இருக்கிறது, சொல்கிறார். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: தெரிந்து கொண்டாக வேண்டும். 1980-லே நம்முடைய மறைந்த தங்கத் தலைவர் புரட்சித் தலைவருடைய ஆட்சியை டிஸ்மிஸ் செய்த துரோகக் கும்பல் காங்கிரஸ்காரர், இன்றைக்குப் புரட்சித் தலைவருடைய திருவுருவச் சிலையை திறக்கிறார் என்று சொன்னால் இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதை நாட்டு மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையைப் பற்றி இங்கே திருநாவுக்கரசு அவர்கள் பேசினார்கள். இன்றைக்குத் தமிழகத்தினுடைய அனைத்துத் தலைநகரிலும் சிலைகளை வைக்க வேண்டும்; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ருடைய சிலையை வைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி உத்தரவிட்டு இன்றைக்கு அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)* எல்லா மாவட்டத் தலைநகரிலும் வைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இன்றைக்குப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது தவிர பல நூறு சிலைகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் திறந்திருக்கிறார்கள்; அமைச்சர்களும் திறந்திருக்கிறார்கள்.

இதிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்-ருக்கு புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் கட்சியில் செய்ததை யாரும் செய்தது கிடையாது. ஏதோ வேண்டாத இடத்திலே சிலைக்காக அனுமதி கேட்பது; அரசின் சார்பிலே அந்த இடத்தைக் கொடுக்கவில்லை என்று சொன்னால் அதற்காக ஒரு அரசியல் நடத்துவதற்காக, 80 ஆம் ஆண்டு ஆட்சியை டிஸ்மிஸ் செய்தவர்களைக் கொண்டு திறப்பது என்பதை எந்த அண்ணா தி.மு.க.காரரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில். *(குறுக்கீடு)* திரு.ஞானசேகரன், கொடுத்திருக்கிறீர்கள். இந்தப் பிரச்சினையை அவர் சொல்லிவிட்டார் அல்லவா? *(குறுக்கீடு)* நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்லியிருக்கிறேன் அல்லவா? நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)* இதிலே மூப்பனார்மீது எந்தக் குறையையும் அவர் சொல்லவில்லை. மூப்பனாரைக் கொண்டு திறக்கிறார்கள், கைச் சின்னத்தைக் கொண்டு திறக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மூப்பனார்மீது ஏதாவது குற்றம் சுமத்தி இருக்கிறாரா? *(குறுக்கீடுகள்)* மூப்பனார் என்று பெயர் சொன்னாலே, எழுந்திருக்கக் கூடாது *(குறுக்கீடுகள்)* அதற்காக கைச் சின்னத்தை வைத்துச் சிலை வைத்திருக்கிறார்கள் என்று அவர் சொல்கிறார். அதிலே என்ன இருக்கிறது? மூப்பனார்மீது அவர் எந்தக் குறையும் சொல்லவில்லை. மூப்பனார்மீது குற்றச்சாட்டும் சொல்லவில்லை, அவர் சொன்னதற்குப்

பதில் சொல்வதற்கு. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடுகள்)

(காங்கிரஸ் கட்சியின் சில உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேறினர்)

முற்பகல் 11-20

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *18-3-1994* அன்று, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. பெரியார் மாவட்டச் செயலாளர் திரு.வேங்கை ராஜேந்திரன், தனது கட்சிப் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தி, ஈரோடு, பன்னீர் செல்வம் பூங்கா அருகில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ரின் திருவுருவச் சிலையை வைப்பது எனத் தீர்மானம் செய்துள்ளார். அவர், எந்த இடத்தில் சிலையை வைக்க வேண்டும் என்று அனுமதி கேட்டிருந்தாரோ, அந்த இடத்தில் நடைமுறை விதிகளின்படி, சிலையை வைக்க அனுமதிக்க இயலாது என்பதால், ஈரோடு நகராட்சி ஆணையாளர் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை கோட்டப் பொறியாளர் ஆகியோர், சிலையை வைக்க அனுமதி மறுத்துள்ளார்கள். இதற்கிடையில், வேங்கை ராஜேந்திரன், ஈரோடு நகரம், பன்னீர்செல்வம் பூங்கா அருகில் சிலையை நிறுவி, பொதுக் கூட்டம் நடத்த, காவல் துறையிடம் அனுமதி கேட்டிருக்கிறார். ஆனால், அந்தப் பகுதி, மக்கள் புழக்கமும், அதிகமான போக்குவரத்து நெரிசலும் உள்ள ஒரு முக்கியமான பகுதி என்பதால், அந்த இடத்தில், சாதாரணமாக, பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு, காவல் துறையினர் அனுமதி வழங்குவதில்லை. எனவே, *11-4-1994* அன்றே, ஈரோடு நகர காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், வேங்கை ராஜேந்திரன் அவர்களை, அந்த இடத்தில் சிலையை நிறுவுவதற்கான அனுமதி பெறப்பட்ட விவரத்தைத் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டிருக்கிறார். ஈரோடு நகரத்தில், காவல் சட்டம் பிரிவு *30 (2)*-இன் கீழ், ஏற்கனவே தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அது அமலில் இருந்ததால், அதன் நகல் ஒன்றை வேங்கை ராஜேந்திரன் அவர்களுக்கு அனுப்பி வைத்து, கூட்டம் நடத்தக் கூடாது என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும், திரு.வேங்கை ராஜேந்திரனும், அவரைச் சார்ந்தவர்களும், அரசாங்கத்தின் அனுமதியின்றி, எப்படியாவது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்-ரின் சிலையை, பன்னீர்செல்வம் பூங்காவிலோ அல்லது அதற்கு அருகிலுள்ள முக்கியமான ஒரு பகுதியிலோ, *23-4-1994* அன்று வைத்துவிடுவது என்று முடிவு செய்து வைத்திருந்ததாகத் தெரிகிறது. இந்த எண்ணத்துடன்தான், அந்தக் கட்சியின் பொதுக் குழு கூட்டம், ஜனனி கல்யாண மண்டபத்தில், *23-4-1994* அன்று கூட்டப்பட்டு, அதன்மூலம் கட்சித் தொண்டர்களைத் திரட்டி, சிலையை நிறுவும் முயற்சியை

மேற்கொண்டு சட்டம்-ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்த முடிவு செய்திருந்தார்கள். வேங்கை ராஜேந்திரனும், அவருடன் இருந்தவர்களும் எடுத்த இந்த முடிவினால், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்பதாலும், மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதாலும், ஈரோடு நகரக் காவல் துறை ஆய்வாளர், குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 144 (1)-ன்கீழ், தடை ஆணை பிறப்பிப்பதற்காக, கோட்டாட்சித் தலைவருக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதன்மீது, விசாரணையை மேற்கொண்டபின்பு, ஈரோடு, கோட்டாட்சித் தலைவர், 21-4-1994 முதல் 15 நாட்கள் வரை, திரு.வேங்கை ராஜேந்திரனும், அவருடைய ஆட்களும் ஊர்வலமாகச் செல்லுதல், கொடிகளை ஏற்றுதல், சிலையை நிறுவுதல் போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என்று தடையாணையைப் பிறப்பித்துள்ளார். 23-4-1994 அன்று, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. கட்சியின் பொதுக் குழுக் கூட்டம், ஈரோடு, ஜனனி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கும் வண்ணம், ஈரோடு நகரத்தின் முக்கியமான பகுதிகளில், குறிப்பாக, பன்னீர்செல்வம் பூங்கா அருகில், சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கவும், பொது அமைதியைப் காப்பாற்றவும், காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 23-4-1994 அன்று, ஈரோடு தெற்கு காவல் நிலைய ஆய்வாளர், புல்ஃபைட் என்ற சாலை சந்திப்பு அருகில், டி.எம்.ஐ.1937 என்ற எண் கொண்ட லாரியை, மதியம் 1-30 மணியளவில், சந்தேகத்தின் பேரில், தடுத்து நிறுத்தி சோதனையிட்டிருக்கிறார். அந்த லாரியிலிருந்து இரண்டு பேர், ஆய்வாளரைப் பார்த்ததும், லாரியிலிருந்து குதித்து ஓடியிருக்கிறார்கள். லாரியின் டிரைவர் திரு.கே.ராஜு என்பவரின் முன்னிலையிலும், வேறுசில சாட்சிகளின் முன்னிலையிலும், லாரி சோதனையிடப்பட்ட போது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ரின் முழு திருவுருவச் வெண்கலச் சிலை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. லாரியின் டிரைவர் திரு. ராஜு, அந்த சிலையை, கொல்லம்பாளையம் நகரத்தில், ஒரு சாயத் தொழிற்சாலையிலிருந்து கொண்டு வந்ததாகவும், யாருக்காகக் கொண்டு செல்லப்படுகிறது என்கிற விவரம், தனக்குத் தெரியாது என்றும் கூறியுள்ளார்.

முற்பகல் 11-25

விசாரணையில் கொல்லம்பாளையத்தில் குறிப்பிடப்பட்ட சாயத் தொழிற்சாலை செல்வம் என்கிற செல்வராஜ் என்பவருக்குச் சொந்தமானது எனத் தெரிய வந்துள்ளது. காவல் துறை ஆய்வாளர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ரின் திருவுருவச் சிலையையும், லாரியிலிருந்த வேறு சில பொருள்களையும் கைப்பற்றி, ஈரோடு தெற்குக் காவல் துறைக் குற்ற எண் 312/94-ல் குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 102-ன்கீழ் வழக்கு ஒன்றைப் பதிவு செய்து,

மேல் விசாரணை செய்துள்ளார். பொதுவாக, அரசியல் கட்சிகள் தங்களுக்கு விருப்பமானத் தலைவரின் திருவுருவச் சிலைகளை நிறுவுவதற்கு அரசினுடைய அனுமதியை முறைப்படி பெற்று, பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாத ஒரு இடத்தில் வைப்பதுதான் நடைமுறையில் இருந்து வருகிற மரபு. ஆனால், ஒரு சிலையைத் தயார் செய்து வைத்துக்கொண்டு, பொது மக்களுக்கு இடையூறான ஒரு பக்கத்தில், அரசினுடைய அனுமதியைப் பெறாமல் சிலையை வைக்க முயற்சி செய்வது சட்டம்-ஒழுங்கு பிரச்சினையைத்தான் ஏற்படுத்தும். பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் அத்தகைய ஒரு செயலை எந்த அரசாங்கமும் அனுமதிக்க இயலாது. எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலை ஒன்றை வைத்துக்கொண்டு அரசியல் ஆதாயம் தேட சிலர் முயற்சி செய்வது எங்களுக்கெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) வேதனையைத் தருகின்றது. நாங்கள் அனுதினமும் போற்றி வணங்குகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) திருவுருவச் சிலையை லாரியில் கொண்டு வந்தவர்கள் போட்டுவிட்டு ஓடிவிட்டாலும், காவல் துறையினர் அந்தச் சிலையை பாதுகாப்பாக வைத்திருந்தார்கள். சாதாரணமாக, இத்தகைய வழக்குகளில் சிலையை நீதிமன்றப் பொறுப்பில் ஒப்படைத்திருப்பார்கள். ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலை என்பதால் காவல் துறையினர் உடனடியாக விசாரணை செய்து திரு.வேங்கை ராஜேந்திரன் அவர்கள்தான் உரிமையாளர் என்பதை கண்டறிந்து அவர்களிடம் சிலையை ஒப்படைக்கச் சென்றார்கள். ஆனால், வேங்கை ராஜேந்திரன், அவர்களுடைய கட்சியின் பொதுச் செயலாளரிடம் அனுமதி பெற்றபின்புதான் சிலையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறிவிட்டதாகத் தெரிகிறது. காவல் துறையினர் நியாயமாகச் செயல்பட்டாலும், அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலை தங்களுக்குத் திருப்பித் தரப்படவில்லையென்று பொது மக்கள் முன்பு விஷயத்தைத் திசைத் திருப்பிவிடுவதில் வல்லவர்கள் என்பதால் காவல் துறையினர், அந்தச் சிலையைப் பெற்றுக்கொண்டு செல்லுமாறு வேங்கை ராஜேந்திரன் அவர்களுக்கு கடிதம் எழுதி இரவு 10 மணிக்கு சார்பு செய்திருக்கிறார்கள். சற்றுமுன்பு எனக்குக் கிடைத்தத் தகவலின்படி, வேங்கை ராஜேந்திரன் அவர்கள் காவல் துறையினரிடமிருந்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையை மீளப் பெற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. ஆக, இனியும் இந்த விஷயத்தை எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. கட்சியினர் அரசியலாக்கி ஆதாயம் தேடினால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயருக்கும்,

புகழுக்கும் களங்கம் ஏற்படுத்துவதற்கென்றே இவர்கள் செயல்படுகிறார்கள் என்றுதான் (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்கள் நினைப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினை இத்தோடு முடிகிறது. இருந்தாலும், திருநாவுக்கரசை வெளியேற்றியிருக்கிற சம்பவத்தைப் பற்றி நான் பேரவைக்குச் சொல்லியாக வேண்டும். இப்பிரச்சினைப் பற்றி என்னிடத்திலே சொன்ன நேரத்திலேகூட, இது ஒரு கட்சிக்குச் சம்பந்தப்பட்டப் பிரச்சினை, இதைப் பேரவை விதி 56-ன்கீழ் எழுப்ப இயலாது என்பதை நேரிடையாகவும் சொன்னேன். இருந்தாலும், அவர் இங்கே பேரவைக்கு வருவதற்கு முன்பே, நேற்றே பத்திரிகையாளர்களிடத்தில், 'நான் நாளைக்குப் போய் இந்தப் பிரச்சினையை எழுப்புவேன், சபாநாயகர் என்னை எழுப்ப அனுமதிக்கமாட்டார்; என்னை வெளியேற்றுவார்; வெளியேற்றினாலும் பரவாயில்லை; நான் இந்தப் பிரச்சினையை அங்கே போய் எழுப்புவேன்' என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார். எனவேதான் முதலிலே அனுமதிக்கவில்லையென்று சொன்னால், நான் ஏற்கெனவே சொல்லிவிட்டு வந்தேனே என்று தன்னுடைய தீர்க்க தரிசனத்திற்கு வெளியே போய் முத்திரை குத்தப் பார்ப்பார். ஆகவேதான், அனுமதியும் அளித்தேன். அனுமதி அளித்து, முதலமைச்சர் அவர்களும் பதில் தருகிறேன் என்று தெரிவித்து அவருக்கு அனுமதி அளித்ததற்கு, தனக்குக் கிடைத்த அந்த அனுமதியை எவ்வளவு தவறாக இங்கே பயன்படுத்தினார் என்பதைப் பேரவை தெரிந்துகொண்டது. அதுகூட பரவாயில்லை, முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை எந்த அளவுக்கு அரசியலுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை அவர் இன்றைக்குத் தெரிவித்த ஒரு கருத்திலேயிருந்து அனைவரும் தெரிந்துகொள்ளலாம். எம்.ஜி.ஆர். அவர்கள் சிறைக்கே செல்லவில்லை என்கிற ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார். ஒன்றுக்கு பலமுறை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரே தான் கருப்புக்கொடி போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட விவரத்தை, தன்னுடைய வாழ்க்கை வரலாற்றிலேயே எழுதியிருக்கிறார் பல்வேறு நேரங்களில், பல்வேறு கூட்டங்களிலே அதைத் தெரிவித்திருக்கிறார். அவையெல்லாம், சந்தர்ப்பவசத்தாலே சட்டமன்ற உறுப்பினராகி, அமைச்சரான திருநாவுக்கரசுக்குத் தெரிய நியாயமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என்றுதான் அப்பொழுதே நான் தடுத்து நிறுத்தி, இல்லாத பிரச்சினையைச் சொல்லாதீர்கள் என்று சொன்னேன். இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மீது தங்கள் உயிரையே வைத்திருக்கிற அபிமானிகள் அத்தனைபேருக்கும் விடுகிற சவால் என்கிற முறையில் இருக்கிறது என்பதால்தான் இதை நான் அப்போதே தடுத்து நிறுத்தினேன். (குறுக்கீடு) நான்

இங்கே இருந்து அப்புறப்படுத்திய உறுப்பினர்கள் பேரவை வளாகத்திலே இருக்கக்கூடாது என்பதுதான் விதி. எனவே காவலர்கள் அந்த நபரை அப்புறப்படுத்தவும். பேரவையிலே இருந்து அப்புறப்படுத்தப் பட்டவர்கள் பேரவைக்கே கூட ஸ்ட்ரேஞ்சர்ஸ்தான். எனவேதான் நபர் என்கிற வார்த்தையைப் பயன்படுத்தினேன். எனவே அந்த நபரை அப்புறப்படுத்தவும்.

முற்பகல் *11-30*

சிறைக்குச் சென்ற எம்.ஜி.ஆர். அவர்களை, கைது செய்யப்பட்ட எம்.ஜி.ஆர். அவர்களை, சிறைக்கே தன் வாழ்நாளில் சென்றது இல்லை என்று ஒரு நபர் பேசுகிறார் என்று சொன்னால் அதைப் புரட்சித் தலைவரின் அபிமானிகள் எந்த வகையிலேயும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு சிலராவது இதைப் பேசி இருக்கலாம். ஏனென்றால் அவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்களும் கூடப் பேசி இருக்கிறார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். பெயரைப் பயன்படுத்துகிறவர்கள் எந்த அளவுக்கு சந்தர்ப்பவாதத்தில் அவர் பெயரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், சுய இலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை தனது சுயநலத்திற்காக எந்த வகையிலேயும் காட்டிக் கொடுக்கக்கூட இந்த நபர் தயங்க மாட்டார் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினால்தான் சில உறுப்பினர்கள் ஆத்திரப்பட்டார்கள். சிறைக்குச் சென்ற எம்.ஜி.ஆரை, கைது செய்யப்பட்ட எம்.ஜி.ஆரை, அவர் வாழ்நாள் முழுவதும் கைது செய்யப்படவே இல்லை என்று ஒரு நபர் பேசுகிறார் என்று சொன்னால் ஆத்திரப்படத்தான் செய்வார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியினர் ஆத்திரப்படுவதற்கு என்ன இருக்கிறது. எம்.ஜி.ஆர்.-ரின் அபிமானிகள் தங்களுடைய தலைவரைப் பற்றி ஒருவர் இப்படித் தவறான தகவலைச் சொல்கிறார் என்ற காரணத்தால் ஆத்திரப்படுகிறார்கள். இடையிலே காங்கிரஸ் கட்சியினருக்கு இதிலே என்ன இருக்கிறது அவர்கள் ஆத்திரப்படுவதற்கு? அவர்களைப் பற்றி எந்த வகையிலேயும் தவறாகச் சொல்லவில்லை. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரே சொன்னது கூட அந்த இருவிரல் காண்பிக்கின்ற எம்.ஜி.ஆர். சிலை எல்லா இடங்களிலும் இருக்கிறபோது கைச்சின்னத்தைக் காண்பிக்கிற எம்.ஜி.ஆர். சிலையை வைத்திருக்கிறார்களே என்றுதான் சொன்னார். எனவே அதில் இருக்கிற நியாயத்தைத்தான் அவர் சொல்லி இருக்கிறார்.

எனவே திருநாவுக்கரசு அவர்கள் தொடர்ந்து இதைப்போல அவ்வப்போது நான் கொடுக்கிற சந்தர்ப்பத்தைத் தவறாகவே பயன்படுத்தி வந்திருக்கிற காரணத்தால் இன்றைக்கு அவையை

விட்டு அப்புறப்படுத்தப்பட்டு, இந்தக் கூட்டத்தொடரிலேயே இரண்டு முறை வெளியேற்றப்பட்டிருக்கிற காரணத்தால் இந்த கூட்டத்தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் அவையிலிருந்து தள்ளி வைக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. கே. கே. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டீர்கள். உண்மையிலேலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருசிலர் என்று குறிப்பிடும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் மாற்றிக்கொள்கிறேன் ஒருசிலர் என்று. அதாவது எப்போதும் தகராறு செய்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் என்று அப்படி மாற்றிக்கொள்கிறேன். அதாவது இந்தப் பேரவை நடவடிக்கைகள் ஒழுங்காக நடக்கக்கூடாது என்று எப்போதும் தேவையில்லாமல் விதிமுறைகளுக்கு மாறாகத் தகராறு செய்கிற ஒன்றிரண்டு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் என்று மாற்றிக்கொள்கிறேன். திரு.ஆர்.முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அதாவது அம்பாசமுத்திரம் தொகுதியில் கடயம் ஒன்றியத்தில் ஆம்பூரில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சிலையை வைப்பதற்காக நாங்கள் கிட்டத்தட்ட 2 இலட்சம் ரூபாய் செலவு செய்து திறப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நாங்கள் மனுச் செய்திருந்தோம். ஆனால் எந்தவிதத்திலும் அனுமதி கிடைக்கவில்லை. அதன்பிறகு நாங்கள் அளந்து பார்த்தோம். அளந்துபார்த்தபோது பட்டா இடத்தில்தான் நாங்கள் அந்தச் சிலையை வைத்து இருந்தோம். இது நடந்தது 1988-லே• அப்போது ஜனாதிபதி ஆட்சி நடந்தது. ஜனாதிபதி ஆட்சி என்றாலே காங்கிரஸ் ஆட்சிதானே, காங்கிரஸ் ஆட்சிதானே ஜனாதிபதி ஆட்சி. இரண்டும் ஒன்றுதானே. அப்போது நாங்கள் பட்டா இடத்தில்தான் அந்தச் சிலையை வைத்திருந்தோம். அப்போது நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய தொகுதியிலே சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் இந்தச் சிலையைத் திறந்துவிட வேண்டும் என்று நாங்கள் திட்டம் போட்டிருந்த நேரத்திலே சிலையைத் திறக்கக்கூடாது, ஏனென்றால் ஹைவேஸ் ரோட்டிலே வைத்திருக்கிறீர்கள் என்று வாதம் பண்ணி நெடுஞ்சாலைத் துறையினர் போலீஸ் ஸ்டேஷனிலே ரிப்போர்ட் செய்தார்கள். நாங்கள் எல்லாம் சென்றோம். இரண்டு நாட்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு எங்களை அலைய வைத்தார்கள். நாங்கள் போலீஸ்

[திரு. ஆர். முருகையா பாண்டியன்] [1994 ஏப்ரல் 25

ஸ்டேஷனிலே இருந்த காலத்திலே அந்தச் சிலையைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். அந்தச் சிலையை போலீஸ் ஸ்டேஷனிலே வைத்து இருந்தார்கள், நாங்கள் கேட்டோம். தரவேயில்லை. இதுவரையில் அந்தச் சிலையை வாங்க எங்களால் முடியவில்லை. அந்தச் சிலை எங்கே இருக்கிறது என்பதே தெரியவில்லை. அப்பேர்ப்பட்ட கவர்னர் ஆட்சி, காங்கிரஸ் ஆட்சிதான் என்பது எங்களுடைய எண்ணம். ஆனால் இப்போது இந்தச் சிலையை சிறையில் வைத்திருப்பது சரியா என்று ஒரு காங்கிரஸ் கட்சித் தலைவர் கேட்டிருக்கிறார். அது எந்த வகையில் சரியானது என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நாங்கள் வைக்க இருந்த அந்தச் சிலை எங்கே இருக்கிறது என்பதே தெரியவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கருத்தை அந்த பெரிய காங்கிரஸ் தலைவருக்கு சமர்ப்பணமாகச் செய்துகொள்வோம்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்த சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994- ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 - ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2-மாநில ஆயத்தீர்வைத் துறை-

(ஆ) கோரிக்கை எண் 15-காவல் துறை

(இ) கோரிக்கை எண் 16-தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-95-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். 1994-95-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மாண்புமிகு

வெளியேற்றப்பட்டிருக்கிறார். இரண்டாவது முறை வெளியேற்றப்பட்டபோது கூட நான் பெருந்தன்மையோடு விட்டு விட்டேன்.

இது மூன்றாவது முறையும் அவர் செய்கிற வரம்பு மீறிய செயல். எனவே, அவரை இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் பேரவையை விட்டு வெளியேற்ற உத்தரவிடுகிறேன்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்).

3. சிறப்புக் கவனஈர்ப்பு— தொடர்ச்சி

ஈரோட்டில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சிலையைக் காவல்துறையினர் கைப்பற்றியுள்ளது குறித்து- -தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எஸ்.டி.சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே பேசுகிறபொழுது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் களங்கம் விளைவிக்கின்ற வகையில் அவர் சிறைச்சாலைக்கே செல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்.

அரசியல் தலைவராக இருக்கிறவர்கள், சிறைச்சாலைக்கே செல்லவில்லை என்று சொல்வது. அவர் எத்தனை முறை எத்தனையோ போராட்டங்களில் கலந்து கொண்டு இன்று அல்ல, நீண்ட பல காலமாக அரசியலிலிருந்து, அவர் போராட்டங்களில் கலந்து சிறை சென்றிருக்கிறார் என்பதை விட்டுவிட்டு, அவர் இந்த அவைக்குத் தவறான கருத்து ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்.

மற்றொன்றைச் சொல்கிறபொழுது, கட் -அவுட் என்று சொல்கிறார். கட்-அவுட்டுக்கெல்லாம் அனுமதி வாங்கவில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கட்-அவுட்டுக்கெல்லாம் அனுமதி வாங்கினார்களா, வாங்கவில்லையா என்பதைப்பற்றிக் காவல் துறையினர் அவர்களுக்கு அந்தப் பர்மிஷனைத் தருகிறார்களா, தரவில்லையா, எந்தக் காரணத்தைக் கொண்டு வாங்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னொன்றை நான் செய்தித் தாளில் இன்றைக்குப் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், புரட்சித் தலைவர் ஜெயிலுக்குப் போகவில்லை என்று சொல்வதில் நீங்கள் குறுக்கிட்டது சரி. மற்றதற்கெல்லாம் முதலமைச்சரவர்கள் பதில் சொல்லுவார்கள். (குறுக்கீடு) அதற்கு முதலமைச்சரவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று, நேற்றையதினம் பத்திரிகையில் பார்த்த செய்தியை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக உங்களிடத்திலே நான் தந்திருக்கிறேன். அதை நான் இங்கே தெரிவிப்பது-அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தமிழகத்தில் வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புரட்சித் தலைவருக்காக என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* நூற்றுக்கணக்கான சிலைகளை எங்களுடைய தங்கத் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்களே தங்களுடைய திருக்கரங்களால் திறந்து வைத்திருக்கிறார்கள் என்பது நாட்டுக்குத் தெரியும்.

இன்று எப்படி இந்தச் சிலையின் அமைப்பு இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொண்டாக வேண்டும். ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும், ஒவ்வொரு தலைவருக்கும் ஒவ்வொரு கொள்கை இருக்கிறது. புரட்சித் தலைவருடைய திருவுருவச் சிலை, என்றைக்குமே நாம் வைக்கிறபொழுது இரண்டு விரலைக் காட்டுகிற சிலைதான் அமைப்போம்.

ஆனால் இந்தச் சிலையைப் பாருங்கள். கைச்சின்னத்திற்கு ஓட்டுக் கேட்பதைப்போல, அதுவும் மூப்பனார் அவர்களை வைத்துக்கொண்டு சிலையைத் திறக்கிறேன் என்று சொல்லுவது அவருடைய கொள்கைக்கும், இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும்தான் இருப்பதாகச் சொல்கிற எட்டப்பராக இருக்கிற, இங்கே இருக்கிற திருநாவுக்கரசு போன்றவர்களுடைய - எப்படித் துரோகம் செய்கிறார் நாட்டுக்கு என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொண்டாக வேண்டும். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே, அவர் கைச்சின்னம்- *(கூச்சல்-குழப்பம்)* கைச்சின்னம் இருக்கிறது, சொல்கிறார். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: தெரிந்து கொண்டாக வேண்டும். 1980-லே நம்முடைய மறைந்த தங்கத் தலைவர் புரட்சித் தலைவருடைய ஆட்சியை டிஸ்மிஸ் செய்த துரோகக் கும்பல் காங்கிரஸ்காரர், இன்றைக்குப் புரட்சித் தலைவருடைய திருவுருவச் சிலையை திறக்கிறார் என்று சொன்னால் இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதை நாட்டு மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994- ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 - ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2-மாநில ஆயத்தீர்வைத் துறை-

(ஆ) கோரிக்கை எண் 15-காவல் துறை

(இ) கோரிக்கை எண் 16-தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-95-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். 1994-95-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்ட மாநில ஆயத் தீர்வை துறை காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்திற்கான பதிலுரையின் தொடர்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்று குறிப்பிட்டாலும் பல நேரங்களில் இவைகள் மூன்றும் இருந்தும்கூட மனிதர்கள் நிம்மதியாக வாழ இயலாத சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. சமுதாயத்தில் பதட்டம், பொது அமைதி இன்மை, உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் இல்லாது இருக்கிற அச்ச உணர்வு ஆகியவை நிலவும்போது மக்களுடைய மூன்று அடிப்படைத் தேவைகள் கிடைத்திருந்தும்கூட வாழ்க்கையை சரிவர நடத்த இயலாமல் துன்பப்படுகின்ற சூழ்நிலைகள் உருவாகின்றன. அத்தகைய சமயங்களில் சமுதாயத்தில் அமைதி பாதுகாக்கப்பட மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உத்திரவாதம் ஆகியவற்றை அளிக்கும் மாபெரும் கடமையை காவல்துறை பொறுப்புடன் ஆற்றிவருகின்றது. அதேபோன்று இயற்கையின் பல்வேறு சீற்றங்களான தீ விபத்து, புயல், மழை, வெள்ளம், நில நடுக்கம், விபத்துக்கள் ஆகியவற்றினால் மக்கள் துன்புறும்போது அவர்களை இன்னல்களிலிருந்து காப்பாற்ற மனித குலத்திற்கு மாபெரும் உதவிபுரியும் கடமையினை தீயணைப்புத்துறை பொறுப்புடன் ஆற்றிவருகின்றது. அதுமட்டுமன்றி கள் மற்றும் மது உண்ணுதல் போன்ற தீய பழக்கங்களிலிருந்து மக்களை காத்து நின்று அவர்கள் நல்வாழ்வு வாழ உதவும் துறையாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை உதவி வருகின்றது. ஆக இந்த 3 துறைகளுமே சமுதாயத்தில் உரிய பாதுகாப்பினை ஏற்படுத்துவதிலும் அமைதியை உருவாக்குவதிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. இன்றைய சமுதாயத்தில் காவல் துறையானது உலகெங்கிலும் சோதனை மிகுந்த ஒரு காலகட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். மக்கள் தொகைப் பெருக்கம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மாறிவரும் அரசியல் தத்துவங்கள் மற்றும் பயங்கரவாத இயக்கங்களின் ஆதிக்கம் ஆகியவை காவல் துறையினருக்கு கடுமையான பிரச்சினைகளை உருவாக்கி இருப்பதையும் நாம் அனைவரும் அறிவோம். ஆகவே பிரச்சினைகள் மிகுந்துள்ள இந்தச் சூழ்நிலையில் காவல் துறையினர் சீரிய முறையில் பணியாற்ற வேண்டுமென்றால் அதற்கு அவர்கள் கடமை உணர்வு கொண்டவர்களாக மட்டும் இருந்தால் போதாது கண்டிப்பு மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும், வீரம் செறிந்தவர்களாக மட்டும் இருந்தால் போதாது, விவேகம்

முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்ட மாநில ஆயத் தீர்வை துறை காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்திற்கான பதிலுரையின் தொடர்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* *மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்று குறிப்பிட்டாலும் பல நேரங்களில் இவைகள் மூன்றும் இருந்தும்கூட மனிதர்கள் நிம்மதியாக வாழ இயலாத சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. சமுதாயத்தில் பதட்டம், பொது அமைதி இன்மை, உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் இல்லாது இருக்கிற அச்ச உணர்வு ஆகியவை நிலவும்போது மக்களுடைய மூன்று அடிப்படைத் தேவைகள் கிடைத்திருந்தும்கூட வாழ்க்கையை சரிவர நடத்த இயலாமல் துன்பப்படுகின்ற சூழ்நிலைகள் உருவாகின்றன. அத்தகைய சமயங்களில் சமுதாயத்தில் அமைதி பாதுகாக்கப்பட மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உத்திரவாதம் ஆகியவற்றை அளிக்கும் மாபெரும் கடமையை காவல்துறை பொறுப்புடன் ஆற்றிவருகின்றது. அதேபோன்று இயற்கையின் பல்வேறு சீற்றங்களான தீ விபத்து, புயல், மழை, வெள்ளம், நில நடுக்கம், விபத்துக்கள் ஆகியவற்றினால் மக்கள் துன்புறும்போது அவர்களை இன்னல்களிலிருந்து காப்பாற்ற மனித குலத்திற்கு மாபெரும் உதவிபுரியும் கடமையினை தீயணைப்புத்துறை பொறுப்புடன் ஆற்றிவருகின்றது. அதுமட்டுமன்றி கள் மற்றும் மது உண்ணுதல் போன்ற தீய பழக்கங்களிலிருந்து மக்களை காத்து நின்று அவர்கள் நல்வாழ்வு வாழ உதவும் துறையாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை உதவி வருகின்றது. ஆக இந்த 3 துறைகளுமே சமுதாயத்தில் உரிய பாதுகாப்பினை ஏற்படுத்துவதிலும் அமைதியை உருவாக்குவதிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. இன்றைய சமுதாயத்தில் காவல் துறையானது உலகெங்கிலும் சோதனை மிகுந்த ஒரு காலகட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். மக்கள் தொகைப் பெருக்கம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மாறிவரும் அரசியல் தத்துவங்கள் மற்றும் பயங்கரவாத இயக்கங்களின் ஆதிக்கம் ஆகியவை காவல் துறையினருக்கு கடுமையான பிரச்சினைகளை உருவாக்கி இருப்பதையும் நாம் அனைவரும் அறிவோம். ஆகவே பிரச்சினைகள் மிகுந்துள்ள இந்தச் சூழ்நிலையில் காவல் துறையினர் சீரிய முறையில் பணியாற்ற வேண்டுமென்றால் அதற்கு அவர்கள் கடமை உணர்வு கொண்டவர்களாக மட்டும் இருந்தால் போதாது கண்டிப்பு மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும், வீரம் செறிந்தவர்களாக மட்டும் இருந்தால் போதாது, விவேகம்

TRUTH ALONE TRIUMPHS

முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்ட மாநில ஆயத் தீர்வை துறை காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்திற்கான பதிலுரையின் தொடர்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்று குறிப்பிட்டாலும் பல நேரங்களில் இவைகள் மூன்றும் இருந்தும்கூட மனிதர்கள் நிம்மதியாக வாழ இயலாத சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. சமுதாயத்தில் பதட்டம், பொது அமைதி இன்மை, உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் இல்லாது இருக்கிற அச்ச உணர்வு ஆகியவை நிலவும்போது மக்களுடைய மூன்று அடிப்படைத் தேவைகள் கிடைத்திருந்தும்கூட வாழ்க்கையை சரிவர நடத்த இயலாமல் துன்பப்படுகின்ற சூழ்நிலைகள் உருவாகின்றன. அத்தகைய சமயங்களில் சமுதாயத்தில் அமைதி பாதுகாக்கப்பட மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உத்திரவாதம் ஆகியவற்றை அளிக்கும் மாபெரும் கடமையை காவல்துறை பொறுப்புடன் ஆற்றிவருகின்றது. அதேபோன்று இயற்கையின் பல்வேறு சீற்றங்களான தீ விபத்து, புயல், மழை, வெள்ளம், நில நடுக்கம், விபத்துக்கள் ஆகியவற்றினால் மக்கள் துன்புறும்போது அவர்களை இன்னல்களிலிருந்து காப்பாற்ற மனித குலத்திற்கு மாபெரும் உதவிபுரியும் கடமையினை தீயணைப்புத்துறை பொறுப்புடன் ஆற்றிவருகின்றது. அதுமட்டுமன்றி கள் மற்றும் மது உண்ணுதல் போன்ற தீய பழக்கங்களிலிருந்து மக்களை காத்து நின்று அவர்கள் நல்வாழ்வு வாழ உதவும் துறையாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை உதவி வருகின்றது. ஆக இந்த 3 துறைகளுமே சமுதாயத்தில் உரிய பாதுகாப்பினை ஏற்படுத்துவதிலும் அமைதியை உருவாக்குவதிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. இன்றைய சமுதாயத்தில் காவல் துறையானது உலகெங்கிலும் சோதனை மிகுந்த ஒரு காலகட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். மக்கள் தொகைப் பெருக்கம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மாறிவரும் அரசியல் தத்துவங்கள் மற்றும் பயங்கரவாத இயக்கங்களின் ஆதிக்கம் ஆகியவை காவல் துறையினருக்கு கடுமையான பிரச்சினைகளை உருவாக்கி இருப்பதையும் நாம் அனைவரும் அறிவோம். ஆகவே பிரச்சினைகள் மிகுந்துள்ள இந்தச் சூழ்நிலையில் காவல் துறையினர் சீரிய முறையில் பணியாற்ற வேண்டுமென்றால் அதற்கு அவர்கள் கடமை உணர்வு கொண்டவர்களாக மட்டும் இருந்தால் போதாது கண்டிப்பு மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும், வீரம் செறிந்தவர்களாக மட்டும் இருந்தால் போதாது, விவேகம்

மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும், மனித சமுதாயத்தின் தேவைகளை உணர்ந்தவர்களாக மட்டும் இருந்தால் போதாது, மனித நேயம் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும். சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப நினைக்கும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருபவர்களாக மட்டும் இருந்தால் போதாது, பல்வேறு தரப்புக்களைச் சார்ந்த மக்களுக்கு பாரபட்சம் இன்றி நீதியினை பெற்றுத்தர உதவும் கரங்களாக காவல்துறையினர் விளங்கவேண்டும் என்பதுதான் இன்றைய மக்களின் எதிர்பார்ப்பு, காலத்தின் கட்டளை என்று நான் மிக உறுதியாக நம்புகிறேன். மக்களின் பேராதரவோடு தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பினை கடந்த 1991- ஆம் ஆண்டு ஏற்ற எங்களது அரசு முக்கியத்துவம் வாய்ந்த இந்த மூன்று துறைகளையும் மிகச் செம்மையான முறையில் செயல்படுத்தி வந்திருப்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும்.

முற்பகல் 11-40

காவல் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை, தீ அணைப்புத் துறை ஆகிய மூன்று துறைகளிலுமே மக்களின் தேவைகள் என்ன, தமிழ்நாட்டின் நலனுக்கு உகந்த திட்டங்கள் யாவை என்பதை நன்குணர்ந்த எங்களது அரசு முதற்கண் நாட்டின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் சவால் விடுத்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் பயங்கரவாத படுபாதக செயல்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கியது, ஒடுக்கியது. (மேசையைத் தட்டும் ஒலி).

மக்களுடைய அன்றாட வாழ்க்கையும், அடிப்படை முன்னேற்றத் திட்டங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த அன்றைய சூழ்நிலையில் சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டுவது எங்களது அரசின் தலையாய கடமையாக விளங்கியதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் தற்போது மறந்திருந்தாலும், தமிழகம் அதனை இன்னும் மறக்கவில்லை. எந்த தமிழகக் காவல் துறையின் புகழுக்கு களங்கம் விளைந்ததோ அந்த தமிழகக் காவல் துறையின் புகழையும், பெருமையையும் மீண்டும் நிலைநாட்டவேண்டும் என்ற சபதத்தினை நாங்கள் ஒரு புதிய உறுதியுடன் மேற்கொண்டோம். தமிழகத்தில் பல்வேறு பாதக செயல்களை பல ஆண்டுகளாக அடுக்கடுக்காக புரிந்து இறுதியாக நம் அனைவரின் மரியாதைக்கும் உரிய திரு.ராஜீவ் காந்தி அவர்களையும் நம் புனித மண்ணில் படுகொலை செய்து கொடுஞ்செயலை புரிந்த தீய சக்திகளை முழுவதுமாகவும் தமிழகத்திலிருந்து விரட்டி அடித்து (மேசையைத் தட்டும் ஒலி) இழந்த தனது பெயரையும், புகழையும் அமைதிப் பூங்கா என்ற பெருமையையும் பெற தமிழகக் காவல் துறை புரிந்த பணிகளை உலகமே அறியும். மிகவும் பழமையான முறைகளையும், கருவிகளையும் வைத்து தனது செயல்பாடுகளை அதுவரை நடத்திவந்த தமிழகக்

காவல் துறையையே முற்றிலுமாக நவீனப் படுத்தும் பணியினை எங்களது அரசு மேற்கொண்டு அதில் சிறந்த வெற்றியையும் கண்டுள்ளது.

மக்களின் உணர்வுகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்றாற்போல் நடக்கும் எங்களது அரசு ஏழைக் குடும்பங்களின் நிம்மதியினை நிலைகுலையச் செய்யும் ஆரோக்கியமற்ற பணியினைச் செய்து கொண்டிருந்த மலிவு விலை மதுவின் விற்பனையை முற்றிலுமாக ஒழித்து தமிழகத்தின் ஏழைத்தாய்மார்களின் நெஞ்சார்ந்த நன்றியையும் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

முழுமையான மதுவிலக்கே எங்களது கொள்கை என்பதை ஏற்றுக் கொண்டபோதிலும், அத்தகைய கொள்கையை அமல்படுத்துவதனால் ஏற்படும் நிதி இழப்பினை ஈடு செய்ய மத்திய அரசு எந்தவிதமான உதவியையும் செய்ய முன் வராத காரணத்தினால் எங்களது அரசு ஏழைகளின் வாழ்க்கையில் துன்பத்தை விளைவிக்கும் மலிவு விலை மது விற்பனையை, முதலில் ரத்து செய்து அதன் பின்னர் படிப்படியாக முழுமையான மது விலக்கை அடைய உரிய நடவடிக்கைகளை எடுப்பதே சிறந்தது என்ற நடைமுறைத் தத்துவத்தை செயல்படுத்தி வருவதை பிற மாநிலங்கள் கூட பின்பற்ற முடிவு செய்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வையைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு இந்தத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் நான் குறிப்பிட்டதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுப் படுத்த விரும்புகிறேன்.

மக்களை மதுவின் பிடியில் இருந்து மீட்கவேண்டும் என்ற கொள்கைக்கு ஊறு நேரா வண்ணம் ஆயத் தீர்வை வருவாயினை அதிகரிப்பதுதான் எங்களது அரசின் குறிக்கோள் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட இந்த நடைமுறைத் தத்துவத்தின் அடிப்படையில்தான் மது விலக்குக் கொள்கையை தன்னுடைய ஆட்சியில் அமல்படுத்தி வந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

மக்களைப் பல்வேறு அபாயங்களிலிருந்து காத்து நிற்கும் அரிய பணியினை ஆற்றி வருகின்ற தீயணைப்புத் துறையின் விரைந்த முன்னேற்றத்திற்காக எங்களது அரசு இதுவரை அளித்துள்ள நான்கு நிதி நிலை அறிக்கைகளிலும் இந்தத் துறைக்கு ஒவ்வொரு முறையும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை வழங்கி இருக்கின்றோம். அதன் மூலமாக தீயணைப்புத் துறை வீரர்கள் தங்களுடைய அரும்பணியினை

செவ்வனே ஆற்றத் தேவையான வசதிகளை அவர்களுக்கு நல்ல முறையில் ஏற்படுத்திக்கொடுத்து இருக்கின்றோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

முக்கியத்துவம் வாய்ந்த இந்த மூன்று துறைகளின் செயல்பாடுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்துக்களை கடந்த 2 நாட்களாக நடைபெற்ற விவாதத்தின்போது எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சமுதாயத்தின் நலன் காக்கும் துறைகளாக இந்த மூன்று துறைகளும் விளங்கி வருவதால், கருத்துக்கள் எந்தக் கட்சியினரால் கூறப்பட்டிருந்தாலும், கட்சி வேறுபாடின்றி அவைகள் எங்களது அரசினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு குறைகளை களைய வேண்டிய இடங்களில், அவைகளைக் களைந்தும், நிறைகள் இருப்பின் அவைகளை நிலைநிறுத்தியும், உரிய நடவடிக்கைகளை எங்களது அரசு தவறாது எடுக்கும் என்று தெரிவித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை தொடர்பாக என்னுடைய பதில் உரையை இந்த மாமன்றத்தில் முதற்கண் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் மதுவிலக்கினை அமல்படுத்துவதில் இந்த அரசு தீவிரம் காட்டாதது போன்ற சில குற்றச்சாட்டுகளை எடுத்துரைத்தார்கள். தமிழகத்தில் எங்கோ ஒரு மூலையில் நடைபெறுகின்ற ஒருசில சிறிய நிகழ்ச்சிகளைப் பெரிதுப்படுத்தி தங்களுக்கே உரித்தான வார்த்தை ஜாலங்களால் இதுதான் மதுவிலக்கு அமல்படுத்தும் முறையா என்று சிலர் இல்லாத ஒன்றை இருப்பதாக வர்ணித்துக் காட்டினார்கள். நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்பு முதன் முறையாக கையெழுத்து இட்டது, அதுவரை தமிழகத்தை உலுக்கிக் கொண்டிருந்த மலிவு விலை மது அரக்கனை (மேசையைத் தட்டும் ஒலி) ஒழித்துக்கட்டத்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழகத்து தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். ஏழை எளிய மக்களின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும், பாரம்பரியம் மிக்க தமிழ்நாட்டின் நன்னெறிகள் காப்பாற்றப்பட வேண்டுமென்ற கொள்கைகளின்மீது நிலையான ஈடுபாட்டைக் கொண்டுள்ள எங்கள் அரசு மலிவு விலை மது உற்பத்தியையும், விற்பனையையும் ஒரே நாளில் ரத்து செய்து தமிழகத்து ஏழைத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) வயிற்றில் பால் வார்த்தது. மலிவு விலை மதுவை ஒழித்ததால் தமிழக அரசுக்கு எத்தனைக் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், முழுமையான

மதுவிலக்கே இந்த அரசின் முழுமுதற் குறிக்கோள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த லட்சியத்தை அடைவதற்காக, படிப்படியாக பல நடவடிக்கைகளை எங்கள் அரசு எடுத்து வருகின்றது. இன்று எங்களைக் குறை கூறுபவர்கள் மதுவின் வாசனையை அறியாத ஒரு சமுதாய தலைமுறைக்கு போதை தரும் கள்ளையும், மயக்கம் தரும் மதுவையும் அறிமுகப்படுத்தி, தமிழ்நாட்டின் இளைய சமுதாயத்தினரின் வளர்ச்சிக்கு ஊறு விளைவித்த ஒரு காலகட்டத்தை மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் விபத்து காரணமாக ஆட்சிக்கு வந்தவர்கள், 1971-ல் செய்த தவறுக்கு பிராயச்சித்தம் தேடிக்கொள்ளாமல் 1989-ல் மீண்டும் அதே தவறை செய்த அவலமான சரித்திர நிகழ்ச்சியை (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்து மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். எங்கள் ஆட்சியில் அத்தகைய ஒரு நிலை இல்லை.

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஒன்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் ஒருவரின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. மாநிலம் முழுவதும் 7 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஒரு காவல் துறை கண்காணிப்பாளரின்கீழ் செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளர் மதுவிலக்கு அமலாக்கத்தை மேற்பார்வையிட்டு வருகின்றார். மாநிலம் முழுவதும் 117 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அதற்குத் தேவையான அலுவலர்கள், காவலர்கள், வாகனங்கள், தொலைதொடர்புச் சாதனங்கள் ஆகியவற்றுடன் செயல்பட்டு வருகின்றன. மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்துவதில் முந்தைய ஆண்டை விட 1993-94-ஆம் ஆண்டில் மிகச் சிறப்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, 1993-94 ஆம் ஆண்டு அதிகமான மதுவிலக்கு வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 5 லட்சத்து 84 ஆயிரத்து 148 மதுவிலக்கு வழக்குகள் தொடுக்கப்பட்டன. இது முந்தைய ஆண்டை விட 69 ஆயிரத்து 426 வழக்குகள் அதிகமாகும். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மதுவிலக்கு காவல் பிரிவுகளும், சட்டம் - ஒழுங்கு காவல் பிரிவுகளும் சேர்ந்து நடத்திய அதிரடி நடவடிக்கைகள் காரணமாக 3.52 கோடி லிட்டர் ஊறலையும், 57.11 லட்சம் லிட்டர் கள்ளச்சாராயத்தையும், 3.39 லட்சம் லிட்டர் கள்ளையும், 27.01 லட்சம் சாராய பாக்கெட்டுகளையும் கைப்பற்றி அழித்து உள்ளனர். இவை மட்டுமின்றி, பெரும் அளவிற்கு எரிசாராயமும், போலி மது பாட்டில்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

முற்பகல் 11-.50

மதுவிலக்கு குற்றங்களில் ஈடுபட்டு சமுதாயத்தில் ஒழுக்கக் கேட்டினை உருவாக்குபவர்கள்மீது எங்கள் அரசு கடுமையான

நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைச் சில புள்ளிவிவரங்களுடன் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். 1982-ஆம் ஆண்டு தடுப்புக் காவல் சட்டம் அமலுக்கு வந்ததிலிருந்து 1991-ஆம் ஆண்டு முடிய கிட்டத்தட்ட 10 ஆண்டு காலகட்டத்தில் இந்தச் சட்டத்தின்கீழ் 1337 மதுவிலக்குக் குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் 1992-93-ஆம் நிதி ஆண்டில் மட்டும் 1207 மது விலக்குக் குற்றவாளிகள் (மேசையைத் தட்டும் ஒலி) சிறையில் அடைக்கப்பட்டனர். 1993-94-ஆம் ஆண்டில் இப்பணி மேலும் தீவிரமாக்கப்பட்டு, 1400 மது விலக்குக் குற்றவாளிகள் (மேசையைத் தட்டும் ஒலி) கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். 1993 ஆம் ஆண்டில்தான் முதன் முதலில் வாகனங்களைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தினை மது விலக்குப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கும், காவல் துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் இந்த அரசு வழங்கியது. அதன் விளைவாக 1993-94-ஆம் ஆண்டு மட்டும் 419 வாகனங்கள் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு, அரசுடமை ஆக்கப்பட்டுள்ளன. நான் ஏற்கனவே என்னுடைய உரையில் குறிப்பிட்டுள்ளவாறு பூரண மது விலக்குக் கொள்கையை அமல்படுத்துவதும், மாநில ஆயத் தீர்வையை அதிகரிக்கச் செய்வதும் இந்த அரசின் கடமைகளில் மிக முக்கியமான ஒன்றாக விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 32 சர்க்கரை ஆலைகளில் உபரி உற்பத்திப் பொருளாகக் கிடைக்கும் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றின் மீதான கட்டுப்பாட்டினை கடந்த 1993-ஆம் ஆண்டு நீக்கியதைத் தொடர்ந்து, தற்போது சர்க்கரை ஆலைகள் தாங்கள் உற்பத்தி செய்யும் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை முறையான உரிமம் பெற்று எவருக்கும் விற்பனை செய்யலாம். அதன்மீதான விலைக் கட்டுப்பாடு முற்றிலும் நீக்கப்பட்டுள்ளதால், தற்போது நாடு முழுவதும் இதன் விலை ஏற்றமடைந்துள்ளதைத் தமிழக அரசு கவனமாகப் பரிசீலனை செய்து வருகிறது. இதைத் தொடர்ந்து இந்த விலையேற்றத்தினால் தமிழ்நாட்டில் கருப்பஞ்சாற்றுக் கசண்டினைப் பல்வேறு தொழில்களில் உபயோகப்படுத்துவோர் பாதிப்புக்கு உள்ளாகக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் எங்கள் அரசு கருப்பஞ்சாற்று விற்பனை, பயன்பாடு, ஏற்றுமதி, இறக்குமதி பற்றி கடந்த 1993-ஆம் ஆண்டே விரிவானதோர் நெறிமுறைகளை அறிவித்துள்ளது. இதன்மூலமாக அரசுக்கு ஆயத் தீர்வை வருவாய் நிச்சயமாக அதிகரிக்கும் என்று நான் மிக உறுதியாக நம்புகிறேன்.

சென்ற 1993 ஆயத் தீர்வை ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள 14 வடிசாலைகளினால் சாராவி தயாரிப்பதற்காக 4,13,296 மெட்ரிக்

டன் அளவுள்ள கருப்பஞ்சாற்றுக் கசண்டு பயன்படுத்தப்பட்டு, மொத்தம் 9.18 கோடி லிட்டர் சாராவி உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்படும் சாராவியானது ஐ.எம்.எஃப்.எஸ். என்று இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள், பல்வேறு ரசாயனப் பொருள்கள் ஆகியவை தயாரிப்பதற்கும் மற்றும் ஆய்வுக் கூடங்களில் மூலப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த முறையில் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் தெளிந்த சாராவி முறையான வகையில் பயன்படுத்தப்படாமல் கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு வெகுவாகப் பயன்படுகிறது என்பதை அறிந்த தமிழக அரசு 1991- ஆம் ஆண்டு மார்ச் மாதமே தெளிந்த சாராவி வழங்குவதை வெகு தீவிரமாகக் கட்டுப்படுத்தி, தேவைப் படுவோருக்கு இயல்பு மாற்றப்பட்ட சாராவி வழங்க முடிவு செய்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இம்முடிவினால் பாதிக்கப்பட்ட 19 தெளிந்த சாராவி உரிமைதாரர்கள் அரசின் ஆணையை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். சென்னை உயர்நீதி மன்றம் கடந்த 1993-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அந்த அரசாணையை ரத்து செய்தது. அதை அடுத்து தமிழக அரசு மீண்டும் மேல் முறையீடு வழக்கு ஒன்றினைத் தொடுத்தது. அதில் சென்னை உயர்நீதி மன்றம் அரசாணை ரத்து செய்யப்பட்டதை விலக்கிக் கொண்டு, தெளிந்த சாராவி உரிமைதாரர்களுக்கு, அவர்கள் இயல்பு மாற்றப்பட்ட சாராவி வழங்கக் கோரி அரசுக்கு விண்ணப்பிக்கும்வரை அவர்களுக்குத் தெளிந்த சாராவி வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது. அதனையடுத்து அவர்களுக்குத் தெளிந்த சாராவி வழங்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் அரசினால் வழங்கப்படும் தெளிந்த சாராவி தீய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதை முற்றிலும் தடுக்கும் வகையில் மிகவும் கடுமையான விதிகளைக் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆக, மதுவிலக்குச் செயலாக்கம் மற்றும் மாநில ஆயத்தீர்வை செயல்பாடு ஆகிய இவ்விரண்டிலும் எங்கள் அரசின் நிலையான கொள்கை, உறுதியான செயல்பாடு ஆகியவற்றால் தமிழ்நாடு இந்த இரண்டு துறைகளிலும் முற்போக்கான நிலையைத் தொடர்ந்து எய்தி வருகின்றது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொண்டு, மாநில ஆயத்தீர்வை மீதான வெட்டுத் தீர்மானங்களுக்கு எனது பதிலை அளிக்க விரும்புகின்றேன்.

முற்பகல் 11-55

மதுவிலக்கு மற்றும் மாநில ஆயத்தீர்வை ஆகிய இரண்டு பொருள்கள் குறித்தும் அரசு கொண்டுள்ள கொள்கை மற்றும் இத்துறையின் செயல்பாடுகள், பணிகள் ஆகியவை குறித்து மாண்புமிகு

சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் மொத்தம் 70 வெட்டுத் தீர்மானங்களை அரசிடமிருந்து விளக்கங்களைக் கோரிப் பெறும் வகையில் கொடுத்துள்ளார்கள். அவைகளில் சிலவற்றின் மீதான என்னுடைய பதிலை இந்த மாமன்றத்தின் பரிசீலனைக்கு வைக்க விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில் மது விலக்கு அமலாக்கப்படும் விதத்தைக் குறித்தும், கள்ளச்சாராய விற்பனையை ஒழிப்பது தீவிரப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தைக் குறித்தும், மதுக்கடைகளுக்குள்ளே பார் நடத்துவது தடை செய்யப்பட்டபோதிலும் தொடர்ந்து இயங்குவது குறித்தும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கடத்துபவர்கள் மற்றும் விற்பவர்கள் ஆகியோர் மீது அரசு மிகவும் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகின்றது. 1993-ஆம் ஆண்டு முழுவதும் மதுவிலக்குக் குற்றங்களுக்காக 5,42,404 பேர் கைது செய்யப்பட்டனர். நடப்பு ஆண்டான 1994 மார்ச் இறுதி வரையிலேயே 1,49,870 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற தகவல், எந்த அளவுக்கு இந்த அரசு உறுதியோடு (மேசையைத் தட்டும் ஒலி) மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்தி வருகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 1993 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலேயே மதுக்கடைகளில் பார் வைத்து நடத்துவது முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டது. அதற்குப் பிறகு சட்டத்திற்குப் புறம்பாக பார்கள் நடத்துபவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுகின்றது. அத்தகைய முறைகேடுகளில் ஈடுபடும் மதுபான சில்லறை விற்பனைக்காரர்களின் உரிமங்களும் ரத்து செய்யப்படுகின்றன. இவ்வாறு சட்டத்திற்குப் புறம்பாக பார் நடத்தியதற்காக 1993 ஆம் ஆண்டு 2,836 வழக்குகளும் இவ்வாண்டு மார்ச் மாத இறுதி வரை 244 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடும் தொழில் அதிகரித்து வருவதாகக் கூறி, 3 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடும் தொழில் அதிகரித்து வருகிறது என்பது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசு எடுத்துவரும் கடுமையான நடவடிக்கைகளால் 1990 ஆம் ஆண்டு இருந்ததை விட தற்போது கஞ்சா பயிரிடுவது தமிழ்நாட்டில் வெகுவாகக் குறைந்துள்ளது. 1993-ஆம் ஆண்டில் மட்டும் 28 மலைப் பகுதிகளில் 118.7 ஏக்கர் நிலப்பரப்பில் இருந்த 34.7 கோடி ரூபாய் மதிப்புடைய 170 டன் உலர் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டு,

அழிக்கப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற செயல்களின் மூலமாக நமது இறுதி லட்சியமான பூரண மதுவிலக்கை நாம் நிச்சயமாக அடையமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு என்பதைத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை ஆகியவற்றிற்கான வெட்டுத் தீர்மானங்கள் மீதான என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கின்றேன்.

7. அறிவிப்பு

கள்ளச்சாராயம் இல்லாத இரண்டு தொகுதிகளின் உறுப்பினர்களுக்கு பேரவையின் சார்பில் பாராட்டு விழா நடத்தி கேடயம் வழங்க இருப்பது குறித்து

நண்பகல் *12-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறு செய்தி ஒன்றைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரு செய்தியைத் தெரிவித்து இருந்தார்கள். அது குறித்துப் பதிலுரையின் போது, விளக்கம் ஏன் தெரிவிக்கவில்லை என்பதுபோல சிலர் எண்ணக்கூடும். எனவே, நானே பேரவையின் சார்பில், அந்தச் செய்தியைத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதி, அந்தச் செய்தியைப் பேரவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மது விலக்குப் பிரச்சாரக் குழுவினர் ஒரு முடிவு எடுத்து, கள்ளச் சாராயமே இல்லாத சட்டமன்றத் தொகுதிகளைக் கண்டெடுத்து, அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரைப் பாராட்டுவதன் மூலம், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தப் பணியில் ஈடுபடலாம் என்கிற வகையில் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களைப் பாராட்டி கேடயம் வழங்க வேண்டும் என்று ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். அந்த முடிவின்படி, மாநிலத்தின் எல்லா சட்டமன்றத் தொகுதிகளிலேயும் விரிவாக ஆய்வு செய்து பார்த்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்து இருக்கிற தர்மபுரி மாவட்ட பர்கூர் தொகுதி (மேசையைத் தட்டும் ஒலி) முழுமையாக கள்ளச் சாராயமே இல்லை என்கிற அளவுக்கு ஒரு சாதனை படைத்து இருக்கிறது என்கிற குறிப்பை கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்து இருந்தார்கள்.

அதேபோல், கோவை மாவட்டம் வால்பாறை சட்டமன்றத் தொகுதியும் முழுமையாக கள்ளச் சாராயத்தை ஒழித்த தொகுதி என்று கண்டெடுக்கப்பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில், அந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கேடயம் வழங்குவது என்கிற அந்தக் குழுவின் பரிந்துரையை நிறைவேற்றுகிற போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியே அதிலே தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கே கேடயம் வழங்க வேண்டி இருக்கிற பாராட்டத்தக்க சூழ்நிலை இருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் அதனைத் தெரிவிக்கவில்லை என்று கருதுகிறேன். அந்த வகையில் பேரவையின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்காவிட்டாலும், இந்தச் செய்தியைத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேரவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலேயும், பேரவையின் சார்பிலேயும், என் சார்பிலேயும் பாராட்டைத் தெரிவிப்பது (மேசையைத் தட்டும் ஒலி) பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்தத் தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிற பல்வேறு நலத் திட்டப் பணிகளை விரிவாகவும், அந்தப் பகுதி மக்கள் முழுமையாகப் பயன்படுகிற வகையிலேயும் செய்து வந்திருக்கிற காரணத்தாலே, அதன் அடிப்படையில் வேறு சில தொழில்கள் அந்த மக்களுக்குக் கிடைக்கிற காரணத்தால், அந்த உணர்வுள்ள மக்கள்கூட இன்றைக்கு மனம் திருந்தி, முழுமையாக கள்ளச் சாராயம் தங்கள் தொகுதியில் இல்லாத சூழ்நிலையை உருவாக்கக்கூடிய ஒரு நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். எனவே, அந்தக் குழு எடுத்த முடிவின்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நாம் கேடயம் வழங்கவேண்டி இருக்கிற காரணத்தால், இந்தத்துறையினர் வழங்காமல், பேரவையின் சார்பிலே பேரவை சம்பந்தப்பட்ட சீரிய நிகழ்ச்சி ஒன்றில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்தப் பாராட்டுக் கேடயம் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, கோவை மாவட்டம் வால்பாறை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஸ்ரீதரன் அவர்களுக்கும் அந்தக் கேடயம் அந்த விழாவில் வழங்கப்படும் என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியைப் பேரவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

கோரிக்கை எண்2 - மாநில ஆயத்தீர்வைத் துறை கோரிக்கை எண்15 - காவல் துறை. கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்	தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை அளித்த எண்ணற்ற வரப்பிரசாதங்களில்

நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று என்னும் ஐம்பெரும் பஞ்ச பூதங்கள் முக்கியமானவை. அவை இன்றி அணுவும் அசையாது; உலகமும் உயிர் பெறாது. அந்த அளவிற்கு அருமையும் பெருமையும் தனித் தன்மையும் உள்ள பஞ்ச பூதங்கள் ஆக்கத்திற்கு ஆதாரமாக இருப்பது போல, சிற்சில சமயங்களில் தமது நிலை மாறி, சீற்றத்தால் சீறி எழுந்து புயலாக பூகம்பமாக வெள்ளமாக, மின்னுகின்ற இடியாக, இன்னும் எத்தனையோ வடிவங்களில் பேராபத்துக்களையும், பெரும் சேதங்களையும் விளைவிக்கின்றன. அத்தகைய இயற்கைச் சீற்றங்களின் ஒரு கூறுதான் தீ விபத்து. தீ விபத்துக்கள் வருமுன் காப்பதும், வந்த பின் விரைந்து அணைத்து, உயிர் சேதங்களையும் பொருள் சேதங்களையும் தடுப்பதும் தவிர்ப்பதும் தீயணைப்புத் துறையின் தலையாய பணி ஆகும். மற்ற இயற்கைச் சீற்றங்களான வெள்ளம், புயல், நிலச்சரிவு, மற்றும் வெடி விபத்துகள், ரெயில் விபத்துகள் போன்ற பெரும் விபத்துகளில் சிக்கியவர்களுக்கு அவசர நிவாரணம் அளித்தலும் இத்துறையின் பணியாகும். இது மட்டுமின்றி தேர்தல்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள், கலவரங்கள், முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகிய பணிகளில் காவல் துறையினருக்கும், தொற்று நோய் பரவும் காலங்களில் பொதுச் சுகாதாரத் துறையினருக்கும் இத்துறை உதவுகிறது. நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடியாக மருத்துவச் சிகிச்சைக்கு கொண்டு செல்வதற்காக இத்துறையில் நோயாளர் ஊர்திகள்—'ஆம்புலென்சஸ்' பயன்படுத்தப் பட்டு வருகின்றன. பொது இடங்களில் தீ தடுப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனை வழங்குவது, சட்ட விதிகளுக்கு உட்பட்டு, பெரிய கட்டிடங்களிலும் அடுக்கு மாடிக் கட்டிடங்களிலும் தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதும் இத்துறையின் பணியாகும்.

பிற்பகல் 12-05

26 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட தீயணைப்புத் துறை படிப்படியாக வளர்ந்து தனது மக்கள் சேவையால் தனக்கென்று ஒரு தனியிடத்தை இன்று பெற்றுள்ளது. குறிப்பாக எங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு தீயணைப்புத் துறையில் முக்கியமான வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன என்றால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலம் முழுவதும் *222* தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. இத்துறையில் மொத்தம் *6,162* பேர் பணிபுரிந்து வருகிறார்கள். *656* ஊர்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களோடு நமது தீயணைப்புத் துறையை ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் நாம் எந்த அளவுக்கு இத்துறையில் வளர்ச்சி அடைந்துள்ளோம் என்பது நமக்கு புலனாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கேரளாவில் 55 தீயணைப்பு நிலையங்களும், கர்நாடகாவில் 56 தீயணைப்பு நிலையங்களும், ஆந்திராவில் 219 தீயணைப்பு நிலையங்களும்தான் உள்ளன. ஆந்திராவில் 4,366 பேர் மட்டும் தான் இத்துறையில் பணிபுரிகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் 6,162 பேர் பணிபுரிகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஐப்பான் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட 'இசூசு' சுழல் மேசை ஏணி ஊர்தி, ஸ்நார்க்கல் கடந்த இரண்டரை ஆண்டுகளாக தமிழ் நாட்டில் செயல்பட்டு வருகின்றது என்பதை இந்தநேரத்தில் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நவீன ஊர்தியின் உதவியுடன் பல மாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துகளையும், மீட்புப் பணிகளையும் தீயணைப்புத் துறை எளிதாக சமாளித்து வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே மிகப்பெரிய மாநிலமான உத்திரபிரதேசத்தில் 141 தீயணைப்பு நிலையங்கள் தான் உள்ளன. ஆனால் தமிழ் நாட்டில் 222 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) பீகார் மாநிலத்தில் 42 தீயணைப்பு நிலையங்கள்தான் உள்ளன. அங்கே 1,018 பேர்தான் பணிபுரிகிறார்கள். எண்ணிக்கையிலும், செயல்பாட்டிலும், திறமையிலும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை ஒரு அசுர வளர்ச்சியைக் கண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பொருட்காட்சி, திருவிழா நடத்தும் இடங்களில் போதுமான நீர் கிடைக்காத சமயங்களில் அக்குறையை நீக்க 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு சுருங்கும் நீர்த்தொட்டியை வாங்கி இருக்கிறோம். தீ விபத்தின்போது புகையை அகற்றி தீயின் மூலத்தை அறிய புகைநீக்கி கருவி 'ஸ்மோக் எக்சாஸ்டர்ஸ் அண்ட் ஏர் ப்ளோயர்' என்ற நவீன கருவியையும் வாங்கி இருக்கிறோம். எண்ணெய் மற்றும் இரசாயனப் பொருட்களால் ஏற்படும் தீ விபத்துகளைச் சமாளிக்க 'புளோட்டா பம்பு', 'சர்ச் லைட்', விசை ரம்பம், மின் ஆக்கிச் சாதனம், நச்சு வாயு கண்டுபிடிப்பான், அலுமினிய காப்பு அங்கி போன்றவற்றையும் எங்கள் அரசு பதவியேற்றவுடன் இத்துறைக்கு வாங்கிக் கொடுத்துள்ளோம். சென்ற ஆண்டு பல நிகழ்ச்சிகளில் மெய் வருத்தம் பாராது, அவர்களது உயிரையும் பாராது இத்துறையைச் சேர்ந்தவர்கள் ஆற்றிய பணிகள் சிலவற்றை இங்கே எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

7-1-1993 அன்று சென்னை காயிதே மில்லத் கலைக் கல்லூரியில் நடந்த புத்தகக் கண்காட்சியில் தீ விபத்து ஏற்பட்டது. தீ எல்லா புறங்களிலும் பரவி கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. 6 தீயணைப்பு நிலையங்களிலிருந்து ஊர்திகளும் பணியாளர்களும்

தீயணைப்புப் பணியை மேற்கொண்டு, 7 மணி நேரம் போராடி, தீயை முற்றிலுமாக அணைத்து, 15 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களை தீயின் அழிவிலிருந்து காப்பாற்றினார்கள்.

15-5-1993 அன்று தூத்துக்குடி ஸ்பின்னிங் மில்லில் ஏற்பட்ட தீ விபத்தை விரைந்து சென்று தடுத்ததால் 30 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சு பேல்கள் காப்பாற்றப்பட்டன. ஜெனரேட்டரும், டிரான்ஸ்பார்மரும் தீயில் சிக்காமல் தடுக்கப்பட்டன.

பிற்பகல் 12-10

8-6-1993 அன்று தூத்துக்குடி துறைமுகத்தில் திறந்தவெளி பண்டகச் சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் இத்துறையின் பணியாளர்கள் ஆற்றிய சிறப்பான சேவையால், 55 லட்சம் மதிப்புடைய பொருட்கள் காப்பாற்றப்பட்டன. 25.8.1993 அன்று புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வெங்கடேஸ்வரா சால்வன்ட் எலக்ட்ரானிக்ஸில் ஏற்பட்ட தீ விபத்தை தீயணைப்புக் குழுவினர் உறுதியுடன் சென்று, பல மணி நேரம் போராடி முற்றிலுமாக தீயை அணைத்து, 1 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களைக் காப்பாற்றி உள்ளார்கள்.

8-8-1993 அன்று சென்னை ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்தில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் 148 தீயணைப்புத் துறையினர் பணியில் ஈடுபட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 2 பேர்களைத் தக்க தருணத்தில் காப்பாற்றி, மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். இடிபாடுகளுக்கு இடையே சிக்கியிருந்து 15 சடலங்களையும் உடனே மீட்டுக் கொடுத்ததோடு, வெடி விபத்து தொடர்பான புலன் ஆய்வுக்குரிய முக்கியத் தடயங்களை காவல்துறையினருக்கு இவர்கள் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டத்தில் உள்ள ராஜபுரம், தாமரைக்குளம், கரிக்காரன்புதூர், ஒட்டணைபுதூர் போன்ற பகுதிகளில் 1993 நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தின்போது இத்துறையினர் வெள்ளத்துடன் போராடி, ஊர் மக்களை மீட்டு பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

நீலகிரி மாவட்டம், மரப்பாலம் என்னும் இடத்தில், 11-11-1993 அன்று ஏற்பட்ட மிகப் பெரிய நிலச்சரிவைத் தொடர்ந்து தீயணைப்புத் துறை அலுவலர்களும், பணியாளர்களும், மீட்புப் பணிகளை மேற்கொண்டு அரும்பணி ஆற்றினார்கள். இதைப்போல, பல்வேறு இடங்களில் பல்வேறு தருணங்களில் இவர்கள் சிறப்புடன் ஆற்றியுள்ள பணிகளை இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரை, 68 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ளார்கள். அரசின் கொள்கை பற்றியும், புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைப்பது பற்றியும், தீயணைப்பு நிறுவனங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல் குறித்தும், தீயணைப்புத் துறையை நவீனப்படுத்தும் திட்டம் குறித்தும், தீயணைப்புத் துறையில் பணிபுரிபவர்கள் நலன்களைப் பற்றியும், அரசிடமிருந்து விளக்கங்களைக் கோரி இந்த வெட்டுத் தீர்மானங்கள் அமைந்துள்ளன. இவ்வாறு கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுத்தீர்மானங்களில் நேரத்தின் அருமை கருதி, முக்கியமான சிலவற்றிற்கு மட்டும் என்னுடைய பதிலை மாண்புமிகு உறுப்பினர்களின் பரிசீலனைக்கு வைக்க விழைகிறேன்.

10 சட்டமன்ற உறுப்பினர்கள் கொள்கை குறித்து விவாதிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். பேரவையின் முன்பு வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ்நாடு தீயணைப்புத்துறை பற்றிய விவரங்களும் விளக்கங்களும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றையே தீயணைப்புத் துறை கொள்கை பற்றிய என்னுடைய விளக்கங்களாக எடுத்துக் கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பு நடேசன் உள்பட 9 உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் புதிய தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென வெட்டுத் தீர்மானங்கள் வாயிலாகக் கேட்டுள்ளனர். புதிதாக ஒரு இடத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்றால், அந்த ஊரின் மக்கள் தொகை, அருகிலுள்ள தீயணைப்பு நிலையங்கள், தீ விபத்து அபாய புள்ளிவிவரங்கள், அபாயம் ஏற்பட சாத்தியக்கூறுகள் போன்றவைகளைப் பரிசீலித்து பின்புதான் அந்த இடம் முன்னுரிமைப் பட்டியிலில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. அதுமட்டுமின்றி, இரண்டு தீயணைப்பு நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்சம் 25 கிலோ மீட்டர் இடைவெளி இருக்கவேண்டும் என்ற கொள்கையை அரசு பின்பற்றி வருகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியபடி, பல்வேறு இடங்களில் அவை 50 ஆயிரத்திற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்டு இருப்பதாலும், 25 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதியிலே ஏற்கனவே ஒரு தீயணைப்பு நிலையம் இயங்கி வருவதாலும், அத்தகைய இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்களைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில இடங்கள் அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைந்திருந்தால், அவை முன்னுரிமைப் பட்டியலில் வைக்கப்பட்டு, அங்கே புதிய தீயணைப்பு

நிலையம் தொடங்க தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் மொத்தம் 174 வட்டங்களில் 145 வட்டத் தலைமையிடங்களில் தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 7 வட்ட தலைமையிடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அடுத்து, தீயணைப்பு படையினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரக் கோரி, 6 சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள்.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை விதிமுறைகளின்படி அனைத்துப் பணியாளர்களும் அரசுக் குடியிருப்புகள் பெறுவதற்கு தகுதியுடையவர்களாவார்கள். அவர்களுக்கென்று பிரத்யேகமாக தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் தர்மபுரியில் ரூ.40.4 இலட்சம் செலவில் 36 குடியிருப்புகள் கட்டித் தர அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதர ஊர்களிலும் இத்தகைய குடியிருப்புகள் அரசின் நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாகக் கட்டித்தரப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் வாகனங்கள் நவீனமயமாக்குதல், பணியாளர்களின் நலன் போன்றவை குறித்து எழுப்பியுள்ள இதர வெட்டுத் தீர்மானங்களுக்கு உரிய பதில்கள் என்னுடைய பதிலுரையிலும், கொள்கை விளக்கக் குறிப்பிலும் விரிவான முறையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் தீயணைப்புத் துறையின் மீதான வெட்டுத் தீர்மானங்களுக்கான எனது பதிலுரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

வளரும் சமுதாயத்தின் தேவைகளும், எதிர்பார்ப்புகளும் அதிகரித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் தீயணைப்புத் துறையில் பணிபுரிபவர்களுக்கு புதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். பணியாளர்களின் அமைப்புகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். பணியாளர்களின் பணி ஆர்வத்தை அதிகப்படுத்த நல்ல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதை எங்கள் அரசு நன்கு உணர்ந்து கடுமையான நிதி நெருக்கடியிலும், நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அந்த வகையில் இந்த அரசின் சில முடிவுகளை எடுத்துரைக்க விழைகிறேன்.

தற்போது தீயணைப்புத் துறை இயக்குநர் அலுவலகத்தில் தீக் கட்டுப்பாட்டு அறை—'கண்ட்ரோல் ரூம்' இரண்டு பணி முறைகளில் மட்டும் இயங்கிவருவதை மூன்று பணி முறைகளாக '3 ஷிப்ட் சிஸ்டமாக' (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றியமைக்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. 3 பணி முறைகள் முறையைச் செயல்படுத்த கூடுதலாகத் தேவைப்படுகின்ற ஒரு நிலைய தீயணைப்பு அலுவலர், 4 முன்னணி தீயணைப்போர், 3 தீயணைப்போர் ஆகியோர் விரைவில் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தீயணைப்புத் துறையில் பணிபுரியும் 265 பணியாளர்களுக்கு மட்டுமே குடியிருப்பு வசதி அரசாங்கத்தால் செய்து தரப்பட்டுள்ளது. ஏனைய பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும் என்று சென்ற வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது. நடப்பாண்டில் சென்னை நகரம், பெரம்பலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களில் கிட்டத்தட்ட 100 குடியிருப்புகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இக்குடியிருப்புகளை தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் ஹட்கோ நிதியுதவியுடன் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் அமைந்துள்ள 222 தீயணைப்பு நிலையங்களில் 104 தீயணைப்பு நிலையங்கள் மட்டும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் நாமக்கல், செய்யாறு, ஆலங்குடி, கோயில்பட்டி மற்றும் நெல்லிக்குப்பம் ஆகிய 5 இடங்களில் தீயணைப்பு நிலையங்களுக்கான நிரந்தரக் கட்டிடங்கள் கட்டித்தரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களைவிட நமது தமிழ்நாடு தீயணைப்புத் துறை திறம்படச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அடுத்து காவல்துறை மானியத்திற்கான எனது பதிலுரையை முன்வைக்க விழைகின்றேன்.

காவல்துறையின் முக்கியத்துவத்தைப் பற்றி நான் ஏற்கனவே எனது பதிலுரையின் தொடக்கத்தில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தேன். எந்த ஒரு சமுதாயமும் திறமையான மனிதாபிமானமிக்க ஒரு காவல்துறையின்றி சரிவர இயங்கமுடியாது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். கட்டுப்பாடும், செயல்திறனும் மிக்க தமிழகக் காவல்துறை எந்தவகையில் இயங்கி வருகின்றது, சென்ற ஆண்டில் என்னென்ன அரிய பணிகளை ஆற்றியிருக்கிறது என்பதையும் தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளையும்

எடுத்துரைக்க விரும்புகிறேன். எங்களது அரசு பதவியேற்ற பின்னர், 3 ஆண்டுகளுக்கும் சற்றே குறைவான காலகட்டத்தில் தமிழகக் காவல்துறையின் மேம்பாட்டிற்காக நாங்கள் ஆற்றியுள்ள பணிகளை வரிசையாகப் பட்டியலிட்டுக் காட்டி பலரின் கரகோஷத்தையும், சிலரின் ஆற்றாமைப் பெருமூச்சையும், பொதுமக்களிடமிருந்து வாழ்த்துக்களையும் எங்களால் எளிதாகப் பெறமுடியும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *12-20*

நாங்கள் புதிதாகத் தொடங்கியுள்ள திட்டங்களும், ஆற்றியுள்ள பணிகளும், நடத்திக் காட்டிய சாதனைகளும், எங்களது மக்கள் அரசுக்கும், காவல் துறைக்கும் பெருமையினையும், பெருமிதத்தையும் தேடித் தந்துள்ளன. இதற்கு முன்பு தமிழகத்தை ஆண்ட எந்த ஓர் அரசும் நடைமுறைப்படுத்தாத பல புதிய திட்டங்களை நாங்கள் முனைப்புடன் தீட்டி செயல்படுத்தி வருகிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்- All Women Police Station, சிறப்பு பாதுகாப்பு படை- Special Security Group, சிறப்பு அதிரடிப்படை- Special Task Force, கடலோர பாதுகாப்புப்படை- Coastal Security Group, திருக்கோவில் பாதுகாப்புப் படை- Temple Protection Force சீருடைப் பணியாளர் தேர்வாணை வாரியம்- Tamil Nadu Uniformed Services Recruitment Board, தமிழ்நாடு காவல் துறை வீட்டுவசதிக் கழகம்- Tamil Nadu Police Housing Corporation, காப்புறுதித் திட்டம்- Group Insurance Scheme, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு- Prohibition Enforcement Wing, இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ புதிய புதிய திட்டங்களை எங்கள் அரசு வகுத்து அவற்றை செயல்படுத்தி வருகின்றது. இவற்றில் சில பழைய திட்டங்களாகக்கூட இருக்கலாம். ஆனால் அவற்றுக்கு இப்பொழுது எங்களது அரசு புதிய உத்வேகத்தையும், எழுச்சியையும் ஊட்டியிருக்கிறது. இந்தத் திட்டங்கள் மூலம் காவல் துறை செயல்பாடுகளில் தமிழகம் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் முதன்மையான இடத்தை பெறவேண்டும் என்பதும், *(மேசையைத் தட்டும் ஒலி)* உலகப் புகழ் பெற்ற ஸ்காட்லேண்ட் யார்ட் போல சர்வதேசப் புகழையும் தகுதியையும் பெற வேண்டும் என்பதும் எங்களது நோக்கமாகும். தொலைநோக்குப் பார்வையோடு வகுக்கப்பட்ட இந்தத் திட்டங்களின் பயன்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சிலரது கண்களுக்கு தென்படாவிட்டாலும் அருமை தமிழகத்து பெருமக்களும், எதிர்கால சந்ததியினரும் நிச்சயம் எங்களது திட்டங்களின் பயன்களைப் பெற்று மகிழ்வார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* நாங்கள் தமிழகத்தை

அமைதியின் உறைவிடமாக இன்று போல் என்றென்றும் திகழச் செய்யும் பணியில் எங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழக காவல் துறை, காவல் துறை இயக்குநரின் தலைமையிலே 173 ஐ.பி.எஸ். அதிகாரிகள், 74,751 பல்வேறு நிலைகளில் உள்ள தமிழ்நாடு காவல் படையினர் ஆகியவர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. சிறிது காலத்திற்கு முன்புகூட காவல் துறையில் பணிபுரியும் ஓர் அலுவலர் காவல் பணிகள் அனைத்தையும் ஆற்ற வேண்டிய நிலைமை இருந்ததை நாம் அறிவோம். ஆனால் மாறி வருகின்ற சமுதாயத்தில், பல்வேறு புதிய சூழ்நிலைகளும், தேவைகளும், எதிர்பார்ப்புகளும் உருவாகி காவல் பணிகள் பெரிதும் சிறப்புத் தன்மைகளும் ஸ்பெஷலைசேஷனையும், அறிவியல் கண்ணோட்டத் தையும், சைன்டிபிக் அவுட் லுக்கையும் கொண்டு செயல்பட வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. அதற்கு ஏற்றார்போல் பல புதிய பயிற்சி பெற்ற சிறப்புப் பிரிவுகளை காவல் துறையில் அமைத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவல் துறையை நவீனமயமாக்கவேண்டும், அதே நேரத்தில் அதை மனிதாபிமானமிக்க ஒரு இயக்கமாக மாற்ற வேண்டும் என்பதுதான் எங்களது குறிக்கோள் (மேசையைத் தட்டும் ஒலி). We want to modernise and humanise police force. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் விருப்பு வெறுப்பு இன்றி காவல் துறை எதிர் கொள்ள வேண்டிய சவால்களைப் பற்றியும், காவல் துறை அந்தச் சவால்களை ஏற்று செயல்படும் விதத்தைப் பற்றியும், தமிழக அரசு காவல் துறையை நவீனப்படுத்த ஆற்றி வருகிற பணிகள் குறித்தும், திறந்த மனத்துடன், தெளிவான பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்தமைக்காக அவருக்கு எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற அதே நேரத்தில் நிறைகளையும் சுட்டிக்காட்டுவதுதான் மனிதப் பண்பு என்பதை தன்னுடைய உரையின் வாயிலாக அவர் உணர்த்தியுள்ளதை இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரில் காவலர்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று ஓர் கோரிக்கையை மிக நாசூக்காக எடுத்துரைத்தார். நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பல காலமாக காவலர்களுக்கு குடியிருப்பு கட்டுவதைப்பற்றி எங்களுக்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் சிந்திக்கவே இல்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

தமிழ்நாடு காவலர்கள் வீட்டுவசதிக் கழகம் - Tamil Nadu Police Housing Corporation என்ற நிறுவனத்தை மீண்டும் நாங்கள் தான் செயல்பட வைத்தோம். இப்போது அந்தக் கழகத்தின் மூலமாக ஆண்டொன்றுக்கு ஆயிரம் குடியிருப்புகள் வீதம் காவலர்களின் நலனுக்காக கட்டப்பட்டு வருகின்றன. திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் வேண்டுகோள் விடுக்கும் முன்பே சென்னை மாநகர் காவல் துறையில் பணி புரியும் அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் வீட்டுவசதி ஏற்படுத்தித் தர அனைத்துப் பொது வசதிகளுடன் 3,000 குடியிருப்புகள் கொண்ட காவல் நகரம் - Police City ஒன்றை அமைப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அரசு முடிவு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு.கே.கே.சின்னப்பன் அவர்கள் காவலர்கள் குடியிருப்புகளில் தங்கியுள்ள காவலர்கள் ஒட்டுமொத்த மீட்டரின் அடிப்படையில் மின் கட்டணம் செலுத்து வேண்டியுள்ளதால் அதிக அளவு மின் கட்டணத்தைச் செலுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டார். பல ஆண்டுகளாக பல்வேறு ஆட்சியாளர்களின் முன்பு காவலர்களின் இந்த நிலையைச் சீர் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தபோது எந்தத் தீர்வும் காணப்படவில்லை. ஆனால் இந்த விவரம் எனது நேரடி கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதும் தொடர்புடைய அலுவலர்களுடன் விவாதித்து இது குறித்து ஒரு நல்ல முடிவை எடுத்துள்ளேன் என்பதையும் அதை புதிய அறிவிப்புகளில் (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிக்க உள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பெருகி வரும் மக்கள் தொகையும் மாறிவரும் பொருளாதார சித்தாந்தங்களும் சென்னை மாநகரக் காவல் பணியை சிக்கல்கள் நிறைந்த ஒரு பணியாக மாற்றிக்கொண்டு இருப்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு மாநகரக் காவல் பணியின் பல்வேறு சிறப்புக்கூறுகளை ஆராய்ந்து பொதுமக்கள் அனைவரும் பயன் பெறுவதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றோம். முதன் முதலாக 24 மணி நேர ரோந்துப் பணியை சென்னை மாநகரில் அறிமுகப்படுத்தியது ஒரு மாபெரும் முன்னோடித் திட்டம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாநிலத்தவர் மட்டுமின்றி வெளி மாநிலத்தவரும் பாராட்டி வருகிறார்கள். ஊர்வலங்கள், மத ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள், கடையடைப்பு என்று எழுகின்ற பல்வேறு பிரச்சினைகளை மாநகர காவல் துறையினர் திறம்பட

நிர்வகித்து வருகிறார்கள் என்பதற்கு எத்தனை நிகழ்ச்சிகளை வேண்டுமானாலும் உதாரணம் காட்டலாம். 3 ஆண்டுகளாக சென்னையில் விநாயக சதுர்த்தி ஊர்வலம் எந்த அசம்பாவிதமுமின்றி நடைபெற்றுள்ளது. ஆனால் 1990 ஆம் ஆண்டு இதே விநாயக சதுர்த்தி ஊர்வலத்தில் அன்று ஆட்சியில் இருந்தவர்கள் அக்கறை காட்டாத காரணத்தினால் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.அர்ச்சுனன் அவர்கள் உரையாற்றும்போது காவல் பயிற்சி பள்ளிகளில் பணியாற்றும் காவல்துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் அவர்களது பணி ஆர்வத்தை அதிகப்படுத்துகின்ற வண்ணம் ஸ்பெஷல் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் எனக் கேட்டிருந்தார். பயிற்சி என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த அரசு உணர்ந்துள்ள காரணத்தினால் இத்தகைய காவலர் பயிற்சி நிலையங்களில் பணி புரிய வரும் அலுவலர்களுக்கு ஸ்பெஷல் அலவன்ஸ் வழங்குவது என்று ஏற்கெனவே கொள்கை முடிவு எடுத்துள்ளது என்பதையும் அது குறித்த விவரங்களை எனது உரையில் பின் பகுதியில் விரிவாக குறிப்பிடவுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.பி.சந்திரசேகர் அவர்கள் கோயம்புத்தூர் ஊரக மாவட்டத்திற்கான ரிபீட்டர் ஸ்டேஷன் சரியான முறையில் இயங்கவில்லை என்பதற்காக வேறு ஒரு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கேட்டு இருந்தார். இந்த மாவட்டத்திற்குரிய ரிபீட்டர் ஸ்டேஷன் தற்போது பெரியார் மாவட்டம் சென்னிமலையிலிருந்து இயங்கி வருவதால் செய்தித் தொடர்பை சரிவர ஏற்படுத்தித்தர இயலவில்லை. எனவே கோயம்புத்தூர் ஊரக மாவட்டத்திற்கான செய்தி தொடர்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் குன்னூர் அருகே உள்ள எடப்பள்ளி என்ற கிராமத்தில் ஒரு புதிய ரிபீட்டர் ஸ்டேஷன் 20 இலட்சம் ரூபாயில் கட்டுவதற்காக ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் இந்த மானியக் கோரிக்கைகளின் மீதுபேசும் போது முடிந்தவரை எதிர்மறை கருத்துக்களாக எடுத்துரைத்து அரசியல் மாச்சரியங்களை எல்லாம் வெளிப்படுத்தி தனக்கு பேசுகின்ற வாய்ப்பு கொடுக்கும்போதெல்லாம் தன்னால் இப்படித்தான் பேச முடியும்

என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார் என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவரும் என்றாவது நல்ல கருத்துக்களைச் சொல்வார், நாமும் அதற்கு பதில் சொல்வோம் என்று ஒவ்வொரு முறையும் எதிர்ப்பார்த்து வீணாக ஏமாந்து போகிறேன். ஏன் என்றால் அவரிடமிருந்து அதை எதிர்பார்ப்பது மிக அதிகம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* இல்லாத ஒன்றை இருப்பதாக ஜோடித்துக் காட்டி அரசியல் உள் நோக்கத்துடன் அவர் கருத்துக்களை கூறினார். கொள்கை விளக்கக் குறிப்பில் 1991 முதல் 1993 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆதாயக் கொலை, கொள்ளை, வழிப்பறிக் கொள்ளை ஆகியவற்றில் அந்தந்த ஆண்டுக்குள்ளாகவே கண்டுபிடிக்கப்பட்ட விவரங்கள் மட்டும் தரப்பட்டுள்ளன. திரு.திருநாவுக்கரசு அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். இருந்தும் மற்றவர்களை திசை திருப்பும் முயற்சி ஒன்று தான் தனது தலையாய கடமை என்று அவர் செயல்படுகின்ற காரணத்தால் இதைப் பெரிதுப்படுத்திப் பேசினார். உண்மை நிலை என்னவென்றால் 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற 112 குற்றங்களில் இதுவரை 102 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதேபோல 1992 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 89 வழக்கில் 63 வழக்கில் இதுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள். 1993 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் பதிவு செய்யப்பட்ட 95 குற்றங்களில் 51 குற்றங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொள்ளைக் குற்றங்களில் 1991 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 116 வழக்குகளில் 80 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 167 குற்றங்களில் 70 இனங்களில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். 1993 ஆம் ஆண்டு நிகழ்ந்த 155 குற்றங்களில் 68 இனங்களில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

வழிப்பறிக் கொள்ளையைப் பொறுத்தவரையில் 1991 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 515 நிகழ்ச்சிகளில் 312 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டு நிகழ்ந்த 502 வழிப்பறிக் கொள்ளையில் 348 இனங்களில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள். 1993 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 416 வழக்குகளில் 208 இனங்களில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள். மற்ற பெரிய மாநிலங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது நமது மாநிலத்தில் சொத்து குற்றங்கள் குறைவாகத்தான் நிகழ்ந்துள்ளன. 1992 ஆம் ஆண்டில் மகாராஷ்டிராவில் 80,585 சொத்து குற்றங்களும், உத்திரபிரதேசத்தில் 78,157 குற்றங்களும், மத்திய பிரதேசத்தில் 60,434 குற்றங்களும் நடந்துள்ளபோது தமிழ்நாட்டில் 34,190 குற்றங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

வன்முறை சொத்து குற்றங்களை பொறுத்தவரையில் 1992 ஆம் ஆண்டில் உத்திர பிரதேசத்தில் 9,801 குற்றங்களும், மகாராஷ்டிராவில் 4,898 குற்றங்களும், குஜராத்தில் 1,626 குற்றங்களும் பதிவு ஆகியுள்ளன. ஆனால் தமிழ்நாட்டில் இதே ஆண்டில் 669 குற்றங்கள் மட்டும் தான் நிகழ்ந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 1993 ஆம் ஆண்டில் சொத்து கண்டுபிடிப்பு விழுக்காடு 'ப்ராப்பர்டி ரெக்கவரி' ஆந்திர பிரதேசத்தில் 61 சதவீதமும்; மகாராஷ்டிராவில் 32 சதவீதமும்; கர்நாடகாவில் 21 சதவீதமும் நிகழ்ந்துள்ளன. ஆனால் தமிழகத்தில் மட்டும்தான் இது 73.2 விழுக்காடு என உயர்ந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு.திருநாவுக்கரசு அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தமிழகத்திலுள்ள மக்கள் அனைவரும் இதை பாராட்டத்தக்க செயல் என்று ஏற்றுக்கொள்வார்கள் என பரிபூரணமாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சில குற்ற நிகழ்வுகள் ஏற்படலாம் என்று முன் கூட்டியே காவல் துறையினர் அனுமானித்து, யூகித்து, அறிந்துகொள்ள இயலுகின்றபோது தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து விடுவார்கள். குற்றங்களைத் தடுத்து விடுகிறார்கள். ஆகவே, குற்றத் தடுப்பில் காவலர்களுக்கு நூற்றுக்கு நூறு வெற்றி கிடைக்கிறது. ஆனால், களவு, கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற குற்றங்கள் எப்போது எங்கே நடக்கும் என்று காவல்துறையினர் எளிதில் அனுமானிக்க இயலாது.

மேலும், குற்றவாளிகள் மிகவும் சாதுர்யமாக, மற்றவர்களுக்குத் தெரியாமல், மறைவாக, கள்ளத்தனமாக, தனி அறைகளிலும், சந்து பொந்துகளிலும் குற்றங்களைச் செய்கிறார்கள். அத்தகைய குற்றங்களைத்தான் காவல் துறையினர் புலன் விசாரணை செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. அத்தகைய குற்றங்களில் நமது தமிழகக் காவல் துறையினர் 73.2 சதவீதம் கண்டுபிடித்துள்ளனர் என்றால் அது மாபெரும் சாதனையல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களில் 61 சதவீதம், 32 சதவீதம், 21.3 சதவீதம் என்ற அளவில்தான் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றால், இந்தியாவிலேயே, தமிழகக் காவல் துறைதான் சிறப்பாகச் செயல்படுகிறது என்றுதானே பொருள்? (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் காரணங்களுக்காக வேண்டுமானல் திரு.திருநாவுக்கரசைப் போன்ற சிலர் ஏற்றுக் கொள்ளத் தயங்கலாம். ஆனால், நடுநிலையாளர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள்.

பிற்பகல் 12-35

தமிழகக் காவல் துறையினர் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும், களவு போன பொருட்களை மீட்டு திரும்ப தருவதில் மட்டுமின்றி, விளையாட்டுகளிலும், தனித் திறமைப் போட்டிகளிலும் பல சிறப்புகளைப் பெற்று இருக்கிறார்கள். 1993-ஆம் ஆண்டில் பெங்களூரில் நடைபெற்ற All India Police Duty Meet என்ற திறமையை வெளிப்படுத்தும் போட்டிகளில், தமிழகக் காவல்துறை பங்கேற்று 3 தங்கப் பதக்கங்களையும், 5 வெள்ளிப் பதக்கங்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) 6 வெண்கலப் பதக்கங்களையும் தட்டிக்கொண்டு வந்தது. மேலும் 4 கேடயங்களையும் பெற்று, தங்களது தனிப்பெரும் திறமையை அகில இந்திய அளவிலே நிலைநாட்டிவிட்டு வந்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நமது காவல் துறையினர். 5 பேர் கொண்ட குழு, விஞ்ஞான ரீதியில் துப்பு துலக்குதல் போட்டியில் –Scientific investigation competition-ல் நமது காவல் துறையினர் மொத்தம் 6 பரிசுகளைப் பெற்றுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) விஞ்ஞான ரீதியில் துப்பு துலக்குதல் தமிழகக் காவல்துறையினரின் தனித் தன்மையை எடுத்துக் காட்டுகிறது என்பதை திருநாவுக்கரசு போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, புகைப்படப் போட்டியிலும், தமிழகக் காவல்துறை முதல் இடம் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல தமிழகத்தின் சிறப்புக் காவல் படை, (Special Security Group) இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் சிறப்பு கமாண்டோக்களுக்கிடையேயான தீரச் செயல் புரியும் போட்டி ஒன்று சென்னையில் 30-3-1994 மற்றும் 31-3-1994 ஆகிய நாட்களில் நடத்தியது. பஞ்சாப் மாநிலத்தில் பஞ்சாப் கமான்டோஸ்; மகாராஷ்ட்டிரா மாநிலத்தின், Special Protection Unit, ஆந்திர மாநிலத்தின் Special Security Force ஆகியோர் பங்குபெற்ற இந்தச் சிறப்புப் போட்டிகளில், தடைகளைக் கடத்தல்—Obstacle Course, எதிரிகளை துப்பாக்கிச் சூட்டில் மடக்குதல்—Combat Shooting, போன்ற பல்வேறு போட்டிகளில் நமது சிறப்புக் காவல் முதல் இடத்தையும், சிறப்பு இடத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) பெற்று, Overall Championship விருதையும் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல்துறையினர் கடமையாற்றும்போது பல்வேறு ஆபத்துக்களையும் அபாயங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

உயிரை இழக்கக்கூடிய சூழ்நிலைகளும், நிரந்தர ஊனம் ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன. 1991-ஆம் ஆண்டில் வன்முறை கும்பல்களின் தாக்குதல்களால் 306 காவல்துறை அலுவலர்களும், காவலர்களும் படுகாயம் அடைந்து உள்ளனர். ஒரு காவல்துறை அதிகாரியும் 9 காவலர்களும் கடமை ஆற்றும்போது மரணம் அடைந்துள்ளனர். 1992-ஆம் ஆண்டில் மட்டும் காயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 316 ஆகும். அதே ஆண்டு, 4 காவலர்கள் கடமை ஆற்றும்போது மரணம் அடைந்துள்ளனர். 1993 ஆம் ஆண்டு 174 காவல் துறையினர் படுகாயம் அடைந்து உள்ளனர். ஒருவருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. அதே ஆண்டில் 9 காவலர்கள் கடமையாற்றும்போது மரணம் அடைந்துள்ளனர். தங்களையே பலி கொடுத்து, பல்வேறு இன்னல்களுக்கும் இடையூறுகளுக்குமிடையே செயல்படுகின்ற காவலர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது நமது அனைவரின் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12 -40

மாண்புமிகு உறுப்பினர் திரு.தம்புசாமி அவர்கள் பேசும்போது, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், அதாவது Civil Rights Protection Act-இன் கீழ் கடந்த 3 ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் மட்டுமே கொள்கைக் குறிப்பில் தரப்பட்டுள்ளது என்றும், எத்தனை வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் தரப்படவில்லை என்றும் கூறினார்.

1991-ஆம் ஆண்டு 861 வழக்குகள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, 35 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது 383 வழக்குகளில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 268 வழக்குகளில் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. 175 வழக்குகள் நீதிமன்ற மற்றும் காவல் துறை விசாரணையில் உள்ளன.

1992-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 962 வழக்குகளில் 22 வழக்குகளில் தண்ட்னை வழங்கப்பட்டுள்ளது. 291 இனங்களில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 390 வழக்குகளில் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. நீதிமன்ற விசாரணையில் 196 வழக்குகளும், காவல் விசாரணையில் 62 வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

1993-ஆம் ஆண்டு 840 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இதுவரை 2 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 30 வழக்குகளில் மேல்நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. மீதம் உள்ள வழக்குகள் நீதிமன்ற விசாரணையிலும், காவல்துறை விசாரணையிலும் உள்ளன.

எங்கள் அரசைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனில் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு எல்லா வகையிலும் அக்கறை செலுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி மற்றும் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் காவல்துறையில் பதவி உயர்வு கிடைக்காமல் அலுவலர்களும், காவலர்களும் ஒரே பதவியில் பல காலமாகத் தேங்கியிருக்கிறார்கள் என்ற கருத்தை எடுத்துரைத்தார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் எங்களது அரசு காவல் துறையின் பல்வேறு கூறுகளைப் பரிசீலனை செய்து காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் மத்தியில் பணி ஆர்வத்தை ஊக்குவிப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது.

இதுவரை வேறு எந்த அரசும் செய்யாத அளவிற்குப் புதிய பதவிகளை உருவாக்கி ஒரே பதவியில் தேங்கிக் கிடந்தவர்களுக்குப் பதவி உயர்வினை அளித்துள்ளோம்.

ஆனால் திரு பரிதி இளம்வழுதி தான் சார்ந்திருக்கின்ற கட்சி ஆட்சி செய்தபோது எத்தனை காவல்துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் புதிய பணியிடங்களை ஏற்படுத்திப் பதவி உயர்வுகளை வழங்கினார்கள் என்று சொல்ல முடியுமா? எத்தனை காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தார்கள் என்ற புள்ளி விவரங்களைத் தர முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதும் காவல் துறையில் பல நிலைகளில் தேக்க நிலை இருந்தது என்பதையாவது அவர்கள் அறிந்து வைத்திருந்தார்களா? நிச்சயமாக இல்லை என்பதுதான் உண்மை. தாங்கள் ஆட்சி செய்தபோது காவல் துறையை வேறுவிதமாகப் பயன்படுத்த எண்ணியவர்கள் அந்தத் துறையின் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் நல்லதைச் செய்ய வேண்டுமென்பதைச் சிந்திப்பதற்கே நேரம் இருந்திருக்காதே. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 10,209 புதிய பணியிடங்களை உருவாக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு நிலைகளில் 9,703 பதவிகளை அப்கிரேட் செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றின் பயனாக 12,409 பேருக்குப் பதவி உயர்வு-புரமோஷன் அளித்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) நேரடியாக 8,000 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், காவல் துறை இயக்குநர் பதவிகள் 4; கூடுதல் காவல்துறை இயக்குநர் பதவிகள் 6; காவல்துறை தலைவர் பதவிகள் 9; காவல்துறை துணைத் தலைவர் பதவிகள் 12; கண்காணிப்பாளர் பதவிகள் 13; கூடுதல் கண்காணிப்பாளர் பதவி 1; துணைக் கண்காணிப்பாளர் பதவிகள் 48; ஆய்வாளர் பதவிகள் 199, உதவி ஆய்வாளர் பதவிகள் 472, தலைமைக் காவலர் பதவிகள் 929, முதல் நிலைக் காவலர் பதவிகள் 301, இரண்டாம் நிலைக் காவலர் பதவிகள் 8000, பெண் ஆய்வாளர் பதவிகள் 29, பெண் உதவி ஆய்வாளர் பதவிகள் 12, பெண் தலைமைக் காவலர் பதவிகள் 3, பெண் காவலர் பதவிகள் 12, இளநிலைக் காவலர் பதவிகள் 9, ஆக மொத்தம், 10,209 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில், `upgradation' செய்யப்பட்ட 9,703 பணியிடங்களையும், பதவிகளையும், நிலைவாரியாகச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். காவல்துறை இயக்குநர் பதவி 1, கூடுதல் காவல்துறை இயக்குநர் பதவி 1, காவல்துறை துணைத் தலைவர் பதவி 1, துணைக் கண்காணிப்பாளர் பதவிகள் 50, ஆய்வாளர் பதவிகள் 150, தலைமைக் காவலர் பதவிகள் 500, முதல் நிலைக் காவலர் பதவிகள் 9000, ஆக மொத்தம் 9,703. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

கடந்த மூன்று ஆண்டுகளில், 12,409 பேர், இந்தத் துறையில் பதவி உயர்வுகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பது ஒரு மகத்தான சாதனை என்றுதான் குறிப்பிடுவேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, இயக்குநர் பதவிக்கு 4 பேர், கூடுதல் இயக்குநர் பதவிக்கு 8 பேர், காவல்துறை தலைவர் பதவிக்கு 20 பேர், காவல்துறை துணைத் தலைவர் பதவிக்கு 22 பேர், கண்காணிப்பாளர் பதவிக்கு 16 பேர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு 21 பேர், துணைக் கண்காணிப்பாளர் பதவிக்கு 85 பேர், ஆய்வாளர் பதவிக்கு 304 பேர், உதவி ஆய்வாளர் பதவிக்கு 1016 பேர், தலைமைக் காவலர் பதவிக்கு 1564 பேர், முதல் நிலைக் காவலர் பதவிக்கு 9349 பேர், ஆக மொத்தம் 12,409 பேர் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, ஒரேநேரத்தில், 9000 கிரேட்-2 காவலர் பணியிடங்களை, கிரேட்-1 காவலர் பணியிடங்களாக 'அப்கிரேட்' செய்து, 9000 பேருக்கு பதவி உயர்வு வழங்கியிருப்பது, ஒரு சாதனை இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆய்வாளர் நிலையிலிருந்து, துணைக் கண்காணிப்பாளர் நிலைக்கு, பதவி உயர்வு பெறுவதில், தேக்கநிலை இருப்பதை அறிந்து, இதுவரை 50 புதிய

பணியிடங்களை உருவாக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு, இன்னும் 50 பணியிடங்களை உருவாக்கி, 100 பேர், ஆய்வாளர் நிலையிலிருந்து, துணைக் கண்காணிப்பாளர் நிலைக்கு, ஒரே நேரத்தில் பதவி உயர்வு பெற வழிவகை செய்திருக்கிறோம் என்பது சாதனை இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி).

காவல்துறை அலுவலர்களையும், காவலர்களையும் தேர்வு செய்வதற்காக, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஒன்றை அமைத்து, 10,335 காவலர்களைத் தேர்வு செய்துள்ளோம். மிகப்பெரிய அளவில் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்து, 6,425 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, பணியில் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். 1575 பேர், தங்களது பயிற்சியைத் துவக்கி உள்ளார்கள். மேலும், இந்த வாரியம், 500 உதவி ஆய்வாளர்களைத் தேர்வு செய்யும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளது. பெண் காவலர்களை இன்னும் அதிக அளவில் நியமனம் செய்வதற்கும், பெண் துணைக் கண்காணிப்பாளர்களை நேரடியாக நியமனம் செய்வதற்கும் எங்களது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக, எங்களுக்கு முன்பு ஆட்சி செய்தவர்களைவிட, நாங்கள் சிறப்பாகச் செயல்பட்டுள்ளோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-50

மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் கூறியதைப்போல, திருநெல்வேலி மாவட்டத்தில், கலைச்செல்வி என்ற பெயருள்ள மாணவியைக் கற்பழித்து, கொலை செய்ததாக எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை. அதுபோன்று வேறு வழக்கு, எதேனும் தென்படுகிறதா என்று நாங்கள் ஆராய்ந்தபோது, நாங்குனேரியைச் சேர்ந்த கெஜலட்சுமி என்ற 19 வயது பெண், சந்தேகப்படும் வகையில் இறந்து கிடந்தது பற்றி ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு இருந்ததைக் கண்டறிந்தேன். ஒருவேளை, அந்த வழக்கு பற்றித்தான், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டிருப்பார் என்றால், அதற்கும் என்னிடம் விவரம் இருக்கிறது. அதிலும் அவர் கூறியதைப் போல் காவல் துறையினர் மீது சந்தேகப்படுவதற்கு எந்த நியாயமும் இல்லை. 22-11-1993 அன்று நாங்குனேரி வானமலைக் கோவில் அருகிலுள்ள பொதுக் கிணற்றில், தட்டச்சு பயிலுவதற்காகச் சென்ற செல்வி கெஜலட்சுமி பிணமாக மிதந்துள்ளார். இதுகுறித்து நாங்குனேரி காவல் நிலையத்தில் குற்ற எண் 472/1993-ல் சந்தேக மரணம் என்றத் தலைப்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன்விசாரணை

மேற்கொண்டுள்ளப்பட்டுள்ளது. கெஜலட்சுமிக்கு தாயார் கிடையாது, மாற்றாந்தாயார் மட்டுமே உள்ளார். அவரது தந்தை சங்கரவேல் என்பவர் வியாபார விஷயமாக வெளியூருக்குச் சென்றிருந்திருக்கிறார். 20-11-1993 முதல் கெஜலட்சுமி வீட்டைவிட்டுக் காணாமல் போயிருந்தாலும் காவல் நிலையத்தில் எந்தவிதமானப் புகாரும் கொடுக்கப்படவில்லை. பிரேதப் பரிசோதனையை மேற்கொண்ட ஒரு பெண் மருத்துவர் பிரேதப் பரிசோதனைச் சான்றிதழில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களால் கெஜலட்சுமி கற்பழிக்கப் பட்டிருக்கக்கூடும் என்ற ஒரு கருத்தை எழுதியிருக்கிறார். உடல் உள் உறுப்புகளின் ரசாயனப் பரிசோதனை அதாவது chemical examination of viscera முடிக்கப்பட்டு விவரம் கிடைப்பதற்கு முன்பே இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இந்தக் கருத்து சர்ச்சைக்குரியதாக இருந்தாலும் வழக்கு கற்பழித்து கொலைச் செய்யப்பட்டக் குற்றமாக மாற்றப்பட்டு இந்தியத் தண்டனைச் சட்டம் 376 மற்றும் 302 பிரிவுகளின் கீழ் மாற்றம் செய்யப்பட்டது. மேலும், அப்போதைய காவல் துறை ஆய்வாளர் அங்கிருந்து மாற்றப்பட்டு, இராதாபுரம் ஆய்வாளர் இந்த வழக்கினை விசாரிக்க நியமனம் செய்யப்பட்டார். பின்னர், வழக்கு குற்றப்புலனாய்வுத் துறை குற்றப் பிரிவிற்கு மாற்றப்பட்டது. இதற்கிடையில் பிரேதப் பரிசோதனைக்கான இரண்டாவது நிபுணர் கருத்து second opinion, திருநெல்வேலி தடய அறிவியல் பேராசிரியர் டாக்டர் பாலகிருஷ்ணனிடமிருந்து பெறப்பட்டது. அவர் முன்பு செய்யப்பட்ட பிரேதப் பரிசோதனை சரியான முறையில் செய்யப்படவில்லையென்றும், கெஜலட்சுமி தண்ணீரில் மூழ்கி தற்கொலை செய்துகொண்டிருக்கக்கூடும் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். இந்த வழக்கு குற்றப்புலனாய்வுத் துறை குற்றப் பிரிவினால் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. காவலர்களைச் சந்தேகிக்கக்கூடிய நியாயமானக் காரணங்கள் இல்லையென்றாலும், மருத்துவர் ஒருவரின் கருத்து ஏற்புடையதாக இல்லாவிட்டாலும், பொது மக்கள் முன்னிலையில் நியாயமாக செயல்படுவதை உணர்த்தவே, கற்பழித்து கொலை செய்யப்பட்டார் என்ற இனத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, பின்பு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு மேல் விசாரணைக்காக மாற்றம் செய்யப்பட்டது. இந்த வழக்கில் விசாரணையே செய்யப்படவில்லையென்ற மாண்புமிகு உறுப்பினரின் குற்றச்சாட்டு வேடிக்கையானது மட்டுமல்ல வேதனையானதாகவும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் ஒரத்தநாட்டைச் சார்ந்த திருமதி ரங்கம்மாள் என்பவர் காவல்

துறையினரால் கற்பழிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட புகாரைப் பற்றியும், எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை பற்றியும் கேட்டார். இந்த வழக்கைப் பற்றி விவரமாக ஏற்கெனவே இந்த அவையில் கூறியிருக்கிறேன். அதன்படி தஞ்சாவூர் கோட்டாட்சித் தலைவர் தனது மெஜஸ்டீரியல் விசாரணையை முடித்து அரசுக்கு விவரமாக அறிக்கை அனுப்பி வைத்துள்ளார். அவரது அறிக்கையில் திருமதி ரங்கம்மாள் காவலர்களால் கற்பழிக்கப்பட்டதற்கானச் சாத்தியக் கூறுகள் இல்லையென்று சுட்டிக்காட்டியுள்ளார். எங்களைப் பொறுத்தவரை, தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைச் சட்டத்தின் துணைக்கொண்டு தண்டிக்க வேண்டுமென்றுதான் கருதுவோமே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை எப்படியாவது ஒளித்து வைக்க வேண்டுமென்று, காப்பாற்ற வேண்டுமென்று எண்ணமாட்டோம். எனவே, ஒரத்தநாடு காவல் நிலையக் காவலர்கள் துறையினுடைய விதிமுறைகளுக்கு மாறாக செயல்பட்டுள்ளார்களா என்பதை ஆராய்ந்து அவர்கள் மீது தேவையான ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் திருத்துறைப்பூண்டி வட்டம், பஞ்சநதிக்குளத்தைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளி திரு. வடிவேலு என்பவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று ஒட்டுமொத்தமாகக் குற்றம் சாட்டினார். எனக்குக் கிடைத்த தகவலின்படி 18-11-1993 அன்று பஞ்சநதிக்குளம் மேற்கு சேத்தி கிராமத்தில் விவசாயக் கூலி கொடுப்பது தொடர்பாக நில உரிமையாளர்களுக்கும், விவசாய தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில், திரு. வடிவேலு, கொலை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. வாய்மேடு காவல் நிலைய குற்ற எண் 741/1993-ல், இந்தியத் தண்டனைச் சட்டம் 147, 148, 341, 342, 307 மற்றும் 302 ஆகிய பிரிவுகளின் கீழ் 18 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறையினர் அவர்களில் 9 பேரைக் கைது செய்துள்ளனர். 28-2-1994 அன்று இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல் யாரோ சிலரின் தூண்டுதலின்பேரில் காவல் துறையினர் இந்த வழக்கில் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டது சரியான தகவல் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

திரு. ஜி. பழனிசாமி: நான், நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: நான் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசியது யாவும் அவைக்குறிப்பில் உள்ளன. அவைக் குறிப்பைப் பார்த்துத்தான் பதிலுரை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தர்மபுரி மாவட்டம் ஹோசூரைச் சேர்ந்த 15 வயது மாணவன் ராஜா காணாமல் போனதும், பின்னர் காவல் துறை விசாரணையின்போது மரணம் அடைந்திருப்பாரோ என்ற சந்தேகம் எழுந்த வழக்கில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று திரு. ஜி. பழனிசாமி குறைபட்டுக்கொண்டார். இந்த வழக்கில் காவல் துறையினர் விசாரிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்ட ராஜா வீட்டுக்குத் திரும்பி வரவில்லை என்று அவரது தந்தை 31-1-1994 அன்று கொடுத்த புகாரின்பேரில் ஹோசூர் காவல் நிலைய குற்ற எண். 24/1994-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 201-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு ராஜாவை ஏற்கெனவே விசாரணை செய்த உதவி ஆய்வாளர் முத்தமிழ் முதல்வன் என்பவர் 1-2-1994 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டார். பின்னர் 3-2-1994 அன்று அவர் நீதிமன்றம் வழியாக பெயிலில் விடப்பட்டார். இந்த வழக்கு காவல் துறை உதவி ஆய்வாளர் மீது பதிவுசெய்யப்பட்டதால் சி.பி.சி.ஐ.டி. அதாவது குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப்பிரிவுக்கு 4-2-1994 அன்றே மேல் நடவடிக்கைக்காக மாற்றம் செய்யப்பட்டது. அவர்கள் மேற்கொண்ட விசாரணையின் விளைவாக ராஜா எத்தகைய வண்டியில் அழைத்துச் செல்லப்பட்டார்; அவர் மரணம் அடைந்தவுடன் அந்த உடல் எப்படி எரிக்கப்பட்டது என்பன போன்ற விவரங்களைச் சேகரித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் இந்த வழக்கில் ஈடுபட்டுள்ளதாக கிரேட் 1 காவலர் ஜோசப் என்பவரும், தலைமைக் காவலர் கணேசன் என்பவரும் 19-2-1994 அன்று கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் சம்பந்தப்பட்டதாக கருதப்படும் மேலும் 4 பேர்களைக் காவல்

துறையினர் தேடி வருகின்றனர். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இந்த அரசு தண்டிக்கத் தயங்கியதில்லை என்பதைத்தானே (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிகழ்ச்சி காட்டுகிறது? இதைவிட இந்த வழக்கில் வேறு என்ன நடவடிக்கை எடுத்திருக்க முடியும்?

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் என்னுடைய அலுவலகத்திற்கு மனு ஒன்றினை அனுப்பி வைத்திருந்ததாகவும், இரண்டு மாதங்கள் ஆகியும் கூட பதிலோ, நடவடிக்கையோ இல்லை என்றும் ஒரு குற்றச்சாட்டைக் கூறியுள்ளார். அவர் கொடுத்திருக்கிற மனுக்களின் விவரங்கள் என்ன என்ன என்பதை முதலமைச்சரின் தனிப்பிரிவில் கனிப்பொறியில் பதிவு செய்த விவரங்களை ஆராய்ந்து பார்த்தோம். அவர் பெயரில் மூன்று மனுக்கள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் வழியாக கொடுக்கப்பட்டுள்ள விவரம் எனக்குக் கிடைத்திருக்கிறது. 6-12-1993 தேதியில் பெறப்பெற்ற 18722 என்ற வரிசை எண் கொடுக்கப்பட்ட அவரது மனுவில் அவர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கவேண்டுமென்று கோரியுள்ளார். 13-12-1993 அன்றைய தேதியில் பெறப்பெற்ற 19214 என்ற வரிசை எண் கொடுக்கப்பட்ட அவரது இரண்டாவது மனுவில் தகராறு ஒன்றில் மரணம் அடைந்த வடிவேலு என்பவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி செய்யவேண்டும் என்று கேட்டிருக்கிறார். 16-12-1993 தேதியில் பெறப்பட்டு 19557 என்ற வரிசை எண் கொடுக்கப்பட்ட அவரது மூன்றாவது மனுவில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் கொடுக்கும்படி கேட்டுள்ளார். இந்த மூன்று மனுக்களும் தற்போது விசாரணையில் உள்ளன. வேறு எந்த மனுவும் திரு. ஜி. பழனிசாமி கொடுத்ததாக கிடைக்கப்பெறவில்லை. இதற்கு முன்பு ஆட்சி செய்தவர்கள் காலத்தில் இதுபோன்ற கேள்வி கேட்டிருந்தால் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு என்னென்ன மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள், என்னென்ன மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன என்று நிச்சயமாகக் கூறியிருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

ஆனால் எங்களால் கூறமுடியும், எனென்றால் அந்த அளவுக்கு அந்தப் பிரிவின் செயல்பாட்டினை கனிப்பொறிகளைக் கொண்டு உயர்த்தி இருக்கிறோம். திரு. பழனிசாமி அவர்கள் மனு கொடுத்து அந்த மனு முதலமைச்சரின் தனிப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றிருந்தால்

அந்த விவரமும் கணிப்பொறி மூலம் இந்நேரம் எனக்கு நிச்சயமாகக் கிடைத்திருக்கும். திரு. பரிதி இளம்வழுதி பேசும்போது தி.மு.க.2 பிரிவின் சென்னை மாவட்ட பொறுப்பாளர் திரு. ஏழுமலை கொலை வழக்கு சி.பி.ஐ-யிடம் மேல் விசாரணைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பொதுவாக ஒரு வழக்கை சி.பி.ஐ-க்கு மாற்ற வேண்டுமென்றால் அந்த வழக்கு பிற தேசங்களின் குற்றவாளிகள் அல்லது பிற மாநிலங்களைச் சார்ந்த குற்றவாளிகள் தொடர்புடையதாகவும் அல்லது பல்வேறு மாநிலங்கள் தொடர்புடைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வழக்காகவும் இருக்க வேண்டும். ஆனால் இந்த வழக்கு உள்ளூர் குற்றவாளிகள் செய்த குற்றமாகும். காவல் துறையினர் ஏற்கெனவே குற்றம் சாட்டப்பட்டவர்களில் 4 பேரைக் கைது செய்துள்ளார்கள். ஏனைய குற்றம் சாட்டப்பட்டவர்கள் யார் என்கின்ற விபரமும் அடையாளம் தெரிந்து வைத்துள்ளார்கள். அதுமட்டுமின்றி ஒரு வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள்தான் விசாரணை மீது திருப்தி இல்லை என்று கோரி வழக்கை மத்திய குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்ற வேண்டுமென்று கோருவார்கள். ஆக இந்த வழக்கை மத்திய குற்றப் புலனாய்வுக்கு மாற்றுவதற்குத் தேவையான உட்கூறுகள் இல்லை. இவ்வழக்கில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் உள்ளூர் குற்றவாளிகள் என்பதும் தெரிகிறது. அதற்கும் மேலாக இந்த வழக்கில் புகார் செய்தவர் கொலை செய்யப்பட்ட ஏழுமலையின் கார் டிரைவர் கென்னடி என்பவர். அதாவது தி.மு.க.2 பிரிவினைச் சேர்ந்தவர். இத்தகைய சூழ்நிலையில் இந்த வழக்கை சி.பி.ஐ-க்கு மாற்ற வேண்டுமென்று திரு. பரிதி இளம்வழுதி கேட்பது விசித்திரமாகவும் வேதனையாகவும் இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி)...*(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not yielding (Interruption) I am not yielding (Interruption) I am not yielding. (Interruption)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி இளம்வழுதி முடிந்த பிறகு கேளுங்கள் *(குறுக்கீடு)* Hon. Chief Minister is not yielding. (Interruption) Not yielding என்றால் உட்காரவேண்டுமென்று அர்த்தம். அது முடிந்த பிறகு கேளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடியிலே கனம் இல்லை என்றால் வழியிலே பயம் இல்லை என்பார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் பொறுத்த வரையில்....*(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னர் நான் கடைசியிலும் விடமாட்டேன். கொடுத்த அனுமதியை தவறாகப் பயன்படுத்துகிறீர்கள். உட்காருங்கள். இது முறை அல்ல. புகார் கொடுத்தவர்கள்தான் சி.பி.ஐ விசாரணை கேட்கவேண்டும், அதில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கேட்க முடியாது என்று சொன்னால் அதற்கு நீங்கள் எழுந்திருப்பதா? (குறுக்கீடு) உட்காருங்கள். இப்போது அனுமதிக்க முடியாது. (Interruption) Point of information, point of clarification எல்லாம் அனுமதிக்க முடியாது. அவர்களாக அனுமதித்தால்தான், அவர்கள் இல்லை, நான் நிறைய பதில் சொல்லவேண்டுமென்கிறபோது அனுமதிக்கமுடியாது. பேரவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்க முடியாது. (குறுக்கீடு) பேரவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்பட அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உட்காரச் சொல்கிறேன். ஒவ்வொரு நாளும் அடாவடித்தனம் செய்தால் நான் அனுமதிக்கமுடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) எப்போது பார்த்தாலும் உங்களைப் பேச அனுமதிக்கும் போதும் இதே மாதிரி அடாவடித்தனம் பிடிக்கிறீர்கள், இடையிலே இருந்துகொண்டும் இதுமாதிரி செய்கிறீர்கள். இதை நான் அனுமதிக்க முடியாது. இப்போது உட்காருகிறீர்களா? நடவடிக்கை எடுக்கவா? (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதியே பெறாமல் பலமுறை, எத்தனையோ முறை பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நீங்கள் ஒவ்வொரு முறையும் கண்டித்து விட்டுவிடுகிறீர்கள். இம்முறை நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்காததால்தான் மீண்டும் மீண்டும் இதே தவறை மாண்புமிகு உறுப்பினர்கள் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, இதை நான் அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மடியில் கனம் இல்லையென்றால் வழியிலே பயம் இல்லை என்பதைத்தான் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் நியாயமாகத்தான் செயல்பட்டு வருகிறோம். இந்த வழக்கை யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் விசாரிக்கலாம். அந்த வகையில் ஒரு ஆட்சேபணையும் கிடையாது. உறுப்பினர்

திரு. பரிதி இளம்வழுதி அவர்களும், அவரது கட்சியைச் சார்ந்தவர்களும் தூய்மையானவர்களாக இருந்தால் இந்த வழக்கைப் பற்றி யார் வேண்டுமானாலும் விசாரிக்கட்டும் என்று தைரியத்துடன் இருப்பார்கள். ஒருவேளை அது இல்லாத காரணத்தினால்தான் இந்த வழக்கை சி.பி.ஐ-க்கு மாற்ற வேண்டுமென்று கேட்கிறார்களோ என்ற சந்தேகம் எல்லோருக்கும் இயற்கையிலேயே வரும். இத்தகைய சூழ்நிலையில் இந்த வழக்கை சி.பி.ஐ-க்கு மாற்றவேண்டுமென்று திரு. பரிதி இளம்வழுதி கேட்டுக்கொண்டதை ஏற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான நியாயமான காரணங்களும் இல்லை என்பதை எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால் அதே நேரத்தில் மற்றவர்களைப் போல அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக சம்பந்தம் இல்லாதவர்களை இந்த வழக்கிலே இழுப்பதற்கான முயற்சியைச் செய்கின்ற அளவுக்கு தரம் தாழ்ந்த செயல்களில் இன்றைய தமிழக அரசோ தமிழக காவல் துறையோ ஈடுபடாது என்பதை உறுதியாக எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

சில முக்கிய அரசியல் தலைவர்களும், பிரமுகர்களும் ஆன்டிசிப்பேட்டரி பெயிலுக்காக கோர்ட்டை மூவ் செய்யப்போவதாக எனக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அவர்களாகவே அப்படிச் செய்தால் அதற்கு நான் பொறுப்பல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். வி. சண்முகம் அவர்களும், திரு. அ. செல்வராசன் அவர்களும் காவல் துறையைச் சார்ந்தவர்களைப் போன்று மற்றவர்கள் காக்கி உடையை உடுத்தக்கூடாது என்பதற்கு சென்னை நகர காவல் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். சில மாநிலங்களில் காவல் துறையினர் மட்டும்தான் காக்கிச் சட்டை அணிய வேண்டும் என்கின்ற சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். தனியார் உளவு நிறுவனங்களும், பாதுகாப்பு நிறுவனங்களும் காவல் துறையைப் போலவே காக்கி உடையை அணிந்து கொள்வதால் பாமர மக்களும் படிப்பறிவு இல்லா ஏழைமக்களும் அவர்களை காவலர்கள் எனத் தவறாக எண்ணிக்கொள்வதற்கு வாய்ப்புகள் இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகும். இது தொடர்பாக தற்போது நடைமுறையில் மாநில அளவில் அதிகாரம் உள்ள சட்டங்களில் ஏதேனும் திருத்தங்கள் கொண்டு வரலாமா அல்லது புதிய சட்டத்தை நிறைவேற்றலாமா என்பதைப்

பற்றி நாங்கள் ஆராய்ந்து விரைவில் ஒரு நல்ல முடிவை அறிவிப்போம் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் சேம்பாக்கத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு குறித்து பேசினார். வேலூர் தனபாக்கியம் கிருஷ்ணசாமி முதலியார் மகளிர் கல்லூரி மாணவிகள் சேம்பாக்கம் கிராமத்தில் கலை விழாவை நடத்தியபோது அப்பகுதியைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மக்களும் கலந்து கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கின்றார்கள். அதனை ஜாதி இந்துக்கள் எதிர்த்ததால் இரண்டு பிரிவினர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. கலவரத்தில் முடிந்த நிகழ்ச்சியின் முடிவில் இரண்டு தரப்பினர் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அப்பகுதியில் தொடர்ந்து அசம்பாவிதங்கள் நடக்காதிருக்க இரண்டு தலைமைக் காவலர்கள், இரண்டு காவலர்கள் மற்றும் ஐந்து ஆயுதப்படைக் காவலர்கள் கொண்ட ரோந்துப்படை அமைக்கப்பட்டது. 26-9-1993 அன்று ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த நூறு பேர் ஒன்று திரண்டு ஜாதி இந்துக்களை தாக்க முற்பட்டபோது, கலவரத்தை அடக்குவதற்காக எடுத்த எல்லா முயற்சிகளும் பயனற்றுப்போனபோது, ரோந்துப் படையின் தலைமைப் பொறுப்பேற்றிருந்த தலைமைக் காவலர் திரு. துரைராஜ் என்பவர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார். குண்டுத் துகள்கள் சிதறியதால் கார்த்தி, சுரேஷ், குமார் மற்றும் சீனிவாசன் ஆகிய நான்கு ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் காயமடைந்துள்ளனர். ஆனால் இந்த தகவலைத் தாமதமாக 27-9-1993 அன்றுதான் அந்த தலைமைக் காவலர் தனது மேல் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார். அந்த குற்றத்திற்காக அந்த தலைமைக் காவலர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர் மீது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காயம் அடைந்தவர்கள் மருத்துவச் சிகிச்சை பெற்ற பின்பு 4-10-1993 அன்று மருத்துவ மனையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர். இச்சம்பவம் குறித்து கோட்ட ஆட்சித் தலைவர் விசாரணை செய்து வருகிறார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் தன்னிடம் உள்ள தகவல்களை இந்த வழக்குக் குறித்து மெஜிஸ்டீரியல் விசாரணை செய்து வருகின்ற கோட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முழுவிவரங்களுடனும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விசாரணை முடிந்து முழு அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்பு தமிழக அரசு அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி

கூறுகிறேன். எனவே யார் மீது தவறு இருந்தாலும் எந்தவிதமான தயவு தாட்சன்யமின்றி அந்த விவரங்களை கோட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்கவேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக காவல் துறையினுடைய பணிகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து விவாதிக்க வேண்டுமென மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்தார்கள். புதிய காவல் நிலையங்களை தங்களுடைய தொகுதிகளில் அமைத்தல், காவல் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு கூடுதல் வசதிகள் செய்து கொடுத்தல், காவலர் நலன் பேணும் திட்டங்கள் போன்றவை குறித்து மொத்தம் 125 வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. காலத்தின் அருமைக் கருதி அவற்றை பல பிரிவுகளாகப் பிரித்து, முக்கியமான விஷயங்களைப் பற்றி மட்டும் விளக்கமாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

காவல் துறையின் கொள்கையைப் பற்றி விவாதிக்க 7 மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். காவல் துறை மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவான கொள்கை விளக்கங்கள், அடிப்படை புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றையே காவல் துறை பற்றிய கொள்கை தொடர்பான எங்களது அரசின் விளக்கங்களாக எடுத்துக்கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் வட்டம் மத்தகிரி, கும்பகோணம் வட்டம் சுவாமிமலை, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் பாகாயம், விருதம்பட்டு, திம்மம்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள புறக் காவல் நிலையங்களை நிரந்தரக் காவல் நிலையங்களாக்க வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது இந்தக் காவல் நிலையங்கள் சேவைப் புரிந்துவரும் மக்கள் தொகை எண்ணிக்கை, குற்ற நிகழ்வுகள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் இவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும்போது இந்த இரண்டு புறக் காவல் நிலையங்களையும் உடனடியாக நிரந்தரக் காவல் நிலையங்களாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. இருப்பினும் ஏற்கெனவே எடுத்த கொள்கை முடிவுபடி, தற்போதுள்ள புறக் காவல் நிலையங்கள் அனைத்தும் படிப்படியாக நிரந்தரக் காவல் நிலையங்களாக மாற்றப்படும்போது, இந்த புறக் காவல் நிலையங்களின் தரமும்

உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் திருவாரூர் நகரில் காவல் துறை உதவிக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தம்புசாமி வெட்டுத் தீர்மானம் ஒன்றை கொடுத்துள்ளார். புதிதாக 74 காவல் உப கோட்டங்கள் 3 வருட காலத்திற்குள் தொடங்கப்படும் என்று சென்ற ஆண்டு பேரவையில் நான் அறிவித்திருந்தேன். அந்தத் திட்டத்தின் கீழ் திருவாரூரில் ஒரு புதிய காவல் உப கோட்டம் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்துடன் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு இடங்களிலுள்ள காவல் நிலையங்களுக்கு கூடுதல் வீட்டு வசதி கோரி வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கட்டிடம் கட்டுவதற்கு நிலம் தயாராக இல்லாத இடங்களில் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. காவல் துறையின் வசம் நிலம் தயாராக உள்ள இடங்களில் புதிதாக 42 காவல் நிலையங்களுக்கும், 10 புறக் காவல் நிலையங்களுக்கும் 5.9 கோடி ரூபாய் செலவில் கட்டிடங்கள் கட்டுவதற்குரிய கருத்துரு ஒன்றினை அரசு பரிசீலனை செய்து வருகின்றது. விரைவில் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல இடங்களில் புதிதாக காவலர் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்து சில வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நான் சென்ற ஆண்டு எனது பதிலுரையில் அறிவித்தவாறு வருடந்தோறும் காவலர்களுக்காக ஆயிரம் குடியிருப்புகள் தமிழ்நாடு காவல் வீட்டுவசதி கழகத்தால் கட்டப்பட்டு வருகின்றன. ஸ்பெஷல் செக்யூரிட்டி குரூப்-சிறப்புப் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் காவலர்களுக்கு 120 குடியிருப்புகளும், 200 பேரக்ஸ் அறைகளும் புதிதாக நிர்மாணிக்க உள்ள காவலர் நகரத்தில் - போலீஸ் சிட்டி-யில் 3 ஆயிரம் குடியிருப்புகளும் கட்டப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையினருக்கு ஊர்திகள், செய்தித் தொடர்பு சாதனங்கள் மற்றும் நவீன ஆயுதங்கள் வழங்குவது குறித்து சில மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். தமிழகக் காவல் துறையை நவீனமாக்கும் பணியை எங்களது அரசு பதவி ஏற்ற காலம் முதலாக மிகவும் தீவரமாக நடைமுறைப்படுத்தி வருவதை இந்த மாமன்றத்தில் பல்வேறு தருணங்களில் நான் விளக்கிக் கூறியுள்ளேன். நாங்கள் பதவி ஏற்றபோது 33 காவல் நிலையங்களுக்கு மட்டுமே ஜீப்

வழங்கப்பட்டிருந்த நிலையை மாற்றினோம். தமிழ்நாட்டில் தற்போதுள்ள 1123 காவல் நிலையங்களில் 663 காவல் நிலையங்களுக்கு ஜீப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) எஞ்சியுள்ள காவல் நிலையங்களுக்கு குறைந்தபட்சம் ஒரு மோட்டார் சைக்கிளாவது வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் ஜீப் வழங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, தமிழகக் காவல் துறையினருக்கு நவீன ஆயுதங்களை வழங்கி, பயிற்சியினையும் அளித்து, அவர்களின் சேவையின் தரத்தை உயர்த்துவதிலும் எங்களது அரசு மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றது. 1991-92 ஆம் நிதியாண்டில் ஆயுதங்கள் வாங்க 2.45 கோடி ரூபாயும் 1992-93 ஆம் ஆண்டு ஆயுதங்கள் வாங்க 3.89 கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டன. கடந்த நிதி ஆண்டான 1993-94-ல் மட்டும் நவீன ஆயுதங்கள் வாங்க 9.45 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக காவல் துறைக்கு 9 m.m. pistol, 9 m.m. Carbine, 7.62 m.m. rifle, 7.62 m.m. machine gun மற்றும் AK—47 assault rifle போன்றவைகள் வாங்கி காவலர்களுக்கு வழங்கப்பட்டு, தமிழகக் காவல் துறை நவீனமயமாக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

தற்போது ஆயுதப் படைப் பிரிவில் பணி புரியும் காவலர்கள் நிரந்தக் காவல் நிலையங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று கோரி சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். தற்போது காவலர்கள் ஒரு சரகத்திலிருந்து மற்றொரு சரகத்திற்கு சொந்த விருப்பம் மூலம் மாறுதல் செய்யப்படும் பணி நடைபெற்று வருகிறது. இது முடிவடைந்த பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள காலியிடங்களைக் கணக்கெடுத்து, அந்தந்த மாவட்டத்தின் ஆயுதப் படைப் பிரிவில் பணியாளர்களது முதுநிலைப்படி மாறுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையில் உள்ள காவல் நிலையங்களில் இயங்கி வரும் பழைய ஜீப்புகளை மாற்றி, புதிய ஜீப்புகளை வழங்க வேண்டுமென்று ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுக்கப்பட்டுள்ளது. ஜீப்புகள் 10 வருஷம் உபயோகம் அல்லது 2,50,000 கிலோமீட்டர் ஓட்டம் என்ற கணக்கின் அடிப்படையில் கன்டெம் செய்யப்பட்டு, புதிய ஜீப்புகள் வாங்கி வழங்கப்படுகின்றன. 1-4-1991 நிலவரப்படி சென்னை மாநகரக்

காவல் பிரிவில் 95 ஜீப்புகள் மட்டுமே இருந்தன. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்பு மேலும் 70 ஜீப்புகள் கூடுதலாக வழங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெட்டுத் தீர்மானங்கள் வாயிலாக எழுப்பப்பட்ட அனைத்திற்கும் உரிய பதிலை நான் நேரமின்மை காரணமாக முழுமையாக அளிக்காவிட்டாலும், அவைகளின் மூலமாக எழுப்பப்பட்ட பிரச்சினைகள் குறித்து அரசு கவனமாகப் பரிசீலனை செய்து உரிய மேல் நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறை தற்போது எதிர்கொள்ள வேண்டிய பணிச் சுமையையும், எதிர்காலத்தில் ஏற்படப்போகும் சவால்களையும் ஆராய்ந்து பார்த்து, காவல் துறை வினைத்திட்பத்தோடும், தொழில் நுணுக்கத்தோடும் செயல்பட்டு, அகில இந்திய அளவில் தலைசிறந்த காவல் துறை என்பதை நிரூபித்து மக்கள் பணியாற்ற இந்த அரசு பல நவீனத் திட்டங்களை வகுத்து, விரைந்து செயல்படுத்தி வருகிறது. காவல் துறையின் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோரிடையே பணி ஆர்வத்தை ஊக்குவித்து, அவர்களுக்குத் தேவையான நவீன ஆயுதங்கள், உபகரணங்கள், தளவாடங்கள் ஆகியவைகளை வழங்கி, அவைகளை இயக்குவதற்குரிய பயிற்சிகளை அளிப்பதற்காக பல புதியத் திட்டங்களை இந்தப் பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. காவல் பணியில் தகவல் தொடர்பு – Telecommunications– எத்தகையதொரு முக்கியமான பணியை ஆற்றுகிறது என்பதை அறிந்துள்ள நாங்கள் தகவல் தொடர்பினைப் பலப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். இந்த ஆண்டு திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் அரங்காணல், நீலகிரி மாவட்டம் துருமுலா, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மாஞ்சோலை, கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிமலை, நாகை-காயிதே மில்லத் மாவட்டம் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் தகவல் தொடர்பு திருப்பு நிலையங்கள் – Repeater stations– அமைக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமின்றி 1378 V.H.F. – ஒயர்லஸ் செட் கருவிகளும், 100 walkie-talkie கருவிகளும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

15 மாவட்டங்களுக்கு இரண்டு கணிப் பொறிகள் மூலம் தகவல் அனுப்பும் கருவிகளும், FAX கருவிகளும் வழங்கப்படும். (மேசையைத்

தட்டும் ஒலி) தகவல் தொடர்பினை மேம்படுத்த சென்னையை அடுத்துள்ள செயின்ட் தாமஸ் மவுன்ட், திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய *3* இடங்களில் *3* புதியத் தகவல் தொடர்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

பிற்பகல் *1-20*

சேர்வராயண்மலையில் அமைந்துள்ள தகவல் தொடர்பு நிலையத்தில் பணிபுரியும் காவலர்களின் நலனுக்காகத் தங்கும் அறைகள் கட்டிக்கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தகவல் தொடர்புக்கு என இந்த நிதியாண்டில் இத்தனைப் பணிகளும் *5.43* கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இது கணிப்பொறி காலம். (Computer Age) காவல் துறையில் தேவையான செய்திகளைச் சேகரித்து, உடனுக்குடன் அவற்றை மற்ற பணிகளுக்கு உபயோகப்படுத்தும் வண்ணம் குற்றப்பிரிவு, நுண்ணறிவுப் பிரிவுகளில் கணிப்பொறி அமைத்து நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. *26* காவல் மாவட்டங்களிலும் ''கிரைம் ரிகார்டு பீரோ'' என்றழைக்கப்படும் குற்றப் பதிவுப் பிரிவுகளில் கணிப்பொறி நிறுவப்படும். காவல்துறை பயிற்சிக் கல்லூரியில் கணிப் பொறி பயிற்சி அளிப்பதற்காக ஒரு தனிப் பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை, கோயம்புத்தூர், சென்னை, திருச்சி ஆகிய நகரங்களில் அமைந்துள்ள நான்கு காவல் நிலையங்களில் பரிசோதனைத் திட்டமாகக் கணிப்பொறிகள் அன்றாடப் பணியில் உபயோகப்படுத்தப்படும் என்பதையும், குற்றப் புலனாய்வு முறை கம்ப்யூட்டர் மூலமாக அங்குலி என்ற புதிய கணிப்பொறி மூலமாக நவீனப்படுத்தப்படும் என்பதையும், இந்தப் பணிகள் அனைத்தும் இந்த ஆண்டு *36* லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

3. தமிழகத்தில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி, ஒயர்லெஸ் செட் மற்றும் ஜீப் ஆகிய வசதிகளைச் செய்துத் தரவேண்டுமென்று இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அந்த வகையில் தொலைபேசி இல்லாத *19* காவல் நிலையங்களுக்கு *6.30* லட்சம் ரூபாய் செலவில் தொலைபேசி இணைப்புகள் உடனடியாக வழங்கி, தொலைபேசி இல்லாத காவல்நிலையங்களே இல்லை என்ற நிலையினை (மேசையைத் தட்டும் ஒலி) நாம் அடையப் போகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. ஆவடி அருகே உள்ள வீராபுரத்தில் *68* ஹெக்டேர் நிலப்பரப்பில் *20* கோடி ரூபாய் செலவில் புதிய காவல்துறை பயிற்சிக் கழகம் (போலீஸ் அகாடமி) ஒன்று நிறுவப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* பயங்கரவாத நடவடிக்கைகளையும், அதனோடு தொடர்புடைய பயங்கரவாத நிகழ்வுகளையும் முறியடிக்க உரிய, உயர்ந்த ரகப் பயிற்சியை காவல்துறையினருக்கு இந்தப் பயிற்சிக் கழகம் வழங்கும். முதற்கட்டமாக வாகனம் ஓட்டும் பயிற்சிப் பள்ளி, வெடிகுண்டு கண்டுபிடித்தல் பயிற்சி மையம், மோப்ப நாய்கள் பயிற்சி மையம், பாதுகாப்புப் பணிகள் அளிக்கும் சிறப்புப் பயிற்சிப் பிரிவு, நிர்வாகப் பயிற்சிப் பிரிவு ஆகிய பிரிவுகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

5. நீண்டு விரிந்து கிடக்கின்ற தமிழகத்தின் கடலோரப் பகுதியைப் பாதுகாக்க, அன்னியர்களின் ஊடுருவலைத் தடுக்க, கடலோரங்களில் அயல்நாடுகளுக்குக் கள்ளக்கடத்தலைத் தடுக்க, மீனவர்களின் நலன் காக்க, தமிழக அரசு *12* கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தினைத் தீட்டி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெறாத நிலையிலும் தமிழகத்தின் கடற்கரைப் பாதுகாப்பை மனதில் கொண்டு இத்திட்டத்தைத் தமிழக அரசே நிறைவேற்ற முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*. இத்திட்டத்தின் கீழ் ஆயிரம் கிலோமீட்டர் நீளத்தில் உள்ள கடற்கரைப் பகுதியில் சோதனைச் சாவடிகளும், ரோந்துப் பணிப் படைகளும் அமைக்கப்பட்டு, கடற்கரைப் பகுதிகள் முழுவதுமாக ரோந்துப் பணி மேற்கொள்ளப்படும். இதற்கான ஒரு தனி கடற்கரை பாதுகாப்புப்படை **(Coastal Security Group)** உருவாக்கப்படும். இந்தப் புதிய பாதுகாப்புப் படையில் *300* காவலர்கள், *34* உதவி ஆய்வாளர்கள், *17* ஆய்வாளர்கள், இரண்டு கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர்கள், ஒரு காவல்துறை கண்காணிப்பாளர் நியமிக்கப்படுவர். அவர்களுக்குத் தேவையான வாக்கி-டாக்கி கருவிகள், ஊர்திகள், சக்திவாய்ந்த பைனாகுலர்கள் ஆகியவை வழங்கப்படும். மேலும் ரோந்துப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக மட்டும் *300* சைக்கிள்கள், *34* மோட்டார் சைக்கிள்கள், *23* ஜீப்புகள், *2* கார்கள் மற்றும் *4* பேருந்துகள் வழங்கப்படும். ரூ.*3.48* கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டம் இந்த நிதி ஆண்டிலேயே தொடங்கப்படும் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*.

பிற்பகல் 1-25

6. பெருகிவரும் மக்கள் தொகை, மாறிவரும் பொருளாதார சித்தாந்தங்கள் சென்னை மாநகர காவல் பணியினை மேலும் கடினமாக்கிக் கொண்டு வருகின்றன. எனவே, மாநகர காவல் துறையை சீரமைப்பதில் தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. வளர்ந்து வரும் மாநகரத்தின் பல்வேறு காவல் துறை பணிகளின் அங்கங்களான, போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு, குற்றப் புலனாய்வு, குற்ற நிகழ்வுகள் தடுப்பு மற்றும் பொது அமைதி பராமரித்தல் போன்றவைகளை மேம்படுத்த மாநகர காவல் பிரிவினை சீரமைப்பதற்கு ஒரு திட்டம் தீட்டி செயல்படுத்த உள்ளோம். முதலாவதாக, சென்னை மாநகரத்தை அடுத்துள்ள சில பகுதிகளை சென்னை காவல் துறை ஆணையாளரின் கீழ் கொண்டுவருவதற்கு சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* பல ஆண்டுகளாக செயல்படுத்தப்படாத இந்தப் பணி எங்களது ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும், புதிதாக மாநகர காவல் துறையின் கீழ் இணைக்கப்பட வேண்டிய பகுதிகளை ஆராய்ந்து அறிவிப்பதற்கு உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) இவ்வாறு மாற்றி அமைக்கப்படும் மாநகர காவல் நிர்வாகத்தில் காவல் துறை துணைத் தலைவர் அந்தஸ்தில் 2 இணை ஆணையாளர்கள் (Joint Commissioners of Police) நியமிக்கப்படுவார்கள் என்பதையும், சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றப் புலனாய்வு ஆகிய பணிகளை அவர்கள் மேற்கொள்வார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

(ஆ) தற்போது உள்ள 3 சட்ட ஒழுங்குப் பிரிவுகள், 4 பிரிவுகளாக மாற்றி அமைக்கப்படும்.

(இ) பெருகிவரும் மாநகர போக்குவரத்துப் பிரச்சினையை சமாளிக்க மாநகரப் பிரிவை 2 பிரிவுகளாகப் பிரித்து மேலும் ஒரு புதிய துணை ஆணையாளர் பதவி புதிதாக உருவாக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஈ) காவல் துறை ஆணையாளர் அலுவலகத்தில் நுண்ணறிவுப் பிரிவு தற்போது கூடுதல் துணை ஆணையாளர் அந்தஸ்தில் உள்ள

பதவி, துணை ஆணையாளர் அந்தஸ்திற்கு உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) குற்றப் புலனாய்வு பிரிவில் சரக அளவில் கூடுதலாக 2 உதவி ஆணையாளர்கள் பதவி உருவாக்கப்படும். இந்தப் பதவிகளை உருவாக்குவதால் தமிழக அரசுக்கு 28 லட்சம் தொடராச் செல்வினமும், 9 லட்சம் ரூபாய் ஒவ்வோர் ஆண்டும் தொடரும் செலவினமும் ஆகும்.

(ஊ) சென்னை மாநகரத்திற்கு வெடி குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் சிறப்புப் படை (Bomb Disposal Squad) ஒன்று பிரத்தியேகமாக 8 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்புப் பிரிவிற்கென பிரத்தியேகக் கருவிகள், ஆயுதங்கள், மோப்ப நாய்கள் ஆகியவைகள் வழங்கப்படும்.

(எ) சென்னை மாநகரக் காவலுக்குத் தற்போது உபயோகத்திலுள்ள லாரிகள், பேருந்துகள், ஜீப்புகள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனங்கள் மிகவும் பழையதாகவும், வேகமாக செல்வதற்குத் தோது அற்றதாகவும் உள்ளன. கவனிப்பார் அற்றுக் கிடந்த இத்தகைய 107 பழைய வாகனங்கள் கழிக்கப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக 2.5 கோடி ரூபாய் செலவில் புதிய வாகனங்கள் சென்னை மாநகர காவலுக்கென வாங்கி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக தமிழகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பணி புரிவதற்குக் கூடுதலாக 1600 பெண் காவலர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). 5.51 கோடி ரூபாய் செலவில் தற்போது ஏற்கெனவே காலியாக உள்ள 1000 காவலர் பணி இடங்கள் உட்பட புதிதாக உருவாக்கப்படும் 600 காவலர் பணி இடங்களுடன் சேர்த்து மொத்தம் 1600 பெண் காவலர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

8. பெண்களின் பிரத்தியேகப் பிரச்சினைகளைச் சட்டப்பூர்வமான முறையில் தீர்த்து வைப்பதற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்து, எங்கள் அரசு பெண்களுக்கு சமுதாயத்தில் இழைக்கப்படும் வரதட்சிணை என்னும் சமுதாயக் கொடுமையை முழுமையாக அகற்ற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் வரதட்சிணை ஒழிப்புப் பிரிவு ஒன்று காவல்

துறையில் துணைக் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் தலைமையில் அமைக்கப்படும். நேரடியாக காவல் துறை துணைக் கண்காணிப்பாளராக நியமனம் செய்யப்படும் பெண் அலுவலர்கள் இந்தப் பிரிவின் தலைவர்களாகப் பணியாற்றுவார்கள் என்பதையும் *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தப் பெண் காவல் துறைக் துணை கண்காணிப்பாளர்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் நேரடியாக மேற்பார்வை இடுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *1-30*

மாறி வரும் சமுதாயத்தின் வளர்ந்து வரும் தேவைகளை உணர்ந்து மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகச் செயல்பட்டு வரும் நமது மாநில அரசு தேவையான பெண் துணை கண்காணிப்பாளர்களை தமிழ்நாடு தேர்வாணையக் குழுமத்தின் மூலமாகத் தேர்வு செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* வரும் காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பெண் துணைக் கண்காணிப்பாளர் எல்லா அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் கண்காணிப்பதோடு வரதட்சிணைக் கொடுமையை முழுமையாக அகற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது உண்மையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

9. இந்த ஆண்டு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்திலுள்ள என் பெயரில் அமைந்த நகரிலும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்திலும் புதியதாக இரண்டு காவல் நிலையங்கள் தொடங்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

10. சென்னை மீனம்பாக்கத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா விமான நிலையம், காமராசர் விமான நிலையம் ஆகிய இரண்டு விமான நிலையங்களையும் இணைத்து ஒரு புதிய காவல் மாவட்டம் \`seperate police district' ஒன்றை உருவாக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய காவல் மாவட்டத்தில் ஒரு புதிய காவல் நிலையத்தை உருவாக்கி அதற்குரிய அதிகாரங்களை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த மாவட்டம் அமைப்பதற்காக *60* இலட்சம் ரூபாய் தொடரும் செலவினமும், *14*

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

இலட்சம் ரூபாய் தொடராச் செலவினமும் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. சென்னை மாநகரக் காவல் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக காவல் துறைக்குச் சொந்தமான 9 ஏக்கர் நிலத்தில் 3000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளையும், பல்வேறு புதிய வசதிகளையும் கொண்ட சென்னை காவலர் நகர் .. 'Police City' ஒன்றை உருவாக்குவது என்று இந்த அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பலவகையான பலமாடிக் கட்டடங்கள் கொண்ட இந்தக் காவலர் நகரில் பள்ளிக்கூடம், சமூகக் கூடம், விளையாட்டுத் திடல்கள், உடற்பயிற்சிக் கூடம், தபால் நிலையம், வங்கி, காவலர் கட்டுப்பாட்டு அறை, போன்ற எல்லா வசதிகளையும் உருவாக்கித் தருவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பல்வேறு கட்டடங்களுக்கான வடிவமைப்புகள் தயாரிப்பதற்காக அனைத்து ஆயத்த நடவடிக்கைகளும் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

12. ஒற்றாய்வுப் பிரிவில் Intelligence Special Branch-ல் பணியாற்றும் காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோரின் நலனைக் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு மாவட்ட அளவிலும் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட அரசு வாடகைக் குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்வதற்கு வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் அவர்களுக்கென்று தனியான குடியிருப்புகளைக் கட்டுவதற்குத் தேவையான அரசு நிலங்களைத் தேர்ந்தெடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

13. சென்ற ஆண்டு அறிவிப்புகளைச் செய்யும்போது ஒவ்வொரு ஆண்டும் 25 உட்கோட்டங்கள் - 'sub-divisions' புதியதாக உருவாக்கப்படும் என்பதை நான் அறிவித்திருந்தாலும், இந்த ஆண்டு மேலும் 24 உட்கோட்டங்கள் சேர்த்து 49 புதிய உட்கோட்டங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலமாக காவல் நிலையங்களை மேற்பார்வையிடும் பணி நன்முறையில் நடைபெறுவதோடு, பதவி உயர்வு பெறாமல் காவல்துறை ஆய்வாளர் அந்தஸ்திலுள்ள தேக்க நிலையைத் தவிர்ப்பதற்கும் இது உதவும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *1-35*

(14) கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் *3.32* லட்சம் ரூபாய் செலவில், *4* புதிய காவல் சுருக்கெழுத்துக் கூடங்கள். 'Shorthand Bureaus' இந்த ஆண்டு அமைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(15) விடுதலைப் புலிகள் போன்ற போராளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கியூ' பிரிவின் வேலைப் பளுவை கருத்தில் கொண்டு ஒரு மேலாளர், மற்றும் *5* சிறப்பு உதவியாளர்களைப் புதிதாக நியமிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(16) சென்னை கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள காவல்துறை இயக்குநர் அலுவலகக் கட்டிடத்திற்குப் பதிலாக எழில்மிகு பலமாடிக் கட்டிடத்தை அதே இடத்தில் எழுப்புவதற்கு இந்த அரசு ஏற்கெனவே முடிவு எடுத்து, இயற்கையோடு இயைந்த கட்டிட அமைப்புக்கான வடிவமைப்பு போட்டிகள் நடத்தப் பெற்று, சிறந்த கட்டுமான அமைப்பு தேர்வு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், இத்திட்டம் இந்த ஆண்டு தொடங்குவதற்கு *3* கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(17) மதுரை சரகத்தின் காவல்துறைத் துணைத் தலைவர்—D.I.G. of Madurai Range அலுவலக கட்டிடம் இந்த நிதி ஆண்டில் *17.50* லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(18) சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வருகின்ற பல காவல் நிலையங்களுக்கும் கழிப்பிட வசதி பல காலமாக செய்து தரப்படவில்லை. இதைப்போன்ற *61* காவல் நிலையங்களுக்கு இந்த நிதி ஆண்டில் *12* லட்சம் ரூபாய் செலவில், கழிப்பிடங்கள் கட்டித் தரப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி).*

(19) அதேபோன்று காவல்துறையின் அலுவலகங்களிலும் குடியிருப்பு

கட்டிடங்களிலும் அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும் என்பதில் எங்கள் அரசு மிகுந்த கவனம் காட்டி வருகிறது. 900 குடியிருப்புகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்களுக்கு, பழுதுபார்க்கவும், மின் இணைப்பு மற்றும் கழிப்பிடங்கள் கட்டித் தருவதற்கும் 73 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(20) தமிழகக் காவல்துறையின் பண்ணிசைக் குழு 'Police Band' ஏற்கெனவே பிரசித்திப் பெற்றதாக இருந்தாலும், மாவட்ட மற்றும் மாநில அளவில் மிகச் சிறந்த குழுவாக அவற்றை மாற்றுவதற்கு சிறப்புப் பயிற்சியும், நவீன இசைக் கருவிகளும் பணியாளர்களுக்கு புதிய சீருடைகளும் 74 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தப் பணியின் சிறப்பை உயர்த்துவதற்காக ஒவ்வொரு மாவட்ட அளவிலும் உதவி ஆய்வாளர் அந்தஸ்தில் 'பான்ட் மாஸ்டர்' பதவி உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(21) காவல்துறைக்குச் சொந்தமான ஊர்திகளையும் வாகனங்களையும் பராமரிக்க தற்போது 2 காவல்துறை சரகங்களில் மட்டும் தொழிற்பட்டறைகள் உள்ளன. காவல்துறை வாகனங்களின் பராமரிப்பை சிறப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக மீதம் உள்ள எல்லாச் சரகங்களிலும் தொழிற்பட்டறைகள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவத் துறையில் தற்போதுள்ள தொழிற்பட்டறைக் கருவிகளும், தளவாடங்களும் காவல்துறைக்கு மாற்றம் செய்து தருவதோடு, கூடுதலாக தேவைப்படும் கருவிகள் இத்துறைக்கு வழங்கப்படும்.

(22) காவல்துறை அலுவலர்களுக்கும் காவலர்களுக்கும் அரசு மருத்துவமனைகளில் மட்டுமின்றி தனியார் மருத்துவமனைகளிலே உயர் மருத்துவச் சிகிச்சை பெற்றுக்கொள்ள காவலர் சிறப்பு மருத்துவ நலத்திட்டம் medical insurance scheme ஒன்றை இந்த நிதி ஆண்டில் இருந்து எங்கள் அரசு செயல்படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இத்திட்டத்தைச் செயல்படுத்த, காவல்துறை இயக்குநர் கட்டுப்பாட்டில் உருவாக்கப்படும் சிறப்பு நிதிக்கு தமிழக அரசு தனது பங்காக 50 லட்சம் ரூபாயை வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(23) அரசின் மற்ற துறைகளில் பணிபுரிபவர்களுக்கு விடுமுறை கிடைப்பது போல், காவலர்கள் விடுமுறைகளை அனுபவிக்கின்ற வாய்ப்பின்றி பணியாற்றவேண்டிய சூழ்நிலை உள்ளது. அவ்வாறு

பணியாற்றும் காவலர்களுக்கு கூடுதல் நேர ஊதியமாக, அதாவது extra time remuneration ஆக 10 ரூபாய் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கூடுதல் நேர ஊதியம் 10 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்பதையும், அதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 70 லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-40

(24) ரூ. 950-க்கும் அதிகமாக அடிப்படைச் சம்பளம் பெறுகின்ற அரசு அலுவலர்களுக்கு மட்டுமே மொபெட் வாங்குவதற்குக் கடன் வசதி வழங்கப்படும் என்கின்ற விதியை காவல்துறைக்கு மட்டும் தளர்த்தி ரூ. 825/ -அடிப்படைச் சம்பளம் பெறும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் மொபெட் வாங்க அரசு கடன் வழங்கும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(25) காவலர்களின் குடியிருப்புகளில் அனைவருக்குமாகச் சேர்த்து ஒட்டுமொத்தமாக ஒரே மீட்டர் அடிப்படையில் மின் கட்டணம் வசூலிக்கப்படுவதால் ஒவ்வொரு தடவையும் அதிகமாக மின் கட்ட்ணத்தைத் செலுத்த வேண்டிய ஒரு சூழ்நிலையை மாற்றியமைக்கவேண்டுமென்று காவலர்களின் குடும்பங்கள் பல காலமாக கோரி வருகின்றார்கள். அவர்களது நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, ஒவ்வொரு காவலரும் அவரவர் தனித்தனியே பயன்படுத்தும் மின் அளவுக்கான குறைந்தபட்ச மின் கட்டணத்தைச் செலுத்தக் கூடிய முறை அமல் செய்யப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 13932 காவலர்களின் குடும்பங்கள் பயன்பெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(26) போக்குவரத்துக் காவல் பிரிவில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் அனுதினமும் சாலைகளில் நின்றுகொண்டு மிக இக்கட்டான சூழ்நிலைகளிலும் பணிபுரிவதைக் கருத்தில் கொண்டு, அலுவலர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் சிறப்பு ஊதியம் இந்த ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் சிறப்பு ஊதியம் மூன்று மடங்காகவும், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள்

மற்றும் துணைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஊதியம் இரண்டு மடங்காகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ரூ. 15.40 இலட்சம் கூடுதலாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(27) காவல் பயிற்சி நிலையங்களில் திறமை மிக்கவர்கள் சேவை கிடைக்குமாறு செய்யவும், அவர்களின் பணி ஆர்வத்தை ஊக்குவிக்கும்பொருட்டு அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் அமல்படுத்தப்படும். தற்போது பயிற்சிப் பள்ளிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அவர்களுடைய அடிப்படை ஊதியத்தில் 15 சதவீதம் சிறப்பு ஊதியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(28) கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஆயுதப்படைப் பிரிவைச் சார்ந்த கூடுதல் கண்காணிப்பாளர் பதவிகள் துணை ஆணையாளர் பதவிகளாக உயர்த்தப்படும்.

(29) சென்னை மாநகர காவல் பிரிவில் மோட்டார் வாகனப் பிரிவைக் கண்காணிக்க துணை ஆணையாளர் அந்தஸ்தில் ஒரு புதிய பதவி தோற்றுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(30) ஏழு காவல்துறை சரக அலுவலகங்களில் நிர்வாக நலன் கருதி காவல்துறைத் துணைத் தலைவர்களுக்கு உதவிபுரிவதற்காக நேர்முக உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். பெரியார், நீலகிரி, விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், திருவண்ணாமலை-சம்புவராயர், இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல்-அண்ணா ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள கண்காணிப்பாளர் பதவிகள் நேர்முக உதவியாளர் அந்தஸ்துக்கு உயர்த்தப்படும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூ. 11.20 இலட்சம் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(31) காவல் துறையில் சிறப்பு பயிற்சிபெற்று, மாவட்டங்களில் பணிபுரியும் 1200 அதிரடிப் படையைச் சார்ந்த காவலர்களின் கடின உழைப்பு, துப்பாக்கிசுடும் திறன், கட்டமைப்பான உடல்திறன் ஆகியவற்றைத் தொடர்ந்து பாரமரிப்பதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு ஒரு சிறப்புத் தேர்வை நிகழ்த்தி, அதில் தேர்வுபெறுபவர்களுக்கு ரூ. 500 மட்டும் சிறப்பு ஊக்கத்தொகையாக ஒரே ஒரு முறை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல்துறை மானியத்தில் நான் இப்போது வெளியிட்ட புதிய அறிவிப்புகளால் அரசுக்கு ரூ. 26 கோடி மொத்த செலவாகும் என்பதையும் இதில் ஒவ்வொரு ஆண்டும் தொடர் இனச் செலவாக ரூ. 14 கோடி அமைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1 45

இந்த அறிவிப்புகளின் வாயிலாக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பணி இடங்கள் 2017 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) காவலர் பதவியிலிருந்து, காவல் துறை துணைத் தலைவர் பதவி வரை கூடுதலாக பணி இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். காவல் துறை நவீனமயமாக்கப்பட்டு மனிதாபிமானமிக்க ஓர் இயக்கமாக மாற்றும் முயற்சிக்கு, நாங்கள் இந்த ஆண்டு எடுத்திருக்கும் பல்வேறு கொள்கை முடிவுகள் உறுதுணையாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அரசைப் பொறுத்த வரையில் எந்தத் தொய்வும் இன்றி தொடர்ந்து மக்கள் நலனுக்காக மக்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்காகச் செயல்பட வேண்டும் என்கிற கொள்கையில் மிகவும் உறுதியாக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை பிரச்சினைகள், எத்தனை இடர்பாடுகள், எத்தனை இன்னல்கள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு சந்திக்கின்ற துணிவும், நெஞ்சுரமும் எங்களுக்கு நிறையவே இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே ஒவ்வொரு ஆண்டும் இன்னும் நன்றாகச் செயல்படவேண்டும் என்கிற எண்ணத்துடன் நாங்கள் செயல்பட்டு வருகின்றோம். காவல், தீயணைப்பு, மாநில ஆயத் தீர்வை ஆகிய மூன்று முக்கியமான துறைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்த கருத்துக்கள் அனைத்தையும் மக்கள் நலம் போற்றும் எங்கள் அரசு கவனத்தில் கொண்டு தேவை எழுகின்ற இடங்களில், நிதிநிலைக்கு ஏற்ப அவற்றிற்கு செயல்வடிவம் கொடுப்போம் என உறுதியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல இந்தத் துறைகளில் குறைகள் எனக் கருதி குறிப்பிட்ட கருத்துக்கள் அனைத்துமே உடனடியாக அரசால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டு அவற்றை உடன் களைவதற்கு உரிய நடவடிக்கைகள் அனைத்தும் சற்றும் தயக்கமின்றி எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்தில் கள்ளச் சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட்ட தொகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட பர்கூர், வால்பாறை பற்றி அறிவிக்கும்போது மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்கள் தெரிவித்த பாராட்டுகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற அதே நேரத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையின் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் இதே விருதையும் பாராட்டையும் பெறுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஒன்றோடொன்று தொடர்புள்ள இந்த மூன்று துறைகளுமே வளர்ச்சியுறும் சமுதாயத்தில், அவை எவ்வாறு இயக்கப்படுகின்றனவோ அதற்கு ஏற்பவே விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இந்தத் கருத்தை எங்களது அரசு நன்கு உணர்ந்துள்ளது.

சட்டம் ஒழுங்கு மிக நல்ல முறையில் பராமரிக்கப்படும் மாநிலம் தமிழகம்; எவ்வகையான இயற்கைச் சீற்றங்கள் ஏற்படினும் அவை உடனுக்குடன் சமாளிக்கப்பட்டு நிலைமை சீராக்கப்படும் மாநிலம் தமிழகம்; மதுவிலக்கு தொடர்பான குற்றங்கள் மிகக் குறைவாகவே நிகழ்கின்ற மாநிலம் தமிழகம் என்ற முப்பெரும் சிறப்புகளை— எங்களது அரசு பதவி ஏற்ற பின்னர் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முப்பெரும் சிறப்புகளை எங்களது அரசு பதவி ஏற்ற பின்னர் ஏறக்குறைய கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து பெற்று வரும் தமிழகம், இத்தனிப்பெரும் சிறப்புகளை என்றென்றும் பெற்று திகழும் வண்ணம், எங்களது அரசு செயல்படும் என்ற உறுதியை எனது அன்பிற்குரிய தமிழக பெரு மக்களுக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக வழங்கிக் கொள்வதில் நான் மிக்க மன நிறைவடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது எடுத்துரைத்த கருத்துகளுக்கும், அவர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் நான் வழங்கிய பதிலுரையில் பெரும்பாலும் விளக்கங்களும் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய சில கருத்துக்களுக்கு நேரத்தின் அருமை கருதி நான் எனது பதிலுரையில் விளக்கங்களை அளித்திராவிடில் அவைக்குறிப்பில் பதிவாகியுள்ள அவை அனைத்தையுமே எங்களது அரசு கவனமாக பரிசீலனை செய்து தேவைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு, காவல் துறை, மாநில ஆயத் தீர்வைத் துறை, தீயணைப்புத் துறை ஆகிய துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் உட்காரச் சொன்னால் உட்கார வேண்டும். இந்த மாதிரிப் பிடிவாதம் பிடித்தால் தர முடியாது. (குறுக்கீடு) உட்காரச் சொன்னால் உட்கார வேண்டும்.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் பேசிவிட்ட பிறகு அனுமதிக்கிறேன் என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நேரத்திலே நீங்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டு உட்காரவில்லையே! அந்த நேரம் எல்லாவிதமான விவகாரமும் செய்து நேரத்தையெல்லாம் கெடுத்திருக்கிறீர்கள். இப்போது உட்காருங்கள். இப்போது உட்கார வேண்டும். (குறுக்கீடு) அந்தமாதிரி எல்லாம் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. (குறுக்கீடு) இப்போது உட்கார வேண்டும். இப்போது உட்காருகிறீர்களா? நடவடிக்கை எடுக்கவா? பரிதி அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்கார முடியுமா? முடியாதா? (குறுக்கீடு) உட்கார வேண்டும். இல்லையென்றால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். திரு. பழனிசாமி. உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன்.

திரு. பழனிசாமி அவர்கள் தெரிவித்த ஒரு கருத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னீர்கள். ஆனால் என்ன இருக்கிறது என்று கேட்டால் அதைவிட கொஞ்சம் கூடுதலாகவே சொன்னது; நான் அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறேன். கொலை செய்த அந்த நபரை நம்முடைய காவல்துறை - நான் எந்த காவல்துறை அதிகாரியைச் சொன்னேனோ அவரே தன் கூடவே அழைத்துக் கொண்டுபோய் அவருடைய வீட்டிலே விட்டு வருகிறார் என்கிற அளவுக்குப் பேசியிருக்கிறீர்கள். அதை நான் குறிப்பிட்டு, அந்த அலுவலரைப் பற்றி என்னிடம் ஆதாரம் கொடுக்காமல் பேசக் கூடாது என்று அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். எனவே அந்தப் பிரச்சினையை நீங்கள் எழுப்பியிருக்கிறீர்கள். அந்தப் பிரச்சினைக்குப் பதில் சொல்கின்றபோது நான் அந்தக் குறிப்பிட்ட பகுதியை நீக்கியிருக்கின்ற காரணத்தால் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை, தொய்வு இருக்கிறது என்கிற அடிப்படையில் நீங்கள் பேசியிருக்கிறீர்கள் என்று முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னது அந்தப் பகுதியை நான் நீக்கிவிட்டேன். அதையே அப்படித் திரும்ப சொல்ல முடியாது. ஆகவே, நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாக

நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் என்று பதில் சொன்னார்கள் அதை நான் நீக்கியிருந்ததால். நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்—நான் சொல்லிவிடுகிறேன், நீங்கள் அப்புறம் வேண்டுமானால் நீக்கிவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே அந்தப் பிரச்சினையை நீங்கள் சொல்லியிருக்கிற காரணத்தால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டி வந்தது.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகின்றபோது சில காவல்துறை அதிகாரிகள் இதுபோன்று குற்றவாளிகளுக்கு துணை போகிறார்கள் என்று சொன்னேன். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஆதாரம் சொல்ல வேண்டும் என்று சொல்கிறபோதுதான் வடிவேலு அவர்கள் கொலை செய்யப்பட்டு அவரையே அந்த இன்ஸ்பெக்டர் அழைத்துக்கொண்டு போய் வீட்டிலே விடுகிறபோது மனைவி சொல்கிறார், ஐயோ, கொலைகாரன்தான் இவர் என்று சொன்னதற்குப் பிறகு அவன் எஸ்கேப் ஆகிவிடுகிறான். அதற்குப் பின்னால் பல பேர்களை கைது செய்து அந்தக் கொலைக்கு காரணமாக இருந்த முதல் குற்றவாளி அந்த இன்ஸ்பெக்டருடைய ரூமிலேயே தங்கியிருக்கின்றபோது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கு மேற்பட்டிருக்கின்ற காவல்துறையினுடைய உயர் அதிகாரிகள்தான் நடவடிக்கை எடுத்து கைது செய்தார்கள். அதைத்தான் நான் குறிப்பிட வந்தேன். (குறுக்கீடு) நான் குறிப்பிட வந்தது அதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் குறிப்பிட வந்தது என்றால் எப்படி? நான் நீங்கள் சொன்ன பகுதியை நீக்கிவிட்டேன். அதற்குப் பிறகு அந்த இன்ஸிடெண்ட்டை நீங்கள் கோட் செய்து இருப்பதால் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது (குறுக்கீடு) அந்தக் காவல்துறை அதிகாரியே கூட அழைத்து ... முதலமைச்சரும் இப்படிச் சொன்னார்கள் என்று நான் நீக்கப்பட்ட பகுதியை திரும்பவும் சொல்லி பதில் சொல்ல முடியாது. ஆகவேதான் அவ்வாறு சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் கோட் செய்த பகுதிக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் கோட் செய்யவே இல்லை என்று நீங்கள் சொல்ல முடியாது. அதற்கு சொன்னேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை என்கிற அந்த வார்த்தையை ஏன் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றால் நீங்கள் பயன்படுத்திய வார்த்தையை நான் நீக்கிவிட்டேன்.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது பழனிசாமி நடவடிக்கையே

எடுக்கப்படவில்லை என்று சொன்னதும் பதிவாகியிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதுபோன்று காவல்துறை அதிகாரி நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் சொல்லவேயில்லை. நான் எந்த வகையிலும் சொல்லவில்லை. எனக்குக் கொடுத்திருக்கின்ற பேச்சுக் குறிப்பிலே எதுவுமே இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இங்கே கேளுங்கள். அந்தக் காவல்துறை அதிகாரியே அந்தக் கொலையைச் செய்தவரை கூடவே அழைத்துக்கொண்டு போகிறார் என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கவில்லை என்கிற பொருளில் சொல்கிறீர்கள் என்றுதான் அவர்கள் பதில் சொல்ல முடியும். எனவேதான் நான் நீக்கிய பகுதியை...

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது தெளிவாகவே சொன்னார். அதாவது வசதி படைத்தவர்களுக்கு காவல்துறை துணை போய்க்கொண்டிருக்கிறது என்பதற்கு உதாரணத்தைச் சொல்கின்றபோது ஒரு காவல்துறை அதிகாரியைப் பற்றி அவர் சொன்னார். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்கிறபோது அதை நீங்கள் நீக்கினீர்கள். ஆனால் அவர் இன்றைக்குத்தான் சொல்கிறார். உயர் அதிகாரிகள் போய் நடவடிக்கை எடுத்தார்கள் என்று அவர் இன்றைக்குச் சொல்கிறார். அன்றைக்கு (குறுக்கீடு) இருங்க பழனிசாமி, இப்போது என்னை நீங்கள் சொல்லவிடுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, எங்கே சொல்ல விடுகிறீர்கள்? துவக்கத்திலேயே முடித்து விடுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னது இருக்கிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எனவே, அன்றைக்கு பழனிசாமி அவர்கள் காவல்துறை அதற்குப் பின்பு தொடர்ந்து எடுத்த நடவடிக்கையைப் பற்றி சொல்லவில்லை. ஆனால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே தான் சொல்லியிருக்கிறீர்கள், அது ரெக்கார்டு ஆகியிருக்கிறது. இல்லை நான் சொல்கிறேன் நீங்கள் அப்புறம் வேண்டுமானால் நீக்கிவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இப்படி சொல்லிவிட்டு,

சொல்லும்போது நான் என்ன செய்வது? நான் நீக்கித்தான் ஆகவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் சொல்கிறபோதே ''நான் சொல்லிவிடுகிறேன், நீங்கள் பிறகு நீக்கி விடுங்கள்'' என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) ஆகவே, அதிலே பிரச்சினை வேண்டாம். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: நீங்கள் எங்கே பேச விடுகிறீர்கள், துவக்கத்திலேயே நீங்கள் (குறுக்கீடு) முழுமையாக என்ன சொல்கிறோம் என்பது இல்லாமல் போய்விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, விதிமுறைகளுக்குப் புறம்பாக நான் எப்படி ரெக்கார்டில் வைத்துக் கொண்டு இருக்க முடியும்? (குறுக்கீடு) நீங்களே இருக்க முடியாது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். பிறகு நீக்கி விடுங்கள் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். எனவே அதில் பிரச்சினை வேண்டாம். திரு. தம்புசாமி, பேசுங்கள். (குறுக்கீடு) சரி, திரு. பழனிசாமி பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த சாராய ஒழிப்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் பாராட்டப்பட்டு இருக்கிறார்கள். மற்ற உறுப்பினர் இன்னும் ஒருவர் பாராட்டைப் பெற்று இருக்கிறார். நாங்கள் எல்லாம் பெற வேண்டும். அநேகமாக 234 தொகுதிகளிலே 2 பேர் பெற்றிருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நாங்களும் பெறுவதற்கு (குறுக்கீடு) என்னைப் பேச விடுங்கள், அப்புறம் நீங்கள் ஏதாவது சொல்லுங்கள். இப்படி இடையிலே குறுக்கிட்டால் என்ன சொல்ல வருகிறோம் என்று தெரிவது இல்லை. ஆகவே, இந்த 232 தொகுதிகளிலும் நாங்களும் அந்தப் பரிசைப் பெறுவதற்கு, பாராட்டைப் பெறுவதற்கு காவல் துறை ஒத்துழைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிடுகின்றபோது இந்த 234 தொகுதிகளிலும் இத்தகைய சிறப்பைப் பெற காவல் துறை ஒத்துழைப்பார்களா என்று கேட்ட கேள்வியே ஏதோ உள்நோக்கத்துடன் கேட்கிறார் என்றே எனக்குத் தெரிகிறது. எந்த ஒரு தொகுதியும் கள்ளச் சாராயம் விற்பனையோ, காய்ச்சுதலோ இல்லாத ஒரு தொகுதி என்று அறிவிக்கப்பட வேண்டுமானால் அந்தத் தொகுதியில் வாழ்கின்ற மக்களும், சட்டமன்ற

உறுப்பினர்களும் காவல் துறையோடு ஒத்துழைத்தால் நிச்சயமாக அந்தச் சிறப்பினை எய்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேடயம் பெறுவதிலே யாருக்கும் கருத்து வித்தியாசம் கிடையாது. ஆனால் மற்ற தொகுதிகள் முழுவதிலும் விற்கிறதா என்ற ஒரு கேள்வி எழுப்பக்கூடிய ஒரு சூழ்நிலை இங்கே ஏற்படுகிறதே; இது எப்படி மற்ற அங்கத்தினர்களை மதிக்கிற, அல்லது மற்ற அங்கத்தினர்களின் தொகுதிகள் குறித்த நிலவரங்களைப் பார்க்கிறபோது இது சரியானது தானா என்று தாங்கள் பரிசீலிக்கவேண்டுமென்றும், அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது மதுவிலக்கு பிரச்சாரக் குழுவினர் எடுத்த ஒரு முடிவு. அந்தப் பிரச்சாரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்பதற்காகத்தான் இந்த முடிவு எடுத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கேடயம் வழங்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புரகிபிஷன் புராபகண்டா கமிட்டி' என்று ஒரு உயர் மட்டக் குழுவினை அமைத்து அந்தக் குழு வழங்கிய பரிந்துரையின் பேரில் இத்தகைய ஒரு விருது ஏற்படுத்தப்பட்டது. ஆக, கள்ளச் சாராயம் எந்தவிதத்திலும் காணப்படாத, அறவே ஒழிக்கப்பட்ட தொகுதி என்று எது மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்படுகிறதோ அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்களை ஊக்குவிக்கும்பொருட்டு ஒரு விருது, ஒரு கேடயம் வழங்கப்படலாம் என்று அவர்கள் முடிவு செய்தார்கள். ஆகவே, மற்ற தொகுதிகளைப் பற்றி இன்னும் அத்தகைய அறிவிப்பு வரவில்லை என்று சொன்னால் அந்தத் தொகுதி மக்களையோ அல்லது அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களையோ நாம் உதாசீனப்படுத்துவதாகவோ அல்லது அவமதிப்பதாகவோ எப்படி எடுத்துக்கொள்ள முடியும் என்று திரு. தம்புசாமி அவர்கள் கருதுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி அவர்கள், நான் சொல்லிவிடுகிறேன். இன்னும் மற்ற தொகுதிகளும் வர வாய்ப்பு இருக்கிறது. இதே அவையில் திரு. வி.பி. சந்திரசேகர் பேசுகிறபோது சொன்னார், என்னுடைய தொகுதியிலே அறவே இல்லை என்று. நான் உடனடியாக அதை விசாரித்தேன். அவருடைய தொகுதியில் ஏறத்தாழ 19 வழக்குகள் பதிவாகியிருக்கின்றன. எனவே,

அவ்வாறு பதிவாகியிருக்கிற காரணத்தால்—அவர் தொகுதியில் அந்த 19-ம் இல்லாமல் செய்து விடுவார்களானால் அடுத்த ஆண்டு அவருக்கும் அந்தக் கேடயம் கிடைக்கும். எனவே, அதேபோல் பல தொகுதிகள் வரவேண்டும். பல தொகுதிகள் வரவேண்டும் என்பதுதான் இதிலே ஆசையே தவிர இரண்டு தொகுதிகள் மட்டுமல்ல. அடுத்த ஆண்டு தங்களுடைய திருவாரூர் தொகுதியும் வருமானால் உங்களுக்கும் பாராட்டுதான். வேறு பிரச்சினையைச் சொல்லுங்கள், திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கு கமிட்டி இப்படி ஒரு முடிவு எடுப்பதை நான் வரவேற்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் மாவட்ட அளவிலோ அல்லது தொகுதிகள் அளவிலோ எங்கேயும் இப்படி ஒரு மதுவிலக்கு கமிட்டி அமைக்கப்பட்டதாகவே இல்லை. நானே தொடர்ந்து சென்ற ஆண்டும் பேசுகிறபோது வற்புறுத்தியிருக்கிறேன். டி.டி.சியில் பேசுகிறபோதும் வற்புறுத்தியிருக்கிறேன். இதைச் சரியாக அமல்படுத்தவேண்டுமென்று சொன்னால் ஒரு சர்வ கட்சியைக் கொண்ட குழு கண்டிப்பாக அமைக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தியிருக்கிறேன். ஆனால் இதுவரையில் அமைக்கப்படவில்லை. இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் எப்படி அதிலே செய்ய முடியும்?

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாவட்டக் குழு அமைத்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி சொல்வதை நான் மறுக்கிறேன். அத்தகைய குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டன. மாவட்ட அளவிலும், தொகுதி அளவிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் உண்மை.

திரு. வே. தம்புசாமி: அப்படியென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாமல் அமைத்து இருக்கிறார்களா?

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து வெட்டுத் தீர்மானங்களும் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி நீங்கள் கோரிக்கைகளை வைக்கலாம். நான் அதில் இல்லை என்று சொல்லி, அதற்குரிய

விளக்கங்களைப் பெறலாம். அதனால் ஒன்றும் இல்லை. இதிலே சட்டமன்ற உறுப்பினர்களும் உண்டு என்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்கு அதில் சரியான விவரம் தரப்படவில்லையா அல்லது தங்களை அதில் நியமிக்கவில்லையா என்பதை விசாரித்துச் சொல்லலாம், உட்காருங்கள். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு, டி.எஸ்.பி., ஏ.ஆர். பிரிவில் இளம் ஆய்வாளர்களாக பணி புரிபவர்கள், சட்டம் ஒழுங்கு பயிற்சிக்கு அனுப்புகின்றபோது, பட்டதாரிகளை மட்டுமே அனுப்புகிறார்கள். ஆகவே அந்தச் சட்டம் ஒழுங்கு பயிற்சிக்கு பட்டதாரிகளை அனுப்புகின்றபோது பிளஸ் 2, பி.யூ.சி. படித்த அந்த இளம் ஆய்வாளர்களையும் பயிற்சிக்கு அனுப்புவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறையில் ஒவ்வொரு மட்டத்திலும் ஒரு ஸ்டான்டர்டு மெயின்டெய்ன் செய்ய வேண்டுமென்பதற்காக, மினிமம் குவாலிபிகேஷன் பிரஸ்கிரைப் செய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

HON. SPEAKER: Dr. Beatrix D' Souza.

DR. BEATRIX D' SOUZA: Hon Speaker Sir, I would like to draw the attention of the Hon. Chief Minister to a remark made by Thiru V. Selvam, General Secretary of the 'Hindu Munnani', reported in 'India Today' of April 15th, that the next target of their destruction would be the shrine at Velankanni in Nagapattinam. They have already performed Kar Seva before the Cathedral at Pondicherry. There have also been disquieting instances. A priest was murdered at Ooty and students at the Coimbatore Seminary have been attacked and also on Easter Sunday, a priest who was building a church was threatened that the church would soon become a temple.

The Christian community would like an assurance from the Chief Minister that communal harmony would be protected and maintained.

HON. DR. J. JAYALALITHA: Hon. Speaker Sir, I would like to assure the Hon. Member Mrs. Beatrix D' Souza that this Government is a secular Government (Thumping of desks) firmly committed to

maintaining communal harmony. I would also like to point out to the Hon. Member that at the time when the Babri Masjid was destroyed and the whole of India was convulsed in communal conflagration, we maintained a proud record of being the most peaceful State in the entire country. (Thumping of desks)

I would like to assure the Hon. Member that this Government will not tolerate any kind of communal bias and will put it down with a firm hand. (Thumping of desks) I assure the Hon. Member that the most world renowned famous shrine of Velankanni and any other religious places of worship which are threatened will be provided with full protection (Thumping of desks) and I would like to assure the Member that there need be no apprehensions or any fears on this ground and that we will provide the same kind of protection to priests of all religions and places of worship belonging to all religions. (Thumping of desks).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் எத்தனையோ இன்னல்கள் இருந்தாலும்கூட அவற்றிற்கெல்லாம் இடம் கொடுக்காமல் எனக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாநில காவல்துறை மற்றும் ஆயத்தீர்வைத் துறையினருக்கும், கோவை மாவட்டத்தினுடைய காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கும், கோவை மாவட்டத்தினுடைய மாவட்ட நிர்வாகத்தினருக்கும், என்னுடைய வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக என்னோடு துணைநின்று எனக்கு உதவி செய்த அனைவருக்கும், என்னுடைய தொகுதி மக்களுக்கும் இந்தப் பேரவையின் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு மற்றபடி, அந்தத் தொகுதியிலே கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக நானே கள்ளச்சாராயம் காய்ச்சுகின்ற இடத்திற்குச் சென்று, நானே அதை அடித்து, உடைத்து அந்தக் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களால் விரட்டப்பட்டிருக்கிறேன் என்பதையும் தகுந்த ஆதாரத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் சொல்லியிருக்கின்றேன்.

பிற்பகல் 2-05

அதுமட்டுமல்லாமல், கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கான அனைத்துப் பிரச்சாரங்களிலும் நான் ஈடுபட்டு, கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக மிகவும் பாடுபட்டிருக்கிறேன் என்பதையும் இந்த

மாமன்றத்தில் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலவர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேரவைத் தலைவரவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி: தலைவரவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொன்னேன் என்றால் நீங்கள் அந்த (குறுக்கீடு) சரி, திரு. இளம்வழுதி

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராயபுரம் ஏழுமலை அவர்களுடைய கொலை வழக்கு சம்பந்தமாக மத்தியப் புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்கு விட வேண்டுமென்று நான் வைத்த கோரிக்கைக்குப் பதில் அளிக்கின்ற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள், மடியிலே கனம் இல்லையேல், வழியிலே பயம் இல்லையே என்று கேட்டார்கள். மடியிலே கனம் இல்லை, வழியிலும் பயம் இல்லை. அதனால்தான் மத்தியப் புலன் ஆய்வுத் துறை விசாரணை வேண்டுமென்று கேட்கிறோம். ** (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வி கேட்க வேண்டும், பழையபடி விவாதத்தைத் தோற்றுவிக்கக் கூடாது. நான் திரும்பவும் வற்புறுத்துகிறேன் என்று வேண்டுமானால் சொல்லலாம். அதற்குப் பதில் பெறலாம்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வழக்கில் நியாயம் கிடைக்குமா, நீதி கிடைக்குமா என்று புகார் கொடுத்தவர்தான் கவலைப்பட வேண்டுமே தவிர மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி ஏன் கவலைப்படுகிறார் என்றுதான் எங்களுக்குப் புரியவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ** என்பதை அவர்கள் இங்கே மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பேச்சுக் குறித்து பேரவைத் தலைவருடைய தீர்ப்பு தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மாதிரி ஒரு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது; (குறுக்கீடு) இருந்த விவரத்தை அப்படியே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவிக்கிறார்கள். அதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உள்நோக்கம் கற்பிப்பதை அனுமதிக்க முடியாது. அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் கோரிக்கை வைக்கிறேன் என்றால் கோரிக்கையை வேண்டுமானால் வையுங்கள்.

திரு. இளம்வழுதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2, மாநில ஆயத்தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. *(கூச்சல்-குழப்பம்)*

4. விதி 120-ன் கீழ் உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப்பெறுதல் - தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர் திரு. இளம்வழுதி பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

வாக்கெடுப்பு நேரத்தில். (குறுக்கீடு) பரிதி இளம்வழுதி அவையை விட்டு வெளியேற வேண்டும். பரிதி இளம்வழுதியை அவையை விட்டு அப்புறப்படுத்தவும். பரிதி இளம்வழுதியை அவையை விட்டு அப்புறப்படுத்த வேண்டும். இதில் பேசிய எதுவும் அவைக்குறிப்பிலே இருக்காது. சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று கேட்டது மட்டுமே அவைக்குறிப்பிலே இருக்கும். (குறுக்கீடு) பரிதி இளம்வழுதியை அவையிலிருந்து அப்புறப்படுத்தவும். (கூச்சல்-குழப்பம்) காவலர்களோடு மோதக்கூடாது. காவலர்கள் அவரை அப்புறப்படுத்தவும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

இளம்வழுதி இந்தப் பேரவையில் பலமுறை இதைப்போல முறைகேடாக, அருவருக்கத்தக்க முறையிலேகூட சில நேரங்களில் நடந்து கொண்டு, பேரவையைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்.

(திரு. இளம்வழுதி அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

இது மூன்றாவது முறை என்றேகூட சொல்ல வேண்டும். ஒருமுறை நான் வெளியேற்றியதற்குப் பிறகு முதல் முறையாகத்தான் வெளியேற்றியிருக்கிறேன் என்று அவர் வெளியிலே போய் தகராறுகூடச் செய்தார். ஆனால் இதைப்போல பல முறை முறைகேடாக இந்த அவையிலே நடந்தவர். எனவே, இப்பொழுது இரண்டாவது முறையாகவும் காவலர்கள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் பேரவையின் இந்தக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு அவரை அவையிலிருந்து தள்ளி வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) வாக்கெடுப்பு நேரத்தில் இந்த மாதிரி விவகாரம் எல்லாம் வரவே கூடாது.

6. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 8, 13,75,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஆ) கோரிக்கை எண் 15-காவல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 15 — காவல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன் திரு.வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா.அப்பு நடேசன்.

பிற்பகல் *2-10*

திரு. இரா. அப்பு நடேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''காவல் துறை பற்றிய *15* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ். ரூ. *387,19,15,000*—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் *16* —தீயணைப்புப் பணிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 29,02,29,000/ க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஈ) கோரிக்கை எண் 29-சமூக நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த மானியக் கோரிக்கை மீதான விவாதம் கோரிக்கை எண் 29—சமூக நலன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 476,80,12,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2256, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'8 ஆம் வகுப்பு வரை படித்துள்ள ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகை ரூ. 5000/—வழங்கப்படாதது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 476,80,12,000/—ல் ரூ. 100/—குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2301, திரு. மா. சுந்தரதாஸ்.

Thiru.M. SUNDARADOSS: Mr. Speaker sir,

To discuss the need to set up creches in various residential localities in cities like Madras to assist the office-going couples and to charge a nominal fee, I move –

`` that the sum of Rs. 476,80,12,000/- allocated under Demand No.29—Social Welfare be reduced by Rs.100/-".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும், பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அவைக் குறிப்பில் ஏற்றிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான விளக்கங்களுக்குப் பின், என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் மாலை தொடரும். பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை *4-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் மாலை 4-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்ட சமூகநலன் பற்றிய மானியக் கோரிக்கை விவாதம். திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறையினுடைய மானியத்திலே கலந்துகொண்டு காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களைக் கூறுவதற்கு நான் விருப்பப்படுகிறேன்.

@ 799 முதல் 864 வரையிலான பக்கங்களில், இணைப்பு—I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இந்தியாவைப் போன்றதொரு பின்தங்கிய நாட்டிலே சமூகநலத்துறை ஆற்றவேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. ஒரு தேசம் தொழில் துறையில் எவ்வளவு சிறந்து விளங்கினாலும், விஞ்ஞான தொழில் நுட்பங்களில் எவ்வளவு சிறந்து விளங்கினாலும் அதனுடைய எல்லாப் பலன்களும் ஏழை எளிய மக்களுக்குச் சென்றடையுமா என்றால் அடையாது. அப்படி சமுதாயத்தில் விடுபடுகிற மக்களை எல்லாம் பொறுக்கி எடுத்து அவர்களுக்கும் எல்லா உதவிகளும் சென்றடையவேண்டும் என்பதற்காகத்தான் மனிதநேயம் உள்ள அரசியல் தலைவர்களும், அறிஞர்களும் சேர்ந்து இந்த சமூகநலத் துறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு தேசம் தன்னுடைய சாதனையாக எவ்வளவு விஷயங்களைப் பறைசாற்றிக் கொண்டாலும்கூட மிகச் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக என்ன சென்றடைந்திருக்கிறது என்ற கணக்கு வருகிறபோதுதான் உண்மையிலேயே அரசாங்க நடைமுறைகள் ஏழை மக்களைச் சென்றடைந்திருக்கிறது என்பதை நம்மால் உணர முடியும். இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை முதல் முறையாகத் தமிழகத்தில் கொண்டு வந்தார்கள்.

சமுதாயத்தில், பொருளாதாரத்தால் மிகவும் நலிந்த பிரிவினராக இருப்பவர்களுடைய குழந்தைகளையும் பொறுக்கி எடுத்து மதிய உணவு இடுகிற ஒரு சீரிய திட்டத்தைப் பெருந்தலைவர் காமராஜர் கொண்டு வந்தார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், தமிழகத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களைத் தட்டெடுக்க வைத்திருக்கிறார் காமராஜர் என்று சொல்லி அதைக் கேலி பேசுகிற ஒரு சூழ்நிலை அன்றைக்கு இருந்தது. மனித நேயத்தோடு கொண்டு வந்த திட்டம் என்பதனை அவர்கள் அன்றைக்கு மறுத்தார்கள். ஆனால் அதன்பிறகு வந்த மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தத் திட்டத்திற்கு மேலும் மெருகூட்டி, மேலும் சிறப்போடு அதனைச் செய்து சமுதாயத்தில் மிகவும் நலிந்த பிரிவினராக இருக்கின்ற எல்லா ஏழை எளிய குழந்தைகளுக்கும் அந்த மதிய உணவு சென்றடையவேண்டும் என்று சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்றைக்கும் கூட ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. 200 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டத்திற்காக செலவழிப்பதற்குப் பதிலாக ஆண்டு ஒன்றுக்கு 10 சர்க்கரைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் 20,000 பேருக்கு வேலை தரலாம்; அதன்மூலம் ஏழை எளிய மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்றெல்லாம் கூட ஒரு விவாதம் அடிபட்டது. ஆனால் எவ்வளவு

தொழிற்சாலைகள் வந்தாலும் எவ்வளவு விஞ்ஞான மேம்பாடு வந்தாலும் சமுதாயத்தில் மிகவும் கீழே இருக்கின்ற பிரிவினர் அந்த இடத்தை எட்ட முடியாது என்பதற்காகத்தான் அந்தப் பிரிவினருடைய குழந்தைகளுக்கு வயிறார உணவு கொடுத்தால் ஓரளவுக்கு படித்து முன்னேறுவார்கள் என்பதற்காக அன்றைக்கு சத்துணவுத் திட்டத்தை மேலும் செம்மைப்படுத்தினார் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள். அந்தச் சத்துணவுத் திட்டம் மேலும் சிறப்பாக நடைபெறவேண்டும் என்பதற்காக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களும் அதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 1983 ஆம் ஆண்டு ஒரு மாணவனுக்கு 13 பைசா மதிய உணவுக்காக, சத்துணவுக்காக மானியமாகக் கொடுக்கப்பட்டது.

பிற்பகல் 4-05

ஆனால் இன்றைக்கு 1994-ம் ஆண்டு. 10 ஆண்டுகள் ஆகியும், அந்த 13 பைசா அப்படியே இருக்கிறதே ஒழிய அதை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நம்முடைய அரசுக்கு வராதது மிகவும் வேதனைக்குரிய ஒரு அம்சமாகும். இந்த 10 ஆண்டுகளில் எல்லா விலைகளும் ஏறியிருக்கின்றன. அரசு ஊழியர்களுடைய சம்பளம் அதிகரித்திருக்கின்றது. பொருட்களுடைய விலைகள் தாறுமாறாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மதிய உணவிற்குக் கொடுக்கப்படுகின்ற மானியம் மட்டும் அப்படியே இருக்கிறது. அதிலேகூட ½ பைசாவை உப்புக்காக நீங்கள் ஒதுக்குகின்றீர்கள். 12½ பைசாதான் கைக்குப் போய் சேருகிறது. அந்த உப்பும் வருடம் முழுவதும் கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. வருடத்திலே ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள்தான் சத்துணவுக் கூடங்களுக்கு உப்பு வழங்கப்படுகிறதே ஒழிய வழங்கப்படாத மாதங்களையும் சேர்த்து உப்புக்கான 1/2 பைசாவை பிடித்துக் கொள்கிறார்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே கிளாரிபை செய்துவிடுகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அழகிரி அவர்கள் மானியத்திற்கானத் தொகையை உயர்த்தவில்லை என்று சொன்னார்கள். காய்கறிக்காக கொடுக்கப்படுகின்ற மானியத்தை உயர்த்துவதும் உயர்த்தாததும் அந்தந்த சத்துணவு பகுதியிலே இருக்கின்ற சத்துணவுக் கூடங்களைப் பொறுத்தது. எப்படியென்றால் இப்போது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலேதான் இந்த ஆண்டு 91 பைசா இதுவரை ஒரு குழந்தைக்கு உணவுக்காகச் செலவிடப்படுகிற தொகையானது ரூ.1.08 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவதாக அந்தந்தப் பகுதியிலே காய்கறி பயிரிடக்கூடிய தோட்டங்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு மட்டும் சிடா திட்டத்தின் மூலமாக 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அந்த 50 ரூபாயை அவர்கள் காய்கறித் தோட்டங்கள் அமைப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இல்லாத இடங்களில் அந்தப் பகுதியிலே அதை அவர்கள் காய்கறிக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற தகவலையும் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற சத்துணவு அமைப்பாளர்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்பதையும், மூன்றாவதாக உப்புக்குக் கொடுக்கப்படுகிற ½ பைசாவை அரசாங்கம் மீதப்படுத்தி பிடித்துக் கொள்கிறது என்ற தவறான தகவலையும் உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். எந்தச் சத்துணவுக் கூடங்களிலும் அப்படி பிடிக்கப்படுவதில்லை. குறிப்பிட்ட ஏதாவது சத்துணவு மையத்தை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார் என்றால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கிற எல்லா சத்துணவு மையங்களுக்கும் நான் சென்று அவர்களோடு ஒரு தீவிரமான ஆலோசனை செய்த பிறகுதான் இந்தத் தகவலை சொல்கிறேன் (குறுக்கீடு).... முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தீவிர ஆலோசனை, உங்களுடைய தொகுதியில் என்பது, எல்லா சத்துணவுக் கூடங்களுக்கும் சென்று தீவிர ஆலோசனை நடத்துவது என்பது போராட்டத்திற்காக இருக்குமே ஒழிய நல்ல திட்டமாக இருந்தால் அதை நிறைவேற்றுவதற்கு இதற்கு முன்னாலே என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக தீர்க்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்மறையாகவே பேசிக்கொண்டிருக்கிறார்கள். போராட்டத்திற்காக அல்ல. எங்களுடைய கடமை சட்டமன்றத்திலே பேசவேண்டியதுதான். நாங்கள் சட்டமன்றத்தில் பேசினால்தான் உங்கள் கடமைகளை நீங்கள் சரியாக ஆற்றுகின்றீர்களா என்பதை பார்த்துக்கொள்ள முடியுமே ஒழிய

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சட்டமன்றத்திலே பேச வேண்டிய கடமை மட்டுமல்ல, உங்களுடைய தொகுதியில் எவ்வளவு குழந்தைகள், லட்சக்கணக்கான குழந்தைகள் சாப்பிடுகின்ற அந்த சத்துணவு மையங்களைப் பற்றிய எந்தத் தகவலாக இருந்தாலும் அதை சட்ட மன்றத்தில்தான் பேச வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அதை நேரடியாக கொடுத்தால் அதை உடனடியாக செய்வதற்கு புரட்சித் தலைவியினுடைய அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது. அதற்காக சட்டமன்றத்திற்கு வரவேண்டிய அவசியம் இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபோது, காமராஜரைப் பற்றிச் சொல்லி மனித நேயத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கின்ற திட்டம் என்றெல்லாம் சொன்னார்கள். மனித நேயம் மற்றும் காமராஜர் வழியிலே, காங்கிரஸ் வழியிலே வந்திருக்கிற உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்திற்கு முன்னாலேயே இப்படிப்பட்ட குறைபாடு இருக்கிறது என்று அமைச்சரிடத்திலே சுட்டிக்காட்டியிருக்கலாம். (குறுக்கீடு).

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு பெரிய இலாகாவை வைத்திருக்கிறார்கள். செயலாளர் இருக்கிறார். டைரக்டர் இருக்கிறார், ஒரு பெரிய பட்டாளம் இருக்கிறது. மாவட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள். வட்டார அளவிலே அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் வைத்து அதை கண்காணிக்க வேண்டியது அமைச்சருடைய கடமை. எனவே குறை..... (குறுக்கீடு).

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுபத்தெட்டாயிரம் சத்துணவுக் கூடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் சத்துணவுக் கூடங்கள் இருக்கின்றன. இதற்குச் செயலாளர், அமைச்சர், அதிகாரிகள் மட்டும் பொறுப்பல்ல. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் பொறுப்பாவார்கள். அந்தந்தத் தொகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதியிலே உள்ள சத்துணவுக் கூடங்களைப் பற்றி எந்தக் கோரிக்கையாக இருந்தாலும் அதை உடனடியாகத் தெரிவித்தால் அதைத் தீர்க்கிற ஒரே அரசாக புரட்சித் தலைவியினுடைய அரசு மட்டும்தான் செயல்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர் உணரவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர்

புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில்தான் சத்துணவுக் கூடங்களுக்கு அனைத்து நல்ல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் பாராட்ட மனம் இல்லாவிட்டாலும் உங்களுடைய மத்திய அரசு பாராட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வகையிலே என்னுடைய பாராட்டுதல் உங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே நீங்கள் நினைவுபடுத்தியதற்காக உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) வருத்தம் இல்லையே. பாராட்ட வேண்டும் எனும்போது பாராட்டுவது, விமரிசிக்க வேண்டியபோது விமரிசிக்க வேண்டுவது என்பது எங்களுடைய கடமை. (குறுக்கீடு).

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் பாராட்டிலே பாதுகாப்பு பெறவேண்டிய அவசியம் எங்களுடைய புரட்சித் தலைவிக்கோ எங்களுக்கோ கிடையாது. நீங்கள் எங்களை பாராட்டுவதன் மூலமாக பெருமைப்பட்டுக் கொள்கிறீர்கள் என்பதை மட்டும் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போன்ற விவாதங்களுக்கு எல்லாம் காலம் பதில் சொல்லும் என்று கூறிக்கொள்கிறேன். அடுத்ததாக என்னுடைய கருத்து என்னவென்றால், அந்த அரை பைசா கொடுக்கவில்லை என்று நான் சொல்கிறேன். நான் விசாரித்த வரை அப்படித்தான் எனக்கு எல்லோரும் சொன்னார்கள். இதற்கு மேலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே தலையிட்டு நடவடிக்கை எடுத்து அந்த அரை பைசா மாணவர்களுக்குப் போய்ச் சேர்வதற்கு உதவிகரமாக உங்கள் இலாகா இருக்கும் என்றால் அதற்காக நான் மிகவும் கடன்பட்டிருப்பேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்ததாக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கின்றபோது ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஏழைக் குழந்தைகளுக்கு கிராமப்புறங்களிலே இலவச உடை தைத்துக் கொடுக்கின்ற திட்டம் அது. எங்களுடைய மாவட்டத்திலே ஒரு 4, 5 இடங்களிலே அதற்கான கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்த கூட்டுறவுச் சங்கங்களை சமூகநலத் துறையின் சார்பாகவும் தொழில் துறையினுடைய கூட்டுறவின்

மூலமாகவும் இரண்டு சங்கங்களும் இணைத்து நடத்தி வருகிறார்கள். ஆண்டிற்கு ஒரு மாணவனுக்கு ஒரு கால் சட்டையும் மேல் சட்டையும், பெண் குழந்தையாக இருந்தால் ஒரு பாவாடை, தாவணி மற்றும் ப்ளவுஸ் இவைகளைக் கொடுக்கிறார்கள். இந்தத் திட்டம் உண்மையிலேயே ஒரு அற்புதமான திட்டம். இந்தத் திட்டத்தை மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தபோது, நான் அந்த ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருந்தேன். நான் உண்மையிலேயே பார்த்து ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால் எல்லா குழந்தைகளுக்கும் உடலை மூடுவதற்காக உடை கொடுக்கின்ற ஒரு அருமையான திட்டம். இந்தத் துணிகளை எப்படி தைத்துக் கொடுப்பது என்று அவர்கள் முடிவு செய்கின்றபோது, கிராமப்புறங்களிலே இருக்கிற விதவைகள், அரிசனப் பெண்கள், மிகக் குறைந்த வருமானத்திலே இருப்பவர்கள் இவர்களை எல்லாம் அழைத்து அரசாங்கத்தின் மூலமாக ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து அவர்களுக்கு தையல் இயந்திரங்களைக் கொடுத்து அவர்கள் தைத்துக்கொடுக்கின்ற துணிகளைத்தான் ஏழைக் குழந்தைகள் உடுத்தவேண்டும் என்ற ஒரு சீரிய திட்டத்தை அவர் கொண்டு வந்தார். எங்களுடைய மாவட்டத்தில் 4,5 சங்கங்கள் அதில் இருக்கின்றன. சமூகநலத்துறை மூலமாக இயங்குகின்ற சங்கங்களும், தொழில் கூட்டுறவு மூலமாக இயங்குகின்ற சங்கங்களும் இருக்கின்றன. இந்தச் சங்கங்களிலே பணியாற்றுகிற பெண்கள் பெரும்பாலும் விதவைகள், கைம்பெண்கள், மிகவும் ஏழைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் இவர்கள்தான் பணியாற்றுகிறார்கள். ஆனால் சமீப காலமாக இதிலே ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இது வந்திருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு கால் சட்டை, ஒரு மேல் சட்டை தைத்துக் கொடுத்தால் ரூ. 7.20 கூலியாக அந்த பெண்களுக்குக் கொடுக்கிறார்கள். இதற்கு முன்பு ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்டிற்கு 500 ஜோடி துணி கொடுத்தார்கள் என்றால் இப்போது 250 ஜோடிதான் துணி கொடுக்கிறார்கள். மீதி 250 ஜோடியை வேறு யாரோ சிலர் சங்கங்களின் மூலமாக பதிவு செய்து, கூட்டுறவுச் சங்கங்கள் அல்ல, சங்கம் அமைக்கிற உரிமை உண்டு, அதாவது 10 பேர்களை உறுப்பினர்களாக வைத்துக்கொண்டால் யார் வேண்டுமானாலும் சங்கம் வைத்துக்கொள்ளலாம். அது கூட்டுறவுச் சங்கம் ஆகாது. அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிலே அது வராது. சென்னையிலே இருக்கிற சில தனிப்பட்ட நபர்கள் அதே போன்ற சங்கங்களை அமைத்து சரியாக பாதி துணியை ஆண்டு ஒன்றுக்கு 20 லட்சம் துணிகள் வழங்கப்படுகிறது என்றால் 10

லட்சம் துணிகளை அவர்கள் வாங்கி அதை மாவட்ட சமூகநலத்துறை அதிகாரிகள் மூலமாகவே அந்தத் துணிகளைக் கொடுத்து, அதே சங்கங்களிலே அதே பெண்களை விட்டு தைக்கச் சொல்லி இரண்டு ரூபாயை அவர்களுக்கு கூலியாக கொடுக்கிறார்கள். அரசாங்கத்தின் மூலமாக வருகிற துணிகளிலே ஒரு புறம் ரூ. 7.20 கூலி வாங்குகிறார்கள், இன்னொருபுறம் 250 துணிகளுக்கு, அதே துணிகளைத் தைத்துக்கொடுக்கிற பெண்களுக்கு 2 ரூபாய் கொடுக்கிறார்கள். சமூகநலத்துறையிலே இருக்கிற அதிகாரிகளே அதைச் செய்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திலே அது நடக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது துணிக்கு, ஒரு ஜோடிக்கு ரூ. 5....

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறையிலே ஏறக்குறைய 67 தையல் கூட்டுறவுச் சங்கங்களும் அதில் 27 ஆயிரம் மகளிர் பயன்பெறக்கூடிய அளவிலே அந்த சங்கங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த துணிகளைத் தைத்து வழங்கவேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் போன ஆண்டு உத்தரவிட்டார்கள். ஏனென்றால் பள்ளிக் கூடம் திறக்கிறபோதே அவர்களுக்கு யூனிபார்ம் கொடுக்கப்படவேண்டும், இலவசப் புத்தகம், இலவச காலணி இது மூன்றும் ஒட்டுமொத்தமாக வழங்கப்படவேண்டும் என்று உத்தரவிட்டார்கள். இதன் மூலமாக 65 லட்சம் செட் தைக்கப்படுகிறது. இந்த 65 லட்சம் செட் தைக்கப்படுகிறது என்று சொன்னால், சமூக நலத் துறையின் மூலமாக, சங்கங்களின் மூலமாகத்தான் தைக்கப்படுகிறது. இந்த சங்கங்களால் முடியாமல், இந்த சங்கங்கள் வேறு யாருக்காவது கொடுத்திருந்தால், அவர்கள் தங்களது அந்தச் சங்கத்துக்குதான் திருப்பி வழங்குவார்களேயொழிய நேரடியாக சமூக நலத் துறை அவர்களுக்கு உத்தரவு போட்டு இந்தத் துணிகளை வழங்குவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது, அப்படி வழங்கவும் முடியாது, அதற்குரிய சட்டமும் கிடையாது. ஆகவே, உங்கள் மாவட்டத்தில் அப்படி எந்தச் சங்கத்தின் மூலமாக, யார் பெற்றார்கள் என்பதை குறிப்பிட்டுச் சொன்னால், தகுந்த நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். இன்னொன்று, சமூக நலத் துறையின் கீழே இருக்கிற சங்கங்கள், தனிப்பட்ட முறையிலே, அவர்கள் தைக்க முடியாது, வேறு பெண்கள் குழுமி இருக்கிற சங்கங்களுக்குக் கொடுத்தால் அதற்கு சமூக நலத் துறை பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-15

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த விளக்கம் எந்த அளவுக்கு சரியானது என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், இதுவரை 500 துணிகளை தைத்துக் கொடுத்த பெண்கள் சரியான நேரத்திலேதான் கொடுத்து இருக்கிறார்கள், ஒவ்வொரு ஆண்டும். ஏனென்றால், பல சங்கங்களை நான் பார்த்திருக்கிறேன். என்னுடைய கிராமத்திலே கூட இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே, சிதம்பரம் நகரத்திலேகூட இருக்கிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 ஜோடி அல்ல, 65 லட்சம் செட் தைக்கிறார்கள். 65 லட்சம் செட் தைக்கப்படுகிறது என்றால், இப்பொழுதுகூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த முறை கலந்துகொண்ட விவாதத்திலேகூட இதை வேகமாக கொடுக்க வேண்டும் என்று எல்லாம் வற்புறுத்தினார்கள். இப்படிக் கொடுக்கும் போதே, சில நேரங்களில் தாமதம் ஏற்பட்டு விடுகின்றது. அந்த தாமதமே இல்லாமல் கொடுக்கக்கூடிய அளவிற்கு சமூக நலத் துறையைப் பொறுத்தமட்டில், நான் சொல்வதை சட்டமன்ற உறுப்பினர் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக பேரவைத் தலைவர் மூலமாக சொல்கிறேன். சமூக நலத் துறை கொடுப்பது, தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தான் கொடுக்கிறது. வேறு யாருக்கும் தனிப்பட்ட முறையிலே வழங்குவதற்கு அதிகாரம் கிடையாது. தையல் கூட்டுறவுச் சங்கங்கள், அவர்களுக்குக் கீழே யாரிடத்திலே கொடுக்கிறார்கள், யாரிடத்திலே வாங்குகிறார்கள் என்பதற்கு சமூக நலத் துறை பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது என்பதை மட்டும் தான் நான் தெளிவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 65 லட்சம் துணிகள் தைப்பது என்பது உண்மை தான். ஆனால் நான் சொல்கிற 500 ஜோடி என்பது ஒரு உறுப்பினருக்கு, ஒரு சங்கத்திலே ஒரு உறுப்பினர் இருக்கிறார் என்றால், 10 ஆண்டுக் காலமாக 500 ஜோடி துணி தைத்து வந்தார்கள். ஆனால் இப்போது 250 ஜோடி துணிகள் தான் சங்கத்தின் மூலமாக கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பவும் மாண்புமிகு உறுப்பினர் அதையே வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். சமூக நலத் துறை 500 ஜோடிகள் என்று 500 ஜோடிகளைதான் கொடுக்கிறார்கள். கூலியும் அவர்களுக்கு அப்படித்தான் கொடுக்கப்படுகிறது. சமூக நலத் துறை கூலியை கொடுக்கிறபொழுது அந்தச் சங்கத்திற்கு எவ்வளவு பணம்

கொடுக்கிறோமோ அந்தப் பணத்திற்குரிய ரசீதை சமூக நலத் துறை பெற்றுக்கொண்டதற்கு பின்னாலேதான் அந்தக் கூலியையும் கொடுத்து, செட்டுகளையும் தைக்கிறார்கள் என்பதைத் திரும்பவும் தெளிவுபடுத்துகிறேன். அதாவது சமூக நலத் துறையின் கீழே இருக்கிற தையல் சொசைட்டி, அவர்களுக்குக் கொடுத்து, அந்தக் கூலியையும் அவர்களுக்கு மொத்தமாக கொடுத்து, அவர்கள் கையிலிருந்து ரசீதை பெற்றுக்கொண்டதற்கு பின்னாலேதான்– சமூக நலத் துறை அந்த ரசீதை பெற்றுக்கொண்டுதான் துணிகளை வழங்குகிறது. ஆகவே, இதிலே தவறுகள் நடப்பதற்கே வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) சப்—கான்ட்ராக்ட் அவர்கள் கீழே விட்டுக் கொண்டால் அதுபற்றி சமூக நலத் துறைக்குத் தெரியாது. சமூக நலத் துறைக்கு அது வருவதற்குரிய வாய்ப்புகூட கிடையாது. ஏனென்றால், கூலியை நாங்கள் சமூக நலத் துறைக்கு கீழே இருக்கிற சொசைட்டிக்குதான் வழங்குகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பரவாயில்லையே, மற்ற நேரங்களில் மட்டும் சொல்கிறார்கள், இப்பொழுது வந்து இலாகா இல்லை என்று சொல்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அடிப்படையை அமைச்சர் அவர்கள் சொல்லியதை இவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அதற்கு அவர்கள் சொல்லுவதற்கு காரணம், இதற்கு முன்னாலே குறிப்பிட்ட நேரத்திலே கொடுக்கவில்லை. எனவே, வருடத்திலே எப்போது வேண்டுமானாலும் கொடுத்தார்கள். எனவே, சுலபமாக ஒரு நபர் 500 துணிகளை தைத்துக் கொண்டு இருப்பார்கள். இப்பொழுது குறிப்பிட்ட நேரத்திலே, பள்ளி ஆரம்பித்த ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிற காரணத்தால் அந்த சொசைட்டிகள், அவர்களாகவே தைத்துக் கொடுக்க முடியாத சூழ்நிலையிலே அவர்களாக சப்-கான்ட்ராக்ட் விட்டுவிடுகிறார்கள். அதற்கு எப்படி சமூக நலத் துறை நேரடியாக பொறுப்பேற்க முடியும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்னொன்று. மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைத் தாய்மார்கள் இவர்களுக்கு அதிகப்படியான வேலை கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக

ஒவ்வொரு சொசைட்டிகளிலும் 100 பெண்கள், 200 பெண்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே இருந்ததை விட இப்பொழுது அதிகமாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, அதிகமாக சேர்க்கப்படும்போது, கொடுக்கப்படுகின்ற துணிகள் அவர்களுக்கு ஏற்றவாறுதான் பிரித்துத் தர முடியும்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த விஷயத்திலே மிகவும் தெளிவாக இருக்கிறேன். மிக்வும் சரியாக புரிந்துகொண்டு இருக்கிறேன். நான் சொல்வதிலே தவறு இருந்தால், மீண்டும் கூட அமைச்சர் குறுக்கிட்டு சொல்லலாம். 500 ஜோடி துணிகள் தைத்தவர்களுக்கு இப்பொழுது 250 ஜோடி துணி தான் கொடுக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திலே அந்த உறுப்பினர்களால் தைத்துக் கொடுக்க முடியவில்லை என்று அமைச்சர் கருதுவாரானால் அந்தச் சங்கங்கள் மூலமாக மீண்டும் வேண்டுமானால் உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ள்லாமேயொழிய, அந்தச் சங்கங்கள் சப்-கான்ட்ராக்ட்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு எப்போதுமே தடை இல்லை. எப்போது கொடுத்தாலும் நாங்கள் அதிகப்படியான உறுப்பினர்களை சேர்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். ஏனென்றால் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியைப் பொறுத்தமட்டில் எவ்வளவு பெண்களுக்கு வேலை கொடுத்தாலும் அதற்கு தயாராக இருக்கக்கூடிய சூழ்நிலையில் அந்த சொசைட்டிகளை விரிவுபடுத்தச் சொல்லி உத்தரவு போட்டிருக்கிறார்கள். அண்மையிலேகூட தஞ்சை மாவட்டத்திலேயும், மதுரை மாவட்டத்திலேயும் 200 உறுப்பினர்களை அதிகப்படியாகச் சேர்த்திருக்கிறோம். சப்-கான்ட்ராக்ட் விடுவது எங்களுடைய வேலை இல்லை என்பதை திரும்பவும் சொல்கிறேன். இதை உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ளாமல் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

பிற்பகல் 4-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன பிரச்சினை என்றால், நீங்கள் முதலிலே, டிப்பார்ட்மெண்டிலே இருந்து யாரோ, தனிப்பட்ட சில ரெஜிஸ்டார்ட் சொசைட்டிகளுக்குக் கொடுத்து விடுகிறார்கள், அவர்கள் 'in turn' கூட்டுறவு சொசைட்டிகளுக்குக் கொடுக்கிறார்கள் என்று சொன்னீர்கள். அதற்கு அமைச்சர் அவர்கள், அந்த மாதிரி இல்லை, நாங்கள் கோ-ஆப்பரேடிவ் சொசைட்டிகளுக்குத்

தான் கொடுக்கிறோம், 'இன் டர்ன்' அவர்கள் வேறு யாருக்காவது கொடுக்கிறார்களா என்பது தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். நீங்கள் சொல்வதற்கும், அவர்கள் சொல்வதற்கும் அடிப்படையிலேயே மாறுதல் இருப்பதால்தான் திரும்பத் திரும்ப இருவரும் அதை வலியுறுத்திக் கொண்டே இருக்கிறீர்கள். வேறு பிரச்சினைக்குப் போகலாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரேயொரு பிரச்சினை தீர்க்கப்பட்டால் விவகாரம் முடிந்துவிடும் என்று கருதுகிறேன். ஒரு உறுப்பினருக்கு 500 செட் கொடுக்கிறார்கள் என்றால், சமூக நலத் துறை மூலமாகக் கொடுக்கப்படுகிற பில் இருக்கிறதே, அது 500 செட்டுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. அதிலே வேறுபாடு இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வாதத்திலே சத்து இருப்பதாகக் கருதலாம். 500 செட்டை யார் தைத்துக் கொடுக்கிறார்களோ, அந்த சொசைட்டிக்கு பில் போகிறது. சப்-கான்ட்ராக்டருக்குத் தனியாக பில் கொடுத்து, அவர்களுக்குப் பணம் கொடுத்திருந்தால், இதிலே பிரச்சினை வரும். அப்படிப்பட்ட நிலைமை அங்கே இல்லை.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்ட சமூக நலத் துறைக்குப் போகிற பில் என்பது 250 செட்டுக்குத்தான் போகிறது. மீதி, சென்னையிலே இருக்கிற ஒருசில நபர்கள், வேலைவாய்ப்பற்ற பெண்களைச் சேர்த்து, ஒரு சங்கம் அமைத்து, அந்தத் சங்கத்திற்கு அந்தத் துணியைக் கொடுக்கிறார்கள். அவர்களுக்குத்தான் அந்தப் பணம் போகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பற்ற பெண்கள் சங்கம் என்று யார் வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். வேலையற்ற பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து சொசைட்டியாக அமைத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு நேரடியாக சமூக நலத் துறை துணிகளைத் தருவதில்லை. அவர்கள் தருவது 67 சொசைட்டிகளுக்குத்தான். இந்த 67 சொசைட்டிகள் அந்தந்தப் பகுதியில் இருக்கிற வேலையற்ற பெண்கள் சொசைட்டிக்குக் கொடுத்தால் அதற்கு சமூக நலத் துறை பொறுப்பு ஏற்றுக்கொள்ளாது என்பதைத்தான் நான் சொல்கிறேன்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே எல்லாவற்றுக்கும் பொறுப்பு ஏற்க வேண்டியது சமூக நலத் துறைதான், மாவட்ட சமூக நலத் துறை அதிகாரி இருக்கிறார். தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் இருக்கிற சமூக நலத் துறை அதிகாரிக்கு நீங்கள் 2 இலட்சம் செட் தைக்க

துணிகள் கொடுக்கிறீர்கள் என்றால் அந்த 2 இலட்சம் செட்டையும் சம்பந்தப்பட்ட சொசைட்டியின் உறுப்பினர்கள் மூலமாகத் தைக்கிறார்களா அல்லது அந்த உறுப்பினர்கள் அல்லாமல் வேறு சங்கங்கள் மூலமாக அவர்கள் தைக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 இலட்சம் செட்டுகளுக்கான துணிகளைக் கொடுத்தால், அந்த 2 இலட்சம் செட்டுகளும் ஒழுங்காக சமூக நலத் துறைக்கு திரும்ப வந்து சேருகிறதா என்பதைப் பார்க்க வேண்டிய முழுப் பொறுப்பு சமூக நலத் துறைக்கு இருக்கிறது. அவர்களுக்கு நாங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறிப்பிட்டு, இந்தக் காலத்திற்குள் எங்களுக்குத் தைத்துக் கொடுக்க வேண்டுமென்ற கட்டளையை மட்டும்தான் இட முடியுமே தவிர, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டிய அவசியம் சமூக நலத் துறைக்கு இல்லை.

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து இந்தப் பதிலைத்தான் எதிர்பார்த்தேன். எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் சங்கங்கள் அமைக்கப்பட்டதனுடைய நோக்கம் என்னவென்றால் வேலையற்ற பெண்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதற்குத்தான். ஆனால் துணியைக் கொடுத்து விடுகிறோம், அவர்கள் எங்கே தைத்தாலும் அதைப் பற்றிக் கவலையில்லை என்று சொல்லுவார்களானால் அந்தச் சங்கங்களால் என்ன பலன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கங்கள்தான் அந்தத் துணிகளைத் தைக்க வேண்டுமென்று சொல்லி, அவர்களுக்குத்தான் கூலியும் கொடுக்கப்படுகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்ன நினைத்தார்களோ, அந்த சாதனையைத்தான் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் கேட்டால், ஒரு படி மேலே போய், அன்றைக்கு இருந்த உறுப்பினர்களைவிட அதிகமாகச் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே இதிலே எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. ச. அழகிரி : பிரசிடென்ட் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் தலைவர்களைப் பிடிக்க வேண்டியதுதானே என்று

சொல்கிறார். தலைவர்களை எல்லாம் நீங்கள் தீர்த்து விட்டீர்கள். தலைவர்களே கிடையாது. சங்கங்கள் எல்லாம் தனி அலுவலர்கள் மூலமாகத்தான் நிர்வகிக்கப்படுகின்றன. இதோடு நான் இந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்கிறேன். ஏனென்றால் ஓரளவுக்கு அமைச்சரவர்கள்....

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சொசைட்டிகளுக்குக் கூலியைக் கொடுப்பது சமூக நலத் துறை. அவர்களுக்கு அதிலே பாதிப்பு ஏற்பட்டால் எப்போதோ சமூக நலத் துறைக்கு இந்தத் தகவலைத் தெரிவித்திருப்பார்கள். ஆக எல்லா உறுப்பினர்களும் கூலியை ஒழுங்காகப் பெற்று தைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் சமூக நலத் துறைக்கு இப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே இருக்கிற ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் எல்லாம் ஊர்வலம்கூட நடத்தி இருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். காலத்தில் எங்களுக்கு இந்தத் துணி கிடைத்தது, ஆனால் இப்போது 250 செட் துணிகளை 7.50 ரூபாய்க்குத் தைக்கிறோம்; மீதியை—250 செட்டை—2.50-க்குத் தைக்கிறோம், மீதி 5 ரூபாய் எங்கள் கைகளுக்கு வரவில்லை என்று சொல்லி அவர்கள் ஊர்வலம் நடத்தி இருக்கிறார்கள், கடலூரிலே.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஊர்வலம் நடத்தி இருந்தால், அவர்கள் கோரிக்கையின் ஒரு நகலையாவது கொண்டு வந்து என்னுடைய கையிலே கொடுத்திருக்கலாமே. எந்தத் தகவலும் இந்த அரசுக்கு வரவில்லை. யாரும் எங்களிடம் அதைப் பற்றி எதுவும் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

பிற்பகல் 4-25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏறத்தாழ ஒன்றரை மாத காலமாக இங்கே சட்டமன்றத்திற்கு வருகிறார். ஒரு மாபெரும் ஊர்வலத்தை நடத்திவிட்டு வந்திருக்கிறார். (குறுக்கீடு) நடத்தத் தூண்டியிருக்கிறீர்கள். அப்படி நடத்திவிட்டு வந்திருக்கிற உறுப்பினர் அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக இங்கே

சட்டமன்றத்தில் கொண்டு வந்திருக்கலாம். வேண்டுமென்றே அவர் ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முனைந்து கொண்டு இருக்கிறாரே தவிர, இந்த அரசின் மீது எந்தக் குற்றச்சாட்டையும் அவரால் சொல்ல முடியவில்லை. ஏதோ ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறாரே தவிர வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுமென்றே குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. தெளிவான குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறேன். வேண்டுமென்றே சொல்லவில்லை.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சரியான தெளிவான குற்றச்சாட்டே அல்ல. சமூக நலத் துறையில் எல்லா தஸ்தாவேஜுகளும் சரியாக இருக்கின்றன. நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வந்து பார்த்து அதை ஆய்ந்து தெரிந்து கொள்ளலாம். தவறான குற்றச்சாட்டைத்தான் இப்போது நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விவாதத்தை நான் தொடங்கும்போதே சொன்னேன், நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்றுதான் சொன்னேனே ஒழிய தவறு ஒரு இடத்தில் நடைபெறுகிறது, அது அமைச்சருக்குத் தெரியுமா என்றால் என்னால் அதைச் சொல்லமுடியாது. ஏனென்றால் 60 லட்சம் செட்டுக்கு 5 ரூபாய் அந்த உறுப்பினர் இழக்கிறார் என்றால் கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் ஒரு ஆண்டு உறுப்பினர்களுக்குச் செல்லவேண்டிய பணம், ** அதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது எல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதுதான் அமைச்சர் தெளிவாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பிறகு திரும்பத் திரும்ப (குறுக்கீடு) கூட்டுறவுச் சங்கத்திற்குத் தான் கொடுக்கிறோம், பில் கூட்டுறவுச் சங்கத்திற்குத்தான் கொடுக்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகு, ** வழி இருக்கிறது?

திரு. ச. அழகிரி : இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கிடைக்கவில்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எந்த கூட்டுறவுச் சங்கம் என்ற தகவலை என்னிடத்திலே கொடுத்தால், அவர்கள் என்னிடத்திலே அதுபற்றி விண்ணப்பம் கொடுத்தால், மனு கொடுத்தால் அதற்கு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. ச. அழகிரி : இரண்டாண்டு காலமாக தென்னாற்காடு—வள்ளலார் மாவட்டத்தில் இருக்கிற எல்லா சங்கங்களுக்கும் இதேபோலத்தான் நடக்கிறது. எனவே இதற்கு மேலாவது அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களானால்...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகாலம் நடக்கிறது என்கிறார்கள். போன மானியக் கோரிக்கையில் இதைப்பற்றி பேசியிருக்கலாம். பேசவில்லை. இரண்டாண்டுக் காலமாக நடக்கிற பிரச்சினையை இன்றைக்கு வந்து சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. அதை எப்போது சொல்லியிருந்தாலும் நடவடிக்கை எடுக்கிற அரசு புரட்சித் தலைவியுடைய அரசுதான். ஆகவே குறிப்பிட்டுச் சொல்லுங்கள். எந்தச் சங்கத்தில் எந்த இடத்தில் தவறு நடக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் இருக்கிற எல்லா சங்கங்களும் என்று நான் கூறியிருக்கிறேன். இதற்கு மேலாவது நடவடிக்கை எடுத்தால் நான் அதை வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : ஒட்டுமொத்தமாக இப்படிக் கூறக்கூடாது. உங்களிடத்திலே ஆதாரம் இருக்கிறது அல்லவா? ஆதாரத்தை வைத்து எந்த சங்கத்தில் நடைபெறுகிறது என்பதை, அந்தச் சங்கத்துக்காரர்களை மனுவாகக் கொடுக்கச் சொல்லுங்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் எல்லாவற்றுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதற்கு மேல் அதிலே ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? நீங்கள் திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமேயில்லை. ஆதாரம் இல்லாமல் விவாதம் செய்கிறீர்கள். (குறுக்கீடு) அவர்கள் சொல்வது நேரடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் கொடுக்கிறோம் என்பது. நீங்கள் ஆரம்பித்த குற்றச்சாட்டு நேரடியாக கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்காமல் ** அவர்கள் in turn கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்கிறார்கள்

என்று சொல்கிறீர்கள். அதற்கு ஏதாவது ஆதாரம் இருந்தால் தரலாம். அது இல்லாமல் எல்லாச் சங்கங்களிலும் நடக்கிறது என்று ஒரேயடியாகச் சொல்லிக்கொண்டிருந்தால் இந்த விவாதத்திற்குப் பொருள் இல்லையே?

திரு ச. அழகிரி : தெளிவாகச் சொல்கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற எல்லா உறுப்பினர்களுக்கும், இதுவரை அவர்கள் தைத்துவந்த துணிகளில் சரிபாதிதான் கொடுக்கிறார்கள். மீதி சரிபாதியை இரண்டு ரூபாய்க்கு அவர்களே தைத்துக் கொடுக்கிறார்கள்—அதே உறுப்பினர்கள். இதை நான் தெளிவாகச் சொல்கிறேன், பொறுப்பேற்றுக் கொள்கிறேன். ஆதாரபூர்வமாகச் சொல்கிறேன். அமைச்சர் நடவடிக்கை எடுத்தால் மகிழ்ச்சி. நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பத் திரும்பச் சொல்வதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். சமூக நலத் துறை இந்த சொசைட்டிகளுக்குத்தான் கொடுக்கிறது. வேறு சொசைட்டிகளுக்கே கொடுக்கவில்லை. சமூக நலத் துறை நேரடியாக எந்த சொசைட்டிக்காவது அப்படி ஆர்டர் போட்டிருந்தால் அதை நீங்கள் ஆதாரபூர்வமாகக் காண்பித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி : அடுத்ததாக (குறுக்கீடு) அமைச்சர் நடவடிக்கை எடுக்கிறேன் என்று உறுதிமொழி கொடுத்தால் எனக்கு சந்தோஷம் தான். அவ்வளவுதான் நான் கேட்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நடக்காத ஒன்றைச் சொல்லிக்கொண்டு, நடவடிக்கை எடுப்பாரா, நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டுக் கொண்டிருந்தால் விவாதத்திற்கே அர்த்தம் இல்லை. இந்த ஒரு விஷயத்திலேயே 29 நிமிடம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) 4-30-க்கு பேசி முடித்துவிடுங்கள்.

திரு. ச. அழகிரி : நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். நான் உறுதிமொழி அளிக்கிறேன். நான் அதைச் சொல்லித்தானே சொல்கிறேன். அது தப்பு இல்லை. அமைச்சருடைய கவனத்திற்கு வராமல் இருந்திருக்கலாம். எங்களுடைய மாவட்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்ததாக, 1992 ஆம் ஆண்டு Comptroller and Auditor-General of India அவர்கள் 1992 மார்ச் 30 வரைக்கும் ஒரு ரிப்போர்ட்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

கொடுத்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டில், Operation polio 320 லட்சம் பேருக்குப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அதற்கான உதவிகளை மத்திய அரசு வழங்கிக்கொண்டு இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழக அரசாங்கம் 132.69 லட்சம் பேருக்குத்தான் ஆபரேஷன் போலியோ-ன் கீழ் பரிசோதனை செய்து இருக்கிறது. மற்றவர்களை அவர்கள் பரிசோதிக்கவில்லை. இதிலே 33 ஆயிரம் பேர் தான் ஐடன்டிஃபை பண்ணப்பட்டு இருக்கிறார்கள். அதாவது போலியோ நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று அடையாளம் காட்டப்பட்டு இருக்கிறார்கள். அந்த 320 லட்சம் பேருக்கும் பரிசோதனை செய்து இருப்போமேயானால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை நாம் இன்னும் அதிகமாகக் கண்டுபிடித்து இருக்க முடியும். நாம் அப்படிச் செய்யாதது நம்முடைய சமூக நலத் துறையினுடைய அதிகாரிகள் அதிலே சரியாக செயல்படவில்லை என்பதனை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களினுடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதிலே மேலும் ஒரு குறிப்பு இருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

பிற்பகல் 4-30

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்தை முழுமையாக எடுத்துக் கொள்கிறோம். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு மாவட்டத்தை முழுமையாக எடுத்துக்கொண்டு, சில பிளாக்குகளை மட்டும் மற்ற மாவட்டங்களில் எடுத்துக் கொண்டு செய்வதால் ஆபரேஷன் நிதானமாகத்தான் செய்ய முடியும். போன வருடம் தர்மபுரி மாவட்டத்தை முழுமையாக எடுத்துக்கொண்டு செய்து முடித்தோம். அங்கே செய்து முடித்து, வேறு மாவட்டங்களில் ஒருசில பிளாக்குகளில் செய்து முடித்து இருக்கிறோம். இந்த ஆண்டு ஒரு மாவட்டத்தை முழுமையாக எடுத்துக் கொள்கிறோம். மற்ற மாவட்டங்களில் சில பிளாக்குகளை மட்டும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிட்டர்-ஜெனரல் இதில் இலக்கு கொடுத்து இருக்கிறார். 320 லட்சம் பேருக்கு பரிசோதனை செய்ய வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் 33 ஆயிரம் பேருக்குத்தான் போலியோ இருப்பதாக ஐடன்டிஃபை செய்யப்பட்டு இருக்கிறது என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் சொல்கிற திட்டமும் நல்ல திட்டம்தான். 320 லட்சம் பேருக்கும் போலியோ பரிசோதனை செய்து இருப்போமேயானால், அந்த தொகையை முழுமையாக நாம் பயன்படுத்தி இருக்க முடியும்.

அடுத்ததாக 6259 பேருக்கு ஆபரேஷன் செய்வதற்கான ஒரு திட்ட இலக்கினை அவர்கள் நிர்ணயித்து இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய சமூக நலத் துறை செய்து இருக்கிற ஆபரேஷன் 2818 பேருக்குத் தான். மற்றவர்களுக்கு செய்யவில்லை. எனவே, அந்த பணம் போய்விடுகிறது. அதையும் நாம் செய்து இருப்போமேயானால், ஏழை எளிய மக்கள், சிரமத்திலே இருக்கிறவர்கள் பலன் அடைந்து இருப்பார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு தர வேண்டிய உபகரணங்கள் இருக்கிறதே, அவற்றை 3 வாரங்களில் கொடுக்க வேண்டும் என்று ஆடிட் சொல்கிறது. ஆனால், 1992 ஆம் வருடத்தில், நாம் ஒரு வருடம் கழித்துத்தான் கொடுத்து இருக்கிறோம். அதை ஆடிட்டில் கடுமையாக அப்ஜெக்ட் பண்ணி இருக்கிறார்கள். இதையும் அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை 1989-90, 1990-91, 1991-92, 1992-93, 1993-94 என்று 5 பேஸ்களாக பிரித்து செய்கிறோம். இதற்கு மத்திய அரசு உதவி கொடுக்கவே இல்லை. நாங்கள் பலமுறை மத்திய சமூக நலத் துறைக்கு இதைப்பற்றி எழுதி இருக்கிறோம். ஆனால், அங்கே இருந்து பணம் வராததால், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய இவ்வளவு பெரிய நிதி நெருக்கடியிலும் 5 கோடி ரூபாயை இந்த அரசின் மூலமாகவே செலவிட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உபகரணங்கள் வாங்குவதற்காக 20 லட்சம் ரூபாயை நம்முடைய அரசு ஒதுக்கி இருக்கிறது. ஆனால், ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட்டில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்று கேட்டால், இந்த 20 லட்சம் ரூபாய்க்கு எந்தவித டெண்டர் வைக்காமல், மெட்டீரியல்ஸை அவர்கள் வாங்கி இருக்கிறார்கள்; டெண்டர் வைத்து வாங்குவதுதான் நடைமுறை என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டில் பக்கம் 262, 263-ல் சொல்லி இருக்கிறார்கள்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்குக் கீழே இயங்குகின்ற சில நிறுவனங்களிலிருந்து, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிற நிறுவனங்களிலிருந்துதான் இந்த உபகரணங்களைப் பெறுகிறோம். அரசாங்கத்தினுடைய நிறுவனங்களிலிருந்து உபகரணங்களை பெறுகிறபோது, டெண்டர் தேவையில்லை.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் அந்த துணி விஷயத்திற்கு வருகிறேன். இது வேறு சப்ஜெக்ட். (குறுக்கீடு) அது கிடையாது. மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்திலே அந்த துணிகள் எல்லாம் கோ-ஆப்டெக்ஸில் இருந்து வாங்கினார்கள்; பெரிய நிறுவனங்களிலிருந்து வாங்கினார்கள். அப்படி வாங்குகிறபோது, அந்த துணியின் அகலம் 90 சென்டி மீட்டர். ஆனால், இந்த ஆண்டு நாம் வாங்கி இருக்கிற துணியின் அகலம் 73 சென்டி மீட்டர். இதுவரை 90 சென்டி மீட்டர் அகலத்திலே துணியை தைத்து போட்டு சென்ற குழந்தைகள், இப்போது 73 சென்டி மீட்டரில் — 90 சென்டி மீட்டரில் துணியை தைத்துக் கொடுக்கிறவர்களுக்கு கொடுத்தால், ** அல்லது துணியின் நீளம் குறைவாக இருக்கிறது. தொப்புள் தெரிகிற வரைக்கும் போட்டுப் போகிறார்கள். இது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வராமல் எப்படி போனது என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது ** இது மாண்புமிகு அமைச்சர் அவர்களினுடைய கவனத்திற்கு வந்து இருக்கிறதா?

பிற்பகல் 4 -35

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 73 சென்டி மீட்டரில் துணி கொடுக்கவில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் எப்படி கொடுக்கப்பட்டதோ அதேவகையில்தான் துணிகளை பாதி பின்னிக்கும், பாதி கோ-ஆப்டெக்ஸுக்கும் கொடுக்கிறோம். பின்னியினுடைய துணியின் பிரத் அதிகமாக இருப்பதால், அகலம் அதிகமாக இருப்பதால், அதை அந்த அளவுக்கு எடுத்துக் கொள்கிறோமே ஒழிய, கோ-ஆப்டெக்ஸிலிருந்தும் துணிகளை அந்த அளவில்தான் பெறுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணி 4 -35 ஆகிவிட்டது. உறுப்பினர் பேச்சை முடித்து விடலாம். துணியிலேயே நின்று கொண்டிருக்கிறீர்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 90 சென்டி மீட்டர் அகலமுள்ள துணியும் இருக்கிறது. 73 சென்டி மீட்டர் அகலமுள்ள துணிகளை நீங்கள் ஒரு நிறுவனத்திலிருந்து வாங்கித் தருகிறீர்கள். 73 சென்டி மீட்டர் அகலமுள்ள துணியை எப்படி அவர்கள் தைத்து போட்டுக் கொள்ள முடியும்? தயவுசெய்து அதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டாமா? எப்படி அந்த தவறு நடந்தது? பெரிய நிறுவனம் எப்படி அதைச் செய்தது?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது டபிள் பிரத். பிரத் அதிகமாக இருக்கிறது. *90* செண்டி மீட்டர் என்றால் அந்த அளவுக்கு பிரத் அதிகமாக இருக்கிற துணியைதான் பெற்று கொடுக்கிறோமே ஒழிய, எங்கேயாவது அளவு குறைக்கப்பட்டு துணி கொடுக்கப்பட்டிருந்தால், உடனே மாவட்ட சமூக நல அதிகாரிகள் தெரியப்படுத்துகிறார்கள். உடனே பெறப்பட்டு கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரையை முடித்து விடலாம்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தில் உறுதியாக இருப்பார்களானால் அந்தத் துணியைக் காட்டுவதற்கு நான் தயாராக இருக்கிறேன், பேரவைத் தலைவர் ஒப்புக் கொண்டால். ஏனென்றால் *90* செண்டி மீட்டர் துணியும் என்னிடத்தில் இருக்கிறது. *73* செண்டி மீட்டர் துணியும் இருக்கிறது. அது டபிள் பிரத் அல்ல. அது ஒரே பிரத் தான். இதற்கு பதில் செல்ல வேண்டியதில்லை. எதற்காக சொல்ல வருகிறேன் என்றால் இனிமேல் இதுபோல இல்லாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஏழை குழந்தைகளுடைய விஷயம். **

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** கிராமப்புற பகுதிகளில் இருக்கிற மக்கள் அதை பார்க்க மாட்டார்களா ? அவர்களுக்கு அது தெரியாதா ? இத்தனை நாள் அது வெளியில் தெரிந்து பேசி இருக்கமாட்டார்களா ? எனவே, தவறான தகவலை அவைக்கு தரக்கூடாது. எல்லா இடங்களிலும் ** இன்னும் கேட்டால் அளவு பெரிதாக இருக்கிறது என்று தான் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். அளவை அதிகமாக தைத்து கொடுத்து விடுகிறார்கள் என்றால் துணி அதிகமாகக் கொடுக்கப்பட்டு, அளவு அதிகமாக தைக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *73* செண்டி மீட்டர் துணியில் அளவு அதிகமாக சட்டையை தைத்து கொடுக்க முடியும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னால், அது அவர்களுடைய திறமை தான். நான் ரொம்பப் பாராட்டுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக் குழந்தைகளும் இருக்கிறார்கள். இதிலே தைப்பது எல்லாம் பெரியவர்களுக்கு அல்ல. எனவே, அதற்கு தகுந்தாற்போல துணி வேஸ்ட் ஆகாமல் கூட அதைச் செய்திருக்கலாம். இதை ஒரு டெய்லர் வந்து பேசினால் சரியாக இருக்கும். நாம் பேசினால் அது சரியாக இருக்காது. எனவே, சின்ன குழந்தைகளும் இருக்கின்றன. வயதில் மூத்தவர்கள் உயரமானவர்களும் இருக்கிறார்கள். அதற்கேற்ப அவர்கள் வாங்கி இருக்கலாம்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் துணியைத் தங்களிடத்தில் கொடுக்கிறேன்.

(உறுப்பினர் ஒரு துணியைக் கொடுத்தார்)

தாங்கள் பார்த்து ஒரு தீர்ப்பைச் சொன்னால் சரிதான். (குறுக்கீடு) அதிலே அரசாங்க முத்திரையெல்லாம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சிங்கிள் பிரத். இதுமாதிரி டபிள் பிரத் இருக்கிறது. அது நீளம் கூடத் தான் இருந்திருக்கும். இது இந்த அளவுதான் இருக்கும்.

திரு. ச. அழகிரி : தலைவர் அவர்களே, நான் சொன்னது சிங்கிள் பிரத் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை கொஞ்சம் நீளம் கூடப் போட்டு தைப்பார்கள்.

திரு. ச. அழகிரி : தலைவர் அவர்களே, தைக்க முடியாது. துணியின் அளவு அவ்வளவு தான்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு மீட்டர் துணி வாங்குகிறோம் என்பதுதான் அளவு. 73 சென்டி மீட்டர் 70 சென்டி மீட்டர் என்பதல்ல. எவ்வளவு அதிகமாக கொள்முதல் செய்கிறோமோ, இரண்டாக ஒட்டிவைத்து சேர்த்துதான் தைப்பார்கள். காலருக்கு தனியாக வெட்டுவார்கள். கைக்கு தனியாக வெட்டுவார்கள். நீங்கள் காலருக்கு வெட்டுகிற துணியை சபாநாயகர் அவர்களிடத்தில் கொடுத்து விட்டு இவ்வளவுதான் கொடுக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 73 செண்டி மீட்டர் துணியில் காலருக்கு எங்கே வெட்டுவது, கைக்கு எங்கே வெட்டுவது ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யூனிபார்ம் செட்டை கொண்டு வந்து பேரவைத் தலைவரிடம் கொடுத்து விட்டு அதைத்தான் அளவு காட்ட வேண்டும். இப்படி ஒரு சிறிய துணியை கொடுத்து விட்டு, இதைத்தான் கொடுக்கிறார்கள் என்று சொல்லக் கூடாது. இப்படி யூனிபார்ம் கொடுப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். பேசி முடித்து விடுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ரொம்ப தீர விசாரித்து, சரியாகப் பார்த்துத்தான் கொண்டு வந்து கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் அதே 73 செண்டிமீட்டரில் முழு அளவு யூனிபார்ம் துணியை பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்து அவரை திருப்திபடுத்தினால் சரிதான். குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. திருத்த வேண்டும் என்பது தான் என்னுடைய நோக்கம். குறை சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. எப்படியாவது திருத்த வேண்டும். இரண்டாவதாக மாணவர்களுக்கு மதிய உணவு, சத்துணவு கொடுக்கிறபோது சமீபகாலமாக நாம் ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் ஏழைகளாக இருக்கிறவர்கள், கூரை வீடுகளில் வாழ்கிறவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, சட்டமன்றத்தில் பதிவேட்டில் பதிவாகிறது. அவர் சொல்கிறபோது ** என்று பொருள்படுகிற அளவுக்குப் பேசி இருக்கிறார்கள். ** அது அவைக்குறிப்பில் இருக்கவேண்டுமா என்பதை நீங்கள் முடிவு செய்யவேண்டும்.

பிற்பகல் : 4 -40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** (குறுக்கீடு) நீங்கள் அது தேவையில்லை என்று நினைத்தால், அதையும் கூட நீக்கிவிடலாம். இரண்டும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) காலர் விவகாரமே நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிற விஷயத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காட்டுகிற அக்கறையை ** ரொம்ப நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அப்போதிருந்தே ரொம்ப சாமர்த்தியமாக எதைக் கேட்டாலும் என்னுடைய தொகுதியிலே இருக்கிற எல்லா இடத்திலேயும், என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற எல்லா இடத்திலேயும் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** இல்லை என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும் இதைத்தான் சொல்கிறார்கள். நீங்கள் திரும்பத் திரும்ப எனக்குத் தெரியும் என்றால் (குறுக்கீடு) இப்போது 40 நிமிடங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள், முக்கால்வாசி பகுதியில் எந்த ஆதாரமும் இல்லாமல் 40 நிமிடம் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். அதற்குத் திரும்பத் திரும்ப பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் நிறைய பேசியதில் அதிக ஆதாரங்களை நான்தான் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த ஆதாரமும் தரவில்லை. 73 சென்டி மீட்டர் அளவுள்ள துணியைக் கொடுக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் சொல்கிறார், நீளம் அதிகமாகப் போட்டு முழு அளவிலே சட்டை தைத்துவிடுவோம் என்று. இதைத் தவிர, நீங்கள் பேச ஆரம்பித்த நேரத்திலிருந்து எந்த ஆதாரமும் இல்லாமல், எந்த அடிப்படையும் இல்லாமல் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். நானும் சரி, நீங்கள் பேசிப் பாருங்கள், ஒரு வார காலம் எங்கெங்கே எல்லாம் போய்விட்டு வந்திருக்கிறீர்கள், விட்டுவிடுவோம் என்று நானே விட்டுக் கொண்டு இருக்கிறேன். நீங்களும் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். இதுதான் நடந்திருக்கிறது. ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே போய்விட்டு வந்தோம் என்று சொன்னீர்கள். முறையான இடத்திற்குத்தான் போய்விட்டு வந்திருக்கிறோம். ரொம்பத் தப்பான இடத்திற்கு...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறைகேடாக நிறைய இடங்களுக்குப் போய்விட்டு வந்தீர்கள் என்பது தெரியும். அதையும் கூட என்ன என்ன முறைகேடு என்பதை எல்லாம் சொல்லவேண்டும் என்றால், அதற்குவேறு விவாதம் வைக்கவேண்டும். எனவே ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. ச. அழகிரி : அடுத்ததாக சத்துணவு கொடுக்கிற குழந்தைகளுடைய எண்ணிக்கையை எடுக்கிறபோது, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் சத்துணவு நாம் கொடுக்க வேண்டும். எம்.ஜி.ஆர். காலத்திலே அப்படித்தான் கொடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திலும் 50 சதவீதம் அல்லது 60 சதவீதத்திற்கு மேலே சத்துணவு கொடுப்பதில்லை. மற்றவர்களை ஒதுக்கிவிடுகிறார்கள். அப்படிக் கொடுக்கிறபோது, துணியைக் கொடுக்கிறபோது, கிராமப்புறங்களிலே என்ன பிரச்சனை வருகிறது என்றால், ஒரு பையனுக்கு கால் சட்டையையும், இன்னொரு பையனுக்கு மேல் சட்டையையும் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் வருகிறது. கிராமப்புறங்களிலே இந்தமாதிரி கொடுக்காமல் இருக்க முடியாது. எல்லோருக்கும் கொடுக்கவேண்டிய நிர்பந்தம் வருகிறது. அதேமாதிரி சத்துணவு கொடுக்கிறபோதுகூட, முட்டை கொடுக்கிறபோதுகூட, என்ன செய்கிறார்கள் என்றால், இந்த வாரம் ஒரு பையனுக்கு முட்டை கொடுத்தால், அடுத்த வாரம் அவனுக்கு நிறுத்திவிட்டு, வேறு ஒரு பையனுக்கு முட்டை கொடுக்கிற நிலை இருக்கிறது. இந்த நிலையை அமைச்சர்அவர்கள் மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தில் எந்தக் குழந்தைகளும் குறைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யூனிபார்ம், சப்பல்ஸ் இதையெல்லாம் கொடுக்கும்போது கூடுதலாக பிள்ளைகள் வருகிறார்கள், கூடுதலாகத்தான் கொடுக்கிறோம். இன்னும் கேட்டால், யூனிபார்ம், மற்றும் காலணி போன்றவைகளை எல்லாம், சத்துணவைச் சாப்பிட்டவில்லை என்றாலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்தால் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் சத்துணவு சாப்பிடுகின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் முட்டை தரப்படுகிறது. எந்தக் குழந்தைகளுக்கும் நிறுத்தப்படவில்லை. இன்னும் கேட்டால், விடுமுறை நாட்களில் முட்டை கொடுக்கக்கூடாது, சாதாரண நாட்களில் முட்டை கொடுக்கவேண்டும், ஏன் என்றால், லீவ் நாட்களிலே

பிள்ளைகள் வெளியூருக்குப் போய்விட்டால், முட்டை சாப்பிடாமல் போய்விடக்கூடாது என்பதற்காக, புரட்சித் தலைவி அவர்கள் அந்த உத்தரவையும் பிறப்பித்திருக்கிறார்கள். லீவ் நாட்களிலே கொடுக்கப்படுவதில்லை. விடுமுறை நாட்களில் இல்லாமல் சாதாரண நாட்களிலே கொடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பி. நிர்மலா. (குறுக்கீடு) நிறையப் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திருமதி. பி. நிர்மலா.

திருமதி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து காக்க வந்த, ஆதி திராவிடர்களின் மனிதத் தெய்வமாய் விளங்கிய அண்ணல் அம்பேத்கார் போல், இந்த 20 ஆம் நூற்றாண்டிலே, ஆண் ஆதிக்கம் நிறைந்த இந்த உலகில், பெண் இனத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து காக்க, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டிற்கு மட்டுமல்ல, இந்த உலகிற்கே ஒரு முன்னுதாரணமாக, பெண் குலத்தின் பிரதிநிதியாய், மாதர் குல மாதரசியாய், பெற்றோர்கள் உள்ளவர்களுக்கும், பெற்ற தாய் இல்லாததால், அம்மா என்று அழைக்க முடியாதவர்களுக்கும், எங்களுக்கும், உங்களுக்கும், தமிழ்நாட்டிலுள்ள யாவருக்கும் ஒரே அம்மாவாகத் திகழ்கிற, தமிழ்நாட்டின் வரலாற்றில், ஈடுஇணையற்ற ஒரே முதல்வர், மாண்புமிகு முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி சிரம் தாழ்த்தி, நமஸ்காரம் செய்து, சமூகநலத் துறையில் அம்மா அவர்கள் ஆட்சியில் ஈடு இணையற்ற சாதனையைப் பற்றிப் பேசுவதில் நன்றி பெருமையோடு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பிற்பகல் : 4-45

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை அனைவரும் இதய தெய்வம், இதய தெய்வம் என்று கூறுகின்றார்களே என்று அச்சப்படுகின்றவர்களுக்கும், கூறுகின்றவர்களுக்கும், ஒரு திருக்குறளை அந்தக் காலத்தில் நமது வள்ளுவர் எழுதியிருக்கிறார்கள்.

''முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்''

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க நீதி தவறாது மக்களைக் காப்பாற்றும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று நம் அனைவருக்கும் இதய தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ பிரச்சினைகள், வஞ்சகர்களின் சூழ்ச்சி, நிதிநிலைப்

பற்றாக்குறை போன்ற சிரமங்கள் அடுக்கடுக்காக வந்தாலும், மனத் துணிவுடனும், தெளிவுடனும், இன்றுமட்டுமல்ல, இனி வருங்காலத்திலும் மக்கள் நலம் காக்கும் திட்டங்களை, அனைத்து துறைகளுக்கும் தொலை நோக்குப் பார்வையோடு வகுத்துக் கொடுத்து தமிழ் மக்களை, தங்களின் மேலான தலைமையின்கீழ் உள்ளோம் என்று தலைநிமிர்ந்து வாழ வைக்க இந்தியத் திருநாட்டிற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் டைனமிக் லீடராகிய அம்மா! தங்களைத் தவிர வேறு யாரால் முடியும் ?

சமூக நலத்துறை என்பது சட்டசபை வரலாற்றில் திருப்பிப் பார்க்கின்றபொழுது முன்பெல்லாம் சாமர்த்தியசாலிகள் மட்டும் சேவை என்ற பெயரில் தேவைகளை நிரப்பிக் கொள்வதாகவே இருந்திருக்கிறது. அதை மறைந்த முன்னாள் முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சமூகநலத் துறை என்பது ஏழைக் குழந்தைகளின் பசியைப் போக்குகின்ற சத்துணவுத் திட்டம் என்று மக்களால் உணரப்படும்படி வெளிக் கொணர்ந்தார். ஆனால் இதய தெய்வமாகிய அம்மா, தாங்களோ சமூக நலத் துறையின் தூசுகளைத் தட்டி மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களின் சத்தான உணவோடு முத்தான பல திட்டங்களையும் தீட்டி மக்கள் வாழ்க்கையின் ஒரு அங்கமாகவும், முதியோர்களுக்கும், அனாதை களுக்கும், ஊனமுற்றோருக்கும், குழந்தைகளுக்கும், குறிப்பாக பெண்களுக்கும் வாழ்க்கையில் முன்னேற ஒரு ஊன்றுகோலாக தங்களின் மாசற்ற அன்பினாலும், அறிவின் மாட்சியாலும், ஆட்சிசெய்யும் திறத்தாலும் சமூகநலத் துறையை இன்று ஒரு தலைசிறந்த துறையாக மிளிர வைத்திருக்கின்றீர்கள் அம்மா !

குறை சொல்ல என்று ஒருவன் இருந்துவிட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு என்பதைப் போல மனசாட்சி அற்றவர்களும், அண்ணன் எப்பொழுது போவான், திண்ணை எப்பொழுது காலியாகும் என்பதைப்போல ஆட்சியைப் பிடிப்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்யத் துணிந்தவர்களும், தங்களின் நல்ல மனதில் திட்டங்களின் மகிமை அறியாமலும் அதன் உண்மையான அர்த்தத்தை உணராமலும், அவர்களுக்கு உரித்தான வஞ்சக குணத்துடன் வெந்ததைத் தின்று விதிவந்தால் சாகட்டும் என்று விட்டுவிடாமல் இருக்கிற நிலையில், தாங்கள் தற்போது அறிவித்திருக்கின்ற அம்மா அவர்களின் பெயரால் விளங்கும் 15 அம்ச குழந்தைகளின் நலத் திட்டத்தினை குறைகூறும் ஒரு சில வீணர்களுக்கு ஒன்றினை இம் மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அம்மா அவர்களின் 15 அம்ச குழந்தைகள்

நலத் திட்டம் என்பது ஏதோ இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எல்லோரையும் கட்டாயம் 15 குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவித்தது போல் அல்ல. கட்டாயமாக இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருக்கக்கூடாது. ஒரு குழந்தைக்கும் அடுத்த குழந்தைக்கும் இடையில் போதிய இடைவெளி வேண்டும், தாய் சேய் நலம் காக்கப்பட வேண்டும், குழந்தைகள் உடல் நலத்தோடும் மன நலத்தோடும் தலைசிறந்த குடிமகனாக வளரவேண்டும் என்பதையும் பெண் குழந்தை என்பதால் பெற்ற தாயே குழந்தையைக் கொல்லும் நிலை அழியவேண்டும். பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்ட பெண் குழந்தைகளை அரசே தாய்மை உணர்வோடு வளர்க்கும் என்றல்லவா திட்டம் தீட்டினார்கள். உலகத்திற்கே ஒளியைக் கொடுக்கக் கூடிய ஆதவன் வருகின்றபொழுது மக்களெல்லாம் மகிழ்ந்திருக்க, ஒரு சில ஐந்தறிவு பிராணி மட்டும் குரைத்ததாம். அதுபோலத் தான் உள்ளது இவர்களது பேச்சுக்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே தங்கள் வாயிலாக சமூகநலத் துறைக்கு ஒரு சில கோரிக்கைகளையும் வைக்க இருக்கிறேன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் வரம்புக்கு உட்படாத சி, டி பிரிவில் வேலைவாய்ப்பில் 3 சதவீதம் ஊனமுற்றோருக்கு என்று இருக்கிறது. அதில் நமது தமிழக அரசு தலையிட்டு 3 சதவீதம் என்பதை 10 சதவீதமாக ஊனமுற்றோருக்காக உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊனமுற்றோருக்கும், மகளிருக்கும் சுய வேலைவாய்ப்பின்கீழ் கடனுதவித் திட்டம் இருக்கிறது. அதற்கான கடனை மத்திய வங்கிகள் கொடுக்கின்றன.

அந்த நிலையை மாற்றி மத்திய கூட்டுறவு வங்கிகள் அல்லது அந்தக் கிராமத்தில் இயங்கக்கூடிய கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல்லில் முன்பே அமைச்சரவர்கள் பணிபுரியும் மகளிருக்காக ஒரு ஹாஸ்டல் நிறுவுவதாகக் கூறியிருந்தார்கள். அதை இந்த ஆண்டில் அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திண்டுக்கல்லில் பார்வையற்றோருக்காகவும், காது கேளாதோருக் காகவும் சேலத்தில் உள்ளதுபோல் ஒரு அரசு பயிற்சிப் பள்ளி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அய்யனார் நீர்த்தேக்கம் சம்பந்தமான கோப்புகளை திண்டுக்கல் அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் சென்று பார்த்து அந்தப் பகுதி மக்களுக்கு இந்த நீர்த்தேக்கம் நல்ல

பலனைத் தரும் என்று தன்னுடைய பரிந்துரையை எழுதியுள்ளார். அவரும் என்னிடத்தில் இதைக் கொடுத்திருக்கின்றார். அந்தக் கோப்பு தற்பொழுது தங்களின் பார்வையில் உள்ளது அம்மா. அதை விரைவுபடுத்தி ஆவன செய்யவேண்டுமென்று தங்களின் பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் சம்பந்தமான கோப்புகள் மதுரை குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்புப் பொறியாளர்களின் டெக்னிக்கல் அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு திண்டுக்கல் நகராட்சிக் கட்டணத் திருப்பி அடைக்கமுடியுமா என்று கேட்டதற்கு நகராட்சி திருப்பி அடைக்கமுடியும் என்ற பதில் பெறப்பட்டுள்ளது. இப்பொழுது அந்தத் திட்டம் எல்.ஐ.சி. கடன் மூலம் ரூ.28 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அங்கீகாரம் கொடுத்து உதவிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இந்த சத்தான மானியக் கோரிக்கையில் சுமார் ரூ.16 கோடி ஒதுக்கியுள்ளதை எப்படி ஒரு இடத்திலே ஆதவன் வருகின்றபோது அதைப் பார்த்து சூரியகாந்தி மலர் மலர்கின்றபோது; தங்களது முகம் பார்த்து மலர்கின்ற தமிழக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும் குறிப்பாக தங்கள் முகம் மலர்ந்தால் மலர்கின்ற பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் பேரிலும் இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி. செ. சுந்தராம்பாள்.

பிற்பகல் 4 -50

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் 5 1/2 கோடி மக்களின் உள்ளங்களில் நீக்கமற நிறைந்து அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், காவல் தெய்வமாகவும் தமிழகத்தின் நிரந்தர முதல்வராகவும் விளங்கிக் கொண்டிருக்கும் நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களைத் தொட்டு வணங்கி சமூகநலம் என்ற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய உரையையாற்ற விழைகின்றேன்.

"முகம் நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்"

மனதில் நிகழ்வதை குறிப்பால் உணர்ந்து, அவரது துன்பங்களை தீர்ப்பாரை மன்னனாகப் பெற்றால், அவர் முகத்தைப் பார்த்து நிற்றலே துன்பத்தை ஒழிப்பதற்குப் போதுமானது, என்பது வள்ளுவரின் வாக்கு. தமிழகத்தின் அங்கங்களாகிய விவசாயத் தொழிலாளிகள், நெசவுத் தொழிலாளர்கள், மீனவர்கள், ஆதிதிராவிட பழங்குடியினர், அரசு ஊழியர்கள், மேற்கூறிய எவ்வினத்திலும் சேராத ஏழை எளியவர்கள், வசதி வாய்ப்பற்ற மக்கள் ஆகியோரின் தேவைகளை கருத்தில் உணர்ந்து, குறிப்பால் உணர்ந்து அவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் களைய திட்டங்களைத் தீட்டி, நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களை நிறைவேற்றி, மேலே கண்ட அனைத்து நலன்களையும் பாதுகாக்கும் அரணாக விளங்கும் தமிழகத்தின் தங்கத் தலைவி எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களின் முகம் பார்த்து நிற்பதே துன்பத்தை ஒழிப்பதற்குப் போதுமானது என்பதற்கு மேற்கூறிய குறளே சான்றாகும். ஏழை எளியோர், வசதி வாய்ப்பற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஏழை மக்களுக்கான விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையுடன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு கொண்டு வரப்பட்ட இந்த திட்டம், ஏழை எளியோரின் வசதி வாய்ப்பற்ற மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் செயல்பட்டு வரும் இந்த அரசு செலுத்தி வரும் உண்மையான கவனம், அக்கறை, சிறப்பு முயற்சிகள் ஆகியவை பாராட்டப்பட வேண்டியவையாகும். பெரும்பாலான மாநிலங்கள் ஏழை மக்களின் மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைக்க முடிவு செய்த போதும் நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை மக்களை பாதுகாத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே நோக்கமாகக் கொண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு உயர்த்தப்படவேண்டும் என்பதில் உறுதியாக நின்று *1994-95* ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.*1599* கோடி ஒதுக்கி இருப்பதை தமிழக மக்களின் நலனில் அக்கறை உள்ள அனைவரும் பாராட்டுவார்கள்.

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்

தக்க கருவிகளோடு ஏற்ற காலத்தை அறிந்து செய்பவர்கள் அவர்களால் முடியாத செயல்கள் எதுவும் இல்லை என்பது வள்ளுவர் வாக்கு.

உணவுப்பொருள் வழங்குவதில் உத்தரவாதம், முதியோர், கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்கு சத்துணவு, ஏழை மக்களுக்கு தொடக்க சுகாதார வசதி மற்றும் மருத்துவப் பணிகள், அனைவருக்கும் தொடக்கக் கல்வி, ஏழை மக்களுக்கான வேலை வாய்ப்பு திட்டங்கள், நலிவு அடைந்த பிரிவினர்களுக்கான சிறப்பு திட்டங்கள், ஆகிய திட்டங்களுக்கான கருவியாக ரூ.1599 கோடி நிதி ஒதுக்கி திட்டங்களை நிறைவேற்றுவதற்கான காலத்தை அறிந்து செயல்படுத்தி வரும் தமிழகத்தின் செயல் திட்டங்கள் ஏழை எளிய மக்களின் வாழ்வில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம். சமூக நலத்துறைக்கு நிதி ஒதுக்கீடு அதிக அளவில் செய்வதில் தமிழக அரசு முன்னணியில் உள்ளது என ரிசர்வ் வங்கி அண்மையில் மேற்கொண்ட ஒரு ஆய்வில் கூறி உள்ளது. இது சமூக நலனில் நமது அரசு காட்டும் தீவிரத்தை இந்திய துணை கண்டத்திற்கே உணர்த்துவதாக அமைந்துள்ளது என்பது அனைவரும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். 1993-94 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சமூக பணிகளுக்காக ஆகும் செலவு மொத்த செலவுத் தொகையில் 41 சதவீதம் என்பது வரவேற்கத்தக்க ஒரு வளர்ச்சியாகும். தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியை பெரும் அளவில் உயர்த்த பாடுபடும் பணிகளும், ஏழை எளிய மக்களின் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு செயல்பட்டு வருவதை மனமார பாராட்டும் அதே நேரத்தில் இச்செயல் திட்டங்கள் ஏழை மக்களுக்குச் சென்று அடைய நாம் உழைக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். நகர்ப்புற ஏழை மக்களின் நலனுக்காக ஒருங்கிணைந்த புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர அவர்களின் பொருளாதார நலம் மேம்பாடு அடைய முயற்சி மேற்கொள்ளப்படும். இதனால் நகர்ப்புறத்தில் உள்ள 1 லட்சம் ஏழை மக்கள், ஏழைக் குடும்பங்கள் பயன் அடைவார்கள் என இந்த நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டி செயல்படுத்தி இருப்பதை இதயம் உள்ள அனைவரும் பாராட்ட வேண்டும். சமூக நலனில் அக்கறை கொண்டு மக்கள் நோயின்றி வாழ, ஏழை எளிய மக்களுக்கு சுகாதார பாதுகாப்பு, குடும்பநலம் சிறக்க 1994-95 ஆம் ஆண்டில் ரூபாய் 643.14 கோடி நிதி ஒதுக்கீடு, மருந்து பொருட்களுக்கான நிதி ஒதுக்கீடு 1993-94-ல் 75 கோடியாக இருந்தது இவ்வாண்டு 88 கோடியாக உயர்த்தியிருப்பதும், குடும்பநலம் குறித்த திட்ட ஒதுக்கீடு 174.21 கோடியிலிருந்து 198.95 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

பிற்பகல் 4-55

ஐந்து வயது முதல் 15 வயது வரை உள்ள பள்ளிக் குழந்தைகள் அனைவருக்கும் மருத்துவ சோதனைக்கு வகை செய்யும் புரட்சித் தலைவி பள்ளி சுகாதர்ர முகாம்கள் உலக வங்கி, யுனிசப் இவற்றின் மூலம் கிடைக்கும் நிதியுதவியைக் கொண்டு குழந்தைகள் உயிர் காக்கும் மற்றும் பாதுகாப்பான தாய்மைப்பேறு மேலும் 7 மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தும் திட்டம், இந்திய மக்கள்தொகை திட்டம் ரூ.10.26 கோடி முதலீட்டுடன் 15 நகராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது ஆகிய நகர்ப்புற கிராமப்புற ஏழை மக்களின் சுகாதார குடும்ப நலனுக்காக சமூக நலனுக்காக நோயற்ற வாழ்வை உறுதிப்படுத்தும் வகையில் எடுக்கப்பட்ட முடிவுகள் வரவேற்கத்தக்க தாகும். 67 விதமான பணிகள் குறைந்த அளவு ஊதிய சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு அத்தகைய தொழில்களுக்கும் ஒருநாள் ஊதியம் ரூ. 20-க்குக் குறையாமல் இருக்க வகை செய்துள்ள திட்டம் தமிழகத்தின் ஏழை எளிய சமூகத்தின் நலனுக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு எடுக்கப்பட்ட சீரிய திட்டம் ஆகும். ஊரகப் பகுதிகளில் சுய வேலைவாய்ப்பை உருவாக்க ஊரக தொழில் துணை திட்டம் 1 இலட்சம் தொழிலாளிகளுக்கு உதவி அளிக்கப்பட்டு, நடப்பு ஆண்டில் 1.25 இலட்சம் தொழிலாளிகளுக்கு உதவி அளிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது சமுதாயத்தில் எல்லா தரப்பு மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவிடும் அரிய திட்டம் என்பதால் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஏழை எளிய மக்களை பாதுகாக்க எந்த ஒரு கொள்கை நடவடிக்கையும் செயல்படுத்துவதில் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை நம்முடைய இணையில்லாத தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தாம் பங்கேற்கும் தேசிய மாநில மன்றங்களில் வலியுறுத்தி வருகிறார்கள். பொது விநியோக முறையில் வழங்கப்படும் பொருள்களின் விலைகளை மத்திய அரசு சமீபத்தில் உயர்த்தி இருப்பது மாநிலங்களுக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தி உள்ளது நாம் அறிந்ததே. இருப்பினும் 1990-91-ல் அரிசி விநியோகத்திற்கு உதவித் தொகையாக ரூ.105 கோடி ஒதுக்கப்பட்டது. அது 1993-94 ஆம் ஆண்டு 400 கோடியாக அதிகரித்தது. மத்திய அரசின் சமீபத்திய நடவடிக்கையால் இவ்வாண்டு நிதி 515 கோடியாக ஒதுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் சமூகநலன் கருதி அதிக நிதி ஒதுக்கி நமது நம்பிக்கை ஒளி புரட்சித் தலைவிஅவர்கள் எடுத்துள்ள துணிச்சலான செயல் பாராட்டப்பட வேண்டியது ஆகும்.

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"

இடைவிடாது மேலும் மேலும் துன்பம் வந்தாலும் தன் முயற்சியை விடாதவனை அடைந்த துன்பம் துன்பப்படும் என்ற பொய்யா மொழியின் வாக்குக்கு ஏற்ப நமது தலைவிக்கு வந்த துன்பங்கள் கணக்கில் அடங்காது. அவை அனைத்தையும் மிஞ்சி தமிழக மக்களின் துயர் துடைக்க வேண்டும் என்ற அவரது முயற்சி வெற்றி நடை போட்டு வரும் அதே வேளையில் துன்பங்கள் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பல பிரச்சினைகள் இருப்பதால் இந்த மானியக் கோரிக்கைக்கு தொடர்புடையதாக இல்லாவிட்டாலும் எனக்கு இன்று பேச வாய்ப்பு கிடைத்த காரணத்தினால் என்னுடைய தொகுதியின் பிரச்சினையை இங்கே முன்வைக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் என்ற ஆலை கடந்த 10 ஆண்டுகளாக மூடிக் கிடக்கின்றது. இன்னொன்று மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி என்ற ஆலையும் கடந்த 2 ஆண்டுகளாக மூடிக் கிடக்கின்றது. தமிழகத்தில் மூடிய ஆலைகளைத் திறந்து வைத்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இவ்விரண்டு ஆலைகளையும் திறந்து, அங்கு பணி புரிந்த 4000க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். எங்களது தொகுதியில் 25,000—க்கு மேற்பட்ட லம்பாடி இனத்தைச் சார்ந்த மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தற்போது எஸ்.ஸி. பிரிவில் உள்ளார்கள். அவர்களை எஸ்.டி. பிரிவில் சேர்க்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை விடுக்கின்றேன். மேலும் மேட்டூர் தொகுதியில் குடிநீருக்காக மேட்டூர் அணை கட்டப்பட்டபோது நீரேற்று நிலையத்தில் போட்ட 100 எச்.பி. மின் மோட்டார்கள் தற்போது பழுதடைந்து பராமரிப்புச் செலவும் மின் கட்டணமும் அதிகமாக உள்ள காரணத்தால் மேட்டூர் நகர மக்களுக்கு குடிநீருக்கு மிகவும் பிரச்சினையாக உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் நிதியை ஒதுக்கி மேட்டூர் நகரத்தில் நீரேற்று நிலையத்தில் 100 எச்.பி. மின் மோட்டார்களை புதிதாக வாங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது ஆட்சியில் காவலர்கள் குடியிருப்புக்காக புதிய வீடுகள் கட்டுவதற்கு பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு இன்னும் வீடுகள் கட்டப்படாமல் உள்ளது. இந்த நிதியாண்டில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நிதியை ஒதுக்கி அவர்களுக்கு புதிய வீடுகள் கட்டுவதற்கு ஆவன செய்ய

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் மகளிர் மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 10 ஆண்டுகள் முடிவு அடைந்துவிட்டன. கடந்த ஆட்சியின்போது குடத்திலிட்ட விளக்காக இருந்த மகளிர் மேம்பாட்டுக் கழகம் நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றவுடன் இன்று குன்றின் மேலிட்ட விளக்காக ஒளி வீசி தன்னுடைய பணியைச் செய்துகொண்டிருக்கிறது. இன்னும் நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் பல கோடிக் கணக்கில் நிதியை ஒதுக்கி ஏழை எளிய மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேறவும், பெண்கள் சுய வேலைவாய்ப்பில் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கும் நிதி முழுவதும் செய்யப்பட்டுள்ளது. மற்றும் விதவைத் தாய்மார்கள் தங்களுடைய பெண்கள் திருமணத்திற்கும் கலப்புத் திருமணத்திற்கும், விதவைகள் மறுமணத்திற்கும் பல கோடிக்கணக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அவர்களுக்கு வாழ்வு அளிக்க செய்திருப்பது நாம் அனைவரும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

பிற்பகல் 5 -00

நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை சமூகநலத்தில் அக்கறைக் கொண்டுள்ள நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசா அவர்கள் நம்முடைய தலைவி அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று தன்னுடைய மனதார, வாயார வாழ்த்தி இருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காக பல திட்டங்களைத் தீட்டி அவர்களை தங்களுடைய வாழ்க்கைத் தரத்தில் உயர்த்துவதற்காக பல திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஏழைப் பெண்கள் தங்களுடைய வருவாயை பெருக்கிக்கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆயிரக்கணக்கான பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் ஊனம் உற்ற குழந்தைக்ளுக்கு 3 சக்கர வண்டிகள், இன்னும் எத்தனையோ திட்டங்களைத் தீட்டி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரும்பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த மானியத்தின் மீது எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி, 10 நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள். இன்னொரு மானியம் வேறு இருக்கிறது.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுக நலத் துறை மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை முன்வைக்க நான் விரும்புகிறேன்.

ஏழை எளிய கிராமப்புற மக்கள் இன்றைக்கு பிரதானமாக மதிய உணவுத் திட்டத்திலிருந்து மாறி முதலமைச்சருடைய சத்துணவுத் திட்டத்திற்கு வந்திருக்கிறார்கள். குறிப்பாக பல பள்ளிகளில் அந்த மதிய உணவுத் திட்டத்திற்கு போதிய இடங்கள், கட்டிடங்கள், நல்ல வசதிகள், இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதன் மூலமாக இன்றைக்கு இருக்கக்கூடிய பல்வேறு விஷ ஜந்துக்கள், பூச்சிகள் விழுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. மாண்புமிகு நம்முடைய சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் பள்ளிக்கூடங்களில் உள்ள அந்தச் சமையல் கூடங்களைக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் அந்த மதிய உணவுக் கூடங்கள் மட்டுமல்ல, பாலர் பள்ளி போன்ற இடங்களில் சமைக்கும் இடங்கள் என்பது பொதுவாக கீத்துக் கொட்டகைகள் இல்லையென்றால் சில சாக்கு படுதாக்களைப் போட்டு சமைக்கிற நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சொல்வார்கள், இங்கே ஆதாரத்தோடு சொல்லுங்கள், இப்படி எல்லாம் சொல்லாதீர்கள்; ஒட்டுமொத்தமாகச் சொல்லாதீர்கள், இதே பழக்கமாக போய்விட்டது என்று சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி, நீங்கள் பேசுகையில் எல்லாவற்றிற்கும் அப்படி ஒரு காரணம் கற்பிக்கக் கூடாது. இதுவெல்லாம் நீங்கள் கருத்துக் கூறிய பிறகு அதில் மாண்புமிகு அமைச்சர் ஆட்சேபணை செய்தால் நீங்கள் அந்தமாதிரிச் சொல்லலாமே தவிர எல்லாவற்றிற்கும் ஒரேமாதிரிச் சொல்வார்கள் என்பதுபோல் நீங்கள் பேசக் கூடாது. கற்பனையில் பேசக்கூடாது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய 10 வருடங்கள் ஆகிவிட்டன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது இந்தத் திட்டம் மிகவும் சீர்கேடு அடைந்து சத்துணவுக் கூடங்கள் பராமரிப்பு என்பதே சரியாக இல்லாமல் போய்விட்டது. இப்போது இதய தெய்வம் டாக்டர்

புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் பொறுப்பு ஏற்றவுடன் அவர்கள் தொண்டு உள்ளம் படைத்த அனைத்து பிரிவினர்களுக்கு அழைப்பு விடுத்து அவர்கள் மூலமாகவே அரசாங்கத்தினுடைய நிதி நெருக்கடிக்கு மத்தியில் அவர்கள் மூலமாகவே மட்டும் ஏறக்குறைய 2 கோடி ரூபாய்க்கு இந்த சத்துணவுக் கூடங்கள் சீர்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முழுமையாக சீர் செய்யவேண்டுமென்றால் ஏறக்குறைய 40 கோடிக்கு கிட்டத்தட்ட ஆகிறது. இதைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் சீர்ப்படுத்தி வரவேண்டும். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு இதை சீர்படுத்துகின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி, யூகத்தின் அடிப்படையில் நீங்கள் எதையாவது சொல்லிக்கொண்டே இருக்க வேண்டாம்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்கு சமைக்கிறபோது பல்லி விழுந்து விடக்கூடாது, அதைப் பாதுகாக்கிற விதத்தில் நம்முடைய சமையல் கூடங்கள் எல்லாம் இருக்கவேண்டும் என்பதற்காக நான் சொன்னேன். பள்ளிகளுக்கு அந்த மதிய உணவிற்காக வழங்கக்கூடிய, அந்தக் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய அரிசி 100 கிலோ எடை வைத்துப் பார்த்தால் அது 85 கிலோதான் இருக்கிறது. அளவு குறைவாக இருக்கிறது. என்னுடைய தொகுதியில் உள்ள திருப்பத்தூரில் பல இடங்களில் அரிசியைக் கொண்டு வந்து இறக்குகிறபோது, நானே, அதைத் திரும்பவும் எடைபோடச் சொல்லி, எடை போட்டு பார்க்கிறபோது 85 கிலோதான் இருந்தது. என்ன காரணம் என்று கேட்டேன்? அநேகமாக, இது கொண்டு வருகிறபோதே குறைந்துவிடுகிறது என்று சொன்னார்கள்.

பிற்பகல் 5 -05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கிலோவா; கிராமா?

திரு. ஜி. பழனிசாமி : கிலோ.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் மூலமாகத்தான் இந்த அரிசி லாரிகளிலே கொண்டு வந்து இறக்கப்படுகிறது. லாரிகளிலே கொண்டு வருகிறபோது சில நேரங்களில் அரிசி சிந்தி, குறைந்து விட்டால்கூட, எவ்வளவு குறைகிறது என்பதை ஆங்காங்கு இருக்கிற

சத்துணவு அமைப்பாளர்கள் தகவல் கொடுத்தவுடன், அவர்களுக்குத் திரும்ப அந்த அரிசியை சிவில் சப்ளைஸ் நிறுவனம் வழக்கிவிடுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி, நீங்கள் பேசும்போது சொன்னது, அந்த அரிசியை சென்டரிலே கொண்டு வந்து இறக்கும்போது உள்ள நிலைமையா அல்லது பிரித்துக் கொடுக்கும்போது ஏற்படுகிற நிலைமையா என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டும். ஏனென்றால், அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் இல்லையா ?

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசியைக் கொண்டுவந்து இறக்குகிறபோது இருக்கிற நிலைமை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் முட்டை வழங்குகிறோம். வழங்கப்படுகின்ற முட்டையின் எடை குறைவாக இருக்கிறது. கடையிலே விற்கிற முட்டைக்கும் அந்தப் பள்ளிகளிலே குழந்தைகளுக்குக் கொடுக்கிற முட்டைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அது இரண்டாந்தர முட்டையாக இருக்கிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோழி முட்டையிடும்போது, நாங்கள் அதனுடைய எடையைப் பார்க்க முடியாது. கோழி இடுகிற முட்டையைத்தான் நாங்கள் தரமுடியுமேயொழிய, கோழியிடம் போய், நீங்கள் இப்படித்தான் முட்டை போடவேண்டும் என்று நாங்கள் அதற்குச் சட்டம் போட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைத் தவறுதலாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி அவர்கள் தேடிக் கண்டுபிடித்து அந்தமாதிரி முட்டையில்லாமல் வாங்கி வந்து கொடுத்தால் நலமாக இருக்கும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், முட்டை சாப்பிடுவாரா, சாப்பிடமாட்டாரா என்பது எனக்குத் தெரியாது. நான் முட்டை சாப்பிடுகிற பழக்கம் உண்டு. கோழி முட்டையிலே, இரண்டாந்தரம், மூன்றாந்தரம் என்று இருக்கிறது. ஒரு முட்டை என்று சொன்னால், 50 கிராம் எடைகொண்ட முட்டையைத்தான் முழுமையான முட்டை என்று சொல்வார்கள். ஆனால் அங்கே அளிக்கப்படுவது, சாதாரண 30 கிராம் எடையுள்ள இரண்டாந்தர முட்டை என்று சொல்லப்படுகிறது. அதை, தலைச்சன் கோழிமுட்டை என்று சொல்லுவார்கள் கிராமங்களிலே.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லட்சக்கணக்கான முட்டைகள், நிறைய முட்டைகள் சப்ளை செய்யப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. அந்த முட்டைகளில் ஒவ்வொரு முட்டையாக எடுத்துப்பார்த்து நாங்கள் வாங்குவதில்லை. கோழி இடுகிற முட்டைகளை அப்படியே பவுல்ட்ரியிலே இருந்து பெற்று, அதை அப்படியே விநியோகிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாங்குகிறார்கள் என்று சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். அதனுடைய கான்ட்ராக்டர், ஒப்பந்தக்காரர், அதுபோன்ற முட்டைகளை இன்றைக்குப் பள்ளிகளுக்கு வழங்குகிறார்கள். அதை நீங்கள் சரிபார்க்க வேண்டும். செக்-அப் பண்ண வேண்டுமென்றுதான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முட்டைகளைப் பெறும்போழுதே, முட்டைகளில் அழுகல் இருந்தாலும், அதில் குறைவு இருந்தாலும், முட்டைகளில் பாதிப்பு இருந்தாலும் அதை உடனடியாகத் திருப்பித் தரவேண்டுமென்கிற உத்திரவை, சமூக நலத் துறை ஆங்காங்கே உள்ள அமைப்பாளர்களுக்கு பிறப்பித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை கொண்டு வர விரும்புகிறேன். ஒருசமயம், பள்ளிகளிலுள்ள முட்டை போடும் சத்துணவு மையத்திற்கு போய் பார்க்க வேண்டும் என்பதற்காகப் போனேன். அங்கு முட்டைகள் அவிக்கப்பட்டு, அவைகளை ஒரு கூடையிலே கொட்டி, எல்லாவற்றையும் உரித்துப் பார்க்கிறபோது, தண்ணீராக இருந்தது. நல்ல முட்டையாக இல்லாமல், அவை கூழ் முட்டை என்கிற மாதிரி இருந்தது. இருக்கிற முட்டையை வைத்து எல்லா பிள்ளைகளுக்கும்........(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடிக்கடி முட்டை சாப்பிடுகிறவர் என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். முட்டையை வெளியிலே பார்க்கிறபோது, அது கெட்டுப் போய் இருக்கிறதா; நன்றாக இருக்கிறதா என்று தெரியாது. அவித்தவுடன்

கெட்டுப் போயிருந்தால், அந்த முட்டையை உடனடியாக அகற்றிவிட்டு, வேறு முட்டையைத்தான் வழங்குவார்களேயொழிய, அழுகி, ஒழுகிக்கொண்டு இருக்கிற முட்டையை எந்த அமைப்பாளரும் குழந்தைகளுக்கு வழங்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரமான முட்டைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அந்தப் பள்ளிகளுக்கு குறிப்பாக, 1984 முதல், அந்த குழந்தைகள் உணவுக்காக 13 காசுகள் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றையதினம் 12½ பைசாக்கள் வழங்கப்படுகிறது. 1984-லே 13 பைசா; இப்போது 12½ பைசாதான் வழங்கப்படுகிறது. அப்படியென்றால், பத்தாண்டு காலத்தில் விலைவாசி கூடியிருக்கிறதா; குறைந்திருக்கிறதா? அதிலே விறகு எப்படி வாங்க முடியும்? கீரை எப்படி வாங்க முடியும்? நீங்கள் சொல்லக்கூடிய பப்பாளி பழம் எப்படி போட முடியும்? இன்னும் சத்துணவிலே.........

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது, 'டினிப்' திட்டம் எல்லா மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு வந்துவிட்ட காரணத்தினால், அவர்களுக்கு 'சிடா' திட்டத்தின் மூலமாகவும் மற்றவைகளின் மூலமாகவும் காய்கறிகளைப் பயிரிடுவதற்கு ஏற்கெனவே பணம் கொடுக்கப்படுகிறது. பப்பாளி மரங்கள், முருங்கை மரங்கள் எல்லாம் அந்த இடங்களிலே பயிரிட்டுக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 'சிடா' திட்டத்தின் மூலமாக உதவி அளிக்கப்படுகின்ற காரணத்தினால், அவர்களுக்கு இதற்கென்று மானியம் ஏற்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கேயாவது கூட்டுறவு முறையிலோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களிலோ அப்படி காய்கறிகளைச் சாகுபடி பண்ணி, விலை மலிவாகக் கொடுப்பதற்கான வாய்ப்பே கிடையாது. இன்னும் சொல்லப்போனால் இது ஒரு கான்ட்ராக்ட் முறையிலே கொண்டு வந்து கொடுக்கப்படுகிறது. இரண்டு கிலோ கத்திரிக்காய் கொடுக்க வேண்டும், ஒரு கிலோ பப்பாளிப் பழம் கொடுக்க வேண்டும் என்றால் அவன் அரை கிலோ தான் கொடுக்கிறான். விலைவாசி அப்படி ஏறிப்போயிருக்கிறது. அது ஏதோ பிள்ளைகளுக்கு இதெல்லாம் சத்துணவு என்று காட்டக்கூடிய அளவிற்கு........

பிற்பகல் 5 -10

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அமைப்பாளரே காய்கறிகளை வாங்கிக் கொள்ளலாம். கான்ட்ராக்ட் முறையில் மட்டும் இல்லை; கான்ட்ராக்ட் முறையில் கொடுக்கிற இடத்தில் கொடுக்கிறார்கள். இல்லாத இடங்களிலே அமைப்பாளரே பெற்றுக் கொள்ளலாம் என்று இருக்கிறது. சத்துணவுக்குக் காட்டப்படுகின்றது என்கின்ற தவறான தகவலைச் சொல்கிறார். சத்துணவுத் திட்டம் இன்றைக்குத்தான் எல்லோராலும் பாராட்டப் படக் கூடியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதேபோன்று, பள்ளிக் குழந்தைகள், 100 குழந்தைகள் இருக்கின்றன என்றால் 75 குழந்தைகளுக்குத்தான் நீங்கள் உணவு கொடுக்க வேண்டும்; 25 குழந்தைகளுக்கு உணவு...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தவறான தகவலைச் சட்டமன்ற உறுப்பினர் அவைக்குத் தருகிறார்கள். அப்படி எந்த உத்தரவையும் சமூக நலத் துறை தரவில்லை. எந்த இடத்திலேயும் குழந்தைகள் வந்து சாப்பாடு இல்லை என்று திரும்பிப் போன வரலாறு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதேபோன்றுதான் இந்த எண்ணெய். ஏற்கனவே 3 கிராம் வழங்கப்பட்டிருந்தது. இப்பொழுது பார்த்தால் ஒரு கிராம்தான் ஒரு குழந்தைக்கு என்று வழங்கப்படுகிறது. அப்படி நாளுக்கு நாள் குறைக்கப்பட்டிருந்தால் எப்படி அந்தக் குழந்தைகள் சத்தான குழந்தைகளாக இருக்கும் ? (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லட்டும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினர் பேசி முடித்தவுடன் அமைச்சர் பதில் சொல்லலாமே. வார்த்தைக்கு வார்த்தை.......

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகிறார்கள். நான் பதில் அளிக்கிறேன். அதற்கு இடையிலே ஞானசேகரன், சட்டமன்ற உறுப்பினர் வர வேண்டிய அவசியம் இல்லை.

ஒரு கிராம் எண்ணெய் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்தபின் இரண்டு கிராமாக உயர்த்தி உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே 3 கிராம் வழங்கி வந்தது. ஆனால் இப்பொழுது ஒரு கிராம் வழங்கப்படுகிறது.

அதேபோன்றுதான் இன்னொன்றையும் நம்முடைய அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். பருப்பு 15 கிராம், இப்பொழுது ஏழரை கிராம். நீங்கள் சத்தான உணவை வழங்குவதாகச் சொல்கிறீர்கள். எப்படி, 15 கிராம் வழங்கிக் கொண்டிருந்த இடத்திலே ஏழரை கிராம் வழங்கினால்...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தவறான தகவலைச் சொல்கிறார். அதாவது, கிராமப்புற பகுதிகளிலே இருக்கிற குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' குறைவின் காரணமாக முகத்திலே வெள்ளைத் தழும்பு ஆங்காங்கே வருவதை ஒட்டி உலக வங்கி இவர்களுக்கு சோயா வழங்க வேண்டும்; சோயா வழங்கினால் அந்த மாவின் மூலமாக இது தவிர்க்கப்படும் என்று அவர்கள் பரிசோதித்து, அந்தப் பரிசோதனையை எங்களுக்கு அளித்ததன் பேரில் விலை கூடுதலாக இருந்தாலும், பருப்பு 50 பர்சென்டும், சோயா 50 பர்சென்டும் சேர்த்துத் தருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சோயா மாவு என்பது உண்மையிலேயே சத்துள்ள மாவுதான். ஆனால் அந்த மாவிலே ஒரு வாடை இருக்கிறது. நானே சாப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். பிள்ளைகளே என்னிடத்தில் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். அந்த ஏழரை கிராம் சோயா மாவு கொடுக்கிறார்கள். இந்த ஏழரை கிராம் சோயா மாவு.......

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மருந்து என்றால் கசக்கத்தான் செய்யும். ஆனால் உடலுக்கு அது நல்லது. இன்றைக்கு உலகம் முழுவதும் அதைச் சிபாரிசு செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான் அது கொஞ்சம் கசப்பாக இருந்தாலும் உட்கொள்ளும் குழந்தைகளுக்கு நன்மை பயக்க வேண்டுமென்ற அடிப்படையில் புரட்சித் தலைவி அளித்திருக்கிறார்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** இந்த சோயா மாவு கசக்கிற காரணத்தினால் அந்தக் குழந்தைகளே சாப்பிடுவது இல்லை. அவ்வளவையும் வீணாகக் கொட்டி.... .

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டும். ** இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ** என்று சொல்வது சரியில்லை.

இரண்டாவது, புரட்சித் தலைவி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலேதான் இன்றைக்கு அதிகமான குழந்தைகள் சத்துணவுக் கூடத்திற்கு வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,ல் சோயாமாவு சத்துள்ளதுதான். நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், குழந்தைகள் அதில் கசப்பு இருக்கிற காரணத்தினால் இதை உண்ண மாட்டேன் என்கிறார்கள். ஆகையால்...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சோயா மாவை முழுவதுமாகக் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆனால், எங்களாலே 50 பர்சென்ட்தான் இன்றைக்கிருக்கிற நிதி நெருக்கடியில் கொடுக்கப்படுகிறது. 50 பர்சென்ட் பருப்பையும், 50 பர்சென்ட் சோயா மாவையும் சேர்க்கும்பொழுது எந்த வாசனையும் இல்லை; அதை விரும்பிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அடுத்தபடியாக, இந்தக் குழந்தைகளுக்கு வழங்குகிற அந்தக் காலணி. எங்களுடைய பகுதியிலே யாரும், எந்தக் குழந்தையும்—5-ஆம் வகுப்பிலேயிருந்து 8-ஆம் வகுப்பு வரையிலும், ஆரம்பப் பள்ளியிலிருந்து இந்த 8 ஆம் வகுப்பு வரையிலும் எந்தக் குழந்தைகளுக்கும் வழங்கப்படுவதேயில்லை. ஆனால் வழங்கப்படுவதாக உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது எங்கே.........

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, காலணிகளுக்கு உரிய தொகையைத்தான் சமூக நலத் துறை ஒதுக்குகிறது. அதை வழங்குவது கல்வித் துறை; அதை வழங்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 5-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடைசியில் மொத்தமாகச் சொல்லி விடலாம்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காலணி வழங்குவதிலேகூட, ஏற்கனவே, கதர் வாரியம், அதற்கான தயாரிப்புகளை டெண்டர் எடுத்துதான் செய்ததாகச் சொன்னார்கள். அதுபோன்ற ஒரு ஒப்பந்தத்தை இதிலே செய்து, போலியான கம்பெனிகள் சில, நாங்களும் கதர் வாரியம் என்று சொல்லி, அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்று.....

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட சொசைட்டிகளுக்குத்தான் ஆர்டர் வழங்கப்படுகிறது. இரண்டாவதாக, இந்த ஆர்டர்களை சொசைட்டிகளுக்கு வழங்கும்போது, பணம் முழுவதும் காதிக்குத்தான் வழங்கப்படுகிறது. காதி நினைத்தால், அந்த சொசைட்டிகள் நல்ல சொசைட்டிகள் இல்லையென்று தெரிந்தால், உடனடியாக பணத்தை நிறுத்திவிட முடியும். பணம் அரசாங்கத்திற்குத்தான் வழங்கப்படுகிறதேயொழிய, தனியார் யாருக்கும் வழங்கப்படுவதில்லை. எந்த சொசைட்டிக்கும் வழங்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கதர் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போன்று, ஏதோ ஒருசில கூட்டுறவுச் சங்கங்களில் இதுபோன்ற சிறிய தவறுகள் நடைபெற்றது உண்மைதான். ஆனால், அவை தற்போது புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, களையப்பட்டு, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், 'பிளாக் லிஸ்ட்' டிலே சேர்க்கப்பட்டு, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, புதிதாக எந்த ஒரு துறையிலிருந்தும் ஆர்டர்கள் கொடுக்கப்படாமல், அந்த முறை நீடிக்க விடாமல் தடை செய்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, ஒரே ஒரு நிமிடம்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலித்தனமாக ஒரு சொசைட்டியை உருவாக்கி, அவர்களிடத்திலிருந்து ஒரு டெண்டரைப் பெற்று.......

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலி சொசைட்டி, போலி சொசைட்டி என்று உறுப்பினர் சொல்லக் கூடாது. காதியினுடைய அங்கீகாரத்தில் அந்த சொசைட்டிகள் இயங்கி வருகின்றன. போலி சொசைட்டிகளாக இருந்தால், காதி துறையே அதன்மீது நடவடிக்கை எடுக்கும். நாங்கள் கொடுக்கிற பணம் முழுவதும் காதிக்குக் கொடுக்கிறோம். காதி துறையே அந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, பெண்களுக்கு இராமாமிர்தம் உதவித் தொகை என்று, ரூ. 5,000 எட்டாவது வகுப்புவரை படித்த பெண்களுக்கு வழங்குவதாகச் சொல்கிறார்கள். அநேகமாக, பல கிராமங்களிலே, பல ஊராட்சி ஒன்றியங்களிலே இதுபோன்று வழங்குவதில்லை. பெண்களைக்கூட, தகுதியுள்ளவர்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அவர்களுக்கு அந்தப் பணம் கொடுக்கப்படுவதில்லை. நாள் கடத்தப்படுகிறது. எங்களுக்குக் கோட்டா முடிந்து விட்டது; ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 4 பேர்தான்; 8 பேர்தான்; அவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். எப்படி அவ்வாறு தகுதியுள்ளவர்களுக்கு அந்தப் பணம் கொடுக்காமல் மறுக்க முடியும்?.....

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்கும் கீழே இருப்பவர்கள், நிரம்பப் பேர், ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால், அரசாங்கத்திலே ஒதுக்கப்படுகிற நிதி, 5 கோடி ரூபாய்தான். அதற்காக ஒதுக்கப்படுகிறது. அதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரித்துக் கொடுக்கிறோம். அந்த 5 கோடி ரூபாயில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கொடுக்கப்படுகிற தொகையில், எவ்வளவு பேர் விண்ணப்பம் செய்கிறார்களோ, அவ்வாறு விண்ணப்பம் செய்தவர்களுக்கு, முதலிடத்தில் இருப்பவர்களுக்குக் கொடுக்கிறோமே ஒழிய, அவ்வளவு விண்ணப்பம் செய்கிறவர்களுக்கும் கொடுப்பதற்கு நிதி நெருக்கடியால் இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு நீங்கள் ஏதாவது வரம்பை உருவாக்குங்கள். இல்லையென்றால், குலுக்கல் முறையிலாவது கொண்டு வாருங்கள். தகுதியான...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அதற்காகத்தான் இந்த ஆட்சியில்

— மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில்—வரைமுறைகளை உருவாக்கியிருக்கிறோம். கடந்த ஆட்சியில், நிரம்பப் பெட்டிஷன்கள் பெண்டிங்காக இருந்தன. எங்களுடைய ஆட்சியில், இப்போது, இந்த ஆண்டு ஒரு 50 பெட்டிஷன்கள் வருகின்றன, ஒரு மாவட்டத்தில் என்று சொன்னால், அதிலே 20 பேருக்குத்தான் கொடுக்க முடியும் என்றால், அந்த 20 பேரில், யார் மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்களோ, அவர்களைத் தேர்ந்தெடுத்து, மீதி 30 பேருக்கும் அவர்கள் கடன் வாங்கிக் கல்யாணம் செய்து விட்டோம் என்று சொல்லக் கூடாது என்பதற்காக, உடனடியாக அவர்களுக்கு பணம் மறுக்கப்பட்டது என்ற தகவலையும் தெரிவித்து விடுகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்; நேரம் ஆகிவிட்டது; நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்று கொடுப்பதே இல்லே. தகுதியானவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அதேநேரத்தில், பெண்களுடைய வயது, திருமண வயது என்பது 21 வயது என்று சொல்லி, அரசாங்கம் வயதை நிர்ணயித்திருக்கிறது. அந்த கிராமத்திலே இருக்கிற 8-வது வகுப்புவரை படித்த பெண்களுக்கு 18 வயதிலேயே திருமணம் நடந்து விடுகிறது. ஆக, அந்தப் பெண்களுக்குக்கூட நிவாரண உதவி கிடைப்பதில்லை. ஆனால், 21 வயதான, திருமண மண்டபங்களிலே திருமணம் செய்யாதவர்கள், கோயிலிலே திருமணம் செய்யாதவர்கள், சாதாரணமாக சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸிலே போய் பதிவுத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இந்தப் பணம் வழங்கப்படுவதில்லை. ஆகவே, அவ்வாறு வழங்குவதற்காக அந்தப் பணத்தை ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸிலே, வெளியிலே, கோயிலிலே திருமணம் செய்பவர்களுக்கு இந்தப் பணம் ஒதுக்கப்படுகிறது. அவ்வாறு ஒதுக்கப்படுகிற தொகையிலும், யார் முன்னுரிமை பெறுகிறார்களோ, மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே யார் இருக்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுக்கிறோம். ஏனென்றால், அதற்கு ஒதுக்கப்படுகிற தொகை மிகவும் குறைவு. அந்த நிதிக்குள்ளே, யார் முன்னுரிமை பெறுகிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரே நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: முடித்து விடுகிறேன். அடுத்து, சத்துணவு அமைப்பாளர்கள். அவர்களைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, 10 ஆயிரம் பேர்கள் கலந்துகொண்ட மாநாட்டில், ஒரு வாக்குறுதியைத் தந்தார்கள்.

பிற்பகல் 5-20

நீங்கள் எல்லாம் பெரிய சமூக சேவை செய்யக் கூடியவர்கள். தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள். உங்களைப் போன்ற குறைவான சம்பளத்திற்கு பணியாற்றக் கூடியவர்கள் எந்த ஊழியர்களும் இருக்க முடியாது என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னைப் போன்றவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் உங்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கி, அவர்களுக்குரிய அத்தனை சலுகைகளும் வழங்குவோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு நீங்கள் ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறீர்கள், முதலமைச்சர் ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறார். எனவே அந்த சத்துணவு அமைப்பாளர்களை, பாலர்பள்ளி அமைப்பாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும், அவர்களுக்குரிய சலுகைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள். திரு. பழனிசாமி பேசுகிறபோது ** என்று சொன்ன அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும், நான் குறிப்பிட்டது உட்பட. டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மற்றும் சத்துணவுத் துறை மானியத்தின் கீழ் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஈயாத கைகளிலே தெய்வம் இல்லை
இரங்காத மனங்களிலே தெய்வம் இல்லை
தாயாகாச் சேவைதனில் தெய்வம் இல்லை
தணியாத கோபத்தில் தெய்வம் இல்லை"

என்கிற அந்தப் பாடலுக்கொப்ப இரக்கப்படுகிற, சமுதாயத்திற்காக

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இரங்குகிற நல்லிதயம் கொண்ட நல்ல அரசாக இன்றைக்கு இருந்து, இன்றைக்கு சமூக நலத் துறை மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியத்தின் கீழ் 48,68,12,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளதை வரவேற்றுப் பேசுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

காது கேளாதோர், கண்ணிழந்தோர் மற்றும் ஒடுக்கப்பட்ட மகளிர் இவர்களுக்காகச் சேவை செய்து வருகிற சமூக நலத் துறை மானியத்தின் மீது இன்றைக்கு ஒருசில கருத்துக்களைக் கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் சீருடைகள் தைத்து வழங்கும் திட்டத்தின் கீழ் 4,38,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் எல்லாம் பெருமளவில் பெண்கள் சேர்ந்து பயன் அடைகிறார்கள். இந்தமாதிரி கூட்டுறவுச் சங்கங்கள் திருச்சியில் இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் அந்தச் சங்கங்களிலே தனி அலுவலர்களாக ஆண்கள் இருக்கிறார்கள். பெண்களுக்காகச் செயல்படும், பெண்களுக்குரிய சங்கம் ஆண் தனி அலுவலரைக் கொண்டு எப்படிச் செயல்படுகிறது என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே அந்த மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் தனி அலுவலர்களாகப் பெண்களை நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கும் சமூக நலத் துறைக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லலாம். ஆனாலும்கூட அந்த மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் தனி அலுவலர்களாக ஆண்கள் இருப்பதை மாற்றி பெண்களை நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திருச்சிராப்பள்ளியில் இந்த மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. ஆயிரக் கணக்கான பெண்கள் அதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எனவே அங்கே மேலும் இரண்டு சங்கங்களை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதுணை புரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று காலணி தயாரிக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் திருச்சியில் மகளிருக்கென்று ஒரு சங்கம் வேண்டும். பல்வேறு தாழ்த்தப்பட்ட மகளிர் இதுகுறித்து என்னிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். எனவே அந்த மகளிர் காலணி தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு சமூக நலத் துறை உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தொண்டு நிறுவனங்கள். இன்றைக்கு தொண்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அதிலும் தொண்டு நிறுவனம் என்று சொல்லப்படுகிற தன்னார்வக் குழுக்களினுடைய பணி மிகச் சிறப்பானதாகும். அவை தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்தாலும் சமூக நலத் துறையின் சமூக நல வாரியமானது தன்னோடுகூட அதை இணைத்து, இன்றைக்கு ஆதரவு கொடுக்கிற முகத்தான் காரியங்களை ஆற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவை எல்லாம் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5 -25

தமிழ்நாடு சமூக நல வாரியம் இப்படி எல்லாம் ஊக்குவிக்கிறது. சரியான முறையில் மிகவும் ஆர்வத்தோடு செயல்படுகின்ற தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் முகத்தான் அவர்களுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அவைகள் எல்லாம் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தின் கீழ் இன்றைக்கு என்னுடைய திருச்சிராப்பள்ளி தொகுதியிலே பல்வேறு சத்துணவுக் கூடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இவற்றை எல்லாம் சரிசெய்ய நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி, பொதுமக்களைக் கூட்டி இவைகளை எல்லாம் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய முனைந்தார்கள். அவர்களுக்கு என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்தச் சத்துணவுக் கூடங்கள் எல்லாம் இன்னும்கூட மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இந்தச் சத்துணவுக் கூடங்களை எல்லாம் நல்லமுறையில் செயல்படுத்துவதற்கு அதனுடைய கூரைகள் எல்லாம் தொய்வடைந்த நிலையில் இருக்கின்றன, மற்ற இடங்களில் எல்லாம் கூரைகள் பழுதுபட்டுக் கிடக்கின்றன. இவற்றை எல்லாம் மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சத்துணவுத் திட்ட ஊழியர்களுக்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் நிதிப் பற்றாக் குறையிலும் நிதி நெருக்கடியிலும் ஊதியத்தை உயர்த்தி இருக்கிறார்கள். ஆனாலும்கூட மிகக் கடுமையாக உயர்ந்து வருகின்ற விலைவாசியினால் தற்போது பெறப்படும் ஊதியம் குறைந்த நிலையில் இருக்கிறது. ஆகவே இதற்கென்று ஒரு Standing Order அல்லது ஒரு குழுவை நியமித்து அவர்களுக்கு நல்ல ஒரு சம்பளத்தை வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தில் ஊழியம் செய்கின்ற இந்த சகோதர சகோதரிகள் மிகவும் சீராகவும் சிறப்பாகவும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் வருகின்ற குழந்தைகளைப் பாதுகாக்கின்ற அந்த மகளிர் மிகவும் பசியோடு இருக்கக்கூடாது. ஆகவே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் நிதி பற்றாக்குறை காரணமாக இருந்தாலும் கூட அவர்களுடைய ஊதியத் தொகையை உயர்த்தி இருக்கிறார்கள். அதை மீண்டும் உயர்த்தி பரிசீலிக்க வேண்டுமென்று மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல நான் சென்ற தடவை இதே சமூக நலத் துறையிலே பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டேன். என்னுடைய திருச்சிராப்பள்ளியிலுள்ள பொன்மலை டாலர்ஸ் காதுகேளாதோர் பள்ளி என்கிற பள்ளிக்கும் 'ஜெரிக்கோ' உடல் ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றோர் பள்ளிக்கும் ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்க வேண்டுமென்று போனதடவை இதே சட்டப் பேரவையில் நான் கோரியிருந்தேன். ஏனோ பல்வேறு காரணங்களைக் கொண்டு அந்த பணியிடங்கள் இன்றைக்கும் அனுமதிக்கப்படாத நிலை இருக்கிறது. ஒரு பள்ளி, அதுவும் காதுகேளாதோர் பள்ளி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாததால் மிகவும் தொய்வுற்ற நிலையில் இருக்கிறது. அதேபோல் திருச்சியிலுள்ள 'ஜெரிக்கோ' உடல் ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றோர் பள்ளிக்கு ஆசிரியர் பணியிடங்களுக்காக நான் பலமுறை சமூக நலத் துறை அலுவலகத்திற்குச் சென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல், அனுமதிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை ஆராய்ந்து பார்த்து இந்தக் கல்வி ஆண்டிலாவது செயல்படுத்தவும், அதைப்போலவே பொன்மலையில் உள்ள டாலர்ஸ் காதுகேளாதார் பள்ளியை ஒரு உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். ஆகவே தொண்டு நிறுவனங்களை நாம் ஊக்குவிக்கிறோம் என்பதற்கு ஒரு நல்ல உதாரணமாக திகழ்கின்றது. சென்ற தடவை கொடுத்தேன். மீண்டும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இரண்டாகப் பிரிக்க முடிவு செய்திருக்கிறார்கள். புரட்சித் தலைவிக்கு என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது தமிழ் முனிவர் வீரமாமுனிவர் பெயரை வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல திருச்சி நகராட்சியினை இன்றைக்கு மாநகராட்சியாக ஆக்கியிருக்கிறார்கள், அதற்காக என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சி

நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள காந்தி மார்க்கெட் என்கிற மார்க்கெட் மிகவும் போக்குவரத்துக்கு நெருக்கடி உள்ளதாக உள்ளது. ஆகவே சென்னையில் கோயம்பேட்டில் அமைந்துள்ளதுபோல் திருச்சியில் இன்னொரு மார்க்கெட் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று நம்முடைய தமிழ்நாட்டில் நடுநாயகமாக திகழ்கின்ற மலைக்கோட்டையின் மேலே ஏறுவதற்கு முக்கியமாக, சிறப்பாக செல்வதற்கு மின்தூக்கி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி நகர சாலைகள் கடந்த மழையால் மிகவும் சேதம் அடைந்து உள்ளன. அவைகளை உடனே சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த திருச்சிராப்பள்ளி நகரம் மாநகராட்சி ஆக்கப்பட்டுள்ள நிலையிலே பஸ் போக்குவரத்து, பஸ் ஸ்டாண்ட் மிகவும் போதுமானதாக இல்லை. மத்தியப் பேருந்து நிலையம் மிகுந்த நெருக்கடி உள்ளதாக இருக்கிறது. ஆகவே மத்திய சத்திரம் பேருந்து நிலையம் அந்த நெருக்கடியிலிருந்து திரும்புவதற்கு திண்டுக்கல் ரோட்டில் ஒரு பஸ் நிலையமும், புதுக்கோட்டை ரோட்டில் ஒரு பஸ் நிலையமும், மதுரை ரோட்டில் ஒரு பஸ் நிலையமுமாக 3 பேருந்து நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-30

இந்த நல்லதொரு சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா.

**Dr. Beatrix D`Souza:** Hon`ble Deputy Speaker Sir, I would like to express my thanks for being allowed to participate in the discussion on the Social Welfare Demand No.29.

Tamil Nadu has long been a true Welfare State with its enlightened humane and progressive policies dedicated to the welfare of the three most vulnerable sections of the society-women, children and the handicapped.

Following the setting up of the State Commission for Women, there has been a comprehensive document on the Government`s policy of Women, after the Women`s Summit held on 9th March 1994. UNICEF has applauded the 15 point programme for Child Welfare launched by the Hon`ble Chief Minister.

The greatest achievement of this Government is that it has made a difference in the lives of women and children, thus benefitting the family which is the unit of society.

I would like to concentrate on just one aspect of women`s welfare and that is linked to the well-being of the child. The Government of India has ratified the U.N. Convention on the Rights of the Child. Every child has the right, among other things, to its mother`s milk.

Government of India has recognised this fact by passing the Infant Milk Substitutes, Feeding Bottles and Infant Feeding Act of 1992. This Act places restrictions on the supply of artificial baby foods. There is restriction even on the advertisement of the Baby Food. There are 57 lakhs women workers in Tamil Nadu, of which 50 lakhs are in the unorganised sector.

30 lakhs children are below 5 years of age and 12 lakh are below 2 years of age. On behalf of myself and women`s organisations in the State, I request that the Government should give positive support to mothers` breast feeding to their babies.

One major step to help the women would be the extension of maternity leave to four months from the time of child-birth as recommended by the Indian Association of Paediatricians which has already been implemented by the Governments of Punjab, Haryana, West Bengal and Maharashtra. Under the Maternity Benefit Act and Employees State Insurance Act, maternity leave should be granted for four months. This would help the women working in the organised sector and 11% of the female work force.

90% of the women workers however, fall in the unorganised sector. I suggest that the Muthulakshmi Reddy Child-birth Scheme be extended to all needy women, abolishing the present income limit of Rs.12,000/- per annum. A cash benefit of Rs.1500/- should be provided, which is approximately 4 months emoluments at minimum wages, i.e., Rs.20 per day for 20 working days in a month. It could be paid in three instalments before and after child birth.

What is important is that maternity benefits should be delinked from the number or gender of the children, so that every child–even the third child–enjoys the fundamental right to mother`s milk.

The third child does not ask to be born. You cannot punish the third child. The third child also has a right to its mother`s milk. The woman also cannot be punished because very seldom a woman has control whether she wants a second child, a third child or fourth child. If anyone is to be punished, it should be the man. You can cut his increment or have any such deterrent. In any case, it is high time men took the responsibility for family planning. (Thumping of desks)

பிற்பகல் 5-35

Finally, the scheme for the eradication of juvenile beggary should also include women beggars. The children of lepers who are also made into beggars are in danger of getting disease. They are also in a sense street children and should be taken off the streets and included in the scheme for compulsory education.

Finally Sir, I would like to make a personal appeal for a young child whose case has come up in a newspaper recently. The boy by name Vidhyasekar was knocked down on July 16, 1987 by a District Collector`s car (MDN 7289). The District Collector, a particular I.A.S. Officer is now in Delhi and the boy was promised all sorts of aid but he only got 5000 rupees. His mother got a menial job and he has to spend 3000 rupees every time he comes to change his artificial limb. I am sure Hon. Chief Minister with the generosity would give some help to this poor boy who has not had any help from 1989. Thank You. (Thumping of desks)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

*திரு.சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கான வாய்ப்பு நல்கிய தங்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சமூக நலத் துறை மூலமாக இப்பொழுது சத்துணவு மாணவர்களுக்கு மாதத்திற்கு இரண்டு முட்டைகளைப் போடுகிறார்கள். ***

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடுத்த எடுப்பிலேயே தவறான தகவலை சட்டமன்றத்திற்கு கொடுத்துக்கொண்டிருக்கிறாரே என்பது மிகுந்த ஆச்சரியமாக இருக்கிறது. ** (மேசையைத் தட்டும் ஒலி)*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

திரு.சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

திரு.சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பணிவன்பான வேண்டுகோள். அமைச்சர் அவர்களுக்கு பின்னாலே பதிலுரைக்க நீங்கள் வாய்ப்புக் கொடுக்க இருக்கிறீர்கள். அடிக்கடி அவர்கள் இப்படி குறுக்கிட்டு...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஞானசேகரன், நீங்கள் ஒரு கருத்தைத் தவறாக சொல்லும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக எழுந்து அதனை மறுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. இதிலே கடைசியாகத்தான் சொல்ல வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. இது அவைத் தலைவர் தீர்மானம் செய்ய வேண்டிய விஷயம். அதை நீங்களே கையில் எடுத்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கக் கூடாது. நீங்கள் சரியான விவரங்களை மட்டும் தர வேண்டும்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான குற்றச்சாட்டுகளைச் சொல்லி, அதை அவைக் குறிப்பேட்டிலே ஏற்றிவிடக் கூடாது என்பதற்காக தான் உடனேயே மறுத்து அதற்குரிய பதிலை அளிக்கிறேன்.

பிற்பகல் 5-40

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி இந்த மன்றத்திலே

** மாண்புமிகு பேரவைத் துணைதலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

விவாதிக்கக் கூடாது. ஏனென்றால், இதற்குரிய வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கும்போது, இப்படிப்பட்ட பிரச்சினையைச் சட்டமன்றத்திலே கிளப்புவது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே பிரச்சினைக்காக, கோர்ட்டிலே ** வழக்குப் போட்டிருக் கிறார்கள். இதற்குரிய பதிலை அரசு தன்னுடைய சார்பாக அங்கே அளித்திருக்கிறது. கோர்ட்டிலே முடிவு தெரியும்வரை, இதைப்பற்றி இந்தச் சட்டமன்றத்திலே விவாதிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஞானசேகரன், நான் சொல்வதைக் கேளுங்கள், நீதிமன்றத்திலே ** இது சம்பந்தமாக வழக்கு இருக்கிறது (குறுக்கீடு). திரு. அமர்நாத் இந்தமாதிரி கண்ட இருக்கைகளில் உட்கார்ந்துகொண்டு நீங்களாகப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது (குறுக்கீடு). நான் கண்டிக்கிறேன் திரு. ஞானசேகரன், நீதிமன்றத்திலே ** சம்பந்தமாக வழக்கு நிலுவையிலே இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இதுசம்பந்தமான கருத்துக்களை விட்டுவிட்டு வேறு கருத்துக்கள் இருந்தால் சொல்லலாம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றப் பிரச்சினைக்கே போகவில்லை நான். நான் பொதுவாக ** என்றுதான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். யார் கேஸ் போட்டிருக்கிறார்கள் என்றுகூட போகவில்லை. I am not going into that.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் ** இந்த விலையினுடைய விஷயமாகத்தான் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். ** என்பதுதான் நீதிமன்றத்திலே வழக்காக இருக்கிறது. அப்படியிருக்கும் போது, அதைப் பற்றி இந்த அவையிலே விவாதிக்கக் கூடாது என்பதைத்தான் நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஞானசேகரன், நீங்கள் ஒரு வழக்கறிஞர். நீங்கள் இந்த அவையினுடைய விதிகளை நன்றாக அறிந்திருக்கிறீர்கள். எனவே, அதனை விட்டுவிட்டு வேறு கருத்துக்குச் செல்லலாம்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நீதிமன்ற விவாதத்திற்கே போகவில்லை. நான் ** பற்றியும் சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் வேறு கருத்துக்களைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்த கருத்தாக *(குறுக்கீடு)* என்னுடைய கருத்துக்களையெல்லாம் *(குறுக்கீடு)* ** இந்த நிதி நெருக்கடியால் உந்தப்பட்டிருக்கிற அரசுக்கு கொஞ்சம் உதவியாக இருக்கும் என்ற காரணத்தினால்தான் இதை ஒரு ஆலோசனையாக வைக்கிறேனேயொழிய......

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு உங்களைவிட இந்த நிதி நெருக்கடியில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று தெரியும். உங்களைப் போன்றவர்கள் எங்களுக்கு அறிவுரை சொல்லத் தேவையில்லை. *(குறுக்கீடுகள்)* அரசுக்கு அறிவுரை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேன். ** அதையெல்லாம் பரிசீலித்து இந்தத் திட்டம் நிறுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை அரசு எடுத்திருக்கிறது. வழக்கு கோர்ட்டிலே நிலுவையில் இருக்கும்போது அதைப் பற்றி பேசக் கூடாது என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், ** இதுதானே கோர்ட்டுக்குப் போயிருக்கிறது. *(குறுக்கீடு)* கோர்ட்டைப் பற்றி நீங்கள் சொல்லவில்லை. கோர்ட்டிலிருக்கிற விவகாரத்திற்குள் போகிறீர்கள். *(குறுக்கீடு)* கேளுங்கள். கோர்ட்டினுடைய பரிசீலினையிலுள்ள விவகாரத்திற்கு நீங்கள் சென்ற காரணத்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடு)* ** இதுதானே கோர்ட்டிலே இருக்கிற பிரச்சினை. *(குறுக்கீடு)* கோர்ட்டினுடைய பரிசீல்னையில் இருக்கிற பிரச்சினையை இங்கே பேசக் `கூடாது. அதுதான் விதி. அதனால் வேறு விவாதத்திற்குப் போகலாம்.

திரு. சி. ஞர்னசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தைப் பற்றி, ரிட் வழக்கைப் பற்றி நான் இங்கே பேசவில்லை. *(குறுக்கீடுகள்)* ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** நான் அவைக்குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடு) விதியிருக்கிறது, நான் என்ன செய்வது? இந்த விதியை நீங்கள்தானே கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இந்த விதிப் புத்தகத்தை அச்சடித்து நீங்கள் கொடுத்துவிட்டீர்கள். இதன்படி அவையை நடத்த வேண்டுமென்றும் சொல்கிறீர்கள். இதன்படி நான் நடத்துகிறேன். ** இது எல்லாமே அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் 5 -45

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். என்னிடத்தில் அப்படிப்பட்ட ஆதாரத்தை, அதாவது ** கொடுக்கவில்லை. தனிப்பட்ட ஒருவர், கட்சியைச் சேர்ந்தவர், அந்தக் கட்சியினுடைய மாவட்டச் செயலாளரோ, ஒன்றியச் செயலாளரோ ஒருவர் கொடுத்து, வசூல் செய்திருக்கிறார் என்பதற்கான ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு, ** என்று பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) என்னிடத்தில் கொடுத்துவிட்டேன் என்று காண்பிக்கிறீர்கள். என்னிடம் கொடுத்தது பற்றித்தான் பேச வேண்டும். என்னிடம் கொடுக்காததைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்?

திரு.சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே. சுந்தர் என்ற மாவட்டச் செயலாளர் கொடுத்ததாக இருந்தாலும்கூட, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுந்தர் கொடுத்திருக்கிறார் என்று சொல்லிவிட்டு ** என்று சொல்லுகிறீர்கள். அதற்கு எங்கே ஆதாரம் கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) அது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. என்னிடம் சொல்லாததைப் பேசக்கூடாது.

திரு.சி. ஞானசேகரன்: அப்படி என்றால் பேசாமலேயே உட்கார்ந்து விடுகிறேன். பேசாமலேயே விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். அந்த முடிவுக்கு வந்தால் உட்கார்ந்து விடுங்கள். என்னிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டால், அதிலேதான் பேச வேண்டும். என்னிடம் என்ன கொடுத்திருக்கிறீர்களோ அதைப் பற்றித்தானே பேச வேண்டும்? பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தினுடைய பி.டி.ஓ. 100 ரூபாய் கோவில் நிதிக்காகக் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை ஏற்கனவே போட்டிருக்கிறார்கள். இது அதிகாரி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கோவில் நிதி, அது அரசாங்கம் வசூல் செய்தது. அதற்கும், கட்டிட வசூலுக்கும் ஏன் முடிச்சு போடுகிறீர்கள்? கட்டிடம் என்ற சொல்லை ஏன் இடையிலே சேர்க்கிறீர்கள்? என்னிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டு, கொடுக்காததைப் பற்றிப் பேசுகிறீர்கள்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு ஆணையர் வசூல் செய்திருக்கிறார் என்று தெரிந்த உடனேயே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அலுவலகத்திலிருந்து, யாராவது இப்படிக் கட்டாயமாக வசூல் செய்தால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என்று முதலமைச்சர் அவர்களே அறிக்கை விட்டதோடு, அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டத்தினுடைய உயர் மட்டக் குழு உறுப்பினராக இருந்தபோது மாண்புமிகு முதல்வரவர்கள் சத்துணவுப் பணியாளர்களை தேவ தூதர்கள் என்று வர்ணித்து, அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் நியாயமான கோரிக்கைகள் என்று சொல்லி, அப்போது முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களிடம் சொல்லி கண்டிப்பாகச் செய்து தருகிறேன் என்று ஒரு மாநாட்டிலே சொல்லியிருக்கிறார்கள். அவர்களே முதலமைச்சராக ஆகக்கூடிய வாய்ப்பு 1991 ஆம் ஆண்டு கிடைத்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கிறபோது சத்துணவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது 150 கோடி ரூபாய். இப்போது இந்த ஆண்டு, 1994-95க்கு 345.36 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம். அப்படி இருக்கும்போது, ஏற்கனவே நம்முடைய அமைச்சரவர்கள் 21.1.1993 ஆம் தேதி தென்னாற்காடு மாவட்டத்திலே கோழியனூரிலே பேசுகிறபோது சத்துணவுப் பணியாளர்களுடைய ஊதியம் ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே இவ்வளவு பணத்தை ஒதுக்கிய பின்னாலும்கூட ஏன் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கவில்லை? 300, 350 ரூபாய் என்று வைத்துக்கொண்டிருந்தால் அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கும்? 2 புடவைகள்கூட வாங்க முடியாத நிலைமை

இருக்கிறது. கிட்டத்தட்ட 2 இலட்சம் பெண்கள் இதிலே பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் கொடுக்கக்கூடிய அளவுக்கு, தயவு செய்து பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்களுடைய சம்பளம் ஆயிரம் ரூபாயாக இந்த ஆட்சியின் 5 ஆண்டுகளில் உயரும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகுதான், இத்தனை ஆண்டுக்காலம் உயர்த்தப்படாத சத்துணவுப் பணியாளர்களுடைய சம்பளம் 4 முறை உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் அதைப் பற்றி அறிவிப்பு வெளியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அமைச்சரவர்கள் மாநாட்டிலே பேசியதைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன். அவர்களுடைய ஸ்டேட்மெண்ட் வந்திருக்கிறது. ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுமென்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் 10 ஆண்டுக்காலமாக தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக 10 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றும் அந்த சத்துணவுப் பணியாளர்கள் தொகுப்பூதியத்திலே பணி செய்து கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல. அவர்களை உடனடியாக நிரந்தரமாக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5 -50

அடுத்து இந்த மானியத்தைப் பற்றி ஏற்கனவே அருமை சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். 1984 ஆம் ஆண்டு கொடுத்த அந்த 13 பைசா மானியத்தையே நாம் இன்னமும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். விறகுக்கு 5 காசு, காய்கறிக்கு 5 காசு, தாளிப்பு வகைக்கு இரண்டரை காசு என்று கொடுத்து கொண்டிருக்கிறோம். 8 மடங்கு விலை உயர்ந்துவிட்ட இந்த காலகட்டத்தில் இன்னமும் 13 பைசாவே கொடுத்துக்கொண்டிருந்தால் அது உண்மையான சத்துணவாக குழந்தைகளுக்குப் போய்ச் சேரவில்லை என்ற கருத்தைச் சொல்லி, அந்த மானியத்தை குறைந்தபட்சம் 50 பைசாவாக உடனடியாக உயர்த்திக் கொடுத்தால்

அது ஏழைக் குழந்தைகளுக்கு சற்று சுவையோடு உண்ணுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த இடத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சத்துணவுப் பணியாளர்கள். அவர்கள் பல போராட்டங் களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். பாவம் அவர்கள். நிரந்தரம் கேட்டும் - இப்போது கூட ஒரு மறியலை 14ந் தேதி நடத்தினார்கள். இன்றுகூட ஒரு பேரணி புறப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, நாம் அவர்களை நிரந்தரமாக்கி - (குறுக்கீடு), மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பத்தாண்டுகள் முடிந்து ஓய்வு பெறும்போது 20,000 ரூபாயை அவர்களுக்குக் கொடுத்து அவர்களை ஒய்வு பெற அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, கோடை விடுமுறை ஊதியம். உயர்நிலைப் பள்ளி, மேனிலைப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பணியாளர் களுக்கு ஒன்றரை மாதத்திற்கு, 45 நாட்களுக்கு எதுவுமே கொடுக்கப்படுவதில்லை. ஏற்கெனவே 300 ரூபாய், 350 ரூபாய் என்று சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். 150 ரூபாய் சமையலருக்கு, 110 ரூபாய் உதவியாளருக்கு என்று கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பணத்தைக் கூட 45 நாளைக்குக் கொடுக்காதபோது, அவர்கள் எப்படித்தான் உயிர் வாழ்வது என்பதை அரசாங்கம் கருத்தில் கொண்டு, உயர்நிலைப் பள்ளிகளிலும், மேனிலைப் பள்ளிகளிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிற அந்தப் பணியாளர்களுக்கு இந்த கோடை விடுமுறைக்கான சம்பளத்தை நீங்கள் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பல கூட்டங்களிலும் மாநாட்டிலும் பேசியிருக்கிறார்கள். தண்டத்தொகைகளை நான் உடனே தள்ளிவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஒன்றரை மடங்கு வசூல் பண்ணுகிறார்கள். அதாவது குறைவு ஏற்படுமானால், அதற்கு ஒன்றரை மடங்கு என்று வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். எது கரெக்ட் ஆன நிர்ணயமோ, என்ன இழப்பு ஏற்பட்டிருக்கிறதோ அதுவரைக்கும் வசூல் செய்தால் போதும். தண்டனையாகக் கொடுத்து, அதிலும் விசாரணையும் இல்லாமல் தொகுப்பூதியத்தில் வேலை செய்கிற காரணத்தாலேயே அவர்கள் மீது எந்தவித விசாரணையும் வைக்காமல் திடீரென்று வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு,

உத்திரவாதத்தைக் கொடுக்கவேண்டும். விசாரணை முடிந்த பிறகாவது, நீங்கள் அவர்களைத் தற்காலிக வேலை நீக்கத்திற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தது, இலவச சீருடை வழங்குகிறோம். ஏற்கெனவே அளவு சரியாக இல்லாமல் டைட் ஆக இருக்கக்கூடிய அளவில் கையும் காலும் நுழைக்க முடியாமல் இருக்கக்கூடிய சட்டைகள் என்னுடைய தொகுதியிலேயே வழங்கப்பட்டிருக்கிறது. வள்ளலார் பள்ளியிலேயே அது நடந்தது. சரியான அளவை வைத்துத் தைத்துக் கொடுக்கவேண்டும். சங்கங்களில் இருப்பவர்களை அந்தப் பள்ளிக்கே நேரடியாக அனுப்பிவிடுங்கள். 5 நிமிடம் எடுத்துக்கொண்டு நேராக வந்தால் போதும். அளவுகளை எடுத்துக்கொண்டு, அங்கங்கே வகுப்புவாரியாக குழந்தைகளுக்குத் தைத்துக்கொடுத்தாலும் கூட சரியாக இருக்கும். பெரியவர்களுக்கு டைட்டாக இருக்கிறது. சிறிய குழந்தைகளுக்குத் தொள தொள என்று இருக்கிறது. இதையெல்லாம் சற்று மாற்றி, சரியான அளவோடு தைக்க, அந்த சத்துணவுப் பணியாளர்கள் சங்கங்களைச் சேர்ந்த தையல் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கிறது, அவைகளைப் பயன்படுத்திக் கொண்டு அந்த மிஷின்களை அங்கேயே கொண்டுபோய் தைத்துத் கொடுத்தால், பயனுள்ள முறையில் அந்தக் குழந்தைகளுக்கு சரியான அளவோடு அதைப் பயன்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தமுடியும் என்ற ஆலோசனையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து காலணி. காலணியையே இப்போது காணமுடியவில்லை. பல குழந்தைகளுக்கு காலணி கொடுக்கப்படுவதாக சொல்லப்படுகிறதேயொழிய காலணி என்பது இன்று குழந்தைகளுக்குப் போய்ச்சேராமல் இருக்கிறது. கிடைத்தாலும் போடவே முடியாமல் டைட் ஆக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே நீங்கள் கொடுக்கக்கூடிய பணம் முழுமையாக குழந்தைகள் பயன் படுத்தக்கூடிய அளவில் நடைபெறாத காரணத்தாலே காலணிகளுக்குக் கூட அளவெல்லாம் எடுத்துப் பார்த்து, குழந்தைகளுக்குத் தகுந்த காலணிகளாக வழங்கவேண்டும். ஒவ்வொரு பைசாவும் முறையாகச் செலவிடப்படவேண்டும். ஏதோ நாம் சிலவற்றைக் கொடுத்தோம், போய்ச் சேர்ந்துவிட்டது என்று எண்ணாமல், குழந்தைகளுக்கு உண்மையிலேயே பயன்படக்கூடிய வகையில் அதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மகளிர் சங்கங்களிலே சில பேரை, அங்கே இருக்கக் கூடிய மாவட்ட சமூக நல அதிகாரிகள் - எல்லோரையும் நான் சொல்லவில்லை - மனு யார் யார் கொடுக்கிறார்களோ, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய பெண்கள், விதவைப் பெண்கள், அவர்களுடைய மனுக்களை எல்லாம் பெற்று, அவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கான உத்தரவை வழங்க வேண்டும். சில நேரங்களில் இவ்வளவுதான் டார்கெட். அது முடிந்துவிட்டது, அடுத்து ஆண்டு பார்க்கலாம் என்று அவர்கள் தள்ளி வைத்துவிடுகிறார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய அத்தனை பெண்களையும் உறுப்பினர்களாக்கி, அவர்கள் பயன் பெறக்கூடிய வகையில் அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூவலூர் இராமாமிர்தம்மையார் திருமண உதவித் திட்டம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். திருமணத்திற்கு 15 நாளைக்கு முன்பு,3 மாதத்திற்கு முன்பிருந்தே மனுக்களைப் போடுகிறார்கள். குழந்தை பிறந்தபிறகுதான் பல பேர் இந்த உதவியைப் பெறுகிறார்களே ஒழிய திருமணத்திற்குப் பணத்தைக் கொடுத்ததாக வரலாறே இல்லை. கொடுக்கக்கூடிய பணம் திருமண உதவித் திட்டத்திற்கு. 15 நாளைக்கு முன்பே அப்ளிகேஷன் கொடுக்கிறார்கள். அட்வான்சாக தொகையை எற்கனவே ஒதுக்கி வைத்துவிட்டு, திருமணத்தின் போது அந்தப் பணத்தைக் கொடுப்பார்களானால், உண்மையிலேயே அந்தத் திட்டத்தின் நோக்கம் அங்கே நிறைவேறும். அதன் பயனை அவர்கள் அடைகிறார்கள். அவர்கள் குழந்தை பெற்றபிறகு அந்தப் பணத்தைக் கொடுப்பது என்பது அந்தத் திட்டத்தில் சரியாகப் படவில்லை. ஆகவே முன்கூட்டியே அட்வான்சாக கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டம். அதிலே கூட அவர்கள் குழந்தை பெறுவதற்கு முன்னாலே இரண்டு மாதம், குழந்தை பிறந்தபிறகு 2 மாதம் என்று ரூ. 300 வீதம் கொடுக்கிறார்கள் என்பது திட்டம். அந்தக் குழந்தைகள் கூட பிறந்து கிட்டத்தட்ட 10,15 மாதங்களான பிறகுதான் அந்தப் பணமே அவர்களுக்குப் போய்ச் சேருகிறது. கருவுறுகிறபோது அவர்களுக்கு பணம் போய் சேருவதில்லை. ஆகவே, மகப்பேறுக்காக கொடுக்கக்கூடிய பணம் முழுமையாக கருவுற்ற உடனேயே அவர்களுக்குக் கிடைப்பதற்கும், அதேபோல் அவர்களுக்கு குழந்தை பிறந்த 2 மாதங்களுக்குள்ளாகவே அந்த பணம் கிடைப்பதற்கும் இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-55

சத்துணவுப் பணியாளர்கள் இவ்வளவு போராட்டம் செய்து கொண்டே இருக்கிறார்கள். அரசு கொஞ்சம் பரிவோடு அவர்களை கூப்பிட்டு, உங்களுடைய கோரிக்கை என்ன, ஏன் இவ்வளவு பெரிய போராட்டம், எதற்காக நீங்கள் இப்படி மறியலில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். எதற்காக நீங்கள் சைக்கிள் பேரணி என்றெல்லாம் வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்ற அழைத்துப் பேசினால், *(மணியடிக்கப்பெற்றது)*...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 லட்சம் சத்துணவுப் பணியாளர்கள் இருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஒரு சத்துணவு பணியாளர் சங்கம் வைத்து இருக்கிறார். அதற்கு அவர் தலைவராக இருக்கிறார்: அதிலே 250 பேர் இருக்கின்றார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தலைமையிலே இருந்துகொண்டு இந்த போராட்டங்களை நடத்தினால் அதற்கு இந்த அரசு கனிவோடு பரிசீலிக்காது. எல்லா சத்துணவுப் பணியாளர்களையும் ஒரே சங்கமாக வைத்து அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலேதான் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. சி. ஞானசேகரன்: இவ்வளவு போராட்டம் செய்கிறபோது, ஏற்கனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் வேலூருக்கு வருகை தந்தார்கள். அங்கே நம்முடைய வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்ட மக்கள் போராட்டம் செய்கிறார்கள் ; அவர்களுக்கு பக்கத்திலே போலீஸை வைத்து இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் அங்கே சர்க்யூட் ஹவுஸிலே இருக்கிறார்கள். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கக் கூடியவர்களை அமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தோடு அழைத்துப் பேசி, உங்களுடைய கோரிக்கை என்ன என்று கேட்டுக் இருக்கலாம். ஆனால், போராட்டம் என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் கிட்டவே வரமாட்டேன் என்கிறார்கள்...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் நிரம்ப சத்துணவுக் கூடங்கள் இருக்கின்றன; 2500 சத்துணவு கூடங்கள் இருக்கின்றன. அதிலே 50 பேர் போராட்டம் நடத்துகிறோம்; அதுவும் சத்துணவுப் பணியாளர் சங்கத்தினுடைய தலைவராக இருக்கிற ஞானசேகரன் தலைமையில் வேண்டுமென்றே எதையாவது செய்ய வேண்டும் என்பதற்காக கலெக்டர் ஆபீஸ் முன்னால்

போராட்டம் நடத்தினால், அதை அரசாங்கம் பார்க்க முடியாது. சத்துணவுப் பணியாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளை இந்த அரசுதான் கவனமாக பரிசீலிக்கிறது; புரட்சித்தலைவி அவர்கள்தான் அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வந்தபோது போராட்டத்தில் ஈடுபட்டது சத்துணவு ஊழியர்கள் சங்கம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். பணியாளர் பேரவை என்பது வேறு; சத்துணவு ஊழியர்கள் சங்கம் என்பது வேறு

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: நான் வரும்போது, எந்த சத்துணவுப் பணியாளர் சங்கமும் என்னிடத்தில் போராடி எதையும் கொடுக்கவில்லை. அவர்கள் உங்கள் தலைமையிலே போராடி மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னாலே ஒரு *50* பேர் நின்று கொண்டு போராட்டம் நடத்திக் கொண்டு இருந்தார்கள். அந்த மாவட்டத்தில் நிரம்ப பணியாளர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் யாரும் உங்களை நம்பி வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், இப்பொழுது என்ன பிரச்சினை ஆகிவிட்டது என்றால், உங்கள் சங்கத்தில் *250* பேர்தான் மொத்தம் என்கிறார்கள். ஆனால் நீங்கள் பல்லாயிரக் கணக்கில் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: அந்த மாவட்டத்தில் *3* லட்சம் பேர் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு போராட்டம் என்று சொன்னால், அந்த போராட்டத்திற்கு அமைச்சர்கள் போகவேண்டும் என்று நீங்கள் கேட்பது அவ்வளவு சரியல்ல. (குறுக்கீடு) இருக்கட்டும். போராட்டம் நடந்தாலும்கூட, அதற்கு பின்னாலே பிரதிநிதிகளை அழைத்துத்தான் பேசுவார்களேயன்றி, போராட்டம் நடக்கும் இடத்திற்கு அமைச்சர்கள் எப்போதும் போவது இல்லை. அப்படி என்றால் மத்தியில் இருக்கிற அமைச்சர்கள் போராட்டம் நடக்கிற இடத்திற்கு எல்லாம் போய் கொண்டே இருக்கிறார்கள் என்று அர்த்தமா? (குறுக்கீடுகள்) அப்படி

அல்ல. (குறுக்கீடுகள்) நான் முடித்து விடுகிறேன்; நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அப்புறம் சொல்லுங்கள். ஏதாவது ஒரு நியாயம் இருக்க வேண்டும். நீங்கள் சொல்கிறபோது, நியாயமாகச் சொல்லவேண்டும். அங்கே, ஒரு போராட்டமோ, மறியலோ நடந்து கொண்டுருக்கிறபோது, நிச்சயமாக அந்த இடத்திற்கு அமைச்சர்கள் போய்ப் பேச வேண்டும் என்பது அல்ல. திடீரென்று ஏற்பட்டுவிட்ட ஒரு பிரச்சினைக்காக அவர்கள் மறியல் செய்தால்கூட, அமைச்சர்கள் போவதிலே ஒரு அர்த்தம் இருக்கிறது. ஆனால், அவர்களுடைய பிரச்சினை என்பது—சம்பளம் உயர்த்த வேண்டும்; நிரந்தரமாக்க வேண்டும், இப்படி இருக்கிற பிரச்சினைகள். இந்தப் பிரச்சினைகளைப் பேசுவதற்கு என்று இடம் இருக்கிறது. போராட்டம் நடத்துகிற இடத்திற்க்கு போய்க் கொண்டிருந்தால், தினந்தோறும் அந்த வேலையைத்தான் செய்து கொண்டிருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், பேசி முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். புரட்சித் தலைவருடைய வாரிசாக இருந்து ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். கருப்புக் கொடி காட்டுகிற இடத்திலே புரட்சித் தலைவர் சென்று என்ன என்று கேட்கக்கூடிய பண்பாடு உள்ளவர் வாழ்ந்த ஒரு நாட்டிலே நீங்கள் இப்போது இருக்கிறீர்கள். நீங்கள் தயவு செய்து...

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: சத்துணவுப் பணியாளர்கள் போராட்டம் நடத்தினால் அவர்களை சந்தித்துப் பேசுவதற்கு எப்போதும் நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், ஞானசேகரன் தலைமையிலே 50 பேர் நின்றுகொண்டு, அரசாங்கத்தை வேண்டுமென்றே திட்டுவதற்கு, நாங்கள் என்ன செய்ய முடியும்? உண்மையான சத்துணவு பணியாளர்கள் போராட்டம் நடத்தினால், அந்த உண்மையான பபணியாளர்களைச் சந்திப்பதற்கு ஒரு போதும் அரசோ, புரட்சித் தலைவியோ தயங்கியதே கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், உரையை முடிக்கலாம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு பஸ் பாஸ் என்ற நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. உடல்

ஊனமுற்றவர்களுக்கு டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபீசர் சரியான சர்ட்டிஃபிகேட் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். போக்குவரத்து கழகத்திலும் பாஸ் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு ஜி.ஓ. போடுகிறபோது, அதிலே அவர்கள் எங்கேயாவது படிக்கிறவரர்களாக இருந்தால், படிக்கக்கூடிய இடத்திற்கு அல்லது எங்கேயாவது பணியாற்றக்கூடிய இடமாக இருந்தால் பணியாற்றக் கூடிய இடத்திற்கு என்று மட்டுமே இருக்கிறதேயொழிய, உடல் ஊனமுற்றவர்கள் யாராக இருந்தாலும், வயது வித்தியாசம் இல்லாமல் – காரணம் எற்கெனவே அவர்கள் அங்ககீனமானவர்களாக இருந்து, சமுதாயத்திலே தாழ்வுற்று இருக்கக்கூடிய அவர்களுக்கு ஓரளவு அரசாங்கம் சலுகை என்று அறிவித்தபோது, அதை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு என்று வைத்தால்-அவர்கள் உடல் ஊனமுற்றவர்கள் அதிகமாக எங்கேயும் போகமாட்டார்கள். அவர்கள் பயணத்தை மேற்கொள்வது மிக அரிது. அப்படி இருக்கிறபோது வயது வித்தியாசம் எல்லாம் தளர்த்திவிட்டு, குறிப்பிட்ட பள்ளிக்கோ, பணியிடத்திற்கோதான் செல்ல வேண்டுமென்ற வரையறையை நீக்கிவிட்டு, முழுமையாக உடல் ஊனமுற்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் சர்டிபிகேட்டை பெற்று, இலவசமாக பஸ்ஸில் செல்லக்கூடிய ஒரு ஆணையை பிறப்பித்து தமிழக அரசு அவர்களை ஆதரிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் *6-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்து விடலாம். மணி *6.00* ஆகிவிட்டது. இன்னொரு மானியக் கோரிக்கை வேறு இருக்கிறது. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் பதிலுரை.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
> உரிமை உடைத்திவ் வுலகு"

என்பதை இந்த மன்பதைக்குணர்த்தி மகிழ்தல் இரண்டு மாதரசிகளுக்கே சாத்தியமாயிற்று. ஓரரசி மேற்கு வங்கத் தலைநகரில் எளியவரின் துயர் துடைக்கும் வெள்ளை உடைச் சோதரி, அன்னை தெரசா. அந்தத் தாயின் இன்னொருருவாய், ஆதாரவற்றோரை அரவணைக்கின்ற பேரரசி எங்கள் புரட்சித்தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி)

பருவம் தவறிப் பெய்யும் மழை, களைகளுக்கு மட்டுமே உற்சவம் நடத்தும். வறட்சிக்கு விடை கொடுக்கும் எங்கள் புரட்சித் தலைவியே,

நீங்கள் பருவ மழை. வயல்கள் சிரிக்க வரங் கொடுக்கிறீர்கள். நதிகள் நடக்க கரங்கொடுக்கிறீர்கள். இருட்டின் எதிர்பதமாய் எந்நாளும் திகழும் நீங்கள் மின்னல். அதனால்தான், வெளிச்சத்தை வெறுக்கும் இருட்டசுரர்களின் பழிச் சொல்லுக்கு அடிக்கடி ஆளாகிறீர்கள்.(மேசையைத் தட்டும் ஒலி)

இன்னல்களை அழித்து இடர்களைத் துடைக்கும் நீங்கள் நடமாடும் கொற்றவை. அதனால்தான், எந்த வடிவெடுத்தாலும் உங்களுக்கு வழிபாடு நடக்கிறது. சேற்றிலே இருக்கும் போது நீங்கள் நாற்று, அறுவடை நடக்குமென்று அறிந்திருந்தாலும், பசி தீர்க்க இயலும் பரவசம் உங்களுக்கு. ஆற்றிலே இருக்கும்போது நீங்கள் ஊற்று. சித்திரை வெயிலிலும் குடிநீர் வழங்கும் ஆற்றாலும் இயலாத ஆற்றல் உங்களுக்கு. மரங்களைத் தழுவும் போது நீங்கள் காற்று. உழைக்கும் மக்களின் வியர்வைத் துளிகளை ஓசையில்லாமல் ஒற்றியெடுக்கிறீர்கள்.

'ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி'

என்ற தெய்வப் புலவன் திருவள்ளுவன் வாக்குக்குறிட உதாரணமாய்த் திகழும் எங்கள் உன்னதத் தலைவியே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, நீங்கள் இருக்கும் திசை நோக்கி உங்கள் பாத மலர்களைப் பணிந்து வணங்கி, இந்த மானியக் கோரிக்கைக்கான பதிலுரையை அவை முன் வைக்கிறேன்.

சோதனைக்குள்ளாகும் சோதரியர் நிலைக்காக வேதனைப்படக்கூட அவகாசம் இல்லாமல், அரசுக் கட்டிலையே தொட்டிலாக்கி, அசந்து தூங்கினர் சில ஆட்சியாளர்கள். தர்மம் அவர்களைத் தண்டிக்கத் தவறவில்லை. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றானது. மக்களுக்கு உழைப்பதற்காக இல்லாமல், தாங்கள் பிழைப்பதற்காக அரசியல் நடத்திய அந்த எழுத்துப் பிழைகளைத் திருத்த வந்த அரசியல் சூறாவளி, எங்கள் பொன்னிகர் மேனி புரட்சித்தலைவி அவர்கள்.(மேசையைத் தட்டும் ஒலி)

இந்து மதம் குழந்தைகளை தெய்வமாக பாவியுங்கள் என்கிறது. கிருத்துவ மதம் குழந்தைகளை தேவதைகளாகப் பாவியுங்கள் என்கிறது. இஸ்லாம் மதம் அருளாளன் அல்லாவின் மறுவடிவங்கள் தான் குழந்தைகளென்று பாராட்டுகிறது. காலத்தால் அழியாத பாடல்களைப் புனைந்த கவியரசு கண்ணதாசன்,

'முத்தான முத்தல்லவோ, முதிர்ந்து வந்த முத்தல்லவோ,
கட்டான மலரல்லவோ, கடவுள் தந்த பொருளல்லவோ,'

என்று குழந்தைகளை கடவுளின் பொருளாகப் பாடினார். அத்தனைப் போற்றுதலுக்குள்ளான குழந்தைகளைக் கொல்வதா? அதனுடைய அதிரடி நடவடிக்கைதான், பெண் சிசுக் கொலை என்ற மனித முரண்பாட்டால், மரணத்தின் வாயிலில் மண்டியிட்டு நின்ற மழலையரைக் காத்து, பெண்குலத்தை மீட்கும் மகத்தான திட்டத்தால் மண்ணுலக வரலாற்றில் எங்கள் பெண்ணரசியின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு பகல் பாராமல், இமையிரண்டும் மூடாமல், கருவில் இருந்துவரும் உருவைக் காப்பதற்கு, அரசுத் தொட்டிலென்ற அரும்பெரும் திட்டத்தை கருவிலே திருவுடைய எங்கள் அருளரசி தான் அறிமுகப்படுத்தினார். அனிச்சம் போன்றிருக்கின்ற அந்த மழலைப் பூக்களை அரவணைத்த இந்த தாயின் அரசு, அவர்களின் நலனுக்காக இன்னொரு திட்டத்தை இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்துகிறது. புரட்சித்தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்தில் இரண்டாவது குழந்தைக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

பிற்பகல் *6-05*

மாண்புமிகு முதல்வரின் அன்புக் கட்டளையின் பேரில் இந்தத் திட்டம் இன்று முதல் அரசுத் தொட்டில் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இனி அந்த பச்சிளம்கிளிகளாம் தொட்டில் குழந்தைகள் ஒவ்வொருவர் பெயரிலும் ஐயாயிரம் ரூபாய் டெபாசிட் செய்யப்படும். புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் கிடைக்கும் அனைத்துப் பயன்களும் இனி தொட்டில் குழந்தைகளுக்கும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கண்ணுறங்கச் செல்லும்முன் நாம் கடக்க வேண்டிய, தொலைவுகளும், ஆற்ற வேண்டியக் கடமைகளும் நிறைய உள்ளன. தமிழகக் குழந்தைகளுக்கு நான் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி இதுதான். 'இன்று எங்களுக்கு முன் நாங்களே வைத்திருக்கும் இந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முன்னால் நாங்கள் இமை மூடமாட்டோம். இந்த இலக்குகளை அடைவதற்கு தமிழக மக்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்' என்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் *11.11.1993* அன்று சென்னை கலைவாணர் அரங்கில்

நடைபெற்ற 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டத் துவக்க விழாவில் வீர உரை ஆற்றினார்கள். அவர்கள் அப்பொழுது எடுத்துக் கொண்ட மாபெரும் சபதத்தில் சமூக நலத்துறை தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய துறைகளும் முழு முயற்சியோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம் இந்தியாவில் மட்டுமல்லாது உலகத்திலேயே ஈடுஇணையில்லாத திட்டமாகும்.

எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் இத்திட்டத்தில் சிறந்த முறையில் பணியாற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கவேண்டும் என்று உத்தரவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இத்துறை கடந்த 22.4.1994 அன்று பயிற்சி முகாம் நடத்தியது. இந்தப் பணியில் தன்னை சீரிய முறையில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற சமூக நலத்துறை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின் பேரில் பயிற்சி அளித்துள்ள வரலாறு இந்தியாவிலேயே இந்நாள் வரை வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.(மேசையைத் தட்டும் ஒலி). இத்திட்டம் முழுமையாக வெற்றி பெற, ஜூன் மாதம் முதல் வாரத்தில் சென்னையில் இருந்து படக்காட்சி விளம்பர வாகனங்கள் புறப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று கிராமங்கள்தோறும் 15 அம்சத் திட்டத்தை பிரச்சாரம் செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதரவற்ற குழந்தைகளை அரவணைத்து அவர்களது பசித் தீ அணைத்தல், நெறி பிறழாத ஆட்சியாளர்களின் முழு முதல் கடமை. ஆனால், விதியின் கொடுங்கரத்தால் கசக்கப்படுகின்ற மழலைப் பூக்களின் வாட்டத்தைக் கூட்டும்வகையில் அவர்களுக்காக ஒதுக்கி வந்த உணவுச் செலவை 1992 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு கைவிட்டுவிட்டது. அக்குழந்தைகள் மகிழ்சியோடு உட்கொள்ளும் வட்டில் சோற்றை மத்திய அரசு பறித்து அவர்களுடைய வயிற்றில் அடித்தது. இதயத்தில் இரக்கமில்லாமல் மறுத்தது. மத்திய அரசின் இந்த அறிவிப்பால் அந்தக் குழந்தைகளின் காதில் துடிதுடிக்க ஈயத்தை காய்ச்சி ஊற்றியது இந்த மத்திய அரசு. பசித்தழுகின்ற அந்தக் குழந்தைகளின் விழிநீர் துடைக்க உத்தரவிட்டுள்ளார் எங்களுடைய உன்னதத்தலைவி, புரட்சி தலைவி அவர்கள். புரட்சி தலைவியினுடைய ஆட்சியில் நிதிக்குத்தான் நெருக்கடியே ஒழிய நீதிக்கு என்றும் நெருக்கடி இருந்ததில்லை.

"மண்ணுக்கு மரம் பாரமா, மரத்துக்கு கிளை பாரமா, கொடிக்கு காய் பாரமா, பெற்றெடுத்த குழந்தை தாய்க்கு பாரமா'' என்றார்கள், ஆனால் பெற்ற குழந்தை தாய்க்கு பாரமாக மாறினாலும் லட்சோபலட்சக் கணக்கான குழந்தைகளை பெறாமல் பெற்றெடுத்த காருண்யமிக்க எங்கள் அன்புத் தாய் புரட்சி தலைவிக்கு அக்குழந்தைகள்தான் மனதில் மகிழ்ச்சி உண்டாக்கும் ரோஜா மலர்கள். அதனாலேதான் வீண் வம்பு பேசுகிற மத்திய அரசு கைவிட்ட *14,450* ஆதரவற்ற குழந்தைகள் உணவுச் செலவை, வான்மழை போல் தேடி வந்து, இரக்கத்தால் இதயத்தை ஈரமாக்கும் எங்கள் புரட்சி தலைவியினுடைய அரசு இன்று முதல் ஏற்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசு நிதி கொடுக்கவில்லை என்று பேசுவதற்கு உரிமை இருக்கிறது. பேசவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் வயிற்றில் அடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்தியநாட்டிலே வாழ்கின்ற அனைவரும் இந்தியர்கள்தான். யார் வயிற்றிலும் மத்திய அரசு அடிக்காது. ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஈயம் என்பது விலை போகின்ற பொருள். அதை வீணாக்குவதற்கு மத்திய அரசு விரும்பாது. இதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். மத்திய அரசு மீது குறை சொல்லட்டும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டரிலே வராது. *(குறுக்கீடு)* இந்தக் குழந்தைகள் வயிற்றில் அடிக்காதீர்கள் என்று திரு. ஞானசேகரன் இந்த அரசாங்கத்தைப் பற்றிச் சொல்கிறபோது, மத்திய அரசாங்கத்தை அவர்கள் திரும்பச் சொல்கிறார்கள் *(குறுக்கீடு)*

பிற்பகல் *6-10*

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கைவிட்டுவிட்டதைதான் சொல்கிறேன். மத்திய அரசு அந்த *14,450* குழந்தைகளுக்கு சோற்றைப் போடுவதை நிறுத்தி விட்டது. அதை நம்முடைய அரசு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி எடுத்துக்கொண்டு இன்றைக்கு வழங்குகிறார்கள் என்ற தகவலைச் சொன்னேன்.

சர்க்கரை நோயுள்ள குழந்தைகளுக்கு மருத்துவ உதவி.

குழந்தையின் உறக்கத்துக்காக விழித்திருக்கும் தாய்போன்று. தமிழ்மண் காக்க தன் தூக்கம் துறந்தவர் எங்கள் கருணைத் தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் 'தேம்பியழும் குழந்தை நொண்டி, நீ திடங்கொண்டு போராடு பாப்பா' என்று மழலைக்குப் போதிக்கின்ற அந்த மக்கள் தலைவியின் ஆட்சி, சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான புரட்சித் திட்டம் ஒன்றை அளிக்கிறது. பூக்களைப் போன்று புன்னகைக்க வேண்டிய வயதில் அந்த அரும்புகள் தீய்ந்துவிட நேர்வதையும் நாளுக்கு நாள் உடல் தேய்ந்துவிட நேர்வதையும் காணப்பொறாத எங்கள் தாயின் அரசு, சர்க்கரை நோயின் பிடியிலிருந்து மழலைகளை மீட்கும் அக்கறையுடன் இன்று முதல் இலவச மருந்துகளை வழங்க வேண்டுமென்ற உத்தரவை வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ' தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று ஆவேசத்துடன் அறைகூவல் விடுத்தான் மீசைக் கவிஞன் சுப்பிரமணிய பாரதி. வறியவர்க்குதவும் ஊக்கம் குறையாது ஆக்க சக்தியாக ஒளி விடுவதனால் கடையேழு வள்ளல்களையும் ஒருபடி மிஞ்சி நின்று தாய்த் தமிழகத்தின் பசி நோய் தீர்க்க போர்க்குணத்தோடு போராடும் புரட்சித் தலைவி அவர்கள் ஒருவேளை உணவுக்கும் வழியில்லாமல் வாடிக்கிடந்த குழந்தைகளின் வாட்டம் போக்கி ஊட்டச் சத்துக் கொடுக்க வழி வகுத்துக் கொடுத்தார். புரட்சித் தலைவரின் சத்துணவுத் திட்டம் என்ற அந்த புரட்சித் திட்டம் ஏழைக்குழந்தைகளின் பசித் தீ அணைத்து சாதனை படைத்தது.

'இம்மியரிசித் துணையானும் வைகலும் நும்மில் இயைவ கொடுத்துண்மின்' என்ற நாலடிப் பாட்டுக்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் கற்பித்தார் அந்த வரலாற்று நாயகி. 'தேவையா இந்தத் திட்டம்' என்று இரக்கமேயில்லாமல் கேள்வி எழுப்பின சில அழிவுச் சக்திகள். இன்று பசித்தழும் குழந்தைகளின் வயிற்றுக்கு உணவிடும் அந்த இணையற்ற பணியில் ஈரம் கசியும் இதயத்தோடு தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள சத்துணவுப் பணியாளரை தவறான வழியில் நடத்திச் செல்ல அதே அழிவு சக்திகள் முயற்சிக்கின்றன. சத்துணவு கொடுக்கும் உத்தமப்பணியை பகுதி நேரப் பணியை பகுதி நேரப் பணியாக ஏற்றுக்கொண்டுள்ளோரை தட்டிக்கொடுக்கவும், தழுவிக் கொள்ளவும் தமிழகத்தின் தலைவிதியைத் திருத்தி எழுதிய எங்கள் புரட்சித் தலைவி ஒரு நாளும் தவறியதேயில்லை. பகுதி நேரப் பணி என்பதால் சத்துணவுப் பணியாளர்களை அரசு ஊழியர்களாய்க் கருதி நிரந்தரம் செய்தல் சாத்தியமில்லை. என்றாலும், அவர்கள் நலனில் அக்கறை

காட்டும்பொருட்டு, அரசுக்கிருக்கும் கடுமையான நிதி நெருக்கடிக் கிடையிலும் ஓரளவாவது அவர்களது ஊதியம் உயர்த்தப்படுகிறது. இப்போதுள்ள நிலையில், ஊதிய உயர்வு கோரி போராடும்படி தங்களைத் தூண்டும் தீய சக்திகளை சத்துணவுப் பணியாளர்கள் அடையாளம் காணவேண்டும். சத்துணவுத் திட்டம் பச்சிளம் பாலகரின் பசித் தீக்கு எதிரான அரசு நடத்துகின்ற ஒப்புயர்வற்ற போராட்டமாகும். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்போர் சொந்தப் போராட்டத்தில் தொலைந்துவிடக் கூடாது. ஏழை எளியவரின் ஊழியனாயிருந்து ஊராளும் அளவுக்கு தன்னை உயர்த்திக் கொண்ட புரட்சித் தலைவரின் திருப்பெயரை மறவாமல், ஆட்சியிலிருக்கும் ஒவ்வொரு நொடியும் அந்தத் திருமகனின் அடியொற்றி நிற்கிறார் எங்கள் புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) அவரின் பின் ஒருங்கிணைந்து வள்ளலின் திட்டமாம் சத்துணவுத் திட்டத்தை அடி பிறழாமல் நிறைவேற்ற பணியாளர் உறுதியேற்க வேண்டும். பொன் மனச் செம்மல் எம்.ஜி.ஆரின் கொள்கைகளையும் லட்சியங்களையும் அப்படியே காப்பாற்ற எங்கள் அரசியின் அரசு முடிவெடுத்துள்ளது.

1982-ல் ரூ.107 கோடி செலவில் துவக்கப்பட்ட சத்துணவுத் திட்டத்துக்கான ஒதுக்கீட்டை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் அரசு ஒவ்வோராண்டும் உயர்த்திக்கொண்டே வந்தது. 1994-95 ஆம் ஆண்டுக்கு சத்துணவுத் திட்டத்துக்காக ரூ.262.65 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை இந்த அவையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டதைப் போல் தமிழகத்தைப் பார்த்து சத்துணவுத் திட்டத்தைத் துவக்கிய அண்டை மாநில அரசு ஒன்று பாதியிலேயே அதைக் கைவிட்டு விட்டதையும் இந்தச் சமயத்தில் சத்துணவுப் பணியாளர்களுக்கு நினைவுப்படுத்த கடமைப்பட்டுள்ளேன். பொறுத்துக் கொள்ள இயலாத நிதி நெருக்கடியிலும் நாளொன்றுக்கு சுமார் 72 லட்சம் குழந்தைகளுக்கு உணவளித்து வரும் எங்கள் தாயின் ஆட்சி, அந்தக் குழந்தைகளின் உணவுச் செலவை இன்றிலிருந்து ஒரு குழந்தைக்கு 91 பைசாவிலிருந்து ரூ.1.08 ஆக உயர்த்தியிருப்பதை மகிழ்ச்சியோடு அவைக்கு அறிவிக்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவுத் திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ.150/- க்குக் கீழ் தொகுப்பூதியம் பெறக்கூடியவர்களுக்கு 1.1.94 முதல் ரூ.10/- ம் மாதம் ரூ.150/- க்கு மேல் பெறுபவர்களுக்கு ரூ. 15/- ம் கூட்டி வழங்கிட புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இதன் மூலமாக 3 லட்சம் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

புரட்சித் தலைவியின் ஆட்சியில் இதையும் சேர்த்து ஐந்தாவது முறை சத்துணவுப் பணியாளர்கள் ஊதிய உயர்வு பெற்றுள்ளார்கள் என்பதை பேசுகின்றவர்கள் கவனத்திலே கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-15

சமூக நலத்துறையின் கீழ் சிறப்பாக இயங்கிவரும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம், புரட்சித் தலைவியின் ஆட்சித் திறனுக்கு இன்னொரு அத்தாட்சி. அந்தத் திட்டத்தை மதிப்பிடும் பொருட்டு தமிழகம் வந்த உலக வங்கிக் குழு முதல்தரம், பிராஜக்ட் ரேட்டிங் மற்றும் ரேங்க் என்று சான்றிதழ் தந்துள்ளது. அதாவது அவர்களுடைய மதிப்பீட்டில் நமது சாதனை கிடைத்தற்கரிய முதற் தரத்தையும், முதலிடத்தையும் பெறுகிறது. குழந்தைகள் ஆரோக்கியமாக வளர இந்தத் திட்டம் உதவியிருப்பதாகவும் மற்ற மாநிலங்களுக்கும் மற்ற நாடுகளுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் தமிழகம் முன்னோடியாய் இருக்குமென்றும் அந்தக் குழு பாராட்டியுள்ளது. இந்தத் திட்டத்தின் இணையற்ற வெற்றிக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் அடிக்கடி எங்களை அழைத்து வழங்கிய அறிவுரைகளே முழுமுதற் காரணம் என்கின்ற உண்மையை இந்த அவையில் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

உலக வங்கி உதவியுடன் *16* மாவட்டங்களில் நிறைவேற்றப்படும் இந்த திட்டம் இந்த ஆண்டில் மேலும் *3* மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம், தஞ்சை மாவட்டம் மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களுக்கு இந்த ஆண்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் விரிவு படுத்தப்படுவதால் அந்தத் திட்ட மையங்களின் மொத்த எண்ணிக்கை *17,276* ஆக உயரும். அதனால் பயனடையும் குழந்தைகள் எண்ணிக்கை சுமார் *15* லட்சத்து *70* ஆயிரமாகவும், தாய்மார்கள் எண்ணிக்கை *36* லட்சத்து *5* ஆயிரமாகவும் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*(மேசையைத் தட்டும் ஒலி)*. *1991* ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.*15* கோடி செலவிடப்பட்டது. *1993-94*—ல் அந்தத் தொகை புரட்சித் தலைவியின் உத்தரவின் பேரில் ரூ. *38* கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் அதனால் அதிகக் குழந்தைகளும் தாய்மார்களும் பயனடைவார்கள் என்பதையும்

மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

புரட்சித் தலைவியால் வழிநடத்தப்படும் இந்தத் திட்டத்தின் செயல் பாட்டில் திருப்தியடைந்த உலக வங்கி 6 ஆண்டு காலத்திற்கு ரூ.321 கோடி நிதி வழங்க ஒப்புக் கொண்டிருப்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). காட்சிப்பொருளாய் மட்டுமே கருதப்பட்ட பெண்களின் மாட்சியை விளக்க வந்த மாசற்ற மாணிக்கம், தங்கத் தமிழ் மகளிர் தன்மானம் பேணுகின்ற எங்கள் குலவிளக்கு, எழில் மிக்க ஒளி விளக்கு, ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று உரக்கப்பேசி சிலர் உறக்கம் தெளிவித்த எட்டயபுரத்துக் கவிஞனின் கட்டளைக்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் கற்பித்து மண்ணுக்கு மகிமையினை உருவாக்கித் தருகின்ற பெண்ணுக்குச் சம உரிமை தர விழையும் பேரரசி, எங்கள் மாதரசி புரட்சி தலைவியின் பொற்கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து இனங்களிலும் மகளிருக்காக ஒதுக்கித் தரப்படும். அரசுப் பணிகளில் முப்பது விழுக்காடு மகளிருக்கு சரியாக அளிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும் என்கிற உத்திரவை இன்று முதல் புரட்சித் தலைவி அமலுக்குக் கொண்டு வருகிறார்கள். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் வாழ்வதற்கு வழி வகுத்தல் அவசியம் என்பதால் ஆணென்றும் பெண்ணென்றும் பாகுபடுத்தாமல் விதியின் பெயராலும் சதியின் பெயராலும் அடிக்கடி பெண்ணினம் அபகரிக்கப்படுவதால் தற்காப்பு குறித்துக் கற்பிப்பதற்காக இனி அரசே முகாம்களை முனைந்து நடத்தும் என்கிற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஓர் ஆணாதிக்க சமுதாயத்தில் பெண் சற்று போராட வேண்டியுள்ளது. அமைதியாய்த் தவழும் காற்று தன்னை புயலென்று அடையாளம் காட்ட வேண்டியுள்ளது. ஒற்றுமை மூலம் தங்களது வலிமையை உலகுக்குக்குணர்த்த முயலும் சோதரியர் மகளிர் மன்றங்களை அமைத்துக் கொண்டனர். ஆபத்து வாயில்களையும் அடைத்துக் கொண்டனர். பெண்ணின் பெருமையை மண்ணுக் குணர்த்திய பூக்களின் புதல்வியாம் எங்கள் மாபெரும் தலைவி, புரட்சித் தலைவி பெண்ணின் உரிமையைப் பெண்ணுக்குணர்த்தி கண்ணை திறக்கும் பணியில் சிறக்கும் விதத்தில் மகளிர் மன்றங்களைப் பாராட்டுகின்ற வகையில் சிறந்த மகளிர் மன்றத்துக்கான பரிசுத் தொகை இன்று முதல் ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-20

காலை நீராடி நறுமலர் பெய்து தெய்வம் தொழுது தன் இல்லந் திருத்துதலே முன்னொரு காலத்தில் பெண்களின் சரித்திரம், இன்று அவர்களது வாழ்க்கை முறை திருத்தியெழுதப்பட்டுள்ளது. செய்யும் தொழிலே அவர்களுக்கு தெய்வமாகிவிட்டது. வீட்டுச்சிறையிலிருந்து விடுபட்டு தனது கனவுகளைத் தானே நிறைவேற்ற வீதிக்கு வந்து போராடும் பெண்கள் பெருகிக் கொண்டுள்ளனர். தாம் வாழும் சமூகத்தைத் திருத்தியமைக்கவும் தம் நிலையைத் தாமே விருத்தி செய்யவும் தமக்கொரு தளத்தை தாமே அமைக்கவும் உழைக்கும் மகளிராய் அவர்கள் தம்மை உயர்த்திக் கொண்டுள்ளனர். இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வெளிச்சவிழிகளோடு வெளிவரப்பார்க்கும் அந்த மகளிரை அரவணைக்க எங்கள் தாயரசியின் அரசு முடிவெடுத்திருக்கிறது. போன ஆண்டு இரண்டு மகளிர் விடுதிகள் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் துவங்கப்பட்டது. சென்ற ஆண்டைப் போன்றே இந்த ஆண்டும் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளை அமைப்பதில் புத்திலக்கணம் படைக்கும் எங்கள் தாயின் அரசில் தர்மபுரி மாவட்டத்தில் எங்களது புனிதத் தலம் ஆகிவிட்ட பர்கூரிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் பெண்களுக்கு விடுதி புதிதாகத் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி). இதற்கு ஒரு படி மேலேபோய் ஆதிதிராவிட நலத்துறையின் ஒத்துழைப்புடன் மகளிர் மேம்பாட்டுக் கழகம், முதல் கட்டமாக இந்தியாவின் வரலாற்றிலேயே முதல் முறையாய் 50 விடுதிகளை தமிழகத்தில் உடனடியாக துவக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கணவனை இழந்த விதவைச் சோதரியர், கைபிடித்தவனால் கைவிடப்பட்ட மங்கையர் மற்றும் ஆதரவற்ற பெண்களின் நலன் காக்க மாதர் குல விளக்காம் எங்கள் மாதரசியாம் எங்கள் மங்கையர்க்கரசி புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் எண்ணற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்தச். சோதரியரின் அணைந்த விழிகளில் மீண்டும் விளக்கேற்றும் இன்னொரு திட்டம் இந்த ஆண்டு அறிவிக்கப்படுகிறது. அந்தச் சோதரியருக்கும் உதவும் விதத்தில் சிடா (எஸ்ஐடிஏ) ஆதரவுடன் செங்கை எம்.ஜி.ஆர்., புதுக்கோட்டை மற்றும் நீலகரி மாவட்டங்களிலும் அவர்களுடைய குழந்தைகளுக்கு திருமணம் செய்வதற்கு இலவசமாக வாடகை இல்லாமல் 4 திருமண மண்டபங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதரவற்ற

அந்தச் சோதரியர் தங்களது வாரிசுகளின் திருமணங்களை அந்த மண்டபங்களில் இலவசமாக நடத்திக் கொள்ளலாம். வேர்கள் மணலால் இறுக்கப்பட்டாலும் பூமுகம் காட்டி புன்னகைக்கும் கொடி போன்று சூழ்ச்சி வலைகள் சூழ்ந்திருந்தாலும் இன்முகம் காட்டும் எங்கள் இமாலயத் தலைவியின் பெயரால் அந்தத் திருமண மண்டபங்கள் டாக்டர் ஜெ. ஜெயலலிதா திருமண மண்டபம் என்றழைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). மழையில் நனைந்த கோல மயிலுக்கு போர்வையை அளித்த மன்னன் பேகனை காலமழை எதுவும் அழித்துவிடவில்லை. காற்றில் அலைந்த முல்லைக் கொடிக்கு தேரைக் கொடுத்து தேற்றிய பாரி, கால வெள்ளத்தில் கரைந்து விடவில்லை. எங்கள் தமிழகத்தின் மங்காத சரித்திரத்தில் அவர்கள் இருவரும் இருபெரும் அத்தியாயம். அந்த வேந்தரை அப்படியே நினைவூட்டி துயரில் உழல்வோரைச் சொந்தமென்று அரவணைத்து ஆதரவற்ற அபலையர்க்குத் தன்னையே பற்றுதலாய்க் கொடுக்கும் எங்கள் பற்றற்ற தலைவி புரட்சித் தலைவியின் நேரிய ஆட்சியில் இன்னும் ஓர் சீரிய அறிவிப்பு. ஆதரவற்ற பெண்களுக்கான மூன்று சேவை இல்லங்களில் மேல்நிலை வகுப்புகள் நடந்து வருகின்றன. நடப்பு ஆண்டில் மேலும் இரண்டு சேவை இல்லங்களில் மேல்நிலை வகுப்புகள் துவக்கப்படும். புதிய கல்விப் பயிற்சிகள் மூன்று இல்லங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படும். ஆதரவற்றோரின் வளர்ச்சிக்கான இந்த முயற்சிக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.5.96 இலட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பர்கூர், தமிழகத்தின் தலைவிதியைத் திருத்தி எழுதிய எங்கள் புரட்சித் தலைவி தத்தெடுத்த சிற்றூர். வெளி உலகுக்கு அதிகம் தெரியாது. தர்மபுரிக்குள் ஒளிந்து கொண்டிருந்த அந்த ஊர் இன்று இந்திய வரைபடத்தில் ஒரு வேள்விக் களம். மனித மாண்புகளை மதிக்கின்ற அனைவருக்கும் யாத்திரைத் தலம். தளர்ச்சிக்கு விடை கொடுத்து தமிழகத்தின் வளர்ச்சிக்கு வழி வகுத்த அந்த பர்கூரில் மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளியொன்று அரசு சாரா அமைப்பின் உதவியோடு இந்த ஆண்டு முதல் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல மதுரையில் உள்ள கடும் ஊனமுற்றோர் மற்றும் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான அரசினர் பள்ளிக்கு கட்டிடம் கட்ட நோய்க்கு மருந்தாய்த் திகழும் எங்கள் தாய்க்கு நிகரான தலைவியின் அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-25

பிப்ரவரி 24, தடம் புரண்டிருந்த தமிழர் வாழ்வு காக்க தன்னையே தாரை வார்த்த எங்கள் தலைவியின் பிறந்த நாள். அதனால்தான் மூலை முடுக்கெல்லாம் அந்த தினம் உன்னத தினமாக கொண்டாடப் படுகிறது. வீதிக்கு வீதி என்பதையும் மீறி வீட்டுக்கு வீடு விழா எடுக்கப்படுகிறது. அது அரசால் அறிவிக்கப்படாத தமிழர் திருநாள்.(மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பாண்டு முதல் அந்த புனித நாளில் புரட்சித்தலைவியின் பிறந்த நாளில் மருத்துவ பொறியியல் கல்லூரியில் தலைசிறந்த ஊனமுற்ற மாணவர் இருவருக்கு ரூபாய் 5,000 பரிசு வழங்கி கௌரவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாழ்க்கைப் போராட்டம் நமக்கு வழக்கமான ஒன்றுதான். ஊனமுற்றோரைப் பொறுத்தவரை வாழ்வதே அவர்களுக்குப் போராட்டம் ஆகிவிட்டது. ஊனத்தை எண்ணி உருகிக் கொண்டிராமல் போராடுவோர் எண்ணிக்கை பெருகிக் கொண்டுள்ளது. நம்பிக்கையே அவர்களை உயர்த்துகின்ற இருக்கை. தன்னம்பிக்கையே அவர்களது நன்னம்பிக்கை முனை. ஊனத்தை வெல்லுகின்ற ஞானம் வளர்ந்து ஊக்கத்தை உள்ளுக்குள் தேக்கி வைத்திருக்கும் ஊனமுற்றோரை உற்சாகப்படுத்த மாவட்டம் தோறும் தற்போது விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஒரு சின்ன வட்டத்திலிருந்து அவர்களை பெரிய வட்டத்துக்குள் கொண்டு வரும்முகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு முதல் அந்த விளையாட்டுப் போட்டிகள் மாநில அளவில் நடத்தப்படும் என்று ஊத்தரவிட்டிருக் கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இமயத்தின் உச்சியில் விற்கொடி நாட்டி தமிழரின் வீரத்தைத் தரணிக் குணர்த்திய சேரப்பேரரசன் செங்குட்டுவன் போன்று, சர்வதேச விளையாட்டரங்கில் தாய்த் தமிழ்நாட்டின் பெயரைப் பொறித்து ஆற்றல் மிக்க விளையாட்டு வீரரின் வீடு தேடிச் சென்று உதவுகின்ற முதல் முதலமைச்சராம் எங்கள் பொன்நிகர் மேனி புரட்சித் தலைவியின் தன்னிகரற்ற தனிப் பெரும் ஆட்சி.(மேசையைத் தட்டும் ஒலி) மாநில அளவிலான இந்த விளையாட்டுப் போட்டிகளை ஆண்டுதோறும் சுமார் 1 லட்சம் ரூபாய் செலவில் புனிதத் தாயின் அரசும் நடத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

ஊனம் உடலைச் சிதைத்திருந்தாலும் உறுதியை மனதில் விதைத்திருப்போரை உயர்த்த அரசு உதவி செய்கிறது. இந்த முயற்சியில் இன்னொரு மைல் கல். ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் ஊனமுற்றோரின் உரிமைகளைக் காப்பதிலும் அவர்கள் மீது அக்கறை செலுத்துவதிலும் கூடுதல் கவனம் செலுத்துகின்ற அவர்களது திட்டங்களை ஆராய்ந்து ஊனமுற்றோர் நலனுக்கான செயல் திட்டம் ஒன்று இந்தியாவில் முதல் மாநிலமாக நின்று நம் மாநிலத்தில் இந்த ஆண்டு உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு முதல்வரின் அனுமதியோடு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏடாயிரம் கோடி எழுதிப் படிக்காமல் தன் மனத்தே எழுதிப் படித்து ஏற்றம் பெற்ற பார்வையற்றோர் எண்ணற்றோர். கண்ணற்றோர் என்றாலும் முன்னொற்றி நடக்கின்ற அவர்தம் நலன்களை ஏற்றிப் போற்றுதல் என்தமிழர் இல்லமெல்லாம் செந்தமிழாய் நிறைந்திருக்கும் எங்கள் அருட்கடலாம் புரட்சித் தலைவியின் அன்றாடக் கடமை. ஊனக் கண் குறித்து உருகிக் கொண்டிராமல் ஞானக் கண் பார்வை நாளும் வளர்த்து வரும் முயற்சியுடைய அந்த அந்தகரின் உயர்ச்சிக்கு வழி வகுக்கின்ற இன்னொரு திட்டம் விழியற்றோரின் விழி நீர் துடைக்கும் எங்கள் தாயின் ஆசியுடன் அறிவிக்கப்படுகிறது.

சுதந்திர இந்தியாவின் சரித்திரத்தில் இடம் பெறும் வண்ணம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு தேர்வுகளில் பங்கேற்கும் பார்வையற்றோர் பயன்படுத்துவதற்கு இன்று முதல் 'பிரெய்லி' கருவிகள் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நிலவுக்கும் காற்றுக்கும் நெருக்கம் அதிகம். மேகத்திரையைக் கலைத்துச் சிதைத்து நிலவு முகங்காட்ட வழி வகுத்துக் கொடுக்கிறது காற்று. அணைந்து போகாதிருக்க அகல் விளக்குக்கு துணை நிற்கிறது ஒரு தூண்டுகோல். திசையைத் தொலைத்து விட்டு அலைகடலில் தடுமாறும் பாய்மரத்துக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காம், காற்று, தூண்டுகோல், கலங்கரை விளக்கம் என்ற பட்டியலில் இணையுமெங்கள் புரட்சித் தலைவியின் கொள்கை விளக்கம். உடுக்கை இழந்தவன் கைபோல நீண்டு ஊனமுற்றோரின் இடுக்கண் களைவதில் முன் நிற்கின்ற முதல்வர்களின் முதல்வர் எங்கள் புரட்சித் தலைவி. இந்த பற்றற்ற தலைவியின் சமூகப்பற்றினால் ஊனமுற்றோர்க்கு கேட்காமலேயே உதவி கொடுக்கப்படுகிறது. தட்டாமலேயே கதவு திறக்கப்படுகிறது. கார்கால மேகமாய்க் கருணை மழை பொழியும் எங்கள் பூமகள் புரட்சித் தலைவியின் ஆட்சியில்

" ஊனமுற்றோர் சேவையில்'' மனமார ஈடுபடும் மருத்துவர்களை ஊக்குவிக்கும் திட்டமொன்று அறிவிக்கப்படுகிறது. ஊனமுற்றோர் நலனுக்காக சிறப்பாக சேவை செய்யும் மருத்துவர் ஒருவருக்கு ஒவ்வொரு ஆண்டும் அவர்களை தேர்ந்தெடுத்து மாதர்குல தனி விளக்காம், தமிழர்களின் திருவிளக்காம் புரட்சித் தலைவியின் பெயரால் அமையும் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா விருது ஆண்டுதோறும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 6-30

புதியதோர் உலகம் செய்வோம்; கெட்ட போரிடும் உலகினை வேரொடு சாய்ப்போம்; என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். புதியதோர் உலகம் செய்ய முதலில் கெட்ட போரிடும் உலகத்தை அழித்தல் அரசின் முதல் கடமையாகும். கலைமகளும் அலைமகளும் கண்கவர வந்தவளே; கண்ணிற்கு இனியவளே; கண்ணாரு பட்டிடுமோ மண்ணெடுத்து சுற்றிடுவேன்; மலைமகள் துணை நிற்பாள்; என் கண்ணின் மணியே; கண்ணயர்ந்து நீ உறங்கு என ஏழ்மையில் வாழ்ந்தாலும் மனத்தால் செல்வத்தோடு குழந்தைக்குத் தாலாட்டுப்பாடி சீராட்டி பாராட்டி வளர்க்கும் தாயின் மனம் உடைந்துப் போகும்படி கடந்த ஆட்சியில் குழந்தைகளைப் புறக்கணிப்பதும், தவறான வழிகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவதும் அவ்வப்போது நாம் காணும் நிகழ்வுகளாக இருந்தது. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்றார்கள் முன்னோர்கள். தமிழகத்தின் தர்ம தேவதையல்லவா எங்கள் தங்க நிகர் தாய் புரட்சித் தலைவி. அதனாலேதான் அவர்கள் குழந்தையையும் கொண்டாடுகிறார்கள்; தெய்வத்தையும் கொண்டாடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், இந்த பிரச்சினையில் மிகுந்த மன வேதனையடைந்த புரட்சித் தலைவி அவர்கள், புறக்கணிக்கப்படும், சமூக விரோதிகளால் தவறான வழியில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும் என முடிவு செய்தார். சமுதாய உணர்வுள்ள நபர்கள் யாரையும் இதற்காக அணுகிட முடியாமல் இருந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கருதினார்கள். இந்த ஆண்டு இந்தியாவிலேயே நம் மாநிலத்திலேதான் முதன்முதலாக குழந்தைகளுக்கான இடர்பாடுகள் தலையீட்டு மையத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் அமைக்க உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மையம் முதன் முதலாக சென்னையிலே துவக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

" உனக்கு சாரதி மட்டும் அல்ல, உன்னைத் தூக்கிச் செல்லும் சாதாரண கூலிக்காரனும் நானே" என்றார் கீதையில் கண்ணன். "என்னிடம் உன் பாரத்தை இறக்கி வை. நானே சுமக்கிறேன்." என்றார் இயேசு. " என்னிடம் அன்பு செலுத்து, உன்னைக் குழந்தையாக்கி தூக்கித் தோளில் போட்டுக் கொஞ்சுகிறேன்" என்று கூறினார் நபிகள் நாயகம். இவர்களையெல்லாம் நாங்கள் பார்க்கவில்லை. ஆனால், இவர்களின் வடிவில் இளைய தலைமுறைக்கு இனிய தலைவி, புரட்சித் தலைவி அல்லவா இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* " நம்பியவரைக் காப்பாற்றுவது கடவுளின் வேலை" என்ற தாகூரின் வாக்கினை மெய்ப்பித்து ராணிப்பேட்டை மக்களை கைவிடாமல் காத்து வருகிறார் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள். ராணிப்பேட்டை எங்கள் ராணியின் கோட்டை அல்லவா. *(மேசையைத் தட்டும் ஒலி)* சூழ்ச்சி வலைகளை அறுத்து மக்கள் தங்கள் வெற்றிக் கனியை எங்கள் ஜான்சி ராணியின் காலடியில் வைத்து, எவர் வந்தாலும் புரட்சித் தலைவியின் பக்கமே நிற்போம் என்பதை நிரூபித்த இடம் அல்லவா ராணிப்பேட்டை. *(மேசையைத் தட்டும் ஒலி)* எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு என்றார் வள்ளுவர். புரட்சித் தலைவி அந்தத் தொகுதிக்கு செய்த சேவைகளை அந்த மக்கள் நன்றி உணர்வோடு நினைக்கிறார்கள். செய்த நன்றியை உடனுக்குடன் மறக்கின்ற பல அரசியல் தலைவர்கள் இருக்கின்ற இந்த நாட்டில், எங்கள் குறிஞ்சி மலர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு பெரிய விதி விலக்கு. அதனால்தான் நன்றி மறக்காத அந்த ராணிப்பேட்டை தொகுதியில்' 'அம்மாவும் நீயே' அப்பாவும் நீயே, அன்புடனே ஆதரிக்கும் தெய்வமும் நீயே' என்று தமிழகக் குழந்தைகளால், ஏன் இந்தியக் குழந்தைகளால், ஏன் உலகக் குழந்தைகளால் பாராட்டப்படும் எங்கள் தெய்வத்தாய் புரட்சித் தலைவி அவர்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* தாய் தந்தை இருவரும் இல்லாத ஆண் குழந்தைகளுக்கு ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு பராமரிப்பு மையம் ஒன்றையும், பெருமைமிகு சென்னையில் பெண் குழந்தைகளுக்கான சிறப்பு பராமரிப்பு மையம் ஒன்றையும் 10 செவிலித் தாய்மார்களோடு உருவாக்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழிகி யவ்வும்... நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பணிப் பற்றுவிட்டாங்கு

—விவரம் தெரியாத இளமைப் பருவத்தில், பிறருக்கு அடங்கி நடக்காத தீக்குணம் உடையவர்களுடன் சேர்ந்து செய்த தீமைகள் எல்லாம், நல்லோர்களுடன் சேர்ந்து பழக ஆரம்பித்தவுடன், சூரிய வெப்பம் பட்டவுடன் புல்லில் பட்ட பணித்துளி மறைவதுபோல், மறைந்து விடும் என்கிறது நாலடியார்.

அந்த வகையில் நிரந்தரப் புகழ் படைத்த எங்கள் அன்னையாம் புரட்சித் தலைவியின் அன்பு அரவணைப்பில், குற்றம் புரிந்த இளம் சிறுவர்களுக்கு அமைக்கப்பட்ட இல்லத்தில் பல்வேறு தொழிற் பயிற்சிகள் அரசால் நடத்தப்படுகின்றது. அவர்கள் இவ்வில்லத்தை விட்டு வெளியேறும்போது அவர்கள் கையில் மிகக் குறைவான உதவித் தொகையே இதுவரை கடந்த கால அரசுகள் வழங்கி வந்திருக்கின்றன.

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி என்ற வரிகளை நினைவுபடுத்தி அப்படிப்பட்ட பிள்ளைகள் வெளியே போய் திரும்ப தவறு செய்து மீண்டும் குற்றவாளியாகி உள்ளே வராமல் இருக்க 'சின்னஞ் சிறு கைகளை நம்பி' மிக குறைவாகக் கொடுக்கப்பட்டு வந்த இந்த உதவித் தொகை சுமார் 10-லிருந்து 25 மடங்கு வரை உயர்த்தி புரட்சித் தலைவி அவர்கள் புதிய சரித்திரம் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இனி அவர்கள் வெளியே போய் சுயதொழில் செய்து தங்கள் சொந்தக் காலில் நிற்கலாம். அதன்படி, இன்றுமுதல் தச்சுப்பயிற்சி பெறுபவர்க்கு 200 ரூபாய் உதவித் தொகை வாங்கிக் கொண்டிருந்தவர்கள், இரண்டாயிரம் ரூபாய் பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-35

நெசவுப் பயிற்சி பெற்றவர் 100 ரூபாய் உதவித் தொகை வாங்கி கொண்டிருந்தவர்கள் இன்று முதல் 1,000 ரூபாய் பெறுகிறார்கள்.

புத்தக பைன்ட் பயிற்சிக்கு 100 ரூபாய் பெற்றுக் கொண்டிருந்தவர்கள் 1,000 ரூபாய் பெறுகிறார்கள்.

தோட்ட வேலை செய்து கொண்டிருந்தவர்கள் 50-லேயிருந்து 500 ரூபாய் பெறுகிறார்கள்.

சில தொழிற் பயிற்சி பெற்றவருக்கு இந்நாள் வரை எந்த உதவித் தொகையும் வழங்கப்படாமல் இருந்தது. ஆனால் சிறிய காரியங்களைக்கூட உன்னிப்பாகக் கவனிக்கின்ற மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் இன்று முதல் வீட்டு மின்பணி, மின்சுருள் கம்பிப் பணி மற்றும் குழாய் பணி

ஆகிய பயிற்சி பெற்றவருக்கு ரூபாய் 1000-ஐயும், பற்ற வைப்பு பயிற்சி பெற்றவருக்கு ரூபாய் 2,000-ஐயும் இரண்டு சக்கர வாகனம் பழுது பார்க்கிற பயிற்சி பெற்றவருக்கு ரூபாய் 2000-ஐயும் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

விண்ணுக்கும் மண்ணுக்கும் வீதியமைத்து, ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் படைக்க வழி வகுக்கும் தாயே, உழைத்துக் களைத்தோரின் உள்ளத்தைத் தாலாட்டும் சொப்பனத் தேவதையே, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் புரட்சித் தலைவி அவர்களே, உங்களை வணங்கி துவங்கிய என் உரை உங்களை வாழ்த்தி நிறைவடைய உள்ளது.

புரட்சித் தலைவரின் புனிதப் பெயரைச் சத்துணவுத் திட்டத்திற்கு சூட்டிப் பார்த்து மகிழ்ச்சியடைந்தீர்கள் நீங்கள். ஆனால், புரட்சித் தலைவரின் பெயரை நீங்கள் மறைக்கப் பார்ப்பதாகச் சில கிணற்று தவளைகள் குற்றஞ்சாட்டுகின்றன. அவர்களது சிந்தனை வறட்சியும், அரசியல் விரக்தியுமே ஓங்கி உலகளக்கும் உங்கள் சாதனைப் பயணம் கண்டு அவர்கள் மிரட்சியடைவதற்கு முக்கியக் காரணம். உண்மை நிலவரம் தெரிந்திருந்தாலும் கலவரம் செய்யுமாறு எங்கிருந்தோ பிறப்பிக்கப்படும் கட்டளைக்கு அவர்கள் கட்டுப்படுகிறார்கள். அதனாலேதான் மக்களாலே குட்டப்படுகிறார்கள்.

நீங்கள் தனிமரமில்லை; கனிமரம், கல்லெறிபவர்கள் பற்றி நீங்கள் கவலைப்படுவதில்லை. பகுத்துப் பார்க்கும் பக்குவம் இல்லாமல் முட்டி மோதத் துடிக்கின்ற விட்டில்கள் குறித்து விளக்கு என்றேனும் கவலைப்பட்டதுண்டா ?

நீங்கள் மூவுலகும் சுற்றி வரும் வெற்றித் திருமகள். உங்கள் பலத்தை நீங்கள் துல்லியமாகக் கணிக்கிறீர்கள்.

மக்கள் மன்றத்தில் நீங்கள் உலா வரும்பொழுது சிலர் உறைந்து விடுகின்றனர். தேர்தல் நடக்கும் முன்பே, முடிவு தெரிந்து விடுவதால் அவர்களுக்குக் காய்ச்சல் அதிகரித்து விடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உங்கள் உதவியால் வெற்றி பெற்றதாக வெளிப்படையாகக் கூறிய சிலபேர், இன்றைக்குத் தீட்டிய மரத்திலேயே கூர்பார்க்க முயல்வதைக் கூர்ந்து பார்க்கிறது தமிழகம். ஆனால் நீங்களோ, வாழ்த்துகளுக்குள் தொலைந்து போகாமலும், வசைகளுக்குள் குலைந்து போகாமலும், இமயம் போன்று எழுந்து நிற்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புலிகளின் உறுமலையே பொருட்படுத்தாதவர்கள் நீங்கள், இந்த எலிகளின் இருமலா உங்களை எட்டப் போகிறது ?

வன்முறைக்குப் பலியாகும் அபாயம் இருந்தாலும், அதற்கு எதிரான அகிம்சைப் போரில் உங்களையே பணயம் வைக்கும் உன்னதத் தலைவி நீங்கள். அதனால்தான் உங்கள் பின் கண்ணிமை மூடாமல் காத்திருக்கிறது தமிழர் சேனை. நீங்கள் நிமிர்ந்தால் அணிவகுப்பு, நடந்தால் படையெடுப்பு என்பதைக் கடந்த கால சரித்திரம் நிருபித்திருப்பதால் உங்களது நிகழ்கால எதிரிகள் தங்களது எதிர்காலம் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். நீங்களோ 6 கோடி தமிழக மாந்தரின் வாழ்க்கை சிறக்கவே வேறென்ன செய்யலாமென்கின்ற சிந்தனையிலேயே சிறைப்பட்டுள்ளீர்கள்.

இருளைப் பழிக்காமல் அகலேற்றி வைத்து மக்கள் அபிமானம் கவர்ந்த அபிராமியே, மணியே, மணியின் ஒளியே, ஒளிரும் அணிபுனைந்த அணியே, அணியும் அணிக்கழகே, அணுகாதவர்க்குப் பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெருவிருந்தே, தமிழர் திறங்காக்கும் புரட்சித் தலைவி அவர்களே, பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்த பின்னே எனப் பணிந்து, தங்களின் சீரிய தலைமையில் தொடர்ந்து அயராது பணியாற்றுவதே எங்களது நோக்கமாகும்.

சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஏறக்குறைய 57 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். அதில் கொள்கை விளக்கம் பற்றியும், திருமண உதவித் திட்டங்கள் பற்றியும், அரசுக் குழந்தைகள் நலக் காப்பகங்கள் பராமரிப்பது பற்றியும், ஊனமுற்றோர் நலன் பற்றியும், சத்துணவு வழங்கப்படுவதில் தரம் குறித்தும், இப்படி இன்னும் பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட வெட்டுத் தீர்மானங்களுக்கு நேரமின்மை காரணமாக ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக என்னுடைய பதிலை இப்பேரவையில் தர இயலவில்லை. அனைத்தும் அவைக்குறிப்பில் இருப்பதால் வெட்டுத் தீர்மானங்களில் முக்கியமானவை கருத்திற்கொள்ளப்பட்டு சமூக நலத் துறை அவற்றின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலத் துறை மானியத்தின் மீது வெட்டுத் தீர்மானம் கொடுத்த பேரவை உறுப்பினர்கள் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மக்களின் நன்மை கருதி கொடுக்கப்படுகின்ற அனைத்தும் நன்கு நிறைவேற்றப்படும் என்கின்ற நம்பிக்கையில் தங்களது வெட்டுத்

தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, சமூக நலத் துறையின் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 6-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு, மூன்று அமைச்சர்கள் தங்கள் பதிலுரையில், பாட்டும், கவிதையும் அதிகம் இருக்க வேண்டுமென்ற போட்டி இருந்ததை, சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலும் காண முடிந்தது. பாராட்டுக்கள்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(ஈ) கோரிக்கை எண் 29—சமூக நலன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் *29* - சமூக நலன், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சமூக நலன் பற்றிய *29*- ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. *476,80,12,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

(உ) கோரிக்கை எண் 30—பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த மானியக் கோரிக்கை, இன்றியமையாத மானியக் கோரிக்கை, நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டி இருக்கிறது. எனவே, அது தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. மானியக் கோரிக்கை எண் 30, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 150,77,32,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்,'' எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 2316, திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீலகிரி மாவட்டம், குளிர்ப் பிரதேசமாக இருப்பதனாலும், சமவெளிப் பிரதேசத்தைக் காட்டிலும் செலவு இங்கு அதிகமாவதாலும், நீலகிரி மாவட்டத்துப் பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளில் அவர்களுக்கு அளிக்கும் தினசரி உணவின் செலவுத் தொகையை அதிகரித்து தரமான உணவு வழங்கும் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 150,77,32,000- இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 2321, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருவாரூர் நகரத்தில் குடியிருந்துவரும் ஆதிதிராவிடர்களுக்கு, அரசு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய *30*-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. *150,77,32,00*– இல் ரூ. *100* குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் *2341*, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில், மாட்டுமந்தை புறம்போக்கு மந்தையில் குடியிருக்கும் ஏழை, எளிய அரிசன ஆதிதிராவிடர் மக்களுக்குக் குடியிருப்புப் பட்டா கொடுக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய *30*- ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. *150,77,32,000*- இல் ரூ. *100* குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை மற்றும் வெட்டுத் தீர்மானங்கள், பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்பை [@] நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அதை இப்பேரவைக் குறிப்பேட்டில், பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்த பின், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில், ஆதிதிராவிட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி கண்டிட, அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளையும், இனி செயல்படுத்தவுள்ள திட்டங்கள் பற்றியும் என்னுடைய பதிலுரையில் இப்பேரவைக்குத் தெரிவிக்கிறேன் என்பதைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் தொடர்கிறது. நாளை, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெற இருக்கிறது. எனவே, இதை நாளை எடுத்துக் கொள்வது

@ *865* முதல் *916* வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

என்பது, நாளைய நிகழ்ச்சிகளுக்கு மிகவும் இடையூறாக இருக்கும். மிகவும் நெருக்கடி கூடும். எனவே, இப்பொழுதே, இதை முடித்து விடுவதுதான் சாலச் சிறந்தது. (குறுக்கீடு) இல்லையென்று சொன்னால், நாளைக்கும் இதே நெருக்கடி வரும். நாளைக்கு உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை இருக்கிறது. நாளைக்கும், இன்றுபோல், இவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டாலும் எடுத்துக் கொள்வீர்கள் ; சொல்ல முடியாது. ஏனென்றால், நீங்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய திறமை பூராவையும் காண்பிக்க வேண்டுமென்று ஆர்வம் காட்டுகிறீர்கள். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை கேள்வி நேரத்தை எடுத்து விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எடுத்தாலும், நான் சொல்கிறேன். அந்த ஒரு மணி நேரத்திலே இது முடியப் போவதில்லை. முக்கியமான மானியக் கோரிக்கை இது. இந்தமாதிரி மானியக் கோரிக்கைகளை, கேள்வி நேரத்திலே போய் முடித்து விடலாம் என்பது அல்ல; ஏதாவது கொஞ்சம் குறைந்தது என்றால், அப்படிப் போகலாமே தவிர, இன்றே முடிப்பதுதான் நல்லதாக இருக்கும். எல்லா உறுப்பினர்களும் பேசுவதற்கு மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள் ; 'ரெடி'யாக இருக்கிறார்கள். இந்தமாதிரி மானியக் கோரிக்கைகள் என்பதாலும், உறுப்பினர்கள் கொஞ்சம் ஆர்வமாக இருக்கிறார்கள். இல்லாவிட்டால், இவ்வளவு நேரம் கழித்து, இவ்வளவு உறுப்பினர்களே இருக்க மாட்டார்கள். இதற்கு முன்பெல்லாம். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்ச நேரம் நடத்திவிட்டு, மீதியை இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படிப் போனாலும், நாளைக்கு அந்த மானியக் கோரிக்கைகளுக்கு நெருக்கடி வரும். நாளைக்கு மத்தியானமும் இருக்கிறது, வேறு மானியக் கோரிக்கை. இந்த வாரம் மட்டும், மாண்புமிகு உறுப்பினர்கள் சிரமத்திற்குப் பொறுத்தருள வேண்டும். காலை, மாலை இரண்டு வேளைகளிலும் இருக்கும். காலையிலேயே கொஞ்சம் நீட்டித்து விடுவோமேயானால், மாலையிலும் கொஞ்ச நேரம் கூடுதலாக இருக்க வேண்டியிருக்கும். இந்த 6 நாட்களுமே, காலையிலும், மாலையிலுமாக இரண்டு மானியக் கோரிக்கைகளை எடுக்க இருக்கிறோம். திருமதி இலதா பிரியகுமார்.

பிற்பகல் 6-45

* **Thirumathi LATHA PRIYAKUMAR :** Hon. Speaker Sir, I thank you for giving me this opportunity to express my views on the

Demand for the Adi Dravidar and Tribal Welfare Department, on behalf of the Congress party.

The discussion on the Demand for Adi Dravidar and Tribal Welfare Department has been a ritual year after year. If these two categories consisting more than 20 per cent of the population of the State are to be brought to a level of average standard of living, it is imperative that the economic development of these sections of people should be considered on a top priority basis. This is interlinked closely with the educational facilities provided to these people. There is reservation in the Government educational institutions. Firstly, it should be ensured that in all spheres and in all areas of education, the quota fixed for these sections of people is fulfilled. Secondly, this policy should be extended to all Government-aided private institutions as well. This is a constitutional provision and, therefore, it should not be limited to Government institutions only.

From the Policy Note, it is observed that the percentage of literacy amongst these classes of people is about 46 per cent while the percentage for the State as a whole is 65 per cent. Efforts should be made to implement the policy wholeheartedly, so that the percentage of literacy is brought up to the State's general average. The hostel facilities provided to these people even in the urban elite areas, leave alone the rural areas, is far from satisfactory. The conditions prevailing are despicable. A casual visit to the M.C.Raja Hostel or the Villivakkam Adi Dravidar Hostel would reveal the shabby conditions in which the students have to live, study and compete with the general students. The basic facilities, such as providing minimum standard of accommodation facilities for study and proper food should be provided to the inmates of these hostels. To ensure this, I would suggest that a Committee be set up to visit

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள 6 மாணவர் இல்லங்களைப் புதுப்பித்து அதைச் சுத்தப்படுத்துவதற்காக சென்ற ஆண்டு அதாவது 1993-94 ஆம் ஆண்டில் 28.65 இலட்சம் சேங்ஷன் செய்து பொதுப் பணித் துறைக்கு ஒப்படைத்து பணிகள் துவங்கியிருக்கின்றன.

அதேபோல், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திருமதி இலதா பிரியகுமார் தொகுதியில் அவர் கோரிக்கை வைக்காமலே அந்த அரக்கோணம் தொகுதியில் ஒரு மாணவர் இல்லம் கொடுத்து, மகளிர் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடம் கொடுத்து கட்டிக் கொண்டிருக்கிறோம். அரக்கோணம் சென்றபோது, அந்தத் தகவலை அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thirumathi LATHA PRIYAKUMAR : I thank the Hon. Minister for providing the facilities to the Arakonam Constituency. But, these are certain shortfalls which I am bringing to his notice.

A Committee should be set up to visit and to monitor the conditions in these institutions. Proper audit should be conducted to ensure that the funds provided for the various purposes are utilised properly. The Committee should consist of people's representatives representing various political parties. In this sphere, my earnest request is that this should be above party politics.

The special scholarships for those engaged in unclean operations, viz. the scavengers and the tannery workers are given under a centrally sponsored scheme. The scholarship provided is Rs. 500 per annum. This is not adequate. Hence, my suggestion is that the State Government should step into this area and give a matching grant to facilitate such students to compete with the general population.

The scholarships given to the Adi-Dravidar students should be distributed at the earliest, that is, at the beginning of the academic year. Sometimes, the amount is given towards the end of the academic year. This holds good for providing free books also.

பிற்பகல் 6-50

The Welfare High Schools need more attention in the form of well-equipped laboratories, benches and desks, more class-rooms, toilet facility for the students and teachers, more so for the girl students.

In Arakonam Constituency there is a Adi-Dravidar Welfare Girls High School where there is no electricity.

I would next come to the distribution of land pattas to this vulnerable section of people. This needs to be reviewed and improved.

In the area of objectionable Poramboke lands, i.e. grazing grounds and lake areas it takes considerably long time for the beneficiaries to get the Pattas, eventhough they have been living in those places for the past 3 to 4 decades. Likewise, the area provided as grazing grounds in certain villages have not been used for the purpose for the past...

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா கொடுக்க இயலாது. அதாவது ஏரிப் புறம்போக்கிலே வீடு கட்டியிருந்தால் அந்த நிலங்களுக்குப் பட்டா கொடுக்க முடியாது. அது வருவாய்த் துறையில் வர வேண்டியது. ஆனால் நாம் நம்முடைய துறையைப் பொறுத்தவரையில் நல்ல வகையில் பட்டா கொடுத்து இருக்கிறோம். இதுகுறித்து கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தால் தெரியும். பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்டைப் பார்த்தாலும் தெரியும். தனியார் நிலம் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அதைத் தனியாக ஆர்ஜிதம் செய்துதான் கொடுக்கப்படும். எனவே, அதிலே ஏதாவது இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

Thirumathi LATHA PRIYAKUMAR : Mr Speaker Sir, what I want to say is that there are certain areas where they have been living for three to four decades, where there is 'Nil' cattle population. In that village - அந்த ஏரியாவைப் பொறுத்தவரையில் ரெவின்யூ டிப்பார்ட்மென்டோடு சேர்ந்து கொஞ்சம் நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும்.

Mr. Speaker Sir, these people have been denied the pattas eventhough they have been put up in this area for several years. It is necessary that these problem areas are identified and immediate action taken to provide them the Patta. It is suggested that the Harijan Welfare Department should act in liaison with the Revenue Department to provide the basic facilities at the earliest.

Further, in respect of providing Pattas the land acquisition mostly leads to litigation because the owners obtain injunction, etc., thereby denying benefits to these people.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை 1949-ல் உண்டாக்கப்பட்டது. அன்றிலிருந்து புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது முதலமைச்சர்

டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இந்த ஆண்டு 66,165 பேருக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது நில ஆர்ஜிதம் செய்ததன் மூலம் என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thirumathi LATHA PRIYAKUMAR : Mr. Speaker Sir, even 46 years after attaining political independence, the basic and fundamental right of having a burial ground or cremation ground has not been provided in many villages. On top priority basis it should be ensured that each and every village has a burial ground and an uninterrupted pathway to the burial ground. Because it is mostly in this area that communal clashes tend to arise. Where the land has to be acquired it should be done in a forthright manner and should be given top priority. On this subject, let me request the Government to consider having a Welfare Tahsildar's Office at every taluk level. This would enable the problems of the Adi-Dravida people to have quick redressal of their problems. In this world to-day where racial, religious and linguistic barriers are done away with, it is indeed shameful that we are not able to provide this elementary facility to people who die in our country.

The other basic need is drinking water and street light. We are indeed proud that Tamil Nadu has been a pioneer in providing electricity to all its villages. But it is a sad tale that it has not been extended to all the Harijan Colonies. Likewise, the provision of roads linking their colonies to other parts has not been repaired for a long time. Though the policy exists for these actions it is in the implementation of the project where we are making shortfalls, thereby causing untold misery to the Adi-Dravidar population in the State. If only we could implement the policy both Centrally sponsored and State sponsored, it would go a long way in alleviating the problems of the poorer sections of the people. It is observed that the industrial estates in Coimbatore and Periyar districts for knitwear based industry have been started. It is suggesed that as a pilot project an industrial estate should be established in each district to cater to the general requirements and not limited to special category of industries.

பிற்பகல் 6-55

Entrepreneurs Development Programmes should be organised in those institutions in collaboration with Central promotional agencies,

lead banks of the districts and State financial institutions. A target should be fixed for this purpose and periodically reviewed to ensure that the targets fixed for the period are achieved.

In the housing programme under the JVVT scheme, group houses are provided, though they are minimal in number which does not cover even the tip of the iceberg. For instance in Arakonam Taluk, Nemili Panchayat Union which consists of about 54 village panchayats only 30 houses have been provided in the year 1993-94. The housing scheme for the poorer section needs more attention and more investment from the State sector. A survey should be organised to arrive at a realistic figure of the number of persons who are without houses or house sites, to determine the magnitude of the problem and provide adequate resources to meet the basic need of the people. I hope these suggestions would be considered as constructive and steps would be taken to set right the situation. Thank you Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள். இனிவரும் பேசுகிற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் 7 நிமிடத்திற்குள் முடித்துக் கொண்டால் நல்லது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு எங்கள் பாசமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (சிரிப்பு).. நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி.. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர், பேரவைத் தலைவர்தான். பாசமுள்ள பேரவைத் தலைவர் அல்ல (சிரிப்பு). 7 நிமிடங்கள் கொடுத்ததற்காகப் பாசமுள்ள என்று சொல்ல வேண்டாம். பாசம் குறைவாகத்தான் கொடுத்திருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத் திறமும் இன்றி வஞ்சனை செய்வோரை எதிர்த்து நிற்கும் அறிவில் கூர்மை, செயலில் உறுதி, பிரச்சினைகளில் தெளிவு, முடிவு எடுப்பதில் துணிவு, திட்டங்களில் தொலைநோக்குப் பார்வை, மக்களின்பால் தெளிந்த அன்பு போன்ற அரிய பண்புகளால் தமிழகத்தில் அமைதியும், பாதுகாப்பும், வாழ்க்கையில் நம்பிக்கையும் தந்து மதுவை ஒழித்து பெண்கள் முன்னேற்றம், சிறுபான்மையோர், தாழ்த்தப்பட்டோர்களின் பிரச்சினைகளுக்கு அக்கறை காட்டி தமிழகத்தை ஆட்சி செய்கின்ற முத்தமிழ் வித்தகர், தன்னை அழிக்க நினைப்பவர்களை தனது

புத்தி சாதுர்யத்தால் அடக்கி வெற்றி கொள்கிற எங்கள் வீரத்தலைவி இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திசை நோக்கி எனது நெஞ்சார்ந்த வணக்கங்களைத் தெரிவித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் குறித்த மானியத்தை வரவேற்றுப் பேசுவதில் பெருமை அடைகிறேன். தமிழகத்தின் வரலாற்றில் இதுவரை யாரும் செய்திடாத அளவில் ஒப்புவமை கூற இயலாத அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு, பாதி வேட்டி கட்டி நிலங்களில் பண்ணையாட்களாகப் பணியாற்றியவர்களை இன்றைக்கு பண்ணையார்களாக மாற்றுகின்ற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் 100 தொழிற்பேட்டைகள் அடங்கிய தொழிற்சாலைகள் கோவை மாவட்டத்திலுள்ள திருப்பூரிலும், பெரியார் மாவட்டத்திலும் அமைந்துள்ளது குறித்து இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயம் பெருமிதம் கொள்கிறது. இதனை நான் மனமுவந்து வரவேற்கிறேன். அதுபோலவே இறால் மீன் பண்ணைகளை 8 கடலோர மாவட்டங்களில் அமைக்கவும் நபார்டு மற்றும் என்.எஸ்.எப்.டி.சி. போன்ற நிறுவனங்கள் மூலம் ஹெக்டேருக்கு ரூ. 1,50,000 என்று நிதி ஒதுக்கி ஆதிதிராவிடப் பெருமக்கள் பயனாளிகளின் விண்ணப்பத்தினைத் தேர்வு செய்து கொடுத்து இன்றைக்கு அவர்களை மீன் பண்ணை முதலாளிகளாக உருவாக்கி இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய புகழை இந்த மீனவ சமுதாயம் பரம்பரை பரம்பரையாகப் பாராட்டும் என்பதை மட்டும் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், 20 மாவட்டங்களில் 10,000 பயனாளிகளைத் தேர்வு செய்து அதில் நிலமற்றோர் 4,000 பேர்களையும் நிலமுள்ள 6,000 பேர்களையும் தேர்வு செய்து 3,000-க்கும் மேற்பட்ட நிலம் உள்ளவர்களின் மனுக்களை எடுத்துக் கொண்டு—நிலம் இல்லாதவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்—ஏழை எளிய மக்களுக்கு இன்றைக்கு ஒரு 5 சென்ட், 10 சென்ட் என்று மிகக் குறைவாக இருக்கிற சூழ்நிலையில் ஒரு ஏக்கரைக் கொடுத்து அதற்காக எல்.ஏ.எப்.டி. என்ற ஒரு நிறுவனத்தின் உதவியை நாடி கொடுத்துக்கொண்டிருக்கின்ற தன்னிகரற்ற ஆட்சியின் காலத்தில் நிலத்தின் சொந்தக்காரர்களாக, சொந்தக் காலிலே நின்று இன்றைக்கு உறுதியுடன் நிற்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களின் பெருமையைச் சொல்லி மாளாது.

பிற்பகல் 7-00

தாழ்த்தப்பட்ட சமுதாயம் குறிப்பாக தாங்கள் அடிப்படை இன்னல்களிலிருந்து விடுபட, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தெந்த விகிதத்தில் முன்னேறவேண்டும் என்பதில் அக்கறை எடுத்து, குடிநீர், இணைப்புச் சாலைகள், தெரு

விளக்குகள், பள்ளிக்கூட வசதிகள் செய்து கொடுக்கவேண்டி எஸ்.ஸி., எஸ்.டி. காலனிகளில் ஒரு ஆய்வு நடத்தி புள்ளிவிவரங்களை சேகரித்து மயானம், நடைபாதை என உடனடியாக செய்து கொடுக்க கட்டளை பிறப்பித்த தலைவி இந்த உலகத்திலே டாக்டர் புரட்சித் தலைவி ஒருவராகத்தான் இருக்கமுடியும் என்பதை கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இதுபோன்று இந்த எஸ்.ஸி., எஸ்.டி., காலனிகளிலே ஆய்வு நடத்திய முதல்வர் உண்டா ? இதுவரைக்கும் ஆய்வு நடத்தி இந்த அடிப்படைத் தேவைகளைச் செய்தால் தான் அடிமைத் தளத்திலிருந்து விடுபடமுடியும் என்று இன்றைக்கு அடிப்படை தேவையை செய்துகொண்டிருக்கின்றவர், வேறு எந்த மாநிலங்களிலே முதல்வர் இருக்கிறார்களா என்பதற்கான பதிலை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவிக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 10 அம்சத் திட்டம் கண்டு சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளார். அத்துடன் மத்திய அரசின் 20 அம்சத் திட்டத்தின் மூலம், எஸ்.ஸி., எஸ்.டி. மக்களின் 2-1/2 லட்சம் எஸ்.ஸி., 9000 பழங்குடியினருக்கு உதவிட வழி வகுத்துள்ளார்.

கல்வி ஒன்றினால் மட்டும் தான் இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைத் தலை நிமிரச் செய்திடமுடியும் என்று முடிவு எடுத்து அதற்காக 90 சதவிகிதம் நிதி ஒதுக்கி 1,225 பள்ளிக்கூடங்களை நடத்தி, 10 ஆம், 12 ஆம் நிலை ஆண்டில் மாணவர்களுடைய தேர்வு நிலை 1992-93 ஆம் ஆண்டில் 57 சதவிகிதம், 1993-94 ஆம் ஆண்டில் 70 சதவிகிதம், 12 ஆம் வகுப்பில், 1992-93 ஆம் ஆண்டில் 37 சதவிகிதம், 1993-94 ஆம் ஆண்டில் 62 சதவிகிதமாக உயர்த்தி என்றைக்குமே இல்லாத அளவுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திலே அக்கறை செலுத்திய தலைவிதான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அதுபோல, மருத்துவம் பயில்வோர், பொறியியல் பயில்வோர், வேளாண்மை படிக்கும் மாணவர்களுக்குப் புத்தகம் வாங்கக் கூட முடியவில்லையே, படிக்கின்ற சூழ்நிலை கூட இல்லையே என்று நினைத்து புத்தக வங்கி ஒன்று திறந்து அதிக அளவில் பணம் கொடுத்து வாங்கமுடியாத அந்த ஏழைகளின் தாகத்தைத் தணித்து இன்றைக்கு படிப்பிலே முதன்மையாக வருவதற்கு உதவி இருக்கிறார்கள்.

20 மாணவர் விடுதியும், 500 பேர்களுக்கு கூடுதல் இடமும் அளித்துள்ளார். இன்றைக்குச் சுகாதாரக் கேடான தொழில் புரிவோர்க்கு அவர் துயர்தணிக்க, அந்தத் தொழிலை மாற்றி வீட்டிற்கு ஒரு கக்கூஸ் கட்டுகின்ற ஒரு திட்டமும், அந்த அலுவலர்

குழந்தைகளுக்கு வருடம் 500 ரூபாய் தந்து மருத்துவம், பொறியியல், வேளாண்மைப் பிரிவில் முன்னுரிமை அளிக்கின்ற நமது தானைத் தலைவி அவர்களை இந்தச் சமுதாயம் மறக்குமா? பரம்பரை பரம்பரையாக மக்கள் வாழ்த்தும் நிரந்தர முதல்வர் என்றால் அது மிகையாகாது என்று மட்டும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மக்களுக்குத் தாயாய், அன்பும் அகிம்சையும் கொண்டு பெண் குழந்தைகளுக்கு, பட்டாடை கொடுத்து பாசத் தொட்டில் கட்டி, பவுனிலே மோதிரம், காலுக்கு வெள்ளிக் கொலுசு போட்டு, மல்லிகை மலர் சூடி மகிழும் நமது அன்னை அவர்களின் பெயரிலே, டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் 15 அம்சத் திட்டம் என்று வரலாறு படைக்கப்போகும் திட்டம். உலகம் போற்றும் அன்னை தெரசாவால் ஆசீர்வதிக்கப்பெற்ற தமிழ்நாட்டு அன்னை தெரசாவான இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இரண்டாம் வகுப்பிற்கு மேல் படிக்க முடியாமல் நிறுத்தி வைக்கப்படுகின்ற குழந்தைகளுக்கு, அவர்களுக்கு மாற்றுத் திட்டமாக ஒரு குழந்தைக்கு வருடத்திற்கு 500 ரூபாய் கொடுக்கிறார்கள். என்ன கருணை இது.! நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. நெஞ்சம் நெகிழ்ந்து, உள்ளம் கிளர்ந்து சொல்கிறேன். 5-வது வகுப்பு முடித்தால் வேலைக்குப் போய் வருமானம் சம்பாதிக்கவேண்டும் என்ற நினைப்பில் அந்தக் குழந்தைகளை நிறுத்திவிடுகிறார்கள். அப்படி 5-வது வகுப்பிற்கு மேல் படிக்கமுடியாத குழந்தைகளை எல்லாம் தேர்வு செய்து, 4 மாவட்டங்களிலே மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய், வருடத்திற்கு 1,200 ரூபாய் அளவிற்குக் கொடுத்து ஒரு வருமானம் ஈட்டும் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக இன்று தாழ்த்தப்பட்டோர் வீட்டில் ஒளியேற்றிய ஒரு ஜோதி நமது தமிழக முதல்வர் என்றால் அது மிகையாகாது.

நமது ஆதிதிராவிட மக்களைச் சொல்லியே, அவர்களுக்கு அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று சொன்னவர்களின் முகத்திரையைக் கிழித்து, ஏழை ஆதிதிராவிடனும் வேதபாராயணம் செய்யலாம் என்று வேதபாடக் கல்லூரி அமைத்து அதிலும் இட ஒதுக்கீடு செய்து திராவிடப் பாரம்பரியத்தை நிரூபித்துக் காட்டியிருக்கின்ற தலைவிதான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

தாழ்த்தப்பட்ட மககளின் தலைவர் அண்ணல் அம்பேத்காருக்கு மகாராஷ்டிர மாநிலத்தில் அவர் பிறந்த ஊரிலே பல்கலைக் கழகத்திற்குப் பேர் வைக்கக்கூட மனமில்லாத போது, நாட்டுப் பற்றுடன் இறையாண்மையுடன் தேசியத் தலைவர்களை மதிக்கின்ற நோக்கோடு தேசிய ஒருமைப்பாட்டினைக் கட்டிக் காக்கின்ற ஒரே

தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே டாக்டர் அம்பேத்கார் பெயரிலே 5 கோடிக்கு மணிமண்டபம், டாக்டர் அம்பேத்கார் பெயரிலே போக்குவரத்துக் கழகம், அம்பேத்கார் விழாவாக அரசு விழாவாக எடுக்க ஆணை பிறப்பித்தார்கள். அண்ணல், அறிஞர் அண்ணா அவர்கள், தந்தை பெரியார் அவர்கள் நமது.. *(குறுக்கீடு)*

பிற்பகல் 7-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது மகாராஷ்டிரா மாநிலத்தில் அண்ணல் அம்பேத்காரினுடைய பெயரிலே பல்கலைக் கழகம் வைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் மகாராஷ்டிரா காங்கிரஸ் அரசு இன்றைக்கு அதை வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மரத்வாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்காருடைய பெயரை வைப்பது என்று தீர்மானம் செய்தபொழுது அதிலே பிரச்சினை வந்தது. திரு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கார் பெயரை மரத்வாடா பல்கலைக் கழகத்திற்கு சூட்ட வேண்டுமென்று அந்தப் பல்கலைக் கழகத்து செனட்டும், சின்டிகேட்டும் தீர்மானமிட்டு, சட்டப் பேரவையும் தீர்மானமிட்டு, 1979-லே அந்தத் தீர்மானத்தைப் போட்டு அதைச் செயல்படுத்துவதற்கு 15 ஆண்டுகள் பிடித்தது. 4 மாணவர்கள் தீக்குளித்து இறக்க வேண்டிய நிலைமையும், ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட வேண்டிய நிலைமையும், பாபாசாகேப் அம்பேத்காரின் மனைவி சபிதா அம்பேத்கார் அவர்களை சிறையில் வைக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1979-லே தீர்மானம் போட்டு அதைச் செய்யவில்லை என்று உறுப்பினர் சொல்கிறார். லக்னோ பல்கலைக் கழகத்தில் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் எந்தவிதமான, யாருடைய தீர்மானமோ, பிரஷரோ இல்லாமல், அவர்களே முன்வந்து அறிவித்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் அம்பேத்காருக்காக மணி மண்டபம் கட்டவில்லை. நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி கட்ட உத்திரவிட்ட பிறகு தான் மகாராஷ்டிராவில் செய்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, அம்பேத்காருக்காக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி புகழ் பரப்புகின்றபோதுதான் மற்ற அரசியல் கட்சிகள்கூட இன்றைக்கு இறங்கி வந்து அவருடைய பிறந்தநாளைக் கொண்டாடுகின்ற காட்சியை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் சீனியம்மாள், பேசுங்கள். ஒரே ஒரு நிமிடத்திற்குள் பேசி முடித்துவிடுங்கள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபொழுது இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று சொல்லி ** எல்லாம் அண்ணல் அம்பேத்கார் என்ற பெயரைச் சொல்லி அவர்களிடத்திலேயிருந்து ஓட்டு வாங்கியவர்கள் எல்லாம், இந்த காங்கிரஸ்காரர்கள். இவர்கள் இன்றைக்கு என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பணக்காரர்கள், மிட்டா மிராசுதார்கள் என்று பாராமல், தானைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு, வெண்தாடி வேந்தர் தந்தை பெரியாருக்கு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு, மாண்புமிகு தேசியத் தலைவர் பசும்பொன் தேவர் அவர்களுக்கு, மரியாதைக்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு விழா எடுப்பது போல இரண்டு கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் மன உணர்வுகளைப் புரிந்துகொண்டு இன்றைக்கு அண்ணல் அம்பேத்கார் பெயரிலே அரசு விழா எடுக்கின்ற ஒரு தலைவி இருக்கிறார் என்றால் அது எங்களுடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான் என்று நான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது உலகம் புகழ்கின்ற...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசி முடித்துக்கொள்ளலாம். டாக்டர் சீனியம்மாள், அதோடு உரையை முடித்துக்கொள்ளுங்கள். அடுத்து திரு. அறிவழகன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதிலே, டாக்டர் சீனியம்மாள் அவர்கள் பேசிய 'இதற்கு முன்னால் இருந்தவர்கள் அதைச் செய்வேன். இதைச் செய்வேன்' என்று சொல்லி, அதற்கு அடுத்தாற்போல சொன்ன அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். *(குறுக்கீடு)* உரையை முடித்துக்கொள்ளலாம். நேரம் இல்லை. ஏற்கெனவே *10* நிமிடம் பேசி விட்டீர்கள். அடுத்து திரு. அறிவழகன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிவழகன் கொஞ்சம் இருங்கள். டாக்டர் சீனியம்மாள் ஒரே நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சொசைட்டி மூலம் ஏழையெளிய மக்களுக்கு ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுப்பதிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஒரு கமிட்டி போடப்பட்டது. அந்தக் கமிட்டி மூலம் அவர்கள் கட்சிக்காரர்களையே போட்டு இன்றைக்கும் அவர்களே லோன் வாங்குகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் உண்மையான ஏழையெளிய மக்கள் பயன் அற்றுப் போகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்மாவினுடைய ஆணையைப் பெற்று, அதில் எஸ்.சி., எஸ்.டி., மக்களுடைய ஒரு முக்கியமான பிரதிநிதியும், சட்டமன்ற உறுப்பினரும், மேலும் அனைத்துக் கட்சியிலுள்ள நல்லவர்களைப் போட்டு, அப்படிப்பட்ட ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இட ஒதுக்கீட்டில் அம்மா அவர்கள் *30* பர்சன்ட் என்று ஒதுக்கி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு *18* பர்சன்ட் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலும், இதுவரை எஸ்.சி., எஸ்.டி.,க்கு ஒரு இடத்தில் கூட மேற்பார்வையாளர்களையோ, கணக்கு அலுவலர்களையோ போடவில்லை என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இதுவரை நீங்கள் தேர்வு செய்த இந்த இட ஒதுக்கீட்டு முறையை சரி செய்யுமாறு கேட்டுக்கொண்டு, கடைசியாக, இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., வணிக வரித் துறை, வானொலி மற்றும் என்னென்ன துறைகள் இருக்கிறதோ அதை எல்லாம் தாய் உள்ளத்தோடு பரிசீலனைக்கு எடுத்து, அவர்களுக்கு டிரெயினிங் கொடுத்து வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற நம் தலைவி அவர்கள், மனதிற்கு மட்டும் பயந்துவிடு, மானத்தை உடலில் கலந்துவிடு, இருக்கின்ற வரையில் வாழ்ந்துவிடு, இரண்டினில் ஒன்று பார்த்துவிடு

என்ற தலைவரின் வாக்குக்கு இணங்க (மேசையைத் தட்டும் ஒலி) அஞ்சாத சிங்கமாய் ஆட்சி புரியும் தங்க நிகர்த் தலைவி எங்கள் சிங்கத் தலைவியை வீழ்த்துவதற்கு எவரும் இந்த உலகில் பிறக்கவில்லை என்று கூறி, வாழ்க புரட்சித் தலைவி, வெல்க புரட்சித் தலைவி என்று கூறி, வாய்ப்பு தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 7-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. அறிவழகன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற தலைமை வரலாற்றில் எப்பொழுதோ ஒருமுறைதான் மக்களுக்கு அமைகின்றது. அந்த வகையில் தமிழக மக்களுக்கு, குறிப்பாக ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்கு நம்பிக்கை ஒளியாய் அமைந்துள்ள தலைமையைக் கொண்ட அரசு இப்போது அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக வரலாற்றில் சமூக ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் ஆதிதிராவிட-பழங்குடியினர் இன மக்களுக்கு இந்த அளவுக்கு முன்னேற்றம் காணும் அரசு இந்த அரசுதான் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூகப் பொருளாதார மற்றும் எண்ணற்ற தேவைகளுக்கு முக்கியமான பிரச்சினையாக இருக்கின்றது கல்வி என்பதில் வலுவான நம்பிக்கை கொண்டு, புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆதிதிராவிடர்-பழங்குடியினர் துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொகையை கல்வி மேம்பாட்டுக்காக ஒதுக்கியுள்ளது என்பதை எண்ணி ஒவ்வொரு ஆதிதிராவிட பழங்குடியின மக்களும் மகிழ வேண்டிய அம்சமாக இருக்கிறது.

பள்ளிகளில் பயில்கின்ற ஆதிதிராவிடர்-பழங்குடியினர் மாணவர்களுக்கு வருடாவருடம் கல்வியில் முன்னேற்றம் காண்பதற்காக இந்த அரசு திட்டமிட்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைச் சென்றடைவதில் எந்தவிதமான சுணக்கமும், இடையூறும் இல்லாமல் செய்கின்றது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில் சீருடை, உதவித்

தொகை வழங்குவது போன்ற வசதிகளையும் இந்த அரசு குறைவின்றி நிறைவேற்றி வருகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூக ரீதியில் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்ற, ஆண்டாண்டுக் காலமாக அழுத்தப்பட்டிருக்கின்ற அந்த சமுதாய மக்கள் ஒரே நேரத்தில் கல்வியிலும், பொருளாதார ரீதியிலும் வெகுவான முன்னேற்றம் காண வழிவகைகளை உடனுக்குடன் கண்டு கொண்டிருக்கும் அரசு இந்த அரசு என்று இந்த நேரத்தில் சொல்வதோடு, வேளாண்மையையும், அதனோடு தொடர்புடைய பணிகளை நம்பிக்கொண்டிருக்கிற இந்த மக்கள் அறிந்த தொழில் தொடர்பான முன்னேற்றத் திட்டங்களாக உழவு மாடுகள் வாங்க உதவித் தொகை, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தாட்கோ மூலம் சிறு தொழில் செய்ய கடனுதவி போன்ற திட்டங்கள் செவ்வனே செயல்பட்டு வருவதை இம்மாமன்றம் நன்கு அறியும் அதற்காக இவ்வரசு மேற்கொண்டு உள்ள ஆக்கபூர்வமான திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுப் பணிகளுக்கான பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி அளிப்பதும், குறிப்பாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற அனைத்திந்திய பணியில் சேர முதல்நிலைப் பயிற்சியை சென்னையில் உள்ள பயிற்சி மையம் வழங்குவது இந்த அரசின் தெளிவான திட்டமிட்ட ஆக்கப் பணிக்கான ஆதாரமாகக் கொள்ளலாம் என்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூக ரீதியில் மற்றும் பொருளாதார ரீதியில் ஓரளவுக்கேனும் இம்மக்கள் உயர்ந்த நிலையைத் தொட முயற்சி செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில் எனது ஒரு பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., மற்றும் ஐ.பி.எஸ்., தேர்வுகளில் கலந்துகொள்ளச் செல்லும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் இன்னும் அதிக அளவில் பயன்பெறும் பொருட்டு மாநிலத்தில் வேறு ஒரு பெரிய நகரில், குறிப்பாக திருச்சியில் முன் தேர்வுப் பயிற்சி மையம் ஒன்றை அமைத்திட புரட்சித் தலைவி அவர்கள் அரசு உத்தரவை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில் எல்லாத் தரப்பினருக்கும் அடிப்படைத் தேவையான வீட்டு வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகள் இம்மக்களுக்கு சிறப்பான திட்டங்கள்

வாயிலாக எளிதில் சென்றடையும் வண்ணம் நடவடிக்கைகள் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு, வருங்காலத்திற்கான தொலை நோக்குத் திட்டம் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறியும்போது உள்ளபடியே ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பெருமையடைகிறேன்.

பிற்பகல் *7-15*

தொழில் துறையிலே முன்னேற்றம் காணும் இந்த அரசு, பிற நிறுவனங்களுக்கு இணையாக இம்மக்களை தொழில் அதிபர்களாகவும் உருவாக்கும் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் திட்டங்களை தாட்கோ மூலமாக செய்து, நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைத் தாண்டி சாதனை புரிந்துள்ளது. தாட்கோ மூலம் பயன் அடைந்துவரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களின் சார்பில் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை இவ்வரசுக்குச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில், என்னுடைய பணிவான வேண்டுகோள் ஒன்றையும் இந்த அரசுக்கு சமர்ப்பிக்க விழைகிறேன். தனி நபர் தொழில் முன்னேற்றத் திட்டத்தின்கீழ், National Scheduled Castes and Scheduled Tribes Finance Development Corporation மூலமாக மத்திய அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு பெரிய கடன் உதவிகளை அதிக அளவில் விரைந்து பெற்றுத் தந்திட இந்தத் திட்டத்தின் உதவியை அளித்து அவர்களைச் சென்றடையும் வண்ணம் ஏற்பாடுகள் செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தில் மட்டுமல்லாமல், செவ்வனே செயல்படும் அரசாக இவ்வரசு விளங்குகிறது என்பதை கண்கூடாகக் காண்கிறோம். எல்லா வகையிலும் ஆதிதிராவிட மக்களின் வளர்ச்சிக்காகவும் அவர்களின் திட்டத்திற்காகவும் செயலாற்றும் முதல்வராக அவர்கள் இன்று விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற சின்னப்பநாய்க்கன்பட்டி என்ற கிராமத்தில் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு நீண்டநாட்களாகக் கேட்டு வ்ருகிறோம். அதற்கான செயற்குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது. அதை இந்த ஆண்டு பரிசீலித்து, இந்த ஆண்டே உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு அமைச்சர் அவர்கள் உத்திரவு வழங்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்கு அருகாமையில், லாலாபேட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஆதிதிராவிடர்

மகளிர் விடுதி ஒன்று கட்டித் தரவேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழகத்தில் இன்று இருக்கின்ற மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு ஆதிதிராவிட பழங்குடி இன மக்கள் இருக்கிறார்கள். இன்று இருக்கின்ற நெருக்கடியான நேரத்தில் மக்கள் சலுகைகளைப் பெறுவதற்காக இந்த 18% போதாது. உ. பி.மாநிலத்திலே இன்று இருக்கிற அரசு 21% ஆக உயர்த்தியிருக்கிறது. அதேபோல, இந்த ஆதிதிராவிட மக்களுக்காக என்றென்றும் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற என்னுடைய தலைவியாக இருக்கிற புரட்சித்தலைவி அவர்கள் 25% ஒதுக்கித் தரவேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொண்டு, நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

திரு.போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் என்ற மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்து தங்களுக்கு நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய நாட்டிலே அண்ணல் அம்பேத்கார் அவர்களுக்கு அழகான மணிமண்டபம் கட்டுவதற்கு சென்ற ஆண்டு, இந்தியாவிலே இருக்கிற நான்கு பெரிய தலைநகரங்களிலே ஒன்றான சென்னை நகரத்திலே 5.5 கோடி ரூபாயில் அடிக்கல் நாட்டிய தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்திய நாட்டின் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில் அழகான மணிமண்டபம் வருவதை விரும்பாத சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று அதுசம்பந்தமான வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்கள். இருந்தாலும் நீதி மன்றம், அந்த இடத்திலே மணிமண்டபம் கட்டலாமா வேண்டாமா என்பதைச் சொல்கின்ற அதிகாரத்தை மட்டும்தான் பெற்றிருக்கிறது. எவ்வளவு இடத்தில் கட்டவேண்டும், எப்படிக் கட்டவேண்டும், எந்த விதத்தில் கட்டவேண்டும் என்று சொல்வதற்கு நீதிமன்றத்திற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேறு ஒன்றையும் நான் இந்த நேரத்தில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்திய நாட்டிலே மற்ற இடங்களுக்கு முன்னுதாரணமாக இருக்கின்ற தமிழகத்தில் அந்த மணிமண்டபம் அமைப்பதன் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களின்

விடிவெள்ளியாக இருக்கிற அண்ணல் அம்பேத்காருடைய நினைவுகளைப் போற்றும் வகையில் அந்த இடத்திலே கட்டுவதற்கு *5.5* கோடி ரூபாயை ஒதுக்கி, முன்னுதாரணம் காட்டிய தமிழக முதலமைச்சர் அவர்களுடைய திட்டங்கள், இப்படிப்பட்ட செயல்கள் மூலம் பாதிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில், இப்படிப்பட்ட செயல்களில் சிலர் இப்படி ஈடுபட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் *7-20*

நான் நீதி மன்றத்தைக் கேட்டுக்கொள்வது எல்லாம், உங்களுடைய பணி அது அல்ல. எந்த இடத்தில் எப்படிக் கட்ட வேண்டும் என்கின்ற நிர்வாகத்தில் நீங்கள் தலையிடக் கூடாது. நான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், மணிமண்டபம் விரைவில் கட்டப்பட வேண்டும். *3-4-1994* அன்று அண்ணல் அம்பேத்கார் அவர்களின் சிலையை சென்னை நகரத்திலே திறப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்; தமிழக அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்...

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமமுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டுவதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள். அவர் எவ்வளவு இடம் ஒதுக்கினாரோ அந்த *5* ஏக்கரிலேயே, ஒதுக்கப்பட்ட *5* கோடி ரூபாயிலேயே கட்டப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து, அந்தத் தடையாணை மீது இன்றைக்கு அப்பீல் செய்து இருக்கிறோம் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு இது சம்பந்தமாக தமிழகத்திலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட இனத்தவர்களோடு நேரிலே சந்தித்து பேசுகின்றபோது பெரும் தன்மையோடு 5½ கோடி என்று சொன்னார்கள்; *5* ஏக்கர் நிலம் மட்டுமல்ல, தேவையான இடங்களை எடுத்துக்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு மேலே, தாழ்த்தப்பட்ட மக்கள் *200* பேர்கள் கோடீஸ்வரர்களாக வர வேண்டும் என்பதற்காக திருப்பூர் பனியன் கம்பெனி, முள்ளிப்பாளையம் பனியன் கம்பெனியை துவக்கி

அதற்கான தேர்வுகளும் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அதிலே பணம் படைத்தவர்கள் பினாமி பெயரிலே அதை எடுக்க முயற்சிக்கிறார்கள் என்ற தகவல் பரவலாகப் பேசப்படுகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வரதன், நீங்கள் பேசுகிறபோது, ஏதாவது அதற்கான சில ஆதாரங்கள் இருந்தால் பேசலாம். இப்படிக் காதிலே கேட்கின்ற விஷயங்களை எல்லாம் நீங்கள் சட்டசபையிலே பேசிக் கொண்டிருந்தால், அது சரியாக இருக்காது. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதுபோன்ற தவறு நடந்துவிடக் கூடாது என்பதற்காக மிக உன்னிப்பாக, மிகக் கவனமாக என்னை அடிக்கடி கூப்பிட்டு அறிவுரை தந்து சிறப்பான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். மிக விரைவில் அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அப்படி ஏதாவது இருந்தால் எனக்கு கடிதம் மூலமாக தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் பெட்ரோல் பங்க் வைப்பதற்காக.... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடுகள்) அதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடுகள்) நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் மீண்டும் திரும்பத் திரும்ப பேசிக்கொண்டு இருக்க வேண்டாம். விவாதம் வளர்ந்து கொண்டே போகும்; நேரம் இல்லை. திரு.வி.கே. சின்னசாமி அமர வேண்டும். திரு.வரதன், பேசுங்கள்.

திரு.போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. அடுத்து, தாட்கோ மூலம் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு—தொழில் துவங்க, கடன் உதவி, லாரி, ஆட்டோ போன்ற தொழில் துவங்குவதற்கு நிதி உதவி செய்யப்படுகிறது. மத்திய அரசினுடைய உதவியோடு ஒரு சப்சிடி கொடுத்த பின்னாலும், வங்கிக்கு சென்று பார்க்கும்போது, வங்கி விண்ணப்பத்தை திருப்பி அனுப்பிவிடுகிறது. பொருள் கொடுப்பது இல்லை; கடன் கொடுப்பது

இல்லை. ஏனென்று கேட்டால், பதிலும் சொல்ல மறுக்கிறார்கள். தாட்கோவில் கடன் பெற வேண்டும் என்று முயற்சிக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் வருடக் கணக்கில் அலைந்தாலும், அதற்கு பலன் இருக்கிறதா என்றால், இல்லை. நான் இந்த அரசை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்வது எல்லாம், இந்த நிதியை எந்த வங்கிக்கு ஒதுக்கீடு செய்கிறீர்களோ, அந்த வங்கிகளுக்கு மட்டும் கடன் பெறுபவர்களுடைய பட்டியலை அனுப்பினால், அவர்களும் கடன் கொடுப்பார்கள்; கடன் பெறுபவர்களும் சந்தோஷமாக அதைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு ஜீவன்தாரா கிணறுகள், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 2½ ஏக்கர் நிலம் இருந்தால்தான் கிணறு வெட்ட முடியும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது; விதிகள் இருக்கின்றன. நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சரை கேட்டுக்கொள்வது எல்லாம், தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கு ஒரு ஏக்கர் நிலம் இருந்தாலும், அதற்கு ஜீவன்தாரா கிணறு வெட்டுவதற்கு அந்த விதிகளை தளர்த்திக் கொடுத்து, நீங்கள் அவர்களை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் இலதா பிரியகுமார் பேசுகின்றபோது விடுதிகளைப்பற்றி சொன்னார்கள். இந்த மாதம் 14 ஆம் தேதி டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளிலே எம்.சி. ராஜா விடுதியிலே அம்பேத்கார் சிலை திறக்கப்பட்டது. அன்றைக்கு அங்கே நானும் சென்று இருந்தேன். அந்த விடுதியின் உள்ளே மட்டும் இருந்து அன்று 6 லாரி குப்பைகள் அள்ளப்பட்டு இருக்கின்றன. காலையிலிருந்து மாலை வரை நான் இருந்தேன். சென்னை மாநகராட்சியினுடைய லாரி வந்து, 6 லாரிகள் குப்பைகளை அங்கேயிருந்து அகற்றியிருக்கின்றன என்று சொன்னால், அந்த விடுதியினுடைய நிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், குறை சொல்வதாக எண்ணக் கூடாது. கல்லூரியில் படிக்கிற மாணவர்கள், வயது வந்த அந்த மாணவர்கள் இருக்கிற இடம், அரசுக்குச் சொந்தமான இடம், பல பெரியவர்களை உருவாக்கியிருக்கிற அந்தக் கட்டிடம், இன்றைக்கு குடிசைப் பகுதியாக காட்சி அளிக்கிறது. அரசு என்னதான் பணத்தை முதலீடு செய்து, ரிப்பேர் செய்ய வேண்டுமென்று சொன்னாலும், அந்த அதிகாரிகள், விடுதியை நிர்வகிக்கக்கூடிய வார்டன் போன்றவர்கள் எல்லாம் அதைப்பற்றி கவலைப் படாமல், இன்றைக்கு ஏனோதானோ என்று இருப்பதால் மாணவர்கள் படிக்கிற சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. இதை வருங்காலத்தில் அரசு கருத்தில்

எடுத்துக்கொண்டு அப்படிப்பட்ட பெரிய விடுதிகளையாவது சுத்தம் செய்வதற்கு ஆட்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-25

வெகுதூரத்தில் சென்று படிக்கிற கல்லூரி கல்வி மாணவர்கள் எஸ்.சி./எஸ்.டி. பிரிவைச் சேர்ந்த விடுதி இருக்கிறது. அந்த விடுதியிலிருந்து சென்று படிக்கக்கூடிய மாணவர்களுக்கு 'ஃப்ரீ பஸ் பாஸ்' வழங்கப்படுவதில்லை. அதை மீண்டும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விடுதியில் வார்டனாகப் பணிபுரிகிறவர்கள் 3 ஆண்டுகள் பணிபுரிந்தால் போதும் என்று இருக்கிறது. அந்தப் பணியைத் தொடங்கிய நாளிலிருந்து ரிடையர்மென்ட் ஆகிற வரையில் வார்டனாகவே இருக்கிறார்கள். ஆகவே, அவர்களால் அந்த இடங்களில் விடுதியில் பயில்கிற மாணவர்களுக்குத் தொந்தரவே தவிர, நன்மைகள் இல்லை. அரசின் விதி 3 ஆண்டுகள் வார்டனாக இருக்கிறவர்கள் மீண்டும் ஆசிரியர் பணிக்குத் திரும்ப வேண்டுமென்று விதி இருக்கிறது. அந்த விதியை இந்த அரசு கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தீண்டாமை, தீண்டாமை என்று பேசுகிறோம். தீண்டாமை ஒழிப்பைப் பார்க்கிறபோது பி.சி.ஆர். வழக்குகள்....

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாணையின்படி உத்தரவு போடப்படுகிறபோது எல்லாம் அவர்கள் ஸ்டே வாங்கிக் கொண்டு வந்து பணி செய்கிறார்கள் என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. போளூர் வரதன்: துணைத் தலைவர் அவர்களே, நல்ல காரியங்கள் வருகிறபோது நீதிமன்றத்தில் எதற்குத்தான் ஸ்டே கொடுக்க வேண்டுமென்று விதியில்லாத நீதிபதிகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அனைத்து நீதிபதிகளும் அல்ல, சிலர். நான் சொல்வதற்குக் காரணம், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சமுதாயத்தின் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள், பெற்றோர்களால் சரியான உணவு கொடுக்க முடியாத மாணவர்கள் அங்கே இருக்கிறார்கள். அரசு அவர்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நல்ல திட்டங்களை வைத்திருக்கிறபோது நீதிமன்றத்திற்குச் செல்கிறபோது நீதிபதிகள் இவர்களுடைய தவறுகளை உணர்ந்து அதற்கேற்றவாறு தீர்ப்பு அளிக்கிற நிலை இல்லை. ஆகவே, சொல்கிறேன். அரசு தெளிவாக உத்தரவைப் பிறப்பித்த

பின்னரும் அதற்கு மாறாக வழக்குகளைச் செய்தால் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று இந்த அவையில் நீங்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினால் நீதிமன்றம் இதிலே தலையிட முடியாது. தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய வயிற்றிலே மற்றவர்கள் அடிக்கவும் முடியாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற பட்ஜெட்டிலே 132 கோடி ரூபாய் இந்த மானியக் கோரிக்கைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தேவைக்குக் குறைவாக இருக்கிறதால் இந்த ஆண்டில் கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் ஒதுக்கி இந்த மக்களுக்கு நல்ல திட்டங்களை மேலும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசு அதற்கு முன்வர வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொள்கிறேன். இன்றைக்கு நாட்டிலே தீண்டாமை எங்கே பார்த்தாலும் இருக்கிறது. சட்டமன்றத்தில் நாம் வேண்டுமானால், அரசியல்வாதிகள் வேண்டுமானால், ஜாதி ஒழிந்து விட்டது என்று சொல்கிறோம். ஆனால், பல்வேறு பகுதிகளில் தீண்டாமை என்ற நோய் மிகக் கொடுமையாக இருக்கிறது. பலர் பாதிக்கப்படுகிறார்கள். நித்தம் நித்தம் இன்றைக்குக் கிராமப்புறங்களில் ஜாதி துவேஷங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. காவல் துறையில் அதற்காக தனி செக்ஷன்கள் போட்டு நாம் என்னதான் அவர்களை விசாரிக்கச் சொன்னாலும் அந்தக் காவல் பணியில் ஈடுபட்டிருக்கிற காவல் துறையைச் சார்ந்தவர்களே ஜாதியைப் பார்க்கிறார்கள். பி.சி.ஆர். வழக்கு என்று நாம் சொல்கிறோம். அந்த வழக்கை அவர்கள் துரிதப்படுத்துவதில்லை. மாறாக என்னை ஜாதியைச் சொல்லி திட்டுகிறான் என்று வழக்கு கொடுத்தால். . .

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பொதுவாகச் சொல்வது சரியில்லை. குறிப்பிட்டுச் சொன்னால் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கிறோம். குடிதாங்கியைப் பற்றி உறுப்பினர் சொன்னார். நடவடிக்கையெடுத்து நல்ல முறையில் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். எனவே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பொதுவாகச் சொன்னால் சரியாக இருக்கா என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பட்டியல் சொல்ல வேண்டுமென்றால் எனக்கு அதிக நேரம் கொடுப்பீர்களானால் பட்டியல் போட்டுச் சொல்ல முடியும். பொதுவாக இன்றைக்கு இருக்கிற நிலையை அரசுக்குச் சுட்டிக்காட்டுகிறேன். அப்படி இல்லையென்றால் மிக்க மிகழ்ச்சி.

இன்றைக்கு இதைச் சொல்வதற்குக் காரணம், நம்முடைய மண்டல் கமிஷன் வந்த பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் இங்கே நினைவுகூர விரும்புகிறேன். ஒரு பதவிக்கு தாழ்த்தப்பட்ட இனத்தில் சரியான தகுதியுள்ள கேன்டிடேட் கிடைக்கவில்லை என்றால், அடுத்த ஆண்டு அந்தப் பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்கிற நிலை மண்டல் கமிஷன் வருவதற்கு முன்பு இருந்தது. ஆனால் மண்டல் கமிஷன் வந்த பிறகு இன்றைக்கு அப்படி நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த அவையின் மூலமாக இதைச் சுட்டிக்காட்டி மீண்டும் பழைய முறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்படுகிற இடங்களுக்கு சரியான ஆட்கள் கிடைக்காதபோது, எப்படி அடுத்த ஆண்டு அந்த இடத்தைப் பூர்த்தி செய்வீர்களோ அதே முறையைப் பின்பற்றி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொது மற்றும் கூட்டுத் துறை நிறுவனங்களிலே 18,19 விழுக்காடுகள் வேலையிலே அமர்த்தப்படுகின்றபோது, அது நிரப்பப்படுவதில்லை. அதற்கு மாறாக தவறான பட்டியலை அரசுக்குக் கொடுக்கிறார்கள். கூட்டுப் பொதுத் துறை நிறுவனங்களில் இருக்கிற அந்த பர்சன்டேஜ் முறையைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக, முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டியை அமைத்து, ஆய்வை நடத்தி, எங்கெல்லாம் அப்படி இருக்கிறதோ, அவற்றைக் கண்டறிந்து அவர்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்கவேண்டும்.

பிற்பகல் 7-30

அதற்கு மேலே, இந்தத் துறையை கூடுமானவரையில் தமிழக முதலைமமைச்சர் அவர்கள் தன்னுடைய பொறுப்பில் எடுத்துக் கொண்டால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிறைய நன்மைகள் போய்ச்சேருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களை இந்தத் துறைக்குப் போடுகின்றபோது, மற்ற அதிகாரிகளும் இதர அரசியல்வாதிகளும் அவ்வளவு சரியான ஒத்துழைப்பு கொடுப்பதில்லை என்பதால்தான் நான் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் கீழே இந்தத் துறை இருக்கிறது என்று சொன்னால்......

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் ஒத்துழைப்பு கொடுக்கிற காரணத்தால்தான் இன்றைக்கு இநதச் சாதனைப் பட்டியலைப் பார்க்கலாம். கல்வித்துறையில் எந்த அளவிற்கு பர்சன்டேஜை நாம் பெற்றிருக்கிறோம். மேலும் தொழிற்துறை மற்றும் எல்லாத்

துறைகளிலும் வரலாறு காணாத சாதனையை முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்கீழ் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1 நிமிடத்திலே பேசி முடித்துவிடுங்கள்.

திரு. போளூர் வரதன்: 2 நிமிடங்கள் கொடுங்கள். நான் கூறிக்கொள்வது, இந்தத் துறையிலே தாழ்த்தப்பட்டவர்கள் வருவதாலே அவர்கள் ஒத்துழைப்பதில்லை என்பது ஒட்டுமொத்தமாக இல்லை. இந்தத்துறை முதலைமைச்சருடைய கையிலே செல்கிறது என்று சொன்னால், நேர்மையாக, வேகமாக இந்த மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் நிறைய கிடைக்கும் என்ற ஆதங்கத்தோடு சொல்கிறேன். அவ்வளவுதான்.

அதுமட்டுமல்ல, இன்றைக்குப் பெருநகரங்களிலே படிக்கின்ற மாணவர்கள், கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் மாலை நேரங்களிலே அவர்கள் வெகு தூரத்திற்குக் கல்லூரிக்குச் சென்று வருகின்றபோது, டயர்டாக வருகிறார்கள். விடுதியிலே எதுவும் கொடுப்பதில்லை. அவர்களுக்கு மாலை நேரங்களிலே டீ, காபி வழங்கி அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அதேபோன்று மாலை நேரங்களிலே அவர்கள் ஃப்ரீயாக பயில்வதற்கு டைப்ரைட்டிங், கம்ப்யூட்டர், ஷார்ட்ஹேண்ட் போன்ற பயிற்சிகளைக் கொடுத்து, அவர்களுக்கு அந்தப் படிப்பையும் கற்றுத் தருவதற்கு அரசு முன்வரவேண்டும்.

அதேபோல், பல பகுதிகளிலே இன்றைக்கு வீட்டுமனைப்பட்டா பற்றிப் பேசப்படுகிறது. தொன்றுதொட்டு, 10,20 தலைமுறையாக ஒரு கிராமம் தோன்றிய நாள் முதல், அந்தக் காலனி அங்கே இருக்ககிறது. அந்தக் காலனி மக்கள் இருக்கிற பகுதியை அரசு நத்தம் புறம்போக்கு என்று அறிவித்திருக்கிறது. இன்றைக்குத் தொகுப்பு வீடுகளைக் கட்டவேண்டும் என்று நாம் சொல்கிறபோது, பட்டா இருக்கிறதா என்று சட்டமன்ற உறுப்பினர் கேட்கிறார், பி. டி. ஓ. கேட்கிறார், கலெக்டர் கேட்கிறார், ஆனால், அவர்கள் காலந்தோறும் அதே இடத்திலேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உனக்குப் பட்டா இல்லை என்று சொன்னவுடனே, அந்த மக்கள் பரிதவிக்கிறார்கள். அரசும், தமிழக முதலமைச்சரும் இதற்கு ஒரு முனைப்பான உத்தரவைப் போட்டு, சர்வே டிபார்ட்மென்ட் மூலம் அவர்களுக்குப் பட்டாக்களை வழங்கவேண்டும் என்று உத்தரவைப் போட்டிருந்தாலும், சர்வே டிபார்ட்மெண்டிலே சென்று பட்டா கேட்டால், இந்த ஆண்டுக்கு வேண்டும் என்று சொன்னால், 4 ஆண்டுகளுக்கு முன்னாலே கொடுத்தால்தான் அந்த பேப்பர் 'மூவ்' ஆகிறது.

அங்கே போகும்போது, ஆர்.ஐ. இல்லை என்று சொல்கிறார்கள். தாசில்தார் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இது தனி செக்ஷன், தாசில்தார் நியமிக்கவில்லை என்று சொல்கிற நிலைமை இன்றைக்கு எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. குறிப்பாக என் தொகுதியிலே இந்த நிலைமை இருக்கிறது. இதை மாற்றியமைத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ, அது நத்தம் புறம்போக்காக இருந்தாலும் சரி, ஏரிப் புறம்போக்காக இருந்தாலும் சரி, மேய்க்கால் புறம்போக்காக இருந்தாலும் சரி, எந்தப் புறம்போக்காக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கான உரிமத்தை உடனடியாக வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மேலே, இன்றைக்கு அரசு நல்ல திட்டங்களை அறிவிக்கின்ற போது, வீட்டு மனை இல்லாதவர்களுக்கு அரசு பணம் கொடுத்து வாங்கி, வீட்டு மனைகளை வழங்குகிறது. இதற்குத் தனியார் நிலத்தை எடுக்கின்றபோது, அரசாங்கம் பணத்தைக் கோர்ட்டிலே கட்டுகிறது. அதிகாரிகளும் சரி என்று சொல்லிவிட்டு, நிலச் சொந்தக்காரர்களைத் தூண்டிவிட்டு, வழக்குமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுங்கள், நிலத்தைக் கொடுக்காதீர்கள் என்று சொல்கிறார்கள். இப்படிப் பல கிராமங்களிலே அரசு கொடுக்கின்ற சலுகைகள் உரிய நேரத்திலே போய்ச் சேருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, தமிழக அரசு இதைக் கருத்தில் எடுத்துக் கொண்டு, நீதிமன்றத்திலே பணத்தைக் கட்டியவுடனே, யாருடைய நிலமாக இருந்தாலும், அந்த நிலத்தைப் பிரித்து அவர்களுக்குக் கொடுப்பதற்கு உண்டான வழிமுறைகளை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 7.31-க்கு நீங்கள் 2 நிமிடங்கள் வேண்டும் என்று கேட்டீர்கள். இப்போது 7.34 ஆகிறது. நான் பெருந்தன்மையாக 1 நிமிடம் சேர்த்தே கொடுத்திருக்கிறேன். நீங்களும் பெருந்தன்மையாக, இத்தோடு பேசி முடித்துவிடலாம்.

திரு. போளூர் வரதன்: *கடைசி பாயின்ட். அரசு அலுவலர்கள் நலச் சங்கம் என்று எஸ்.சி./எஸ்.டி. பிரிவிலே இன்றைக்கு நலச் சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நலச்சங்கங்களை அரசு அங்கீகரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த நலச் சங்கங்கள் மூலமாக நீங்கள் மாலை நேரங்களிலே அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நல்ல திட்டங்கள் கிராமங்கள்தோறும் நன்றாகச் செயல்படுத்தப்படுகிறதா, சரியாகச் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்கின்ற குழுவிலே அவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.*

எஸ்.சி./எஸ்.டி. ஹரிஜன் வெல்பேர் கமிட்டிகள், ஸ்டேட் கமிட்டியும் மாவட்ட அளவிலே அமைக்கின்ற கமிட்டிகளும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அமைக்கப்படவில்லை. அதை அமைத்து தாழ்த்தப் பட்ட மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

பிற்பகல் 7-35

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள் பேசியபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். பனியன் பேக்டரி பினாமியாகத் தருவதாகச் சொன்னார்கள். நான் அவருக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் ஏழை எளிய அரிசனங்களுக்காக அந்தச் சமுதாயத்தை ஊக்குவிக்க வேண்டுமென்ற அடிப்படையில் பெட்ரோல் பங்குகளை அவர்களுக்கு இனாமாகத் தருகின்றார்கள். பல்வேறு சலுகைகளைத் தருகின்றார்கள். (குறுக்கீடு) நான் குற்றம் சொல்லவில்லை. நான் இதில் மத்திய அரசின்மீது குற்றம் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவரே பொறுமையாகக் கேட்கவேண்டும். நான் மத்திய அரசாங்கம் மீது குற்றம் சொல்லவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சொல்வதைச் சீக்கரமாகக் சொல்லுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி: பெரியார் மாவட்டத்தில் சத்திய மங்கலம் வட்டத்தில் புஞ்சைப்புளியம்பட்டியில் இப்போது பெட்ரோல் பங்கிற்கு மத்திய அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது. இதிலே பினாமியாக ஒரு அரிஜன் பெயரிலே ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒரு நண்பர் பெயரிலே பெட்ரோல் பங்கிற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த ஊரிலே வந்து விசாரித்தால் அவர் பெயரை யாரும் சொல்லமாட்டார்கள். ஒரு வசதி படைத்தவருடைய பெயரைச் சொல்லுகிறார்கள். அவர் தன்னுடைய இடத்தையும் கொடுத்து, எந்த அதிகாரமும் பெறாமல், அனுமதியும் பெறாமல் அவர் தன்னுடைய இடத்திலே பெட்ரோல் பங்க் அமைத்திருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் தவறாகப் பயன்படுத்தியிருப்பதாகச் சொல்லுகிறீர்கள். அவ்வளவுதான். நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். அவரும் சொல்லியிருக்கிறார். திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: நான் சொல்ல வருவது திருப்பூரிலே இருக்கிற பனியன் பேக்டரியிலே அரசு தவறு செய்கிறது என்று சொல்லவில்லை. அதிகாரிகள் பினாமி பெயரிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். அதைக் கண்காணித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேர்வதற்கு நீங்கள் கருணை காட்டவேண்டுமென்றுதான் கேட்டேனே தவிர, அரசு பினாமியாக அது செயல்படுகிறது என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வரதன், நீங்கள் ஏற்கனவே சொல்லிவிட்டீர்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சரும், அவருடைய பதிலைச் சொல்லிவிட்டார்கள். இத்தோடுபேசி முடித்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. வி. கே. சின்னசாமி உட்காரவும். திரு. போளூர் வரதன், நீங்களும் உட்காரவும். திரு. ஏ. தா. பொன்னுவேலு. (குறுக்கீடுகள்) அவர் தெளிவாக அந்த ஊரைச் சொல்லியிருக்கிறார். திரு. சின்னசாமி நீங்களும், போளூர் வரதனும் மாறி மாறிப் பேசிக் கொள்கின்ற இடம் இந்த அவை அல்ல. அவர்தான் கேட்டிருக்கிறார். அவரிடம் அந்த பர்டிகுலர்ஸ் எல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். இத்தோடு பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். திரு. சின்னசாமி, உட்காருங்கள். திரு. ஏ. தா. பொன்னுவேலு.

திரு. ஏ. தா. பொன்னுவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் துவக்குவதற்கு முன்பாக, புரட்சித் தலைவியினுடைய அரும் பணிகளை, நாம் எல்லாம் ஆலயமாக வணங்கிக் கொண்டிருக்கின்ற அந்த அருந்தவப் புதல்வியை ஒரு பாடலாகப் பாடி என்னுடைய உரையைத் துவக்க ஆசைப்படுகிறேன்.

'பச்சை மாமலை மேல் வானம்
பளிங்கென உதிக்கும் திங்கள்
மெச்சிடும், இமயம் யாவும்
மிஞ்சினாய் புகழில் அம்மா!
இச்சபை தவிர யான்போய்
இந்திய தேசம் ஆளும்
அச்சபை சிறிதும் வேண்டேன்
அம்மா, உன் பாதம் சரணம்.

யாருமே இணையு மில்லை
இமயமாம், புகழின் எல்லை,
கூறுமுன், வார்த்தை வேதம்
போற்றினேன், உந்தன் பாதம்
பேரொளி அன்னையே!
உன்னையே! போற்றுகின்றேன்
அருளுக, கருணை அம்மா,
அனுதினம், வணங்குவேனே!
பச்சை மாமலைமேல் வானம்
பளிங்கென உதிக்கும் திங்கள்,
(குறுக்கீடு)

பிற்பகல் 7-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பொன்னுவேலு, கொஞ்சம் கவனியுங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, உட்காருங்கள். திரு. சின்னசாமி, உட்காருங்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் ஏதோ சொல்லவருகிறார். அவர் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. உறுப்பினர்கள் பாடலாம், தாளம்தான் போடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொன்னுவேலு சீக்கிரம் சப்ஜெக்டுக்கு வந்து பேசி முடித்து விடுங்கள்.

திரு.ஏ.தா.பொன்னுவேலு:

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்ற வள்ளுவர் பெருமானுடைய திருக்குறளுக்கு இணங்க புரட்சி தலைவியினுடைய பெருந்தன்மையே ஒரு புது இலக்கணமாகத் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது. தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும், மறுபடியும் தர்மம் வெல்லும் என்பதற்குப் புரட்சி தலைவியையே ஒரு உதாரணமாக எடுத்துக் கொண்டால் அது மிகையாகாது. வீர சுதந்திரம் பாடிய பாரதியார் அவர்கள் நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத செருக்கும் என்று பாடிய அந்தப் புதுமைப் பெண்ணாக, தமிழகத்தினுடைய தலைவிதியை மாற்றி இன்றைக்குத் தர்ம தேவதையாக, தாய் குலத்தின் தனிப்பெரும் தலைவியாக,

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய தனிப் பெரும் தலைவியாக இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள். புரட்சித் தலைவி அவர்களின் பொது வாழ்வு, வருங்கால அரசியல்வாதிகளுக்கு ஒரு எடுத்துக் காட்டு. புரட்சித் தலைவி அவர்களின் லட்சிய நோக்கு, தமிழக மக்களின் வாழ்க்கைக்கு ஒரு நல்ல வழிகாட்டியாகும். போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும், எனது பணி மக்கள் சேவையே என்று மன உறுதியோடு பாடுபடுகின்ற புரட்சித் தலைவி ஒரு தெய்வீகத் திருமகள்தான்.

தேசத்தின் நலன் கருதிய மகாத்மாவை இந்த நாடு மறக்கவில்லை. உலகத்தின் ஒற்றுமைக்காக சமுதாயத்திற்காகப் பாடுபட்ட நேரு பிரானை இந்த நாடு மறந்து விடவில்லை. இந்திய மக்களின் நல் வாழ்விற்காகத் தன் உயிரையே அர்ப்பணம் செய்த அன்னை இந்திரா காந்தியின் நினைவுகள் இன்றும் நிலைத்து நிற்கின்றன என்பதை மறந்து விட முடியாது. அப்படித்தான் பொது வாழ்விலே லட்சிய வழிகளைக் கடைப்பிடித்து, தணியாத புகழ் பெற்ற மூத்த தலைவர்கள் போல புரட்சி தலைவியின் மக்கள் சேவையும் இந்த நாட்டின் சரித்திர புருஷர்கள் வரிசையிலே இடம் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை என்று இந்த நேரத்திலே நிச்சயமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

“எட்டுத் திசையும் வென்று எட்டாத இமயத்தை தொட்டு
ஒலிக்கின்ற தூய புகழ் நம் தலைவி
மொட்டும் மலர்ந்துவிடும் முழுகுளிர்ச்சி புன்னகையால்
பட்ட மரக்கிளைகள் பசுமையிலை துளிர்த்துவிடும்
வெட்டவெளி பொட்டலிலும் விளைந்திடுமே நற்பூக்கள்
பட்டத்து மகராசி பார்வையின் குளிர்ச்சியிலே
வெட்டும் மின்னலுடன் வெடிக்கும் இடியொலியும்
சற்றே தயங்கிவிடும் தங்க தலைவியின் வருகை கண்டு
எட்டு திசை போதாது எண்ணாற்றல் காட்டுதற்கு
கத்தும் கடல் கடந்தும் காட்டிடுவேன் பராக்கிரமம்
வெட்டும் மின்னலையும் வெடிக்கும் இடியோசையையும்
பட்டுத் தெறித்திடும் பார்வையிலே முறிந்திடும் என
சுட்டு விரலசைத்து சொல்கின்ற தலைவியின் பொற்பாதம்
வணங்கி” என் சிற்றுரையை துவக்குகிறேன்.

(சிரிப்பு) (குறுக்கீடு)

பிற்பகல் 7-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பொன்னுவேலு நீங்கள் சரியாக 7-38க்கு ஆரம்பித்திருக்கிறீர்கள். இப்பொழுது 7.45. இதிலே உங்கள் நேரம் முடிந்திருக்கிறது. நீங்கள் 2 நிமிடம் மட்டும் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஏ. தா. பொன்னுவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையைத் துவக்குவதற்கு முன்பாகவே நேரத்தைக் கழித்துவிட்டதால் சுருக்கமாக என்னுடைய தொகுதியைப் பற்றிக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

'வானத்தின் ஒளி நிலவாய் வாழ்கின்ற எம்தலைவி
வரகூர் தொகுதியை வாழ்வித்த தவப்புதல்வி, தேனொத்த
ஆட்சியிலே திகட்டாத உதவிகளை
நாள்தோறும் செய்து நற்பெயரை பெற்ற தாய்
பேருந்தே செல்லாத ஊர்களுக்கு பெருவிருந்தாய்
தேரூரும் காட்சியென செல்லும் புது பேருந்துகள்
மருத்துவ மனைக்காக மனங்கவரும் கட்டிடங்கள்
மாணவர் விடுதிகளும், மகிழ்வோடு செய்திட்டாய்
வரட்சிமிகு வரகூரின் வாட்டத்தை போக்கிடவே
புரட்சித் தலைவியின் பொன்னான திட்டங்கள்
வரவேற்று போற்றி வணங்குகின்றேன் திருவடிகள்
நிரந்தர முதல்வராக நிலைப்பெற்று வாழியவே!'

இன்றைக்கு தமிழகத்திலே மிகவும் பின் தங்கிய தொகுதி என்றால் அது வரகூர் தொகுதி என்று கூறுவார்கள். வரகூர் தொகுதியிலே எந்தக் கட்சி வெற்றி பெறுகிறதோ அந்தக் கட்சிதான் இந்த ஆட்சி அமைக்க முடியும் என்பதற்கேற்ப அந்தத் தாய்குலத்தின் தங்கத் தலைவியினுடைய அனைத்து மக்களும் அவர்களுடைய விசுவாசிகளாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. இன்றைக்கு அமரர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாரிசாக விளங்கிக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரம்பலூரைத் தலைநகரமாக வைத்து திருவள்ளுவர் மாவட்டத்தை அமைக்க வேண்டும் என்று கூறிச் சென்றார்கள். அந்த வழியிலே சிறிதும் பிறழாமல் இருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த நிதியாண்டிலேயே பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டமாக

அமைக்க வேண்டும் என்று தங்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்கி வேண்டிக்கொள்கிறேன். அதோடு மிகவும் பின்தங்கிய பகுதிகள் இருப்பதால், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் போன்ற பகுதிகள் மிகவும் தொலைவில் இருப்பதால் அதைப் பிரித்து பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டால்தான் அந்தப் பின் தங்கிய பகுதிகள் மிகவும் முன்னேற்ற நிலையை அடையும் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒரு முக்கிய வேண்டுகோளாக வைக்கிறேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு என்னுடைய தொகுதி மிகவும் பரந்த தொகுதியாக இருக்கிறது. காரணம் இரண்டு ஒன்றியங்களும் சேர்ந்து நீண்ட தொகுதியாக இருப்பதால் அங்கு அதிகமாக ஆதிதிராவிடர்கள் வாழ்வதால் சரியான திட்டங்களை முன்பு செய்து கொடுக்க முடியவில்லை. புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்ற பிறகுதான் அங்கு சாலைகளும், பேருந்து வசதிகளும், தண்ணீர் வசதிகளும் நிறைவு பெற்றிருக்கின்றன என்பதைப் பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதோடு மட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியிலே ஆலத்தூர் ஒன்றியத்திலே இலுப்பகுடிக்கும் கொளத்தூருக்கும் இடையே மருதையாறு இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் அரியலூருக்கும் போக முடியவில்லை; பெரம்பலூருக்கும் வர முடியாமல் தர்மசங்கடமாக இருந்துகொண்டு இருக்கிறார்கள். இதைக் கடந்த நிதியாண்டிலேயே கூறியிருக்கிறேன். நம்முடைய தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி அதைப் பரிசீலனை செய்து உடனடியாக அதற்கு ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று மன்றாடி வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது.) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சிறப்பான மாமன்றத்திலே இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்ததற்கு என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தையும், இந்தத் தமிழகத்தினுடைய விடிவெள்ளி, தானைத் தலைவி தங்கத் தலைவியினுடைய பொற்பாதம் வணங்கி என்னுடைய உரையை முடித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் *7-50*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் பெ. வீரபாண்டியன்.

**டாக்டர் பெ. வீரபாண்டியன்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு

நான் மட்டற்ற மகிழ்சியடைகிறேன். நீரை நோக்கிச் செல்வன உயிர்கள்; நிலத்தை நாடி நிற்பன பயிர்கள் ஏரைப் பார்த்து நடப்பவர் உழவர்; இது இயற்கை. ஆனால் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியோ உயிர்களை நோக்கி ஓடி வரும் நீர்; பயிர்களைத் தாங்கி பாய்ந்து வரும் நிலம்; உழவனை நோக்கி ஊர்ந்து வரும் ஏர். புரட்சித் தலைவியின் இந்த நல்லாட்சியில் ஆதி திராவிடர்கள் எந்த அளவில் நன்மை அடைந்திருக்கிறார்கள் என்பதை ஒருசில உதாரணங்களோடு இந்த மானியக் கோரிக்கையில் நான் பங்கெடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதி திராவிடர் வகுப்பில் பிறந்த வழக்கறிஞர்கள் பி.எல்.. முடித்துவிட்ட பிறகு அவர்கள் சிறந்த வழக்கறிஞர்களாக வரவேண்டும் என்ற காரணத்தால் 21 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு 2 பி.எல். பட்டதாரிகளை ஆதி திராவிடர் வகுப்பிலிருந்து தேர்வு செய்து அவர்களுக்கு ஒரு சிறந்த வழக்கறிஞரை வைத்து அவர்களுக்கு பயிற்சி கொடுத்து அந்த இன மக்களுக்கு மட்டுமல்ல இந்த சமுதாயத்தில் அவர்கள் சிறந்த வழக்கறிஞர்களாக பாடு படவேண்டும் என்ற நோக்கத்தில் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த 4 வருடத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு வழக்கறிஞருக்கு 500 ரூபாய் வீதம் ஊக்கத் தொகை பயிற்சி கொடுப்பவருக்கு மாதத்திற்கு 2500 ரூபாய் சம்பளம் கொடுத்து இந்த ஆதிதிராவிட பி.எல். பட்டதாரிகள்' சிறந்த வழக்கறிஞர்களாக வரவேண்டும் என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை ஏற்படுத்தியிருப்பதை உள்ளபடியே வரவேற்கிறேன்.

இவ்வளவு சிறப்பான திட்டம் இங்கே நடந்து கொண்டிருக்கும்போது பக்கத்து மாநிலமான கர்நாடகாவில் மத்திய அரசு ஒரு தனி திட்டம் கொண்டு வந்தார்கள். அது Special Component Scheme. மத்திய அரசு 85 கோடி ரூபாய் கொடுத்தது. ஆனால் அவர்கள் அதைப் பயன்படுத்தாமல் 3 கோடி ரூபாய்தான் பயன்படுத்தி மீதி 82 கோடி ரூபாயை சரண்டர் செய்து விட்டார்கள். ஆனால் கர்நாடக மாநிலம் அதற்காக கஷ்டப்படவில்லை, மத்திய அரசும் அதை கண்டிப்பதாகத் தெரியவில்லை. (குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடகா சட்டமன்றத்தில் பேசியதை... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்றால் கடைசியில் கேட்டுக் கொள்ளலாம். (குறுக்கீடு)

டாக்டர் பெ.வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலம் எந்த அளவிலே செயல்படுகிறது என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பது தவறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. டேனியல்ராஜ், நீங்கள் கிளாரிபிகேஷன் என்றால் கடைசியில் பேசிக்கொள்ளலாம். உட்காருங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: கர்நாடகா மாநிலத்தைப் பற்றி இந்த அவையில் விவாதிக்கவேண்டாம். அதை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் பார்க்கிறேன்; புரெசீடிங்சைப் பார்க்கிறேன்; உட்காருங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அளவிலேயே மகளிருடைய கல்வித் தரம் 54 சதவீதம்தான் இருக்கிறது. மிக வளர்ச்சி அடைந்த 7 நாடுகள் (ஜி.7) என்ற நாடுகள் கிட்டத்தட்ட 100 சதவீதம் எட்டிவிட்டன. ஆனால் இந்தியா பெண்கள் கல்வியிலே 54 சதவீதம்தான் இருக்கிறது. அதிலே குறிப்பாக ஆதி திராவிட மாணவிகளுடைய படிப்பு விழுக்காடு மிக மிகக் குறைவாக இருக்கிறது என்பதை டாக்டர் புரட்சித் தலைவி அறிந்துள்ளார். பெரும்பாலான ஆதி திராவிட பெண் குழந்தைகளை அவர்களது பெற்றோர்கள் முதல் வகுப்பு; இரண்டாம் வகுப்பு படித்து விட்டு பிறகு 3 ஆம் வகுப்பு, 4 ஆம் வகுப்பு, 5 ஆம் வகுப்புக்கு அனுப்பி வைக்க மாட்டார்கள். ஆனால் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அந்தக் குழந்தைகளுக்கு படிப்பு அளிக்கவேண்டும், டிராப் அவுட்ஸ் இருக்கக்கூடாது என்ற காரணத்தால் 3 ஆம் வகுப்பு பாஸ் செய்தால் 500 ரூபாய் வருடத்திற்கு; 4 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றால் 500 ரூபாய்; 5 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றால் 500 ரூபாய் என்று தருகிறார்கள். அதுவும் இல்லாமல் கிராமத்தில் இருக்கும் அந்தப் பெண் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கவேண்டும் என்ற காரணத்தால் 6 ஆம் வகுப்புக்கு சேரும் நேரத்தில் மாதம் 100 ரூபாய் கொடுக்கும் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருப்பது ஆதி திராவிட மக்களிடையே கல்வியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. வேறு எந்த ஆட்சியும் செய்யாத ஒரு திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது தமிழகத்தில் உள்ள அத்துனை ஆதி திராவிட

மக்களும் புரட்சித்தலைவியை தங்களின் குலக் கொழுந்தாக நினைத்து வாழ்த்திக் கொண்டிருக்கின்றனர். திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு இந்தத் திட்டத்தை தந்ததற்கு நன்றி.

பெரும்பாலும் வெண்தாடி வேந்தர் என்று பெரியாரை நாம் சொல்லுவது உண்டு. வைக்கம் வென்றவர் என்று அவர்களைச் சொல்லுவோம். ஏன் வைக்கம் வென்றார் என்றால் கேரள மாநிலத்திலே வைக்கத்திலே ஆதி திராவிடர்கள் வந்து கோவிலுக்குள்ளே போகக்கூடாது, புகுந்தால் பாவம், தீட்டுப் பட்டு விடும் என்ற நிலை இருக்கும்போது பெரியார் அவர்கள் 3 நாள் இடைவிடாமல் ஆதி திராவிடர்கள் நிச்சயமாக அந்தக் கோவிலுக்குள் செல்லவேண்டும் என்று நடு ரோட்டில் அவர் தவம் கிடப்பதைப் போல் இருந்தார். மழை பொழிகிறது; இடுப்பளவு தண்ணீர் இருந்தும் பெரியார் அவர்கள் தன்னுடைய கோரிக்கையை நிறைவேற்றியே தீரவேண்டும் என்ற காரணத்தால் 3-வது நாள் பெரியார் அவர்கள் ஆதி திராவிட மக்கள் அத்தனை பேரையும் அழைத்துச் சென்று கோவிலுக்குள் பிரவேசம் செய்து ஆண்டவனை தரிசிக்க வைத்தார் என்ற காரணத்தால்தான் பெரியாருக்கு வைக்கம் வீரர் என்ற பட்டத்தை நாம் அளித்து இருக்கிறோம். புரட்சித் தலைவி அவர்கள் ஆகம கல்லூரியை ஏற்படுத்தி, 18 விழுக்காடுகளை அவர்களும் பெறவேண்டுமென்று ஏற்படுத்தி ஆதிதிராவிடர்களை புரோகிதர்களாக வர வழி செய்துள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் செய்ததை, பாட்னாவில் இதைப் பின்பற்றி ஒரு ஆதிதிராவிட புரோகிதரை அங்குள்ள ஒரு கோயிலுக்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. ஆதி திராவிடர்கள் வாழவே வழியில்லாமல், உடுக்க உடை இல்லாமல், படிக்கக் கல்வி இல்லாமல் இருக்கும் இந்தச் சூழ்நிலையில் அவர்களும் தொழில் அதிபர்களாக வரவேண்டுமென்ற காரணத்தால்தான், 'பின்னலாடை தொழிற்சாலையை' ஏற்படுத்தி, ஏற்றுமதிக்கு உண்டான பனியன்களை தயாரிப்பதற்கு 200 கோடி ரூபாயை அதற்கு ஒதுக்கீடு செய்து, 200 தொழில்அதிபர்களை ஏற்படுத்தும் நிலையினை புரட்சித் தலைவி செய்தது. தமிழகத்திலே புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இவ்வாறு ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பது உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கிறது.

பிற்பகல் 7-55

அதுமட்டுமல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி 22 ஆண்டுகள் ஆகின்றன. இப்போது புரட்சித் தலைவி அவர்கள், தன்னுடைய கட்சியினுடைய தொண்டர்களுக்கும்,

நிர்வாகிகளுக்கும் ஒரு கட்டளை இட்டிருப்பது, நீங்கள் "தயவுசெய்து ஆதிதிராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்களுக்கெல்லாம் நம்முடைய கட்சித் தொண்டர்கள் உதவி செய்யவேண்டுமென்ற கட்டளை" இட்டிருப்பது, எந்தச் கட்சியின் தலைவரும் இதுவரையில் இதுபோன்று கட்டளை இட்டதே கிடையாது. அதுமட்டுமல்ல, "வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள்" என்பதை புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் "வறுமையை ஒழிப்பதே தன்னுடைய வாழ்வின் குறிக்கோள்" என்று கூறியிருப்பது, தமிழக மக்களிடையே மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது. இப்போது எல்லோரும் பேசும்போது அம்பேத்காருக்கு நினைவாலயம் எழுப்பியது; அம்பேத்காருக்கு, அவருடைய பெயரில் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஏற்படுத்தியது பற்றியெல்லாம் சொன்னார்கள். ஒன்றை மட்டும் சொல்லுகின்றேன். உத்திரப்பிரதேசத்திலுள்ள மீரட்டில் ஒரு பூங்காவில் அம்பேத்காருக்கு ஒரு சின்ன சிலை இருந்தது. அந்த சின்ன சிலையை எடுத்துவிட்டு பெரிய சிலை வைக்கலாம் என்று அங்கே ஒரு ஆயத்தம் செய்தார்கள். ஆனால் அங்கே மீரட்டில், சின்ன சிலையை எடுத்துவிட்டு பெரிய சிலையை அங்கே வைக்கக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்து, அங்கே துப்பாக்கிப் பிரயோகமே நடந்தது. அதே காலகட்டத்தில் தமிழகத்தில் புரட்சி தலைவி அவர்கள் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் அவர்களுக்கு நினைவாலயம் எழுப்பி இங்கே மக்களுடைய பெரும் அன்பைப் பெற்றார்கள்.

அதேபோன்று அம்பேத்காருடைய பெயரில் 'டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்' ஒன்றையும் ஏற்படுத்தினார்கள். இதுவும் எந்தக் கால கட்டத்தில் என்றால், மரத்வாடா பிரச்சினையின்போது, கல்வியில் மேலோங்க வேண்டுமென்றும்; ஒவ்வொருவரும் படித்து ஆளாக வேண்டுமென்ற காரணத்தினால், அம்பேத்கார் அவர்கள் பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார். ஒரு பள்ளி, இரண்டு பள்ளி, மூன்று பள்ளி என்று, 100, 200, பள்ளிகளுக்கு மேல் உறுவெடுத்தது. அவர் பல கல்லூரிகளைத் தொடங்கினார். எனவே, இருக்கின்ற "மரத்வாடா யூனிவர்சிட்டிக்கு" "அம்பேத்கார் யூனிவர்சிட்டி" என்று பெயர் வைக்கவேண்டுமென்றதும் எல்லோரும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். எதிர்ப்பு தெரிவித்தது மட்டுமல்ல; பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பல பஸ்களைக் கொளுத்தினார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. ஆனால், அதே காலகட்டத்தில், மரத்வாடாவிலே மீரட்டில் போராட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, அதே காலகட்டத்தில் மாண்புமிகு புரட்சித்

தலைவி அவர்கள் இங்கே டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஒன்றை அம்பேத்கார் பெயரிலே ஏற்படுத்தினார். தமிழக மக்களுடைய பெரும் அன்பைப் பெற்றார்கள். அது மட்டுமல்ல. ஒரு சிறு எதிர்ப்புகூட புரட்சித் தலைவிக்கு இங்கே வரவில்லை.

டாக்டர் அம்பேத்கார் என்று சொல்லும்போது ஒரு உண்மையை நான் சொல்லித்தீரவேண்டும். இந்த மாமன்றத்திலே, அம்பேத்காருக்கு சிலை வைத்தது; அம்பேத்காருக்கு நினைவாலயம் எழுப்பியது; அம்பேத்கார் பெயரில் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஏற்படுத்தியது; ஆதிதிராவிட மக்களைக் காப்பாற்றுவது இவையெல்லாம் மிஞ்சும் அளவுக்கு அந்த ஆதிதிராவிட குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தையை எடுத்து, அதற்கு அம்பேத்கார் என்று பெயர் சூட்டி, அது, எம்,ஏ., பி.எச்டி., பி.டி., பி.எஸ்.சி., எல்.எல்.பி., பார் அட் லா, ஜே.பி., டி.லிட்., என்று இவ்வளவு படிப்பையும் படிக்க வைத்து, இந்த உலகமே போற்றும் அளவுக்கு செய்தது புரட்சித் தலைவியினுடைய சந்ததியினரே தவிர வேறு எவருமே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, தன் இனத்தில் உள்ள ஒரு பெண்ணையும் வாழ்க்கைத் துணைவியாக்கியது. அவர்தான் சவிதா. எனவே, ஆதிதிராவிட மக்களுக்கும் புரட்சித் தலைவியினுடைய அந்த பிராமண இனத்திற்கும் எப்போதுமே தொடர்பு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஆதிதிராவிட மக்களை வாழ வைப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிச்சயம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, புரட்சித் தலைவி அவர்கள் சொல்லும்போது, அரசாங்கம் ஒரளவில் ஆதிதிராவிட மக்களுக்கு சில உதவிகளைச் செய்து கொடுக்கிறது. "நீங்கள் அதையே நம்பி இருந்து விடாதீர்கள். அதை நீங்கள் பயன்படுத்தி, உழைத்து, உயர்ந்து, ஆளாகவேண்டும். மற்றவர்கள்போல் நீங்கள் போட்டி போட்டு முன்னேறவேண்டும்" என்ற கருத்தைச் சொன்ன ஒரே ஒரு தலைவி, புரட்சித் தலைவி அவர்கள்தான். அதுமட்டுமல்ல, எல்லோரும் இங்கே பேசும்போது சொன்னார்கள். இந்த இந்திய நாட்டின் ஒரு உன்னத பதவியை அடைய வேண்டுமென்று தன்னைஆயத்தப் படுத்திக்கொண்டு இருக்கும் ஒரு காங்கிரஸ்காரர். சொன்னது என்னவென்றால், இந்திய நாட்டிலேயே, தமிழகம் மட்டுந்தான் பொருளாதாரத் துறையிலும் சரி, தொழில் துறையிலும் சரி, மற்றவர்களை வாழவைப்பதிலும் சரி, ஒரு முன் உதாரணமாக இருக்கிறது என்று சொன்னார், நம்முடைய சரத்பவார் அவர்கள். அவரே சொல்லிவிட்டபோது, மற்றவர்கள் எது சொன்னாலும் தேவையில்லை. இறுதியாக... (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல்: 8-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசி முடித்து விடுங்கள். நேரம் இல்லை. அதோடு பேசி முடித்து விடுங்கள். முடிவுரையாக ஒரேயொரு கோரிக்கையோடு முடித்து விடுங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: செங்கம் தொகுதியில் மேல் பள்ளிப்பட்டு- அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேல்பள்ளிப்பட்டு, சொரப்பனந்தல், கெங்கம்பட்டு, அம்மாபாளையம் இந்த இடங்களில் ஆதிதிராவிடர் மக்களுக்கு அந்தக் காலனியில் இடம் இல்லாததால் அவர்களுக்குப் பட்டா வேண்டுமென்று தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, தாட்கோ மூலமாக லோன் கொடுப்பது, அரசு, லாரி லோன் அல்லது வேன் லோன் கொடுக்கும்பொழுது ஆர்.சி. புத்தகத்தை அந்தப் வங்கியிலேயே வைத்துக் கொண்டு அதன் பிறகு லாரி கொடுத்தால் நன்றாக இருக்கும்.

அதுமட்டுமல்ல, ஆடு வளர்ப்போர், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகமான அளவிற்கு தாட்கோ மூலமாகவோ லோன் கொடுத்து உதவுவதோடு மட்டுமல்லாமல், செங்கத்திலே பாய்ஸ் ஹஸ்டல் *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசியது போதும் *(குறுக்கீடு)* நான் அதற்காகத்தான் முடித்து விடுங்கள் என்று சொன்னேன் முதலிலேயே. திரு. கா. சின்னசாமி.

திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், நமது மாண்புமிகு இதயதெய்வம் தமிழக நிரந்தர முதல்வர் அவர்களின் பொற் பாதங்களைத் தொட்டு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது முதல்வரவர்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் இன மக்களுக்குப் பல்வேறு திட்டங்களை அறிவித்துப் பல கோடி ரூபாய் நிதி அளித்து அவர்களது வாழ்க்கையை ஒளி மயமாக்கிக் கொண்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இப்போதும் ,ஆதிதிராவிடர் பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களெல்லாம் இன்றைக்கு விவசாயத்தை

நம்பி வாழ்கின்றனர். இன்றைக்கு இவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற நிலைமை இருந்து வருகிறது.

இந்த மலைவாழ் மக்களுக்குத் தெரிந்த அரசியல் தலைவர் முதலில் புரட்சித் தலைவர் அவர்கள். அதன் பிறகு நமது தானைத் தலைவியாகிய புரட்சித் தலைவி அவர்கள்தான் என்று இன்றைக்குத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல இன்றைக்கு மலைவாழ் மக்கள் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இதுபோன்று, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., உயர் பதிவிகளில் இன்றைக்கு மலைவாழ் மக்கள் ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பாண்டில் இந்தப் பழங்குடியின மக்கள் இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பயிற்சியை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மிகத் தாழ்ந்து பணிவன்புடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினருக்கு பெரிய தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டும். மேலும் இவர்கள் சாதிச் சான்றிதழ் கேட்டு மனுச் செய்தால் இன்றைக்கு 6 மாதம், ஒரு வருஷம் என்று அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். இதனால் மலைவாழ் மக்கள் உரிய நேரத்தில் வேலைவாய்ப்பில் சேர முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, மனு விண்ணப்பித்து 15 நாட்களில் உரியவர்களுக்கு சாதிச் சான்றிதழை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அல்லது மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் விரைவாக கிடைக்க, இருக்கின்ற மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் தனி அலுவலரை நியமித்து விசாரித்து உரிய நேரத்தில் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களின் விவசாய நிலத்தையெல்லாம் இன்றைக்கு ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஆக்கிரமிப்பையெல்லாம் அகற்றி, அந்த மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்கும்படி இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மலைவாழ் மக்களுக்கு மாநில அரசு வேலைவாய்ப்பில் 1 சதவீதம் இட ஒதுக்கீடு செய்துள்ளது. இது போதுமானதாக இல்லை. எனவே, இதை 3 சதவீதமாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தாட்கோ மூலமாகக் கடன் எஸ்.சி., எஸ்.டி-க்கு உதவ முன்பு வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது எஸ்.டி.—க்கு மட்டும்

மானியத்துடன் கடன் வழங்கவில்லை. எனவே நடப்பாண்டில் இவர்களுக்கும் மானியத்துடன் கூடிய கடனுதவியை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள முள்ளுக்குறிச்சி அல்லது சேந்தமங்கலத்தை மையமாக வைத்து இந்த மலைவாழ் மக்கள் குழந்தைகள் கல்வியில் மேன்மை பெற அரசுக் கல்லூரி ஒன்றைப் புதிதாகத் துவக்க சிறப்பு அனுமதியைத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *8-05*

எனது தொகுதியில் *75* சதவிகிதம், இன்றைக்கு விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். இவர்கள் எல்லாம், கரும்பு உற்பத்தியில், மிகத் தீவிரமாக இப்போது விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கு முள்ளுக்குறிச்சிப் பகுதியை மையமாக வைத்து, அந்தப் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலையை அமைத்துத் தரும்படி, இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட முள்ளுக்குறிச்சியிலிருந்து நரியங்காடு வரை, புதிய சாலை அமைக்க வேண்டுமென்ற, மலைவாழ் மக்களின் கோரிக்கை, நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இந்தச் சாலை அமைக்கப்பட்டால், ஒரு லட்சம் மலைவாழ் மக்கள் பெரிதும் பயன்படுவர். இன்றைக்கு, மலைவாழ் மக்கள், தங்கள் பொருட்களை, தலைமேல் சுமந்து கொண்டு வருகிற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இச்சாலை சம்பந்தமாக, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத் துறையில், நீண்ட நாட்களாகக் கோப்புகள் நிலுவையில் உள்ளன. எனவே, நடப்பு நிதியாண்டிலாவது, இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இச்சாலையை அமைக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக, பொதுப்பணித் துறை மூலம் ரூ. *300* லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப் பட்டுள்ளது. இன்றைக்கு அந்த கோப்புகள். அரசிடம் நிலுவையாக உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தனது பதிலுரையில், இந்தச் சாலையை அமைக்க, உத்தரவு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேபோல், சேந்தமங்கலத்தில், பஸ் நிலையம் விரிவாக இல்லாமல் இருக்கிறது. போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது. புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், எனது தொகுதி, கொல்லிமலையில் 'லேம்ப் கூட்டுறவு சங்கத்தில்' காலியாக உள்ள இடங்களில், அந்த பகுதியிலுள்ள மலைவாழ் மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், காலியிடங்களில் பணியமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், புதுச்சத்திரம் ஒன்றியத்தில், ஏலூர் கிராமத்திற்கு ஒரு கால்நடை மருந்தகம் புதிதாக நடப்பு ஆண்டில் அமைத்துத் தரும்படி கேட்டுக் கொண்டு, எனது தொகுதியில், சேந்தமங்கலம், கொல்லிமலை, புதுச்சத்திரம், நாமகிரிப்பேட்டை ஆகிய 4 ஒன்றியங்கள் இருக்கின்றன; அந்த ஒன்றியங்களில், இன்றைக்கு ஆதிதிராவிடர் மக்கள், பழங்குடியினர் அதிகமாக வசிக்கிறார்கள். அந்த ஒன்றியங்களுக்கு, தொகுப்பு வீடுகள், குறைந்தது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 200 தொகுப்பு வீடுகள் கட்டித்தர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மானியக் கோரிக்கையின் மீது, பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை என்பது, ஏறத்தாழ ஒரு 40 ஆண்டுகாலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு துறையாகும். இந்த 40 ஆண்டு காலத்தில் பல்வேறு நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், இதுவரையில், அவர்களுடைய அடிப்படையான வசதிகளை, தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு நிலைமைதான் இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

உதாரணத்திற்கு, குடியிருப்பு. இது வரையிலும், தமிழ்நாடு முழுமையும் இருக்கக்கூடிய, ஆதிதிராவிடர்களுக்கு ஒரு முழுமையான குடியிருப்புப்புபட்டா வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை எனறுதான் கூறமுடியும். இன்றைக்கு எந்த வேலையை எடுத்துக் கொண்டாலும், பட்டாதான் அடிப்படையாக அமைந்திருக்கிறது. கடன் வாங்குவதாக இருந்தாலும், அல்லது ஒரு குடும்பக் கார்டு வாங்குவதாக இருந்தாலும், அரசு வழங்கக்கூடிய பல்வேறு சலுகைகள், தொகுப்பு வீடுகள் இவற்றையெல்லாம் பெற வேண்டுமென்றாலும்கூட அவர்களுக்குப் பட்டா அவசியமாகிறது. அந்தப் பட்டா கொடுப்பதிலே, இதுவரை 40 ஆண்டுகாலத்திற்குப் பிறகும், என்ன

சிரமம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால், பட்டா கொடுப்பதிலே வட்ட வாரியாக அலுவலகம் இருக்கிறது; அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒரு வட்டாட்சியர் அந்தஸ்துக்குக் குறையாத அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படி இவ்வளவு பேர்கள் இருந்தும்கூட, அந்த வட்டத்திற்குள்ளேயே இருக்கிற அவ்வளவு ஆதிதிராவிடர்களுக்கும் குடியிருப்பு மனை வழங்குவதற்கு 40 ஆண்டுக்காலம், பிடிக்கிறது என்று சொன்னால், இந்தத் துறை எந்த அளவுக்கு, அந்த மக்களுடைய முன்னேற்றத்திலே, கவலையையும் அக்கறையையும் செலுத்துகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கோடியே 13 இலட்சம் பேர், நம்முடைய ஆதிதிராவிட மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு, இந்த அரசு பொறுப்பேற்ற 3 ஆண்டுக்காலத்திலே, அத்தனையும் முடித்து விடமுடியாது. 1977-78-இல், வழங்கப்பட்ட பட்டா, அந்த ஓராண்டுக் கால பட்டா, 6094 தான். ஆனால், முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்றப் பிறகு 42,771, 1991-92 ஆம் ஆண்டில் இந்தப் புள்ளி. 1992—93-ல் 48,743. இந்த ஆண்டு 66,165. இப்படி 3 ஆண்டுகள் சாதனையைப் பார்க்கிறபோது வருங்காலத்தில் இதையெல்லாம் நாங்கள் செய்துவிடுவோம். கடந்த காலத்தில் செய்ததையெல்லாம் எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினால் இந்தத் துறையைப் பற்றி, எங்கள் அரசாங்கத்தைப் பற்றி குறை கூறுவதாகத்தான் தெரியும் வெளியில். ஆகவே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசாங்கம் பொறுப்பேற்றப் பிறகு எந்த அளவுக்கு வேகமாகச் சென்றிருக்கிறது. அது கல்வித் துறையாக இருந்தாலும் சரி, மனைப்பட்டாவாக இருந்தாலும் சரி, நன்றாகச் செய்திருக்கிறோம் என்பதை மனசாட்சியுள்ள நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

பிற்பகல் 8-10

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: திரு. தம்புசாமி, (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு திரும்ப நீங்கள் கிளாரிபிகேஷன் கேட்டால் சொல்ல முடியாது. திரு. தம்புசாமி.

திரு. வே.தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறுவதெல்லாம் ஒரு வட்டத்திற்குள், அந்த

வட்டத்திற்குள் 4 ரெவின்யூ வட்டம் இருக்கலாம். இந்த 4 ரெவின்யு வட்டத்திற்கு ஒரு வட்டாட்சியர் அந்தஸ்திற்குரிய தனி தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓராண்டு காலத்திற்குள் அந்த வட்டத்திற்குப் பட்டா கொடுத்து விட முடியும் என்றுதான் நான் கூறுகிறேன். அந்த வேலை நடக்காத காரணத்தால்-ஏனென்றால், அந்தத் துறையிலே பார்த்தால் 6 மாதத்திற்கு மேல் ஒரு தாசில்தார் அங்கே இருக்க மாட்டார். (குறுக்கீடு) உதாரணத்திற்கு திருவாரூர் தாலுகாவிலேயே சொல்கிறேன். (குறுக்கீடு) நிறைய உதாரணங்கள் சொல்ல முடியும். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ துறையிலிருந்து தாசில்தாரர்கள் வருகிறார்கள். உங்களைப் போன்றவர்கள் ஏதாவது குற்றம் குறை சொல்லுகிறபோது உடனடியாக மாற்ற வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. மாற்றாமல் பணியாற்ற முடியாது. நல்ல அதிகாரிகளைப் போட்டு பணியாற்றுகிறபோதுதான், இந்தத் துறை இன்றைக்கு சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது. அப்படி ஏதாவது இருந்தால் நீங்கள் எழுதிக் கொடுங்கள், நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த துறை வேகமாகச் செயல் பட வேண்டுமென்று சொன்னேன். உதாரணத்திற்கு ஒன்றே ஒன்று சொல்கிறேன். ஆதிதிராவிடர் குடியிருக்கிறார்கள். யு.டி.ஆர். அளக்கப் போகிறார்கள். அந்த ஆதிதிராவிடர்கள் குடியிருக்கிற இடத்தை களம் என்று எழுதிக்கொண்டு வருகிறார்கள். பட்டா வேண்டுமென்று கேட்கிறபோது, தாசில்தார் என்ன கூறுகிறார்? இது களம், கொடுக்க முடியாது என்று கூறுகிறார். நான் தலையிட்டு தாசில்தாரையே நேரிடையாக அந்த ஸ்பாட்டுக்கு அழைத்துப் போய் பஞ்சாயத்து ரசீதைக் காட்டி எவ்வளவு ஆண்டுகள் இதில் வீடுகள் உள்ளன, ஏதாவது களம் வைக்க வழி உண்டா? களம் என்று இருப்பது நியாயம்தானா? ஏன் இதை இப்படித் தவறாக உங்கள் அதிகாரிகள் எழுதினார்கள் என்று கேட்ட பிறகு தாசில்தாரே தலையிட்டு அதை மாற்ற வேண்டுமென்று மாற்றினார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டாட்சியர் களத்தை வந்து மாற்றி எழுதுவது என்பது இயலாத காரியம். அதை அரசாங்கம்தான்

செய்ய வேண்டும். அங்கிருந்து வட்டாட்சியர் பரிந்துரை வேண்டுமானால் செய்யலாம். மேலும் களத்திலே வீடுகள் கட்டுவதற்கு இப்பொழுது இருக்கிற வருவாய்த் துறையினுடைய சட்டப்படி எந்தவிதமான அனுமதியும் கிடையாது. எனவே, அவர்கள் அதற்கான, நிலம் மாற்றங்களுக்காக அரசுக்கு அனுப்பலாம்.

திரு. வே. தம்புசாமி: இல்லை அப்படிப்பட்ட இடம் இல்லை அது. அது நத்தம்ஜாரி. ஹரிசனங்கள் குடியிருக்கிறார்கள். அந்த குடியிருந்த இடத்தை யூ.டி.ஆர். அளக்க, கடந்த 3 மாதத்திற்கு முன்னால் போன அதிகாரிகள் களம் என்று எழுதிக்கொண்டு வந்து விட்டார்கள். ஆனால், அது நத்தம்ஜாரி. இதனாலேதான் பிரச்சினை வந்தது. தாசில்தாரே தலையிட்டு எப்படித் தவறாக எழுதிக்கொண்டு வந்தார்கள்... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சின்னசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் பக்கம், அந்தப் பக்கம் என்று எல்லாம் வேண்டாம். திரு. தம்புசாமி, ஏற்கனவே நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த மாதிரித் தவறு நடந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். மேலும் இதில் வேண்டாம். வேறு கருத்தைக் கூறுங்கள்.

திரு. வே. தம்புசாமி: இதுபோன்று அந்தத் துறை என்பது வேகமாகச் செயல்பட வேண்டும். அவர்களுக்குச் சட்டம் இருக்கிறது, அதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே துரிதமாகச் செயல்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்.

அந்த மாதிரி பட்டா வழங்குவதற்கு 2 வருடம், 3 வருடம் ஆகிறது. நான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறேன். போன தடவைகூட பேசினேன். 8 வருடமாகிறது. அதை வேகமாக ஒரு குறிப்பிட்ட 6 மாதம் அல்லது ஒரு 4 மாதம் அல்லது 9 மாதம், ஓராண்டுக்குள் அவர்களுக்கு கொடுத்துவிட வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜித நேர்வில் ஓராண்டுக்குள் பட்டா வழங்க முடிகிறது. அதில் யாரும் ஆட்சேபணை செய்யவில்லையென்றால் நிச்சயமாக ஓராண்டுக்குள் பட்டா கொடுத்துவிடலாம். ஆட்சேபணை செய்யப்பட்டால் நில நிர்வாகத் துறை மூலமாக அதற்கு 2 1/2 ஆண்டு காலம் பிடிக்கிறது. ஆட்சேபணை இல்லாத இடத்தில் மிக விரைவில் பட்டா கொடுத்துக் கொண்டுதான்

இருக்கிறோம். பட்டா கொடுக்கவில்லை என்று சொல்ல முடியாது. ஒரு இடத்திலே காலதாமதம் ஏற்பட்டது என்றால் அதையே வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது சரியாக இருக்காது.

பிற்பகல் 8-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் தம்புசாமி அவர்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும். (குறுக்கீடு) அவர் சொல்வதற்கெல்லாம் நீங்கள் விளக்கம் கேட்டுக்கொண்டிருந்தால் சரியாக இருக்காது. (குறுக்கீடு) நீங்களும் திரு. சின்னசாமியும் இரண்டுபேரும் சேர்ந்து தனியாகப் பட்டிமன்றம் வைத்து பேசிக்கொண்டிருந்தால் சரியாக இருக்கும். இங்கே தயவுசெய்து அவையின் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் இன்னும் கூட அரிசனங்களுக்கு முழுமையாக சுடுகாடு அமைக்கப்பட்டது கிடையாது. தனியார் வயல்களிலே கூட நடந்து போகக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. உண்மையிலேயே விளைச்சல் விளைந்திருக்கும்; அப்போது ஒருவர் இறந்துவிடுவார்; அந்த நேரத்தில் வயல் வழியாகத்தான் அதாவது முழுக்க சேற்றிலே நடந்துதான், கதிர்களை மிதித்துக் கொண்டுதான் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகக் கூடிய நிலைமை இருக்கிறது. மேலும் எங்களுடைய பகுதிகள் பள்ளமான பகுதிகள். வெள்ளம் போன்றவற்றால் பாதிக்கக்கூடிய பகுதி. எனவே, அப்படிப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து சுடுகாடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுபோன்ற எத்தனையோ காரியங்களைச் செய்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எல்லாம் அதைப் பாராட்டிக் கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படிக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சுட்டிக்காட்டலாம்.

எனவே மானியம் வருகிறபோது மட்டும் இங்கே வந்து பேசுகிறீர்கள், மற்ற நேரங்களில் எங்களுக்கு அதுபற்றித் தெரிவிப்பதில்லை என்று நான் குறைபட்டுக் கொள்கிறேன். எனவே மீண்டும் இதுபோன்று

குறைகள் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கொடுங்கள் நான் நடவடிக்கை எடுக்கிறேன். நான் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டால் நீங்கள் பேசுவதில் நியாயம் இருக்கிறது.

*திரு. வே. **தம்புசாமி:*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடியிருப்பு மனை கேட்டு உங்களுக்குக்கூட கடிதம் எல்லாம் எழுதி இருக்கிறேன். அதாவது கொடுக்கிற விவரங்கள்படி செயல்படவேண்டும். என்றுதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே.பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மூலமாகவும் ஆதிதிராவிடர்களுக்குப் பட்டா வழங்குகிறார்கள். ஆனால் நிலங்களைக் கையகப்படுத்தி அதாவது பிரத்தியாருடைய நிலமாக இருந்தால் அவற்றை எடுத்து பட்டா வழங்க வேண்டும் என்று சொன்னால் நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அதிலே பல நாட்கள் ஆகின்றன. 40 ஆண்டுகளுக்கு மேல் கூட காலதாமதம் ஏற்படத்தான் செய்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக நிலங்களை எடுக்கிறபோது கோர்ட்டுக்குப் போகிற காரணத்தால் காலதாமதம் ஏற்படுவது பற்றிச் சொன்னார். பல்வேறு வகைகளிலேயும் பட்டா வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். வருவாய்த் துறை மூலமும் வழங்குகிறார்கள். ஆனால் ரெவின்யூ நிலமாக இருந்தால் க்ளாசிஃபிக்கேஷன் செய்ய வேண்டும். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொறுங்கள், திரு. பெரியசாமி பேசி முடிக்கட்டும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையைச் சேர்ந்த நிலமாக இருந்தால் அதை நத்தமாக மாற்ற வேண்டும். ஓடையாக இருந்தாலும், மேய்ச்சலாக இருந்தாலும் க்ளாசிஃபிக்கேஷன் செய்ய வேண்டும். அதை வருவாய்த் துறை தாசில்தார் செய்ய வேண்டும். இது ஆதிதிராவிடர் நலத் தாசில்தார் கூட தனியார் நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில்தான் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதிலே காலதாமதம் ஏற்படுகிறது. ஆனாலும் உடனுக்குடன் 6000, 7000 பட்டாக்கள் வழங்கிக் கொண்டுதான் இருக்கிறோம்.

*திரு. வே.**தம்புசாமி:*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியசாமி அவர்களுக்கு நான் சில விவரங்களைச்

சொல்கிறேன்.(குறுக்கீடு) அவர் அவருக்கு தெரிந்த நிறைய விஷயங்களைப் பற்றிச் சொல்லி இருக்கிறார். ஆனால் நான் நிலத்தைக் கொடுக்கிறேன் என்று எழுதிக் கொடுத்த பிறகும் 2 வருஷம் ஆகியும் கூட இன்னும் பட்டா கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு.வே தம்புசாமி: அந்தமாதிரி அரிசனக் காலனிகளை பெருவழிப் பாதையோடு இணைக்கக்கூடிய வகையில் சாலை வசதி என்பது இல்லை. மழைக் காலங்களில், வெள்ளக் காலங்களில் அந்த மக்கள் வந்து சேர்வதே பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் உள்ள குறைபாடுகளை கண்டறிய வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, எந்தெந்த காலனிகளில் இதுபோன்ற சாலை வசதி, குடிநீர் வசதி போன்றவை இல்லை என்ற புள்ளிவிவரங்களை எடுத்திருக்கிறோம். எடுத்து, இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதுபோல் பட்டா விஷயம் பற்றிச் சொன்னார்கள்.

பிற்பகல் 8-20

மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் சொன்னபோது அவரது மாவட்டத்தில் தமிழ்நாட்டிலேயே அதிகமான பட்டா தரப்படுவதற்காக அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், அங்கே இருக்கிற அமைச்சர் பெருமக்கள் நடவடிக்கை எடுத்ததன் காரணமாகவும், ஒத்துழைத்ததன் காரணமாகவும் அந்தப் பட்டா இந்த ஆண்டு 8217 பேர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். அதுவும் தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் பெரியார் மாவட்டத்தில் தான் அதிகமாக வழங்கி இருக்கிறார்கள். இதுபோன்று நமது உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்புத் தந்து, இதுபோன்று கோரிக்கைகளை வைத்து என்னுடைய கவனத்திற்கு வந்தால் நான் துரிதப்படுத்தியிருக்க முடியும். அதை விட்டுவிட்டு பட்டா வரவில்லை என்று சொல்கிறபோது அது குறையாகத் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள். 8.21-க்கு சரியாகப் பேசி முடித்துவிட வேண்டும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் காலனிகளுக்கு சாலை வசதி வேண்டுமென்று வளர்ச்சி மன்ற கூட்டத்தில்... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புத்தகத்தை ஒரு மாதத்திற்கு முன்புதான் தயாரித்து இருக்கிறோம். நீங்கள் சொல்கிற குறைகளை எல்லாம் கண்டறிய வேண்டும். நீங்கள் இங்கே கோரிக்கைகள் வைத்திருக்கிற காரணத்தால் புத்தகங்களை தயாரித்திருக்கிறோம். மிக விரைவில் உரிய நடவடிக்கை எடுத்து நல்லமுறையில் சேவை செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்று முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்டிக் கொடுத்த அந்த ஓட்டு வீடுகள் முழுவதும் இன்று சுத்தமாக இடிந்து போய்விட்டன. இந்த வீடுகளை திரும்பக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது தொகுப்பு வீடுகள் கொடுக்கிறபோதே, பயனாளிகளுக்கு ஒப்படைக்கிறபோதே அரசாங்கம் ஒரு ஒப்பந்தம் போடுகிறது. பயனாளிகள் அந்த வீடுகளைப் பெற்றுக் கொள்கிறபோது அதை மெயின்டெனன்ஸ் செய்துகொள்ள வேண்டும். அவர்கள் அதை மெயின்டெனன்ஸ் செய்யத் தவறிவிட்டால் அரசாங்கம் என்ன செய்யமுடியும் ? இந்தக் குறைபாடுகளை எல்லாம் நிவர்த்தி செய்ய நிதி செலவழித்தால் புதிய வீடுகள் கட்ட இயலாது. இருக்கிற நிதிநிலையில் ரிப்பேர் செய்கிற பணியை எடுப்போமானால் நாம் புதிய வீடுகளை கட்ட முடியாது. ஆகவே அந்த வீட்டினுடைய சொந்தக்காரரே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தா. செழியன். (குறுக்கீடு) தம்புசாமி நீங்கள் நிறைய நேரம் பேசுகிறீர்கள். 8-07-க்கு நீங்கள் பேச ஆரம்பித்தீர்கள், இப்போது 8-22 ஆகிறது. அமைச்சர்

பெரிய புத்தகமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதை உட்கார்ந்து தயவு செய்து படியுங்கள். திரு. தா. செழியன். (குறுக்கீடுகள்)சரி ஒரே நிமிடம், சீக்கரம் முடித்து விடுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு தாட்கோ மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடன் இப்போது நிச்சயமாக அவர்களுக்குப் போய் சேரவில்லை. உழவுமாட்டுக் கடன் என்று சொல்கிறபோது எனது மாவட்டத்தில் உழவு மாட்டுக் கடன் என்பது கிட்டத்தட்ட கைவிடப்பட்டுவிட்டது. அதுமாதிரி கறவை மாட்டுக் கடன் சொசைட்டி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. என்னுடைய மாவட்டத்தில் எங்கே இருக்கிறது என்றே எனக்குத் தெரியாது. தற்போது அந்தமாதிரி கடன் வழங்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொசைட்டி உள்ள இடத்திலே போய்ப் பார்த்தால் தெரியுமே தவிர இல்லாத இடத்தில் பார்த்தால் தெரியாது. நீங்கள் நேரடியாகப் பார்க்க வேண்டும். இங்கு நான் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களை எல்லாம் அதிகாரிகள் செயல்படுத்தியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்னுடன் வருவார் என்றால் நான் நடைமுறையில் எல்லாவற்றையும் காட்டுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு பால் பண்ணை சங்கம் வைத்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் எங்கே இருக்கிறது என்ற தகவலை பதில் உரையில் நீங்கள் சொல்லவும். அடுத்ததாக தாட்கோ கடன் என்பது அரிசனங்களாக இருக்கிற, டிரைவர்கள், படித்தவர்கள், மற்றவர்கள் கடன் கேட்கிறபோது வங்கிகளில் சால்ஜாப்பு சொல்லி கொடுக்க மாட்டார்கள். இன்னும் ஒரு சிலர் கொடுத்தால்கூட... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்வது உண்மையாக இருந்தாலும், இந்த ஆண்டில் தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 1500 பேர்களுக்கு கொடுத்து 'Asset Create' செய்திருக்கிறோம். இந்த ஆண்டு அரசினுடைய இலக்கு 1500 பேர்கள். அந்த 1500 பேர்களுக்கும் கொடுத்திருக்கிறோம். அப்படியென்றால் சட்டமன்ற உறுப்பினர் இதை தவறு என்று சொல்கிறாரா?

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடுத்திருக்கலாம். ஆனால் எங்களுடைய மாவட்டத்தில் நடந்த நிகழ்ச்சியைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதோடு பேசி முடித்து விடுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு இந்த அரசு கடன் கொடுப்பதற்காக கமிட்டி அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கமிட்டியில் நானும் ஒரு உறுப்பினராக இருந்தேன். ஆனால் அந்த கமிட்டி அமைக்கப்படுவது கிடையாது. என்ன கடன் கொடுக்கிறார்கள் என்று கேட்க முடியாது. கடன் வழங்குவது பற்றி என்னை கலந்துகொள்வது இல்லை. கடன் கொடுப்பதே தெரியாது. வளர்ச்சி மன்ற கூட்டத்தில்கூட எங்களது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் கடன் பட்டியல் கேட்டபோது அதுவும் கொடுக்கப் படவில்லை.

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன்: கமிட்டி இருக்கிறது. கமிட்டி இல்லாமல் இல்லை. அரசு அதிகாரிகளைக் கொண்ட கமிட்டி வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தா. செழியன்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1994- 95 ஆம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்பினை தந்தமைக்கு என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தைத் தங்களுக்கு இதயத்தின் பிடரியிலிருந்து காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 8-25

அனைத்துத் துறைகளிலும் ஏற்றம் காண, வரவு-செலவு திட்டத்தில் வழிவகை செய்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாட்டம் போக்கி ஏற்றம் கண்டிட வழிவகை செய்திட்ட ஆதிதிராவிட மக்களின் காவல் தெய்வம், புதிய தமிழகம் படைக்கின்ற புதுமைத் தாய், பெண் இனத்தின். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் அதுதான் சொன்னேன். நீங்கள் மூத்த உறுப்பினர். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். திடீரென்று நான் வந்து அத்தோடு முடித்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் மூன்று முறைகள்

நான் திரும்பத் திரும்ப சொன்னேன். அதையும் கூட மீறி நீங்கள் தொடர்ந்து வீண் விவாதத்திலே நேரத்தைக் கழித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிற்பாடு கடைசியிலே ஒரு கிளாரிபிகேஷனாகக் கேட்டுக்கொள்ளலாம். அதிலேயே நீங்கள் முடித்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். அடுத்த உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். மறுபடியும், மறுபடியும் நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் நேரம் ஆகும். (குறுக்கீடு)சரி, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கின்ற காரணத்தினாலே அனுமதிக்கப்படுகிறது. திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தாட்கோ கடன் வழங்கப்பட்டதிலே உயர் சாதிக்காரர்கள் (குறுக்கீடுகள்) தாழ்த்தப்பட்டோர் என்றே சர்டிபிகேட் வாங்கி கடன் பெறப்பட்டிருக்கிறது. ஆட்டோ மற்றதெல்லாம் பெறப்பட்டிருக்கிறது மதுரை மாவட்டத்தில். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு.ஜி. பழனிசாமி உட்காருங்கள். இரண்டு பேர் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். திரு.ஜி. பழனிசாமி நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதிச் சான்றிதழ்கள் பேரில்தான் கடன் கொடுக்கிறோம். இதுபற்றி, இதுசம்பந்தமாக என்னிடத்திலே ஏற்கனவே சொல்லியிருக்கலாம். நடவடிக்கை எடுத்திருப்போம். இப்போது குறை சொல்வது, இதற்காகத் தயார் செய்யப்பட்டதாக நான் கருதுகிறேன். என்னவென்று என்னிடத்திலே நேரிலே சொல்லியிருக்கலாம். அது, தாட்கோ செய்த தவறு அல்ல. அவர் டூப்ளிகேட் சர்டிபிகேட் கொடுத்திருந்தால் கொடுங்கள், நடவடிக்கை எடுக்கிறோம். இந்த ஆட்சி பொறுப்பேற்ற உடனே எனக்குத் தகவல்கள் வந்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த லிஸ்ட் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுங்கள். அவர் பதில் சொல்வார். அடுத்து திரு. தா. செழியன்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசிய பகுதியிலே இருந்து தொடரவா அல்லது ஆரம்பத்திலேயிருந்து தொடரவா?

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆரம்பத்திலே இருந்தே பேசலாம்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 160 பேர், மெம்பர்ஸ் இருக்கிறோம். அதனாலே ஆளுங்கட்சி சார்பிலே கொஞ்சம் நேரம் குறைவாகத்தான் கிடைக்கும். அதனாலே நீங்கள் சொன்ன ** என்பதெல்லாம் வேண்டாம். அந்த ** என்பதெல்லாம் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் பேசலாம்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பினை தந்தமைக்காகத் தங்களுக்கு என்னுடைய நன்றியினை இதயத்தின் பிடரியிலிருந்து காணிக்கையாக்குகிறேன்.

அனைத்துத் துறைகளிலும் ஏற்றம் காண வரவு- செலவு திட்டத்தில் வழிவகை செய்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாட்டம் போக்கி ஏற்றம் கண்டிட வழிவகை செய்திட்ட ஆதிதிராவிட மக்களின் காவல் தெய்வம், புதிய தமிழகம் படைக்கின்ற புதுமைத் தாய்,. பெண் இனத்தின் பெருமை காக்கும் பெருந்தகை, சர்வதேச அரசியலின் சாணக்கியம், இமயம் வரை புகழ் மிளிரும் சாதனைப் படைத்த வீரத்தாய், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களின் காலடி சுவடு தொட்டு எனது உரையைத் துவக்குகிறேன்.

இந்திய திருநாட்டின் சட்டமேதை டாக்டர் அம்பேத்கார் பெயரில் போக்குவரத்துக் கழகத்தினை அமைத்திட்டமைக்கு எங்களுடைய இதய தெய்வம், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது இன ஆதிதிராவிட மக்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி சமர்ப்பிக்கின்றேன்.

இந்தியாவின் அரசியல் சட்டத்தை நிர்மாணித்த மாமேதை டாக்டர் அம்பேத்கார் அண்ணலின் பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக எடுத்தமைக்கு ஆதிதிராவிட மக்களின் நன்றியினை சொல்ல வார்த்தை இல்லாமல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புனித பாதம் தொட்டு எங்களின் நன்றியினை போற்றி வணங்கி சமர்ப்பிக்கிறேன்.

அதேபோன்று தமிழகத்திலே உள்ள அனைத்து சட்ட கல்லூரிகளையும் இணைத்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு ஒரு சட்டப் பல்கலைக் கழகம் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, அதை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கார் பெயரிலே டாக்டர் அம்பேத்கார் சட்ட பல்கலைக் கழகமாக உருவாக்க வேண்டுமென்று அவர்களின் பொற்பாதம் போற்றி இந்த ஆதிதிராவிட இன மக்களின் சார்பாக சமர்ப்பிக்கின்றேன்

பிற்பகல் 8-30

நடப்பு நிதியாண்டில் 30,000 பெண் குழந்தைகள் கல்வி அறிவு பெற உதவித் தொகையாக ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்பதற்குரியதாகும். அதேபோன்று, தொழில் முனை வோருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் புதிய முதலீட்டுத் திட்டம் ரூ.80 கோடிக்கு ஒதுக்கப்பபட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும். இது இவ்வின மக்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும். அதேபோன்று நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் நிலம் கொடுக்க நடப்பு நிதியாண்டிலே ரூ.1கோடி ஒதுக்கப்பட்டுள்ளது பாரட்டுக்குரியது. அதற்கு எம்மின மக்களின் சார்பாக எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்களின் பொற்பாதங்களுக்கு உரித்தாக்குகின்றேன். ஆதிதிராவிட இடைநிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதி செய்து கொடுக்க நடப்பு நிதியாண்டில் ரூ. 28.31 லட்சம் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. அதேபோன்று, ஆதிதிராவிட நலப் பள்ளிகளில் போதிய ஆசிரியர் இல்லாமை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அரசு உணவு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை உயர்த்தித் தர வேண்டுமாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அலுவலகங்கள் மற்றும் உணவு விடுதிகள், ஏறத்தாழ மொத்தம் உணவு விடுதிகள் 952. அதிலே வாடகைக் கட்டிடங்கள் 534. சொந்தக் கட்டிடங்கள் 394. எனவே, சொந்தக் கட்டிடங்கள் ஆக்குவதற்கு விரைவிலே அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஒரு அரசு மாணவர் விடுதியை தேர்ந்தெடுப் போமானால் அரசு ஆதி திராவிட மாணவர் விடுதி என்று சொன்னால் அந்த இடத்திற்குச் சொந்தக்காரர் வாடகைக்கு விட மறுக்கின்றார். இந்த நிலைமையைப் போக்குகின்ற வகையில் சொந்தக் கட்டிடம் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று, *1987* ஆம் ஆண்டு வரை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் தாட்கோ மூலமாக ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்டும் முறை இருந்தது. ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு *5* ஆயிரம் வீடுகள் *2½* கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்டு வந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அது நிறுத்தப்பட்டு, இன்றையதினம் தாட்கோ மூலமாக தொகுப்பு வீடுகள் கட்டப்படாத நிலைமை இருக்கிறது. எனவே, மீண்டும் தாட்கோ மூலமாக ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தை கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று ஒவ்வொரு ஒன்றியத்திலும் இ.ஓ., ஏ.டி.. என்று ஒரு அதிகாரி இருக்கிறார். அவர் ஆதிதிராவிடர் துறையைச் சார்ந்தவர். ஆனால் அவருக்கு தாட்கோ மூலமாக சம்பளம் கொடுத்து வருகின்றார்கள். அவர் யூனியனுடைய ஆணையருடைய கண்ட்ரோலில் இருந்தாலும் தாட்கோ மூலமாக செய்கின்ற பணியை சரியாக செய்ய முடியவில்லை. எனவே, இ.ஓ., ஏ.டி. அவர்களை தாட்கோவினுடைய கண்ட்ரோலுக்கு கொண்டு வர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அடுத்து எனது தொகுதியைச் சார்ந்த பூலாம்பாடி பேரூராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏறத்தாழ *1456* மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். அதிலே மாணவிகள் எண்ணிக்கை மட்டும் *900* ஆகும். அதிலும் ஆதிதிராவிட மாணவிகள் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, அந்த பூலாம்பாடி பேரூராட்சியில் ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக ஒரு அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை உருவாக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் மூலமாக கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன். அதேபோன்று, பூலாம்பாடி பேரூராட்சியில் ஆதிதிராவிடர் மாணவிகள் அதிகமாக பயிலுகின்ற காரணத்தால், அங்கே ஆதிதிராவிட மாணவியர் விடுதி ஒன்றும் வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை இரண்டாக பிரிப்பதாக சொல்லியிருக்கிறார்கள். எனவே, பிரிக்கப்படுகின்ற மாவட்டத்திற்கு என்னுடைய தொகுதியான பெரம்பலூரை தலைநகராக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இது ஒரு மிகவும் பின்தங்கிய பகுதியாகும். எனது தொகுதி அபிவிருத்தியடையும் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

நிதி பற்றாக்குறையிலும், மக்களின் நலனே முக்கியம் என மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி, தமிழக முதல்வர் அவர்கள் செயல்படுவதை இந்தியத் திருநாடே போற்றி புகழும் பெருமை பெற்றவர் தான் நமது தமிழகத்தின் நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இங்கே நான் தெள்ளத் தெளிவாக குறிப்பிடுகிறேன். எனக்கு பேச வாய்ப்பளித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி முதல்வர் அவர்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்ற வகையில் இந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு தந்த மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செழியனுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், சரியாக 5 நிமிடத்தில் முடித்துக்கொண்டதற்காக. திரு. மூர்த்தி.

பிற்பகல் 8-35

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1994-95 ஆம் ஆண்டுக்கான ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன்குறித்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற நல் வாய்ப்பினைத் தந்த தங்களுக்கும், இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தமிழகத்தினுடைய காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன். இன்றைக்கு ஆதிதிராவிடர்களுக்கென்று தாட்கோ திட்டத்தின் மூலமாகக் கடன்கள் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படிக் கொடுக்கிறபோது அதில் பல இடர்பாடுகள் இருக்கின்றன. எனவே அவர்கள் வாங்குவதற்கு பல நிலைகளிலே போராடுகிறார்கள்.

அந்தச் சங்கடங்களை எல்லாம் போக்கும் விதத்திலே தாட்கோ திட்டத்தில் கடன் கொடுக்க உதவிட மாண்புமிகு அமைச்சரவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆதிதிராவிடர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடுகள் பல நிலைகளிலே பழுதடைந்திருக்கின்றன. எனவே வறுமையிலே வாடுகின்ற அந்த ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகளைப் பழுது பார்க்கக்கூட வசதியில்லாமல் இருக்கிற படியால் அவர்களுக்கு வீடுகளைப் பழுது பார்ப்பதற்காக ஒரு நிதியினை ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர்களுக்கு என்று தனியாருடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்து பாதை அமைப்பதற்கு அல்லது குடியிருப்பு கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, தனியார்கள் சில நேரங்களில் வழக்கு தொடருகிறார்கள். அப்படி வழக்கு தொடரும்போது, அத்தோடு அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். இதனால் அங்கே இருக்கிற ஆதிதிராவிட மக்கள் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. எனவே இதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது வழக்கு தொடர்ந்தாலும், தொடராவிட்டாலும் அரசு அதை எடுத்து அவர்களுக்கு உரிய வசதியைச் செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆதிதிராவிடர்களுக்கு என்று இருக்கும் இட ஒதுக்கீடுகள் முழுவதும் நிரப்பப்படுகிறதா என்றால் கிடையாது. எந்தெந்தப் பணிகளிலே ஆதிதிராவிடர்களுக்கான இட ஒதுக்கீடு நிரப்பப்படாமல் இருக்கிறதென்று கணக்கெடுத்து உடனடியாக அந்த இடங்களை நிரப்ப அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு சில இடங்களில் ஆதிதிராவிட மக்கள் இறந்துவிட்டால் அவர்களை எடுத்துச் செல்லுகிறபோது, உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் வசிக்கும் வீதி வழியாக எடுத்துச் செல்லுகிறபோது சண்டைச் சச்சரவுகள் ஏற்படுகின்றன. இதனைப் போக்கும் விதத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாத வண்ணம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆதிதிராவிடர்களுக்கு என்று ஒவ்வொரு ஆண்டும் குடியிருப்புகளை ஒதுக்கித் தருகிறார்கள். இன்றைக்கு தனித் தொகுதிகளிலே தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். எனவே ரிசர்வ் தொகுதிகளுக்கு கொஞ்சம் அதிகமான தொகுப்பு வீடுகளை ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆர்.டி.ஓ., டி.டி.ஓ. போன்ற பணிகளுக்கு ப்ரமோஷன் வரும்போது ஆதிதிராவிட மக்களுக்கு பிரிபெரன்ஸ் கொடுக்கிறார்கள். அந்த பிரிபெரன்ஸ் கொடுக்கும்போது அவர்கள் பயன் பெறுகிறார்கள். ஆனால் கீழே இருக்கின்ற தாசில்தார், ஆர்.ஐ., வி.ஏ.ஓ. போன்ற பதவிகளுக்கு ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு பிரிபெரன்ஸ் கிடையாது. அந்தப் பதவிகளுக்கு பிரிபெரன்ஸ் கொடுத்தால் அவர்கள் முன்னேறுவதற்கும், வாழ்க்கையில் நலன் பெறவும் வாய்ப்பாக இருக்கும். இதற்கு ஆவன செயய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பெரும்பாலான ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில், சில இடங்களில் மின்சார வசதி இல்லாத நிலைமை இருக்கிறது. எங்கெங்கே இப்படி இருக்கிறதென்று அரசு கணக்கெடுத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் மற்ற துறைகள் மூலமாக இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கொண்டல் கிராமத்தில் ஒரு ஆதிதிராவிட உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கே ஆதிதிராவிட மாணவர்கள் மாணவர் விடுதி இல்லாமல் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே சீர்காழி தொகுதியில் கொண்டல் கிராமத்தில் ஆதிதிராவிடர் நல விடுதியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழி தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். குறிப்பாக கடலோரப் பகுதியில் இருக்கிற நிலங்களை இறால் வளர்ப்பதற்காக அங்கே நில ஆர்ஜிதம் செய்து விடுகிறார்கள். விவசாயத்தையே நம்பியிருக்கிற விவசாய மக்கள் எல்லாம் இதனால் விவசாயத்தைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. எனவே அதைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 8-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள். போதும்.

திரு. து. மூர்த்தி: அடுத்து என்னுடைய சீர்காழி தொகுதி தென்னாம்பட்டிணம் ஊராட்சி, கீழமோவூர்கரை என்ற இடத்தில், மனிதர்கள் எப்போது தோன்றினார்களோ அன்று முதல் இன்று வரை உப்புத் தண்ணீரைக் குடித்து மிகவும் அவதிப் படுகிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் பெரும்பாலும் மீனவர்கள்தான். அவர்களின் நீண்டநாள் கோரிக்கையான அதை நிறைவேற்றி, பக்கத்தில் இருக்கிற பெருந்தோட்டம் என்ற ஊரிலிருந்து போர்வெல் போட்டு பைப் லைன் மூலமாக அவர்களுக்குக் குடிதண்ணீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழநாட்டின் காவல் தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் இன்றைக்கு ஆதிதிராவிட மக்களின் நலனில் அக்கறை கொண்டு பல கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளியாக விளங்குகின்ற அம்பேத்கார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட முடிவெடுத்துள்ளார்கள். அதற்காக உலகத்தில் இருக்கிற அத்தனை ஆதிதிராவிட மக்களும் நன்றியுடன் இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லி அதை புரட்சித் தலைவி அவர்களுக்குக் காணிக்கையாக்கிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதும், நன்றி கூறிவிட்டீர்கள். அடுத்து டாக்டர் எஸ்.சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித்தலைவி அவர்களுக்கும் இந்த சமயத்தில் எனது மனமார்ந்த நன்றியை அவர்களுடைய திருப்பாதத்தில் வைத்து என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடம் இல்லாமல் அதிக மக்கள் தொகை கொண்ட ஆதிதிராவிட மக்களை மட்டுமின்றி, தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த மக்களையும் கடமையோடு, மனித நேயத்ததோடு காப்பாற்றுகின்ற ரட்சகராக இன்றையதினம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் காண்கின்ற முதல்வராக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

1991 ஆம் ஆண்டு 102 கோடி ரூபாயைப் பெற்ற இந்தத் துறை, 1992 ஆம் ஆண்டு 114 கோடி ரூபாயையும், 1993 ஆம் ஆண்டு 135 கோடி ரூபாயையும், இந்த 1994 ஆம் ஆண்டுக்கு 150 கோடி ரூபாய்க்கு மேல் நலத் திட்டங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு வழங்கியிருக்கிறது. தமிழக மக்களுடைய, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு 5 கோடி ரூபாய் செலவில் நினைவகம் ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவருடைய புகழ் என்றென்றும் நிலைக்கும் வகையில் டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம் நிறுவியிருப்பது உண்மையிலேயே ஆதிதிராவிட மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விளங்கி வருகிறார்கள். நேரத்தின் அருமை கருதி, ஒருசில கோரிக்கையை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். புயல் வெள்ளம் போன்ற காலங்களில் ஆதிதிராவிட மக்களுடைய அனைத்து குடியிருப்புகளும் வெள்ளத்தில் மூழ்குகின்ற நிலையை நாங்கள் எல்லாம் பார்க்க முடிந்தது. ஆகவே இனிமேலாவது ஆதிதிராவிட மக்களின் காலனிகளை மேடான பகுதியில் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மலிவு விலை மதுவால் மிகவும் பாதிக்கப்பட்டது ஆதிதிராவிட மக்கள் தான்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மலிவு விலை மதுவை ஒழித்ததால் ஏழை எளிய மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய இல்லங்களில் ஒளியை ஏற்றியிருக்கிறார்கள். ஆதிதிராவிட பெண் குழந்தைகள் கல்விக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம், தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் போன்ற மகளிர் படிப்பு குறைந்துள்ள நான்கு மாவட்டத்திலும், 3,4 மற்றும் 5 ஆம் வகுப்புகள் படிக்கும் பெண் குழந்தைகளுக்கு வருடத்துக்கு 500 ரூபாய் தேர்ச்சி பெற்றவுடன் கொடுப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒரு திட்டமாகும்.

கிராமப்புற ஏழைப் பெண் குழந்தைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். அதையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் 10 அம்சத் திட்டத்தின் பலனாக 65,000 குடும்பங்களுக்கு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும், ஆயிரம் பாசனக் கிணறுகளையும், 150 தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கடன்களையும் மற்றும் தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு 500 பேருக்கு வேலை வாய்ப்பையும், 75 ஆயிரம் பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குகின்ற திட்டத்தையும், தொகுப்பு வீடுகள் 25 ஆயிரம் பேர்களுக்கும், குடிநீர்த் திட்டம் 1500 குடியிருப்புகளுக்கும் வழங்க இருக்கிறார்கள். வீட்டிற்கு ஒரு விளக்குத் திட்டம் மூலம் 35 ஆயிரம் பேர்களுக்கு வழங்க இருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் அனைத்தையும் மனதார வரவேற்க கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 8-45

பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்தால்தான், இந்த மக்களை முன்னேற்ற முடியும் என்று, பட்டுப் பூச்சி வளர்க்கும் திட்டம் மற்றும் பனியன் தொழில் திட்டம், நிலமற்ற ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் வழங்குகின்ற திட்டங்களை எல்லாம் அளித்து இருக்கின்றார்கள். அந்தத் திட்டங்களை எல்லாம் நான் வரவேற்க கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக 1994-95 ஆம் ஆண்டில் ஆதிதிராவிட மாணவர்கள் இல்லம் 20 திறக்க இருக்கிறார்கள். அதை எல்லா மாவட்டங்களிலும் பரவலாக ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த சமயத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கோரிக்கைவிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆதிதிராவிட நலத் துறையின் கீழ் 1,055 ஆரம்பப் பள்ளிகளும், 82 நடுநிலைப் பள்ளிகளும், 54 உயர்நிலைப் பள்ளிகளும், 34 மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் கல்விக்காக, கல்வி மேம்பாட்டிற்காக ஆதிதிராவிட நலத் துறையில் 50 விழுக்காடு செலவழித்தாலும், நடுநிலைப் பள்ளியோ, உயர்நிலைப் பள்ளியோ, மேல்நிலைப் பள்ளியோ என்னுடைய மாவட்டத்தில் இல்லை. ஆகவே, அவ்வாறு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளி இல்லாத மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்கே என்னுடைய மாவட்டத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், ஆரம்பப்

பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்க வேண்டும் என்ற கோரிக்கை கொடுத்து இருக்கிறேன். கோட்டூர்-பரமக்குடி ஆதிதிராவிட பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், பிற்காலத்தில் உயர்நிலைப் பள்ளியாகவும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த சமயத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் பரமக்குடியில் விடுதிகளுக்கு *20.11.1984*–ல் கிட்டத்தட்ட *28* லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, அது தாட்கோ நிறுவனத்தின் மூலம் டெண்டர்விட்டு, நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்று இன்னும் நிலுவையில் உள்ளது. அந்த விடுதியைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாட்கோ நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தாட்கோ நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம் *1989*-ல் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இதில் *107* பொறியாளர்கள் வேலை செய்கின்றார்கள். பரமக்குடி நகரத்தில் ஆதிதிராவிடர்களுக்கு என்று தாட்கோ கட்டிடம் ஒன்று இருந்தது. அங்கே இருந்த நிர்வாகம் வேறு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அந்தக் கட்டிடம் பூட்டப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த தாட்கோ நிறுவனத்தில் பூட்டப்பட்டு இருக்கிற கட்டிடங்களை மற்ற வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் அதிகமான நிலங்களை கையகப்படுத்தி இருப்பதாக கேள்விப்பட்டேன். அங்கே இந்தத் துறை மூலம் வேலை செய்த அதிகாரியை மாவட்ட ஆதிதிராவிடநலத் துறை அதிகாரியாக போட்டு இருக்கிறார்கள். அவர் தீவிரமாக, பிரைவேட் நெகோசியேஷன் மூலமாக இடங்களை கையகப்படுத்துகின்றார். ஆகவே, இவ்வாறு இந்தத் துறையின் மூலம் வேலை செய்து, இந்தத் துறையின் மூலம் பதவி உயர்வு கொடுத்து, அந்த அதிகாரிகளை மாவட்ட ஆதிதிராவிட நலத் துறை அதிகாரிகளாக நீங்கள் போடுவீர்களேயானால் இன்னும் அதிகமான இடங்களைத் தேர்வு செய்து இந்தத் துறைக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்க முடியும். அவ்வாறு செய்கின்ற அதிகாரிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் – அவ்வாறு சிறப்பாக நிலம் கையகப்படுத்துகின்ற அதிகாரிகளை ஊக்குவிக்கின்ற வகையில் சிறப்புத் திட்டம் ஒன்றை, சிறப்புத் பரிசுத் திட்டம் அல்லது அவர்களுக்கு – ஆதிதிராவிடநலத்

துறையில் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபோல் சன்மானம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இந்தத் துறையின் கீழ் *1225* பள்ளிகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. அவைகளை ஒட்டுமொத்தமாகக் கவனிப்பதற்காக ஆதிதிராவிட நலத்துறை பள்ளிகளுக்கு என்று ஒரு டைரக்டர் ஆஃப் எஜுகேஷன் என்று தனியாக ஒன்று போட்டு அதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சி.ஈ.ஓ. போட வேண்டுமென்று இந்த சமயத்தில் கோரிக்கையாக உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஈ.ஓ. (ஏ.டி.), டி.ஏ.டபிள்யூ. கண்ட்ரோலிலாவது அல்லது தாட்கோ நிர்வாகத்திலாவது வர வேண்டும். தாட்கோ நிர்வாகம் அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் இயங்க வேண்டும். அப்போதுதான் அந்த தாட்கோ நிர்வாகம் நல்ல முறையில் செயல்படும். தாட்கோ நிர்வாகத்திலிருந்து கடன் வழங்கும்போது, அரசு விழாக்களில் அந்தக் கடன்களை வழங்குகின்றபோது அனைத்துப் பயன்களும் பொது நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கினால், யார் யாருக்கு தாட்கோ நிறுவனம் கடன் வழங்குகின்றது; தாழ்த்தப்பட்ட மக்கள் இல்லாமல் மற்றவர்கள் இந்த கடன்களைப் பெறாமல் இருப்பதற்கு இந்தத் திட்டம் நல்ல முன்னேற்றமான திட்டமாக அமையும் என்பதை இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். தாட்கோ மூலம் கொடுக்கிற இந்த மானியம் *20* விழுக்காடு மார்ஜின் மனியாகக் கொடுக்கிறார்கள். இந்த மார்ஜின் மனியை வங்கிகளில் மறைமுகமாக வரவு வைத்துக்கொண்டு கடன் கொடுத்ததாக கணக்கு வைத்துக் கொள்கிறார்கள். ஆகவே, மார்ஜின் மனியை அதிகமாகக் கொடுப்பதன் மூலம் அந்த நபர் கடன் பெற வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இந்தத் துறை மத்திய அரசிடம் வலியுறுத்தி மார்ஜின் மனியை *50* விழுக்காடு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *8-50*

ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக வழங்குகிற கறவை மாடுகள் டி.ஏ.டபிள்யூ., மூலமாகவோ அல்லது தாட்கோ மூலமாகவோ பெறுவதற்கு நீங்கள் கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒன்றியத்திற்கு ஒரு கோடி என்று சிறப்பான திட்டத்தை ஆரம்பித்தார்கள். அதைப்போன்ற இந்த ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதிகளில் பைப்லைன் எக்ஸ்டென்ட் செய்வதற்கும், தெரு விளக்குகளை வழங்குவதற்கும், குடிநீர் வசதியைப் பெறுவதற்கும், சாலை வசதியைப் பெறுவதற்கும், மயான சாலைகளுக்கும் சிறப்பான ஒரு திட்டத்தை ஆதிதிராவிட மக்கள் வசிக்கிற அந்தப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை எல்லாம் நிறைவேற்றுகிற வகையில் திட்டத்தை முதல்வர் அவர்களிடம் எடுத்துக்கூறி பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 சட்டம் படித்தவர்களை உயர் பதவியில் இருப்பவர்களிடம் பயிற்சிக்காக அனுப்புகிறார்கள். அதுபோன்ற மருத்துவர்களையும், என்ஜினியர்களையும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ட்ரெயினிங்கிற்கு அனுப்பினால் அவர்கள் திறமையானவர்களிடம் பயிற்சி பெற்று பிற்காலத்தில் தனியாக தொழில் செய்ய முன்வருவார்கள். ஆகவே, அதைப்போல மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் சிறப்பான திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுந்தரராஜ், உரையை முடித்து விடலாம். *(குறுக்கீடு)* ஒரே நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கைக் குறிப்பில் ஆதிதிராவிட மக்கள் 19.18 விழுக்காடு என்றும், எஸ்.டி. மக்கள் 1.03 விழுக்காடு என்றும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, இவைகள் எல்லாம் 20 விழுக்காட்டிற்கு மேல் இருக்கிறது. ஆகவே, உத்திரப்பிரதேசத்தில் இருப்பதை போல ஜனத்தொகை அடிப்படையில் ரிசர்வேஷனை கூட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் எடுத்துக்கூறி மாண்புமிகு அமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்புகள் எல்லாம் சென்சஸ் டிபார்ட்மென்ட் மூலம் கொடுக்கப்பட்டது. நானாகத் தயாரித்தது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: அந்த சென்சஸ் விவரங்களைப் பார்த்து தான் அதிகமாகக் கூட்ட வேண்டுமென்று இந்த சமயத்தில்

கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வியால் தான் இந்த மக்களை முன்னேற்ற முடியும். கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு துறைகள் வாயிலாக உதவ வேண்டும். கல்விக்காக 2000 கோடி செலவு செய்தாலும் ஆதிதிராவிட நலத் துறையில் பாதி விழுக்காடு ஆதிதிராவிட மக்களின் கல்விக்குத் தான் செலவு செய்யப்படுகிறது. ஆகவே இதனை ஆய்வு செய்து, இந்த மக்கள் எல்லாம் கடந்த 1990-91-ஐக் காட்டிலும் 70 விழுக்காடு 10 ஆம் வகுப்பில் இப்போது வாங்கியிருக்கிறார்கள். பிளஸ் 2 வகுப்பில் 1990-91-ல் 37 விழுக்காடு வாங்கியதைக் காட்டிலும் இப்போது 62 விழுக்காடு வாங்கி இருக்கிறார்கள். 100-க்கு 100 விழுக்காடு வாங்குகிற துறையாக இந்தத் துறை மாறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதோடு உரையை முடித்து விடவும். திரு.செ.கு. தமிழரசன், 5 நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1994 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக்கோரிக்கையின் மீது இந்தியக் குடியரசு கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலத்தின் அருமை கருதி இரத்தினச் சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஆயினும் கூட இது தமிழகத்திலுள்ள 1-1/2 கோடி சமுதாய மக்களின் பிரச்சினை என்பதால் நீங்கள் கொஞ்சம் நேரத்தை அதிகரித்துத் தர வேண்டுமென்று முதல் வேண்டுகோளை நான் வைத்துக் கொள்ள விரும்புகிறேன். வேண்டுமென்றால் வேறு கோரிக்கைகளில் என்னைப் பேசுவதற்கு அனுமதிக்க மறுத்தாலும் கூட, அந்த நேரத்தை எல்லாம் சேர்த்து இந்தக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 8-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தமிழரசன், மாண்புமிகு பேரவைத் தலைவரும் நானும், உங்களுக்கு அதிக நேரம் இந்த மானியத்தில் கொடுக்க வேண்டும் என்று தான் விரும்பிக் கொண்டு இருந்தோம். இருந்தாலும் கூட, இன்றும் இரவு நெடுநேரம் ஆகிவிடும் என்ற உறுப்பினர்களுடைய நிர்ப்பந்தம் எங்களுக்கு அதிகமாக இருக்கிறது. எனவேதான், இதையெல்லாம்

கருத்தில் கொண்டு, நீங்கள் சீக்கிரமாகப் பேசி முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு. செ. கு. தமிழரசன்: எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது நம்முடைய தமிழக முதல்வர், தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய ஆட்சியில், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் நலனிலும், வளர்ச்சியிலும் அதிக அளவிலே அக்கறை கொண்டு செயல்பட்டு வருவதை நான் உளப்பூர்வமாக பாராட்டுகிறேன். அண்ணல் அம்பேத்கார் பெயரிலே மணிமண்டபம், அண்ணல் அம்பேத்கார் பெயரிலே போக்குவரத்துக் கழகம், அண்ணல் அம்பேத்காரின் சீரிய லட்சியங்களை நினைவாக்குகிற வகையிலே தாழ்த்தப்பட்ட, நலிந்த மக்களை பொருளாதாரத்திலே உயர்த்துவதற்கு தொழிற்பேட்டைகள், அண்ணல் அம்பேத்காரின் நெருங்கிய தோழராக, இந்தியக்குடியரசுக் கட்சியின் முதல் தலைவராக விளங்கிய பேராசிரியர் தந்தை சிவராஜ் அவர்களுக்கு திருவுருவச் சிலை, அண்ணல் அம்பேத்காருக்கு நெருங்கிய நண்பராக விளங்கிய தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களுடைய குடும்பத்திற்கு ரூபாய் 1 லட்சம் நிதி உதவி, தாழ்த்தப்பட்ட மக்களை கல்வித்துறையிலே வளர்த்து, அவர்களுக்காக பயிற்றுவிக்கிற ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை, ஆதி திராவிட மாணவியர்களுக்கு தனி சிறப்புத் திட்டத்தின் மூலம் உதவித் தொகை, வேதஆகமக் கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு, என்று இப்படி சாதனைகளின் பட்டியல் இந்த அரசிலே நீண்டு கொண்டேயிருக்கிறது. இதற்கெல்லாம் மகுடமாய் வருகிற 30 ஆம் தேதி நம்முடைய தமிழக முதல்வர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் உற்ற தோழராக விளங்கிக் கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள 20 கோடி மக்களின் ரட்சகராக விளங்கிக் கொண்டு இருக்கிற பாபா சாகிப் அண்ணல் அம்பேத்காரின் திருவுருவச் சிலையை சென்னையிலே திறக்க இருக்கிறார் என்ற நற்செய்தியை நான் இங்கே பாராட்டாமல் இருக்க முடியாது. எனவே இவைகளை எல்லாம் பாராட்டுகிற நேரத்தில், சுடர் விளக்காக இருந்தாலும், அது பிரகாசமாக எரிவதற்கு ஒரு தூண்டுகோல் தேவை என்ற வகையிலே, இந்தத் துறை குறித்து என்னுடைய சில கருத்துக்களை, யோசனைகளை, கோரிக்கைகளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

இந்தத்துறைக்கு ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு. 70 ஆண்டுக் காலத்திற்கு மேலே, இந்தத் துறை தமிழகத்திலே இயங்கிக் கொண்டு இருக்கிறது. 1920-களிலே இந்தப் பேரவை மேலவையாக விளங்கியபோது

எங்களுடைய பிரதிநிதியாக அன்றைக்கு விளங்கிய எங்களின் முதுபெரும் தலைவர், தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், அன்றைக்கு பிரிட்டிஷ் அரசராக விளங்கிய வைஸராயிடமே பேசி, இந்தத் துறையை முதலிலே லேபர் டிபார்ட்மென்ட் என்று சொல்லப்படுகிற தொழிலாளர் துறையாக உருவாக்கினார்கள். அதற்குப் பிறகு, இது காங்கிரஸ் ஆட்சியின்போது அரிஜன் வெல்ஃபேர் டிபார்ட்மென்ட் என்று மாறி, அந்தப் பெயரிலே எங்களுக்கு உடன்பாடு இல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தபோது, இந்தத் துறையின் பெயரை மாற்றி, ஆதிதிராவிடர் நலத்துறையாக மருவி, இன்றைக்கு ஒரு நீண்ட பாரம்பரியத்தோடு இந்தத் துறை செயல்பட்டு வருகிறது. எனவே, இத்தகைய நீண்ட பாரம்பரியம் மிக்க இந்தத் துறையில், 1½ கோடி மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிற இந்தத் துறையில், நிறைய கருத்துக்களை லேசாகக் கோடிட்டுக் காட்ட வேண்டிய அவசியம் எனக்கு இருக்கிறது. இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறபோது, இந்தத் துறையின் நிதி ஒதுக்கீட்டிலே பாதி அளவிற்கும் மேலே கல்வித் துறைக்காகப் போய்விடுகிறது. ஏனெனில், இந்தத் துறை 1225 கல்வி நிறுவனங்களை இயக்கிக் கொண்டிருக்கிறது. 928 மாணவர் விடுதிகளை இயக்கிக் கொண்டிருக்கிறது. இவைகளைச் செயல்படுத்துவதற்காக மட்டுமே இந்தத் துறையின் பாதிப் பங்கிற்கு மேலே போய்விடுகிறது. எனவே, வளர்ச்சிப் பணிகளுக்கு என்று வருகிறபோது, கொஞ்சம் இதிலே நெருக்கடி இயல்பாகவே ஏற்பட்டுவிடுகிறது. எனவே, நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு தாழ்த்தப்பட்ட மக்களுடைய பங்கு இருக்கிறது. ஐந்திலே ஒருவன் தாழ்த்தப்பட்டவனாக, நலிந்தவனாக, ஒடுக்கப்பட்டவனாக, நீண்டகாலமாக அடக்கப்பட்டவனாக, தீண்டப்படாதவனாக, தாழ்த்தப்பட்டவன் தள்ளப்பட்டு வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறான். நாம் ஐந்தில் ஒரு பங்கு மக்கள் தொகையைப் பிரதிபலிக்கிற அவர்களுடைய பிரச்சினைகளை, அவர்களுடைய வளர்ச்சியை, அவர்களுடைய பாதுகாப்பை, அவர்களுடைய நலனை எடுத்து வைக்கிற இந்தத் துறைக்கு, 150 கோடி ஒதுக்குவது கொஞ்சம் யோசிக்கவேண்டிய ஒன்று. எனவே, மிக அதிக அளவிலே இன்றைக்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதை நான் முதலிலே வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தத் துறை வருவாய்த்துறையிலேயிருந்து சட்ட ரீதியாக பிரிக்கப்பட்டு, 15 ஆண்டுக்காலம் ஆகிறது. 1979-லே வருவாய்த்

துறையிலே இருந்து, சமூகநலத்துறையிலேயிருந்து ஆதி திராவிடர் நலத்துறை என்று தனியாகப் பிரிக்கப்பட்டது. 15 ஆண்டுக்காலம் ஆகியும்கூட, இன்னமும் வருவாய்த் துறையோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது. முழு சுதந்திரத்தோடு இதை நிர்வகிப்பதற்கு இயலாமல் இருக்கிறது. இன்னமும் நம்முடைய ஆதிதிராவிட நலத்துறை அமைச்சரோ அல்லது ஆதி திராவிட நலத்துறை இயக்குநரோ நினைத்தால் ஒரு மாவட்ட ஆதி திராவிட நல அலுவலரை மாற்றுவதற்குக் கூட முடியாது. அதற்கு வருவாய்த்துறையிடமிருந்து அனுமதி பெறவேண்டும். எனவே இது சுதந்திரமாக இயங்குவதற்கு இந்த நிர்வாகத்தை முழு சுதந்திரமாக இயக்குவதற்குரிய செயல்பாடுகளை நீங்கள் விரைவில் செயல்படுத்திட வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 9-00

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். ஒரு கிராமத்திற்குப் போய் அங்கே இருக்கிற ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுடைய வீட்டுமனைப் பட்டா பிரச்சினை பற்றிப் பேசவேண்டுமென்று சொன்னாலும்கூட அதிலே நிர்வாகச் சங்கடம் இருக்கிறது. எப்படி என்று சொன்னால் மூன்று வட்டத்திற்குச் சேர்ந்து ஒரு தனி வட்டாட்சியர். ஏறக்குறைய 80 கிலோமீட்டர் சுற்றளவிற்கு ஒரு தனி ஆதிதிராவிட நல வட்டாட்சியர் இருக்கிறார். ஒரு கிராமத்திலேயிருந்து எங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்ற கோரிக்கையுடன் விண்ணப்பம் கொடுத்தால், அவர் அந்த 60 கிலோமீட்டர் போகவேண்டுமென்று சொன்னால், பஸ்ஸிலேதான் போகவேண்டும். இல்லாவிட்டால் அவர் வேறு ஏதாவது மிதி வண்டியிலோ அல்லது வேறு வண்டியிலோ போகவேண்டும். அவர்களுக்கெல்லாம் வாகன வசதியே கிடையாது. தனி வட்டாட்சியருக்கு தனி ஜீப் கிடையாது. எனவே அங்கே பிரச்சினை எழுகிறபோது அந்த கிராமத்துக்காரர்களே யார் எங்களுக்கு வீட்டுமனை வேண்டுமென்று கேட்கிறார்களோ, அவர்களே ஏதாவது ஒரு வாடகை வண்டியை வைத்தால்தான் அவர் அந்த வாடகை வண்டியிலே போகமுடியும். இல்லாவிட்டால் வேறு வழியில்லை. ஆக அப்போதே பிரச்சினை தொடங்கிவிடுகிறது. காலதாமதத்திற்கும், நிர்வாக சங்கடத்திற்கும் வழி ஏற்பட்டுவிடுகிறது. எனவே இதை மாற்றுவதற்கு நீங்கள் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலரானாலும், தனி வட்டாட்சியரானாலும் அவர்களுக்கு உரிய வசதிகளை, உரிய வாய்ப்புகளை உருவாக்கித்தர வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு கல்வி, பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்று துறைகளிலே, மூன்று நிலையிலும் தாழ்த்தப்பட்ட மக்களை நாம் முன்னேற்றியாகவேண்டும். கல்வித் துறையை எடுத்துக்கொள்வோமேயானால், நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுக்கு பெருமளவிற்கு ஆதிதிராவிடர் நலத் துறையிலே ஊக்கம் தந்து கொண்டிருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். மாணவர்களுக்கும் அத்தகைய ஊக்கம் தரப்படுகிறது. வரவேற்கிறேன். இப்போது நம்முடைய அரசியல் சட்டத்தின் வழிகாட்டு கோட்பாடுகளை ஏற்று, நம்முடைய தமிழக அரசு 14 வயது வரையில் கட்டாயக் கல்வியை நிர்பந்தித்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதேபோல் ஆதிதிராவிட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றபோது எல்லா மட்டத்திலும் அவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்கவேண்டும். அவர்களுக்கு கட்டணம் வசூலிக்கத் தேவையில்லை என்ற ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக இன்றைக்கு தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும், தனியார் பொறியியல் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. ஆதிதிராவிட தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த அரசு பலமுறை எச்சரிக்கிறது. கல்வித்துறை எச்சரிக்கிறது, ஆதிதிராவிடர் நலத்துறை எச்சரிக்கிறது. ஆனாலும் இந்த தனியார் கல்லூரிகள் இந்தக் கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறது. நடைமுறையிலே இது இருக்கிறது. எனவே நீங்கள் ஒரு கடுமையான சட்டத்தின் மூலம் அத்தகைய பள்ளிகளை, அத்தகைய கல்லூரிகளின் அங்கீகாரங்களை ரத்து செய்வோம் என்று ரத்து செய்து காட்டுவதன்மூலம் நீங்கள் இதை செயல்படுத்திட வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். நம்முடைய ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிகளில் 928 மாணவர் விடுதிகளிலே பாதிக்கு மேற்பட்ட மாணவர்கள் விடுதிகளுக்கு கட்டிடம் கிடையாது. (குறுக்கீடு) இன்னும் சப்ஜெக்டிற்கே வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 10 நிமிடத்திற்கு மேலாகிவிட்டது. நேரமில்லை. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: கட்டிடங்கள் கிடையாது. எனவே எல்லா விடுதிகளுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கு நீங்கள் நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் புதிய விடுதிகள் கட்டப்படுகின்றன. இந்த ஆண்டு கூட 20 விடுதிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதாக இன்றைக்குக் கூட செய்தித் தாளில் விளம்பரம் வந்திருக்கிறது. ஆனால் அதிலே 20 விடுதிகளிலே 8 விடுதிகள்

தென்னாற்காடு மாவட்டத்திற்கே வழங்கப்படுகிறது. இதைப் பரவலாக்கவேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள் தென்னாற்காடு மாவட்டம் என்பதினாலே அந்த மாவட்டத்திற்கே 8 விடுதிகள்...... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் பேசுகிறபோது தெரிவித்ததற்கு நான் தெரிவிக்க விரும்புவது- தென்னாற்காடு மக்களுடைய பாப்புலேஷன், புள்ளிவிவரப்படி அதிகம். இதுநாள் வரையில் எங்களுக்கு ஒரு சுதந்திரமாக இதுபோன்றவைகள் கிடைக்கவில்லை. எத்தனையோ அமைச்சர்கள் இருந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் இன்றைக்கு ஹாஸ்டல்களும், பில்டிங்குகளும் அந்தப் பகுதிக்கு கிடைக்கும் வாய்ப்பு வருகிறது. அதைத் தயவுசெய்து தடுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தமிழரசன், ஒரேநிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு.செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏராளமான விடுதிகள் கட்டப்பட வேண்டும். எனக்கு அதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் 20 மாணவர் விடுதிகளில் 8 நீங்களே எடுத்துக் கொள்ள வேண்டுமா? 1-1/2 கோடி மக்களிலே 50 லட்சம் தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டில் 13 விடுதிகளில் 7 விடுதிகள் மாணவர் விடுதி. 6 விடுதி பெண்கள் விடுதி. ஆனால் தென்னாற்காடு மாவட்டத்திற்கு 2 விடுதிகள் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர் சொல்வது ஒரு புதிய ஹாஸ்டல் திறப்பது பற்றி. ஆண்டிற்கு 12 கட்டிடங்கள்தான். 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழரசன், ஒரே நிமிடத்தில் பேசி முடிக்கவேண்டும்.

பிற்பகல் 9-05

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் நான் நேரத்தின் அருமை கருதி ஆழமாகப் போக விரும்பவில்லை. இந்தப் பள்ளி மாணவர்களுக்கு, கல்லூரி மாணவர்களுக்கு அரசின் சார்பிலே தரப்படுகிற உதவித் தொகை

இருக்கிறதே, ஸ்காலர்ஷிப் அவைகளை கல்லூரியின் தொடக்க காலத்திலேயே தரவேண்டும். கல்லூரி தொடங்கிய சில மாதங்களுக்குள் அவைகளை வழங்கினால் அந்த மாணவர்களுக்கு அது உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் மனு போடவேண்டும். ரென்யூவல் அப்ளிகேஷன் போட்டு செப்டம்பர் மாதத்திலேயே கொடுக்கப்பட்டு விடுகிறது. புதிய மனுதாரர்களுக்கு நவம்பர் மாதத்திற்குள் கொடுக்கப்பட்டு முடிந்து விடுகிறது.

திரு. செ. கு. தமிழரசன்: அதேபோல ஆதிதிராவிட நலத் துறையிலே இருக்கிற ஆசிரியர் சங்கங்களை அங்கீகரிக்க வேண்டும். ஆதி திராவிட நலத் துறையிலே விடுதிகளிலே இருக்கிற உணவுக் கட்டணம் இருக்கிறதே, அது விலைவாசி உயர்விற்கு ஏற்ற தொகை இல்லை. எனவே அதைப் பெருமளவிற்கு........

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு ஜூன் மாதம் 1993 ஆம் ஆண்டிலேயிருந்து உயர்த்தி இருக்கிறோம் என்பது உறுப்பினருக்கும் தெரியும். ஆனால் நிதி நிலைமையையும் யோசிக்க வேண்டும். வருகிற காலங்களில் இது போன்ற கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழரசன், உரையை முடித்து விடுங்கள். நேரம் இல்லை. எல்லா உறுப்பினர்களும் போக வேண்டும் என்கிறார்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: அதேபோல ஆதிதிராவிட நலத் துறையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது கிடைப்பதற்கு நீங்கள் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும். கல்வி, பொருளாதாரம் ஆகிய இரண்டு நிலைகளிலும் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்கு நாம் வழி வகுக்க வேண்டும். பொருளாதாரத்தைப் பொறுத்த வரையிலும் நாம் தாட்கோ வழியாக சிறு தொழில் துவங்குவதற்கு ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கடன் வழங்குகின்றோம். ஆடு வளர்ப்பதற்கு, மாடு வளர்ப்பதற்கு, சைக்கிள் கடை, மளிகைக் கடை, செங்கல் சூளை இப்படிப்பட்ட தொழில்களுக்கு நாம் உதவுகிறோம். அதிலே 2, 3 ஆண்டுகள், சில நேரங்களில் 5 ஆண்டுகள் கூட டிலே ஆகிறது. நாம் இங்கே ஒதுக்கீடு செய்தாலும் கூட வங்கிகளிலேயிருந்து அவர்களுடைய பங்கு இருக்கிறதே அதைக் கொடுப்பதற்கு கால தாமதம் ஏற்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்ற பிறகு தான் 20 கோடியே 72 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் செலவில், 52,458 பேர்களுக்கு கொடுத்திருக்கிறோம். பயன் பெற்றிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது ஒருவருக்கு நமது ஆதிதிராவிட நலத்துறையிலே இருந்து மானியம் வழங்கி விடுகிறார்கள். 1 லட்சம் அவர்களுடைய கடன் என்று வைத்துக் கொள்ளுங்கள். 15 ஆயிரம் நம்முடைய மானியம் உள்பட நம்முடைய பங்கை, ஆதிதிராவிட நலத்துறை வழங்கிவிடுகிறது தாட்கோ வழங்குகிறது. ஆனால் வங்கி தருவது இல்லை. வங்கி தராமல் 3 ஆண்டுகள் 4 ஆண்டுகளுக்கு எல்லாம் தாமதப்படுத்துகின்ற நிலைமை இருக்கிறது. எனவே நான் கூறுகிற யோசனை—நீங்கள் தயவுசெய்து தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு தனி வங்கி ஏற்படுத்த வேண்டும். ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு குறிப்பு நம்முடைய அரசிலே இருக்கிறது. 40 கோடி ரூபாய்க்கு மேலே நாம் டெப்பாசிட் வைத்திருக்கிறோம். இந்த 40 கோடியையே ஒரு அடிப்படைத் தொகையாக வைத்து ஏற்கெனவே இருக்கிற ஆலோசனையை, அரசின் குறிப்பை ஏற்று ஒரு தனி வங்கி ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் குறைந்த பட்சம் இந்த தேசிய வங்கிகளை நம்பாமல் கூட்டுறவு வங்கிகளிலாவது இதை வழங்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு வங்கிகளில் இதை டெபாசிட் செய்து கூட்டுறவு வங்கிகளை நீங்கள் பயன்படுத்துவீர்களேயானால், கூட்டுறவு வங்கிகளில் அதை வழங்குவார்கள். ஏனென்றால் நான் பல இடங்களிலே பார்க்கிறேன். மானியத் தொகையை மட்டும் இந்த வங்கி தருகிறது. கடன் தொகையை தருவது இல்லை. ஒரு சாதாரண ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவனுக்கு கடன் வழங்குகிறபோது மானியத் தொகையை மட்டும் வழங்கி விட்டு கடன் தொகையை தராவிட்டால் அவன் வேறு என்ன செய்ய முடியும். அதிலே வேறு ஒரு சிக்கலும் இருக்கிறது. ஒரு எடுத்துக் காட்டாக சொல்கிறேன். ஒரு நகர்ப் புறத்திற்கு பக்கத்திலே 1-1/2 கிலோ மீட்டருக்கு பக்கத்திலே ஒரு கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்திலேயிருந்து ஒரு ஏழை தாழ்த்தப்பட்டவன், ஒரு டிரைவராக இருக்கிறவன் தனக்கு தொழில் துவங்குவதற்காக ஒரு கார் வாங்க கடன் கேட்டு விண்ணப்பிக்கிறான், வங்கியிலே அவனை விசாரிக்கிறார்கள். அவர்கள் விசாரித்து அந்த மனுவை நிராகரித்து விடுகிறார்கள். அதற்கு என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்றால்,

நீ கிராமத்திலே இருக்கிறாய். கிராமத்திலே ஒரு கார் ஓட்டிப் பிழைக்க முடியாது. அதில் வயபிலிட்டி இல்லை. கிராமத்திலே ஒருவன் கார் ஓட்டி கார் தொழிலிலே ஈடுபட முடியாது. டாக்சி தொழிலில் கிராமத்திலே வயபிலிட்டி இல்லை இதை நிராகரிக்கிறோம் என்று நிராகரிக்கிறார்கள். 1-1/2 கிலோ மீட்டர் தூரம் உள்ள நகரத்திற்கு வந்து அவன் கார் ஓட்டி பிழைத்துக் கொள்ள முடியும். ஆனால் அவர்கள் சொல்லுகிறார்கள் நீ கிராமத்திலே இருக்கிறாய், அதனால் வயபிலிட்டி இல்லை என்று சொல்லுகிறார்கள். நகர்ப் புறத்திலே ஒரு விண்ணப்பம் போட்டால் இது போலி விண்ணப்பம், இங்கே அதற்கான ஜூரிஸ்டிக்ஷன் இல்லை, நகர்ப்புறம் என்று சொன்னால் அது எங்கள் வங்கியிலே இல்லை, அதற்கு வேறு வங்கிக்குப் போக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்படி நிர்வாகச் சிக்கல் இருப்பதால்தான் நான் சொல்ல விரும்புகிறேன், எனவே நீங்கள் ஒரு தனி வங்கியிலோ அல்லது கூட்டுறவு வங்கியிலோ இதை பொறுப்பெடுத்து செயல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அந்த வங்கிகளுக்கு நீங்கள் கொடுக்கிற டெப்பாசிட்டை மறுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்து விடுங்கள்.

பிற்பகல் *9-10*

திரு. செ. கு. தமிழரசன்: அதுமட்டுமல்ல, இந்த வங்கிகளிலே தாழ்த்தப்பட்டவர்களிடம் கொலாட்ரல் செக்யூரிட்டி என்று சொல்லப்படுகின்ற பிணை ஜாமீன் கேட்டால்—ஏற்கெனவே வலுவிழந்து பொருளாதார ஆதாரமற்று கிடக்கின்றவர்கள் எந்த ஜாமீனைத் தருவார்கள்? எனவே இந்த முறையையும் ஒழிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். வீட்டுமனையை பொறுத்தவரையிலே 2,000க்கு மேற்பட்ட வழக்குகள் வீட்டுமனை பிரச்சினை குறித்து தமிழகத்திலே இருக்கின்றன. இதற்காக ஒரு தனி நீதிமன்றம் வேண்டும் என்று பலமுறை நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: நான் கேட்கிறேன். *2,000* என்ற புள்ளிவிவரம் தெரிய வேண்டும். எனக்கு கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரம் *907* என்று கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு கிடைத்த தகவல் எதன் மூலமாக வந்தது என்று தெரிவிக்க வேண்டும்.

திரு. செ. கு. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து சமுதாய அமைப்பிலிருந்து பெற்ற

தகவலைத்தான் நான் சொல்கிறேன். 2,000க்கு மேற்பட்ட வழக்குகள் தொடுக்கப்பட்டு இருக்கின்றன. (குறுக்கீடு) சரி, உங்கள் கணக்கு. நான் சொல்ல விரும்புவதெல்லாம் நம்முடைய மாநில அரசு இதற்காக ஒரு தனி நீதி மன்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை போட்டு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. எப்படி நெடுஞ்சாலைத் துறையை விரிவுபடுத்துவதற்கு எந்தக் கட்டிடங்களை வேண்டுமானாலும் இடித்து நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துகொள்கிறார்களோ, எப்படி மின்சாரத் துறை அவர்கள் எந்த நிலத்தில் வேண்டுமானாலும் மின்சார கம்பங்களை வைத்து மின்சாரக் கம்பிகளை சேர்த்துக்கொண்டு போகிறார்களோ அதுபோல ஆதிதிராவிடர் நலத்துறையும் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்கின்றபோது யாரும் எதிர்த்து வழக்கு போடக் கூடாது, நீதிமன்றத்திற்கு போகக் கூடாது என்ற நிலைமையை கொண்டுவருவதற்கு நீங்கள் அந்த சட்டத்தையாவது ஒரு 'எஸ்மா' (E.S.M.A.) சட்டத்தை உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு தனி நீதிமன்றத்தையாவது நீங்கள் மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று ஏற்படுத்திட வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

அதேபோல நீங்கள் இந்த கிராமப்புறங்களிலே 3 சென்ட் வழங்குகின்ற நிலம் இருக்கின்றதே பட்டா, அது இப்போது குறைந்து 1-1/2 சென்ட்டாக 2 சென்ட்டாக மாறியிருக்கிறது. நீங்கள் நகர்ப்புறங்களிலே வேண்டுமானால் 1-/2 சென்ட் கொடுங்கள், இல்லாவிட்டால் 2 சென்ட் கொடுங்கள். ஆனால் கிராமப்புறங்களிலே ஆரோக்கிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு வசதியாக ஒரு என்வைரான்மென்ட்டை ஏற்படுத்துவதற்கு நீங்கள் 3 சென்ட் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) சில நிமிடங்களில் முடித்து விடுகிறேன். நம்முடைய ஆதிதிராவிடர் நலத்துறையின் ஒரு துணை அமைப்பாக சகோதர அமைப்பாக ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் இருக்கிறது. அதற்கு பெயரே வீட்டு வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம். ஆனால் அது வீடு கட்டுவதை நிறுத்தி சில ஆண்டுகள் ஆகின்றது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இந்த வீடு கட்டுகிற திட்டத்தை அவர்கள் செயல்படுத்துவதை மாற்றி உள்ளாட்சித்துறை அமைப்புகளுக்கு அவர்களை ஏஜன்சிகளாக வைத்து அதைக் கொடுத்திருக்கிறார்கள்.

எனவே, மீண்டும் தாழ்த்தப்பட்டோர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் இருக்கிறதே, அதுவே வீடு கட்டுகின்ற வாய்ப்பை நீங்கள் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே

போல அதிலே சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையிலே ஆதிதிராவிடர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த பங்க் வைத்துத் தருவது பெட்டிக்கடை வைத்துத் தருவது இருந்தது. அதிகபட்சம் 12,000 ரூபாய் அந்த பங்க் இருக்கும். கடந்த ஆண்டும் அதற்குமுன் ஆண்டும் 2 ஆண்டுக் காலமாக இத்தகைய பங்க் வழங்கவில்லை. முதல் ஆண்டு வழங்கியிருக்கிறோம். கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக நாம் வழங்கவில்லை. எனவே நீங்கள் இதிலே விரைவு காட்டி வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சுகாதாரமற்ற தொழில்களிலே ஈடுபடுகிறவர்களுக்கு நாம் நிச்சயமாக மிக மனித நேயத்தோடு அன்போடு அவர்களைப் பார்த்து ஏதாவது திட்டம் தீட்ட வேண்டும். இந்தக் காலத்திலும் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், விஞ்ஞானம் இவ்வளவு வளர்ந்திருக்கின்ற வேளையிலும் இன்னமும் மனிதன் மலத்தை மனிதன் சுமக்கின்ற அப்படிப்பட்ட ஒரு இழிவு இருக்கிறது. கிராமப்புறங்களிலே, நகராட்சி பகுதிகளிலே இருந்துகொண்டிருக்கிறது. அதை அறவே ஒழித்திட வேண்டும். மத்திய அரசும் இதற்காக சட்டம் இயற்றி இருக்கிறது. ஆனால் நடைமுறைப்படுத்துவதிலே சிக்கல் இருக்கிறது. நாம் கூட 40 இலட்சம் ரூபாயை அதற்காக ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் என்ன திட்டங்களை செயல்படுத்தப் போகிறோம் என்கிற விரிவான திட்டங்களை நாம் வகுக்க வேண்டும் என்பதை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இட ஒதுக்கீடு முறை அனைத்து துறைகளிலும் மிகச் சரியாக கவனிக்கப்படுகிறதா, பேக்-லாக்ஸ் என்று சொல்லப்படுகின்ற நிலுவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றதா என்பதை ஆராய்வதற்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஒரு தனி ஆணையம்-செப்பரேட் கமிஷன் பார் ஷெட்யூல்டு கேஸ்ட்ஸ் டெவலப்மெண்ட்.......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—பதிலுரையின்போதே சொல்ல இருக்கிறீர்கள். எனவே கொஞ்சம் குறுக்கீடு இல்லாமல் - அவர் வேகமாக முடித்துவிட்டால் உங்களுடைய பதிலுரையில் அதையெல்லாம் சொல்லலாம். வேகமாக பேசி முடியுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1921லே இந்த பேரவையிலே இட ஒதுக்கீட்டு முறை செயல்படுத்தத் தொடங்கியது. ஆணை வந்தது. 70 ஆண்டுக்காலமாகியும் ஒரு துரதிஷ்டமான முடிவு என்னவென்றால் அதிலே ஒரு வருத்தமான செய்தி என்னவென்றால் இன்னமும் பல துறைகளிலே இந்த 18

சதவீதம் நிரப்பப்படவே இல்லை. 70 ஆண்டுக்காலமாக இவைகளை நாம் பின்பற்றியும் எல்லா துறைகளிலும் 18 சதவீதம் நிரப்பப்படவே இல்லை. கூட்டுறவுத் துறை ஆனாலும்........

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு *20.7.93* அன்று ஆணையிட்டு அஸெஸ்மெண்ட் எடுத்திருக்கிறோம். பேக்லாக் வேகன்ஸீஸ் எல்லாம் அஸெஸ்மெண்ட் எடுத்து *7* துறைகள் இதை நிறைவேற்றி இருக்கின்றன. மீதியுள்ள துறைகள் நிறைவேற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க ஆணையிட்டிருக்கிறார்.

பிற்பகல் *9-15*

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை வேகப்படுத்த வேண்டும்; முழுமைப் படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் நான் சொல்ல விரும்புகிறேன். இப்போதைய மக்கள் தொகை விகிதாசாரம் தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை *21* சதவீதத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, வருங்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை *19* விழுக்காட்டிலிருந்து *25* விழுக்காடாக உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்துவதிலே நடைமுறையிலே சில சிக்கல்கள் வந்து விடுகின்றன. அதற்கு அதிகாரிகளைப் போடும்போதே அந்த அதிகாரிகள் தங்களுக்கு ஏதோ தண்டனை வழங்கப்பட்டதாகக் கருதுகிறார்கள். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்திற்கு அதிகாரிகளை நியமிக்கின்றபோதே அப்படிப்பட்ட ஒரு இயல்பான தாழ்வு எண்ணம் அவர்களுக்கு வந்து விடுகிறது. எனவே, இதை வேகப்படுத்த வேண்டுமானால், இதை முழுமையாக செயல் படுத்த வேண்டுமானால், கடந்த கால புள்ளிவிவரங்களில் பார்த்தால் நூற்றுக்கு *5* சதவீதம் வழக்குகள் கூட நிறைவுபடவே இல்லை; தண்டனைக்கு ஆளாகவே இல்லை. அதற்கு என்ன காரணம் என்றால் இத்தகைய மந்தத் தன்மை தான். எனவே, அவர்களுக்கு ஒரு அட்வைசரி போர்டு அறிவுரைக் கழகம் என்ற ஒரு கழகத்தை ஓய்வு பெற்ற நீதிபதி, பொது வாழ்வில் ஈடுபட்டு இருப்பவர்கள் போன்றவர்களை வைத்து ஏன் இந்த வழக்குகள் இத்தகைய நிலைக்கு ஆளாகியிருக்கிறது; ஏன் தண்டனை தர முடியவில்லை என்பதை ஆராய்ந்து சொல்ல ஒரு அறிவுரைக் கழகத்தை நாம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன். பல துறைகளிலே ஆதி

திராவிடர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக, நெடுஞ்சாலைத் துறையிலும், பொதுப் பணித் துறையிலும் 5 லட்சம் ரூபாய் வரையில் இருக்கிற ஒப்பந்தங்களை ஒப்பந்தம் புள்ளி இல்லாமலேயே, டெண்டர் இல்லாமலேயே தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கலாம் என்று இருக்கிறது. பிற துறைகளில் அப்படி இருக்கிறபோது, ஆதி திராவிட நலத் துறையில் அதைப் பின்பற்ற வேண்டாமா? ஆதி திராவிட நலத்துறையில் இருக்கிற குறைந்தபட்ச அந்த ஒப்பந்தங்களை ஆதி திராவிடர்களுக்கு வழங்கவேண்டுமென்று இருந்தாலும் கூட ஆனால் இப்போது அந்த நிலை மாறி சில மாவட்டங்களிலே வேறு சிலருக்கு வழங்குகின்ற ஒரு நிலை உருவாகியிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் அப்படி இருக்கிறது. வேறு சில மாவட்டங்களில் இருக்கிறது. எனவே, இந்தத் துறையின் ஒப்பந்தங்களை மிக குறைந்தபட்ச அந்தப் புள்ளிகளை 2 லட்சமோ, அல்லது 4 லட்சமோ நீங்கள் வேண்டுமானால் ஒரு வரையறை வைத்து....

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன பணி என்பதை விவரமாகச் சொல்ல வேண்டும். பணி அப்படிப்பட்ட பணி கிடையாது. லட்சக்கணக்கான திட்டங்கள் எல்லாம் டெண்டர் மூலமாக கொடுக்கப்படுகிறது. 6 லட்சத்திற்கு உட்பட்ட திட்டம் இவர்களுக்குக்கொடுக்கப்படும். அதுபோன்ற பணி என்ன என்பதை விவரமாகச் சொல்ல வேண்டும்.

திரு. செ .கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பொதுப் பணித் துறையில் அப்படிப்பட்ட ஒரு சட்டம் இருக்கிறது. சுமார் 2 லட்சம் ரூபாய் வரையில் இருக்கிற ஒப்பந்தங்களை ஒப்பந்தப் புள்ளி பெறாமலேயே, டெண்டர் பெறாமலேயே, தாழ்த்தப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் இருந்தால் நேரடியாக அவர்களுக்கு அந்த காண்டிராக்ட் தரலாம் என்று இருக்கிறது. பொதுப் பணித் துறையில் இந்தச் சட்டம் இருக்கிறது. ஆதி திராவிட நலத்துறையில் அந்த 2 லட்சம் வரையில் நீங்கள் செயல்படுத்தினால் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட நலத்துறையில் இருக்கிறது. 6 லட்ச ரூபாய்க்கு உட்பட்டு இருந்தால் நிச்சயமாக கொடுக்கப்படும்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் கேட்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் வேறு சமுதாயத்திற்கு தரப்பட்டிருக்கிறது. ஏன் தரப்பட்டது, அது ஏன் மீறப்பட்டது?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இலாக்காவில் என்ற விவரம் தேவை. நம்முடைய துறையைப் பொறுத்தவரையில் அதுபோல் பணி நடக்கவில்லை. ஆனால் இந்த ஹாஸ்டல் கட்டுகிற பணிகள் எல்லாம் 20 லட்சம், 24 லட்சம் என்ற பணிகள் எல்லாம் டெண்டர் மூலமாகத்தான் செய்யப்படுகிறது.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயானப் பாதைப் போடுதல், ஆதி திராவிட நலப்பள்ளிகளைச் சீரமைத்தல், ஆதி திராவிட நலப் பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள், கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற வேலைகள் தர்மபுரி மாவட்டத்தில் வேறு மக்களுக்குத் தரப்படுகிறது. அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெண்டர் கொடுப்பது உட்பட்டுதான் கொடுக்க முடியும். ஆதி திராவிடர்களுக்கு கொடுக்கவேண்டிய டெண்டர்களாக இருந்தாலும் கூட அதிலே டெண்டர்கள் கோருகின்ற ஆதி திராவிட பெருமக்கள் அந்த நிபந்தனைகளுக்கு உட்படாமல் இருந்தால் அவர்களை விட்டுவிட்டு வேறு ஒருவருக்கு கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. That is Law of Contract. ஒப்பந்தங்களுடைய சட்டமே அதுதான். ஒருவர் ஒப்பந்தத்தை கேட்டு விட்டு அந்த நிபந்தனைகளுக்கு அப்பால் நிற்பாரானால் அவர்களுக்கு அந்த ஒப்பந்தத்தைக் கொடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்து விடலாம்.

திரு. செ. கு. தமிழரசன்: இப்போது முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களை ஒப்பந்தங்களில் ஊக்குவிக்கவேண்டும் என்று ஒரு அனுதாபத்தோடு, ஒரு கனிவோடு இதைப் பரிசீலிக்கவேண்டும் என்பதற்காகத் தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். டெண்டர் பெறாமலேயே தரலாம் என்று இருக்கிறது. பொதுப் பணித் துறையில் இதைச் செய்கிறார்கள். (குறுக்கீடு) பொதுப் பணித் துறையில் 2 லட்சம் ரூபாய் வரையில் அப்படித் தரலாம். (குறுக்கீடு) தருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசி முடித்து விடலாம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காண்டிராக்ட் கொடுப்பதிலே ஆஃபர் என்ற ஒரு முறையிருக்கிறது. ஆனால் அது கம்யூனலாக இவர்களுக்குத் தான் தரவேண்டுமென்று யாரும் கட்டாயப்படுத்த முடியாது. யார் அந்தப் பணியை சரியாகச் செய்வார்களோ அவர்களது திறமையைப் பார்த்து இந்தப் பணிகள் தரப்படுகின்றன.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 லட்சம் ரூபாய் அளவிலே நியமனமாக ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கலாம் என்று திட்டமிருக்கிறது. அதன்படி தான் டாக்டர் அம்பேத்காருடைய மணி மண்டபம் கட்டக்கூடிய திட்டத்தில் மணல் நிரப்பும் பணி கொடுத்திருக்கிறோம்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மரபைத் தான் துறையிலும் பின்பற்றவேண்டும் என்பதை இங்கே நான் சொல்லவிரும்புகிறேன். அதில் ஏதாவது தவறு நடந்தால் தயவுசெய்து நீங்கள் திருத்திக்கொள்ளுங்கள்.

அதை நான் சுட்டிக்காட்ட வேண்டும், உங்களுடைய ஞாபகத்திற்கு, நினைவுக்குக் கொண்டுவரவேண்டும். உங்கள் பார்வைக்கு இதைக் கொண்டு வர வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்... (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் *9-20*

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொருத்தவரையில், எந்தப் பணியாக இருந்தாலும், அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, முறையானபடிதான் நடக்கிறது. அப்படி ஏதாவது முறையில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை எழுதித் தரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தமிழரசன், உரையை முடித்து விடலாம்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரிரு நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். இந்த இனக் கலவரங்கள் நடக்கிறபோது, அந்த இனக் கலவரங்கள் நடப்பதற்கு என்ன காரணம்? அதற்கு என்ன மூலகாரணம் என்ற அடிப்படை காரணத்தோடு அதை நாம் அணுகவேண்டும். இப்போது நம்முடைய மாநில அரசிலே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபின்னாலே, மிகப் பெரிய அளவிலே

இனக் கலவரங்கள் குறைந்து இருக்கின்றன என்பதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். அதற்கு என்ன காரணம் என்றால், அவர் எவ்வளவு பெரிய தலைவராக இருந்தாலும், அவர் பஸ் கொளுத்துபவராக இருந்தாலும், மரம் வெட்டுபவராக இருந்தாலும், பிரச்சினை என்று வருகிறபோது, சட்டத்தின் ஆட்சி என்று வருகிறபோது, மிகக் கடுமையான தண்டனையை புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள். மேற்கொள்கிறார்கள். எனவே, இனக் கலவரம் குறைந்து இருக்கிறது. வரவேற்கிறேன். ஆனால் இந்தப் பிரச்சினைகளைப் பார்க்கிறபோது சமுதாயக் கூறோடு அதை அணுக வேண்டும். ஒரு இடத்திலே ஒரு இனக் கலவரம் வருகிறது என்று சொன்னால், இரண்டு குழுக்கள் தாக்கிக் கொள்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; ஒரு குற்றத்தின் அடிப்படையிலே அல்லது ஏதாவது ஒரு பிரச்சினையின் அடிப்படையிலே அல்லது ஏதாவது ஒரு மாச்சரியத்தின் அடிப்படையிலே அவர்கள் தாக்கிக் கொள்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு அணி போய் இன்னொரு அணியைத் தாக்குகிறபோது, அந்த அணி வேறு வழியில்லாமல் எதிர்த்து நிற்கிற ஒரு நிலைமை வருகிறபோது—ஆனால் வழக்கு போடுகிறபோது இவர்கள் பேரிலும் *322, 307,* அவர்கள் பேரிலும் *307, 322,* அவர்கள் பேரிலே *302;* இவர்கள் பேரிலேயும் *302* என்று வருகிறபோது, ஒடுக்கப்பட்ட ஏழைமக்கள் மிகப் பெரிய பிரச்சினைக்கு, அவதிக்கு ஆளாகிறார்கள். ஒரு எடுத்துக்காட்டை நான் சொல்ல விரும்புகிறேன். நேற்றையதினம் கூட நான் ஒரு கிராமத்திற்குப் போய் வந்தேன், ஒரு பிரச்சினை என்று அறிந்து, ஒரு சாதாரண பள்ளிக்கூட மாணவி, டைப்ரைட்டிங் பயிற்சி பெற்றுவிட்டு திரும்பி வருகிறார். வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், காட்பாடி அக்ரகாரத்திலே நேற்றைக்கு நடந்த நிலைமை. நேற்று நான் போய் பார்த்துவிட்டு வந்தேன். டைப் செய்துவிட்டு, பயிற்சி நிலையத்திலேயிருந்து திரும்பி வருகிறார். அவரை ஈவ் டீசிங் செய்கிறார்கள் சிலர். அதிலே ஒரு தகராறு ஏற்படுகிறது. அவர்கள் வந்து இவர்களைத் தாக்குகிறார்கள். இவர்கள் திருப்பித் தாக்க வேண்டிய நிலைமை வருகிறது. ஆனால் வழக்கு என்று போடுகிறபோது, *307, 302* என்று இரண்டு பக்கமும் போட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது சட்டத்தின் ஓட்டை. எனவே, இந்த மக்கள் மிகுந்த ஒரு பிரச்சினைக்கு ஆளாகி விடுகிறார்கள். இவர்களால் கோர்ட்டுக்குப் போக முடியவில்லை. இவர்களால் நீதிமன்றத்திற்குப் போக முடியவில்லை. இவர்களால் வழக்கு தொடுத்து, எதிர்த்து வழக்காட முடியவில்லை. எனவே, இதன் மூலக்கூறுகளை ஆராய்கிற வகையிலே, மாவட்ட அளவிலே அறிவுரைக் குழுக்களை ஏற்படுத்தவேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தமிழரசன், உரையை முடித்து விடலாம். இப்பொழுது 9.22 ஆகிறது. மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை வேறு இருக்கிறது. பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். திருமதி கே.எம். கலைச்செல்வி.

திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன், பேசும்போது காட்பாடி அக்ரகாரம் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அவர் சொல்லவில்லை. (குறுக்கீடு) பொதுவாகத்தான் சொல்கிறார். திரு. தமிழரசன், உரையை முடித்துவிடுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலேயே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற அந்த சித்தாந்தத்தை தன்னுடைய கோட்பாடாக வெளியிட்டார்கள். புரட்சிகரமான அந்தத் திட்டத்தை அவர்கள் வெளியிட்டார்கள். இப்போது நில உச்சவரம்பு திட்டத்தையும் கடுமையாக்குவதற்காக, இந்த நிலச் சீர்திருத்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து செயல்படுத்தத் தொடங்கி இருக்கிறார்கள். இந்த நிலையிலே கிராமப்புறத்திலே உழுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிற 90 சதவீத ஆதிதிராவிட மக்கள், அவர்கள் நிலம் வாங்குவதற்கு ஏதாவது கடனுதவி தரவேண்டும். ஒரு ஏக்கர் வாங்குவதற்கோ, அல்லது 1/2 ஏக்கர் வாங்குவதற்கோ அல்லது 2 ஏக்கர் வாங்குவதற்கோ, மற்ற தொழில் செய்வதற்குக் கடன் தருவதைப்போல, நிலம் வாங்குவதற்கும், இந்த அடிப்படைத் தொழிலான நிலத்தை அவர்கள் மீட்பதற்கு கடன் வழங்கவேண்டும். அந்தத் திட்டத்தை நம்முடைய ஆதிதிராவிட நலத் துறை கொண்டுவரவேண்டுமென்ற அந்த கோரிக்கையை வலியுறுத்துகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்து விடலாம். நீங்கள் ஒரு நிமிடம் என்று சொல்லிக் கொண்டே இப்போது 7 நிமிடங்கள் ஆகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: ஆதிதிராவிட மக்கள் நிலம் வாங்குகிற போது, அவர்களில் ஏதாவது ஒரு மத்தியதர வர்க்கத்திற்கு உள்ளே இருக்கிறவர்கள் நிலம் வாங்குகிறபோது, இந்த முத்திரைத்தாள் இருக்கிறதே, ஸ்டாம்ப், அதை அடியோடு ரத்து செய்தால் அல்லது

அதிலே அவர்களுக்கு ஏதாவது சலுகை தந்தால், அதை நாம் ஊக்குவிக்க முடியும் என்ற கோரிக்கையை நான் முன் வைக்க விரும்புகிறேன். அதேபோல, ஆதிதிராவிடர் நலனை ஆராய ஒரு சட்டமன்றக் குழுவை ஏற்படுத்தலாம் என்ற யோசனையையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். மாவட்ட, மாநில அளவிலே இருக்கிற ஆலோசனைக் குழுக்கள் கடந்த 10 ஆண்டுகளாக செயல்படுத்த முடியவில்லை. எனவே, அதற்கு ஒரு புத்துயிர் தந்து, மீண்டும் அந்த ஆலோசனைக் குழுக்களை உருவாக்கலாம் என்ற கோரிக்கையை முன் வைக்க விரும்புகிறேன்.

மலைவாழ் மக்களுக்கு ஒரு தனி வட்டத்தை தர்மபுரி மாவட்டத்திலோ அல்லது சேலம் மாவட்டத்திலோ நீங்கள் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். உச்சநீதி மன்றத் தீர்ப்பின் விளைவாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பதவி உயர்வு பெறுவதிலே அந்த இட ஒதுக்கீடு இருப்பதிலே சிக்கல் விளைந்திருக்கிறது. எனவே, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை ** நம்முடைய தமிழக அரசு மிகப் பெரிய ஒரு வரலாற்றுப் புரட்சியை, சமுதாயப் புரட்சியை மேற்கொண்டு இருக்கிற நம்முடைய முதல்வர் அவர்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எப்படி எதையும் துணிந்து 69 சதவீதத்தைச் செயல்படுத்துகிறார்களோ அப்படி, உச்சநீதி மன்ற தீர்ப்பின் வழியாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிகழ்ந்து இருக்கிற இந்த ஒரு நிர்ப்பந்தத்தையும் ** நீங்கள் பழைய முறையை செயல்படுத்திட வேண்டும் என்கிற கோரிக்கையை இங்கே முன் வைத்து, ஆதிதிராவிட நல சங்கங்களை அரசு அங்கீகரிக்க வேண்டும்.அவைகளைத் தொழிற் சங்கங்களாக அங்கீகரிக்க வேண்டும் என்ற இறுதியான கோரிக்கையையும் நான் முன் வைத்து, இந்த ஆதிதிராவிட மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்து வரவேற்று அமைகிறேன், நன்றி.

பிற்பகல் 9 -25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியில் சொன்னது இங்கே இருக்கலாம். அந்த, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ** என்ற அந்த, ** என்பது ஒரு உறுப்பினர் பேரவையிலே தெரிவிக்கிற கருத்து சரியல்ல. அந்த, ** என்கிற வார்த்தையை மட்டும் அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரை, பெரும்பகுதியான கோரிக்கைகளுக்கு நீங்கள் அவ்வப்பொழுது பதில் சொல்லி வந்து விட்டீர்கள். எனவே, பொதுவான கருத்துக்களை அல்லது சில முக்கிய அறிவிப்புகளை அறிவித்து உங்களுடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பதிலுரையை விரைந்து முடிக்கக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கித்தான் இப்பொழுது பதிலுரை இருக்கிறது. அதையும் மனதிலே வைத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்புவியெங்கும் வாழ்கின்ற ஏழு கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் அன்றும் இன்றும் என்றும் நீக்கமற நிறைந்திருக்கும் தமிழக தானைத் தலைவி, ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன மக்களின் காவல் தெய்வம், என் அரசியல் வாழ்வில் அன்னையாகவும், தந்தையாகவும், குருவாகவும், தெய்வமாகவும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் மறு வடிவமாகவும் அன்றும் இன்றும் என்றும் விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை இப்புண்ணிய பூமியில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்காக ஈன்றெடுத்த புனிதத் தாய் அன்னை சந்தியா அவர்களின் பொற்பாதங்களையும் வணங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களையும் வணங்கி எனது பதிலுரையைத் துவக்குகிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு பிற சமுதாய மக்களுக்கு ஈடாக சம அந்தஸ்து கிடைக்க கல்வி அறிவு ஒன்றுதான் சிறந்த ஆயுதம் என்பதைக் கண்டறிந்த ஆதிதிராவிட மக்களின் காவல் தெய்வம் ஆதிதிராவிட மக்களின் இல்லங்களில் திருவிளக்காக விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்து, பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை ஏடுக்க ஆணை இட்டுள்ளார்கள்.

அதன் காரணமாக இலவசக் கல்வி உதவித் தொகை, ஊக்கப் பரிசு, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசச் சீருடைகள், கூடுதல் மாணவர் இல்லங்கள் போன்ற சலுகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்துறையின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 60 சதவீதத்திற்கு மேல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இத்துறையின் கீழ் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஆக மொத்தம் 1225 பள்ளிகள் இயங்கி வருகின்றன.

உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து அரசு பொதுத் தேர்வு எழுதும் பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களின் தேர்ச்சி விகிதம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும் முன்பு 33.66 சதவீதத்திற்கு மேல் இருந்ததில்லை. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் பத்தாம் வகுப்பிற்கான தேர்ச்சி விகிதம் 1991-92 ஆம் கல்வியாண்டில் 57 சதவீதமாகவும், 1992-93 ஆம் கல்வியாண்டில் 70 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி விகிதம் 1991-92 ஆம் கல்வியாண்டில் 59 சதவீதமாகவும், 1992-93 ஆம் கல்வியாண்டில் 62 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த கணிசமான கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இச்சமுதாய மக்கள் என்றென்றும் நன்றிக் கடனாக இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 1993-94 ஆம் கல்வியாண்டில் ஆதிதிராவிட நல விடுதியில் தங்கிப் பயின்று அரசுப் பொதுத் தேர்வு எழுதும் 10 ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ மாணவியர்கள் 22,600 பேருக்குச் சிறப்புக் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோன்ற, சிறப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாணவர்களை ஊக்குவிப்பதோடு மட்டும் நின்று விடாமல் அந்த மாணவர்களைப் பயிற்றுவித்து தேர்ச்சி பெற வைக்கும் தலைமையாசிரியர்களையும், பாடப் பிரிவு ஆசிரியர்களையும் பாராட்டி, தகுந்த பரிசுகள் வழங்க ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனைத் தொடர்ந்து கடந்த 1993-94 ஆம் கல்வியாண்டில், தென்னாற்காடு மாவட்டம் சேப்பாக்கம் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பாக விழா ஏற்பாடு செய்யப்பட்டு 69 தலைமையாசிரியர்களுக்குத் தலா ரூபாய் 1,500—ம் 269 பாடப் பிரிவு ஆசிரியர்களுக்கு தலா ரூ 750—ம் வழங்கிப் பாராட்டப்பட்டது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வெற்றியினைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த, குறிப்பேடுகள் வழங்குதல் போன்ற சலுகைகளைத் தொடர்ந்து வழங்குவதோடு, நடப்பாண்டில் மேலும் பல புதிய நடவடிக்கைகளையும் எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, ரூ. 13.01 இலட்சம் செலவில், 3 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 2 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கோவை மாவட்டம், சேதுமடை கிராமத்தில், ரூ. 1.90 இலட்சம் செலவில் பழங்குடியினர் உறைவிடப் பள்ளி ஒன்று புதியதாக ஏற்படுத்தப்படும்.

454 தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ. 2.69 இலட்சம் செலவில் வரைபடங்கள், விளக்கப்பட அட்டைகள் போன்றவை வழங்கப்படும்.

19 மேல்நிலைப் பள்ளிகளுக்கு, மாணவர்கள் அமர சாய்வு மேசையுடன்கூடிய, மர பெஞ்சுகள் ரூ. 14.82 இலட்சம் செலவில் தயாரித்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

33 பள்ளிகளில் கழிப்பறை வசதியும், 6 பள்ளிகளில் குடிநீர் வசதியும், ரூ. 13.49 லட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

3 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 15 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைத்துத் தரப்படும்.

சுமார் 1000 மாணவர்கள் பயிலும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சேர்ந்த பாலவாக்கம் ஆதிதிராவிடர் நலப்பள்ளி ரூ. 2.88 இலட்சத்தில் சிறப்பு தனி இனமாக புதுப்பிக்கப்படும்.

பள்ளிகளுக்குத் தேவைக்கேற்ப, கூடுதல் கட்டிடங்கள் கட்ட. ரூ. 172.69 இலட்சம் செலவிடப்படும்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், 2 ஆம் வகுப்புடன் இடையில் படிப்பை நிறுத்திவிடும் ஏழ்மை நிலையிலுள்ள கிராமப்புற ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்கு 3 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் தேர்வு பெறும் போது, ரூ. 500 ஒட்டுமொத்தமாக, சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்க வகைசெய்யும் ஒரு திட்டத்தை டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் 'தாட்கோ' மூலம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இத்திட்டம் தேசிய அளவில், பெண் கல்வி விகிதம் குறைவாக உள்ள மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை– சம்புவராயர், விழுப்புரம்–இராமசாமி படையாச்சியார், தென்னாற்காடு –வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

மேலும், ஏழ்மையின் காரணமாக ஆதிதிராவிடப் பெண் குழந்தைகள் தங்கள் குடும்பத்திற்கு வருவாய் ஈட்டித்தரும் சொத்து எனப் பெற்றோர்களால் கருதப்பட்டு, இக்குழந்தைகள் 5 ஆம் வகுப்பிற்கு மேல் படிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையைப் போக்கி, இந்தப் பெண் குழந்தைகள் 6 ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வழங்கும் ஒரு புரட்சிகரமான வரலாற்று சிறப்புமிக்க திட்டத்தை மாநிலம் முழுமைக்கும் செயல்படுத்த டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்ற பெருமகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 30,000 ஏழை ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் பயனடைவர். இதற்கு ரூ. 3 கோடி செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 'தாட்கோ' மூலம் செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துறை 928 ஆதிதிராவிட மாணவ மாணவியர் இல்லங்களையும், 24 பழங்குடியினர் மாணவ மாணவியர் இல்லங்களையும் நடத்தி வருகிறது.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இதுவரை 90 விடுதிகள் தந்துள்ளார்கள். நடப்பு ஆண்டில் மேலும் 20 விடுதிகள் ரூ. 44.12 இலட்சம் செலவில் திறக்க உத்தரவிட்டுள்ளார்கள். இத்துடன் ரூ. 6.33 இலட்சம் செலவில் தற்போதுள்ள விடுதிகளில் கூடுதலாக 500 மாணவர்களுக்கு இடவசதி அளிக்க உத்தரவிட்டுள்ளார்கள் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விடுதிகளில் உணவுக்காக அனுமதிக்கப்படும் தொகையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 1993 ஜூன் திங்களிலிருந்து பள்ளி மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 105–லிருந்து ரூ. 120 ஆகவும், கல்லூரி மற்றும் ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு ரூ. 155–லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 175 ஆகவும், இதுவே சென்னையிலுள்ள கல்லூரி விடுதிகளாயின், ரூ. 180 ஆகவும் உயர்த்தி வழங்கியுள்ளார்கள். தொண்டு நிறுவனங்கள் நடத்தும் 42 விடுதிகளுக்கு இந்த உணவுக் கட்டணத்தை ரூ. 70–லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 85 ஆக உயர்த்தி

வழங்கியுள்ளார்கள். அதிரடி நடவடிக்கையாக எல்லா விடுதிகளுக்கும் நூலக வசதி ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். அதேபோல், நடப்பு ஆண்டில் ரூ. 9.88 இலட்சம் செலவில் 150 விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்.

இதுவரை ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் கல்வி நலனுக்காக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கைகளில் சிலவற்றை மட்டும் குறிப்பிட்டேன்.

இனி, இம்மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நூலக வசதி உண்டாக்கித் தருவதை, அதிரடி நடவடிக்கை என்கிறீர்கள். அதிரடி நடவடிக்கை என்பது, ஒன்றைப் போக்குவதற்காகச் செய்கிற நடவடிக்கை. இது இம்புரூவ்மெண்ட். இம்புரூவ்மெண்டுக்கு அதிரடி என்ற வார்த்தை சரியல்ல, பாராட்டத்தக்கவகையில் என்று மாற்றிக் கொள்ளுங்கள்.

பிற்பகல் 9-35

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: பாராட்டத்தக்கவகையில் மிக வேகமாகச் செய்தார்கள். ஒரே நேரத்தில் ரூபாய் 12.33 இலட்சம் கொடுத்து உடனே செய்தார்கள், மின்னல் வேகத்தில், இனி இம்மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளில் முக்கியமானவற்றை காலத்தின் அருமை கருதி சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆதி திராவிட சமுதாயத்தினருக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தைக் கணிசமாக உயர்த்த இலக்குகளை நிர்ணயித்து அவற்றை 5 ஆண்டு கால அளவுக்குள் நிறைவேற்றி வைத்திட பத்து அம்ச திட்டம் ஒன்றை உருவாக்கிச் செயல்படுத்தி வருவதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

பொருளாதார உதவி 5 ஆண்டுகளில் 3.5 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 2,45,620 குடும்பங்களுக்குக் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 65,000 குடும்பங்களுக்கு இந்தக் கடன் உதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டு காலத்தில் 10,000 பாசனக் கிணறுகள் தோண்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை இந்த இலக்கையும் தாண்டி

மொத்தம் 11,803 கிணறுகள் தோண்டி முடிக்கப்பட்டு சாதனை படைத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், நடப்பு ஆணடில் மேலும் 1,000 பாசனக் கிணறுகள் தோண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 5 ஆண்டு காலத்தில், 5,000 குடும்பங்களுக்கு கடன் உதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 3,286 குடும்பங்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 1,500 குடும்பங்களுக்கு கடன் உதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டு காலத்திற்குள் 4 இலட்சம் வீட்டு மனைகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இந்த இலக்கையும் தாண்டி இதுவரை 5,36,546 வீட்டு மனைகள் வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நடப்பு ஆண்டில் 75,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

5 ஆண்டு காலத்திற்குள் 3 இலட்சம் இலவச வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 88,935 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 25,000 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு குடிசைக்கு ஒரு மின்விளக்கு திட்டத்தின் கீழ் 5 ஆண்டு காலத்தில் 1.5 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 90,242 குடிசைகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 35,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு பெற்றுத்தர இருக்கிறோம்.

எல்லா ஆதி திராவிட குடியிருப்புகளுக்கும் தெருவிளக்கு வசதி டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1,063 ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 873 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 200 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லா குடியிருப்புகளுக்கும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமின்றி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்த பனியன் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்துதல், இறால் வளர்ப்புப் பண்ணைகள் உருவாக்குதல், பட்டுப்புழு வளர்த்தல் ஆகிய முப்பெரும் பொருளர்தார முன்னேற்றத் திட்டங்கள் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

கோவை மாவட்டம் திருப்பூர் வட்டம் முதலிப்பாளையத்தில் ஒரு பனியன் தொழிற்பேட்டை நிறுவும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. இங்கு ஒரு ஏக்கர் ரூ. 70,000 என்ற விலையில் 95.93 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. நிலத்தைச் சமப்படுத்தவும், உட்புறச் சாலைகள் போடவும் ரூ. 50,19,600 வழங்கப்பட்டுள்ளது. 7 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்கு ரூ. 8.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தண்ணீர் தொட்டி கட்டவும், நீர் இறைக்க மோட்டார் பம்ப் அறை கட்டவும் ரூ. 8.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் பெரியார் மாவட்டம் ஈரோடு வட்டம் நல்லகவுண்டபாளையம் கிராமத்தில் அமையவிருக்கும் தொழிற்பேட்டைக்கு 116.04 ஏக்கர் நிலம் உடமை மற்றும் உரிமை மாற்றம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலத்தை சமப்படுத்தவும் உட்புறச் சாலைகள் ஏற்படுத்தவும் ரூ. 74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 4 ஆழ்துளைக் கிணறுகள் எடுக்க ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் 50 சதவீதத்திற்கு மேல் தற்போது செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளும் துரிதமாக முடிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு கூடிய விரைவில் உற்பத்தியைத் துவக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இறால் வளர்ப்புப் பண்ணைகள் சென்னை, கன்னியாகுமரி நீங்கலாக 8 கடலோர மாவட்டங்களில் 1,000 ஹெக்டேர் பரப்பில் ஏற்படுத்தப்படும்.

இதுவரை நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் 51.34 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இதில் 57 குளங்கள் அதாவது பண்ணைகள் அமைக்க வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நபார்டு நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது. நபார்டு வரைமுறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 33,000 இறால் சினை முட்டைகளுடன் ஒரு பண்ணை ஏற்படுத்த ரூ. 1.5 இலட்சம் ஆகிறது. இது தொடர்பாக என்.எஸ்.எப்.டீ.சி. ரூபாய் 2 கோடி நிதியுதவி அளிக்க கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்தையும் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 9-40

அடுத்து பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம். இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி நீங்கலாக எஞ்சிய இருபது மாவட்டங்களில் 80 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்படும். இதில் பயன் அடைவோர் 6,000 ஆதி திராவிடர்கள் நிலம் வைத்துள்ளவர்களாகவும், 4,000 பேர் நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர்களாகவும் இருப்பர். இத்திட்டம் ஏற்கெனவே செயல்படத் தொடங்கிவிட்டது. முசுக்கொட்டை மரக்கன்றுகள் நடவும், பயனாளிக்கு பயிற்சி அளிக்கவும் ரூ. 18 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்களுக்கு நிலம் விலைக்கு வாங்கித் தரவும், பட்டுக்கூடு சேகரித்தல், முறுக்கேற்றுதல் போன்றவற்றிற்கு ரூ. 2.14 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை நிலம் வைத்துள்ள 3,209 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவையன்றி தாட்கோ நிறுவனம் மூலம் எண்ணற்ற பொருளாதார கடன் உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறப்பு நடவடிக்கையாக நடப்பு ஆண்டில் தாட்கோ நிறுவனம் மூலம் மாவட்டத் தலைமையிடங்கள், நகராட்சி, பேரூராட்சி ஆகிய பகுதிகளில் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா வணிக வளாகங்கள் என்ற பெயரில் 30 வணிக வளாகங்கள் ஏற்படுத்தப்படும். ஒரு வணிக வளாகத்திற்கு 10 கடைகள் வீதம் 300 கடைகள் கட்டி ஆதிதிராவிட பயனாளிகளுக்கு வாடகைக்கு விடப்படும். இதற்காக ஒரு கடைக்கு ரூ. 50,000 வீதம் மொத்தம் ரூ. 1.50 கோடி செலவாகும்.

அதேபோல் கிராமப்புற இளைஞர்களுக்கு தாட்கோ நிறுவனத்தின் நேரடிப் பார்வையில் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க மாவட்டந்தோறும் 2,000 சதுர அடி தளப்பரப்பில் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்படும். இப்பயிற்சி மையங்களில் பயனாளிகளுக்குத் தங்கும் இடவசதியும் செய்து கொடுக்கப்படும். ஒரு பயிற்சி மையம் ஏற்படுத்த கட்டிடப் பணிக்காக ரூ. 6 இலட்சமும் கருவிகள், மூலப்பொருட்கள் பயிற்சி உதவித்தொகை போன்றவற்றிற்காக ரூபாய் 2 இலட்சமும், ஆக ரூபாய் 8 இலட்சம் வீதம் 23 பயிற்சி மையங்கள் ஏற்படுத்த ரூபாய் 1.84 கோடி செலவாகும். இந்தப் பயிற்சி மையத்திற்கு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பெயர் இடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நிலமற்ற 1,000 ஆதிதிராவிட ஏழை விவசாயிகளுக்கு ரூபாய் ஒரு கோடி செலவில் நிலம் கொடுத்து அந்நிலம் சரியாகச் சீர்படுத்தப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைத் தொண்டு

நிறுவனங்கள் மூலம் உறுதி செய்து நடைமுறைப்படுத்தத்தக்க வகையில் ஒரு திட்டத்தையும் தாட்கோ மூலம் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதையும் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை அருந்ததிய மக்களுக்கு 100 சதவீத மானியத்துடன் ரூ. 10,000 மதிப்பீட்டில் இலவசமாக ஒரு பணிக்கூடமும், ஒரு தோல் தைக்கும் தையல் இயந்திரமும் வழங்க வகை செய்யும் திட்டம் ஏற்கெனவே செயலில் இருந்து வருகிறது. இந்தப் பணிக்கூடங்கள் மூலம் இம்மக்கள் காலணிகள் செய்யும் பணியில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு மனநிறைவு கொள்ளும் வகையில் வருவாய் ஈட்டி வருவதைக் கண்கூடாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிந்து வைத்துள்ளதால் 1993-94 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த 2,000 காலணி பணிக்கூடங்கள் ரூ. 2 கோடி செலவில் செய்து தரப்படும்.

தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் 13 பகுதிகளில் ஆங்காங்கே பரவலாக வசிக்கின்றனர். பழங்குடியினர் அதிகமாக வாழும் பின்வரும் 9 இடங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் ஐ.டி.டீ.பி. செயல்படுத்தப்படுகின்றது:

கொல்லிமலை, ஏற்காடு மலை, கல்ராயன்மலை (சேலம் மாவட்டம்), அருணூத்து மலை, பச்சைமலை (சேலம் மாவட்டம்), ஜவ்வாது மலை (வட ஆற்காடு மாவட்டம்), கல்ராயன் மலை (தென்னாற்காடு மாவட்டம்), சித்தேரி மலை (தர்மபுரி மாவட்டம்), பச்சை மலை (திருச்சி மாவட்டம்).

பழங்குடியினர் உதவித் திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஆடு வளர்ப்பு மற்றும் கறவை மாடுகள் வாங்க உதவித்தொகை கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்படுகின்றன. கறவை மாடுகள் ஒன்றிற்கு ரூ. 4,500 வீதம் இரண்டு மாடுகள் வாங்க 50 சதவீதம் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. கல்ராயன் மலைப் பகுதியில் வாழும் பழங்குடியினருக்கு இது 75 சதவீத உதவியாக வழங்கப்படுகிறது. அதேபோன்று ரூ. 10,000 செலவில் ஆடுகள் வாங்க 50 சதவீத உதவித் தொகை வழங்கப்படுகிறது. கல்ராயன் மலைப்பகுதி பழங்குடியினருக்கு 75 சதவீத உதவித்தொகை வழங்கப்படுகிறது.

பண்டைய பழங்குடியினர் மற்றும் சிதறி வாழும் பழங்குடியினருக்கு எருமைகள், கறவை மாடுகள் வாங்கவும், தேனி வளர்ப்பதற்கும்

திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதனால் 1994-95-ல் 970 குடும்பங்கள் பயனடைவார்கள். இவர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன. 1994-95-ல் 896 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 9 -45

பழங்குடியினர் வாழும் மலைப்பகுதிகளில் சாலை வசதிகள் படிப்படியாக செய்து தரப்படுகின்றன. ஏற்கெனவே 21 சாலைப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 13 புதிய பணிகள் தொடங்கப்படவுள்ளன. பழங்குடியினர் சுகாதார வசதிக்காக 14 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 50 சுகாதார துணை நிலையங்களும் மற்றும் 7 சித்த மருந்தகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை நீங்கலாக ஒரு நடமாடும் சித்த மருந்தகம் செயல்படுகின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நந்தனார் ஆண்கள் விடுதியில் தங்கி நந்தனார் மேல்நிலைப் பள்ளியில் 9-ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த திரு. தட்சிணாமூர்த்தி என்ற மாணவன் 30-3-94-ஆம் தேதி விடுதிக் காப்பாளர் ஓய்வு அறையில் மின் விசிறியில் தூக்கில் இட்டுக்கொண்டு இறந்துவிட்டதாக புகார் கொடுத்து, அது தொடர்பாக காவல் துறையினர் விடுதிக் காப்பாளர், துணைக் காப்பாளர் மற்றும் பணியாளர்கள் உட்பட 9 பேரை கைது செய்து அவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளார்கள். அவர்கள் தற்போது தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். விடுதிக் காப்பாளர் மற்றும் பணியாளர்கள் ஒட்டுமொத்தமாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். இறந்துபோன மாணவன் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பம் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நன்கு உணர்ந்து கோரிக்கை இல்லாமலேயே அந்த மாணவனுடைய குடும்பத்திற்கு அவனுடைய தந்தை திரு. ரங்கசாமி என்பவருக்கு ரூ. 10,000 வழங்க உத்தரவிட்டுள்ளார்கள் என்கிற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் தங்கள் தொகுதிக்கு புதிய நலப் பள்ளிகள் கேட்டும், விடுதிகள் கேட்டும், விடுதிகளுக்கு கட்டிடம் வேண்டியும், புதியதாக விடுதிகள் வேண்டியும், வீட்டுமனைப் பட்டாக்கள், இடுகாட்டு வசதி, பாதை வசதி, சமுதாயக்கூடம் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 68 வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்றீர்கள். அவை ஒவ்வொன்றுக்கும் பதில் அளிக்க நேரம் போதவில்லை என்பதால் உறுப்பினர் பெருமக்களின் கோரிக்கைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு அவைகளை விரைவாக

நிறைவேற்றிட டாக்டர் புரட்சித் தலைவியின் முனைப்புடன் செயலாற்றும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற மிக உறுதியான உத்தரவாதத்தைத் தருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த அரிய வாய்ப்பை எங்கோ ஒரு குக்கிராமத்தில், ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த எனக்கு இந்த வாய்ப்பைத் தந்து, இந்தத் துறைக்குப் பணியாற்றும் வாய்ப்பினைத் தந்து உருவாக்கிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.வி.கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில், இந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்பு பற்றி ஒன்றைச் சொன்னார்கள். இந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்பில், பெரியார் மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 100 நபர்களுக்கு, அரிசன மக்கள் நூறு பேருக்கு ஒரு ஏக்கர் நிலம் வீதம் நிலம் வழங்குவதற்கும், அந்த நிலத்தை சுத்தப்படுத்தி, அதிலே பட்டுப் பூச்சி வளர்ப்பதற்கு, கிட்டத்தட்ட 60 ஆயிரம் ரூபாய்க்கு மேலே செலவு பிடிக்கும் இந்தத் திட்டத்திற்கான நூறு ஏக்கர் நிலத்தை நானே சென்று மாவட்ட அரிசன நலத்துறை அதிகாரிகள், செரிகல்சர் ஏ.டி. எல்லாம் சேர்ந்து நிலத்தைத் தேர்வு செய்து கொடுத்திருக்கிறோம். பட்டியலும் கொடுத்திருக்கிறோம். ஆனால் நபார்ட் நிறுவனம் தற்போது அந்த ஊராட்சியை 'பிளாக் யூனியன்' அதாவது தண்ணீர் இல்லாத வறண்ட பகுதி என்று அறிவித்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த இடம், கரட்டுப்பாளையம் ஊராட்சிப் பகுதி, கீழ்பவானி ஆயக்கட்டுக்கு உட்பட்ட பகுதி. ஒரு கிலோ மீட்டர் தொலைவில் கீழ்பவானி வாய்க்கால் செல்லுகிறது. அந்தப் பகுதியிலே நாங்கள் 100 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்துள்ளோம். அப்படியென்றால், தண்ணீர் இல்லாத சூழ்நிலை எப்படி உருவாகும். ஆகவே அந்த 100 நபர்களுக்கு மீண்டும் அந்தத் திட்டத்தை அங்கே உருவாக்குவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் தனி கவனம் செலுத்தி அந்த நபார்ட் நிறுவனத்தை அழைத்து வந்து - மாண்புமிகு அமைச்சரும் வரட்டும், நானே அழைத்துச் செல்கிறேன், அந்த இடத்தை மீண்டும் தேர்வு செய்து அந்த 100 நபர்களுக்கும் பட்டுப் பூச்சி வளர்ப்பதற்கான கடன் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்பியூர் ஒன்றியம், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நெல்லிக்குப்பம், விழுப்புரம்—ராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலுள்ள உளுந்தூர்பேட்டை போன்ற 3 ஒன்றியங்களையும் 'பிளாக்' லிஸ்டில் சேர்த்திருக்கிறார்கள். அதாவது தண்ணீர் இல்லாத பகுதி, பட்டுப் பூச்சி வளர்ப்புக்கு ஏற்றது அல்ல என்று மாநில அளவில் C.E. Irrigation சான்று கொடுத்த பிறகுதான் இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே இதைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு இல்லை. ஏனென்றால் தண்ணீர் இல்லை என்று சர்டிபிகேட்டை நம்முடைய C.E. அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்குப் பிறகு அந்தச் துறைச் செயலாளர் மூலமாக நபார்ட் வங்கியைத் தொடர்பு கொண்டு கேட்டோம். எப்படியாவது அந்த மூன்றையும் சேர்த்துக்கொள்ள முடியுமா என்று கேட்டேன். முடியாது என்று சொல்லிவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 9 -50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் மலைப் பிரதேசம் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அங்கே விடுதிகளில் பழங்குடி மக்களும் ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்களும் தினமும் குளிக்காமல் மிகவும் துன்பப்படுகிறார்கள். அவர்கள் குறையெல்லாம் தினமும் அவர்கள் வெந்நீரில் குளிக்கவேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அவர்களுக்கு தினமும் வெந்நீர் விநியோகம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இத்துறையின் மூலம் நடத்தப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்கள் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலையில் குளிப்பதற்கு வெந்நீர் வசதி செய்து தரப்படுகிறது. அதற்கான செலவினம் மாதாந்திர பராமரிப்புச் செலவில், அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கோபாலகிருஷ்ணன்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நபர்கள் பயன்பெறும் வகையில்

திருநெல்வேலி சந்திப்பு சிந்துபூந்துறை மேலவீரராகவன்புரத்தில் சுமார் 40 லட்சம் ரூபாய் செலவில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக கட்டி முடிக்கப்பட்ட 31 கடைகள் கிட்டத்தட்ட ஓராண்டு ஆகியும் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. மேலும் அதோடு சேர்ந்து அந்த மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாம் திருமண மண்டபம் கட்டிக் கொடுக்கின்ற பணியினை அரசு ஆணை 186, நாள் 4.2.1976-ல் குறிப்பிட்டுள்ளபடி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் சமுதாயக் கூடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் சொல்லி இருக்கிறார்கள். மிக விரைவில் திறக்கப்படும். அதைப்போல அங்கே சமுதாயக் கூடம் வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. அதுவும் அரசின் ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மக்களுக்கு தாட்கோ மூலம்தான் கடந்த காலங்களில்....... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் உள்ளது காம்ப்ளெக்ஸ். அதாவது சமுதாயக் கூடம் அல்ல. சமுதாயக் கூடம் கட்டப்பட இருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. கட்டப்பெற்றது ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் சொன்ன சமுதாயக் கூடம் என்பதற்குப் பதிலாக ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: அதாவது அங்கே ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்தான் திறக்கப்பட இருக்கிறது.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மக்களுக்குத் தாட்கோ மூலம்தான் கடந்த காலங்களில் வீடு கட்டிக்கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. உதாரணமாக, நான் 1985-லே வாரியத் தலைவராக இருந்தபோது முழுப் பகுதியும் தாட்கோதான் கட்டிக் கொடுத்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அது உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எனவே மீண்டும் தாட்கோ மூலமாக அந்த வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள்

கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இருந்து பதில் எதுவும் வரவில்லை. எனவே அதை மீண்டும் உள்ளாட்சித் துறையிலே இருந்து தாட்கோவுக்கு மாற்றித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் ஜே.வி.வி.டி. திட்டத்திலே கட்டப்படுகிறது. மத்திய அரசு உதவியுடன் கட்டப்படுகிறது. நம்முடைய பங்கு ஒரு வீட்டிற்கு கான்கிரீட் போடுவதற்காக, மேல் கூறை போடுவதற்காக 6,500 ரூபாய் தருகிறோம். அதுதான் நம்முடைய பங்கு. ஆகவே இதைப் பற்றி ஆய்வு செய்து அது ஆர்.டி.எல்.ஏ. டிப்பார்ட்மென்டால்தான் கட்டப்படவேண்டும் என்று விட்டுவிட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. சின்னசாமி.

திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முள்ளுக்குறிச்சியிலே இருந்து நரியங்காடு வரைக்கும் சாலை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நானும் பலமுறை அமைச்சர் அவர்களிடம் நேரில் சென்று மனு கொடுத்திருக்கிறேன். அந்த கோரிக்கையை ஏற்று அமைச்சர் அவர்கள் நடப்பாண்டில் அந்தச் சாலையை அமைத்துக் கொடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லக்கூடியது எது என்று எனக்குக் கொடுத்திருக்கிறார்கள், அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அவர் பேசுகிறபோது அதாவது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். சர்வீசுக்கு பணியமர்த்தப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதாவது 1993-94 ஆம் ஆண்டு 50 எஸ்.ஸி., எஸ்.டி., டிரைபல்ஸ் பீபிள்ஸ்-க்கு டிரெனியிங் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி (குறுக்கீடு) திரு.ஜி.பழனிசாமி இல்லை. அந்த பழனிசாமி. கை தூக்கிய பழனிசாமியைத் தானே கூப்பிட முடியும்.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலமாக பனியன் தொழிற்பேட்டை அமைக்கப்பட இருக்கிறது. அந்த பனியன் தொழிற்பேட்டையை அமைக்கின்ற கால அளவு எவ்வளவு? 100 யூனிட்டுகள் அமைக்கின்ற பணியினை ஒரே ஆளிடம் கான்ட்ராக்ட் விடுவோமானால் காலதாமதம் ஏற்படும். எனவே 10 யூனிட், 10 யூனிட் என்று பிரித்து காண்ட்ராக்ட்

விட்டால் மிக விரைவாகக் கட்டமுடியும். எனவே அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அதற்கு எவ்வளவு காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 9-55

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி கேட்ட கேள்விக்கு 50 எஸ்.சி.ஸ்டூடன்ட்சுக்கும், 3 எஸ்.டி.ஸ்டூடன்சுக்கும், ஐ.ஏ.ஸ்., ஐ.பி.எஸ். தேர்வுக்கு ட்ரெயினிங் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி கேட்ட கேள்வி குறித்து சென்ற மானியக் கோரிக்கையின்போது பதில் சொல்லியிருக்கிறேன். டிசம்பர் மாதம் 1994-க்குள் முடிக்கப்படும் என்பது என்னுடைய குறிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிக வேகமாக, விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்படி மிக வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களை நாங்கள் வேண்டி கேட்டுக்கொண்டிருக்கிறோம், அவர்களே வந்து அதைத் திறந்து வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதிகளில் வாழ்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டவும், ஐ.ஆர்.டி.பி. கடன்கள் வழங்கவும் துறையிடம் திட்டம் ஏதும் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் பகுதியிலே 100 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி அவர்களுக்கு விலைக்கு வாங்கிக் கொடுத்து பட்டுப்புழு வளர்ப்பதற்கு உள்ள திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிந்தேன். எங்கள் பகுதி பர்கூர் மலைப்பகுதி. நல்ல செழிப்பான தண்ணீர் வசதி நிறைந்த பகுதி. அந்தப் பகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த 100 ஏக்கர் நிலத்தை, அந்தப் பகுதியைச் சார்ந்த ஆதி திராவிட மக்களுக்கு வாங்கிக் கொடுத்து பட்டுப்புழு வைத்து மேலும் மேலும் அந்தப் பகுதி மக்கள் வளம் நிறைந்த மக்களாக வாழ ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்பியூர் ஒன்றியத்திலே உள்ள திட்டப் பணிகளை நாம் மாற்ற முடியாது. சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார், இப்போதே அவர் மிரட்டுகிறார். ஆகையினால் உறுப்பினருக்கு வேண்டுமானால் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருகிறோம். உங்கள் ஒன்றியமும் எடுத்துக்கொள்ளப்படும் என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உள்ளாட்சித் துறை, வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, தொழில் துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஒதுக்கப்படுகிறது. அனைத்துக் கடன் உதவி மற்றும் சலுகைகள் ஆனாலும் ஆதி திராவிடர் நலத்துறையின் மூலமே அவற்றைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தத் திட்டங்களுக்கு எல்லாம் நாம் பணத்தை ஒதுக்கி அந்தந்தத் துறைகளுக்கு கொடுக்கிறோம். நாமே எடுத்துச் செய்வது என்றால் சிரமம். அந்தந்தத் திட்டங்களை அந்தந்தத் துறைகள் செயல்படுத்துவதுதான் நன்றாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தவசி.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரிப் படிப்புக்குச் செல்கின்ற நேரத்தில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இ.டி. என்ற ஒரு கார்டை கொடுத்து, அவர்கள் அதன்மூலம் ஃபீசே கட்டாமல் கடைசி வரை free ஆக படிக்கக்கூடிய ஒரு முறை இருந்தது. இப்போது அது வழங்கப்படுகிறதா? சமீபகாலமாக வழங்கப்படவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கவனத்திற்கு வரவில்லை. அப்படி ஏதாவது இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எஸ்.சி., எஸ்.டி.-க்களுக்கு தொகுப்பு வீடுகள் ஒதுக்கப்படும்போது ஒரு வருடத்திற்கு 20 அல்லது 30 வீடுகள்தான் ஒதுக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதால், இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த நிதியாண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 200—க்கு மேற்பட்ட தொகுப்பு வீடுகள் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜே.வி.வி.டி. மூலம் கட்டப்படுகிற வீட்டைப் பொறுத்தவரை மத்திய அரசு வீடு கட்டுவதற்காக கொடுக்கப்படுகிற தொகை குறைந்துகொண்டு வருகிறது. சென்ற ஆண்டு 20 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்குத்தான் நமக்கு திட்டம் தந்தார்கள். வருகிற ஆண்டு 25 ஆயிரம் வீடுகள். இதை வைத்து நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்கின்ற நேரத்தில் தாங்களாகவே முன்வந்து நிலத்தைக் கொடுக்கின்ற தனியார்களுக்கும், ஆட்சேபணை செய்யாத தனியார்களுக்கும் அங்கு இருக்கின்ற அரசாங்க மதிப்பைவிட அதிகமாக போனஸ் போன்ற ஒரு தொகையைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா, அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைவேட் நெகோசியேஷன் மூலம் எடுக்கப்படும் நிலங்களுக்கு போனஸ் கொடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வீரபாண்டியன்.

பிற்பகல் 10-00

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை கொடுக்க வேண்டுமென்றால் தனியார்கள் அவர்கள் நிலங்களைக் கொடுக்கத்

தயாராக இருக்கிறார்கள். ஆனால் என் தொகுதியில் மேல்பள்ளிப்பட்டு, கங்கம்பட்டி போன்ற இடங்களில் என்ன நிலைமை என்றால் அவர்கள் தயாராக இருக்கிறார்கள், ஆனால் சென்ட் ஆயிரம் ரூபாய் என்கிறார்கள். அது டி.ஆர்.ஓ. விடம் செல்லும்போது 140 ரூபாய் பிளஸ் 30 சதவீதம் என்று ஒரு தொகை சொல்கிறார். பிறகு கலெக்டரிடம் போகும்போது, விளைச்சல் இல்லாத நிலத்திற்கு என்ன மதிப்போ அதைத்தான் தர முடியும். அதாவது 50 ரூபாய் என்று சொல்லுகிறார். நிலச் சொந்தக்காரர் 1,000 ரூபாய் கேட்கிறார், டி.ஆர்.ஓ. 140 ரூபாய் பிளஸ் 30 சதவீதம் என்கிறார். கலெக்டர் 50 ரூபாய் தான் தருவேன் என்கிறார். இதனால் பேச்சு வார்த்தையிலே ஒத்துவராத நிலை இருக்கிறது. எனவே அந்த மக்களுக்கு வீட்டுமனை கிடைப்பதிலே பிரச்சினை இருக்கிறது. அரசாங்கம் இதில் தலையிட்டு, நிரந்தர தீர்வு காண வழி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைவேட் நெகோசியேஷன்ஸ் பொறுத்த வரையில் தலைவராக இருப்பவர் மாவட்ட ஆட்சித் தலைவர். அவர் கைட்லைன்ஸ்படிதான் நடக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது கோரிக்கை இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி வந்தவுடன் எனது தொகுதியில் ஆலப்பட்டி கிராமத்திற்கு ஒரு அரிசன நல விடுதி கொடுத்தார்கள். ஆனால் அங்கே கட்டிடம் நல்லமுறையில் இல்லாமல் மாணவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அங்கே புதிய கட்டிடம் மாண்புமிகு அமைச்சரவர்கள் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு கிராமப்புறங்களுக்குத் தான் முக்கியத்துவம் கொடுத்துத் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக்கூடிய பகுதி கிராமப்புறப் பகுதிதான். அதனால்தான் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில், சென்ற ஆண்டு விடுதியைத் தந்தோம். வருகிற ஆண்டு கட்டிடம் கட்டுவது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(உ) கோரிக்கை எண் 30— பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 30 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: இல்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 150,77,32,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவுவரையிலே நடந்திருந்தாலும், உறுப்பினர்கள் பெருமளவில் இருந்து ஆதி திராவிட

நலத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்ததற்குப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26.4.94) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 10-03 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

104. திருவாளர்கள் பிரஸ்வுட் இண்டஸ்டிரீஸ் அவர்களால் இனிவரும் முதல் ஐந்து வருட காலங்களில் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரியை தள்ளி வைப்பது குறித்து 29.7.1993-ஆம் நாளிட்ட 261 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

105. கோயம்புத்தூர், திருவாளர்கள் அஷ்சயா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், அவர்களால் செலுத்தவேண்டிய விற்பனை வரியை தள்ளி வைப்பது குறித்து 18.10.1993-ஆம் நாளிட்ட 358—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

106. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் 1992-93 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

111. கோரிக்கை எண் 29- சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

112. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஒன்பதாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

113. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

114. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினோராம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

இணைப்பு—I

[614 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண். 29.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

கொள்கை விளக்கக்குறிப்பு.

1994-95

அத்தியாயம் - 1.

முன்னுரை:

கோரிக்கை எண். 29-ன் கீழ் 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 47,68,012 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.1. 1994 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9 ஆம் நாளன்று நடைபெற்ற மகளிர் மாநாட்டை தொடர்ந்து மாண்புமிகு முதலைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மகளிர் குறித்த இவ்வரசின் கொள்கையை அறிவித்துள்ளார். இது, அரசின் கொள்கை நோக்கங்களை விளக்கும் விரிவான ஆவணமாகும். நீதிபதி திரு. செங்கோட்டு வேலன் அவர்களின் தலைமையில் மாநில மகளிர் ஆணைக்குழு ஒன்றையும் நாங்கள் அமைத்துள்ளோம்.

1.2. பயிற்சி மேம்பாடு, நல்ல வேலை வாய்ப்புகள் ஆகிய வழிகளின் மூலமாக, மகளிர் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கி கொள்ள உதவி செய்யப்படுமென இவ்வரசின் மகளிர் கொள்கை பற்றிய விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிரிடையே சுய வேலை வாய்ப்பு வசதிகளை மேம்படுத்தவும் நாங்கள் பல்வேறு திட்டங்கள் வகுத்துள்ளோம். மகளிர் குழுக்கள் மூலமாக சுய வேலை வாய்ப்பை மேம்படுத்துவதற்கு ஆதரவு அளிப்பதே நம்முடைய செயற்திட்ட உத்தியாகும். வேளாண்மை வளர்ச்சி-அனைத்து நாடுகள் நிதி ஆதரவுடன் தருமபுரி, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களில் இந்த உத்தி நன்கு செயல்பட்டுள்ளது. இத்திட்டம் அண்மையில் மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஊரக பகுதிகளில், மகளிர் குழந்தை நல மேம்பாட்டுத்திட்டம் என்ற

அந்த வகையில், அந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கேடயம் வழங்குவது என்கிற அந்தக் குழுவின் பரிந்துரையை நிறைவேற்றுகிற போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியே அதிலே தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கே கேடயம் வழங்க வேண்டி இருக்கிற பாராட்டத்தக்க சூழ்நிலை இருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் அதனைத் தெரிவிக்கவில்லை என்று கருதுகிறேன். அந்த வகையில் பேரவையின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்காவிட்டாலும், இந்தச் செய்தியைத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேரவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலேயும், பேரவையின் சார்பிலேயும், என் சார்பிலேயும் பாராட்டைத் தெரிவிப்பது (மேசையைத் தட்டும் ஒலி) பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்தத் தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிற பல்வேறு நலத் திட்டப் பணிகளை விரிவாகவும், அந்தப் பகுதி மக்கள் முழுமையாகப் பயன்படுகிற வகையிலேயும் செய்து வந்திருக்கிற காரணத்தாலே, அதன் அடிப்படையில் வேறு சில தொழில்கள் அந்த மக்களுக்குக் கிடைக்கிற காரணத்தால், அந்த உணர்வுள்ள மக்கள்கூட இன்றைக்கு மனம் திருந்தி, முழுமையாக கள்ளச் சாராயம் தங்கள் தொகுதியில் இல்லாத சூழ்நிலையை உருவாக்கக்கூடிய ஒரு நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். எனவே, அந்தக் குழு எடுத்த முடிவின்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நாம் கேடயம் வழங்கவேண்டி இருக்கிற காரணத்தால், இந்தத்துறையினர் வழங்காமல், பேரவையின் சார்பிலே பேரவை சம்பந்தப்பட்ட சீரிய நிகழ்ச்சி ஒன்றில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்தப் பாராட்டுக் கேடயம் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, கோவை மாவட்டம் வால்பாறை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஸ்ரீதரன் அவர்களுக்கும் அந்தக் கேடயம் அந்த விழாவில் வழங்கப்படும் என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியைப் பேரவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை கோரிக்கை எண் 15 - காவல் துறை. கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்	தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை அளித்த எண்ணற்ற வரப்பிரசாதங்களில்

நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று என்னும் ஐம்பெரும் பஞ்ச பூதங்கள் முக்கியமானவை. அவை இன்றி அணுவும் அசையாது; உலகமும் உயிர் பெறாது. அந்த அளவிற்கு அருமையும் பெருமையும் தனித் தன்மையும் உள்ள பஞ்ச பூதங்கள் ஆக்கத்திற்கு ஆதாரமாக இருப்பது போல, சிற்சில சமயங்களில் தமது நிலை மாறி, சீற்றத்தால் சீறி எழுந்து புயலாக பூகம்பமாக வெள்ளமாக, மின்னுகின்ற இடியாக, இன்னும் எத்தனையோ வடிவங்களில் பேராபத்துக்களையும், பெரும் சேதங்களையும் விளைவிக்கின்றன. அத்தகைய இயற்கைச் சீற்றங்களின் ஒரு கூறுதான் தீ விபத்து. தீ விபத்துக்கள் வருமுன் காப்பதும், வந்த பின் விரைந்து அணைத்து, உயிர் சேதங்களையும் பொருள் சேதங்களையும் தடுப்பதும் தவிர்ப்பதும் தீயணைப்புத் துறையின் தலையாய பணி ஆகும். மற்ற இயற்கைச் சீற்றங்களான வெள்ளம், புயல், நிலச்சரிவு, மற்றும் வெடி விபத்துகள், ரெயில் விபத்துகள் போன்ற பெரும் விபத்துகளில் சிக்கியவர்களுக்கு அவசர நிவாரணம் அளித்தலும் இத்துறையின் பணியாகும். இது மட்டுமின்றி தேர்தல்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள், கலவரங்கள், முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகிய பணிகளில் காவல் துறையினருக்கும், தொற்று நோய் பரவும் காலங்களில் பொதுச் சுகாதாரத் துறையினருக்கும் இத்துறை உதவுகிறது. நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடியாக மருத்துவச் சிகிச்சைக்கு கொண்டு செல்வதற்காக இத்துறையில் நோயாளர் ஊர்திகள்—'ஆம்புலென்சஸ்' பயன்படுத்தப் பட்டு வருகின்றன. பொது இடங்களில் தீ தடுப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனை வழங்குவது, சட்ட விதிகளுக்கு உட்பட்டு, பெரிய கட்டிடங்களிலும் அடுக்கு மாடிக் கட்டிடங்களிலும் தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதும் இத்துறையின் பணியாகும்.

பிற்பகல் 12-05

26 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட தீயணைப்புத் துறை படிப்படியாக வளர்ந்து தனது மக்கள் சேவையால் தனக்கென்று ஒரு தனியிடத்தை இன்று பெற்றுள்ளது. குறிப்பாக எங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு தீயணைப்புத் துறையில் முக்கியமான வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன என்றால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலம் முழுவதும் 222 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. இத்துறையில் மொத்தம் 6,162 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். 656 ஊர்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களோடு நமது தீயணைப்புத் துறையை ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் நாம் எந்த அளவுக்கு இத்துறையில் வளர்ச்சி அடைந்துள்ளோம் என்பது நமக்கு புலனாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—I
[614 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண். 29.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை கொள்கை விளக்கக்குறிப்பு.

1994-95

அத்தியாயம் - 1.

முன்னுரை:

கோரிக்கை எண். 29-ன் கீழ் 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 47,68,012 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.1. 1994 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9 ஆம் நாளன்று நடைபெற்ற மகளிர் மாநாட்டை தொடர்ந்து மாண்புமிகு முதலைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மகளிர் குறித்த இவ்வரசின் கொள்கையை அறிவித்துள்ளார். இது, அரசின் கொள்கை நோக்கங்களை விளக்கும் விரிவான ஆவணமாகும். நீதிபதி திரு. செங்கோட்டு வேலன் அவர்களின் தலைமையில் மாநில மகளிர் ஆணைக்குழு ஒன்றையும் நாங்கள் அமைத்துள்ளோம்.

1.2. பயிற்சி மேம்பாடு, நல்ல வேலை வாய்ப்புகள் ஆகிய வழிகளின் மூலமாக, மகளிர் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கி கொள்ள உதவி செய்யப்படுமென இவ்வரசின் மகளிர் கொள்கை பற்றிய விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிரிடையே சுய வேலை வாய்ப்பு வசதிகளை மேம்படுத்தவும் நாங்கள் பல்வேறு திட்டங்கள் வகுத்துள்ளோம். மகளிர் குழுக்கள் மூலமாக சுய வேலை வாய்ப்பை மேம்படுத்துவதற்கு ஆதரவு அளிப்பதே நம்முடைய செயற்திட்ட உத்தியாகும். வேளாண்மை வளர்ச்சி-அனைத்து நாடுகள் நிதி ஆதரவுடன் தருமபுரி, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களில் இந்த உத்தி நன்கு செயல்பட்டுள்ளது. இத்திட்டம் அண்மையில் மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஊரக பகுதிகளில், மகளிர் குழந்தை நல மேம்பாட்டுத்திட்டம் என்ற

இணைப்பு—I
[614 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண். 29.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

கொள்கை விளக்கக்குறிப்பு.

1994-95

அத்தியாயம் - 1.

முன்னுரை:

கோரிக்கை எண். 29-ன் கீழ் 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 47,68,012 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.1. 1994 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9 ஆம் நாளன்று நடைபெற்ற மகளிர் மாநாட்டை தொடர்ந்து மாண்புமிகு முதலைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மகளிர் குறித்த இவ்வரசின் கொள்கையை அறிவித்துள்ளார். இது, அரசின் கொள்கை நோக்கங்களை விளக்கும் விரிவான ஆவணமாகும். நீதிபதி திரு. செங்கோட்டு வேலன் அவர்களின் தலைமையில் மாநில மகளிர் ஆணைக்குழு ஒன்றையும் நாங்கள் அமைத்துள்ளோம்.

1.2. பயிற்சி மேம்பாடு, நல்ல வேலை வாய்ப்புகள் ஆகிய வழிகளின் மூலமாக, மகளிர் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கி கொள்ள உதவி செய்யப்படுமென இவ்வரசின் மகளிர் கொள்கை பற்றிய விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிரிடையே சுய வேலை வாய்ப்பு வசதிகளை மேம்படுத்தவும் நாங்கள் பல்வேறு திட்டங்கள் வகுத்துள்ளோம். மகளிர் குழுக்கள் மூலமாக சுய வேலை வாய்ப்பை மேம்படுத்துவதற்கு ஆதரவு அளிப்பதே நம்முடைய செயற்திட்ட உத்தியாகும். வேளாண்மை வளர்ச்சி-அனைத்து நாடுகள் நிதி ஆதரவுடன் தருமபுரி, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களில் இந்த உத்தி நன்கு செயல்பட்டுள்ளது. இத்திட்டம் அண்மையில் மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஊரக பகுதிகளில், மகளிர் குழந்தை நல மேம்பாட்டுத்திட்டம் என்ற

நுண் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை முற்றிலுமாக ஒழித்தல்.	8.08
அனைத்து மருத்துவ மனைகளையும் மகப்பேறு மையங்களையும் மழலை சீராட்டும் மையங்களாக்குதல்.	2.70
மகளிர், இளம் வயதிலும் அடிக்கடியும் தாய்மையடைவதைத் தடுத்தல்	80.03
கட்டாயத் தொடக்க கல்வியை பரவலாக்குதல்.	81.32
மகளிரின் எழுத்தறிவையும் நிலையையும் உயர்த்துதல்.	42.71
குழந்தை நல மையங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குதலும் சிறந்த சுகாதார வசதிகளை செய்து கொடுத்தலும்.	91.70
குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக நீக்குதல்.	0.13
பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைச் செயற்படுத்தல்.	4.00
பெண் சிசுக் கொலை என்ற சமூக கொடுமையை ஒழித்தல்.	0.22
குழந்தைப் பருவத்தில் ஏலாமையுறுவதைத் தடுத்தலும் மறுவாழ்வளிக்கும் பொருட்டு தொடக்க நிலையில் கண்டறிதலும்.	4.87
பிறவி இதய நோய்களைத் தொடக்க நிலையில் கண்டறிதல்.	0.25
மொத்தம்.	**697.65**

1.5. குழந்தை உய்விற்கு மட்டுமின்றி ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் வளரவேண்டுமென்பதே தமிழ்நாட்டின் உன்னத முயற்சி என்பதை உறுதி செய்வதற்காக, இவ்வரசு மேற்கொண்டுள்ள மாபெரும் முயற்சியை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர்.

1.6. புரட்சி தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தை நலத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.4 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் கலன்களாவன:-

* பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளன்று	ரூ.800 மதிப்புள்ள 2 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று
* பள்ளியில் சேர்த்தவுடன்	ரூ.250/-
* ஆறாம் வகுப்பில் சேர்ந்தவுடன்	ரூ.500/-

* 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை ஒவ்வொராண்டும் 10 திங்களுக்கு, திங்களொன்றுக்கு ரூ.50 என்ற வீதத்தில் 4 ஆண்டுகளுக்குத் தொகை வழங்கல். — ரூ.2000/- (4 ஆண்டுகளில் வழங்கத்தக்கது).
* 20 வயது நிறைவடைந்தவுடன் — ரூ.20,000/-

1.7. இப்புதிய மேம்படுத்தப்பட்ட திட்டம், பெண் குழந்தைகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதே நேரத்தில் குடும்ப நல நடவடிக்கைகளையும் மேம்படுத்தும்.

1.8. புரட்சி தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கும், இத்துடன் இணைந்து உலக வங்கி நிதியுதவியுடன் செயற்படுத்தப்படுகிற தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்திற்கும் 1993-94 ஆம் ஆண்டில் ரூ.312.42 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்க, இவ்வாண்டு ரூ.345.36 கோடியாக நிதியொதுக்கீடு உயர்த்தப்பட்டுள்ளது. நமது சத்துணவுத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதையே இது காட்டுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான விரிவான சத்துணவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும். நம் நாட்டில், 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான விரிவான சத்துணவுத் திட்டம் செயற்படுகின்ற ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். சோயா, மாவும், மக்காச் சோள ரவையும் சேர்ப்பதின் மூலம் சத்துணவு மேம்படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள குழந்தைகளுக்கு உரிய சத்துணவு வழங்கப்படுவதை உறுதி செய்ய அநேக நடவடிக்கைகளை இம் மாமன்றத்தின் உறுப்பினர்கள் உளமாரப் பாராட்டுவர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 25]

அத்தியாயம் 2.

மகளிர் நலம்.

மகளிருக்கான பொருளாதார திட்டங்கள்.

2.1. தையல் கூட்டுறவு சங்கங்கள்:

சமூக நலத்துறையின் கீழ் 77 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. "புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்" மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளி மாணவ மாணவியர், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்கக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும், பள்ளி மாணவ மாணவியர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும் மாணவ மாணவியர் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளை இந்த மகளிர் தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வழங்குகின்றன. இச்சீருடை தைக்கும் பணியில் மூலம் 26,257 மகளிருக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. இச்சங்கங்களின் ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் ஒன்றுக்கு ரூ.400 முதல் ரூ.500 வரையில் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு குடும்பத்திற்கு கூடுதல் வருமானமாக பெறுகின்றனர். 1993-94-ல் 65 லட்சம் செட் சீருடைகள் தைத்து வழங்கும் பொறுப்பு சமூக நலத்துறையின்கீழ் இயங்கும் மகளிர் தையற் தொழில் கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய நான்கு கோடியே முப்பத்தெட்டு இலட்சம் ரூபாய் தையல் கூலிக்காகவும், சேவை கட்டணத்திற்காகவும், துணி வெட்டுநர் மற்றும் அவரின் உதவியாளர் சம்பளத்திற்காகவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2.2. காலணி தயாரிப்போர் கூட்டுறவு சங்கங்கள்:

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளி மாணவ மாணவியருக்கு இலவச காலணிகள் வழங்கும் பொருட்டு, அக்காலணிகளை தயாரிப்பதற்காக சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 38 மகளிர் காலணி கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. சுமார் இரண்டாயிரம் ஆதி திராவிடர் மகளிர்கள், இச்சங்கங்கள் மூலம் பயனடைகின்றார்கள். காலணிகளைத் தயாரிப்பதற்கு சங்க உறுப்பினர் அனைவருக்கும் ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி காலத்தில் ஒவ்வொரு மகளிருக்கும் ரூ.200/- உதவித் தொகையும் காலணிகளைத் தயாரிப்பதற்காக, ரூ.250/- மதிப்புள்ள கருவிகள் மற்றும் உபகரணங்களும் இலவசமாக

அரசால் வழங்கப்பட்டுள்ளன. அரசின் தேவைக்காக செய்யப்படும் காலணிகளைத் தவிர மகளிர் தங்களது வருவாயை பெருக்கிக் கொள்ள உதவும் வகையில் சுய வேலை வாய்ப்பின் மூலம் காலணிகள் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

2.3. எழுது பொருள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள்:

இத்துறையின் கீழ் எழுது பொருள் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கங்கள் 13 செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 700 மகளிர் உறுப்பினராக சேர்ந்துள்ளனர். எழுதுபொருள் கூட்டுறவு சங்கங்கள் தங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 7 சங்கங்களுக்கு அச்சு இயந்திரமும் 12 சங்கங்களுக்கு இரு கோடிடும் இயந்திரங்களும், 12 சங்களுக்கு காகித உறை தயாரிக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. மதிய உணவு திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும் அனைத்து பதிவேடுகளும் இத்துறையின் கீழ் இயங்கி வரும் சங்கங்களால் தயாரிக்கப்படுகின்றன.

2.4. கயிறு பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்:

கயிறு மற்றும் கயிறு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பணியில் மகளிர் கூட்டுறவு சங்கம் ஒன்று இத்துறையின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நல்லூரில் இயங்கி வருகிறது. இச்சங்கம் உற்பத்தி நிலையமாகவும் மகளிருக்கு கயிறு தயாரிக்கும் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் செயல்பட்டு வருகிறது. இது தவிர இங்கு 125 மகளிருக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. இச்சங்கம் ஆலங்குடி நீடாமங்கலம், மன்னார்குடி ஆகிய இடங்களில் கிளைகளைக் கொண்டு உள்ளது.

2.5. சாக்குகட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள்:

இத்துறையின் கீழ் தற்போது 18 சாக்குகட்டி தயாரிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் 1050 பெண் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. சாக்குகட்டி தயாரித்து கல்வித்துறையின் கீழ்வரும் பள்ளிகளுக்கு சாக்குகட்டி வழங்க மகளிருக்கு ஒரு மாத காலம் பயிற்சி ரூ.100 மாதாந்திர உதவித் தொகையுடன் அளிக்கப்பட்டது. கல்வித் துறையின் மூலம் போதுமான அளவு விநியோக ஆணை பெறாததாலும் உற்பத்தி விலை அதிகரிப்பதாலும், பல சங்கங்கள் நன்முறையில் செயல்படாத நிலையிலுள்ளன.

2.6. திரவ சோப்பு தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்:

இந்தக் கூட்டுறவு சங்கம் 1987 ஆம் ஆண்டு செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், நாராயணபுரத்தில் துவங்கப்பட்டது. ரூ.52,800/-

1994 ஏப்ரல் 25]

செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகக் கொண்டு இச்சங்கம் இயங்கி வருகிறது. இந்த சங்கத்தில் 25 மகளிர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். சங்க உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சத்துணவு மையங்களுக்கும் கிளீனிங் பவுடரை தயாரித்து வழங்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சோப்பு தயாரிப்பதற்கு வேண்டிய மூலப்பொருட்களை உற்பத்தி செய்வதற்காக உண்ணத் தகுதியற்ற நெய் (ஸ்கம்) என்ற கழிவை வாங்கி அதனை திரவ ரூபத்தில் சோப்பு தயாரிப்பதற்காக மூலப்பொருளாக மாற்றி காதித்துறைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

2.7. ஜவ்வரிசி மற்றும் அப்பளம் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்:

தருமபுரி மாவட்டத்திலுள்ள மத்தூரில் ஜவ்வரிசி மற்றும் அப்பளம் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம் தொழில் வணிக துறையினரால் பதிவு செய்யப்பட்டு சமூக நலத்துறைக்கு 1992-ல் மாற்றப்பட்டது. இந்த சங்கத்தில் சுமார் 35 மகளிர் உறுப்பினராக பணிபுரிகின்றனர்.

2.8. இறால் ஊறுகாய் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்:

இந்த சங்கம் 29.6.93-ல் பதிவு செய்யப்பட்டு, சென்னை இராயபுரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் 50 பின்தங்கிய மீனவ மகளிர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

2.9. இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள்:

இத்துறையின் கீழ் 22 இணை உணவு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 1650 மகளிருக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இச்சங்கங்கள் மூலம் தயாரிக்கப்படும் இணை உணவு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் மையங்களுக்கும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் வரும் வட்டார அலுவலகங்களுக்கும் வழங்கப்படுகிறது. 1993-94 ஆம் ஆண்டில் சுமார் 12000 மெட்ரிக் டன் உணவு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

2.10. மகளிர் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள்:

(அ) 50 பயிற்சி மையங்களும் ஆறு உற்பத்தி நிலையங்களும் மகளிருக்காக இத்துறையின் மூலம் நடத்தப்படுகின்றன.

(ஆ) 41 தையல் பயிற்சி நிலையங்கள், 4 பனை ஓலை பயிற்சி நிலையங்கள், 3 கம்பளி பயிற்சி நிலையங்கள், ஒரு பாய் முடையும் பயிற்சி நிலையம், ஒரு மூங்கில் கைவினை பொருட்கள் பயிற்சி நிலையம் இத்துறையின் கீழ் செயல்படுகின்றன. மேலும் 1 சாக்குகட்டி உற்பத்தி

மையம், இரண்டு மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையங்கள், ஒரு பெட்டீட் மற்றும் டவல் தயாரிப்பு நிலையம், ஒரு ஆயத்த ஆடை தயாரிக்கும் நிலையம், ஒரு துணி பொம்மை தயாரிக்கும் நிலையம், ஆகியன இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 790 பெண்களுக்கு இப்பயிற்சி நிலையங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது சமூக நலத்துறையின் கீழ் உள்ள தையல் மற்றும் இதர தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவியருக்கு மாதம் ரூ.50/- வீதமும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் நிதி உதவியுடன் நடைபெறும் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவியர்க்கு மாதம் ரூ.30 வீதமும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. "டிரைசம்" திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுபவர்களுக்கும், மகளிர் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் கிடைக்கும் வசதிகளை பயன்படுத்தி கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

2.11. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி அளித்தல்:

இந்த தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சிகள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1500 பெண்கள் பயன் அடைகிறார்கள். தட்டச்சு பயிற்சியாளர்களுக்கு ரூ.150/- வீதமும், சுருக்கெழுத்து பயிற்சியாளர்களுக்கு ரூ.220/- வீதமும் ஆண்டொன்றுக்கு உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ.2.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 1500 பெண்கள் பயன் அடைய உள்ளனர்.

மகளிருக்கு நிதி உதவி வழங்கும் திட்டங்கள்.

சமுதாயத்தில் நலிவுற்ற பெண்களுக்காக பல வகையான நிதியுதவி வழங்கும் திட்டங்களை திருமணத்திற்காகவும், தொடர் கல்விக்காகவும், சுய வேலை வாய்ப்புகளைப் பெறவும் இத்துறை செயல்படுத்தி வருகிறது.

2.12. ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவி திட்டம்:

ஆண்டு வருமானம் ரூ.12000/-க்கு குறைவாக பெறும் ஏழை விதவையரது மகளிர் திருமணத்திற்காக ரூ.2000/- வீதம் வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளிர் 20 வயதிலிருந்து 30 வயதுக்குள் இருத்தல் வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே இவ்வுதவி பெற முடியும். 1994-95 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.21.00 இலட்சங்களாகும்.

2.13. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்:

(அ) இத்திட்டத்தின் கீழ் 8ம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் படித்த ஏழை பெண்களுக்கு திருமண உதவியாக ரூ.5000/- வழங்கப்படுகிறது.

ஆனால், பழங்குடியின மகளிர் 5வது வகுப்பு படித்திருந்தால் போதுமானது. இத்திட்டம் மகளிரின் கல்வி மேம்பாட்டிற்கு ஒரு வலுவான தூண்டுதலாக அமையும் என அரசு கருதுகிறது. மாநிலம் முழுவதும் கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கான நிபந்தனைகள் பின் வருமாறு:-

(அ) திருமணம் செய்யும் காலத்தில் மணப்பெண் 20 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். மற்றும் அன்னாரது குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12000/-க்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் மாநகராட்சி ஆணையரும், ஊரகங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், நகராட்சியில் நகராட்சி ஆணையரும், நகரியத்தில் தனி அலுவலரும் அனுமதிக்க அதிகாரமும், அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலருக்கு இதற்கான தொகையினை பெறவும், வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் சீரிய முறையில் செயல்பட இவர்கள் பொறுப்பானவர்கள் ஆவார்கள். மாநில அளவில் சமூக நல இயக்குநர் திட்ட செயலாக்கத்திற்கு பொறுப்பானவர்.

இத்திட்டத்தின் கீழ் 1994-95-ல் ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 10,000 ஏழை மகளிர் பயனடைவர்.

2.14. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவி திட்டம்:

(அ) வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு பேறு காலத்திற்கு முன் இரு மாதங்களிலும், அதற்கு பின் இரு மாதங்களிலும், அவர்களது வருமானத்தை ஈடுகட்ட ஆதரவாக இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. முதல் 2 குழந்தைகளுக்கு மட்டுமே இந்த நிதி ஆதரவு வழங்கப்படும். விண்ணப்பதாரர் திருமணத்தின் போது 20 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். மொத்த ஆண்டு வருமானம் ரூ.12000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். பேறு காலத்தின்போது குழந்தை பிறந்தாலும், இறந்தாலும் ரூ.300/- மொத்தமாக (மாதம் ரூ.75/- வீதம் நான்கு மாதங்களுக்கு) வழங்கப்படும். துணை மருத்துவ செவிலியரது சான்றிதழ் பெற்றவர் இந்நிதி உதவி பெற தகுதி உடையவராவர். ஊரகங்களில் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகள் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அதிகாரம் உடையவை ஆகும். கருவுற்ற பெண்களுக்கு கிராம மருத்துவ செவிலியர், பலநோக்கு சுகாதார பணியாளர் மூலமாக இத்தொகை வழங்கப்படும். மாநில அளவில் இத்திட்டத்தின் சீரிய செயலாக்கத்திற்கு சமூக நலத்துறை இயக்குநர் பொறுப்பானவர். இத்திட்டத்திற்கென

1994-95ம் நிதியாண்டில் ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் இரண்டு இலட்சம் தாய்மார்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவர்.

2.15. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டம்: (விதவை மறுமணத் திட்டம்)

இத்திட்டம், விதவை மறுமணத்தை, தம்பதியருக்கு நிதியுதவி வழங்குதல் மூலம் ஊக்குவிக்கிறது. விதவையின் மறுமணத்தின் போது தம்பதியர் இருவரது பெயரிலும் ரூ.5000/-க்கான தேசிய சேமிப்பு பத்திரம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 20 வயது முதல் 30 வயதுடைய விதவைகளுக்கு மட்டுமே, வழங்கப்படுகிறது. பயனடைவோர் வருமானம் அல்லது அவர்களது குடும்ப வருமானம் ரூ.12,000/-க்குள் இருத்தல் வேண்டும். 1994-95 ஆம் ஆண்டிற்கு சுமார் 204 தம்பதியர் பயன்பெறும் வண்ணம் ரூ.10.20 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.16. ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவித் திட்டம்:

ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு குறைவாக உள்ள குடும்பங்களிலுள்ள 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட அனாதைப் பெண்கள் திருமணத்திற்கு பயனாளி ஒவ்வொருவருக்கும் ரூ.2,000/- நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ.1.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.17. தமிழக அரசு கலப்பு திருமண உதவித் திட்டம்:

இத்திட்டம் கலப்பு திருமணத்தை ஊக்குவிக்கிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு திருமண செலவிற்காக ரூ.1000/-மும், மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.4000/-மும், ஆக மொத்தம் ரூ.5000/- வழங்கப்படுகிறது. தம்பதியர் இருவரது ஆண்டு வருமானம் ரூ.12000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். 1994-95 ஆம் ஆண்டு 554 தம்பதியர் பயன்பெறும் வண்ணம் ரூ.27.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.18. இலவச தையல் இயந்திரம் வழங்குதல்:

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1000 தையல் இயந்திரங்கள் வறுமைக் கோட்டிற்குக்கு கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஊனமமுற்ற ஆண், பெண், இரு பாலருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவர்கள் முறைப்படி தையல் தொழிலை சுய வேலை வாய்ப்பாகக் கொண்டு, தங்களது வருமானத்தை உயர்த்தி கொள்கிறார்கள். 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 15.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 25]

2.19. விதவைகளின் குழந்தைகளுக்கு பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல்:

இலவச பாட புத்தகங்கள் மற்றும் நோட்டு புத்தகங்கள் வழங்கும் திட்டம் ரூ.12000/-க்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் விதவைகளின் குழந்தைகள் பயன் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. ரூ.15 முதல் ரூ.190 வரை மதிப்புள்ள பாட புத்தகங்கள் மற்றும் நோட்டு புத்தகங்கள் அவர்கள் படிக்கும் வகுப்பிற்கேற்ப இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 4000 குழந்தைகள் பயன் பெறுகின்றனர். 1994-95 ஆம் ஆண்டுக்கு ரூ.2.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

துயருறும் பெண்களுக்கு நிறுவன ஆதரவு அளித்தல்:

துயருறும் நிலையில் உள்ள பெண்கள், சமுதாயத்தில் ஒரு நல்ல தகுதி நிலையை அடைய உதவி புரியும் வகையில், இத்துறை பல நிறுவனங்களை நடத்தி வருகிறது. இந்த நிறுவனங்கள் பெண்களின் உரிமைகளை அறியவும் திறமையை மேம்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றன.

2.20. சேவை இல்லங்கள்:

(அ) இத்துறை தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, காரைக்குடி ஆகிய இடங்களில் சேவை இல்லங்களை நடத்தி வருகின்றது. ஏழை விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், மற்றும் ஆதரவற்றோருக்கு கல்வி வசதி அளிப்பதே இவற்றின் நோக்கமாகும். படிப்பை தொடர ஆர்வமில்லாதோருக்கு தையல், பூ வேலை, துணி நெய்தல், மற்றும் வீட்டு பராமரிப்பு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தையல் மற்றும் பூ வேலையில் ஓராண்டு பயிற்சி முடித்தவர்கள், அரசின் தொழில் நுட்பத் துறையால் நடத்தப்படும் தேர்வுகள் எழுத தகுதி உடையவராவர்.

(ஆ) சேவை இல்லங்களில் பயிலும் உள்ளுறை மாணவிகளுடன், இரண்டு குழந்தைகள் தங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டு காலம் மேற்படு இல்லத்தில் இருக்கலாம். உள்ளுறை மாணவிகளுக்கு மாதம் ரூ.150/- வீதமும், குழந்தைகளுக்கு ரூ.120/- வீதமும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. சீருடைக்காக, உள்ளுறை மாணவிகளுக்கு ஆண்டிற்கு ரூ.150/- வீதமும், குழந்தைகளுக்கு ரூ.100/- விதமும் வழங்கப்பட்டு வருகின்றது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவியர்களுக்கு ரூ.35/- வீதமும், 6-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்கு ரூ.50/- வீதமும், 9 மற்றும் 10-ம் வகுப்பு மாணவிகளுக்கு ரூ.90/- வீதமும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

(இ) தாம்பரம் மற்றும் கடலூர் இல்லங்களில், கலை பாடங்களைக் கொண்ட மேல்நிலை வகுப்புகள் ஒப்புதலளிக்கப்பட்ட 60 உள்ளுரைவோருடனும், தஞ்சாவூர் சேவை இல்லத்தில் விஞ்ஞான பாடங்களுடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட 60 உள்ளுரைவோருடனும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு உள்ளுரைவோருக்கும் ஒரு மாதத்திற்கு பயிற்சித் தொகை தலா ரூ.150/- ம் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்காக ஒவ்வொரு உள்ளுரைவோருக்கும் வருடத்திற்கு தலா ரூ.190/- வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்றோருக்காக தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்குகிறது. இப்பிரிவில் 30 பெண்களும் 20 குழந்தைகளும் உள்ளனர்.

(ஈ) தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவை இல்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து செயலக பிரிவு இயங்குகிறது. ஒவ்வொன்றிலும் 20 பயிற்சியாளர்களுக்கு ஒரு வருட பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் அவர்கள், அரசு தேர்வு எழுதலாம். சேவை இல்லத்துடன் இணைக்கப்பட்ட தையல் பிரிவில் பயிற்சி பெறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும், ஓராண்டு பயிற்சி காலத்தில் தலா ரூ.250/ - வழங்கப்படுகிறது.

(உ) இத்துறையின் சேவை இல்லங்கள் மூலம் பத்தாம் வகுப்பு தேறிய மகளிர் பல நோக்கு சுகாதார பணியாளர் பயிற்சிக்காக பரிந்துரை செய்யப்படுகிறார்கள். பயிற்சி காலம் ஒன்றரை ஆண்டு ஆகும். இதுவரை, சுமார் 1000 மகளிர் இப்பயிற்சிக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்கள். தொழிற் பயிற்சி பாடங்களுடன் மேல்நிலை வகுப்புகள் காரைக்குடி, திருநெல்வேலி, மற்றும் தாம்பரம் சேவை இல்லங்களில் 1994-95 ஆம் ஆண்டில் துவக்கப்படவுள்ளன.

2.21. தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்:

(அ) அரசு நிதியுதவியுடன் காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபா சேவிகாஸ்ரமத்திலும், ஈரோட்டிலுள்ள கஸ்தூரிபா தேசிய நினைவு அறக்கட்டளையிலும், மற்றும் மதுரையிலுள்ள மதுரை சேவாஸ்ரமத்தினாலும் சேவை இல்லங்கள், தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 120 மாணவிகளுக்கு, மதுரை மற்றும் ஈரோட்டிலுள்ள சேவை இல்லங்களில் தலா 40 மாணவிகளுக்கு, இரண்டாண்டு குறுகிய கால 10-ம் வகுப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.75/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு பட்டதாரி ஆசிரியர், ஒரு தமிழ் ஆசிரியர், ஆகிய இருவருக்கான ஊதியத் தொகை ஒவ்வொரு சேவை இல்லத்திற்கும்

மானியமாக வழங்கப்படுகிறது. சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மகளிருக்காக தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலகப்பிரிவு நடத்தும் சென்னை "ஸ்திரி சேவா மந்திர்" என்னும் நிறுவனத்திற்கு உதவித் தொகை மானியம் வழங்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ.1.65 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது.

2.22. ஆசிரியர் பயிற்சி பள்ளி:

60 மகளிர் பயிலும் வண்ணம் ஒரு ஆசிரியப் பயிற்சி பள்ளி பல்லாவரத்தில் செயல்பட்டு வருகிறது. 20 சேவை இல்ல மாணவிகளும், 20 ஆதரவற்றோருக்கான அரசு பராமரிப்பு இல்ல மாணவிகளும், 5 கணவனால் கைவிடப்பட்டவர்களும், 5 விதவைகளும், 5 ஆதரவற்ற பெண்களும் மற்றும் 5 உடல் ஊனமுற்ற பெண்களும் இப்பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.150/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் வருடத்திற்கு ரூ.200/- உடை செலவினத்திற்கு வழங்கப்படுகிறது. 1994-95-ம் ஆண்டிற்கு 8.46 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2.23 பணிபுரியும் மகளிர் விடுதிகள்:

பணிபுரியம் பெண்களுக்கு அவர்களது பணியிடத்திற்கு அருகாமையிலேயே பாதுகாப்புடன் கூடிய சிக்கனமான உறைவிடம் தேவைப்படுகிறது. பணிபுரியும் பெண்களின், குறிப்பாக ரூ.3000/-க்கு மிகாமல் மாத வருமானம் பெறும் நடுத்தர வருவாய் வர்க்கத்தினரின் பாதுகாப்பு மற்றும் நியாயமான வாடகையுடன் கூடிய இருப்பிடத்தினை தெரிவு செய்யும் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அரசு சென்னையில் இரண்டு, கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, ஒசூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஒன்று வீதமும், எட்டு பணிபுரியும் பெண்கள் விடுதிகள் ஏற்படுத்தியுள்ளது. இந்த விடுதிகளில் உள்ள மொத்த இருப்பிட வசதி 390 ஆகும். இவ்விடுதி பணியாளர்களான ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலர்கள், ஒரு அலுவலக உதவியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவாளர் ஊதியத்திற்கான மொத்த செலவையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. உணவு செலவு, கட்டிட வாடகை, மின்கட்டணம், மற்றும் இதர கட்டணங்கள் உள் உறுப்பினர்களிடமிருந்து, சம அளவில் ஈடு செய்யப்படுகிறது. ரூ.13.60 இலட்சங்கள் 1994-95 ஆம் நிதி ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.24. பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதியுதவி அளித்தல்:

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் பணிபுரியும் மகளிர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கான மொத்த செலவில், 75 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மொத்த மதிப்பீட்டில் 15 சதவிகிதம் அல்லது ரூ.35000 இவற்றில் எது குறைந்த தொகையோ, அத்தொகை விண்ணப்பத்தின் பேரில், மாநில அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மீதித்தொகையை நிறுவனமே ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தை பயன்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டிடம் கட்ட சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இந்நிறுவனங்கள் மாநகராட்சி, நகராட்சியின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். இதே பணிக்காக பிற அரசிடமிருந்தோ, நிறுவனங்களிடமிருந்தோ உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டிடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில், 50 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவிடன் 1993-94 வரை 63 பணிபுரியும் மகளிர் இல்ல கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1994-95 ஆம் ஆண்டிற்கு பணிபுரியும் மகளிர் இல்ல கட்டிடம் கட்டுவதற்காக மானிய தொகைக்கென ரூ.0.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.25. மகளிர் மன்றங்கள்:

(அ) ஊரக மகளிரை, அவர்களது பொருளாதார விளிம்புகளை நோக்காது, மகளிர் மன்றங்களில் ஒன்றாக கொண்டுவர ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் கீழும் 30 மகளிர் மன்றங்கள் வீதம், தமிழ்நாடெங்கிலும் 11520 மகளிர் மன்றங்கள் நடைபெறுகின்றன. அவர்களுக்குள்ளேயே தேர்வு செய்யப்பட்டு ஒரு கன்வீனர் நியமிக்கப்படுகிறார். இம்மகளிர் மன்றங்கள் ஊரக பெண்களிடையே, கல்வி, பெண்களைக் காக்கும் சட்டங்கள் குறித்து ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் அவர்களது பொழுது போக்கு நேரத்தை பயிற்சி நேரமாக மாற்றி, அவர்களது பொருளாதாரத்தை உயர்த்தவும் பாடுபடுகின்றன. முகாம்கள் நடத்தவும், பெண்களுக்கு உணவுகளை பதபடுத்துவது, குழந்தை வளர்ப்பு; சுத்தம், சுற்றுப்புற சுகாதாரம், சத்துணவு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும், கல்வி சுற்றுலாவிற்காகவும், சமூக கல்வியின் கீழ் புத்தகம் வாங்கி வழங்குதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.13000/- ஒவ்வொரு வருடமும் சமூக நல நிதியாக வழங்கப்படுகிறது. கிராமப்புற மகளிர் பொருளாதார தடை தகர்த்து வெளி வர வேண்டுமென்பதே இம்மன்றத்தின் நோக்கமாகும். 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ.49.83 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 25]

(ஆ) சிறப்பாக செயல்படும் மகளிர் மன்றங்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.2000/- வீதம் பரிசு தொகை வழங்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிற்காக ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பபட்டுள்ளது.

2.26. வழிகாட்டி மையங்கள்:

வழகாட்டி மையம், ஒவ்வொரு மாவட்ட சமூக நல அலுவலகத்திலும் செயல்பட்டு வருகிறது. வழிகாட்டி மையங்கள் கணவனால் கைவிடப்பட்டவர்கள், கைம்பெண்கள், மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு வங்கி மூலம் கடன் உதவி பெறுவதற்கு உதவி புரிகின்றன. ஏழை கைம்பெண்கள் ஆயுள் பாதுகாப்பு ஈட்டுத் தொகை, ஓய்வூதியம், பொது வைப்பு நிதியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ஆகியவற்றினைப் பெறுவதற்கும் இதர துறைகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வழிகாட்டி உதரி புரிகின்றன. வழிகாட்டி மைய அலுவலர்கள், குழந்தைகள் காப்பகங்கள், மற்றும் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள், போன்றவற்றில் குழந்தைகளை சேர்க்க விரும்புவோருக்கு உதவி புரிகின்றனர். 1994-95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.31.13 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.27. (மகம்) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்:

மகம் என்னும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாட்டு மகளிரை மேம்படுத்தும் குறிக்கோளுடன், தமிழ்நாடு அரசினால் டிசம்பர் திங்கள் 1983 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இக்கழகத்தின் பங்கு மூலதனத்தில், மத்திய அரசும் அங்கம் வகிக்கிறது. இன்றைய தேதியில், மாநில அரசும், மத்திய அரசும் முறையே ரூ.40 இலட்சம் மற்றும் ரூ.38.42 இலட்சம் பங்கு மூலதனமாக இக்கழகத்திற்கு வழங்கியுள்ளன.

மகம் தன் தொடக்க நிலையிலிருந்து சுமார் 28,437 வறுமைகோட்டிற்கு கீழ் வாழும் மகளிருக்கு மொத்த மதிப்பீட்டு தொகையாக ரூ.23 கோடியில், ரூ.15 கோடி மானியமாகவும் மற்றும் மீதமுள்ள ரூ.8 கோடியை வங்கி கடனாகவும் 31-3-1993 ஆம் ஆண்டு முடிய வழங்கி உதவி புரிந்துள்ளது. மகம் 1993-94 ஆம் ஆண்டு சுமார் 17,600 வறுமை கோட்டிற்குக்கீழ் வாழும் மகளிருக்கு மொத்த ஒதுக்கீட்டு தொகையான ரூ.21 கோடியில், ரூ.12 கோடி மானியமாகவும் மீதமுள்ள ரூ.9 கோடியை, வங்கி கடனாகவும் வழங்கி உதவி புரிந்துள்ளது.

1994-95 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

2.28. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத்திட்டம்:

மகம் 1989-90-ம் ஆண்டில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டம் என்னும் மாபெரும் திட்டத்தினை ரோமிலுள்ள விவசாய வளர்ச்சிக்கான

பன்னாட்டு நிதி (IFAD) நிறுவன உதவியுடன் தொடங்கி செயலாற்றி வருகிறது. ரூ.45.92 கோடி மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் ஏழு ஆண்டுகளில் வறுமைகோட்டிற்கு கீழ் இருக்கும் சுமார் 60,000 மகளிரை பயனடைய செய்யும். இத்திட்டம், தர்மபுரி, சேலம், தென்னாற்காடு, மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுகிறது.

திட்டத்தின் குறிக்கோள்கள்:

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் வறுமை கோட்டின் கீழ் வாழும் மகளிருடைய சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதாகும். இதன் பொருட்டு வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் தேர்வு செய்யப்பட்டு கிராம அளவிலான மகளிர் குழுக்களாக அமைக்கப்பட்டு அப்பெண்களுக்கு வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்வதற்காக கடன் மற்றும் மானியம் கொடுத்து உதவி அளிக்கப்படுகின்றது. இதே சமயம், மாறி வரும் சமூக சூழ்நிலை குறித்து விழிப்புணர்ச்சியை அப்பெண்களுக்கு ஏற்படுத்தி அவர்களது தன்னம்பிக்கையை வளரச் செய்தலும், இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

வருவாய் ஈட்டும் தொழில்கள்:

விவசாயம், தோட்டக்கலை, பட்டு வளர்ச்சி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி ஆகிய தொழில்களுக்காக தனிப்பட்ட நிலவுடமை (அ) கூட்டு பட்டா முறையில் நிலம் உள்ள பெண்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவி வழங்கப்படுகிறது. இத்துடன் குத்தகை நிலம் பெற்றுள்ள பெண்களுக்கும் இத்திட்டம் உதவி அளிக்கின்றது. நிலமற்ற பெண்களுக்கு கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற கால்நடை தொழில்களுக்கும் குடிசை மற்றும் கிராம தொழில்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் உதவி அளிக்கப்படுகிறது.

செயல்முறை:

அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தேர்வு செய்யப்பட்ட மகளிரைக்கொண்டு சுமார் 20 பேர் கொண்ட குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன்பெற தகுதி அடைவதற்கு பெண்கள் இத்தகைய மகளிர் குழுக்களில் குறைந்த பட்சம் மூன்று மாதங்களாவது உறுப்பினர்களாக செயல்பட்டு குழு சேமிப்பு நிதிக்காக குறைந்த பட்ச சேமிப்பு தொகையை செலுத்தி இருக்க வேண்டும். வருவாய் ஈட்டும் தொழில்களுக்கான மானிய தொகையை பயனீட்டாளருக்கு நேரடியாக வழங்காமல், இத்திட்டத்திற்காக கடன் உதவி வழங்கும் வங்கியிலேயே பயனீட்டாளரின் பெயரில் இந்த மானியத்

1994 ஏப்ரல் 25]

தொகை குறிப்பிட்ட கால வைப்பு நிதியாக வைக்கப்படுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்தொகையானது வங்கி கடன் திருப்பு செலுத்தி கணக்கு முடிக்கும் காலத்தில் அவர்களது கடன் தொகையிலிருந்து கழிக்கப்படுகிறது. இது தாங்கள் பெற்ற கடனுதவியை காலம் தவறாமலும், உடனடியாக திருப்பி செலுத்தவும் அவர்களை ஊக்குவிக்கிறது.

மகம், இத்திட்டத்தின் கீழ் 1994-95-ல் சுமார் 14,750 வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மகளிருக்கு மொத்த மதிப்பீட்டு தொகையான ரூ.2,087 இலட்சத்தில், ரூ.642 இலட்சம் மானியமாகவும், மீதமுள்ள 1445 இலட்சம், வங்கி கடனாகவும் கொடுத்து உதவ திட்டமிட்டுள்ளது.

2.29. திறனை மேம்படுத்தும் பயிற்சி திட்டங்கள்:

மகம், 1989-90 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பல திறன்களை மேம்படுத்தும் திட்டங்களை, தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தி வருகின்றது. மகளிரை மின்சாரம் மற்றும் மின்னணு கருவிகள் பராமரிப்பு, சிமெண்ட் வேலைப்பாடு, ஆய்வுக்கூட தொழில் நுட்ப பணியாளர், சிமெண்ட் கட்டைகள் தயாரிப்பு, கொத்தனார் தொழில் தெரிபொருள் பதிவு, மற்றும் கணிப்பொறி இயக்கம், ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கிறது. இப்பயிற்சியின் மூலம் மகளிர் சுயமாகவோ அல்லது நல்ல முறையில் மேம்பட்ட வேலையில் அமர ஏதுவாகின்றது. மேற்கூரிய பயிற்சிகள் அடிப்படை வசதிகள் கொண்ட அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றது. மேலும் பயனீட்டாளர்களின் பயிற்சி முடிவுற்ற பின், தகுந்த வருவாய் ஈட்ட வழிவகுத்து கொடுப்பதற்கு எழுத்து மூலமாக இத்தொண்டு நிறுவனங்கள் ஒப்புதல் அளிக்கின்றன. மகம், இத்திட்டங்களின் மூலம் சுமார் 500 மகளிருக்கு ஒவ்வொரு வருடமும் மானியமாக ரூ. 10 முதல் 12 இலட்சம் வரை பொருளுதவி அளித்து பயனடைய செய்கிறது.

2.30. தலைமையகம் மற்றும் பயிற்சி மையம்:

மாநில அரசு 5 கிரவுண்ட் நிலத்தினை மகத்திற்கு கிண்டியில் 'ஸ்பிக்' நிறுவனம் அருகில் ஒதுக்கியுள்ளது. ரோமில் உள்ள விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவனம் கட்டுமான நிதியாக ரூ.60.50 இலட்சம் அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் முனைப்பாக நடந்து வருகின்றன. இம்மையம் கட்டும் வேலை முடிவடைந்து 1995 ஆம் ஆண்டு முதல் மகம் இக்கட்டிடத்தில் இருந்து செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம்மையத்தில் மகளிர் மேம்பாட்டுக்கான நவீன நூலகம், சகல வசதிகளும் கொண்ட பயிற்சி மையம் முதலியவையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.31. மகத்தின் வருங்கால திட்டங்கள்:

மகம் மகளிர் நலனுக்காக 12 பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புடன் கூடிய உற்பத்தி மையங்களை அரசு சார்பற்ற நிறுவனங்களின் மூலம் செயல்படுத்த உள்ளது. இத்திட்டங்களின் மூலம் சுமார் 1750 கிராமப்புற வறுமைகோட்டிற்கு கீழ் வாழும் மகளிர் பயன் பெறும் வகையில் மொத்த மதிப்பீட்டான ரூ.188 இலட்சத்தில் ரூ.139 இலட்சம் உதவி தொகையாக மத்திய அரசின் நார்வே அமைப்பு நிதியுதவி (NORAD) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட பொருள் உதவி கோரப்பட்டுள்ளது.

'மகம் "பால்பாகுபாடு இல்லாத சமுதாய வளர்ச்சித்திட்டம்" எனப்படும் ஒரு திட்டத்தினை வடிவமைத்து ரோம் நாட்டிலுள்ள விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியமைப்புக் குழு வருகை தந்த போது, அதன் ஆரம்ப கட்ட பரிசீலனைக்காக சமர்ப்பித்துள்ளது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், மகளிரை முழு அளவில் சுற்றுப்புற வளர்ச்சிக்கு திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட செய்து அதன்மூலம் அப்பகுதியில் உற்பத்தி, தன்னிறைவு மற்றும் சமநிலை பெறும் வழிவகையினை உறுதி செய்வது ஆகும். இத்திட்டத்தின் தற்காலிக மதிப்பீட்டு தொகை ரூ.75 கோடியாகும். மகத்தின் இத்திட்டம் விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியமைப்பால் (IFAD) அங்கீகரிக்கப்பட்டு பரிந்துரை செய்துள்ள பத்து திட்டங்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2.32. ஆலோசனை மையம், உசிலம்பட்டி:

பெண் சிசுவதை தடுப்பிற்கான பல நடவடிக்கைகளில் உசிலம்பட்டியில் இயங்கி வரும் ஆலோசனை மையமும் ஒன்றாகும். இத்திட்டத்தில், நடுநிலை பள்ளியில் பயிலும் மாணவிகள், இளம்பெண்கள் மற்றும் கருவுற்ற பெண்களுக்கு அரசு அளிக்கும் கல்வி, மற்றும் பலவித பயிற்சி திட்டங்களை பற்றியும், பெண்கள் முன்னேற்றத்திற்காக தமிழக அரசின் மூலம் செயல்பட்டு வரும் திட்டங்கள் பற்றி எடுத்துக்கூறி, அவற்றின் முலம் பயனடையுமாறு அறிவுரை வழங்கப்படுகிறது. இம்மையம் 15-5-1991 முதல், இந்திய குழந்தை நல சங்கம் மூலம் உசிலம்பட்டியில் நடைபெற்று வருகிறது. இம்மையத்தின் மூலம் இந்த ஆண்டில் 639 கர்ப்பிணி பெண்களுக்கு, பிறக்கும் பெண் குழந்தைகளை சுமையாக கருதாமல், பெருமையுடன் பேணி வளர்க்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டு ரூ.1.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் வழங்கப்பட்ட அறிவுரையினால், 65 குடும்பங்களில் பிறந்த பெண் சிசுக்கள் கொல்லப்படாமல், காப்பாற்றப்பட்டு தங்கள் குடும்பங்களிலேயே நன்கு வளர்க்கப்பட்டு வருகின்றனர்.

அத்தியாயம் - 3.

குழந்தைகள் நலம்.

3.1. குழந்தைகளின் உடல் நலத்தையும், சத்துணவு பெறும் நிலைமையையும், நன்கு பாதுகாத்து அவர்களின் மனத்திறனை மன ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு, திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. நோயாலும், சத்துணவு பற்றாக்குறையாலும் ஏற்படும் இளம் வயது இறப்பினை குறைத்து, நமது மாநிலத்தில் ஒருங்கிணைந்த சத்துணவும் உடல் நலம் பேணும் வசதிகளும் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களின் கீழ் குழந்தையின் உடல் வளர்ச்சியை அவ்வப்போது கவனித்தல், உடல் நிலையை பரிசோதனை செய்தல், நோய்த்தடுப்பு மருந்து கொடுத்தல், அவசியமாயின் அருகிலுள்ள மருத்துவ மையங்களுக்கு அனுப்பி மேல் பரிசோதனை செய்தல், இணை சத்துணவு வழங்குதல், முன்பருவக்கல்வி வழங்குதல் ஆகிய பணிகள் அடங்கும். சத்துணவு, மருத்துவம், முன்பருவக்கல்வி, மறுக்கப்பட்ட நிலையில் வாழும் குழந்தைகளுக்கு முழுமையாக வழங்க முயற்சிகள் எடுப்பதற்கு, அரசு தீர்மானித்துள்ளது.

3.2. புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்:

இத்திட்டம் தமிழ்நாட்டில் 1-7-1982 முதல் கிராமப்புறங்களிலும், 15-9-1982 முதல் நகர்புறங்களிலும், தொடங்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 28044 குழந்தைகள் நல மையங்களும், 36859 பள்ளி மையங்களும் நகர்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் நடைபெற்று வருகின்றன. இதில் 103 குழந்தை நல மையங்கள் மலைவாழ் பகுதியினர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் முக்கியமான மூன்று அம்சங்கள் - ஊட்டச்சத்து, முன்பருவக்கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு - அடங்கும். அனைத்து குழந்தைகள் நல, மையங்களும் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்ட மையங்களும் படிப்படியாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத்திட்டம்-2 மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட உள்ளன.

(அ) ஊட்டச்சத்து

ஊட்டச்சத்துகுறைவினைத்தடுப்பதற்கு, 2 முதல் 4 வயது குழந்தைகளுக்கு சுகாதார முறையில், தலத்திலேயே சமைக்கப்பட்ட சூடான உணவு மதிய உணவாக மையங்களில் வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்கண்ட அளவு பொருட்களை கொண்டு சமைக்கப்படுகிறது.

1.	அரிசி	:	80 கிராம்
2.	பருப்பு	:	5 கிராம்
3.	சோயா மாவு .	:	5 கிராம்
4.	எண்ணெய்	:	2 கிராம்
5.	தாளிதம் மற்றும் காய்கறி	:	50 கிராம்

இது தவிர, இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை, குழந்தைகளுக்கு வேகவைத்த முட்டை வழங்கப்படுகிறது. முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு புரத சத்து அடங்கிய சத்துருண்டை வழங்கப்படுகிறது.

(ஆ) முன்பருவக்கல்வி:

குழந்தைகள் நல மையங்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்தின் கீழும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்-2-ன் கீழும் தேவைக்கேற்ப முன்பருவக் கல்வி மையங்களாக மாற்றப்படுகின்றன. இத்திட்டங்களின் கீழ், அமைப்பாளர்களுக்கு முன்பருவக்கல்விக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் கல்வி உபகரணங்கள் மற்றும் விளையாட்டு சாமான்கள் அனைத்து மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. குழந்தையின் உடல் வளர்ச்சி மற்றும் மன வளர்ச்சியில் முன்பருவப் பள்ளியில் அக்குழந்தை பெறுகின்ற அனுபவம், ஓர் பயனுள்ள, வளமான அனுபவமாகும். ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனிப்படைப்பு, மற்றும் தனித்தன்மை கொண்ட ஒரு உயிர். கல்வியின் தேவையும் அவசியமும் குழந்தைகளின் மனதில் ஆழப்பதிய வேண்டும். ஆகவேதான் குழந்தைகளின் முன்பருவக்கல்விக்கு தனியான, தலையாய கவனம் செலுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. சமூக கல்வி, உடற்பயிற்சி, அறிவு வளம் மூன்றும் இதில் உள்ளடங்கும்.

(இ) உடல் நலம் பேணுதல்:

சீரான உடல் நிலையை பராமரிப்பதற்காக ஆரம்ப சுகாதார மையங்கள் மூலமாக அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்வதன் மூலமும் தடுப்பூசிகளின் மூலமும் குழந்தைகளின் உடல் நலம் பேணப்படுகிறது. கிராமப்புறங்களிலும், நகராட்சிகளிலும் பொது சுகாதாரத்துறையினர் குழந்தைகள் உடல் நலத்தைப் பேணுகின்றனர்.

(ஈ) மையங்கள் பழுது பார்த்தல்:

பெரிய தொழில் நிறுவனங்கள், மற்றும் வணிக நிறுவனங்களின் உதவியுடன் மாநிலத்திலுள்ள பழுதுபட்ட சத்துணவு மையங்களைப் பழுது பார்க்கும் மற்றும் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

1994 ஏப்ரல் 25]

(உ) முதியோருக்கு சத்துணவு:

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகை பெறும் முதியோருக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவருக்கும் நாளும் 200 கிராம் அரிசி, 7.5 கிராம் பருப்பு, 1 கிராம் எண்ணெய், 50 கிராம் காய்கறி மற்றும் தாளிதம், 7.5 கிராம் சோயா மாவு அடங்கிய சத்துணவு வழங்கப்படுகிறது. அவர்கள் தங்களின் உணவை முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தொந்தரவு இல்லாத வகையில் வீடுகளுக்கு எடுத்து செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தை முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், அவர்தம் விதவையருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1.70 இலட்சம் பேர் பயன் பெறுகின்றனர்.

(எ) பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டம்:

ஐந்து வயதுக்கு மேற்பட்டு 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி குழந்தைகளுக்கு 36859 பள்ளி சத்துணவு மையங்களின் மூலம் உணவளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் வெவ்வேறு வயதுடைய பள்ளிக் குழந்தைகளுக்காக வரையறுக்கப்பட்ட உணவின் அளவு கீழ் வருமாறு:-

வ. எண்.	உணவுப் பொருளின் பெயர்	5 முதல் 9 வயது வரை (1 முதல் 5ம் வகுப்பு வரை)	10 முதல் 15 வரை	
			6 முதல் 8-ம் வகுப்பு வரை	9 மற்றும் 10ஆம் வகுப்பு
		(அளவு கிராம்)		
1.	அரிசி	100	100	120
2.	பருப்பு	7.5	7.5	7.5
3.	சோயா மாவு	7.5	7.5	7.5
4.	எண்ணெய்	1.0	1.0	1.0
5.	காய்கறி, எரி பொருள் மற்றும் தாளிதப்பொருள்	13 பைசா	13 பைசா	13 பைசா

முட்டை சாப்பிட விரும்பும் பள்ளி குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கொருமுறை வேக வைத்த முட்டை ஒன்று வழங்கப்படுகிறது. முட்டை சாப்பிடாத பள்ளிக்குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கொருமுறை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

புரத சத்து மிகுந்த சத்துருண்டை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உள்ள சத்துணவு மையங்களில் ஏற்படும் முறைகேடுகளை தவிர்ப்பதற்கு மைய ஆய்வு செய்யும் அமைப்பு முடுக்கி விடப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட நாட்களில் மையத்தினை ஆய்வு செய்து அந்நாட்களில் வருகை தந்துள்ள குழந்தைகள் அடிப்படையில், வருகை குறியீடு மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ.265.65 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

3.3. இலவச சீருடை வழங்குதல்:

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத்திட்டத்தின் கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை கல்வி பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு ஜோடி இலவச சீருடை ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 65 இலட்சம் செட் சீருடைகள் வழங்கப்படுகின்றன. சீருடைக்கு தேவையான துணிகள் மாவட்ட சமூகநல அலுவலர்களுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகம் மூலமாக அனுப்பப்படுகிறது. சமூகநலத் துறையின்கீழ் செயல்படும் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் மூலம் சீருடைகள் தைக்கப்பட்டு, கல்வித்துறை அதிகாரிகளின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 30 கோடி இத்திட்டத்திற்கு செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 65 இலட்சம் பள்ளிச்சிறார்கள் பயன்பெறுகின்றனர். 1994-95 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்கிறது.

3.4. இலவச காலணி வழங்குதல்:

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின்கீழ் பயனடையும் 1 முதல் 8 ம் வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளி சிறார்களுக்கு இலவச காலணிகள் வழங்கும் திட்டம் 1987-88 ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. காலணி தயார் செய்யும் பணி, தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், மற்றும் சமூகநலத்துறையின்கீழ் செயல்படும் 38 மகளிர் காலணிதொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3.5. புரட்சித்தலைவி டாக்டர். ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத்திட்டம்:

ஆண் வாரிசு வேண்டும் என்ற மனப்பான்மையைக் குறைக்கவும், பெண் சிசுவதையை தடுக்கவும், குடும்பக் கட்டுப்பாட்டினை ஊக்குவிக்கவும், பெண் கல்விக்கு வழி செய்யும் வகையிலும், தமிழக அரசு இந்த திட்டத்தை

1994 ஏப்ரல் 25]

01.04.1992 முதல் அமுல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடைய தகுதிகள்:

1. பயனடைய விரும்பும் பெற்றோருக்கு ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்கக் கூடாது.
2. 01.041992-க்குப்பின் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்க வேண்டும்.
3. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்குள் இருக்க வேண்டும்.
4. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும்போது பெற்றோரின் வயது 40-க்குள் இருக்க வேண்டும்.
5. பயனடையும் பெண்குழந்தையின் வயது 3-க்குள் இருக்க வேண்டும்.

3.6. வழங்கப்படும் சலுகைகள்

1. பயன்பெறுபவர் பெயரில் ரூ.5,000/- நிலையான வைப்புத் தொகையாக பொதுநிதிநிறுவனத்தில் வைக்கப்பட்டு அதற்கான கணக்குப்புத்தகம் அவரிடம் வழங்கப்படும்.
2. முதல் பிறந்த நாள்/திட்டத்தில் சேர்ந்த பிறகு, வரும் பிறந்த நாள் பரிசாக ரூ. 800/- பெறுமானமுள்ள தங்க மோதிரம் வழங்கப்படும்.
3. துவக்கப் பள்ளியில், ஒன்றாம் வகுப்பு சேரும்போது ரூ.250/- பணமாக வழங்கப்படும்.
4. ஆறாம் வகுப்பு சேரும்போது, ரூ.500/- பணமாக வழங்கப்படும்.
5. ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை, பிரதி மாதம் ரூ.50/- (ஒவ்வொரு வகுப்பிலும் 10 மாதங்கள்) பணமாக வழங்கப்படும்.
6. இருபது வயது முடிந்தபின் ரூ.20,000/-மேற்படிப்பு/ திருமணத்திற்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 20,000 நபர் பயனடைவர். 1994-95 ம் ஆண்டு ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.7. தொட்டில் குழந்தை திட்டம்:

சேலம் மாவட்டத்தில் ஒரு சில வகுப்பினரிடையே பெண் சிசுவதை நடைமுறையில் உள்ளது என்பதை அறிந்த அரசு உடனடி நடவடிக்கையாக "அரசு மருத்துவமனை" "ஆரம்ப சுகாதார மையம்" மற்றும் "அனாதை குழந்தைகள் பராமரிப்பு நிலையம்" ஆகிய இடங்களில் தொட்டில்களை

வைத்துள்ளது. மேலும் பெண்குழந்தைகளை வளர்க்க விரும்பாத பெற்றோர்கள் அக்குழந்தைகளை தொட்டிலில் வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

3.8. பெண்சிசுவதையை தடுப்பதற்கான நடவடிக்கைகள்:

பெண் குழந்தைகளை கருவிலோ அல்லது பிறந்தவுடனோ கொன்றுவிடுகிறார்கள் என்பது ஒரு சமூகப் பிரச்னையாக கருதப்பட்டு, இதற்கான உடனடி நடவடிக்கையாக, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டியில் பெண் குழந்தைகளுக்கான வரவேற்பு மையம் அமைக்கப்பட்டது. தங்களால், பெண் குழந்தைகளை வளர்க்க இயலாத பெற்றோர்கள், தங்கள் பெண் குழந்தைகளை கொல்வதை தவிர்த்து, இம்மையத்தில் விட்டு செல்லலாம். இதுவரை 38 குழந்தைகள் இம்மையத்தில் பெறப்பட்டு, இந்திய குழந்தை நலச் சங்கத்தால் பராமரிக்கப்படுகின்றன. இம்மைய வசதி இல்லையெனில், இந்த குழந்தைகள் ஒருவேளை சிசுவதைக் கொடுமைக்கு ஆளாகியிருக்கலாம். சொந்த பெற்றோர்கள் நிராகரித்த சூழ்நிலையில் வளர்ப்பு பெற்றோர்களது அன்பும் ஆதரவும் இருந்தால், இக்குழந்தைகளின் எதிர்காலம் ஒளிமயமாய் அமையும் என்று கருதி, இதுநாள்வரை 19 குழந்தைகள் நம் நாட்டிலேயே உள்ள குழந்தைகளில்லாத தம்பதியருக்கு தத்து கொடுக்கப்பட்டு உள்ளனர். இந்த வரவேற்பு இல்லத்தில், ஒரு மூதாய், இரண்டு ஆயாக்கள் உள்ளனர்.

3.9. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்திட்டம்:
(உலக வங்கி உதவியுடன்)

(அ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்திட்டம் - 2, உலக வங்கி உதவியுடன் 1990-91 ஆம் ஆண்டு, கீழ்கண்ட குறிக்கோள்களுக்காக தொடங்கப்பட்டது:

1. தாய் நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதின் மூலம் குழந்தை உயிர் வாழ்தல் மற்றும் குழந்தை வளர்ச்சியினை உறுதிப்படுத்துதல்.
2. 0-6 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்.
3. 3 முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு பயனுள்ள முன்பருவக் கல்வி அளிப்பது.
4. தனிநபர் மற்றும் சமுதாய நலத்தை மேம்படுத்த, தாய்மார்கள், குடும்பம், சமுதாயம் மற்றும் இளம்பெண்கள் ஆகியோரின் செயல்திறத்தை அதிகரித்தல்.

1994 ஏப்ரல் 25]

5. சுகாதாரம், நலக்கல்வி அளித்தல் மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களை திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும் மதிப்பீடு செய்வதிலும் சமுதாயத்தின் ஈடுபாட்டை கிராம அளவில் அதிகப்படுத்துதல்.

6. மேற்கூறிய சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் மற்ற நோக்கங்களை நிறைவேற்ற தேவையான மனித ஆற்றலை மேம்படுத்துதல்.

7. மாநிலத்திலுள்ள ஊட்டச்சத்து மற்றும் சுகாதார திட்டங்களை சரிவர நிறைவேற்றுவதற்குத் தேவையான செயல் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) திட்டத்தின் அமைப்பு:

திட்டப் பணிகளை செயல்படுத்த 1500 மக்கட்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் சமுதாய ஊட்டச்சத்து பணியாளர் மற்றும் குழந்தை நல அமைப்பாளர் இருவராலும் நடத்தப்படுகிறது.

சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளருக்கு உதவியாக உள்ளூர் மருத்துவதாய் நியமிக்கப்படுகிறார். இவர் மையத்தின் ஆயாவாகவும் செயல்படுவார். கிராமநலச்செவிலியர் மாதத்திற்கு ஒருமுறை ஊட்டச்சத்து மையத்திற்கு சென்று தாய்சேய் நல சுகாதார தேவைகளைக் கவனிப்பார்.

(இ) முன்பருவக்கல்வி வயதினருக்காக ஏற்கெனவே நடந்து வரும் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தினுள் கொண்டுவரப்படுகின்றன. இம்மையமானது, குழந்தைகள் நல அமைப்பாளர் மற்றும் ஆயாவினால் நடத்தப்படுகிறது. தேவைக்கேற்ப இம்மையங்கள் துவங்கப்படும். இம்மையங்களுக்கு தளவாடங்கள் முதலியன வழங்கப்படும். பணியாளர்கள் நல்ல முறையில் செயல்பட, வேண்டிய பயிற்சி அளிக்கப்படும். மூன்று முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு மதிய உணவு தொடர்ந்து வழங்கப்படும். இவ்வுணவில் ஊட்டச்சத்து அதிகரிக்கப்படும்.

(ஈ) ஒவ்வொரு மையத்திலும் மூன்று வயதிலிருந்து ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு முறைசாரா முன்பருவக் கல்வி அளிக்கப்படும். இதில் குழந்தைகளின் உடல், செயல்திறன், அறிவு வளர்ச்சி, சமுதாய விழிப்புணர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

(உ) இத்திட்டமானது, வட்டார அளவில் சமுதாய ஊட்டச்சத்து பயிற்றுநராலும், மண்டல அளவில் மண்டல அலுவலர்களாலும், மாவட்ட அளவில் மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்களாலும், மாநில

அளவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களாலும், தக்க உதவியாளர்களுடன் தலைமையேற்று நடத்தப்பட்டு வருகிறது.

(ஊ) தலைமை செயலாளரின் தலைமையின் கீழ் அதிகாரம் பெற்ற குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழு திட்டத்திற்கான ஆண்டு திட்டம் மற்றும் தேவையான செலவினங்களுக்கு ஒப்புதலளித்தும், முன்னேற்றத்தை கண்காணித்தும் வருகிறது.

(எ) இத்திட்டம், தற்பொழுது 15 மாவட்டங்களிலுள்ள 276 வட்டாரங்களில் 17,276 மையங்களுடன் செயல்பட்டு வருகிறது. வருகிற நிதியாண்டு 1994-95 ல் தஞ்சாவூர்,நாகப்பட்டினம், காயிதே மில்லத் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது. இந்த மூன்று மாவட்டங்களின் 41 வட்டாரங்களில் 2,372 மையங்களுடன் செயல்பட உள்ளது.

(ஏ) இத்திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3.10. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்:

(அ) சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து குறைவு மற்றும் அது தொடர்பான நோய்களை சமாளிப்பதற்காக ஒருங்கிணைந்த முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு பணியே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டமாகும். இத்திட்டத்தின் பணிகள், கருவில் உள்ள குழந்தையில் இருந்து தொடங்கி, ஆறு வயது ஆகும் வரை, அக்குழந்தைக்கு தேவையான சத்துணவு, சுகாதாரம் மற்றும் உடல், மனவளர்ச்சிக்கான தேவைகளையும் கருத்தாக கவனிப்பதே ஆகும். இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் முக்கிய பணிகள்:

துணை ஊட்டச்சத்து
முறைசாரா முன்பருவக்கல்வி
மருத்துவச் சோதனை
நோய்த்தடுப்பு
ஊட்டச்சத்து மற்றும் சுகாதார கல்வி, மற்றும்
மேல் மருத்துவப் பரிசோதனைக்கு வழி செய்தல், என்பனவாகும்.

(ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், முதன் முதலில் 1975-76 ஆம் ஆண்டு சென்னை நகரத்திலும், தளி மற்றும் நிலக்கோட்டை வட்டாரங்களிலும் தொடங்கப்பட்டது. இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு தற்போது 42 நகர்ப்புற திட்டம் மற்று இரண்டு

1994 ஏப்ரல் 25]

மலைப்பகுதித் திட்டம் உட்பட தமிழ்நாட்டில் மொத்தம் 111 பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(இ) ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதியும் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் ஒரு குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் தலைமையில் ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் நான்கு துணை மருத்துவச் செவிலியர் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. கிராம மற்றும் மலைப்புற பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் சுகாதாரப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் அங்கன்வாடிகள் என்று அழைக்கப்படும் 100 குழந்தைகள் நல மையங்கள் செயல்படுகின்றன.

(ஈ) குழந்தைகள் நல மையங்கள் மூலம் தான் இத்திட்ட பணிகள் கவனிக்கப்படுகின்றன. சுமார் 1000 மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஒரு குழந்தை நல மையம் என்ற விகிதத்தில் மையங்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டப்பகுதியில் 2 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 40 பேருக்கும் 10 மாதம் முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 30 பேருக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 30 பேருக்கும், ஆக மொத்தம் 100 நபர்கள் ஒவ்வொரு திட்டப்பகுதியிலும் பயன் பெறுகின்றனர். இப்பணிகள் ஒவ்வொரு மையத்தின் மூலமும் செயல்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

துணை ஊட்டச்சத்து:

(உ) திட்டப் பகுதிகளில் மத்திய அரசின் உதவியுடன் கோதுமையை அடிப்படையாக் கொண்ட "சத்து" என்ற உணவு ஆறு மாதத்திலிருந்து 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகிறது. இச்சத்துணவு கோதுமை, பருப்பு வகைகள், கேழ்வரகு, சோயா மாவு, வெல்லம் ஆகிய முக்கிய ஊட்டச்சத்து கொண்டது. ஒவ்வொரு பயனாளியும் இதில் 80 கிராம் விகிதத்தில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு சத்துணவு திட்டத்தின் கீழ் வருடத்தில் எல்லா நாட்களிலும் (365 நாட்களிலும்) மதிய உணவு மையத்திலேயே வழங்கப்பட்டு வருகிறது.

முறைசாரா முன்பருவக்கல்வி:

(ஊ) ஒவ்வொரு குழந்தைகள் நல மையத்திலும் 2 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முறைசாரா முன்பருவக்கல்வி

அளிக்கப்படுகிறது. நல்ல மனப்போக்கையும், நடத்தையும், பழக்க வழக்கங்களையும் வளர்க்க முன்பருவக்கல்வி பயன்படுத்தப்படுகிறது. குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், குழந்தைகள் நலப் பணியாளர்கள் திட்டமிட்டுச் செயல்படத்தக்க வகையிலும், கருத்தணுகுமுறை செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் விளையாட்டு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், குறைந்த செலவில் கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் செய்ய பணியாளர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மருத்துவ பரிசோதனை:

(எ) ஆறு வயதுகுட்பட்ட குழந்தைகளுக்கு உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைமைகளை முறையாகக் கண்காணிக்கும் வகையில், அவர்கள் எடை பார்க்கப்பட்டு வளர்ச்சி அட்டையில் ஊட்டச்சத்து நிலை மற்றும் உடல் நலம் ஆகியவற்றை பதித்த பின் அவ்வப்போது மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன. மருத்துவ அலுவலரால் மாதத்திற்கொருமுறை, பொது மருத்துவ சோதனைகளும் செய்யப்படுகின்றன.மேலும் அவ்வப்போது வயிற்றுப் பூச்சியை நீக்க மருந்து மற்றும் வயிற்று போக்கு, சாதாரண நோய்கள், ரத்த சோகை நீக்கும் மருந்துகளும் வழங்கப்படுகின்றன. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. அனைத்து நகர்ப்புற திட்ட பகுதிகளிலும் நவீன உபகரணங்களுடன் கூடிய 144 துணை மருத்துவ மையங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன. சுகாதார திட்டத்தில் இது ஒரு சிறப்பு அம்சமாகும். பெண்கள் கருவுற்ற காலத்திலும், மகப்பேறுக்குப்பின் பாலூட்டும் காலத்திலும் இச்சுகாதார திட்டத்தின் கீழ் அவர்கள் கவனிக்கப்படுகிறார்கள்.

நோய் தடுப்பு:

(ஐ) ஆறு வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இளம்பிள்ளைவாதம், தட்டம்மை, கக்குவான், காசநோய், ரணஜன்னி, தொண்டை அடைப்பான் போன்ற நோய்களை தடுக்க தடுப்பூசி மருந்துகள் போடப்படுகின்றன. அனைத்து கருவுற்ற பெண்களுக்கும் ரணஜன்னிக்கான தடுப்பூசியும் போடப்படுகிறது.

ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக்கல்வி:

(ஒ) பதினைந்து வயது முதல் 45 வயது வரை உள்ள அனைத்து பெண்களுக்கும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக்கல்வி வழங்கப்படுகிறது. குறிப்பாக, கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அடிக்கடி நோய்வாய்ப்படும் குழந்தைகள் மற்றும்

சத்துக் குறைவான குழந்தைகளுக்கும், அவர்களின் தாய்மார்களுக்கும் சிறப்பு மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து கல்வியானது கிராம மகளிர் குழுக்கள் மற்றும் தனி வகுப்புகள் மூலமும் திட்டப்பகுதிகளில் அங்கன்வாடி பணியாளர்களின் செயல்முறை விளக்கக் கூட்டங்களின் மூலமும், வானொலி போன்ற மக்கள் தொடர்பு பிரிவுகள் மூலமும் இச்செய்திகள் எல்லா பகுதியினருக்கும் எட்டும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

மொத்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்கள்	*111*
நகர்ப்புற பகுதி	*42*
கிராமப்புற பகுதி	*67*
மலைப்புற பகுதி	*2*
மையங்களின் எண்ணிக்கை	*9854*

ஸ்வீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக்குழு உதவியுடன் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்

3.11. செங்கற்பட்டு எம். ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள *30* கிராமப்புற குழந்தை வளர்ச்சித் திட்டங்கள், ஸ்வீடன் நாட்டு ``சிடா'' உதவியுடன் *1989* முதல் செயல்படுகின்றன.

இத்திட்டத்தின் முதற் கட்டம் *30.6.93.* உடன் முடிவுற்றது. இரண்டாம் கட்டமாக *1.7.93* முதல் நான்கு ஆண்டுகளுக்கு உதவவும் `சிடா'' ஒப்புக் கொண்டுள்ளது.

இத்திட்டம், கூடுதல் முதலீட்டின் மூலம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் அளிக்கப்படும் பணிகளை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் முக்கிய உறுப்புகள்:

- அங்கன்வாடி பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர்கள், மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான புத்தாக்க பயிற்சி அடங்கிய தரமான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள்;
- அங்கன்வாடி மையங்களுக்கு உபகரணங்கள்;
- ஊக்கத்தொகை மற்றும் வருவாய் பெருக்கும் பணிகள்;
- மேலாண்மை மற்றும் தகவல் திட்டம்;
- புதிய கட்டிடங்கள்;
- இரண்டாம் அங்கன்வாடி பணியாளர்களுக்கு சம்பளம்.;
- தலைமை அலுவலகத்திற்கு கூடுதல் பணியிடங்கள்.

[1994 ஏப்ரல் 25

இரண்டாம் கட்டமாக, 1.7.93 முதல் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., நீலகிரி மற்றும் புதுக்கோட்டை மாவட்ங்களிலும் இத்திட்டத்தை விரிவாக்க `சிடா" முன் வந்துள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 46 கோடிகள். இரண்டாம் கட்டத்திற்கான ஒப்பந்தம் செயல்முறையில் உள்ளது. இதற்கான மத்திய அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம் மற்றும் ``சிடா" திட்டத்தின் கீழ், 6 மாதம் முதல் 6 வயதுக்குட்பட்ட 6,00,000 குழந்தைகளும் 1.5 இலட்சம் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயனடைந்துள்ளார்கள்.

1994-95 நிதி ஒதுக்கீடு விவ்ரம்:

	மத்திய அரசு	மாநில அரசு
	(ரூபாய் ஆயிரத்தில்)	
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்	113302	88858
``சிடா" - ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்	77792	112286

3.12. ஆதரவற்ற குழந்தைகளுக்கான அரசு இல்லங்கள்:

(அ) 5 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை பராமரிப்பதற்காக, தமிழ்நாட்டில் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் 25 இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன. மேற்படி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 250 ஆகும். ஆத்தூர் மற்றும் திருசெங்கோடு இல்லங்களில் மட்டும் இவ்வெண்ணிக்கை ஒவ்வொன்றிலும் 100 ஆகும். எவ்வித ஆதரவுமில்லாத குழந்தைகள் 21 வயது வரை இல்லங்களில் இருக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஆ) இவ்வில்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு இலவச உணவு, உறைவிடம், உடை, பாடநூல், குறிப்பேடுகள், மருத்துவ பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன. இல்லத்திலேயே ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. ஆறாம் வகுப்பு முதல் குழந்தைகள் அரசு, மாநகராட்சி, நகராட்சி பள்ளிகளுக்கு உயர்கல்வி பயில அனுப்பப்படுகின்றனர்.

(இ) உணவிற்காக ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.120/- செலவிடப்படுகிறது. 5 வயதிலிருந்து 12 வயதுடைய குழந்தைகளுக்கு ரூ.100/-ம், 13 முதல் 18 வயதுடைய குழந்தைகளுக்கு ரூ.150/-ம் உடைக்காக ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது. படுக்கைப் பொருட்களுக்காக ஆண்டொன்றுக்கு ரூ.20/-- வீதமும் வழங்கப்படுகிறது.

(ஈ) 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 35 வீதமும், 6 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ரூ.50 வீதமும், 9 மற்றும் 10-ம் வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ.90/- வீதமும், மேல்நிலை வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ.190 வீதமும், பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன.பெண் கைதிகளின் குழந்தைகளும் இவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அனைத்து அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களிலும் தையல் மற்றும் இதர தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 1994-95 ஆம் ஆண்டில் ரூ.220.23 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.13. பராமரிப்பும், பாதுகாப்பும் தேவையான குழந்தைகளுக்கு மத்திய, மாநில அரசின் நலத்திட்டம்:

(அ) ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து தனது சொந்த குடும்பங்களில் வசிப்பது போன்ற உணர்வில் அவர்களை வாழ வைக்கும் நோக்கத்துடன் 1974-75 ல் மத்திய அரசால் 'குடில் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது. 25 குழந்தைகளைக் கொண்ட பிரிவு ஒரு குடில் ஆகும். ஒவ்வொரு குடிலும் ஒரு இல்லத் தாயின் பொறுப்பில் இருக்கும். இவ்வில்லத்தாய் தனது குடிலுள்ள குழந்தைகளை தன் குழந்தைகளைப் போல் பாவித்து அவர்களுக்கு போதிய உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி வசதி, பொழுதுபோக்கு வசதி முதலியன வழங்கி அறிவுரை கூறி வழிகாட்டியாக நடந்து கொள்வார்.

(ஆ) ஆதரவற்ற குழந்தைகளை பராமரிப்பதற்கும் அதற்கான கட்டிடங்களை கட்டுவதற்கும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் வழங்கியுள்ளது. மொத்த செலவில் 90 சதவீதத்தை அரசு மானியமாக வழங்குகிறது. மீதி 10 சதவீதத்தை அந்தந்த நிறுவனங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த 90 சதவீத மானிய தொகையை மத்திய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. 1.4.1978 க்கு முன்பு துவக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களில் உள்ள குடில்களுக்கு மானியம் வழங்குவதை முழுவதுமாக மாநில அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் உணவு, உடை முதலியவற்றுக்காக மாதம் ரூ. 200/- வீதம் மானியம் கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 1994-95 ஆம் ஆண்டில், ரூ. 231.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1994 ஏப்ரல் 25

அத்தியாயம் 4

ஊனமுற்றோர் நலம்

4.1. 1981-ம் வருடம் டிசம்பர் மாதம் நடத்திய தேசிய மாதிரி ஆய்வுக் கணக்கெடுப்பின்படி, பார்வையற்ற, காது கேளாத, கை, கால் ஊனமுற்ற மன வளர்ச்சி குன்றிய மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 2 விழுக்காடு 11,12,766 ஆகும். தேசிய மாதிரி கணக்கெடுப்பின் விகிதாசாராப்படி ஊனமுற்றோர் வகைவாரியான விவரம் பின்வருமாறு:

வ. எண்.	ஊனத்தின் தன்மை	விழுக்காடு (ஊனமுற்றோரில்)	எண்ணிக்கை (லட்சத்தில்)
1	பார்வையற்றோர்	19.2	2.12
2	காது கேளாதவர்	20.5	2.25
3	கை, கால் ஊனமுற்றவர்	58.8	6.47
4.	மன வளர்ச்சிக் குன்றியவர், தொழுநோயால் பாதிக்கப் பட்டவர்கள் மற்றும் இதர வகை ஊனமுற்றோர்.	1.5	0.16

ஊனமுற்றோர் நலனில் தமிழக அரசு கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறையினை, ஆண்டுக்கு ஆண்டு ஊனமுற்றோர் நலனுக்கென நிதி ஒதுக்கீடு உயர்ந்து வருவதைக் கொண்டு அறியலாம்.

வ.எண்.	வருடம்	நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்)
1.	1989-90	419.00
2	1990-91	433.00
3	1991-92	522.96
4	1992-93	716.00
5	1993-94	775.68
6	1994-95	833.14

1994 ஏப்ரல் 25]

ஊனமுற்றோர் நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு அவர்தம் நலனில் தனி ஈடுபாடு செலுத்துவதற்காக சமூக நலத்துறையிலிருந்து தனியாக 'ஊனமுற்றோர் மறுவாழ்வு நலத்துறை' என்ற தனித்துறையை உருவாக்கியுள்ளது. மிக பரந்த அளவில் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்கவேண்டுமென்பதே இத்துறையின் நோக்கமாகும். இதில் ஊனமுற்றோருக்கு சிறப்பு கல்வி தொழிற் பயிற்சி, வேலை வாய்ப்பு, சுய வேலை வாய்ப்பு மற்றும் இலவச உபகரணங்கள் வழங்கி, ஊனமுற்றோரை அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தி சமூகத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக ஆக்குவது இத்துறையின் நோக்கமாகும்.

4.2. ஊனமுற்றோருக்கு சிறப்புக்கல்வி:

(அ) கண் பார்வையற்றோர், காது கேளாதோர், மன வளர்ச்சி குன்றியோர், மற்றும் கை கால் ஊனமுற்றோருக்கு அவர்களுக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்புப்பள்ளிகள் மூலம் கல்வி அளிக்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு மான்யம் பெற்று நடைபெறும் சிறப்பு பள்ளிகள் விவரம் வருமாறு:

வரிசை எண்	பள்ளியின் வகை	அரசு பள்ளி	அங்கீகாரம் பெற்ற அரசு மான்யம் பெறும் பள்ளி	அங்கீகாரம் பெற்ற அரசு மான்யம் பெறாத பள்ளி	நகராட்சி பள்ளி	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	பார்வையற்றோருக்கான பள்ளி	11	11	1	..	23
2.	காது கேளாதோருக்கான பள்ளி	10	19	4	2	35
3.	மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பள்ளி	1	13	7	..	21
4.	கை, கால், ஊனமுற்றோருக்கான பள்ளி	1	13	4	..	18
5.	தொழுநோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கான பள்ளி	..	1	..	..	1
	மொத்தம்	**23**	**57**	**16**	**2**	**98**

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

(ஆ) பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப்பள்ளிகள் பூவிருந்தவல்லி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், மதுரை, கடலூர், சிவகங்கை, நாகர்கோவில், கோயம்புத்தூர், புதுக்கோட்டை மற்றும் தருமபுரியில் செயல்பட்டு வருகின்றன.

காது கேளாதோருக்கான அரசு சிறப்புப்பள்ளிகள் தஞ்சாவூர், தருமபுரி, கடலூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சேலம், ஈரோடு, விருதுநகர், உதகமண்டலம், மற்றும் சென்னையில் இயங்கி வருகின்றன.

கடுமையான அளவில் கை கால் ஊனமுற்றோருக்கான அரசு பள்ளி, மதுரையில் செயல்பட்டு வருகிறது.

மனவளர்ச்சி குன்றியோர்க்கான அரசு நிலையம் சென்னையில் இயங்கி வருகிறது.

5 முதல் 9 வயதுக்குட்பட்ட மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் அவர்களின் மனவளர்ச்சிக்கு தகுந்தபடி மூன்று வகையாக மென்மையான, சுமாரான, கடுமையான பாதிப்பு உடையவர்களாக பிரிக்கப்பட்டு இப்பள்ளியில் சிறப்பு கல்வி அளிக்கப்படுகிறார்கள். இப்பள்ளியில் தற்போது 50 பேர் உள்ளனர்.

(இ) அரசு வழங்கும் ரூ. 1.00 இலட்சம் மான்யத் தொகைய (ஒரு தடவை மான்யம்) கொண்டு புதுக்கோட்டையில் மனவளர்ச்சி குன்றியோர்க்கான நிலையம் ஒன்று "ரினை சான்ஸ்" என்ற பெயரில் தனியார் சேவை நிறுவனத்தால் இயக்கப்படுகிறது.

இந்த சிறப்பு பள்ளிகள் மூலம் சுமார் 7620 ஊனமுற்ற குழந்தைகள் கல்வி பெறுகிறார்கள். ஊனமுற்றோருக்கான அரசு சிறப்புப்பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாக உணவு, மற்றும் இருப்பிட வசதியுடன் இரண்டு ஜதை சீருடைகளும் இலவசமாக ஒவ்வொராண்டும் வழங்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிற்கு சிறப்புக்கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 372.70 இலட்சம் ஆகும்.

4.3 காது கேளாத குழந்தைகளுக்கான முன்பருவ பள்ளிகள்:

காது கேளாத குழந்தைகளுக்கென முன்பருவ பள்ளிகள் இருபது மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காது கேளாத குழந்தைகள் 200 பேர் இப்பள்ளிகளின் மூலம் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள். இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 24.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 25]

4.4 ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி:

(அ) பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி

கண் பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கும் மண்டல பயிற்சி மையம் ஒன்று, பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு மேல் நிலை பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்த பயிற்சியில் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆசிரியர்கள் பயிற்சிக்காக சேர்க்கப்படுகிறார்கள். இதற்கான செலவினம் மத்திய அரசிடம் இருந்து மீளப் பெறப்படுகிறது. மாநில அரசும் ஓர் சிறப்பு பயிற்சி பிரிவை நடத்துகிறது. அதில் 15 ஆசிரியர்கள் ஆண்டுதோறும் பயிற்சி பெறுகிறார்கள். 1994-95 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்கு ரூ. 5.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) காது கேளாதோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி

ஒவ்வொரு ஆண்டும் சென்னை சிறுமலர் காது கேளாதோருக்கான மேல்நிலைப்பள்ளி மூலம் காது கேளாதோருக்கு கற்பிக்கும் 10 ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் தேவை அதிகரித்து இருப்பதை முன்னிட்டு 100 சதவீத மான்யத்துடன் 25 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

அரசு மற்றும் அரசு மான்யம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் பயிற்சியில் சேர்க்கப்படுகிறார்கள். இதற்கு 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 2.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) மன வளர்ச்சி குன்றியோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி

மன வளர்ச்சி குன்றியோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அரசு மான்யத்துடன் சென்னை பாலவிஹார் பயிற்சி பள்ளி என்னும் தனியார் சேவை நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படுகிறது. 20 ஆசிரியர்கள் ஒவ்வொராண்டும் பயிற்சி பெறுகிறார்கள். இதற்காக 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 7.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.5. ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை:

ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு, அவர்கள் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்காக கல்வி உதவித் தொகை ஓர் ஆண்டுக்கு ரூ. 10 லிருந்து ரூ. 84 வரை, அவர்கள் பயிலும் வகுப்பிற்கேற்ப ஊனமுற்றோர் மறுவாழ்வு நலத்துறை வழங்குகிறது. 1993-94 ஆம் ஆண்டில் 16,770 குழந்தைகள் கல்வி உதவித்தொகை பெற்றுள்ளார்கள். 1994-95 ஆண்டில் சுமார் 17,000 ஊனமுற்ற மாணவர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 28.00 இலட்சம் ஆகும்.

4.6. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவி:

பார்வையற்றோருக்கான சிறப்பு பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகளில் வினாக்களுக்கு இவர்கள் வாய்மூலம் அளிக்கும் பதிலினை அவ்வாறே எழுத பார்வையுள்ள உதவியாளரை வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறார்கள்.

பார்வையற்ற மாணவருக்கு தேர்வு எழுத உதவி புரிபவருக்கு ஒரு தேர்வு தாளுக்கு ரூபாய் 6 வீதம் உதவி தொகையை இத்துறை வழங்கி வருகிறது. இந்த உதவித் தொகை பெறும் பள்ளிகள் பின்வருமாறு:

1. பார்வையற்றோருக்கான அரசு மேல் நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி.
2. பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி.
3. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப்பள்ளி மற்றும் பார்வையற்றோருக்கான புனித லூயிஸ் பள்ளி, சென்னை.
4. பார்வையற்றோருக்கான செயின்ட் லூயிஸ் மேல்நிலைப்பள்ளி, சென்னை.

சுமார் 200 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைகிறார்கள். 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 0.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.7. ஊனமுற்றோருக்கு பயிற்சி:

கண்பார்வையற்றோர், காது கேளாதோர், கை, கால் ஊனமுற்றோர் ஆகியோருக்கு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள பயிற்சி நிலையங்கள் மூலம் இத்துறை தகுந்த தொழிற்பயிற்சிகளை அளித்து வருகிறது. இதன் விவரங்கள் வருமாறு:

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு சிறப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 15 காது கேளாத மாணவர்கள் "பொருத்துநர்" பணியில் பயிற்சி பெற்று வருகின்றனர். 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இங்கு கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகளில் திருத்தி அமைக்கப்பட்ட பயிற்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1. பொறிப்பகுதி பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திர பொறியாளர்.
2. புத்தகம் கட்டுதல்
3. மின் கம்பி சுற்றுதல்

ஒவ்வோராண்டும் 30 பார்வையற்றோர் இந்நிலையத்தில் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாய் இருப்பிடம், உணவு, இரண்டு ஜதை சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 9.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.8. பயிற்சி பெற்ற பார்வையற்ற காது கேளாதோரை தொழில் பழகுநராக அமர்த்துதல்:

பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையம் பூவிருந்தவல்லியிலும், சென்னை கிண்டி மற்றும் மதுரையில் இயங்கும் அரசு தொழிற்பயிற்சி நிலைய மையங்களில் பயிற்சி பெற்ற கண் பார்வையற்ற மற்றும் காது கேளாதவர்கள், அரசு, அரசு சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களில், தொழில் பழகுநராக மாதம் ரூ. 400/- வீதம் உதவி தொகையுடன் பணியமர்த்தப்படுகின்றனர். தொழில் பழகும் காலம் ஒரு ஆண்டு முடிந்த பின் அவர்கள் பயிற்சி பெற்ற அதே நிறுவனத்தில் காலியிடம் எழும்போது நிரந்தர பணியில் அமர்த்தப்படுகிறார்கள். 1994-95 ஆம் ஆண்டிற்கு 100 ஊனமுற்றவர்கள் பயன் பெற ரூ. 0.40 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

4.9.ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பு உதவிகள்:

(அ) மண்டல மறுவாழ்வு மையங்கள்

மத்திய அரசினால் நடத்தப்படும் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு மையத்தினை போல ஓர் சிறப்பு அமைப்பாக ஊனமுற்றோருக்கான மண்டல மறுவாழ்வு மையங்கள் சென்னை. கோயம்புத்தூர்,மதுரை, வேலூர், தஞ்சாவூர் ஆகிய ஐந்து இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த மண்டல மறுவாழ்வு மையங்கள் ஊனமுற்றோருக்கு மருத்துவம், தொழிற்பயிற்சி, பொருளாதாரம், மற்றும் சமூக மறுவாழ்வுக்கான பணிகளை கவனிக்கின்றன. இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 47.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1993-94 ஆம் ஆண்டில் 7200 ஊனமுற்றவர்கள் மண்டல மறுவாழ்வு மையத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

(ஆ) வேலை வாய்ப்பில் ஊனமுற்றோருக்கான மூன்று சதவீத இட ஒதுக்கீட்டை கண்காணிக்கும் மாவட்ட அளவிலான குழு.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழுவின் வரம்பிற்குட்படாத 'சி' மற்றும் 'டி' பிரிவு பணிகளுக்கு வேலை வாய்ப்பில் ஊனமுற்றோருக்கு 3 சதவீத இட ஒதுக்கீட்டை கண்காணிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களை கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

1.	மாவட்ட ஆட்சித் தலைவர்.	தலைவர்
2.	மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அல்லது உதவி இயக்குநர், வேலைவாய்ப்புத்துறை.	உறுப்பினர்
3.	எந்த துறையில் பணியிடம் காலியாக உள்ளதோ அந்த துறையை சார்ந்த அலுவலர்.	உறுப்பினர்
4.	மண்டல மறுவாழ்வு அலுவலர்/ மாவட்ட சமூக நல அலுவலர்.	உறுப்பினர்/செயலர்

4.10. வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை:

(அ) வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1994 ஏப்ரல் 25]

இந்த நிவாரணத் தொகையை பெற கீழ்க்கண்ட தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

1. பார்வையற்றோராக இருக்க வேண்டும்.
2. வயது: 18 வயதுக்கு மேல் 40 வயதுக்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை)
3. வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

(ஆ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம்.

	மாதம் - ரூபாய்
பட்டதாரிகள்/முதுநிலை பட்டதாரர்கள்	250
புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு தேறியவர்	200
இதர வகுப்புகள்	150

(இ) இந்த நிவாரணத் தொகை இவர்கள் தகுதி பெறும் காலத்தில் இருந்து வேலை கிடைக்கும் வரை அல்லது வயது 40 ஆண்டு (தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கு 45 வயது) முடியும் வரை அதிகபட்சம், 5 ஆண்டுகள் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 25.87 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில் 1471 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

4.11. ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்:

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முட்டுக்காட்டில் ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி கூடம் இயங்கி வருகிறது. இந்த பணிமனையில் ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், பெட்டி கடைகள், அலமாரிகள், போன்ற உபகரணங்கள் அறைகலன்கள், உற்பத்தி செய்யப்படுகின்றன. இக்கூடம் ஊனமுற்றோருக்கான பயிற்சி மற்றும் உற்பத்தி கூடமாக துவக்கப்பட்டது. தற்போது உற்பத்தி கூடமாக இயங்கி வருகிறது. இந்த ஆண்டு இக்கூடத்தில் ரூ. 19.94 இலட்சம் செலவில் 1594 முச்சக்கர வண்டிகள், 126 சக்கர நாற்காலிகள், 1000 மடக்கு குச்சிகள் மற்றும் இதர எஃகு தயாரிப்புகள் உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 39.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.12. ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் உபகரணங்கள்:

வ. எண்.	உபகரணங்கள் விவரம்	1993-94-ல் பயனடைந் தோர் விவரம்	94-95-ல் பயன் பெற உள் ளோர்	94-95 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	முச்சக்கர வண்டிகள்	2551	2550	53.00
2.	சக்கர நாற்காலிகள்	126	125	1.64
3.	காதொலி கருவிகள்	2918	3000	23.35
4.	கறுப்பு கண்ணாடிகள் மற்றும் மடக்கு குச்சிகள்	1310	2000	0.75

4.13. ஊனமுற்றவர்களுக்கு அரசு பேருந்துகளில் இலவச பயண சலுகை:

(அ) இலவச பயண சலுகை பார்வையற்றவர்களுக்கு வயது வரம்பின்றியும் காது கேளாதோருக்கு, உடல் ஊனமுற்றோருக்கு 20 வயது வரையிலும் ஊனமுற்றோர் மறுவாழ்வு நலத்துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் உள்ள மன வளர்ச்சி பாதிக்கப் பட்டவர்கள் (வயது வரம்பு கிடையாது). அவர்கள் உதவியாளர்களுடன், மருத்துவமனை/ பள்ளி/கல்லூரி/பயிற்சி கூடம்/மற்றும் பணியிடம் ஆகிய இவற்றில் ஏதேனும் ஒன்றுக்கு அரசு பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தை தவிர) சென்று வர தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இந்த நிதியாண்டில் இவ்வசதி 20 வயதுக்கு மேற்பட்ட முழுவதுமாக காது கேளாதவர்களுக்கும், இரண்டு கால்கள்/கைகள் துண்டிக்கப்பட்டோர்/ செயலிழந்தோருக்கும், இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டு காலகளிலோ, அல்லது கைகளிலோ 75 சதவீதம் செயலிழந்தோருக்கும், கடுமையான வலிப்பு நோய் தசை முடக்கு வாதம், மோட்டார் நியரோன், நியரோமஸ்கூலர் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஒரு காலோ அல்லது கையோ இல்லாதோர் மன வளர்ச்சி குன்றியவர்கள் ஆகியோருக்கும் விஸ்தரிக்கப்படுகிறது.

4.14. செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை:

மதுரையிலுள்ள கடுமையாக கை கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கான அரசு பள்ளியில் பயிலும் 100 ஊனமுற்ற குழந்தைகளின் தேவையை

பூர்த்தி செய்யும் பொருட்டு, செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணைநிலையம் மதுரையில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்த நிலையம் ஊனமுற்ற குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்கைமுறை தசை பயிற்சி, பயிற்சி மற்றும் முடநீக்கு சாதனங்கள் ஆகியவைகளை இலவசமாக வழங்கிவருகிறது. இந்த மையம் இயற்பியல் மருத்துவ நிபுணரின் தலைமையின் கீழ் தேவையான பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 3.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.15. பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கான சலுகைகள்:

கலப்பு திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் போன்று பார்வையற்றவரை திருமணம் செய்துகொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு நீட்டிக்கப்படும் சலுகைகள் பின் வருமாறு:

பாராட்டு சான்றிதழ்:

திருமண செலவிற்காக ரொக்க தொகை	ரூ. 500/-
தேசிய சேமிப்பு பத்திரம்	ரூ. 5500/-

இத்திட்டத்தின் மூலம் 1993-94 வரை 75 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 1.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 24 தம்பதியர்கள் இவ்வாண்டு பயனடைவார்கள்.

4.16. மாவட்ட மறுவாழ்வு மையம், செங்கல்பட்டு:

(அ) 1986 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கியநாட்டு அரசின் நிதியுதவியுடன் மத்திய அரசால் நம் நாட்டில் 12 மாநிலங்களில் 12 இடங்களில் துவக்கப்பட்ட மாவட்ட மறுவாழ்வு மையங்களில், மாவட்ட மறுவாழ்வு மையம் செங்கல்பட்டும், ஒன்றாகும்.

இத்திட்டத்தின் நோக்கங்கள்:

ஊனமுற்றோரை கண்டறிதல்

அவர்களின் மறுவாழ்வுக்கான தேவைகளை கணித்தல், அவர்களின் முழுமையான மறுவாழ்வுக்கு உதவிகள் வழங்குதல்.

(ஆ) முதல் கட்டமாக இத்திட்டம் காட்டாங்குளத்தூர், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டம் தற்போது செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முழுமைக்கும் விரிவாக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 1986 முதல் 1993 வரை 8651 உடல் ஊனமுற்றவர்களை கண்டறிந்து 6340 நபர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.17 அரசு மண்டல பிரெய்லி அச்சகம்:

பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி பூவிருந்தவல்லி வளாகத்தில் பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்களை அச்சிட்டு தரும் அரசு மண்டல பிரெய்லி அச்சகம் இயங்கி வருகிறது. இவ்வச்சகம் 1989-90 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்றோருக்கு இலவசமாக பிரெய்லி புத்தகங்கள் அச்சிட்டு வழங்குகிறது. சுமார் 2000 பார்வையற்ற மாணவர்கள் இதன் மூலம் பயனடைகிறார்கள். இத்திட்டத்திற்காக 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 8.87 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது.

4.18 ஊனமுற்றோருக்கு சுயவேலை வாய்ப்பிற்கு உதவி அளித்தல்:

ஊனமுற்றவர்கள் சுயவேலை வாய்ப்பின் மூலம் மறுவாழ்வு பெற தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெற உதவி செய்யப்படுகிறது. ரூபாய் ஆயிரம் அல்லது மொத்த கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ, அது அரசு மான்யமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1993-94 ஆம் ஆண்டிற்கு ரூ. 8.00 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

4.19. பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி:

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம் இயங்கி வருகிறது.

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற, ஆதரவற்ற, மற்றும் அனாதை பெண்கள் இந்த இல்லத்தில் சேர்க்கப்படுகிறார்கள். இவர்களுக்கு சாக்கு கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும், ஆறுமாத காலத்திற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் இவர்களுக்கு இல்லத்திலேயே வேலை அளிக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள் மற்றும் சாக்கு கட்டிகள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் பயிற்சி பெற்று பணிபுரிந்து வருகிறார்கள்.

4.20 கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டோருக்கு பராமரிப்பு உதவித் தொகை:

எந்த திட்டங்கள் மூலமும் உதவியோ, பயனோ அடைய இயலாத அளவிற்கு கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்ட கைகால் ஊனமுற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றிய நபர்களுக்கு மாத மொன்றுக்கு ரூபாய் 100/- பராமரிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

பராமரிப்பு உதவித்தொகை பெற தகுதிகள்:

1. ஊனத்தின் அளவு 75 சதவீதம் அல்லது அதற்கு மேலும் இருக்க வேண்டும்.
2. பெற்றோர்/ காப்பாளர் மாத வருமானம் ரூ. 1000/- க்கு கீழ் இருக்க வேண்டும்.
3. அரசின் வேறு எந்த உதவியும் பெறுபவராக இருக்கக் கூடாது.

1994-95-ம் ஆண்டிற்கு ரூ. 12.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.21. ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிக்க தொண்டு நிறுவனங்களுக்கு மானியம்:

ஊனமுற்ற குழந்தைகள், தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், தொழு நோயால் பாதிக்கப்பட்டோரின் குழந்தைகளைப் பராமரிக்கும் தனியார் சேவை நிறுவனங்களுக்கு ஒரு குழந்தைக்கு மாதம் ரூ. 90 வீதம் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

பெற்றோர்/ பாதுகாவலர் மாத வருமானம் ரூ. 1000/- க்கு கீழ் இருக்க வேண்டும். 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 26 தனியார் சேவை நிறுவனங்களில் உள்ள 713 ஊனமுற்ற குழந்தைகள் இந்த ஆண்டு இத்திட்டத்தின் கீழ் பயனடைவார்கள்.

4.22. இளம் பிள்ளைவாதத் தடுப்பு மற்றும் மறுவாழ்வு திட்டம்:

இளம்பிள்ளைவாதத் தடுப்பு மற்றும் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் ஊனமுற்றோர் மறுவாழ்வு நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இளம்பிள்ளைவாத நோய் வராமல் தடுப்பது, இளம்பிள்ளை வாதநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது.

[1994 ஏப்ரல் 25

இத்திட்டமானது, 1989 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கட்டமாக தெரிவு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அவற்றின் விபரங்கள் பின் வருமாறு:-

வ.எண்.	வருடம்	கட்டம்	தெரிவு செய்யப் பட்ட ஊராட்சி ஒன்றியங்-களின் எண்ணிக்கை	பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை	நிர்ணயம் செய்யப்-பட்ட தொகை (ரூபாய் இலட் சத்தில்)	செலவு செய்யப்-பட்ட தொகை (ரூபாய் இலட் சத்தில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	1989-90	ஒன்று	40	10509	109.50	106.42
2.	1990-91	இரண்டு	51	11806	80.15	70.42
3.	1991-92	மூன்று	40	8825	80.48	75.85
4.	1992-93	நான்கு	51	6480	76.17	70.12
5.	1993-94	ஐந்து	40	4360	85.15	86.79
6.	1994-95	ஆறு	42	-	91.29	-

இத்திட்டத்தில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் கண்டறியப்பட்டு, தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு முழுமையான மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. (அதாவது மருத்துவம், கல்வி மற்றும் சமூக பொருளாதார உதவிகள்) மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்கள் மூலம் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள், இயற்கை முறையில் உடற்பயிற்சி இலவச உபகரணங்கள்(சக்கர நாற்காலி, ஊன்றுகோல், மூன்று சக்கர வண்டி போன்றவை) வழங்குதல், சிறப்பு பள்ளிகளில் சேர்த்தல், வேலைவாய்ப்பு அளித்தல், சுயவேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் அரசு மான்யத்துடன் வங்கி நிதி உதவி அளித்தல் தொழிற்கல்வி பயிற்சி அளித்தல், முதியோர் உதவித் தொகை வழங்குதல், பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் மற்றும் அவர்களுக்கு தேவையான உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இளம்பிள்ளை வாத நோய் தடுப்புத் திட்டம் அரசு சுகாதார நலத்துறை மூலம் செயல்பட்டு வரும்போது ஊனமுற்றோர் மறுவாழ்வு துறையானது இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்காக கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி வருகிறது.

அ. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியம் பகுதிகளில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோரை கணக்கெடுத்தல்.

ஆ. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்கான தேவைகளை கணித்தல்.

இ. தேவையான மறுவாழ்வு உதவிகள் அளித்தல்.

புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா இளம்பிள்ளை வாதம் சரி செய்யும் அறுவை சிகிச்சை முகாம்கள் அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் ஒரே சமயத்தில் செயல்பட்டு, பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்திற்கென 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 91.29 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.23. பார்வையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு:

ஆசிரியர் பயிற்சி பெற்ற பார்வையற்ற 50 நபர்கள் ஆசிரியர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆசிரியர்களாக இவ்வாண்டு நியமனம் செய்யப்படுவார்கள்.

4.24. மைய அரசு மூலம் வழங்கப்படும் தேசீய விருது:

1993-94 ஆம் ஆண்டில் மைய அரசு வழங்கும் 52 விருதுகளில் அதிக அளவு விருது தமிழ்நாட்டுக்கு கிடைத்துள்ளது.

அத்தியாயம் 5.

தமிழ்நாடு சமூக நல வாரியம்.

5.1. தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்கள் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:-

1. மாநிலத்தில் சமூக நல அமைப்புகளை ஆரம்பித்து உயர்வடையச் செய்தல்.
2. தனியார் சேவை நிறுவனங்கள் பணித்திறனை வளர்ப்பதற்கு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவி அளித்தல்.
3. உதவித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

5.2. தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்து நிதி உதவி பெற்று, தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காக பணியாற்றுகிறது. சுமார் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்யப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் கூட நிதி உதவி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களுக்கு உபகரணங்கள் வழங்கவும் மற்றும் பதினேழு குழந்தைகள் காப்பகம் குறிப்பிட்ட இடங்களில் நடத்துவதற்கும், தமிழ்நாடு அரசிடமிருந்தும் வாரியம் மானியம் பெற்று வருகிறது.

5.3. 1723 தொண்டு நிறுவனங்களுக்கு 1993 ஏப்ரல் முதல் 1994 மார்ச்சு முடிய மொத்தம் ரூ. 330.78 இலட்சங்கள் நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

5.4. மகளிர், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் நலப் பணிகளில் சேவை நிறுவனங்களுக்கு பெரும் பங்கு அளிக்கப்பட்டுள்ளது. போதை மருந்து உட்கொள்ளுதல் மதுபழக்கம் போன்ற தீய பழக்கங்களை எதிர்த்துப் போராடி ஒழிக்கும் பணியில் தெருக்குழந்தைகள் மேம்பாடு, எயிட்ஸ் விழிப்புணர்ச்சி மற்றும் பெண் குழந்தை மேம்பாடு, பிற சமூக நல திட்டங்களை செயல்படுத்துவதற்கும் பெண்களின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவக்கூடிய வகையில் அரசுத்துறைகளும், சேவை நிறுவனங்களும் மிகுந்த ஒத்துழைப்புடன் இணைந்து செயல்பட வழி வகுக்கப்படும்.

அத்தியாயம் 6

சமூகப்பாதுகாப்பு

6.1. "முறை செய்து காப்பாற்றும்" பாங்கின் அடிப்படையில் தமிழக அரசு சமூகப்பாதுகாப்புதுறை வழியே புறக்கணிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்கள், மற்றும் தவறிழைத்த சிறார்களின் நலனுக்காக பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. 1986ம் ஆண்டின் இளைஞர் நீதித் சட்டம், மற்றும் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் அமைத்துள்ள நிறுவனங்கள் சமூகப்பாதுகாப்புத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றன.

வாழ்க்கைக் களத்தில் இறங்குமுன்னர் பயிற்சியும் பக்குவமும் கொள்வதுடன் இன்றியமையாமையை உணர்ந்து சிறார்களின் நலனுக்கென அமைந்துள்ள இல்லங்களில் கேடில் விழுச்செல்வம் கல்வியுடன், நலிவுறும் வாழ்க்கைக்கு ஊன்றுகோலான தொழிற்கல்விப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

6.2. 1986-ம் ஆண்டில் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழமைந்த நிறுவனங்கள்:

(அ) வழி தவறி, ஆதரவிழந்த நிலையில் வந்தாரை பாதுகாத்துப் பொறுப்பேற்கும் கூர்நோக்கு (குறுகிய கால) இல்லங்கள் 14 ஆகும். இவற்றுள் 11 அரசினராலும், 3 தனியாராலும் நடத்தப்படுகின்றன. புறக்கணிக்கப்பட்ட/ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் நலக்குழுமங்கள் மூலமாகவும், தவறிழைத்த சிறார்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மூலமாகவும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். தனியார் கூர்நோக்கு இல்லங்கள் குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், விடுதலை பெற்ற கைதிகள் உதவிச்சங்கம் மற்றும் பாலமந்திர் ஆகியவை அரசின் மான்ய உதவியுடன் இயங்கி வருகின்றன.

(ஆ) இளைஞர் நலக்குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்களினால் நிறுவனங்களுக்கு கல்வி மற்றும் நன்னெறிப் பயிற்சிக்கென அனுப்பப்படும் சிறார்களுக்கென 1986 ஆம் ஆண்டில் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ் மாநிலத்தில் 21 இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்கள் உள்ளன. அவற்றில் 2 சிறப்பு இல்லங்கள் மற்றும் 8 இளைஞர் இல்லங்கள் அரசினராலும், 11 இளைஞர் இல்லங்கள் அரசின் மான்ய உதவியுடன் தனியாராலும் நடத்தப்படுகின்றன. தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மூலம் சிறப்பு இல்லங்களிலும், ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் நலக்குழுமங்கள் மூலம் இளைஞர் இல்லங்களிலும் சேர்க்கப்படுகின்றனர். மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென

சென்னை, பாலவிஹார் நிர்வாகத்தின் கீழ் ஓர் இளைஞர் இல்லம் இயங்கிவருகிறது.

(இ) இவ்வகை நிறுவனங்களின்றி, சிறார்களின் முன்னேற்றத்திற்கு தக்கது எனக் கருதும் நிறுவனங்களின் பொறுப்பில் ஒப்படைக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

6.3. 1986ம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழமைந்த முன்மாதிரி இல்லம்:

1986ம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ், ஒரு முன்மாதிரி இல்லம் அமைக்க, யூனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் ரூ. 5.15 லட்சத்திற்கு திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லம் ஒரு முன்மாதிரி இல்லமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த முன்மாதிரி இல்லத்தில் பின்வருமாறான புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. உலோகத்தகடு கடம், விசைத்தறி மற்றும் பாய் பின்னும் தொழில்களை நவீனப்படுத்துதல்.
2. விசைக் கலப்பை உதவியுடன் விவசாய பயிற்சி.
3. இரண்டு சக்கர வாகனங்களின் பராமரிப்பு பயிற்சி.
4. கல்விப்பிரிவினை பலப்படுத்த நூலகத்திற்கு புது புத்தகங்கள், வண்ண தொலைக்காட்சிப் பெட்டி, ஒலிப்பதிவு நாடாக்கருவி, ஒலி மற்றும் ஒளி நாடாக்கள் மற்றும் வானொலியுடன் கூடிய ஒளிப்பதிவு பெட்டி வழங்குதல்.
5. விளையாட்டுப் பொருட்கள்.
6. இல்லவாசிகளுக்கு மின் தட்டச்சுப்பொறி வாயிலாக தட்டச்சுப்பயிற்சி, மற்றும்
7. உடல்நல முகாம் மற்றும் கல்விச்சுற்றுலா ஆகிய வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன.

6.4. இளைஞர் நலக்குழுமங்கள்:

1986ம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டம் பிரிவுகளின் கீழ்வரும் புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க 13 இளைஞர் நலக்குழுமங்கள் இயங்கிவருகின்றன. ஒரு தலைவர் மற்றும் 5 உறுப்பினர்களைக்கொண்டு (மகளிர் ஒருவர் உள்பட) இந்த இளைஞர் நலக்குழுமங்கள் இயங்கிவருகின்றன.

1994 ஏப்ரல் 25]

6.5. இளைஞர் நீதிமன்றங்கள்:

சென்னை நகரின் பன்னிரண்டாவது பெருநகர நீதிமன்ற நடுவரும், மாவட்டங்களில் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர், உட்கோட்ட குற்றவியல் நீதிமன்றநடுவர், குற்றவியல் முதல்வகுப்பு நீதிமன்ற நடுவர் ஆகியோர் தவறிழைத்த சிறார்களின் வழக்குகளை தீர்வு செய்து வருகின்றனர்.

6.6. 1956ம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் அமைந்த நிறுவனங்கள்:

(அ) 1956ம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு மகளிர் காப்பகங்கள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு இல்லங்கள் புகலிடம் தந்து பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளிக்கின்றன. மேலும் பாதுகாப்பு கோரி தானாக சேர விரும்பும் மகளிருக்கு இந்த இல்லங்கள் பாதுகாப்பு அளிக்கின்றன. இத்துறையின் கீழ் ஆறு மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் சென்னை (2), மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கிவருகின்றன.

(ஆ) நீதிமன்ற விசாரணைக்காலத்தில் மகளிர்க்கு புகலிடம் அளித்து பராமரிக்க ஏதுவாக ஆறு மீட்பு இல்லங்கள் அரசினர் மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து இயங்கிவருகின்றன. இவை தவிர மணமாகாத தாய்மார்களுக்கு என 2 இல்லங்கள் தொண்டு நிறுவனங்களால் அரசின் மான்ய உதவியுடன் இத்துறையின் மூலம் நடத்தப்படுகின்றன.

6.7 கல்விப்பயிற்சி:

அனைத்து சிறப்பு/இளைஞர் இல்லங்களிலும் 8ம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு அரசினர் சிறப்பில்லம் மற்றும் சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லங்களில் பள்ளியிறுதி வகுப்புவரை கல்வியளிக்கப்படுகின்றன. இராணிப்பேட்டை மற்றும் தஞ்சாவூர் அரசினர் இளைஞர் இல்லங்களிலும் மைய அரசின் 50% மானிய உதவியுடன் உயர்நிலைப்பள்ளிப் பிரிவுகள் துவங்கப்படவுள்ளன. உயர்கல்வியின் நாட்டமும் தகுதியும் உள்ள இல்லவாசிகள் வெளியில் உள்ள மேல்நிலைப்பள்ளி, கல்லூரி/தொழில் நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்த்து பயிற்றுவிக்கப்படுகிறார்கள். பள்ளிக்கல்வி மட்டுமல்லாது முறைசாராக் கல்வி மூலமும் மாணவர்களுக்கு கல்வியளிக்கப்படுகிறது.

6.8. தொழிற்பயிற்சி:

(அ) எழிலை உலகம் தழுவும் வண்ணம் ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்தொழில் என்னும் தொழிற் சிறப்பினை வலியுறுமுகத்தான் சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழியங்கும் சிறப்பு/இளைஞர் இல்லங்களில் இல்லவாசிகளுக்கு வருவாய் ஈட்டக்கூடிய தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

தச்சு, புத்தகம் கட்டுதல், இயந்திர தச்சு, கொத்துவேலை, தையல் மற்றும் பூவேலை, சோப்பு தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக்கருவி, பாய் நெசவு, மாட்டுப்பண்ணை, கருமாரப்பணி மற்றும் உலோகப்பணி.

மேற்காணும் தொழிற்பயிற்சிகள் மட்டும் இல்லாமல் பின்வரும் செயல்திறன் வளர்ச்சித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1. மெழுகுவர்த்தி தயாரிப்பு
2. சிறுபேக்கரி
3. பனை நார் பொருட்கள் தயாரிப்பு
4. பனை ஓலை பொருட்கள் தயாரிப்பு
5. காகித உறைகள் தயாரிப்பு
6. காகித பொம்மைகள் தயாரிப்பு
7. மின்விசை மாவு ஆலை
8. இரண்டு சக்கர தானியங்குவாகனங்கள் பழுதுபார்ப்பு
9. வீட்டு மின் அலகுப்பணி
10. தண்ணீர் குழாய் பழுதுபார்ப்பு.

260 இல்லவாசிகள் மேற்குறிப்பிட்ட செயல்திறன் வளர்ச்சித் திட்டத்தில் பயிற்சிபெற்று வருகின்றனர்.

மேற்காணும் தொழில் அலகுகளில் சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லம், மற்றும் தஞ்சாவூர் அரசினர் இளைஞர் இல்லங்களின் தையற்தொழில் திட்டங்களும், செங்கல்பட்டு சிறப்பில்ல நெசவுத்தொழில் கூடமும், தஞ்சாவூர், இராணிப்பேட்டை இளைஞர் இல்லங்களில் தச்சுத்தொழில் கூடங்களும், இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் பற்றவைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்கூடம் துவங்கப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

(ஆ) மகளிர் காப்பகங்கள்/பெண்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தையல் மற்றும் பூவேலை, பாய்நெசவு, மின் சலவையகம் ஆகிய

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்தொழிற் கூடங்களில் 60 இல்லவாசிகள் பயிற்சி பெறுகிறார்கள்.

(இ) சிறார்களுக்கான பிற்காப்பு நிறுவனங்களில் புத்தகம் கட்டுதல், கருமாரப்பணி மற்றும் வேளாண்மை ஆகிய தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றன. இந்நிறுவனங்களில் 20 இல்லவாசிகள் படிப்புதவித் தொகையுடன் பயிற்சி பெறுகிறார்கள்.

(ஈ) சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று இயங்கி வருவதுடன் 15 மாணவிகள் இப்பிரிவில் பயிற்சி பெறுகிறார்கள். சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசிகளுக்கு மனையியல் பயிற்சியளிக்கப்படுகிறது.

6.9. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் ஆரம்பித்தல்:

சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங்களில் தனியார் நிர்வாகத்தில் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள், இளைஞர் நலக்குழுமங்கள், இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் பரிந்துரைக்கப்படும் சிறுவர், சிறுமியரின் மனநிலையை ஆராய்கின்றன.

1993-94ம் நிதியாண்டில் புதியதாக மேலும் 3 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் ரூ. 2.40 இலட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் தர்மபுரி, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட உள்ளன. இதன் மூலம் சுமார் 300 சிறார்கள் பயன்பெறுவார்கள்.

6.10. பிற்காப்பும், மறுவாழ்வு நடவடிக்கைகளும்:

இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் பயிற்சி முடிந்து வெளியேறும் சிறுவர்களின் பராமரிப்புக்காக மூன்று பிற்காப்பு இல்லங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு சிறுவர்களுக்கான இல்லங்கள் ஆத்தூர் (செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம்) மற்றும் மதுரையிலும், பெண்களுக்கான ஒரு இல்லம் வேலூரிலும் (வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்) உள்ளன. கல்விப்பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி பெற்று வரும் இல்லவாசிகள், பயிற்சியை முழுமையாக முடிந்து வெளியேற ஏதுவாக, அவர்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணைபுரியும் வண்ணமும், அவர்களின் இல்ல நீக்க நாட்களுக்குப் பிறகு மேலும், மூன்று ஆண்டுகாலம் பிற்காப்பு இல்லங்களில் தங்கி பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் இல்லவாசிகள் நிறைவான கல்வி அல்லது தொழிற்பயிற்சி பெற வேண்டும் என்பதே ஆகும். இவ்வகையான ஏற்பாட்டின் மூலம் பயிற்சி பெற்ற இல்லவாசிகள் தன்னம்பிக்கையுடன் இல்ல நீக்கம் பெற வழி ஏற்படுகிறது.

6.11. மறுவாழ்வு நடவடிக்கைகள்:

பெண்களானாலும் ஆண்களானாலும் தங்களது சொந்தக் காலில் நின்றால்தான் எந்தத்துயரமும் வராது என்ற கொள்கைக் கிணங்க சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழியங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும், இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகள் பயன்பெறும் விதமாக ஒரு தொழிற்கூட்டுறவு சங்கம் "கஸ்தூரிபாய் காந்தி மறுவாழ்வு தொழிற்கூட்டுறவு சங்கம்" என்னும் பெயரில் பதிவு செய்யப்பட்டு சென்னை, அரசினர் பெண்கள் இளைஞர்/சிறப்பு இல்ல வளாகத்தில் இயங்கி வருகிறது.

(1) ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவி திட்டத்தின் கீழ் 9 பெண் இல்லவாசிகளுக்கு நிதியுதவி மூலம் மறுவாழ்வு அளிக்கப்படுகிறது.

(2) மூன்று பெண் இல்லவாசிகள், செவிலியர் பயிற்சியினை இவ்வாண்டில் முடித்து தனியார் மருத்துவமனையில் பெண் செவிலியராக பணிபுரிந்து வருகின்றனர்.

(3) இத்துறையின் தமிழ்நாடு தேர்வாணையத்தின் வரம்புக்குட்படாத பதவிகளில், முன்னாள் இல்லவாசிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் மற்றும் திருமணம் செய்துகொள்ளும் மணமக்களுக்கு அவர்களின் திருமண நாள் செலவாக, ரூ. 300 ம் புதுவாழ்வு துவங்க, சீதனமாக ரூ. 1,000 ம் வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(4) மகளிர் காப்பகங்களிலிருந்து விடுவிக்கப்படும் பெண்கள் சுயவேலைவாய்ப்பு பெற "ஒழுக்கநெறி பிறழிய மகளிருக்கான தமிழ்நாடு நல நிதி" ஏற்படுத்தப்பட்டு அதிக பட்சமாக ரூ. 5,000 வரை நிதியுதவியளித்து, கறவை மாடுகள், சிறு கடைகள், தையல்கடை போன்றவை வைத்து சொந்தமாக தொழில்செய்து முன்னேற வகைசெய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், இதுகாறும் 94 முன்னாள் இல்லவாசிகள் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

6.12. இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள்:

(1) தொழிற்பயிற்சி பெறும் இல்லவாசிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம்:

அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் தொழிற்பயிற்சி பெறும் இல்லவாசிகளில் திறமை வாய்ந்த மற்றும் ஓரளவு திறமை வாய்ந்த

இல்லவாசிகளுக்கு முறையே, மாதம் ரூ. 50 மற்றும் ரூ. 30 வீதம் ஊக்கத் தொகையளிக்கும் திட்டம் 1992-93ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இல்லவாசிகள் ஆர்வமுடன் தொழிற்கல்வி பயிலச் செய்வதும், அவர்களின் இல்ல நீக்கத்தின்போது கணிசமான சேமிப்பு கிடைக்க வழிவகை செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இவ்வாண்டில் ரூ. 0.65 இலட்சம் செலவில் 150 இல்லவாசிகள் இத்திட்டம் மூலம் பயன்பெற்றுள்ளனர்.

(2) சிறார்களின் நலனுக்கான குடும்ப உதவித்திட்டம்:

வறுமையின் காரணமாக இளைஞர் இல்லங்களுக்கு அனுப்பப்படும் சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் சிறார்களை இயல்பாகவே அவர்களது பெற்றோர்/உறவினரிடம் ஒப்படைத்து அவர்களது குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான சிறார்கள் ஒரு குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் பராமரிப்பு, கல்வி, உடல்நலம், இவற்றிற்கென ஒரு இல்லவாசிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் உதவி வழங்கப்படுகிறது. 1994-95ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 1.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன் மூலம் 100 இல்லவாசிகள் பயன் பெறுவர்.

(3) இளைஞர்/சிறப்பு இல்லங்களை மேம்படுத்துதல்:

சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழியங்கும் தற்போதுள்ள நடைமுறைகளை நவீனப்படுத்தும் விதமாக ஒவ்வொரு இளைஞர்/சிறப்பு இல்லத்திற்கும் ஒரு அரிசி உலையும், மூன்று பிற்காப்பு நிறுவனங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பும் ரூ. 6.53 லட்சம் செலவில் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. மைய, மாநில அரசுகள் சம அளவு செலவுப்பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. பயன்பெறும் இல்லவாசிகள் 2,500.

(4) சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்:

"ஏடுதூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்" - என்னும் பொன்மொழியைத் தகர்க்கும் சிறார்கள் பிச்சையெடுக்கும் நிலையை ஒழிக்கும் திட்டத்தை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. அவையாவன:-

(அ) குறிப்பிட்ட பகுதிகளில் துயருறும் சூழலில் பிச்சையெடுக்கும் குழந்தைகள் குறித்த தகவல்களை சேகரித்தல் (ஆ) புதிய இளைஞர்

வழிகாட்டி நிலையங்கள் துவங்குதல் மற்றும் இளைஞர் வழிகாட்டி நிலையங்களை வலுப்படுத்தல் (இ) தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள் காப்பகங்கள், மழலைக் கல்வி, முறைசாராக்கல்வி/வாழ்க்கைக் கல்வி, கல்வி/தொழிற்பயிற்சி, பொழுதுபோக்கு போன்ற வசதிகள் அளித்தல்.

(5) சிறார்களுக்கு சிறப்பு வசதிகள் செய்தல்.

மைய, மாநில அரசுகள் சம அளவில் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ், ஊனமுற்ற சிறார்களுக்கு சிறப்பு பயிற்சியளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் சென்னை, இராயபுரம் அரசினர் இளைஞர் இல்லங்களில் ஊனமுற்ற சிறுவர்களுக்கு சிறப்பு பயிற்சியளிப்பதற்காக 2 அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் 50 ஊனமுற்ற சிறுவர்கள் பயன்பெறுவார்கள்.

6.13. சாலையோர சிறார்களுக்கான இரவு விடுதிகள்:

(அ) பெற்றோரின் அரவணைப்பின்றி வறுமை மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்காக தம் இருப்பிடம் விட்டு, வாழ வழி தேடி, பெரு நகரங்களில் புகும் சிறார்களின் நலன் குறித்து, தமிழக அரசு சிந்தித்து, அவர்களுக்கு முதற்கட்டமாக இரவு விடுதிகளை அமைக்கலாம் எனவும் திட்டம் வகுத்தது. இவ்வகை சிறார்கள் தங்கள் வாழ்க்கையைப் பெரும்பாலும் நடைபாதை ஓரங்களிலும், பேருந்து நிழற்குடைகளிலும் கழிக்கின்றனர். இந்த நிலை அவர்களை சமூக விரோதிகளிடம் தொடர்பு ஏற்படுத்தி குற்றவாளிகளாக மாற வழி செய்கிறது. எனவே, சாலையோர சிறார்களுக்கு இரவு நேர புகலிடம் தருவதற்காக தொண்டு நிறுவனங்கள் மூலமாக முதலில் 5 புகலிடங்களும், பின்னர் மேலும் 5 புகலிடங்களும் துவக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 10 சாலையோர சிறார்களுக்கான புகலிடங்களில் 7 சென்னை மாநகரிலும், மீதமுள்ள மூன்று, சேலம், விழுப்புரம் மற்றும் மதுரையில், தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. அரசின் மானிய உதவியாக ஆண்டொன்றுக்கு ஒரு விடுதிக்கு ரூ. 40,000 வழங்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் இது போன்று மேலும் 3 விடுதிகள் கோவை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் ஆரம்பிக்கவும், விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து சிறார்களுக்கும் ஒரு வேளை உணவு வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 650 சாலையோர சிறார்கள் பயன் பெறுவார்கள்.

ஏற்றுமதி ஆடைகள் தயாரித்தலில் பயிற்சி:

சென்னை, இராயபுரம், அரசினர் இளைஞர் இல்ல சிறார்களுக்கும், சென்னை அரசினர் மகளிர் காப்பக இல்லவாசிகளுக்கும் ஏற்றுமதி ஆடைகள் தைப்பதில் பயிற்சியளிக்கும் திட்டம் 1993-94 ஆம் ஆண்டில்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஏற்றுமதி ஆடைகள் தயாரித்தலில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்களிடம், ஆர்டர்கள் பெறப்பட்டு பயிற்சியளிக்கப்படும். இதன் மூலம் கிடைக்கும் வருவாய், இல்லவாசிக்கும், அரசுக்கும் சமமாக பகிர்ந்து வழங்கப்படும். இதன் மூலம் 40 இல்லவாசிகள் பயனடைவார்கள்.

6.14. திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வுப்பிரிவு:

சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் இல்லங்கள், மற்றும் குழந்தைகள் நலனில் இயங்கும் அனைத்து நிறுவனங்களின் செயல்பாடுகளையும், அவைகளில் சிறார்களுக்கு வழங்கப்படும் அடிப்படை தேவைகளை ஆய்வு செய்யவும், மேம்பாடு குறித்து பரிந்துரை செய்யவும், ஒரு திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வு பிரிவு, யூனிசெப் நிறுவனத்தின் முழுமையான உதவியுடன் சமூக பாதுகாப்புத்துறை இயக்ககத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

சமூக நலத்துறை மற்றும் சத்துணவுத்திட்ட செயலரைத் தலைவராகவும், சமூகப்பாதுகாப்புத்துறை இயக்குநர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர், சமூக நல வாரியத்தலைவர், பொது சுகாதாரத்துறை இயக்குநர், மற்றும் சமூக நலத்துறை இயக்குநர், ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட உயர்மட்ட குழுவின் கட்டுபாட்டில் திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வு பிரிவு செயல்படுகிறது.

1991 மற்றும் 1992 ம் ஆண்டில் இக்கணிப்பாய்வு பிரிவு பராமரிப்புக்காக யூனிசெப் நிறுவனத்திடமிருந்து ரூ. 2.53 இலட்சம் உதவியாக பெறப்பட்டது. 1993 ஆம் ஆண்டு முதல் இக்கணிப்பாய்வுப் பிரிவின் செலவினத்தை தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழ் வரும் இல்லவாசிகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்வது தவிர, கருத்தரங்குகள், பயிற்சிகள் மற்றும் துயருறும் சூழ்நிலையிலுள்ள சிறார்களின் நலனைக்குறித்து மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் போன்றவை, இக்கணிப்பாய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவைகளைத் தவிர எதிர்வரும் ஆண்டுகளில், இப்பிரிவு, சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்களின் மேம்பாடு திட்டம், பிச்சை எடுக்கும் இளஞ்சிறார்களை தடுத்து மறுவாழ்வு வழங்கும் திட்டம், இளைஞர் நீதிச்சட்டத்தின் கீழமைந்த நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல், போன்றவையுடன் துயருறும் சூழ்நிலைகளுக்குட்பட்ட சிறார்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் உதவி வழங்கும் திட்டம், ஆகியவற்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தியாயம் - 7.

முதியோர்களுக்கான ஒய்வுதியத் திட்டம்

7.1. இத்திட்டம் முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். உற்றார், உறவினர் ஆதரவின்றி, பாதுகாப்பு அளிப்போர் இல்லாமல், வழியற்ற நிலையில் வாழ்ந்து வரும் முதியோர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் பொருட்டு, அரசு கீழ்க்கண்ட இனங்களின் கீழ் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

(1) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் *(01-04-1962* முதல் அமுல்படுத்தப்படுவது)

(2) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் *(01-11-1974* முதல் அமுல்படுத்தப்படுவது)

(3) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் *(01-06-1975* முதல் அமுல் படுத்தப்படுவது)

(4) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் *(21-08-1981* முதல் அமுல்படுத்தப்படுவது)

(5) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை திட்டம் *(25-04-1986* முதல் அமுல்படுத்தப்படுவது)

7.2. வழங்கப்படும் ஒய்வுதிய விவரம்:

(1) 01-04-1962 முதல் *31-03-1979* முடிய மாதம் ரூ. *20/-*

(2) 01-04-1979 முதல் *31-03-1982* முடிய மாதம் ரூ. *25/-*

(3) 01-04-1982 முதல் *30-04-1989* முடிய மாதம் ரூ. *35/-*

(4) 01-05-1989 முதல் *31-01-1992* முடிய மாதம் ரூ. *50/-*

(5) 01-02-1992 முதல் மாதம் ரூ. *75/-*

7.3. இலவச கைத்தறி, ஜனதா ஆடைகள் வழங்குதல்:

ஆண்டுதோறும் பொங்கல் நாள் மற்றும் சுதந்திர நாள் ஆகிய நாட்களில், முதியோர் உதவித் தொகை பெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி வேட்டியும், பெண்களுக்கு ஒரு கைத்தறி ஜனதா சேலையும் *1979* சுதந்திர நாள் முதல் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

1994 ஏப்ரல் 25]

1991 ஆம் ஆண்டு முதல், தீபாவளி பண்டிகைக்கும், முதியோர் உதவி பெறுவோருக்கும், தலா ஒரு கைத்தறி வேட்டியும், கைத்தறி சேலையும் இலவசமாக வழங்கப்படுகிறது. 1992-93 ஆம் ஆண்டு முதல், இந்த இலவச சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டம், பொங்கல் மறறும் தீபாவளி ஆகிய இரு பண்டிகைகளுக்கும் வழங்கப்படுகிறது.

7.4. மதிய சத்துணவு வழங்குதல்:

முதியோர் உதவித் தொகை பெறுவோர்களில், விரும்புவோர்களுக்கு புரட்சித் தலைவி எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்களில் மதிய உணவு 15-09-1991 முதல் வழங்கப்படுகிறது.

உணவு உட்கொள்ளும் முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் ஒவ்வொருவருக்கும் வாரம் ஒரு முறை 1/2 கிலோ அரிசியும், சத்துணவுக்கூடங்களில் சாப்பிடாத முதியோர்கள் ஒவ்வொருவருக்கும் வாரம் 1 முறை 1 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

7.5. ஒவ்வொரு காலாண்டுக்கும் காத்திருப்போருக்கு முதியோர் உதவித் தொகை வழங்குதல்:

ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும், காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க வேண்டும் என்ற அரசு ஆணை (நிலை) எண். 440, சமூக நலம், நாள் 08-03-1989-ன் படி நடைமுறைப்படுத்தப்படுகிறது.

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் பயனடைவோரின் எண்ணிக்கை

		எண்ணிக்கை
(அ)	முதியோர் உதவித் தொகைத் (சாதாரண) திட்டம்	2,32,821
(ஆ)	முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற விதவைகள்) திட்டம்	1,96,931
(இ)	முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம்	27,940
(ஈ)	முதியோர் உதவித் தொகைத் (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம்	72,404
(உ)	முதியோர் உதவித் தொகைத் (கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள்) திட்டம்	24,078
	1992-93 தனி அனுமதி	30,000
	1993-94 தனி அனுமதி	25,000
	மொத்தம்	**6,09,174**

7.6. முதியோர் இல்லங்கள்:

வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்கள் ஆகியவர்களில் அன்றாட வாழ்வில் உணவு, உறைவிடம் இன்றி துயருறுவோர் பலர் உள்ளனர். இவர்களுடைய துயர்களைய தனியார் தொண்டு நிறுவனங்களின் சேவையை பயன்படுத்த ஐந்து முதியோர் இல்லங்கள் 1991-92-ல் துவங்கப்பட்டு உள்ளன. மேலும் ஐந்து முதியோர் இல்லங்கள் 1993-94-ல் துவங்கப்பட்டன. ஆக தற்போது உள்ள 10 இல்லங்களில் 350 முதியோர்கள் தங்கி பயன் பெறுகின்றனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994-95 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகளின் விவரப்பட்டியல்

தொடர் எண்	திட்டப் பணிகளின் விவரம்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
	சமூக நலம்-சத்துணவுத்திட்டத் துறை	
(1)	காரைக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள பணிஇல்லங்களில் மேனிலை வகுப்பு தொடங்குதலும், தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் மேனிலை வகுப்புகளில் கூடுதல் பாடத் தொகுதியை அறிமுகம் செய்தலும்	5.96
(2)	6 பணிஇல்லங்கள் 20 அரசினர் அனாதை இல்லங்கள் ஆகியவற்றிற்கு புதிய பாத்திரங்கள் வழங்குதல்	4.00
(3)	சிறந்த மகளிர் மன்றங்களுக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகையை அதிகரித்தல்	0.75
	ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு	
(4)	அரசு சாரா அமைப்பின் உதவியோடு தருமபுரி மாவட்டம் பர்கூரிலுள்ள மன வளர்ச்சிக் குன்றியோர் பள்ளி ஏற்படுத்தல்	3.96
(5)	உடல் ஊனமுற்ற மகளிர்க்கு அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பில் பயிற்சி அளிப்பதற்காக வாழ்க்கைத் தொழில் பயிற்சி பிரிவுகள் நடத்த அரசு சாரா அமைப்புகளுக்கு மானிய உதவி வழங்குதல்	1.77
(6)	மதுரையில் கடும் ஊனமுற்றவர்களுக்கும், இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்-பட்டவர்களுக்குமான அரசினர் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்	10.00
(7)	பூவிருந்தவல்லி மற்றும் திருச்சியில் உள்ள பார்வையற்றோர் அரசு பள்ளிகளுக்காகவும் தருமபுரி, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் காதுகேளாதோர் பள்ளிக்காகவும் ஆய்வுக்கூடப் பொருட்கள் வாங்குதல்	0.58
(8)	மனவளர்ச்சி குன்றியவர்களுக்காக அரசு சாரா அமைப்புகள் நடத்தும் பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வாங்குதல்	0.35

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் LEGISLATIVE ASSEMBLY

தொடர் எண்	திட்டப் பணிகளின் விவரம்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
(9)	தாம்பரம் அரசினர் காதுகேளாதோர் பள்ளிக்கு அறைகலன்கள் வாங்குதல்	0.35
(10)	மனவளர்ச்சிக் குன்றியோர்களின் பெற்றோர்களுக்கு 4 நாள் பயிற்சி அளிப்பதற்காக அரசு சாரா அமைப்புகளுக்கு உதவி	0.20
(11)	திருச்சி அரசினர் பார்வையற்றோர் பள்ளியில் கழிப்பறைகள் கட்டுதல்	1.50
(12)	தஞ்சாவூர் அரசினர் காதுகேளாதோர், பார்வை இழந்தோர் பள்ளிக்கு நகராட்சி குழாய் இணைப்பு அளித்தலும், துளைக்கிணறு தோண்டுதலும்	1.00
(13)	சிவகங்கை அரசினர் பார்வையற்றோர் பள்ளி கட்டிடத்தைப் பழுதுபார்த்தலும், நீர் வழங்குவதை அதிகப்படுத்துதலும்	1.10
(14)	தமிழ்நாடு தேர்வாணையக் குழுவிற்கு பிரெய்லி சாதனங்கள் வழங்குதல்	1.00
	சமூகப் பாதுகாப்பு	
(15)	அரசினர் இளங்குற்றவாளிகள் சீர்திருத்த இல்லத்திலுள்ள அனாதைகள் குழந்தைகளுக்காக சிறப்புப் பாதுகாப்பு மையம் நிறுவ, அரசு சாரா அமைப்புகளுக்கு மானியம் வழங்குதல்	1.20
(16)	குழந்தைகளை தவறான வழியில் ஈடுபடுத்துதலை புறக்கணித்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்காக இடர்பாடுகள் தலையீட்டு மையம் ஏற்படுத்துதல்	0.60
(17)	தஞ்சாவூர் அரசினர் இளங்குற்றவாளிகள் சீர்திருத்த இல்லத்தில் புத்தகம் கட்டும் பிரிவை வலுப்படுத்தி நவீனமயமாக்குதலும் காயில் சுற்றுதல், வீடுகளுக்கு மின்கம்பி இணைப்பு கொடுத்தல் ஆகிய பயிற்சிப் பிரிவுகள் தொடங்குதலும்	1.33
(18)	அரசினர் இளங்குற்றவாளிகள்/சிறப்பு/ கூர்ந்த கவனிப்பு / கண்காணிப்பு இல்லங்களில் அவசரகால விளக்கு வசதிகள் செய்தல்	1.08
(19)	அரசினர் கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் பிற்காப்பு அமைப்புகள் ஆகியவற்றிற்கு சமையல் எரிவாயு இணைப்பு அளித்தலும், அரவை எந்திரங்கள், சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றை வழங்குதலும்	4.15

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்	திட்டப் பணிகளின் விவரம்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
(20)	அரசினர் இளங்குற்றவாளிகள் சீர்திருத்த/சிறப்பு கண்காணிப்பு இல்லங்களில் பல்வேறு தொழில்களில் பயிற்சி பெற்று விடுதலையாகிச் செல்வோருக்கு அளிக்கப்படும் ஒட்டு மொத்தமானியத்தை அதிகரித்தல்	0.64
(21)	தஞ்சாவூர், இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள அரசினர் இளங்குற்றவாளிகள் இல்லங்களில் நீரடிக் கழிப்பிடங்கள் கட்டுதல்	3.00
(22)	செங்கற்பட்டு, இராணிப்பேட்டை, தட்டப்பாறை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் இளங்குற்றவாளிகள் சீர்திருத்த/ சிறப்பு இல்லங்களில் கட்டிடங்களைப் பழுதுபார்த்தல்	5.00
	மொத்தம்	**49.52**

நடைமுறையிலுள்ள முக்கிய திட்டப் பணிகள்

வரிசை எண் (1)	திட்டப் பணிகள் விவரம் (2)	திட்ட ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3)
	மகளிர் நலம்:	
(1)	வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள கருவுற்ற மகளிருக்கு ரொக்க உதவி	600.00
(2)	பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியிலிருந்து உதவி பெறும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்	575.00
(3)	வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள பெண்களின் திருமணத்திற்காக நிதியுதவி	500.00
(4)	சேவை இல்லங்களும், இடைநிலை பள்ளி ஆசிரியர் பயிற்சி வகுப்பும்	88.06
(5)	பணி மையங்களும், உற்பத்தி பிரிவும்	72.12
(6)	மகளிர் மன்றங்கள்	49.83

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)
(7)	கூட்டுறவு சங்கங்களுக்கான கண்காணிப்புப் பிரிவை ஏற்படுத்துதல்	41.20
(8)	பெண்களுக்கான வழிகாட்டி நிலையங்கள்	31.13
(9)	தமிழ்நாடு அரசு கலப்பு திருமண உதவித்திட்டம்	27.70
(10)	ஏழை விதவையரது மகள்களின் திருமணத்திற்காக திருமண உதவித் தொகை	21.00
(11)	ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்	15.00
(12)	பணிபுரியும் மகளிர்க்கான இல்லங்களை நடத்துதல்	11.15
(13)	விதவை மறுமணத்தை ஊக்குவிக்கச் சேமிப்பு சான்றிதழ்கள் வழங்கும் திட்டம்	10.20
(14)	தொண்டு நிறுவங்களுக்கு சொந்தமான முதியோர் நல இல்லங்கள்	10.00
(15)	தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி	5.90
(16)	தையல் மையங்கள், மலைவாழ் மக்களுக்கான துணைத்திட்டத்தின் கீழ் தொடங்குதல்	2.99
(17)	பணிபுரியும் மகளிர் இல்லங்கள் தொடங்குதல்	2.45
(18)	வாழ்க்கை தொழிற்பயிற்சி பெற ஏழை மகளிருக்கு நிதியுதவி	2.30
(19)	ஏழை விதவைகளின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு நிதியுதவி	2.01
(20)	ஆதரவற்ற பெண்களுக்கு திருமண நிதியுதவி	1.44
	குழந்தைகள் நலம்:	
(1)	புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்	26,265.00
(2)	தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்	5,518.34
(3)	ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் (சிடா திட்டமும் சேர்ந்தது)	3,942.05
(4)	பெண் குழந்தைக்கள் நலனுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா திட்டத்திற்கு நிதியுதவி	400.00
(5)	ஆதரவற்ற குழந்தைகள் காப்பு திட்டத்தில் தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி	231.25

(1)	(2)	(3)
(6)	கிராமப்புற பணிகளுக்காக சமூக நல நிறுவனங்களுக்கு உதவுவதற்காக சமூக நல வாரியத்திற்கு மானியம்	10.00
(7)	ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் தொடங்குதல்	8.89
	ஊனமுற்றோர் நலம்:	
(1)	ஊனமுற்றோர் பள்ளிகளுக்கு நிதியுதவி	175.00
(2)	பார்வையற்றோர் பள்ளி	100.97
(3)	இளம்பிள்ளை வாத நோய் ஒழிப்பு ஒருங்கிணைந்த திட்டம்	91.29
(4)	காது கேளாதோருக்கான பள்ளிகள்	71.92
(5)	ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் திட்டம்	62.05
(6)	மண்டல மறுவாழ்வு மையம்	47.91
(7)	உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு படிப்புதவி தொகைகள்	40.00
(8)	செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முட்டுக்காட்டில் உள்ள நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி மையத்தை நடத்துதல்	39.66
(9)	வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து இருக்கும் வேலையற்ற பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பின்மைப் படி	25.87
(10)	காது கேளாதோருக்கான பாலர் பள்ளி	24.82
(11)	பார்வையற்றோருக்கான மறுவாழ்வு	19.50
(12)	கடுமையாக ஊனமுற்றோருக்கான பராமரிப்புப் படிகள்	12.36
(13)	இளம்பிள்ளை வாதம், மூளை,மனவளர்ச்சி இன்மையால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற பிள்ளைகளை பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி	12.00
(14)	செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வு பணிகளுக்கான முன்னோடித் திட்டம் செயல்படுத்துதல்	10.82
(15)	பார்வையற்ற வயது வந்தோருக்கான இலகு ரக பொறியியல் கல்வித் திட்டம்	11.03
(16)	கடுமையாக கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளி	10.67
(17)	காது கேளாதோருக்காக புதிய பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்குதல்	10.32
(18)	உடல் ஊனமுற்றோர்க்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்	8.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)
(19)	மனவளர்ச்சிக் குன்றியோருக்கான நிலையம் தொடங்குதல்	7.45
(20)	பார்வையற்றோருக்கான புதிய பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்குதல்	5.96
(21)	பார்வையற்றோரின் ஆசிரியர்களுக்கான மண்டல பயிற்சி மையங்கள்	5.54
(22)	உடல் ஊனமுற்றோர் நல மாநில வாரியம்	5.03
(23)	அரசு அங்கிகாரம் பெற்ற ஊனமுற்றோர் பள்ளிகளுக்கு உதவி	2.90
(24)	காது கேளாதோருக்கான கல்வி கற்பிப்பதில் பயிற்சி அளிக்க தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி	2.66
(25)	காது கேளாதோருக்கான பயிற்சி மையங்கள்	2.60
(26)	உடல் ஊனமுற்றோருக்கான சாக்குக்கட்டி தயாரிப்பு சங்கங்களை ஏற்படுத்துதல்	2.11
(27)	மனவளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கான அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதியுதவி	7.91
(28)	பார்வையற்றோரை திருமணம் செய்யும் குறைபாடற்றவர்களுக்கு சலுகைகள்	1.44
(29)	கிண்டி, அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற பார்வையற்றவர்களுக்கும், காது கேளாதோருக்கும் அரசு தொழில் பழகுநராக சேர்த்து பணிப்பயிற்சி அளித்தல்	0.40

தொகுப்புரை:

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் குழந்தைகள் நலனுக்காக உருவாக்கப்பட்ட பதினைந்து அம்ச திட்டத்தின் சிறப்புகள் :-

* பாதுகாப்பான மகப்பேற்றிற்கும் பிறந்த குழந்தையின் எடையை 3 கிலோவாக அதிகரிப்பதற்கும் வகை செய்தல்.
* தடுப்பூசி மூலம் தடுக்கக்கூடிய நோய்களை முற்றிலுமாக ஒழித்தல்.
* சிசு மரண வீதத்தை 1000-க்கு 30 என்ற அளவுக்கு கீழாகக் குறைத்தல்.
* குழந்தைகளிடையே காணப்படுகிற கடுமையான மற்றும் ஓரளவு சத்துக் குறைவைக் குறைத்தல்.
* நுண் ஊட்டச்சத்து குறைபாடுகளை முற்றிலுமாக ஒழித்தல்.

1994 ஏப்ரல் 25]

* அனைத்து மருத்துவ மனைகளையும், மகப்பேறு மையங்களையும் மழலை சீராட்டும் மையங்களாக்குதல்.
* மகளிர், இளம் வயதிலும், அடிக்கடியும் தாய்மையடைவதைத் தடுத்தல்.
* கட்டாயத் தொடக்கக் கல்வியை பரவலாக்குதல்
* மகளிரின் எழுத்தறிவையும், நிலையையும் உயர்த்துதல்.
* குழந்தை நல மையங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குதலும், சிறந்த சுகாதார வசதிகள் செய்து கொடுத்தலும்.
* குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலுமாக நீக்குதல்.
* பெண் குழந்தை பாதுகாப்புத்திட்டத்தை செயற்படுத்துதல்.
* பெண் சிசுக்கொலை என்ற சமூகக் கொடுமையை ஒழித்தல்.
* குழந்தை பருவத்தில் ஏலாமையுறுவதைத் தடுத்தலும், மறு வாழ்வளிக்கும் பொருட்டு தொடக்க நிலையில் கண்டறிதலும்
* பிறவி இதய நோய்களைத் தொடக்க நிலையில் கண்டறிதல்

09-03-1994 ஆம் நாளன்று நமது அன்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட "தொலைநோக்கு திட்டம் 2000"-ன் (தமிழக மகளிர் மேம்பாட்டுக்கான கொள்கை விளக்கம்) துவக்க உரையோடு முடித்துக் கொள்வோம்.

"தமிழ்நாடு அரசு, இம்மாநிலத்தில் மகளிர் முன்னேற்றத்திற்கு முதலிடம் அளிக்கிறது. அதன் பொருட்டு பல வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளது. மகளிர் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பது கருத்து வேறுபாடின்றி அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஓர் உண்மையாகும். மகளிர் முன்னேற்றம் அடைந்துள்ள துறைகளில், அந்த முன்னேற்றம் ஆடவரைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. வேளாண்மைத் தொழிலிலும் அதை சார்ந்த தொழில்களிலும் ஈடுபட்டுள்ள மகளிரின் முன்னேற்றத்தில் தனி கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும். எந்த ஒரு முன்னேற்றமும் முழுமையான பயனுள்ள முன்னேற்றமாக இருக்க வேண்டுமானால், சமுதாயத்தின் அனைத்து மக்களும் சம அளவில் பயனடைய வேண்டும் என்கிற உண்மையை எவரும் மறுக்க முடியாது; மறுக்கவும் மாட்டார்கள். இதனை எய்துவதற்கு ஒரே வழி மட்டுமே உள்ளது. அதாவது, மகளிர், தங்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகளில் முடிவுகளை எடுப்பதிலும், நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதிலும் நேரடியாக பங்கேற்பதாகும். அதற்காகவே, நான் இன்று இக்கொள்கையை

செயல்படுத்துகின்றேன். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டமும், திட்டப் பணிகளும், மகளிரும் ஆடவரும் சமஅளவில் பங்கேற்றுப் பணியாற்றும் வகையிலும் மகளிருக்கும் ஆடவருக்கும் உள்ள பங்கினை மீண்டும் வரையறை செய்கின்ற முறையிலும் வடிவமைக்கப்படும் என்று நான் நம்புகிறேன். கொள்கை முடிவு எடுப்பதில் மகளிர் பலர் ஆர்வத்தோடு ஈடுபடத்தக்கவகையில், அரசும் சமுதாயமும் அரும்பணியாற்றினால்தான் மகளிர் முன்னேற்றம் அடையமுடியும். இச்சீரிய பணியில், அரசின் அனைத்து துறைகளுக்கும் பெரும்பங்கு உள்ளது.

மகளிரின் நிலையான, சீரான மேம்பாட்டிற்கு உதவும் வகையில் பொருளாதார, சமூக வாய்ப்புகளை நல்க வேண்டும். தமிழ்நாட்டு மகளிர், வேறு எந்தப் பகுதியில் உள்ள மகளிரைக் காட்டிலும் எந்த வகையிலும் திறமையில் சளைத்தவர்கள் அல்லர். அவர்களில் பலர் மற்ற பகுதியில் உள்ள மகளிரைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றனர். ஆனால் வறுமையிலும், ஆண் -பெண் என்கிற பாகுபாட்டினாலும் எழுகின்ற பிரச்சினைகளும் எதிர்ப்புகளும் மகளிர் முழுமையான செயல் திறமையுடன் சிறந்து விளங்குவதற்குத் தடையாக உள்ளன.

மகளிர் முன்னேற்றப் பணிகளுக்கு வழிகாட்டியாக அமைகின்ற நம்முடைய கொள்கை அமைப்பு, தமிழ்நாட்டில் வாழுகின்ற மகளிர், சிறார் உட்பட அனுகூலம் பெறாத தொகுதியினரின் நலனைப் பாதுகாத்து வளர்ப்பதில் நமது அரசு தலையாய நாட்டம் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் வாழும், முன்னேற்றம் காணாத, சமவாய்ப்புகளை பெறாத மகளிர், சிறார், ஆகியோரின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகை காண வேண்டும் என்பதையே தலையாயக் கொள்கையாகக் கொண்டு இந்த அரசு நற்பணி ஆற்றி வருகிறது. இத்திட்டம், குழந்தைகள் நலனுக்கான 15 அம்சத் திட்டத்துடன் சீரோடும் சிறப்போடும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

நாம் அனைவரும் உறுதியோடும், கடமை உணர்வோடும், கருத்தொருமித்தும் செயல்பட்டால், பயனுள்ள, நீண்ட கால முன்னேற்றத்திற்கு இந்த நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டு காலம் அடித்தளமாக அமைந்து, மகளிர் முன்னேற்றம் அடைவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்குமென்று நான் உறுதியாக நம்புகிறேன். இக்கனவுகள் நனவாக நாம் அல்லும் பகலும் அயராது உழைத்திட உறுதி கொள்வோமாக".

இணைப்பு–II

[698 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலத்துறை

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திறமையும், ஆற்றலும் ஒருங்கே அமைந்த தலைமையின் கீழும், அவர்களது வழிகாட்டுதலின் படியும் இயங்கி வரும் இவ்வரசு, தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதி திராவிடர் - பழங்குடியினரின் மேம்பாட்டிற்கெனப் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை நிகழ்ந்துள்ளதாக ஒப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு தற்போது ஆதி திராவிடர்களுக்கென்றே தனியாக தொழிற்பேட்டைகளை ஏற்படுத்துதல், இறால் வளர்ப்பு பண்ணைகள் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணைகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் 1994-95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 5.59 கோடி ஆகும். இதில் ஆதி திராவிடர்களின் எண்ணிக்கை 1.07 கோடி ஆகும். இது மொத்த மக்கள் தொகையில் 19.18 சதவீதமாகும். மொத்த மக்கள் தொகையில் பழங்குடியினரின் எண்ணிக்கை 5.74 இலட்சம் ஆகும். அதாவது 1.03 சதவீதம் ஆகும்.

பின்வரும் துறைகளில் ஆதி திராவிடர், பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக இவ்வரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது:

1. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மேம்பாடு;

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாடு;

3. அவர்களுக்கு வீட்டு மனைகள், வீட்டு வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

மேற்சொன்ன இலக்குகளை எய்துவதற்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பணிகளும், வளவாயில்களும் அவற்றுடன்

ஏனைய துறைகளின் வளவாயில்களும் பணிகளும் குறிப்பிட்ட கால அளவிற்குள்ளாக ஒருங்கிணைக்கப்பட்டு நெறிப்படுத்தப்படுகின்றன.

கல்வி:

இம்மாநிலத்தில் எழுத்தறிவு பெற்றோரின் எண்ணிக்கை *64.26* சதவீதமாயிருக்க, ஆதி திராவிடர்களின் எழுத்தறிவு பெற்றோரின் எண்ணிக்கை *46.26* சதவீதமாகும். பழங்குடியினரில் எழுத்தறிவு பெற்றோரின் எண்ணிக்கை *27.89* சதவீதம் ஆகும். சமுதாயத்தில் குறிப்பாக தாழ்த்தப்பட்டோரின் இன்னல்கள் அகல கல்வி ஒன்றே முக்கியமான ஆயுதமாகத் திகழ்வதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மேம்பாட்டிற்கு உயரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்துறையின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் *60* சதவீதத்திற்கும் மேற்பட்ட தொகையானது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மேம்பாட்டிற்கு ஒதுக்கப் பட்டுள்ளதிலிருந்து இது தெரியவரும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மேம்பாட்டுக்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலத்துறையானது, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நான் இவை குறித்து இங்கு சுருக்கமாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பள்ளிகள்:

இத்துறை ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களின் நலனுக்காக மொத்தம் *1,225* பள்ளிகளை நடத்தி வருகிறது. இதன் விவரம் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:-

பள்ளிகளின் எண்ணிக்கையும் அவற்றில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும்:-

தொடர் எண்.	பள்ளிகளின் வகை	பள்ளிகளின் எண்ணிக்கை			பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை		
		ஆதி திராவிட நலப் பள்ளி	அரசினர் பழங்குடியினர் உண்டுறை விடப் பள்ளிகள்	மொத்தம்	ஆதி திராவிட நலப் பள்ளி	அரசினர் பழங்குடியினர் உண்டுறை விடப் பள்ளிகள்	மொத்தம்
(1)		(2)	(3)	(4)	(5)	(7)	(8)
1.	தொடக்கப் பள்ளிகள்	872	182	1054	145828	13067	158895
2.	நடுநிலைப் பள்ளிகள்	57	25	82	21290	3592	24882

(1)		(2)	(3)	(4)	(5)	(7)	(8)
3.	உயர்நிலைப் பள்ளிகள்	49	5	54	25804	1224	27028
4.	மேல்நிலைப் பள்ளிகள்	29	5	34	41965	4986	46951
5.	மாணவர் இல்லங்கள் இணைந்திராத பள்ளிகள்	..	1	1	..	85	85
	மொத்தம்	**1007**	**218**	**1225**	**234887**	**22954**	**257841**

மாணவர் சேர்க்கை:

இம்மாநிலத்தில் கல்வித்துறையும் ஏனைய அமைப்புகளும் நடத்தும் அனைத்து பள்ளிகளிலும் ஆதி திராவிடர்-பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் மொத்தம் 26.37 இலட்சம் பேர், (1993-94 ஆம் ஆண்டில்) பள்ளியில் சேர்ந்து பயிலுகின்றனர். இது இம்மாநிலத்தின் மொத்த மாணவர் எண்ணிக்கையில் 18.80 சதவீதமாகும்.

இந்த இலக்கை அடைவதற்கு சராசரி நிலைக்கும் கீழ் உள்ள ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி, 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்காக சிறப்பு வகுப்புகள் மற்றும் பொதுத் தேர்வுகள் நடத்துதல் ஆகிய பலதரப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் பொதுத் தேர்வுகளை சிறப்பாக எழுதுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இத்துறையின் கீழுள்ள பள்ளிகளிலும், மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இத்துறையால் தயாரிக்கப்பட்ட தனிக் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன, என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். மேலும், மேலே கூறப்பட்டுள்ள எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டதால் ஆதி திராவிட-பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 1992, 1993 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட பொதுத் தேர்வுகளில் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

10-ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 1990-91 ல் 33.6 சதவீதமாக இருந்தது; 1991-92 இல் 57 சதவீதமாகவும், 1992-93–ல் 70 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. ப்ளஸ் 2 வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 1990-91-ல் 37.6 சதவீதமாக இருந்தது;

1991-92-ல் 59 சதவீதமாகவும், 1992-93-ல் 62 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட 40 சதவீதத்திற்கும் அதிகமாகும். இது ஒரு பெரிய சாதனை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நான் திட்டவட்டமாக நம்புகிறேன். இதுபோன்ற நடவடிக்கைகள் 1993-94 ஆம் ஆண்டிலும் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வருடம், சென்ற வருடத்தை விட மேலும் அதிக பயன் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிலும் இத்தகைய நடவடிக்கைகளைத் தொடர் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர் என்று நம்புகிறேன். 1993 மார்ச்-ஏப்ரல் திங்கள்களிலே நடந்த பொதுத் தேர்வுகளில் ஆதி திராவிடர் நலப்பள்ளிகளிலே பயின்ற மாணவர்களின் தேர்வு விழுக்காட்டை மிகக் கணிசமான அளவு உயர்த்துவதில் இப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும், பாட ஆசிரியர்களும் ஆற்றிய சீரிய பணிகளை நன்குணர்ந்த அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அவர்களைப் பாராட்டும் முகத்தால் மாநிலந்தழுவிய அளவில் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில், சிறப்பான தேர்வு விழுக்காடு காட்டிய தலைமை ஆசிரியர்களுக்கும், பிற பாடப்பிரிவு ஆசிரியர்களுக்கும் பணமாக ஊக்கப் பரிசுகளையும் வழங்கிக் கவுரவித்தது. பொதுத் தேர்வுகளில் 75 விழுக்காடும் அதற்கு மேலும் மாணவர்களை வெற்றி பெறச் செய்த மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தலா ரூ. 1,500 ம், 60 விழுக்காடு முதல் 74 விழுக்காடு வரை வெற்றி பெறச் செய்தவர்களுக்குத் தலா ரூபாய் 1,000ம் தங்களது பாடப்பிரிவுகளில் 100-க்கு 100 வெற்றி எய்திட வைக்கும் பாட ஆசிரியர்களுக்கு தலா ரூபாய் 750-ம் வழங்கப்பட்டது.

வசதிகள் ஏற்படுத்துதல்:

இப்பள்ளிகளில் கற்பித்தலையும், கற்றலையும் ஆர்வமுள்ளதாகச் செய்யும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. 1994-95 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ், 13.01 இலட்சம் ரூபாய்ச் செலவில் 3 நடுநிலைப் பள்ளிகளும், 2 உயர்நிலைப்பள்ளிகளும் நிலை உயர்த்தப்படும்.

1994-95 ஆம் ஆண்டில், 2.69 இலட்சம் ரூபாய் செலவில் 454 தொடக்கப்பள்ளிகளுக்கு வரைபடங்களும், விளக்கப்பட அட்டைகளும் வழங்கப்படும். 19 மேல்நிலைப்பள்ளிகளுக்கு 14.82 இலட்சம் ரூபாய் செலவில் மாணவர்கள் அமர்வதற்காக மேசைகளுடன் இணைந்த மர பெஞ்சுகள் வழங்கப் படும். மேலும் 13.49 இலட்சம் ரூபாய்ச் செலவில் 33 பள்ளிகளில் கழிப்பிட வசதிகளும், 6 பள்ளிகளில் குடிநீர் வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

மேல்நிலைப்பள்ளிகளில் அறிவியல் பாடங்களைக் கற்பிக்கும் தரத்தை மேம்படுத்த படிப்படியாக சிறந்த ஆய்வுக்கூட வசதிகள் ஏற்படுத்தப்படும். 1994-95 ஆம் ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் செலவில், மூன்று மேல்நிலைப்பள்ளிகளில் ஆய்வுக்கூட கட்டிடங்கள் கட்டித்தரப்படும்.

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சார்ந்த பாலவாக்கத்தில் 1000 மாணவர்கள் பயின்றுவருகின்ற ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியைச் செப்பனிட்டுப் புதுப்பிக்க 2.88 இலட்சம் ரூபாய் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

சீருடைகள்:

மேற்சொன்ன புதிய திட்டங்களுடன், கூடுதல் நிதி ஒதுக்கத்துடன் வழக்கமான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்துறைப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவியருக்கும் இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படும். மாணவரில்லங்களில் தங்கி நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் பயிலுகின்ற மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் ஒவ்வோராண்டும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. இதற்காக 1994-95 ஆம் ஆண்டில் 225.22 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

பள்ளிக்கட்டிடங்கள்:

இத்துறை நடத்தி வருகின்ற 1225 பள்ளிகளில் 1149 பள்ளிகள் அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன. எஞ்சிய 76 பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த 76 பள்ளிகளுக்கும் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதும், ஏற்கனவே சொந்தக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்ற பள்ளிகளுக்குத் தேவைக்கேற்ப கூடுதல் கட்டிட வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதும் அரசின் நோக்கமாகும். 1994-95 ஆம் ஆண்டிலும் இதற்காக ரூ. 172.69 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடநூல்களுக்கான சிறப்பு வழிகாட்டி நூல்கள்:

மாணவர்களுக்கு இலவசமாக பாட நூல்களுக்குரிய சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கும் திட்டம் பற்றியும் அதனால் பள்ளிகளில் மாணவர் தேர்ச்சி வீதம் உயர்ந்துள்ளது பற்றியும் நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். இதற்காக 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலுகின்ற 22,600 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடையும் வகையில் 1993-94 ஆம் ஆண்டில் 6.31 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1994-95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் பயனாக 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் நமது பள்ளி மாணவர்களின் தேர்ச்சி வீதம் அதிகரித்துள்ளது என்பதையும், இத்திட்டம்

LEGISLATURE ... TRUTH ALONE TRIUMPHS

மாணவர்களிடையே பிரபலமடைந்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

படிப்புதவித் தொகைகளும் சலுகைகளும்:

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை என்ற வகையில் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு:

மெட்ரிக் வரையிலான படிப்பிற்கான படிப்புதவித் தொகை 6-ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கல்விக் கட்டணங்கள் மற்றும் தேர்வுக் கட்டணங்கள் முறையே கல்வி நிறுவனங்களுக்கும் தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் நேரடியாகச் செலுத்தப்படுகிறது. இக்கல்வி நிறுவனங்களுடன் இணைந்த மாணவரில்லங்களில் தங்கிப் பயில்வதற்கு படிப்புதவித் தொகையாக ஆண்டொன்றுக்கு தலா 250 ரூபாயிலிருந்து 350 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் இதற்காக 170.68 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

மெட்ரிக் படிப்பிற்கு மேலான படிப்பு:

மெட்ரிக் படிப்பிற்கு மேலான படிப்பிற்கான படிப்புதவித் தொகைகளை பொதுவாக இரு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன:-

1. மத்திய அரசு பொறுப்பேற்கும் படிப்புதவித் தொகைகள்.

2. மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகை.

1. மத்திய அரசு பொறுப்பேற்கும் படிப்புதவித் தொகைகள்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகை பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகளாவன:

(அ) பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 24,000 க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்; மேலும்

(ஆ ஒரு குடும்பத்தில் இரு குழந்தைகள் மட்டுமே இச்சலுகை பெறத் தகுதியுடையோராவார்.

இத்திட்டத்தின் கீழ் மாணவர் இல்லங்களில் தங்கியிராமல் வசிப்பிடத்திலிருந்து வந்து செல்லும் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 65-லிருந்து ரூ. 125-ம், மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 115 லிருந்து ரூ. 280 ம் பராமரிப்புப் படியாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு

தோராயமாக ஆதிதிராவிடர்/பழங்குடியைச் சேர்ந்த 1.13 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்.

2. மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகை.

மாநில அரசுத்திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகை பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகளாவன:-

அ) பெற்றோரின்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் 15000 ரூபாய்க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

ஆ கிருத்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களும்; ஆதிதிராவிட/பழங்குடியினர் பெற்றோர்களின் மூன்றாவது மற்றும் அதற்கு அடுத்த குழந்தைகளும் நிதியுதவி பெறத் தகுதியுடையவராவர். 1994-95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 50.41 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

கடன் படிப்புதவித் தொகைகள்:

தொழிற்கல்வி பயின்று வந்த ஆதிதிராவிடப், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பலர், மாணவரில்லச் செலவுக் கட்டணங்கள் முதலியனவற்றைச் செலுத்தமுடியாமல் பெருமளவுக்கு நிலுவையில் இருந்தமையால், கல்வி நிறுவனத் தலைவர்கள் அவர்களை மாணவரில்லங்களிலிருந்து வெளியேற்றுவது, பல்கலைக்கழகத் தேர்வுகள் முதலியனவற்றை எழுதுவதற்குத் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் வழங்க மறுப்பது போன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலை பலமுறை ஏற்பட்டது. எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் அனுபவித்து வந்த இதுபோன்ற இடர்ப்பாடுகளைப் போக்கும் பொருட்டு, ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவும் வகையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலன் கடன் படிப்பு உதவித் தொகைத் திட்டம் என்ற திட்டத்திற்கு அரசு 1972-ல் அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின்படி மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பவியல் முதலிய பாடங்களில் பட்டப்படிப்பும், பட்ட மேற்படிப்பும் பயின்று வருகின்ற ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை வழங்கிய மெட்ரிக் படிப்புக்கு மேலான உயர் படிப்பிற்கான மத்திய/மாநில அரசின் படிப்புதவித் தொகைகளைப் பெறத் தகுதியுடையவர் ஆவர். மாணவர்களுக்கு வழங்கப்படும் கடன் படிப்புதவித் தொகையை அவர்கள் படித்துவருகின்ற படிப்பின் வகைக்கேற்றபடி மாதம் ஒன்றுக்கு ரூ. 750 ரூபாயிலிருந்து ரூ. 1,750 வரையில் இருக்கும். இதற்காக 1994-95 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்காக 87.35 இலட்சம் ரூபாயும்,

கிருத்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு 3.61 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற சலுகைகள்:

1. கல்வித்துறை, 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் அனைவருக்கும் பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்குகிறது.

2. பொதுப் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆகிய வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 2.54 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். இதற்காக 1994-95 ஆம் ஆண்டில் 171.42 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. பொதுப் பள்ளிகளில் 4 முதல் 10 வரையிலான வகுப்புகளில் பயின்று வருகின்ற மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப் படுகின்றன. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்.

மேற்சொன்ன சலுகைகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இச்சலுகைகளைப் பெறுவதற்கு வருமான வரம்பு ஏதும் நிர்ணயிக்கப் படவில்லை.

மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகையைப் பெற மாணவர்களின் பெற்றோரின்/பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு 15,000 ரூபாய் ஆகும்.

சுகாதாரமற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளோரின் குழந்தைகளுக்குச் சிறப்பு உதவித் தொகைகள்:

சுகாதாரக்கேடான தொழில்களில் அதாவது கழிவறை சுத்தம் செய்தல், தோல்பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் பெருக்குதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளோரின் குழந்தைகளுக்கு சாதிமத வேறுபாடின்றி மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர் களுக்கும் அவற்றில் தங்கியிராமல் இருப்பிடத்திலிருந்து வந்துசெல்லும் மாணவர் களுக்கும் இந்தப் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 500 ரூபாய் ஒட்டு மொத்த மானியத் தொகையாகவும் வழங்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 47.98 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் பயனடையும் வகையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இலவசக் கல்வி:

ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கிருத்துவராக மதம் மாறிய ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், அவர்களது பெற்றோரின் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் பட்ட மேற்படிப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கப் படுகிறது. படிப்புதவித் திட்டத்தின் கீழ் பயன்பெறாத மாணவர்கள், சிறப்புக் கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முதலியவற்றைச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் +1, +2, பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்., முதலிய வகுப்புக்களில் பயிலுகின்ற மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணங்கள் ஆகியவற்றை அரசே ஏற்றுக் கொள்கிறது. இதற்கென 1994-95 ஆம் ஆண்டில் 39.67 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் படிப்புப் பயில்வோரும், பெற்றோரின்/ பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 15,000-ஐ மிகாத குடும்பத்தின் முதல் பட்டதாரிகளாக இருப்பவர்களுமான ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

புத்தக வங்கி:

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மற்றும் பல்தொழில் பயிலக படிப்புகள் போன்ற தொழில் படிப்பு பயின்று வருகின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவும் பொருட்டு, கல்லூரிகளில் புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசு படிப்புதவித் தொகைகளைப் பெற்று வருகின்ற மாணவர்கள், இப்புத்தக வங்கியைப் பயன்படுத்திப் பாடப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு இரண்டு மாணவர்களுக்கு "ஒரு தொகுதி புத்தகங்கள்" என்ற அடிப்படையில் புத்தகங்கள் வாங்கப்பட்டு கல்லூரி நூலகங்களில் வைக்கப்படுகின்றன. மருத்துவம் மற்றும் பொறியியல் பாடங்களைச் சேர்ந்த ஒரு தொகுதி புத்தகங்களின் விலை 7,500 ரூபாய் ஆகும். கால்நடை மருத்துவப் பாடத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி புத்தகங்களின் விலை ரூ. 5,000 ரூபாய் ஆகும். வேளாண்மைப் பாடத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி புத்தகங்களின் விலை 4,500 ரூபாய் ஆகும். பல்தொழிற்கல்வி பயிலகப் பாடங்களைச் சேர்ந்த ஒரு தொகுதி புத்தகங்களின் விலை 2,400 ரூபாய் ஆகும். இதற்குரிய செலவை மத்திய அரசும், மாநில அரசும் சம அளவில் ஏற்றுக்கொளகின்றன. இதற்கென 1994-95 ஆம் ஆண்டில் 32.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனைய ஊக்கத் தொகைகள்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தும் நோக்குடன், அவர்களுக்குப் பல ஊக்கத் தொகைகள் அளிக்கப்படுகின்றன. அவையாவன:-

கல்வித் தகுதி தனி மானியம்:-

எஸ்.எஸ்.எல்.சி. (பத்தாண்டு பாட முறைத்திட்டம்) தேர்விலும், மேல்நிலைப்பள்ளி இறுதியாண்டுத் தேர்விலும் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெற்று மேற்கொண்டும் கல்வியைத் தொடர்ந்து பயில விழையும் மாணவர்களுக்கு கல்வித் தகுதி தனி மானியமாக ஆண்டொன்றுக்கு 300 ரூபாய் ஒரே தடவையில் வழங்கப்படுகிறது. இதற்கென 1994-95 ஆம் ஆண்டில் 34.04 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

பரிசுத் தொகை:

பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற் கல்விப் படிப்பு வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களில் தேர்வில் முதல் முயற்சியிலேயே 60 சதவீதம் மற்றும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:-

பாடம். (1)	தொகை. (2) (ரூபாய்)	பயனடையும் மொத்த மாணவ மாணவியர். (3)
1. பட்டப் படிப்பு	1,000	500
2. பட்ட மேற்படிப்பு	1,250	300
3. தொழிற்கல்வி பாடமுறைகள்	1,500	200

ஒரே தடவையாக வழங்கப்படும் மேற்சொன்ன பரிசுத் தொகைகளுடன் ஆண்டுதோறும் பின்வரும் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. அவையாவன:-

திட்டம்.	வழங்கப்படும் பரிசுகளின் எண்ணிக்கை.	தொகையும் காலமும்.
ப்ளஸ் 2 பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலாவது மதிப் பெண்களைப் பெறும் ஆதிதிராவிடர் மாணவ ருக்கு காந்தி நினைவு பரிசுத் தொகை வழங்குதல்.	ஒவ்வொரு மாவட்டத் திலிருந்தும் மேற் கொண்டு கல்வியைத் தொடரும் ஒரு மாணவர், ஒரு மாணவி தெரிந் தெடுக்கப்படுவர்.	முதலாவது ஆண்டுக்கு 1,500 ரூபாயும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு 1,000 ரூபாயும் வழங்கப் படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ப்ளஸ் 2 பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலாவது இடம் பெறுகின்ற கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு பெற்றோரின் வருவாய் மற்றும் மாணவரின் கல்வித் தேர்ச்சித் தகுதி அடிப் படையில் படிப்புதவித் தொகை அளித்தல்.	ஒவ்வொரு மாவட்டத் திலிருந்தும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிடையே இருந்து மேற்படிப்பைத் தொடரும் மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இப்படிப்புதவித் தொகை அளிக்கப்படுகிறது.	முதலாவது ஆண்டிற்கு 1,500 ரூபாயும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு 1,000 ரூபாயும் வழங்கப் படுகிறது.
10 வது வகுப்புக்குரிய பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலாவது மற்றும் இரண்டாவது இடம் பெறுகின்ற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர் களுக்கும் சிறந்த மாணவ ருக்கான பரிசுத் தொகை வழங்குதல்.	ஒவ்வொரு மாவட்டத் திலிருந்தும் ஆதிதிரா விடர்/பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்த மாணவர் களிடையே இருந்து மேற் படிப்பைத் தொடரும் மாணவர்கள் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும் இத்தொகை அளிக்கப் படுகிறது.	முதலாவது ஆண்டிற்கு 800 ரூபாயும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு 960 ரூபாயும் வழங்கப் படுகிறது.

மாணவரில்ல வசதிகள்:

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மக்களின் பெரும்பாலானோர் கிராமப் பகுதிகளிலும், ஓரளவு நகரத்தன்மை வாய்ந்த பகுதிகளிலும் வனப் பகுதி களிலும் வாழ்ந்து வருகின்றனர். எனவே அவர்களில் பெரும்பான்மை யினோர் கல்வி நிலையங்கள் இருக்கும் இடங்களுக்கு எளிதில் செல்ல முடியவில்லை. இத்துடன் ஆதிதிரா்விடர், பழங்குடியினர் மாணவர்களது பெற்றோர்கள் பொதுவாக கல்வியறிவில்லாதவர்களாகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களாகவும் இருப்பதால், தங்களது குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புவதற்குப் பதிலாக தங்களது குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள அவர்களைப் பயன்படுத்தவே விரும்புகின்றனர். அவர்கள் வசிக்கும் வீடுகளில் விளக்கு வசதி, இடம், உணவு முதலிய வசதிகள் போதிய அளவிற்கு இல்லாமையாலும், வசதிகள் சில அறவே இல்லாமையாலும், ஏழ்மை நிலையில் உள்ள ஆதிதிராவிடர், பங்குடியினர் குழந்தைகளுக்குக் கல்வியறிவு கிடைத்தற்கரியதாகவே உள்ளது. எனவே இந்தக் குழந்தைகள் எந்தவொரு இடர்ப்பாடுமின்றி கல்வி பெறும் பொருட்டு மாணவர் இல்லங்களைக் கட்டுவதில் தமிழ்நாடு அரசு கருத்தாக இருக்கிறது. தற்போது ஆதிதிராவிடர் மாணவ

மாணவியர்களுக்கென 928 மாணவரில்லங்களையும் பழங்குடி மாணவ மாணவியர்களுக்கென 124 மாணவர் இல்லங்களையும் இத்துறை நடத்தி வருகிறது. இந்த மாணவரில்லங்களில் ஆதிதிராவிடர் அல்லாத மாணவர்களுக்கும் இடவசதி அளிக்கப்படுகிறது. இதனால் பிறவகுப்பினரைச் சேர்ந்தவர்களும் இந்த மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் வகையில் யாவரும் கேளிர் என்னும் இயல்புடன் இந்த இல்லங்கள் இயங்கி வருகின்றன. இத்துறை நடத்தி வருகின்ற இந்த மாணவரில்லங்களில் தற்போது 71,690 மாணவர்கள் தங்கியுள்ளனர். விவரங்கள் வருமாறு:-

மாணவரில்லங்களின் எண்ணிக்கையையும் அவற்றில் தங்கியுள்ளோரின் எண்ணிக்கையும் காட்டும் அட்டவணை

வகை (1)	மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை. (2)	தங்கியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை. (3)	மாணவியர் இல்லங்களின் எண்ணிக்கை. (4)	தங்கியுள்ள மாணவிகளின் எண்ணிக்கை. (5)	மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை. (6)	மொத்தம் (7)
உயர்நிலைப் பள்ளி	596	44422	281	20039	877	64461
கல்லூரி	44	5273	19	1081	63	6354
ஐ.டி.ஐ.	10	807	2	68	12	875
மொத்தம்	**650**	**50502**	**302**	**21188**	**952**	**71690**

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதை ஒட்டி, உயர்நிலைப்பள்ளி மாணவரில்லங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு வழங்கி வரும் உணவுக் கட்டணங்களை அரசு மாதமொன்றுக்கு 15 ரூபாயும், கல்லூரி மற்றும் ஐ.டி.ஐ. மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு 20 ரூபாயும் என 1993 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து உயர்த்தியுள்ளது. இதனையடுத்து மாணவர் இல்லங்களில் பின்பற்றப்படும் உணவு கட்டண வீதங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

(மாதமொன்றுக்கு)

1.	உயர்நிலைப் பள்ளி மாணவரில்லங்கள்	ரூ.	120
2. (i)	கல்லூரி மற்றும் ஐ.டி.ஐ - சென்னை மாநகரில் உள்ளவை	ரூ.	180
(ii)	பிற இடங்களில் உள்ள மாணவரில்லங்கள்	ரூ.	175

மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் உயர்நிலைப் பள்ளி மாணவர் ஒருவருக்கு ரூ. 5 என்ற வீதத்தில், சோப்பு, சீயக்காய், எண்ணெய் முதலிய

குளியல் சாதன பொருட்களும் இரண்டு ஜோடி சீருடைகளும், இலவசமாக வழங்கி வருகின்றன. 1994-95 ஆம் ஆண்டில், ஒவ்வொரு மாணவரில்லத்திலும் 50 பேர் தங்கக்கூடிய வசதியுடன் மேலும் 20 புதிய மாணவரில்லங்கள் 44.12 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்க கருதப்பட்டுள்ளது. மாணவரில்லங்களில் இடவசதி கோரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இத்தேவையை ஓரளவாவது நிறைவு செய்யும் பொருட்டு, புதிய மாணவரில்லங்களை ஏற்படுத்துவதுடன், தற்போதுள்ள மாணவரில்லங்களில் தங்கியிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும் அரசு ஒவ்வோராண்டும் அதிகரித்து வருகிறது. அதன்படி 1994-95 ஆம் ஆண்டில் மேலும் கூடுதலாக 500 மாணவர்களுக்கு இடவசதி அளிக்கப்படும். இதற்காக 1994-95 ஆம் ஆண்டில் 6.33 இலட்சம் ரூபாய் வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மாணவரில்லங்களில் சமையற் கூடங்களை சுகாதாரமான முறையில் வைத்திருக்க அவற்றை நவீனப்படுத்தி, செலவைக் குறைக்கும் நோக்குடன் மாணவரில்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு, மாவரைக்கும் எந்திரங்கள் ஆகியவை படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன. 1994-95 ஆம் ஆண்டில் 9.00 இலட்சம் ரூபாய் செலவில் 150 மாணவரில்லங்களுக்கு மாவரைக்கும் எந்திரங்கள் வழங்கப்படும். அனைத்து மாணவரில்லங்களிலும் நூலக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களின் நலனுக்காக தொண்டு நிறுவனங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் நிதி உதவியுடன் மாணவர் இல்லங்களை நடத்தி வருகின்றன. இம்மாநிலத்தில் இதுபோன்ற மாணவர் இல்லங்கள் 42 உள்ளன. இத்தகைய மானியம் பெறும் தனியார் மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிடர் மாணவர் ஒவ்வொருக்குமான உணவு செலவுத் தொகையை 70 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக அரசு உயர்த்தியுள்ளது.

அரசுக்கட்டிடங்களிலும் வாடகைக் கட்டிடங்களிலும் உள்ள மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:-

	ஆதிதிராவிடர் இல்லம்			பழங்குடியினர் இல்லம்		
	மாணவர்	மாணவியர்	மொத்தம்	மாணவர்	மாணவியர்	மொத்தம்
	(1)	(2)	(3)	(1)	(2)	(3)
1) அரசுக் கட்டிடங்கள்	229	165	394	15	8	23
2) வாடகைக் கட்டிடங்கள்	405	129	534	1	-	1
மொத்தம்	**634**	**294**	**928**	**16**	**8**	**24**

அனைத்து வசதிகளும் கொண்ட மாணவரில்லங்களைக் கட்டுவதற்குரிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக 1993-94 ஆம் ஆண்டு ரூ. 300 இலட்சம் ஒதுக்கப்பட்டு 13 மாணவர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. 1994-95 ஆம் ஆண்டு இதற்காக ரூ. 300 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார மேம்பாடு:-

ஆதிதிராவிடர்களில் பெரும்பான்மையினர் தங்கள் வாழ்க்கைக்கு வேளாண்மையையும் அது தொடர்பான பணிகளையும் சார்ந்திருக்கின்றனர். எனவே, ஆதிதிராவிடர்கள் அவர்கள் சார்ந்திருக்கும் தொழில் மூலம் அவர்களுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு நிதியுதவி அளிப்பது உடனடித்தேவையாகும். இதனை நன்கு உணர்ந்து அவர்களுக்காகப் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:-

(1) உழவு மாடுகள் வாங்க உதவித் தொகை

ஆதிதிராவிடர்/பழங்குடியினர், கிறித்துவ மதத்திற்கு மதம்மாறிய ஆதிதிராவிட விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன், அரசு, உழவு மாடுகள் வாங்க, உயரளவு ரூ. 1500 என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, உழவு மாடுகளின் விலையில் 50 சதவீதத்தை உதவித் தொகையாக வழங்குகிறது. எஞ்சிய தொகையை, வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற ஏற்பாடு செய்யப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர்களும் பழங்குடியினரும் இப்பயனைப் பெறுவதற்காக ரூ. 15.46 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) தொழில்நுட்ப ரீதியில் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவித்தொகை

இத்திட்டத்தின்கீழ் தொழில்நுட்ப ரீதியில் பயிற்சி பெற்றவர்கள் அல்லது திறமைவாய்ந்தவர்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள இஸ்திரி பெட்டிகள், தையல் எந்திரங்கள், தோல் தையல் இயந்திரம் முதலியவற்றை இலவசமாகப் பெறத் தகுதியுடையவர்களாவர். 1994-95 ம் ஆண்டு இத்திட்டங்களுக்கு ரூ. 17.06 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

ஆதிதிராவிடர்கள், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தவும் வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்கவும் கிராம அளவிலான பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கறவை மாடுகளை வாங்குவதற்கு, மாடுகளுக்கான விலையில் 50 சதவீதம், அதாவது, ரூ. 2,250-ஐ அவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறவும் ஏற்பாடு

செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும், இரு மாடுகளை வாங்குவதற்கு மேற்சொன்ன நிதியுதவியினைப் பெறத் தகுதியுடைவராவர். ஆண்டொன்றுக்கு ரூ. 6,400 என்ற வருமானத்திற்கு உட்பட்டவர்கள் மட்டுமே இந்நிதியுதவியினைப் பெறத் தகுதியுடையவர்களாவர். 1993-94 ஆம் ஆண்டு செலவிட ரூ. 51.50 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டு, இதற்காக ரூ. 51.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(4) சிறுதொழில் செய்ய நிதியுதவி

ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் சிறுதொழில்கள் வைத்து செய்வதற்கு நிதியுதவி அளிக்கப்படுகின்றது. இந்நிதியுதவி, 50 சதவீதம் உதவித் தொகையையும் 25 சதவீதம் விளிம்புத் தொகையையும் எஞ்சிய 25 சதவீதம் வங்கிக் கடனையும் கொண்டதாகும். இத்திட்டம் "தாட்கோ" மூலம் செயல்படுத்தப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் இதற்காக ரூ. 14.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) குடிசைத் தொழில்கள்

குடிசைத் தொழில் பயிற்சி மையங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இம்மையங்களை நடத்துவதற்கு சமூக நலத்துறை இயக்குநர் செலவிடுவதற்குத் தேவையான நிதியுதவியை ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை வழங்குகிறது. 1994-95 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர்களின் பயிற்சிக்காக ரூ. 7.60 இலட்சமும், பழங்குடியினரின் பயிற்சிக்காக ரூ. 1.49 இலட்சமும், ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறையில் தையல்-நெசவுப் பயிற்சி மையமொன்றைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பயிற்சியும் வேலைவாய்ப்பும்:

1. அரசுப்பணிகள், கணிப்பொறி திட்டமிடல், காவல்துறை ஆயுதம் தாங்கியபடை, கடல் வானொலித் தொடர்பு அதிகாரி பயிற்சி, செவிலிப்பணி உதவியாளர் பயிற்சி, விமானப்பராமரிப்புப் பொறியியல், மோட்டார் வண்டிகள் குறித்த பொறியியல், ஹோட்டல் நிர்வாகம் போன்ற அமைப்பு ரீதியிலான நவீன துறைகளில் அதிக அளவு வேலைவாய்ப்பினை ஏற்படுத்த பயிற்சித் திட்டங்கள் நடத்தப் படுகின்றன. படித்த வேலைவாய்ப்பற்ற ஆதிதிராவிட இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்குடன் இப்பயிற்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்

2. ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த சட்டம்பயின்ற பட்டதாரிகளுக்கு 4 ஆண்டுகட்கு நீதித்துறை நிருவாகத்தில் பயிற்சியளிக்கும் திட்டமொன்றை இந்த அரசு செயல்படுத்திவருகிறது. அரசு ஏற்படுத்தி குழுவாயிலாக பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த மூத்த வழக்குரைஞரின் கீழ் பயிற்சிபெற அனுப்பிவைக்கப்படுகின்றனர். 17 வழங்குரைஞர்கள் அடங்கிய முதல் தொகுதியினர் 1992 அக்டோபரில் தங்கள் பயிற்சியை முடித்துள்ளனர்.

37 வழக்குரைஞர்கள் கொண்ட இரண்டாவது தொகுதியினருக்கு 1989-90-ல் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. இச்செலவு மத்திய சிறப்பு நிதியுதவியிலிருந்து ஏற்கப்படுகிறது.

பயிற்சி அளிக்கும் மூத்த வழக்குரைஞருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2500/- மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. சட்டம்பயின்ற பட்டதாரி ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு ரூ500/- பயிற்சியுதவித்தொகை வழங்கப்பட்டது. தற்போது இந்த பயிற்சியுதவித் தொகை 18-11-93 முதல், மாதமொன்றிற்கு ரூ. 750/- என்று உயர்த்தப்பட்டுள்ளது. மூன்றாவது தொகுதியினருக்கான பயிற்சியைத் தொடங்குவதற்குரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஆதிதிராவிட வகுப்பிலிருந்து கிருத்துவர்களாக மதம்மாறியவர்கள் ஆகியோர், வழக்குரைஞர் தொழிலை மேற்கொள்ள இயலும் வண்ணம், மாநிலத்திட்டத்தின்கீழ் ரூ. 750 கடனாகவும் ரூ. 750 உதவித் தொகையாகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்து மதத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த சட்டம்பயின்ற பட்டதாரிகளுக்கு, அவர்கள் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்க இயலும் வகையில், மத்திய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் மனுதாரர் ஒருவருக்கு உதவித் தொகையாக ரூ3000 நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இதுவரையில், 340 மனுதாரர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பட்டயக் கணக்கர்களுக்கு நிதியுதவி அளித்தல்

ஆதிதிராவிடர்/பழங்குடியினர், கிருத்துவர்களாக மதம்மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு, பட்டயக்கணக்கர் பயிற்சிக்குச் செல்வதற்காகச் சிறப்புப்படிப்பு உதவித்தொகை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக 1994-95 ஆம் ஆண்டு ரூ. 0.05 இலட்சம் நிதிஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 25]

போட்டித்தேர்விற்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்

(3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆயுள் காப்பீட்டுக்கழகம், வங்கிப்பணித் தேர்வு வாரியம், பணியாளர் தேர்வாணையம் போன்றவை நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள விரும்புகின்ற மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(4) ஆதி திராவிட மாணவர்களுக்கு மருத்துவம், பொறியியல் போன்றவற்றில் நுழைவுத் தேர்வு எழுதுவதற்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

(5) முன் தேர்வு பயிற்சி மையம், சென்னை: இ.ஆ.ப., இ.கா.ப. போன்ற அனைத்திந்திய பணியில் சேருவதற்கு ஆர்வமுள்ள 60 மாணவர்களுக்கு இம்மையத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1993-94-ல் இந்த மையத்தில் 60 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்கள் 1994 ஜூலையில் நுழைவுத் தேர்வை எழுதுவர். இதுவரையில் 27 தொகுதியினர் பயிற்சி பெற்று இறுதியாக 53 பேர் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டு வசதி திட்டம்

ஆதி திராவிடர், பழங்குடியினர் குடும்பங்கள் தாங்கள் வசிப்பதற்கான குடியிருப்பு கட்டுவதற்குரிய நிதி ஆதாரம் எதையும் பெற்றிராதவர்வளுக்கு வீடுகள் கட்டித் தர வகை செய்வது உடனடித் தேவையாகும். இப் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தை 1974-ல் ஏற்படுத்தியது. இக் கழகம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து 1988-89 வரையில் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் 78,718 வீடுகளைக் கட்டி, ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது. 1989-90-லிருந்து ஊரக வளர்ச்சித் துறை, ஆதி திராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகளைக் கட்டி வருகின்றது. ஆதி திராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் எண்ணிக்கை வருமாறு:-

ஆண்டு	வீடுகளின் எண்ணிக்கை
1989-90	41,666
1990-91	47,260
1991-92	40,760
1992-93	14,409
1993-94	33,758

இத் துறை கான்கிரீட் மேற்கூறைகளை அமைத்துக் கொடுப்பதற்காக ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 6,500 வழங்குகிறது. 1994-95 ஆம் ஆண்டு இதற்காக, ரூ. 16.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டு மனைகளையும் வழங்கியுள்ளது. கிராமப் பகுதிகளில் 1993 செப்டம்பர் வரையில், வீட்டு மனையாக ஆதி திராவிடர் குடும்பம் ஒவ்வொன்றிறுக்கும் 3 செண்ட் நிலம் வழங்கப்பட்டது.

நிலத்திற்கு இருக்கும் அரிய தேவையைக் கருத்திற்கொண்டு 1993 அக்டோபரிலிருந்து வீட்டுமனையாக வழங்கப்பட வேண்டிய நிலத்தின் அளவை அரசு பின்வருமாறு மாற்றியமைத்துள்ளது;-

	பகுதி	பரப்பு
1.	மாநகராட்சி எல்லைப்பகுதி	1 செண்ட்
2.	நகராட்சி பகுதி	1½ செண்ட்
3.	கிராமப்புற பகுதிகள்	2 செண்ட்

வீட்டுமனை வழங்குவதற்கான வருமான வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,500 என்பதிலிருந்து ரூ. 6,500 ஆக உயர்த்தப்பட்டது. 1993-94 வரையில் கையகப்படுத்தப்பட்ட நிலத்திலிருந்தும், புறம்போக்கு நிலத்திலிருந்தும் 1.46 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ல் 75,000 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக ரூ. 6.83 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடிப்படை வசதிகள்:

ஆதி திராவிடர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு, குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், பள்ளிக் கூட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை ஆதி திராவிடர்-பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளுக்கு செய்து கொடுக்க வேண்டியது முற்றிலும் அவசியமானதாகும். மேற்சொன்ன அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைகளின் பேரில் ஆதி திராவிடர் பழங்குடியினர் காலனிகள் அனைத்திலும் விரிவான ஆய்வு, மேற்கொள்ளப்பட்டடுள்ளது என்பதை இந்த அவையில் தெரிவித்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆய்வு முடிக்கப்பட்டு களப்பணி பதிவேடுகளிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதனிடையே, காலனிகளுக்குக் குடிநீர் வசதி, இடுகாட்டு வசதி, காலனிகளுக்கு நடைபாதை வசதி போன்றவற்றை செய்து கொடுக்க 1994-95-ல் ரூ. 76.63 இலட்சம் செலவிடப்படும்.

1994 ஏப்ரல் 25]

சிறப்பு நடவடிக்கைகள்

தீண்டாமை ஒழிப்பு

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நீதியும் சமத்துவமும் கிடைக்க வேண்டும் என்பதற்காக 1955-ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தை முறையாகவும், திறம்பட்ட வகையிலும் நிர்வகிக்க, தமிழ்நாட்டில் 25 நடமாடும் காவல் படைப் பிரிவுகளும் 4 தனி நீதி மன்றங்களும் 8 வழக்குத் தொடரும் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்திய அரசால் இயற்றப்பட்ட 1989-ஆம் ஆண்டு ஆதி திராவிடர்/ பழங்குடியினர் (வன்முறைகள் தடுப்பு) சட்டம் 31-1-1990-ம் நாளன்று செயலுக்கு வந்தது. இச் சட்டம் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு மேற்சொன்ன சட்டத்தின் தமிழாக்க நகலை அச்சிடுவதற்கு, இந்தியக் குடியரசு தலைவரின் இசைவினைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு சட்ட துறையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தீண்டாமை என்னும் சமூகக் கேடு, நயத்தத்த நற்பண்பு, சீர்காண் நன்மதிப்பு, நீதி ஆகிய மனிதப் பண்புகளுக்கு முரண்பட்டதாகும். இக் கொடிய பழக்கம், சமுதாயம் முழுமைக்கும் ஊறு விளைவிக்கக் கூடியதாகும். ஒவ்வோராண்டும் ஜனவரித் திங்கள் 24-ஆம் நாளிலிருந்து 30-ஆம் நாள் வரை தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. இது, தீண்டாமையினால், ஏற்படக்கூடிய சமூகக் கேடுகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாக கருதப்படுகிறது. தேவையான பணியாளர்கள், சாதனங்கள், ஆகியவற்றைக் கொண்ட பிரச்சாரப் பிரிவுகள் நமது மாநிலத்தில் தீண்டாமையை ஒழிப்பது குறித்து மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றன.

இச் சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்தியதாலும், ஏனைய சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாலும் தீண்டாமை நிலவும் கிராமங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்துள்ளது. இப் பகுதிகளில் இனக் கலவரங்களைத் தடுக்கவும், இன ஒற்றுமையை வளர்க்கவும், சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறப்பு நடவடிக்கைகளாவன;

1. தீண்டாமைக் கொடுமை பற்றி மக்களுக்குப் பல்வேறு விளம்பரச் சாதனங்களின் மூலம் அறிவுறுத்துதல்.
2. இக் கிராமங்களில் வாழும் ஏனைய மக்களோடு இயல்பாகக் கூடி வாழ உதவும் வகையில் இப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.

3. சமபந்தி போஜனத்திற்கு ஏற்பாடு செய்தல்

4. அமைதியை நிலைநாட்டவும், நல்லிணக்க முறையில் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ளச் செய்யவும், மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்களை அமைத்தலும்.

5. பொதுவாக இச்சமூகத்தினருக்கு உதவும் வகையில் பல்வேறு தொண்டு நிறுவனங்களை ஊக்குவித்து தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாகச் செயல்படும் 3 கிராமங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவற்றுக்குப் பரிசாக வானொலிப் பெட்டிகள் ஒலிபெருக்கியுடன் வழங்கப்படுகின்றன.

இட ஒதுக்கீடு விதிகள்:

அரசுப் பணிகள், பொதுத் துறை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களில் எழும் காலியிடங்கள் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் முறையே 18 சதவீதம் 1 சதவீதம் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

அரசுப் பணிகளில் ஏ, பி, சி, டி பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ள பதவிகளுக்கு நேரடி நியமனங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட பதவிக்கான இடங்களைப் பிற வகுப்பினரைக் கொண்டு நிரப்புவதற்கு 1-4-1989 முதல் அரசு தடை விதித்துள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலை வகுப்புகளுக்கு பிரிவு வாரியாக இட ஒதுக்கீடு செய்வதற்கு 1994 ஜனவரியில் உத்திரவிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள காலியிடங்களில் நிரப்பப்படாமலுள்ள இடங்களை நிரப்புவதற்குச் சிறப்பு முயற்சி மேற்கொள்ள 1993 ஜூலையில் உத்திரவிட்டுள்ளது.

பத்து அம்சத் திட்டம்.

1991-92 ஆம் ஆண்டு முதல் தொடங்கி ஐந்தாண்டுக் கால அளவில் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர்களின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கான சிறப்பு பத்து அம்ச திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்கள். அத்திட்டத்தின் மூலம் எய்தப்பட்ட இலக்கு மற்றும் சாதனைகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஒவ்வொரு மாதமும் நுணுக்கமாகக் கண்காணிக்கப் படுகிறது. இத்திட்டம் 1994-95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து தீவிரமாக செயல்படுத்தப்படும்.

DTP–53/94-61

10 அம்ச திட்டத்தைச் செயல்படுத்துவதில் 1993-94 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பணி முன்னேற்றம் மற்றும் 1994-95 ஆம் ஆண்டுக்குரிய இலக்குகள்.

பத்து அம்சம் திட்டம்	1991-92 முதல் 1995-96 வரையிலான ஐந்து ஆண்டுக்குரிய மொத்த இலக்கு	1993-94 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப் பட்ட இலக்கு	சாதனை	1994-95 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு
1.	2.	3.	4.	5.
1. பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 3.5 இலட்சம் ஆதி திராவிட குடும்பங்களுக்கு உதவி செய்தல்.	3.5 இலட்சம் குடும்பங்கள்	70,000	1,08,022	65,000
2. நிலம் சொந்தமாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு பாசன வசதி அளிக்க இலவசமாக 10,000 கிணறுகள் தோண்டுதல்.	10,000 ஆதி திராவிட குடும்பங்களுக்கு 10,000 கிணறுகள்	2,000	4.073	1,000 (ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம்)
3. ஆதி திராவிடர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 5000 ஆதி திராவிடர்/பழங்குடியினர் சொந்தமாகத் தொழில் தொடங்க அவர்களுக்கு உதவி செய்தல்.	5,000 ஆதி-திராவிடர்/ பழங்குடியிர்	1,500	1,500	1,500

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)
4. ஐ.டி.ஐ. கல்வி தகுதி பெற்ற 5000 வேலையற்ற ஆதி-திராவிடக்களுக்கு தொழிற்சாலை களில் பயிற்சி அளித்து வேலையில் அமர்த்துதல்.	5000 (ஐ.டி.ஐ. கல்வித் தகுதி பெற்றவர்கள்)	1000	வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது	500
5. நான்கு இலட்சம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங் களுக்கு வீட்டு மனைகள் வழங்குதல்.	4 இலட்சம் வீட்டு மனைகள்.	75,000	1,45,951	75,000
6. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி யினர்களுக்கான வீடு கட்டும் பெருந் திட்டத்தின் கீழ் எல்லா தட்பவெப்ப நிலையையும் தாங்கக்கூடிய 3 இலட்சம் வீடுகள் கட்டுதல்.	3 இலட்சம் வீடுகள்	20,000	33,758	25,000
7. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிக்கு வகை செய்தல்.	1991-92 ஆம் ஆண்டில் 1418 குடியிருப்புகள், 1992-93 ஆம் ஆண்டில் 1007 குடியிருப்புகள்	1,963	1,571	1,500

	(1)	(2)	(3)	(4)	(5)
8. 1063 ஆதி திராவிடர் குடியிருப்பு களுக்கு இணைப்புச் சாலை அமைத்தல்.	1,063	273	83	200	
9. எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்பு களுக்கும் தெரு விளக்குகளுக்கு வகை செய்தல்.	எல்லா ஆதி திராவிடர் குடியிருப்பு களுக்கும்.	357	எல்லா ஆதி திராவிடர் குடியிருப்பு களுக்கும் ஏற்கெனவே வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.		..
10. ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் 1.5 இலட்சம் ஆதி திராவிடர் வீடுகளுக்கு மின் விளக்குகளுக்கு வகை செய்தல்.	1.5 இலட்சம்	30,000	30,000	35,000	

இருபது அம்சத் திட்டம்.

மத்திய அரசின் இருபது அம்சத் திட்டமும் செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறை, ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் மேம்பாடு மற்றும் கொத்தடிமை யிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கான புதுவாழ்வுத் திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்துவதில் அரசு கவனம் செலுத்திவருகிறது. 1993- 94ம் ஆண்டில்2.54 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கும், 9000 பழங்குடியினர் குடும்பங்களுக்கும் உதவி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்குகளை எய்துவதற்கு வகை செய்யும் பொருட்டு, குறிப்பிட்டத் திட்டப்பணி வாரியாகவும் துறை வாரியாகவும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு அத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுவது கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன் பயனாக மேற்சொன்ன இலக்குகளில் ஆதி திராவிடர் குடும்பங்கள் மற்றும் பழங்குடியினர் குடும்பங்கள் ஆகியவற்றிற்கு இத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதில் 2,66,831 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும், 10382 பழங்குடியினர் குடும்பங்களுக்கும் உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டிற்கான இலக்கும் அதே அளவில் இருக்கும். விவரங்கள் விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

இருபது அம்சத் திட்டம்.

அம்சம்.	ஆண்டு இலக்கு.	18.3.94 வரையிலான இலக்கு.	94- 95ஆம் ஆண்டிற் கான சாதனை
11 (அ) ஆதி திராவிடர்கள் மேம்பாட்டுப் பணிகளை விரைவு படுத்துதல்.	2.54 இலட்சம்	2.67 இலட்சம்	2.54 இலட்சம்
11 (ஆ) பழங்குடியினர் மேம்பாட்டுப் பணிகளை விரைவுபடுத்துதல்.	9000	1-0382	9000

சிறப்புத் திட்டங்கள்:

பழங்குடியினர் முன்னேற்றத்திற்கான பழங்குடியினர் துணைத் திட்டம்:

பழங்குடியினரின் சமூகபொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு உதவும் பொருட்டு தமிழ் நாடு அரசு பழங்குடியினர்

துணைத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ஆறு மாவட்டங்களில் பழங்குடியினர் அதிகமாக வாழும் ஒன்பது பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு முழுமையான மேம்பாட்டுப் பணிகளுக்காக, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினரின் தொழில் முறைகளுக்கேற்ப, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு போன்ற திட்டங்கள் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் செயலபடுத்தப்பட்டு வருகின்றன.

இடைத் தரகர்களைத் தவிர்ப்பதன் மூலம், பழங்குடி மக்களின் விளை பொருட்களை விற்பனை செய்ய வகை செய்வதோடு மட்டுமன்றி, குறுகிய கால, நீண்ட கால கடன்கள் வழங்குவதற்கும், பழங்குடியினருக்கு நியாயமான விலைகளில் தேவையான நுகர்பொருட்கள் வழங்குவதற்கும் பெரிய அளவிலான பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் தேவைகளை நிறைவு செய்ய இத்தகைய 16 சங்கங்கள் செயல்படுகின்றன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளில் பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு செயல்படுகின்றன.

பழங்குடியினர் துணைத் திட்டம், பழங்குடியினரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது மட்டுமின்றி, பழங்குடியினர் பகுதிகளில் கல்வி வசதி, சுகாதாரம், மின் வசதி, குடிநீர் வழங்கல், ஏனைய அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்கும் வகை செய்கிறது. இனங் கண்டறியப்பட்ட தொல் பழங்குடியினரில் ஆறு பிரிவினருக்குத் துணை புரிய தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டில் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.28.33 கோடி ஆகும். அது 1993-94-ம் ஆண்டில் ரூ. 22.48 கோடியாக இருந்தது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளைப் போன்று, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளும், பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மூலம், 1994-95 ஆம் ஆண்டில் 9000 பழங்குடியினர் குடும்பங்களை இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது. பழங்குடியினரின் கல்வித் தரத்தை உயர்த்த அரசு திட்டமிட்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

பழங்குடியினர் குழந்தைகளின் நலனுக்காக, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் துறை, 13 மாவட்டங்களில் 5 உயர்நிலைப் பள்ளிகள்,

5 மேநிலைப் பள்ளிகள், ஆகியவை உட்பட தங்கிப் பயிலும் மாணவர் இல்லம் இணைந்த 218 அரசு பழங்குடியினர் பள்ளிகளையும் நடத்தி வருகிறது. இந்தப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 14,345 ஆகும். இந்தப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாக உணவும், தங்குவதற்கான இட வசதியும் செய்து கொடுக்கப்படுகிறது. தங்கிப் பயிலும் மாணவர் இல்லம் இணைந்த அரசு பழங்குடியினர் பள்ளிகளிலும், மாணவர் இல்லங்களிலும் உள்ள மாணவர்களுக்குக் கம்பளிப் போர்வைகளும் வழங்கப்படுகின்றன.

பழங்குடியினரின் மரபு முறைகளைப் பாதுகாக்கும் நோக்குடன், உதகமண்டலம் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர் குறித்த அரும்பொருட்காட்சியகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.200 இலட்சமாகும். அது, மத்திய அரசு வழங்கும் 50 சதவீத நிதியுதவியுடன், 5 ஆண்டுக்கால அளவில் செலவிடப்படும். 1994-95 ஆம் ஆண்டில் இந்த அரும்பொருட்காட்சியத்திற்காக ரூ.30.00 இலட்சம் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

சிறப்பு உள்ளடக்க திட்டம்.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், சிறப்பு உள்ளடக்க திட்ட அமைப்பிற்கான கோட்பாடு வகுக்கப்பட்டது. கீழ்க்காணும் கூறுகள் இரண்டையும் ஒன்று சேர்த்துத் திட்டக் கோட்பாடு வகுக்கப்பட்டது.

1. சிறப்பு உள்ளடக்க திட்டம்,
2. சிறப்பு மத்திய நிதியுதவி

1. திட்ட அடிப்படையிலும், நிதி அடிப்படையிலும் ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டிற்கு மாநிலத் திட்டத்தின் பொதுவான துறையிலிருந்து கிடைக்கும் பயன்களையும், முதலீடுகளையும் ஒருமுகப்படுத்தும் நோக்கத்தோடு, சிறப்பு உள்ளடக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பல துறைகள், தங்களுடைய துறைகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டிற்காக ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையை செலவிடுகின்றன. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ.1,594.00 கோடி செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது. பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 12.50 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களை இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில், 2.54 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் என்ற இலக்குடன், அவ்வாண்டிற்கான ஒதுக்கீடு ரூ.353.60 கோடி ஆகும். 1994–95 ஆம் ஆண்டில், பல்வேறு துறைகள் மூலம் ரூ.523 கோடி செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம், 2.54 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

1994 ஏப்ரல் 25]

2. சிறப்பு உள்ளடக்க திட்டத்தின் கீழ், மத்திய அரசு ஒவ்வோராண்டும் சிறப்பு மத்திய நிதியுதவி வழங்குகிறது. இது, ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மாநில அரசு வழங்கும் நிதிகளுக்குக் கூடுதலாக வழங்கப்படும் தொகையாகும். மாநிலத் திட்ட நிதியுடன் இந்த நிதி ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுகிறது. 1980-81 முதல் 1992–93 வரையிலான கால அளவில் மத்திய சிறப்பு நிதியுதவியாக ரூ.192.17 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையைப் பயன்படுத்தி, பல்வேறு அரசுத் துறைகள் மூலம், வேலைவாய்ப்பு நோக்கில் அமைந்ததும் வருவாய் தருவதுமான திட்டப்பணிகள் செயற்படுத்தப்படுகின்றன. இத்திட்டப் பணிகளில், கூட்டுறவு, நூற்பாலைகள், கைத்தறி, விசைத்தறி நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், செங்கல் உற்பத்தித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கல் உடைக்கும் தொழில் பிரிவுகள், தோல் பதனிடுதல், காலணி தயாரிப்புத் தொழில் பிரிவுகள், பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம், கயிறு திரிக்கும் தொழில் பிரிவுகள், காலணி தயாரிப்புப் பணிக்கூடங்கள், ஏனைய தனிப்பட்ட குடும்ப நோக்கில் அமைந்த திட்டப்பணிகள் ஆகியவையும் அடங்கும். சுய வேலைவாய்ப்புத் திட்டங்களுக்குப் போதிய நிதியுதவியும் ஆலோசனையும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இந்து ஆதிதிராவிடர்களுக்கு மளிகைக் கடைகள், சைக்கிள் கடைகள், சிறு கடைகள்,தேநீர்க்கடைகள் ஒலிபெருக்கி 'மைக்'சாதனக்கடை, தையல் கடைகள் முதலியவை போன்ற சுய வேலைவாய்ப்பு முயற்சிகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

ஆதிதிராவிட சமுதாய மக்களிடையே தொழில் முனைவோரை உருவாக்கும் நோக்குடனும், அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், ரூ.5.00 இலட்சமும் அதற்கு மேலும் செலவாகும் திட்டங்களுக்காக, ஒவ்வொரு தனிப்பட்ட திட்டத்திற்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதன்படி உதவித் தொகையாக அதிகப்பட்சம் ரூ.15,000/ அளிக்கப்படுகிறது. ரூ.85,000/ அல்லது திட்டச் செலவில் 20 சதவீதம், இதில் எது குறைவோ அத்தொகை விளிம்புத் தொகையாக 4 சதவீத வட்டி வீதத்தில் 10 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தக்கூடிய கடனாக வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகையை இத்திட்டத்தில் பங்குபெறும் நிதியுதவி நிறுவனங்கள் கடனாக அளிக்கும். இதன்மூலம் ரெடிமேடு ஆடை தயாரிப்புத் தொழில் பிரிவுகள், தோல் பொருட்கள் தயாரிப்புத் தொழில் பிரிவுகள், கல் உடைக்கும் தொழில்கள், அச்சகங்கள், பின்னலாடைகள் தயாரிப்புத் தொழில் பிரிவுகள், இழுவை வண்டிகளுடன் கூடிய டிராக்டர்கள், கிரானைட்கற்கள் மெருகூட்டும் தொழில் பிரிவுகள், லாரிகள், ஆட்டோரிக்ஷாக்கள் சுற்றுலாச் சீருந்துகள், 'வீடியோ கேசட்' வாடகைக் கடைகள் முதலியவை போன்ற சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் 679 ஆதிதிராவிடர் தொழில் முனைவோருக்கு கடன் உதவி செய்யப்பட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தகங்களின் புதிய துறைகளை ஆராய்வதற்காகத் தேவைப்படும் இடங்களிலெல்லாம், ஆதிதிராவிட இளைஞர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆயுள் காப்பீட்டு நிறுவனம், வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம் முதலியவை நடத்தும் போட்டித் தேர்வுகளில், ஆதிதிராவிட விண்ணப்பதாரர்களின் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கச் செய்ய சிறப்புப் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. கணிப்பொறி மொழி அடிப்படைத் தகவல் விவரம், தட்டச்சு சுருக்கெழுத்து ஆகியவற்றிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. வேளாண்மைத் துறையில் வித்துக்கள், இரசாயன உரங்கள் மரக்கன்றுகள், செம்மறி ஆடுகள், கறவை மாடுகள் முதலியவற்றை வழங்குவதற்காக, மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் சிறப்பு மத்திய நிதியுதவி பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நடவடிக்கைகள்.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம், 15.2.1974 ஆம் நாள் முதல் அரும்பணி ஆற்றிவருகிறது. இக்கழகத்தில் (1) தொழில்நுட்பப் பிரிவு, (2) மேம்பாட்டுப் பிரிவு ஆகிய இரு பிரிவுகள் உள்ளன.

தொழில்நுட்பப் பிரிவு.

'தாட்கோ நிறுவனம்' ஆதி திராவிடர்களின் நலனுக்காகக் கீழ்க்காணும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்கிறது:

1. வீட்டு வசதி (இது தற்போது ஊரக வளர்ச்சி மூலம் செயல்படுத்தப் படுகிறது)
2. மாணவர் இல்லங்கள் (மாநிலத் திட்டத்தின் கீழ்)
3. மாணவியர் இல்லம் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ்)
4. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர் இல்லங்கள்.
5. பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர் இல்லங்கள்.
6. பள்ளிக் கட்டிடங்கள்.
7. அரசு பழங்குடியினர் பள்ளிக் கட்டிடங்கள் (தங்கிப் பயிலும் மாணவர் இல்லம் இணைந்தவை).
8. ஆசிரியர் குடியிருப்புகள்.
9. சமுதாயக் கூடம்.
10. பாலர் பள்ளிகள்.
11. மீனவர் வீடுகள்.
12. வகுப்பறைகள் கட்டுதல் (அனைவருக்கும் எழுத்தறிவு என்னும் திட்டத்தின் கீழ்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மேம்பாட்டுப் பிரிவு.

1980- 81 ஆம் ஆண்டிலிருந்து இக்கழகம், இம்மாநிலத்திலுள்ள ஏழை மற்றும் நலிந்த ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தனிக் கவனம் செலுத்தி, தேவை அடிப்படையிலான விரிவான தொகுப்பு நிதியுதவித் திட்டத்தை வகுத்து செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்குக் கிடைக்கும் கிட்டத்தட்ட ரூ.15 கோடி முதல் ரூ.16 கோடி வரையிலான நிதியுதவியைக் கொண்டு 'தாட்கோ' நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயற்படுத்துகிறது.

1. சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்.
2. சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டங்கள்.
3. வேளாண்மையும், வேளாண்மைத்துறை தொடர்புடைய நடவடிக்கைகளும்.
4. தனிப்பட்ட தொழில் முனைவோர் திட்டம்.
5. சிறு வணிகம்.
6. ஏனைய துறைகள் மூலம் செயற்படுத்தப்படும் திட்டங்கள்.

'தாட்கோ' நிறுவனம் நேரடியாகச் செயல்படுத்தும் முக்கியமான திட்டங்கள் பற்றிய விவரம் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது:

(1) சுய வேலைவாய்ப்புத் திட்டம்.

'தாட்கோ' நிறுவனம், கிராமப் பகுதிகளிலும், நகர்ப்பகுதிகளிலும் உள்ள ஏழை இந்து ஆதி திராவிடர்களின் நலனுக்காகச் சுய வேலை வாய்ப்புத் திட்டங்களைச் செயற்படுத்துகிறது. ரூ.10,000/ வரையிலும் செலவாகும் திட்டங்களுக்காக அதிகபட்சம் ரூ.5,000/ அல்லது திட்டச் செலவில் 50 சதவீதம் மானியத்தொகையாக வழங்கப்படுகிறது. தேவைப்படும் எஞ்சிய தொகை வங்கிக் கடன் மூலம் பெறப்படும். இத்திட்டம், இந்து ஆதிதிராவிட ஆண்களும் பெண்களும் சுயவேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ள இயலும் வகையில், ஆறுமாதம் முதல் ஓராண்டு கால அளவிற்கு, ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் பயிற்சி அளிக்கப்படும். அதே முறையில் பயிற்சி அளிக்க வகை செய்வதுடன், வங்கிக் கடன் நிதியுதவியும் அளிக்கிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும், ஒவ்வொரு மாதமும் பயிற்சி உதவித் தொகையாக ரூ.300/ அளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில், ரூ.600/ மதிப்புடைய கருவிகள் அடங்கிய பெட்டி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்காகச் சிறந்த தொண்டு நிறுவனங்களும் அரசுத் துறைகளும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

வேளாண்மையும் அது சார்ந்த நடவடிக்கைகளும்.

வேளாண்மையை முக்கிய வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ள இந்து ஆதிதிராவிடர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கீழ்க்கண்ட வேளாண்மை மற்றும் வேளாண்மை தொடர்புடைய திட்டப்பணிகளைச் செயற்படுத்தும் பணி, "தாட்கோ" நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(அ) வடிமுனை ஊற்றுக் கிணறுகள்.

கிணறு ஒன்றுக்கு ரூ.20,000/- செலவில், வடிமுனைக் கிணறுகளையும், ஊற்றுக் கிணறுகளையும் தோண்டுவதற்காக, "தாட்கோ" நிறுவனம், இந்து ஆதிதிராவிடர் உழவர்களுக்கு ரூ.10,000/- மானியத் தொகை வழங்குகிறது.

(ஆ) சென்ட்ரிபியூகல் பம்பு செட்டுகள் (7.5 பரித்திறன் கொண்ட மின் இயந்திரத்தினால் இயக்கக் கூடியவை).

பம்புசெட் ஒன்றுக்கான செலவு ரூ.10,000/- என்ற வீதத்தில் ஆதிதிராவிட உழவர்களுக்கு/வேளாண் தொழிலாளர்களுக்குச் சென்ட்ரிபியூகல் பம்புசெட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் வழங்கப்படும் மானியத் தொகை ரூ.5,000/- ஆகும்.

(இ) சென்ட்டிரிபியூகல் பம்புசெட்டுகள் டீசலில் இயங்கக்கூடிய 5 பரித்திறன் கொண்டவை

பம்புசெட் ஒன்றுக்கான செலவு ரூ.12,000/- என்ற வீதத்தில், ஆதிதிராவிட உழவர்களுக்கு / வேளாண் தொழிலாளர்களுக்குச் சென்டிரிபியுகல் பம்பு செட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் வழங்கப்படும் மானியத்தொகை ரூ.6,000/- ஆகும்.

(ஈ) இரண்டு காளைமாடுகளுடன் மாட்டு வண்டிகள் வழங்கும் திட்டம்.

மாட்டு வண்டி ஒன்றுக்கான செலவு ரூ.9,500/-- என்ற வீதத்தில், ஆதிதிராவிட உழவர்களுக்கு / வேளாண் தொழிலாளர்களுக்கு இரண்டு காளைமாடுகளுடன் கூடிய மாட்டு வண்டி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான செலவில் ரூ.5,000/- மானியத்தொகையாக வழங்கப்படுகிறது.

(உ) மிதிவண்டி ஒன்றுடன் விசைத் தெளிப்பான் வழங்குதல்.

விசைத் தெளிப்பான் ஒன்றுக்கான செலவு ரூ.4,500/ என்ற வீதத்தில் ஆதிதிராவிட உழவர்களுக்கு / வேளாண் தொழிலாளர்களுக்கு மிதிவண்டி

ஒன்றுடன் விசைத் தெளிப்பான் வழங்கப்பட்டு வருகிறது. இதில் ரூ.2,250/ மானியத்தொகையாக வழங்கப்படுகிறது.

(ஊ) இரண்டு காளை மாடுகளும் டயர் வண்டியும் வழங்குதல்.

டயர் வண்டி ஒன்றின் விலை ரூ.15,000/- என்ற வீதத்தில் ஆதிதிராவிட உழவர்களுக்கு / வேளாண் தொழிலாளர்களுக்கு இரண்டு காளை மாடுகளும் டயர் வண்டியும் வழங்கப்படுகிறது. இதில் மானியத்தொகையாக ரூ.7,750/- வழங்கப்படுகிறது.

(எ) உழவு மாடுகள் (இரண்டு)

இரண்டு உழவு மாடுகளின் விலை ரூ.4,500/- என்ற வீதத்தில் ஆதிதிராவிட உழவர்களுக்கு/ வேளாண் தொழிலாளர்களுக்கு உழவு மாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில், மானிய தொகையாக ரூ.2,250 வழங்கப்படுகிறது.

(ஏ) கிணறுகளை ஆழப்படுத்துதல்.

இத்திட்டத்தின்கீழ், பாசனக் கிணறுகளை 3 மீட்டர் வரையில் ஆழப்படுத்துவதற்கான ஆதிதிராவிட உழவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும். ஆழப்படுத்துவதற்கான மொத்தச் செலவுத் தொகையான ரூ.15,000/-ல் உதவித் தொகையாக ரூ.7,5000/- வழங்கப்படும். எஞ்சிய தொகை வங்கிக்கடன் மூலம் பெறப்படும்.

(iv) தனிநபர் தொழில் முனைவோர் திட்டம்.

இத்திட்டம் மாநிலத்திலுள்ள ஆதிதிராவிடர்களிடையே தொழில் முனைவோரை உருவாக்குவதற்காக, தாட்கோ நிறுவனம் செயற்படுத்தும் ஒரு முக்கிய திட்டமாகும், இதன்படி தாட்கோ நிறுவனம், இம்மாநிலத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு ரூ..5.00 இலட்சம் வரை மதிப்புடைய சொத்துக்களை உருவாக்க வகை செய்கிறது. தாட்கோ நிறுவனம், தொழில் முனைவோர் ஒவ்வொருவருக்கும் சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து மானியமாக, ரூ.15,000/- அளிப்பதோடு, 4 சதவீத வட்டி வீதத்தில், அதிக அளவாக ரூ.85,000/- அல்லது திட்டச் செலவில் 20 சதவீதம், இதில் எது குறைவோ, அத்தொகையை 10 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தக்கூடிய விளிம்புத் தொகை கடனாக வழங்குகிறது.

இத்திட்டம்., லாரி, இழுவை வண்டிகளுடன் கூடிய டிராக்டர், ஆயில் டேங்கர், சிறியவேன், அம்பாசிடர் கார்கள், ஆட்டோரிக்ஷாக்கள்,

பால்பண்ணைகள், கோழிப்பண்ணைகள், பல்வகைச் சிகிச்சை மருத்துவமனை, தோல் தொழில்கள், இரசாயனத் தொழில்கள், கணிப்பொறி மையங்கள், நகலக இயந்திரங்கள், செங்கல் சூளைகள், சென்ட்டரிங் சாதனங்கள், மீன் பண்ணைகள், மளிகைக்கடைகள், ஏற்றுமதி ஆடைகள் தயாரிப்புத் தொழில்கள் போன்ற பெருமளவு ஆதாயம் தரக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு வகைசெய்கிறது. மேற்சொன்ன பட்டியல் ஒரு சில எடுத்துக்காட்டுகளேயாகும்.

சிறு தொழில்களுக்குக் கடன் வழங்கும் திட்டம்.

1984-85 ஆம் ஆண்டு முதல், சிறுதொழில்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தும் பணியை தமிழ்நாடு அரசு, தாட்கோ நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், செருப்பு, பூட்சு தயாரித்தல், மோட்டார் இயந்திரநுட்பம், மளிகைக்கடை, தோல் பதனிடுதல் போன்ற *31* சிறு தொழில்கள் இனங்கண்டறியப்பட்டுள்ளன. இத்திட்டம் ஒன்றுக்கான உயரளவு செலவு ரூ.*5,000/-* ஆகும். இதில், தாட்கோ நிறுவனம், அதிகபட்ச மானியம் ரூ.*1,000/-* வழங்குகிறது.

மேலே குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் *1993-94* ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளும் எய்திய சாதனை விவரங்களும் பின்வருமாறு:

தொடர் எண்.	திட்டத்தின் பெயர்	இலக்கு		சாதனை	
		திட்டம்	நிதி	திட்டம்	நிதி
			(இலட்சத்தில்)		(ரூ. இலட்சத்தில்)
1.	சுயவேலை வாய்ப்புத் திட்டம்	6155	307.75	6855	245.84
2.	வேளாண்மையும் சார்ந்த திட்டப் பணிகளும்				
	(அ) வடிமுனை மற்றும் ஊற்றுக் கிணறுகள்	100	7.00	43	3.80
	(ஆ) சென்ட்ரிபியூகல் பம்புசெட்டுகள் மின்சாரத்தில் இயங்கும் 7.5 பரித்திறன் கொண்டவை	247	12.35	277	12.77

	(இலட்சத்தில்)		(ரூ. இலட்சத்தில்)	
(இ) சென்ட்டிரிபியூகல் பம்புசெட்டுகள் (டீசலில் இயங்கும் 5 பரித் திறன் கொண்டவை)	285	18.00	321	18.54
(ஈ) கிணறுகளை ஆழப் படுத்துதல்	150	11.25	117	8.67
(உ) இரண்டு மாடுகளுடன் கூடிய டயர் வணடி.	2900	224.75	2835	198.06
(ஊ) உழவு மாடகள் (ஒரு ஜோடி)	1950	438.85	1767	35.91
(எ) இரண்டு மாடுகளுடன் கூடிய மாட்டு வண்டிகள்	2000	100.00	2054	96.30
(ஏ) சைக்கிள் வண்டியுடன் கூடியமின் தெளிப்பான்	100	2.25	103	2.31
3. தனியார் தொழில் முனைவோர் திட்டம்.	1500	525.00	1500	525.00
4. சுயவேலைவாய்ப்புப் பயிற்சி	2800	100.00	2702	36.48
	18187	**1353.98**	**18574**	**1183.68**

ஏனைய துறைகளால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்:-

"தாட்கோ" நிறுவனம், இந்து ஆதி திராவிடர்களின் பயனுக்காக திட்டங்களைச் செயற்படுத்த ஏனைய துறைகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது, இத்திட்டத்தின் கீழ், பின்வரும் துறைகள் பங்கேற்றுள்ளன:-

1. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்:

தோல் பொருட்களைத் தயாரிக்கின்ற ஆதிதிராவிடத் தொழிலாளர்களுக்கு காலணி பணிக்கூடம், தையல் இயந்திரங்கள், ஆகியவற்றை இலவசமாக வழங்குவதற்காக இந்நிறுவனம், வாரியத்திற்கு 100 சதவீத மானியம் வழங்குகிறது.

2. கைத்தறி மற்றும் துணி நூல் தொழில்துறை.

இந்து ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்குடன் நூற்பாலைகளை அடிப்படையாகக் கொண்டு விசைத்தறி வளாகங்கள் கூட்டுறவு ஆலைகள் அமைப்பதற்காக, சென்னை கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநருக்கு மானியமும், விளிம்புத் தொகையும் இந்நிறுவனம் வழங்குகிறது.

3. தொழில்-வணிகத்துறை.

செங்கற்கள், பாலிதின் பைகள், காலணிகள், அலுமினியப் பாத்திரங்கள், கயிறு, உப்பு, மாச்சத்து, பாய் முடைதல், தீப்பெட்டிகள் முதலியவற்றை ஆதிதிராவிடர்கள் தயாரிப்பதற்காக, தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க தொழில்-வணிகத் துறை இயக்குநருக்கு மானியமும் விளிம்புத் தொகையும் இந்நிறுவனம் வழங்குகிறது. '

4. பட்டுப்புழு வளர்ப்புத்துறை.

ஆதி திராவிடர்கள் பயனுக்காக பட்டு நூல் சுற்றுதல், முறுக்குதல் தொழில் பிரிவுகள் நிறுவுவதற்காக, பட்டுப்புழு வளர்ப்புத் துறை இயக்குநருக்கு மானியமும், விளிம்புத் தொகையும் இந்நிறுவனம் வழங்குகிறது.

5. மகளிர் மேம்பாட்டுக் கழகம்.

ஆதி திராவிட மகளிருக்கு தையல், நெசவு, பூ வேலைகளில் பயிற்சி அளிப்பதற்கும், மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்குவதற்கும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருக்கு மானியமும், விளிம்புத்தொகையும் இந்நிறுவனம் வழங்குகிறது.

6. ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை.

இந்து ஆதி திராவிட இளைஞர்களுக்குக் கணிப்பொறி பயிற்சி அளிப்பதற்கும், ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். தேர்வுக்கு பயிற்சி, வங்கிப் பணிகள் தேர்வு, ஓட்டல் நிர்வாகத்திற்கான நுழைவுத் தேர்வு, பட்டயக் கணக்கு, கடல்சார்ந்த வானொலி தகவல் தொடர்பு அலுவலர் பயிற்சி ஆகிய பயிற்சி அளிப்பதற்கும் ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலத்துறை இயக்குநருக்கு இந்நிறுவனம் மானியம் வழங்குகிறது.

7. வேலைவாய்ப்பு - பயிற்சித்துறை.

வருமான வரி, மத்திய ஆயத்துறை ஆய்வாளர்கள் தேர்வு, குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அதிகாரிகள் தேர்வு, இரயில்வே பணியாளர் நியமன வாரியம், பணியாளர் தேர்வாணையம், சுருக்கெழுத்தர் தேர்வு முதலிய போட்டித் தேர்வுகளை எழுதுகிற ஆதி திராவிட இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க வேலை வாய்ப்புப் பயிற்சித் துறைக்கு இந்நிறுவனம் மானியம் வழங்குகிறது.

8. வேளாண்மை - எண்ணெய் வித்துக்கள்துறை.

ஆதி திராவிட உழவர்களுக்கு குறைந்த விலையில் வேளாண் இடுபொருட்கள் வழங்குவதற்காக, வேளாண்மைத் துறை இயக்குநருக்கு, இந்நிறுவனம் மானியம் வழங்குகிறது.

9. வேளாண் பொறியியல் துறை.

இந்து ஆதி திராவிட உழவர்கள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், கிணறுகளைத் தோண்டுவதற்கும், குறைந்த வாடகையில் சில இயந்திரங்களை வழங்குவதற்கும், வேளாண் பொறியியல் துறைக்கு இந்நிறுவனம் மானியம் வழங்குகிறது.

10. பால் உற்பத்தி - பால்பண்ணை மேம்பாட்டுத் துறை.

இந்து ஆதி திராவிட பயனாளிகளுக்குக் கறவை மாடுகள் வழங்குவதற்காக பால் உற்பத்தி - பால்பண்ணை மேம்பாட்டு ஆணையருக்கு இந்நிறுவனம் 50 சதவீத மானியம் வழங்குகிறது.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்துள்ள குடும்ப உறுப்பினர்களுக்கும் அத்தொழிலிருந்து விடுவித்து புது வாழ்வு அளிக்கும் தேசியத் திட்டம்.

இத்திட்டத்தைச் செயற்படுத்தும் அமைப்பாக, தாட்கோ நிறுவனத்தைத் தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, தாட்கோ நிறுவனம் ரூ.5.80 கோடி பெற்றுள்ளது. துப்புரவுத் தொழிலாளர்கள் தற்போது ஈடுபட்டுவருகிற துப்புரவுத் தொழிலிருந்து, அதாவது வெறுத்து ஒதுக்கத்தக்கதும், தீமை விளைவிக்கக்கூடியதும், மனிதத்தன்மையற்றதும் ஆன மனிதக் கழிவுகளை தானே சுமந்து அகற்றுகின்ற பணிகளிலிருந்து அவர்களை விடுவிப்பதும், ஐந்தாண்டு கால அளவுக்குள் அவர்களுக்கு மதிப்பு வாய்ந்த கௌரவமான மாற்றுத் தொழில் ஒன்றை உருவாக்கித் தருவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

சுமார் 50 தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் துப்புரவுப் பணியாளர்கள், அவர்களைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரைக் கண்டறிவதற்காக விரைவான ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. அதன்படி 16,721 துப்புரவுத் தொழிலாளர் குடும்பங்கள் கண்டறியப்பட்டன. இவர்களில் 1993-94 ஆம் ஆண்டில், சுய வேலைவாய்ப்புக்கு நிதியுதவி அளிப்பதன் வாயிலாக, 2500 குடும்பங்களுக்கும், பயிற்சி திட்டத்தின் கீழ் 500 குடும்பங்களுக்கும் உதவி அளிக்கப்பட்டது.

1. கோயம்புத்தூர், பெரியார் ஆகிய மாவட்டங்களில் தொழில் பேட்டைகள் அமைத்தல்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் முதலிப்பாளையம் கிராமத்தில் ஒன்றும், பெரியார் மாவட்டத்தில் நல்லகவுண்டம்பாளையத்தில் ஒன்றுமாக பின்னலாடைத் தயாரிப்பு அடிப்படையிலான ஒவ்வொன்றும் 100 தொழிற்கூடங்களைக்கொண்ட தொழில் பேட்டைகள் இரண்டினை அமைக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு தொழில் பிரிவுக்கும் ரூ.40 இலட்சம் முதல் ரூ.150.00 இலட்சம் வரை செலவாகும்.

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், முதலிப்பாளையத்தில் தொழிற்பேட்டை.

கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், முதலிப்பாளையம் கிராமத்தில் பின்னலாடை தயாரிப்பு தொழிற்பேட்டையை அமைக்க ஏக்கர் ஒன்றுக்கு ரூ.70,000 வீதத்தில் மொத்தம் 95.93 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை வாங்குவதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மேற்சொன்ன கிராமத்தில் உள்ள நிலத்தைச் சீரமைப்பதற்கும், சமப்படுத்துவதற்கும், உட்புறச் சாலைகள் அமைப்பதற்கும் அரசு ரூ.50,19,600 அனுமதித்துள்ளது.

கிட்டத்திட்ட 40 சதவீத பணி முடிக்கப் பெற்றுள்ளது. இக்கிராமங்களில், 7 ஆழ் துளைக் கிணறுகள் தோண்டுவதற்காக, அரசு மேலும் ரூ.8.23 இலட்சம் அனுமதித்துள்ளது. இப்பணி முடிந்துவிட்டது. நீரைத்தேக்கி வைக்கக்கூடிய நிலத்தடி நீர்த்தொட்டிகள், பம்ப் அறை மேல்நிலை நீர்த்தொட்டிகள் ஆகியவற்றின் கட்டுமானத்திற்காக அரசு ரூ.8.25 இலட்சம் அனுமதித்துள்ளது. இதில் கிட்டத்தட்ட 50 சதவீத பணி முடிக்கப் பெற்றுள்ளது.

(ஆ) பெரியார் மாவட்டம் நல்ல கவுண்டம்பாளையத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்.

பெரியார் மாவட்டத்தில் பின்னலாடைத் தயாரிப்புத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுவதற்காக, ஈரோடு வட்டம், நல்லகவுண்டம்பாளையத்தில் உள்ள 116.04 ஏக்கர் நிலத்தை உடைமை, உரிமை மாற்றம் செய்வதற்காக அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. தொழிற் பேட்டைக்குரிய நிலத்தை மேம்படுத்தவும், உள்சாலைகள் மற்றும் அணுகு சாலைகள் அமைக்கவும் ரூ.74 இலட்சமும்., இந்தப் பகுதியில் 4 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்காக ரூ.5 இலட்சமும் அரசு அனுமதித்துள்ளது.

பயனாளிகளைத் தெரிந்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2. இறால்மீன் பண்ணைகள் அமைத்தல்.

சென்னை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக., தமிழ்நாட்டில் கரையோர 8 மாவட்டங்களில் அமைந்துள்ள 1000 எக்டேர் பரப்பில் இறால் மீன் பண்ணைகளை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பின்வரும் 8 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து பொருத்தமான ஆதி திராவிட பயனாளிகள் தெரிந்தெடுக்கப்படுவர்:-

1. எம்.ஜி.ஆர் - செங்கற்பட்டு மாவட்டம்

2. தென் ஆற்க்காடு - வள்ளலார் மாவட்டம்

1994 ஏப்ரல் 25]

3. தஞ்சாவூர் மாவட்டம்

4. நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம்

5. புதுக்கோட்டை மாவட்டம்

6. இராமநாதபுரம் மாவட்டம்

7. சிதம்பரனார் மாவட்டம்

8. திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம்.

இதுவரையில் நாகை - காயிதேமில்லத் மாவட்டத்தில் 51.34 ஏக்கர் பரப்புள்ள நிலம் வாங்கப்பட்டுள்ளது. குளம் அமைப்புக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஏனைய மாவட்டங்களில், பொருத்தமான நிலங்கள் பெறப்பட்டு வருகின்றன. முதற்கண், ஏக்டேர் ஒன்றுக்கு 1,50,000 இறால் சினை இருப்புடன் ரூ.4.21 இலட்சம் செலவில் இறால் பண்ணைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு நபார்டு நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது. 'நபார்டு' நிறுவனம் ஏற்கெனவே ஒப்புதலளித்த இறால் வளர்ப்புத் தொழில் பிரிவின் செலவானது ஓரிசா மாநிலத்தில் ஒப்புதலளித்த செலவுத்தொகையை ஒப்பிடுகையில், மிக அதிகமாக இருந்ததால், இறால் வளர்ப்புத் தொழில் பிரிவின் செலவுத் தொகையையும் பிரிவின் பரப்பளவையும் குறைக்கலாம் என்று 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தேசீய நிதியுதவி வளர்ச்சி நிறுவனத்தின் (NSFDC) தலைவர், தன்னுடைய வருகையின்போது கருத்துத் தெரிவித்தார். சென்னையில், 12-10-1993 அன்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டது. இறால் வளர்ப்புத் தொழில் பிரிவின் செலவைக் குறைக்க முடிவு செய்யப்பட்டது. நபார்டு நிறுவனம் ஒப்புதலளித்த திருத்த செலவுத் தொகையானது 33,000 இறால் சினை முட்டைகள் இருப்புடன் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1,50,500 ஆகும். இதனையடுத்து, இதுகுறித்து `NSFDC' நிறுவனத்தின் அதிகாரிகளுடன் விவாதிக்கப்பட்டது இறால் சினை முட்டைக்கான மூலதன நிதியுதவி வகையில் 2 கோடி ரூபாய் அனுமதிப்பதற்கு, கொள்கையளவில் அவர்கள் ஒப்புக் கொண்டனர். முறைப்படியான ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது..

3. பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம்.

10,000 ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் (சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக) 20 மாவட்டங்களில், ஒவ்வொன்றிலும் 4 ஒன்றியங்களைத் தெரிந்தெடுப்பதற்கு அரசு ஆணைகள்

பிறப்பித்துள்ளது. இந்த 10,000 பயனாளிகளில், 6,000 பேர் ஏற்கனவே சொந்தமாக நிலம் வைத்திருக்கக் கூடிய ஆதிதிராவிடர்களாவர்; எஞ்சியுள்ள 4,000 பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் நிலமற்ற ஆதிதிராவிடர்களாவர்.

முசுக்கட்டை மரக் கன்றுகளுக்கான செலவுகள், பயிற்சிச் செலவு ஆகியவை தொடர்பாக 'தாட்கோ' நிறுவனத்திடமிருந்து கிடைக்கக் கூடிய பட்டுப்புழு வளர்ப்பு முன் பணத்திலிருந்து (S.C.A.) 18 லட்ச ரூபாயை, அரசு அனுமதித்துள்ளது.

பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பாக 8.45 கோடி ரூபாயை நிதியுதவியாக "NSFDC" நிறுவனம் 3.54 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது; இதில், சேலம் பட்டுப்புழு வளர்ப்புத் துறை இயக்குநருக்கு 2.18 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. அவர் சம்பந்தப்பட்ட பட்டுப்புழு வளர்ப்புத் துறை உதவி இயக்குனர்களுக்கு ரூ. 2,14,14,250 வழங்கியுள்ளார்.

இதுவரையில் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நிலம் வைத்திருக்கும் 3209 பயனாளிகள் கொண்ட பட்டியல் ஒன்றிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அரசு, திட்டச்செலவை ரூ. 24,100 என நிர்ணயித்து, தற்போது ஆணைகள் பிறப்பித்துள்ளது; நிலமற்ற பயனீட்டாளர்களுக்கு வழங்குவதற்காக நிலங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன; மேலும், இவ்வகையின் கீழ் பயனாளி ஒருவருக்கு ஏற்படக்கூடிய சராசரி யூனிட் அமைப்பு செலவு ரூ. 80,000 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஏழ்மை நிலையிலிருந்து விடுபட நிலமற்ற உழவர்களுக்கு நிலம் வழங்குதல் (LAFTI)

ஏழ்மை நிலையிலிருந்து விடுபட நிலமற்ற உழவர்களுக்கு நிலம் வழங்கும் அமைப்பு LAFTI என்பது ஒரு தொண்டு நிறுவனமாகும். இந்நிறுவனம், தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் வட்டத்தில் கீழ்வேளூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்நிறுவனம், ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்கான தேசிய நிதியுதவி வளர்ச்சி (NSFDC) நிறுவனத்திடமிருந்து நிதியுதவி பெற்று வழங்குவதுடன், நிலமற்றோருக்கு நிலம் வழங்கும் அமைப்பாகவும் விளங்கி வருகிறது. இத்திட்டம், நிலம் வைத்துள்ளவர்கள், நிலமற்றோர் ஆகியோரிடையே சுமுகமான பேச்சு வார்த்தை நடத்தி, நிலம் வைத்திருப்போரிடமிருந்து நிலமற்றோருக்கு நிலத்தை உடைமை, உரிமை மாற்றிக் கொடுக்கும் பணியை அமைதியான

1994 ஏப்ரல் 25]

வழியில் தீர்த்து வைத்துள்ளது. இவ்வாறு நிலத்தை உடைமை, உரிமை மாற்றம் செய்வதன் மீதான முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களைத் தள்ளுபடி செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதுடெல்லியிலுள்ள ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்கான தேசிய நிதியுதவி-மேம்பாட்டு நிறுவனம், இத் திட்டங்களைச் செயல்படுத்திவதற்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம் மூலமாக, 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக் கூடியதும், 4.5 சதவீத வட்டியும் கொண்ட நிதியுதவியை உழவர்களுக்கு நிலம் வழங்கும் மேற்சொன்ன 'LAFTI' நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 75,90,922 ஆகும். ஒரு ஏக்கர் நிலத்தின் சராசரி விலை ரூ. 10,000 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. புதுடெல்லியிலுள்ள ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்கான தேசிய நிதியுதவி-மேம்பாட்டு நிறுவனம், 'தாட்கோ' வின் பரிந்துரைகள் பேரில், 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துக்கூடிய குறித்த கால கடன் தொகையாக ரூ. 16.05 இலட்சம் மேற்சொன்ன நிறுவனத்திற்கு (LAFTI) அனுமதித்துள்ளது. தவணைத் தொகையை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தினால் ஆண்டொன்றுக்கு 4.5 சதவீதம் வட்டியும், ஆண்டொன்றுக்கு 0.5 சதவீதம் கழிவுத் தொகையும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த வட்டியானது, ஒவ்வோர் அரையாண்டிலும் அதாவது ஜுன் திங்கள்-30 ஆம் நாளன்றும், டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்றும் செலுத்தப்படவேண்டும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படை வசதி நிதியிலிருந்து உதவித் தொகையாக, இத்திட்டத்திற்கு, ரூ.29.46 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திட்டச் சாத்தியக்கூறுகள்.

தன்னுடைய முந்தைய அனுபவத்தின் அடிப்படையில் 'LAFTI' நிறுவனம், நிலத்தை மேல் குத்தகைக்கு விடுவதைத் தவிர்க்கும் பொருட்டு, கணவன் மனைவி ஆகிய இருவர் பெயரிலும் கூட்டாக நிலத்தை ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தில் செலவிட்ட தொகைக்குப் பயன் கிட்டுவதற்கும், இத்திட்டம் தனித்தியங்க வல்லதாக ஆக்குவதற்கும் உறுதி செய்ய சுமார் 20 பயனாளிகள் ஒரே குழுவாக இயங்கும் வகையில் பண்ணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் செலவு வரவுகள், இக் குழுவின் உறுப்பினர்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. இத்திட்டப் பகுதியில், ஆழ் துளைக் கிணறுகள் தோண்டுவதற்கான சாத்தியக் கூறுகளை நிலத்தடி நீர் ஆய்வுப் பிரிவு, வேளாண்மைப் பொறியியல் 'நபார்டு' நிறுவனம் ஆகியவை கண்டறிந்துள்ளன. 'தாட்கோ' நிறுவனம் மூலம் தேவையான உதவிகள் அளிக்கப்படும்.

இத்திட்டத்தின் நன்மைகள்.

1. 9 கிராமங்களில் பரவலாக உள்ள 982 ஆதிதிராவிட பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர் நன்செய் நிலம் அளிப்பதன் மூலம் அவர்களுக்கு நிலையான சொத்து ஒன்று கிடைக்கச் செய்வது இத்திட்டத்தின் முக்கியமான நன்மையாகும்.

2. நிலமற்ற ஆதிதிராவிடர்கள் நிலச்சுவான்தாரர்களின் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும் நிலச்சுவான்தாரர்களின் சுரண்டல்களிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் இத்திட்டம் வகை செய்கிறது.

3. வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களும், ஆதரவற்ற நிலையில் உள்ளவர்களுமான நூற்றுக்கணக்கான நிலமற்ற ஆதிதிராவிடர்களின் நீண்ட கால நம்பிக்கை, ஆர்வம், கனவுகள் அனைத்தையும் இத்திட்டம் நிறைவு செய்துள்ளது.

நிலமற்ற உழவர்களுக்கு நிலம் வழங்கும் அமைப்பின் செயல் (LAFTI) திட்டங்களின் நிலை.

புதுடெல்லியிலுள்ள ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான நிதியுதவி-மேம்பாட்டு நிறுவனம், மேற்சொன்ன நிறுவனம் மூலம் இத்திட்டத்தின் 2-வது கட்டப் பணியைச் செயற்படுத்துவது தொடர்பாக, நிலமற்ற ஆதிதிராவிட விவசாயிகளுக்கு நிலங்களைச் சொந்தமாக்கும் திட்டத்திற்காக, ரூ. 59.88 இலட்சத்திற்குக் குறித்த காலக் கடன் நிதியுதவி அனுமதித்துள்ளது. இத் திட்டத்தின் மொத்தத் திட்டச் செலவு ரூ. 111.33 இலட்சம் ஆகும். 1029 ஆதிதிராவிட பயனீட்டாளர்களுக்கு 1029.12 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகவரமைப்பிலிருந்து பெற்ற மாநில அரசின் உதவித் தொகை ரூ. 59.88 இலட்சமாகும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் அம்பேத்கர் பொதுமக்கள் நலச் சங்கம் (DAPSY)

டாக்டர் அம்பேத்கர் பொதுமக்கள் நலச் சங்கம், நாகப்பட்டினம்-காயிதே-மில்லத் மாவட்டத்திலுள்ள மயிலாடுதுறையில் அமைந்துள்ளது. இச்சங்கம், ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கான தேசிய நிதியுதவி வளர்ச்சி நிறுவனத்திலிருந்து பெற்ற நிதியுதவியைக் கொண்டு, நிலமற்றோருக்கு நிலம் வழங்கும் அமைப்பாக இயங்கி வருகிறது.

இத் திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 166.34 இலட்சம்

நிதியுதவி பெறப்படும் வாயில்கள்:	ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கான தேசிய நிதியுதவி வளர்ச்சி நிறுவனத்தின் குறித்த கால கடன் தொகை	ரூ. 124.72 இலட்சம்..
	தமிழ்நாடு மாநில நிலவள வங்கியிடமிருந்து பெற்ற குறித்த கால கடன் தொகை	ரூ. 14.12 இலட்சம்
	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் பெற்ற உதவித் தொகை	ரூ. 27.50 இலட்சம்
	மொத்தம்	ரூ.166.34 இலட்சம்

மேற்சொன்ன நிதியில், நிலங்களை வாங்குவதற்கு ரூ. 1,05,22,038 செலவிடப்பட்டது. 86 நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து 564.20 ஏக்கர் நிலம் ரூ. 1,05,22,038-க்கு வாங்கப்பட்டு. 550 ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டது.

1994- 95 ஆம் ஆண்டில், மானியக் கோரிக்கை எண்.30 என்பதன் கீழ் அனுமதித்த தொகையான ரூபாய் 148.14 கோடியும், சாட்டிய தொகையான ரூபாய் 50.03 இலட்சங்களும் செலவிடப்படும். இத்துடன் மானியக் கோரிக்கை எண். 42 (பல்வகை) என்பதன் கீழ் ரூபாய் 0.72 இலட்சமும், மானியக் கோரிக்கை எண். 60 (மூலதனச் செலவு) என்பதன் கீழ் ரூபாய் 11.84 கோடியும், மானியக் கோரிக்கை எண். 61 (கடன்களும் முன் பணங்களும்) என்பதன் கீழ் ரூபாய் 0.91 கோடியும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகச் செலவிடப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

1994-95 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

தொடர் எண்ணும், திட்டத்தின் விவரங்களும்.	மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம். மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்.	மாநிலத் திட்டம் ஆதி திராவிடர்	மாநிலத் திட்டம் பழங்குடியினர்	திட்டத்தினால் சேராதவை ஆதி திராவிடர்	திட்டத்தினால் சேராதவை பழங்குடியினர்	பெரு மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. கல்வி.						
1 படிப்பு உதவித் தொகை		40330		28994		
	*101198	8560 (க)	40(க)	24622	305	209343
	**4798	361 (க)		135 (க)		
2 மருத்துவப் பொறியியல் பட்டப்படிப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்குப் புத்தக வங்கி	3200	..	..	..	..	3200
3 ஆதிதிராவிடர் பழங்குடியினர் கிருத்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு இலவசமாக கல்வி	..	3965	..	..	..	3965
4 தொழில் முறைப்பாடம் பயிலும் ஆதிதிராவிடர் மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசமாக கல்வி வழங்குதல்	..	1	..	..	..	1

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
5 தொழில் முறைப்பாடம் பயிலும் பழங்குடியினர் இன மாணவர்களுக்கு இலவசக் கல்வி	..	..	1	..	..	1
6 பள்ளிகள்	..	11919	..	368868	22197	402984
7 பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுதல், பழுது பார்த்தல்	..	17269 (மு)	275 1950	1653 1 (மு)	383	21531
8 சீருடைகள்	..	3386	54	18105	977	22522
9 சாரணர் சாரண ஆசிரியர் ஆகியோருக்கு சாரணர் சீருடை வழங்குதல்	..	119	21	..	..	140
10 பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் கரும்பலகைகள் மற்றும் பள்ளிகளுக்குச் சாதனங்கள் வாங்குதல்	..	10,000	..	4245	352	14597
11 ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு	..	503	400	61	40	1004
12 சுற்றுலா	..	84	..	..	12	96
13 பரிசுப் பொருட்கள்	..	..	..	566	..	566
14 மாணவர் இல்லங்கள்	..	43742	6209	138175	12684	200810
15 மாணவர் இல்லக்கட்டிடங்களைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல்	30,000 (மு)	1	2	1075	46	31124

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
16 பகுதி நேர ஆசிரியர்கள்	..	..	..	98	3	101
17 தங்கிப் பயில்வதற்கான மானியம்	..	..	..	1550	118	1668
18 ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு தனித் தகுதி மானியம்	..	3404	..	..	..	3404
19 ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர் களுக்குப் பரிசுத் தொகை வழங்குதல்	..	..	..	1175	..	1175
20 தேர்வுக்கு முந்தைய பயிற்சி நிலையங்கள்	1714	54	..	..	..	1768
21 பல்கலைக் கழகங்களுக்கு இழப்பீட்டுத் தொகை	..	..	..	1050	..	1050
22 கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி	..	50	..	..	..	50
23 கல்வியில் சிறந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை	..	440	..	340	110	890
24 பட்டயக் கணக்கர் தேர்வு	..	..	..	5	..	5
25 தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி	..	223				
		184	..	..	..	407

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
26 அதிகம் மதிப்பெண் பெற்ற மாணவர்/ மாணவிகளுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள்	..		..	32	..	32
27 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலத்துறையின் கல்விப் பிரிவை விரிவுபடுத்தல்	..	1	1128	..	..	1129
28 தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்குப் பயிற்சி உதவித் தொகை	..	..	..	1425	..	1425
29 ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்குச் சிறப்பு தொழிற்பயிற்சி நிறுவனம்	..	1078	..	..	..	1078
30 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவ/மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கு ஊக்கத் தொகை வழங்கல்	..	112	..	..	..	112
31 இந்திய தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் சேருவதற்கு ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்	20	..	..	..	..	20
32 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாணவர் இல்லங்களும் பழங் குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகளும் கட்டுதல்	6150	..	..	..	..	6150

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
33 ஆதிதிராவிடர் மாணவர்களின் தகுதியை உயர்த்துதல்	424	..	..	..	..	424
34 பழங்குடியினர் மாணவர்களின் தகுதியை உயர்த்துதல்	ப	..	..	..	..	ப
35 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் உணவுச் செலவுகள் வீதம் அதிகரித்ததால் கூடுதல் செலவு	..	23800	..	..	..	23800
36 அரசு பழங்குடியினர் குடியிருப்பு பள்ளிகளில் உணவுச்செலவு அதிகரித்ததால் ஏற்பட்ட கூடுதல் செலவுகள்	..	..	1903	..	..	1903
37 பழங்குடியினர் மாணவர் இல்லங்களில் உணவுச் செலவு அதிகரித்ததால் ஏற்பட்ட கூடுதல் செலவு	..	..	864	..	..	864
38 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் புதிதாக சிறப்புப் பயிற்சி அளித்தல்	..	95	..	..	..	95
மொத்தம்–கல்வி ..	**147515**	**171631**	**10898**	**592174**	**37227**	**959445**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
2. பொருளாதார மேம்பாடு.						
39 வேளாண்மை (உழவு மாடுகள்)	..	1903 98	149	..	..	1903
40 பால் வழங்கு கூட்டுறவு சங்கங்கள்	..	5000 150	..	..	..	5150
41 குடிசைத் தொழில்கள்	..	..	..	760	..	760
42 பயிற்சி உற்பத்தி நிலையம்	..	..	149	..	..	149
43 தொழில் நுட்ப பயிற்சி பெற்றவர் களுக்கு உதவித் தொகை	..	1255 297	154	..	..	1706
44 சிறு வணிகம்	..	1300 100	50	..	..	1450
45 துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறச் சிறப்பு பயிற்சி வகுப்புகள்	..	1	..	..	..	1
46 தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு	65,000	..	..	..	..	65,000
47 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வட்டாரங்களில் ஆதிதிராவிடர் களுக்கு நலம் பயக்கும் பணித் திட்டங்கள் (ஆதிதிராவிடர்களுக் கான தனித் துணை திட்டத்திற்கு சிறப்பு மத்திய உதவி)	1,80,000	..	..	..	..	1,80,000

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
48 சட்டக் கல்வி பட்டதாரிகளுக்குப் பயிற்சி	..	1	..	..	..	1
48-எ. பட்டுப்புழு வளர்ப்பு	..	1624	..	..	..	1624
மொத்தம்—பொருளாதார மேம்பாடு	**2,45,000**	**11,125**	**502**	**760**	..	**2,57,387**
3. வீட்டு வசதி ஏனைய திட்டங்கள்:						
49 ஆதிதிராவிடர்களுக்கு கான்கரீட் வீடு கட்டும் திட்டம்	..	1,62,500	..	..	..	1,62,500
50 வீட்டு வசதி	..	..	850	..	..	850
51 வீட்டு மனைகள்	..	2591 78 58,000 5,000 (சா) 2,658				68327
52 நடைபாதைகள், சுடுகாடுகள் ஏற்படுத்திக் கொடுத்தல் (குடிநீர், சாலைப் பணிகளுக்கான ஊராட்சி ஒன்றியத்திற்கு அளிக்கப்படும் தொகை உட்பட)	..	5123	..	..	..	5123
53 குடிநீர்க் கிணறுகள்	..	2200 340				2540
54 மருத்துவம்	..	..	..	70	1291	1361

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
55 பிரச்சாரச் செலவுகள்	..	424	..	..	..	424
56 தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசுகள்	..	..	..	66	..	66
57 சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வரும் ஆதிதிராவிடர் காலனிகளுக்குப் பரிசுகள்	..	..	..	123	..	123
58 சமுதாயக் கூடங்கள்	..	1000	..	..	..	1000
59 சலவைத் துறைகள் கட்டுதல்	..	15 15 (க)	..	..	..	30
60 சுகாதாரமற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்	..	1	..	..	..	1
61 ஆராய்ச்சி படிப்புதவித் தொகை	5	..	..	..	..	5
62 பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்துதல்	1519	..	..	..	..	1519
63 உதகமண்டலம் பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையத்தில் அரும்பொருட்காட்சியகம் அமைத்தல்	3000	..	..	..	..	3000
64 ஈமசடங்குகளுக்குத் தொகை கொடுத்தல்	..	..	..	14128	..	14128

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
65 ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்திட்டங்களை மதிப்பீடு செய்ய ஆராய்ச்சிப்பிரிவு	421	..	..	..	..	421
66 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தை செயல்படுத்தும் பணியாளர் அமைப்பு	261	..	..	..	..	261
67 ஆதிதிராவிடர் குடியிருப்பு மற்றும் குடிசைப்பகுதிகளில் தொலைகாட்சி பெட்டி வழங்குதல்	1	..	..	..	..	1
68 பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழா எடுக்க	..	5	..	..	..	5
மொத்தம்–3. சுகாதாரம் வீட்டு வசதி ஏனைய திட்டங்கள்	**5207**	**239950**	**850**	**14387**	**1291**	**261685**
4. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்						
69 பழங்குடியினர் மேம்பாட்டிற்கான துணைத் திட்டம் குறித்த ஒருங்கிணைந்த பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான வல்லுநர் குழு	..	..	246	..	..	246
70 பழங்குடியினர் மாணவர் இல்லம் இணைந்த பள்ளிகளைத் தொடங்கி பராமரித்தல்	..	..	36470	..	..	36470
71 பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல்	..	..	5000	..	..	5000

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
72	பழங்குடியினர் கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கும் திட்டங்கள் ..	..	3000	..	..	3000
73	பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறுபாசனத் திட்டங்கள் ..	..	2300	..	..	2300
74	கல்ராயன் மலைக்கான நிர்வாக அமைப்பை ஏற்படுத்துதல் ..	..	516	..	..	516
75	ஆதிவாசிகள் மேம்பாடு ..	..	4425	..	..	4425
76	பழங்குடியினர் ஆராய்ச்சி மேம்பாடு ..	..	515	..	..	515
77	பரந்து வாழும் பழங்குடியினர் ..	..	5001	..	..	5001
78	குடிநீர் கிணறுகள் ..	..	468	..	..	468
79	ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பழங்குடியினருக்கான வீட்டு வசதி ..	..	1050	..	..	1050
80	தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாடு அதிகார மன்றம் ..	..	10	..	..	10
81	சாலைகள்	..	450	..	..	450
	மொத்தம்—பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் ..	..	**59451**	..	..	**59451**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
5. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள்.						
82 கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்	..			1	..	1
83 விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள் அளிப்பதற்கான நிதியுதவி	..	..	..	1	..	1
84 கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு நிலக் குடியேற்றத் திட்டங்கள் செயல்படுத்துதல்	..	..	..	70	..	70
மொத்தம்–கொத்தடிமைத் தொழிலாளர் களுக்கான மறுவாழ்வுத் திட்டங்கள்	..	..	..	**72**	..	**72**
6. நெறிப்படுத்துதலும் நிர்வாகமும்.						
85 தலைமையிட மாவட்டப் பணியாளர்கள்	..	..	..	75921	..	75921
மொத்தம்–நெறிப்படுத்துதலும் நிர்வாகமும்	..	..	..	**75921**	..	**75921**
கூடுதல் மொத்தம்	397722	422706	71701	683314	38518	1613961

* கிருத்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள்

** மத்திய மாநில அரசுகள் சமஅளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள்.

(மு) முதலீடு

(க) கடன் மற்றும் முன்பணம்

(சா) சாட்டியது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப்பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS